உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

---

# இராமலிங்கபிள்ளைபாடல்

## ஆபாச தர்ப்பண கண்டன

# நியாயவச்சிரகுடாரம்.

---

இஃது

ஸ்ரீ திரியம்பகசமேதத்திரிபுராந்தகசிவசரணாயுதாவந்திதரான

புதுப்பூழ் ரத்தினாகரம்

ம. தி. பானுகவியவர்களால்

இயற்றி

சென்னை புரசை

“கிரேசை” அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது.

---

1905

As. 8] [விலை அணா அ.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---

## இராமலிங்கபிள்ளை பாடல் ஆபாச தர்ப்பண கண்டன

# நியாயவச்சிரகுடாரம்.

---

### காப்பு.

### நேரிசைவெண்பா.

*உள்ளதனை மாற்றி யுரைப்பார்சொற் கட்டழிக்க*
*அள்ளிலைய வேலோ டமர்ந்தகுகன் - தன்னையருள்*
*ஏரம்பன் றண்மலரை யெண்ணி யிடரின்றி*
*ஆரம்பஞ் செய்மனமே யாய்ந்து.*

### ஆன்மார்த்தமூர்த்தி.

### குறள் வெண்பா.

*மன்னு சுருதி மலர்வாய்கொ டாணுவே*
*யென்னுளத் தாரு மிறை.*

### உபாசனாமூர்த்தி வணக்கம்.

### கலிப்பா.

*சித்தமுன தாண்மலரிற் சேர்த்த சிவயோகத*
*துத்தமரைத் தூற்று மொருசாரார் தங்கொள்கை*
*யத்தனையு மாற்றி யருணீதி காட்டுதியென*
*றத்தனினை யார்ந்தே னருள்தணிகை யையாவே.*

### உபாசனாமூர்த்தி.

### அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

*வேதமுத லானவையில் வீறுபொரு ளாலுன்னை வேண்டியளவில்*
*போதமிகு ஞானகவி பூவிலினி தாகவுரை புனிதர்தமையே*
*ஏதமுரை செய்பவர்க ளெண்ணமடி வாகவரு ளேறுநிகம*
*மாதியரு ளாதியிட மாகவுறை ஞானமணி யான வுமையே.*
1

### அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

### நால்வர்.

கற்றவர் புகழ்மி னெங்கள் கண்ணுத றன்னை யென்றுஞ்
சொற்றவர் மொழிமேற் கொண்டு தோகையோர் பாகற் பாடக்
கற்றவர் தம்மை வாளா கழிப்பவர் செருக்கு மாள
உற்றருள் புரியு நால்வ ருயரடி யிணைக ளன்றே.

### திருநெறித் தமிழ்வேதம்.

### அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

கருநெறி யுறுவோர் காணாக் கண்ணுதற் கடவுள் பாத
மருநெறி யனைத்துங் காட்டு மாமனு வாகி நால்வர்
வருநெறி விளக்கிச் சைவ வரம்பினைத் தெளித்த தெய்வத்
திருநெறித் தமிழ்வே தத்தைச் சென்னியா லிறைஞ்சி வாழ்வாம்.

### தொண்டர்.

### அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

அண்டர்தந் தலைவர் வாழ்த்து மையனைக் கோடீரத்திற்
கொண்டநன் மதியி னானைக் குறைவறப் பணிந்து போற்றிக்
கண்டருளெய்தியின்பக் கடலிடையார்ந்துநின்ற
தொண்டர்தஞ்செய்யதுய்ய துணையடிமுடிமேல்வைப்பாம்.

### சான்று.

### நேரிசைவெண்பா.

வடலூர் முனிசொற்ற வாசகங்க ளெல்லாம்
அடலே றுறுமெங்க ளையன் - தொடையாகக்
கொண்டருளத் தக்கதெனக் கூறவுயர்நால்வர்
தண்டமிழே வந்துரைக்க சான்று.

### அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

அருளினால் விளங்கி ஞான மணிப்பவ ருட்பிரகாசப்
பொருளினார்வள்ளல்நாமம் பொருந்துதற்குரியரென்னத்
தெருளினார்கொண்டகொள்கைத் தேத்துநின்றறியார்கூற்றம்
மருளினார் திறங்கள்காட்டி மாநகைவிளைத்ததன்றே.

### நேரிசைவெண்பா.

உண்டு கிலவெனினு மோடிச் சலதாரைக்
குண்டு மறியுங் குருடென்ன - மண்டுமிறை
தன்னருளின் வண்ணத் தனையோரா தேமருள்கள்
இன்னருளின் பாற்புகுமோ வின்று.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

---

## இராமலிங்கபிள்ளை பாடல் ஆபாச தர்ப்பண கண்டன

# நியாயவச்சிரகுடாரம்.

---

தமிழ்நாட்டுச் சைவர்களான எமது நண்பர்களே! நமது தெய்வமான சிவபெருமானருளிச்செய்த வேதாகமாதி ஆஸ்திக நூற்கருத்துக்களினின்றும் ஒரு சிறிதும் வழுவாத திருமூலநாயனார்,காரைக்காலம்மையார்,சமயாசாரியசுவாமிகள்,குமாரதேவசுவாமிகள்,சிதம்பரசுவாமிகள்,பட்டினத்தடிகள் கண்ணுடைய வள்ளலார், உமாபதி சிவாசாரியசுவாமிகள், சிவஞானவள்ளலார்,குமரகுருபரசுவாமிகள்,தாயுமானசுவாமிகள்,முதலிய சிவஞானச்செல்வர்களின் அபிப்பிராயங்களைத்தழுவிய அநேகமாயிரம் மதுரகவிகளாலும், சிற்சில சித்திரக்கவிகளாலும் சிவபெருமானையும்,உமாதேவியாரையும்,விநாயகப்பெருமானையும், சுப்பிரமணியக்கடவுளையும் சமயாசாரியசுவாமிகளான நால்வர்களையும் உருகி உருகித் துதித்த சிதம்பரம் - இராமலிங்கபிள்ளை அவர்கட்கு திருவருட்பிரகாச வள்ளலென்றபெயர் தகாதென்றும் அவர்பாடலுக்குத் திருவருட்பா என்ற பெயர் கூடாதென்றும் பூர்வ பக்கத்தார் கூறி மறுத்த விஷயங்களனைத்தும் தவறென்றும் பிள்ளையவர்களின் பாடலுக் கருட்பா என்றும் பிள்ளையவர்கட்கு திருவருட்பிரகாசவள்ளலார் என்றும் பெயரிருத்தல் கூடுமென்றும், அவர் பாடல்கள் சிவபெருமானையே பரம்பொருளாகக் கொண்ட சமயாசாரியசுவாமிகள் முதலிய பன்னிருதிருமுறைக்காரர்களின் திருவாய்மொழிகளாலும் சைவ ஞானியரான தாயுமானசுவாமிகள் சிதம்பரசுவாமிகள் முதலிய சிவஞானிகளின் திருவாக்குக்களாலும் உதகரிக்கத்தக்க வேதாகமோக்தசைவசித்தாந்தமாயினின்றும் விலகாத பொருட் பொலிவினையுடையதென்றும் காட்டி, பூர்வபக்கத்தார் கொள்கையை மறுக்குமெமது அபிப்பிராயத்தினையும் பூர்வபக்கத்தார் கூறும் அபிப்பிராயங்களையுஞ் சீர்தூக்கி ஒரு பக்கத்திலும் நாட்டமின்றி யாங்காரணமாகச் சார்ந்து நிற்காமல் உண்மையெதுவெனக் காண்பீர்களென்று இதனை எழுதலான் துணிந்தோம்

சிலர் எதுவேனு மொருவிஷயத்தினை தாங்களேயெழுதிப் பலருடைய வேண்டுகோளா லெழுதப்பட்டதென்று கூறுமாறெம்மா லுரைக்கவியலாது. சிவஞானியரான இராமலிங்கபிள்ளையவர்களையும் சைவமணங்கமழும் அவரதருட்பாடல்களையும் பூர்வபக்கத்தாரின் கொள்கைக்கிணங்கிய புல்லறிவின்மாக்கள்பலர் சைவகுலத்திற்பிறந்தும் சைவசம்பிரதாயக்கொள்கையை யுணருமாற்றலின்றிப் பலவாறு நியாயமின்றி இகழுவான் றுணிந்ததனைக் கண்டு உண்மைகூறுவான் வந்தேமேயன்றி வேறன்றென்பது உரையாமலேவிளங்கும். பூர்வபக்கத்தார் தாமெழுதிய சிறுசுவடிக்கு இராமலிங்கபிள்ளைபாடல் ஆபாசதர்ப்பணம் என்று பெயரிட்டிருத்தலால் அதனைக்கண்டிக்கும் எமது கிரந்தத்திற்கு நியாய வச்சிர குடாரமெனப் பெயரிட்டிருக்கின்றேம். **இதனைப்பொதுநிலையினின்று கேட்பீர்களாக.**

---

அன்பீர்! இராமலிங்கபிள்ளை பாடலாபாச தர்ப்பணமெழுதிய பூர்வபக்கத்தார் அசசுவடியின் முதற்பக்கம் இரண்டாம்பக்கங்களில் சிலபாடல்களைவரைந்து மூன்றாம்பக்கத்தில் நூல் என்று காட்டியிருக்கின்றனர். பாடல்களில் ஏதேனும்விஷயங்களை விரித்துந்தொகுத்துமெழுதுவதற்குநூலெனப் பண்டையோர் பெயரிட்டிருக்கின்றார்கள். இவர்க ளவ்வாறன்றிப் பனுவலற்றவிடத்தில் நூலெனவரைந்தனர். இதுவே இவர்களின் மனநிலையை நன்குவிளக்கு முதற்குறியாம்.

“பஞ்சிதன்சொல்லாப் பனுவலிழையாகச செஞ்சொற்புலவனே சேயிழையா” என்ற முன்னையோர் கொள்கைக்குமுரணாய் வசனத்தொடர் வருமிடத்து நூலென்றது நாங்கள் விபரீதங்காட்ட வந்தவர்களாதலின் எங்களுக்கது தகுமென்பாரையொப்ப நூலிலக்கணமெதுவு மில்லாவிடத்து நூலென்றது தவறன்றோ?

பின்னர் இற்றைக்கு முப்பது வருடங்களுக்கு முன்னரிருந்த இராமலிங்கபிள்ளை என்பார் என்றார்கள். இராமலிங்கபிள்ளையென் றிவர்கள் கூறியது தேகேந்திரிய கரணாதிகளையுடைய ஒரு சீவனையாதலின் அது என்றுமுள்ளதெனக் கூறுஞ்சைவமரபிற்கு விரோதமாக இவர்கள் முன்னரிருந்ததென்றது தவறன்றோ?

பின் தம்மை திருவருட்பிரகாச வள்ளலென்றுந் தமது பாடல்களைத் திருவருட்பா என்றும் பொருந்தாப்பெயரிட்ட அக்கணந்தொட்டு இதுகாறும் வைதிக சைவசுத்தாத்துவித சித்தாந்த மெய்ந்நிலை நிற்கும் பெரியோர்களாற் கண்டிக்கப்பட்டு வருகின்றன என்றார்.

பிள்ளையவர்கட்கு திருவருட்பிரகாச வள்ளலென்றபெயர் அவருடைய ஞானாசாரியரளித்த தீட்சாநாமம். அவர்பாடியவை அருளாற்பாடப்பட்ட

லை யாதலின் அவர்பாடல்களை அபிமானித்த புலவர்களும் அன்பர்களும் அருட்பா எனப்பெயரிட்டனர். இம்முறையறியாவிவர் அவரைக்குறைகூறுதல் தவறென்க.

இவர் தமக்கு எனற்பாலதை தம்மை என்றும், பாடல்கட்கு எனற்பாலதை பாடல்களை என்றுங் கூறியது தவறன்றோ? திருவருட்பிரகாச வள்ளல் திருவருட்பா என்பன இராமலிங்கபிள்ளைக்கும் அவர்பாடல்களுக்குந் தகாதனவெனச் சண்டையிடுவோரு மிட்டோரும் வேதம், சைவத்திற்கு முக்கியபிரமாண மன்றெனக்கூறும் ஆகமசைவர்களேயாதலின் அவர்களை வைதீகசைவசுத்தாத்துவித சித்தாந்த மெய்ந்நிலைநிற்கும் பெரியோர் எனவரைந்து விடுத்தது எவ்வாறு பொருந்தும். ம-ா-ா-ஸ்ரீ, ஆறுமுகநாவலரும், ம-ா-ா-ஸ்ரீ, சபாபதி நாவலரும், ஆகிய யாழ்ப்பாணத்தாரும் இவர்களை யபிமானித்தவர்களுட்சிலருமன்றி வேறெவரும் இராமலிங்கபிள்ளை அவர்களை பாட்டுப்பகை பாராட்டினரின்மையின் இவர்களை வைதீகசைவசுத்தாத்துவித சித்தாந்த மெய்ந்நிலைநிற்கும் பெரியோரெனக்கூறுதல் பகைவரைச் சமயநோக்கி நண்பரெனல்போலும்.

பின் அவ்வுண்மைபோலி யருட்பாமறுப்பு, திராவிடப்பிரகாசிகைகுதர்க்காரணிய நாசமகாபரசுகண்டனம் இராமலிங்கபிள்ளை யங்கதப்பாட்டு முக்குணவயத்தின் முறைமறந்தறைதல் போலியருட்பா வழுத்திரட்டு என்னுஞ் சிறந்தநூல்களிற் றெளிவாகக்காணப்படும். என்றார்.

இவைகளில், போலியருட்பா மறுப்பென்பது ஆறுமுகநாவலரால் வெளியிடப்பட்டதென்றும் இதற்குடனே குதர்க்காரணிய நாசமகாபரசு என ஒருநியாயகண்டனம் பிள்ளையவர்கள் பக்கத்தாரால் வெளியிடப்பட்டழிக்கப்பட்டதென்றும் இந்நாட்டின ரனைவருமறிவர். திராவிடப்பிரகாசிகையென்பது சபாபதிநாவலரா லெழுதப்பட்டு ௨௧௫ - பக்கங்களையுடைய தாய் தமிழினியல்பைக் குறித்துநிற்பதொருசுவடி. இதனுள் அநேகம்பழைய புதிய விடயங்களைத் தமிழின்பொருட்டு வரைந்தவிவர் பொறாமைகாரணமாக - ௬௯, வரிகளில் இராமலிங்கபிள்ளையவர்களையும் அவர் பாடல்களையு மிகழ்ந்துசென்றனர். இருநூற்றுப்பதின்மூன்று பக்கங்களுள்ள ஒருசுவடியினொருபுறத்தில் அறுபத்தைந்து வரிகளெழுதியிருப்பதனை யறியாத சனங்கள் இராமலிங்கபிள்ளையின் பாடலருட்பாவாகாதெனவும் அவர்க்கருட்பிரகாசவள்ளலெனப் பெயர்கூடாதெனவும் கூறிக்கண்டித்த சுவடியேதிராவிடப் பிரகாசிகையென்பது என்றுகருதுமாறிவர்கள் வரைந்துவிடினும் விவேகிகள் திராவிடப்பிரகாசிகை யென்பது இராமலிங்கபிள்ளை பாடலின்கண்டன புத்தகமன்றென்றே கொள்வர். திராவிடத்தின் பிரகாசத்தினைவரையவந்த சபாபதி நாவலருக்குத் திராவிடத்திற்பிரகாசிக்கும் புத்தகங்களுளொன்றாகிய இராமலிங்கபிள்ளையவர்களின் பாடல்களின்மீது பொறாமையுண்டாகி அவரையும் அவர் பாடல்களையும் இகழ்ந்தது திராவி

டத்தினிடத்துள்ள பட்சத்தாற்போலும். தாமிவ்வுலகில் வாழுங்காலத்தில் தமது தேயத்தினால்லாத ஒருவர் கீர்த்தியடைகதைப்பார்த்துச சகிக்கா, குணமுடையவராதலினவ்வாறிகழ்ந்தனரேயன்றி வேறன்றாம். ஆறுமுகநாவலர் தமது சித்தாந்தத்துக்கு மாறான சிவசமவாத ஞானப்பிரகாசத் தம்பிரானை யபிமானித்தவராயினும் தாம் பிறந்த தேயத்தினர் என்பதனை உத்தேசித்து அவரிகழ்ந்த பிள்ளையவர்களை யிவருமிகழ்ந்தனர். இவரெங்கேனுமொரு மூலையிலிருந்து திட்டினுலிவருக்கார் பதிலுரைப்பவர். போலியருட்பா மறுப்பினுரைத்தவைகளையே இவரும் வரைந்திருக்கின்றனர். போலியருட்பாமறுப்புக் கண்டிக்கப்பட்டொழிந்தமையான் அதனையே இவரெடுத்தெழுதியது எட்டுணையும் நியாயமாகாமையின் திராவிடப் பிரகாசிகையை இராமலிங்கபிள்ளை விஷயமாக எழுதிய நூலென்கைதவறென்க. சந்தேகமுள்ளவர்கள் திராவிடப்பிரகாசிகையை யழைப்பித்து ஆதிமுதலந்தம் வரைக்கும் பன்முறைபடித்தறிக.

குதர்க்காரணிய நாசமகாபரசு கண்டனமெனப் பெயரொன்று பூர்வபக்கத்தாராலிஞ்ஞான்றெழுதப் பெற்று வழங்கிவருகின்றதேயன்றி,கண்டன புத்தக மிதுகாறுமின்றென்பதனை அனைவருமறிவர். அங்ஙனமொரு கண்டனபுத்தகமிருந்தாலதனைச சபாபதிநாவலர் எழுதாமலிரார். அவர் போலியருட்பாமறுப்பெனப் பெயரிய சுவடியையே காட்டியிருக்கின்றனர் தமது பக்கத்தாரின்பொருட்டு தாமேபரிந்து - "பின்முறை வழக்களுளொரு சிலவற்றை அந்நியாயமேபற்றி போலியருட்பா வழுத்திரட்டெனப் பெயர் தந்து கேறெடுத்துக்காட்டுதும்" எனத் தாம் விகாரிவருடமச்சிட்ட திராவிடப் பிரகாசிகையுள் வரைந்திருத்தலின்போலியருட்பா வழுத்திரட்டென ஒன்றிதுகாறுமின்மையும் அவ்வாறே குதர்க்காரணியநாச மகாபரசுகண்டனமென ஒன்றின்மையும் பெறப்பட்டது. இல்லாதவைகளை எழுதவந்தவராதலின் இல்லாத புத்தகங்களையும் எழுதினர்போலும். இராமலிங்கபிள்ளையங்கதப்பாட்டென்பது பிள்ளையவர்கள தமையனாரான சபாபதிப்பிள்ளையால் எழுதப்பட்டதென்று பூர்வபக்கத்தாரால்உரைக்கப்பெற்றதேயன்றி இவர் கூறும் இராமலிங்கபிளளையின் தமையனாரான சபாபதிபிள்ளையாற் பாடப்பட்ட தவரையும் அவர் பாடல்களையும் புகழ்ந்தேயாம். அவைகளையிடம் வாய்த்துழி விளக்குதும். அன்றியும் அவ்வங்கதப்பாட்டென்பது பிச்சர் புலம்புமாறு ஒழுங்கின்றி வைத பாடல்களையுடைய சுவடி. அதனைச் சிறந்த நூலெனக்காட்ட வியர்க்கு மனம் வந்ததும் பிள்ளையவர்கள்மீதுள்ள பட்சத்தாற்போலும்.

முக்குணவயத்தின் முறைமறந்தறைதல் என்பது யாழ்ப்பாணத்தாறுமுகநாவலரின் நண்பரான ஒருவரால் எழுதப்பட்ட சிறுபத்திரிகை அச்சிறு துண்டுப்பத்திரிகையை அப்பொழுதே பிள்ளையவர்கள் பக்கத்தாரால் கண்டித்தொழிக்கப்பட்டிருக்க அதனையொரு சிறந்தநூலெனல் தவறென், பத்திருபதுவரிகளுள்ள பத்திரிகைகளை நூலெனற்கிவர்கள் வெள்குறுதென்னையோ?

பின் - அங்கஹீனமாகவும் சமணம் பௌத்தம், உலகாயதம் மாயாவாதம், பாஞ்சராத்திரமுதலாய புறசமயப்பகுதிகளையெல்லாம்சப்பிரமணியப் பெருமானது திருவவதாரமாகிய ஞானசம்பந்தப் பெருமான் முதலாய சமயாசாரிய சுவாமிகள் நால்வரும், சந்தானசாரியசுவாமிகளும் காண்டல் கருதலுரை என்னுமளவைகளால் தக்கவாறு கண்டித்தொழித்ததையறிந்தும்பின்னர்க்காலத்தும் இதுபோதுமுள்ள புல்லறிவின்மாக்கள் பலர் நன்னெறியிருக்கப்படுகுழிப்பட்டாருகு சைவசித்தாந்தத்தைவெறுத்து அப்புன்மதநூல்களைமேற்கொண்டொழுகலைப்போல் இராமலிங்கபிள்ளையவர்களின் பாடல்களும் அவரது நெறியல்லாநெறிகளும் வைதீக சைவசித்தாந்தத்துக்குமாறாகுமென்று உண்மைசிவநேயமுடைய மகாவித்வசிரோமணிகள் பற்பலரால் கரதலாமலகம்போற்காட்டி கண்டித்தொழித்ததுணர்ந்தும் இதுபோதுள்ள புல்லறிவுடைமைபோலிச சைவராஞ் சென்னையிலுள்ள சிலர்தந்தீவினைவயத்தானே "குளிக்கப்போய்ச சேறுபூசிக்கொள்வார்போல" அப்போலிப்பாடல்களையும் மருட்பிரகாசப் பொள்ளலாரான இராமலிங்கபிள்ளையையும் முறையே திருவருட்பா என்றும் திருவருட்பிரகாச வள்ளலாரென்றும் கொண்டு சிவநிந்தை திருவருணிந்தைதிருமுறை நிந்தை என்னுமிவற்றைச்செய்து அதிபாதகதுக்காளாகின்றார் என்றார்.

இவர்காட்டிய இவ்வுதாரணங்களால் சமயாசாரிய சந்தானசாரியர்களை யொத்தவர்கள்—பூர்வபக்கத்தினரும், பௌத்தலோகாயத மாயாவாத பாஞ்சிராத்திராதி புறசமயங்களை யடைந்தவர்களை யொத்தவர்கள் பிள்ளையவர்களை அடுத்தவர்களும் என்று வெளியாகின்றது.

சமயாசாரியராதியர் பௌத்தாதி புறச்சமயங்களைக் கண்டித்தொழித்ததுண்மையாயின் அம்மதங்கள் இதுகாறும் இவ்வுலகில்நிலைக்குமா? நிலைக்குமாயின்கண்டித் தொழித்ததெங்ஙன்? சிவபெருமானாலுண்டாக்கப்பட்ட பௌத்தாதிமதங்களை சமயாசாரியராதிய ரழிப்பார்களா? அழித்தற்கிவர்களாலாகுமா? ஆகுமானால் சிவபெருமான் இவர்களினு மிழிந்தவராகவன்றோவாவார். சிவபெருமான் தகுதியற்ற சமயங்களையுண்டாக்குகின்றவரும் இவர்கள் அவைகளை யழித்து தகுதியுள்ள சமயத்தினை மாத்திரம் நிலைநிறுத்துவோருமாயின் உயர்ந்தவர் யாவர். பௌத்தசமணரியர் நம் மதநிலையைக்கடந்து சைவசமயிகளோடு கலாம்விளைத்தமையின் சைவசமயத்தின் தெய்வீகத்தினைவிளக்கி அன்னாரைச சைவத்நோடு பகைக்காதிருக்கச் செய்தனரேயன்றி இவருரைத்தாங்கு சமயாசாரியர் செய்திலர்.

சமயாசாரியர் நால்வருள் ஞானசம்பந்தப்பெருமான் தம்மொடுவாதிடவிரும்பிய புத்தர்களை வாதில்தோற்பித்துச சைவராக்கினரேயன்றி உலகில் புத்தமதமே இருத்தல்கூடாது என அதனை அடியோடழித்தாரில்லையென்பதனை "சிந்தையினிலது தெளிந்துபுத்தர் கண்மைத் திருமறையோர் சேவடிக்கீழ் சென்றுதாழ்ந்தார்"என ம். அன்றவர்ந்தந்கவுணியர்கோன் கரு

ணைநோக்க மனைநலினாலறிவின்மை யகன்றுநீங்கி, முன்றெழுதுவீழ்ந்திறை
ஞ்சிச் சைவரானார்" என்றுங்கூறப்படுதலின் புறசமயிகள்தோற்றால் அவர்க
ளுக்குசசம்மதமிருந்தாலவர்களைசசைவசமயததிற்சேர்த்தலேயன்றிசமயத்தி
னையழித்தொழித்தலின்மைகாண்க. சமணரை வாதில்வென்ற ஞான்றும் -
சிவபெருமான் திருமுன்சென்று "காட்டுமாவதுரித்துரிபோர்த்துழல் நாட்
டமூன்றுடையா யுரைசெய்வனான், வேட்டுவேள்விசெய்யாவமண்கையரை
யோட்டிவாதுசெயத்திருவுள்ளமே" என்றசசமணரைவாதில்வெல்வதுதேவ
ரீர்திருவுள்ளத்திற்குச சம்மதமோஎனவினவினாராயின் ஞானசம்பந்தப்பெ
ருமான் சமணமதத்தைகண்டித் தொழித்தனர் எனல் எங்ஙனம்பொருந்
தும், அளவுகடந்த அதன்தலை நீட்டலையடக்கினரேயன்றிவேறின்றென்று
கொள்வரறிஞர்.

ஞானசம்பந்தப்பெருமான் இவ்வுலகில் வெளியாயுலவியஞான்று உட
னிருந்த திருநாவுக்கரசு சுவாமிகள், புத்தர்சமணராதியரால் வாதிடநேரா
ந்தவிடங்களிலும் அவருடன்வாதிட விணங்காமல்நின்றதுவும், சுந்தரமூர்த
திப்பெருமானிவ்வுலகிலிருந்த ஞான்று புத்தருஞ்சமணருமிருந்தும் அவர்
களுடன் அவர் வாதிடாமையும் ஆராயின், ஒவ்வொருமதங்களும் தத்தம்
நிலையில்நிற்குமானால் அவைகளின் வீறடக்க எவருமுயலார் என்பது திண்
ணம். இருபத்து நான்குவகைச் சமயங்களில ஒன்றிரண்டினையன்றிப் பிற
வற்றினைசமயாசாரியராதியர்மறுக்காமையின்மறுக்காதெஞ்சியவையனைத்து
மவர்க்குடன்பாடென்று கருதுதல் நியாயமாகுமா? சமயாசாரியர் காலத்துக்
குப்பின்னர்சமணர்பிறமதத்தினரைத்தம்மதததில் சேர்ககும் வழககமே இல
லாதவர்களாகஇருக்கின்றார்கள்.

உலகாயத பாஞ்சராத்திரங்களை சமயாசாரியாகள் வாதுவழியினின்று
கண்டித்திலர். சைவசமயத்துக்கு மற்றையமதங்கள் இழிந்தனவாதலின்
அவைகளினிழிவையும் சைவத்தினுயர்வையுங காட்டுதல் அன்னியமதங்களை
க்கண்டித்தொழித்தலாகுமா?

சமயாசாரியர்களுக்குஅநேகநூறுவருடங்களுக்குப்பின்னரிவ்வுலகிலிரு
ந்தசந்தானாசாரியர்கள் பூர்வபட்சசித்தாந்தங்களிலும்சைவபட்சமான தமது
சித்தாந்தத்தினுயர்வினை விளக்குவான் தாமாகவேதடைவிடைகளாற் சிலமத
ங்களை மறுத்தனரேயன்றி மறுககாதமதங்களுமனந்தம். ஆகவே மறுத்தவைய
ன்றியுள்ளவை அவர்கட்குடனபாடானவையா? அன்றாம். அன்னியமதவாதிக
ளும் அவரவர் மதவன்மைக்காக பூர்வபட்சசித்தாந்திகளாகப் பிறரைக்குறித்
தெழுதியிருத்தலை இவர் கண்டிலர் போலும். தமிழ்நாட்டில சமணம
தமிருந்தும் பிறரை தம்மிற் சேர்க்காதிருத்தலும் புத்தம் அடியோடில்லாதி
ருத்தலுமுணராத இன்னோர் பின்னர்க்காலத்தும் இதுபோது மனேகர்புத்த
சமணாதி மதங்களில் பிரவேசிக்கின்றனரென்றது தவறேயென்க.

இவர் வைதிக சைவ சித்தாந்த நெறிகளையுணர்ந்தவராயின் பிள்ளைய
வர்களின் கொள்கைகளை நெறியல்லா நெறி என்னார்; இவர்களின் ஆபா

சக்கொள்கைகளனைத்தையும் அவை வெளிப்படும்பொழுதே நல்லறிஞர் பலர் கண்டித்தொழித்ததனையறியாதார் போன்று,மகாவித்வசிரோமணிகள் பற்பலரால் கரதலாமலகம்போற் காட்டி கண்டித்தொழித்ததுணர்ந்தும் என.ஒன்றுமறியாதாரைத் தம்வசப்படுத்த இவருரைப்பன அனைத்தும் தக்க நியாயங்களால் கண்டிக்கப்பட்டொழிவதைக் காணுமறிஞர்அறியாதிரார்

இவர் கட்சியிற் சேர்ந்தவர்களாகி இராமலிங்கபிள்ளையவர்களைச் சிவ ஞானியெனவும் அவர் பாடல்களைச் சிவபெருமானுக்குரிய பாடல்களென வுங் கொள்வோரனைவரும் புல்லறிவின் மாக்களும் இப்பூர்வபக்கத்தார் போ றிவுடைமாக்களும் ஆகிநிற்றல் சொல்லளவாலமைவதன்று;நியாயவாதத்தா லறியவேண்டுவதேயாம். இவரிகழ்ந்தாயது நாமிகழ்தல் உசிதமன்றாதலின் இகழ்ச்சியைவிடுத்து மற்றையவைகளை ஆராய்வாம்.

அதிகாரத்தாலுஞ் செல்வத்தாலும் கல்வியாலும் குடிப்பிறப்பாலுமுயர்ந்த பல மேதாவியர் இராமலிங்கபிள்ளை பாடலை அபிமானித்திருக்கின்றனர். அவர்களை, யிவர் புல்லறிவின்மாக்கள் போலிச்சைவர் என்று கூறுதல் உசிதமாகுமா? இராமலிங்கபிள்ளையவர்கள் பாடலை அருட்பா என்பாரும் இராமலிங்கபிள்ளையவர்களை அருட்பிரகாசவள்ளல் என்பாரும் சிவநிந்தை செய்தவர்களும் திருவருணெறித்திருமுறை நிந்தை செயதவருமாகி அதிபாதகத்துக் காளாவார்கள் என்றதுநியாயமாகுமா?

திருவருட்பிரகாச வள்ளலார் என்பதனால் சிவநிந்தை செய்தாராவ ரென்பது தவறேயாம். திருவருளாற்பிரகாசிக்கும் வள்ளலென்பவர்கள் சிவனடியவர்களாய் சிவபெருமானின் கருணைக்குரியராவர். அருளால்வந்தபாவை யருட்பா வென்பார் தேவாரதிருவாசகாதி திருவருணெறித் திருமுறை நிந்தகராவதெங்ஙன்? திருவருணெறித் தமிழினைப்புகழும் பாவான இராமலிங்கபிள்ளையின் பாடல்களை அருட்பா என்பார் திருவருணெறித் திருமுறையைப்புகழ்ந்தவராவரன்றி இகழ்ந்தவராகார். புகழடைந்து புண்ணிய சீலராவாரை அதிபாதகத்திற் காளாகின்றாரென்றது தவறேயாம்.

பின் - அங்ஙனங்கொண்டமையின் யாதொரிழுக்குமின்றாம் என்றார். இழுக்கின்றாயினிவரே னதனைக்குறித்து இவ்வளவு கவலை எடுத்துக்கொள்ளுதல் வேண்டும்.

பின் - இராமலிங்கபிள்ளையவர்கள் சிவபெருமானையும் அடியவர்களையும் துதித்து எவர் மனமுமுருகப் பற்பலபாடல்களைப் பாடியுள்ளாரே அவரையும் அவர்பாடல்களையும் கண்டிக்கவருதல் பாவம்? பாவம்? என்று பரியவழுறுவார் அறிவிலிகள் என்றார்.

சிவபெருமானைப் பாடியவரையும் சிவபெருமானைப்புகழ்ந்த பாடல்களையும் இகழ்தல் பாவமென்பவர்கள் அறிவிலிகளானால் சிவபெருமானை இகழ்

பவர்களும் சிவபரமல்லாத பாடல்களைப் புகழ்வோருமே அறிவுடையோராவர். ஆரம்பத்திலேயே இவ்வளவு விபரீதங்கூறு மிவர் இன்னம் என்னென்ன உரைப்பாரோ பார்க்கலாம். நியாயமுரைப்பவர்களை அறிவிலிகளென இவர்கூறியது தங்கொள்கையை நிலைநிறுத்துதற்குப்போலும், சிவனடியவர்களை இகழப்படாதென்போர் அறிவிற்சிறந்த சன்மார்க்கிகளாதலினவரை யறிவிலிகளென்றல் தவறென்க.

பின்-இராமலிங்கபிள்ளை உண்மையி லங்ஙனமுள்ளவராயின் அவரைப் பழிக்கவேண்டுமென்று ஒருவரும்வாரார் என்றார்.

அவர் உண்மையிலிறைவனைப் பாடினதனாலன்றோ அவரை அடியவரெனவும் அவர்பாடலை யருட்பாடலெனவு மறிஞர்கொண்டு நிற்கின்றனர்.

பின் நமரங்காள்! நும்மறிவிருந்தவாறென்னை சிவனே! அரசே! மணியே! அருட்பெருஞ்சோதியே! முதலியசொற்களானே! சிவனைத்துதித்துளாரென நீவிர் கண்டதன்றி எல்லாப்பாடல்களையு மாராய்ந்து நடுவுநிலையுடன் நின்றுபார்க்கின் அவ்வாறு கொள்ளமாட்டீர் என்றார்.

ஹர, ஹர பிரஹர என்ற கொலைவேடன் சிவனடிநீழலெய்தினனென, காந்தபுராணம் உரைத்ததைப் படித்தேனுங் கேட்டேனுமிரார் போலும்; சிவனே! அரசே! என்பன வாதிமொழிகளாற் சிவபெருமானைத்துதித்த இராமலிங்கபிள்ளை நிந்திக்கத் தக்கவரானால் சிவபெருமானை அத்தகையமொழிகளாற் றுதித்த ஒவ்வொருவரும் நிந்தித யோக்கியதைக்கே உரியராகின்றனர். எல்லாப்பாடலையு மாராய்ந்து இவர் இராமலிங்கபிள்ளையை சிவபத்தரன்றெனக்கண்டனர்போலும் சிதம்பரம் இராமலிங்கபிள்ளையவர்களின் பாடற்றிரட்டினை மேற்போக்காக ஒருமுறைபடித்தவனும் சாந்தமுதலிய குணங்களுடன் சிவபத்தியையு மெய்தப்பெற்று இவர்பாடலினு முயர்ந்த தேவார திருவாசகங்களைப் பாராயணஞ் செய்யத்தக்க பாக்கியத்தினைப்பெற யோக்கியதை உடையவனுவனென எத்தகைய பிறமதத்தனுமறிவான். இவரதற்கு மாறாக இராமலிங்கபிள்ளை பாடலை நடுவுநிலையுடனாராய்ந்து அவரைச் சிவநிந்தகரெனவும் அவர்பாடல்களை அதிபாதகப்பாடலெனவும் கண்டது ஆச்சரியத்துக் கிடமாகின்றது.

பித்தசுரத்திற் பீடிக்கப்பட்டவன்வாய்க்குச் சர்க்கரை கசப்பானதாயும், காயசீரேறியகண்ணுடையானுக்கு தீபமப்பிரகாசமாகவும் குரோதசிந்தையாளனுக்கு நியாயங்கள் அநியாயங்களாகவுந் தோன்றுதல் வழக்கமாதல்போல இவரும் பொறாமை காரணமாகத் தேடியதனால் சைவபரமான பாடலிற்பல இவருக்கு அன்னிய மதப்பாடல்போலவாயின. தமது மயக்கத்தினையுணராது பிள்ளையவர்களையும் அவர்பாடல்களையும் இகழ்ந்து, இகழ்ச்சிசெய்வார் அடையும் பயனுக்கிலக்காகினர்.

இவர்சைவபரமன்றெனக் காட்டும் பிள்ளையவர்களின் பாடலொவ் வொன்றினையும் நாம் சைவபரமாக நியாயமாகக்காட்டுங்கால் அனைவருமறி வர் பிள்ளையவர்களின் பாடலனைத்தும் சிவபெருமானையே புகழ்ந்தன.

பின் சைவசித்தாந்தத்துக்கு மாறுபடுமாயின் அவர் அண்டங்களையெல் லாம்புரட்டி நிறுத்தும்பெரியராயினும் அவருரையை உண்மைச்சிவநேசமு டையார் கொள்வாரல்லர் என்றார். உண்மைச்சிவநேயமுடையார் உண்மை மாணாக்கர் என உண்மை உண்மை என அடுக்கடுக்காய்ச் சொல்லின் அது இவ ரதுண்மையையே காட்டுகின்றது.

இவர்கொண்ட சைவசித்தாந்தமென்பது மெய்கண்டதேவர்வழிவந்தாரா லுண்டாகிய சிவஞானபோதமாதியவும் அவைகளுடன் சேர்க்கப்பெற்ற திருவுந்தியாராதியவுமான பதினான்கு நூல்களேயேயாம்.

இவைகளின் கொள்கையை வேறுவேறு விதமாகக்கொண்டு சைவசித் தாந்திகளென நிற்குமவர்களின் பகுதியும் பலவுளவாதலின் இவர்கருதிய சைவசித்தாந்த மென்பதனை இன்னதென்றறியவேண்டும். இனிஇவர் தரும புரதவாதீனத்தைச் சேர்ந்தவராதலால் திருவாவடுதுறைதிருவண்ணாமலை சொ க்கபுரம்முதலிய ஆதீனங்களிலுள்ள பெரியவர்களின் சொற்களைமதியாத வராகின்றார். திருவாவடுதுறையைச் சார்ந்தவராதல் மற்றையாதீனத்தார் களின்சொற்களை மதியாதவராகின்றார். இவ்வாதீனவகையிலன்றி வடமொ ழிச்சைவசித்தாந்தங்கூறுமாறு நிற்றலே எமதுவழக்கமெனின் வடமொழிக் கிணங்காத தமிழ்மொழி நூலனைத்தையும் இவர்மதியாதவராகின்றார். இவ ரெந்தச் சித்தாந்திகளை மதியா திகழுகின்றனரோ அவர் இவரையுமதியாதி கழுவரென்பதனை மறந்தனர் போலும், சிவபெருமானைச் சூட்டிப் பாத்துவ ரீனைக்கும் ஒவ்வொரு சைவசித்தாந்திகளும் முத்தியடைவதுண்மையெய னக்கொண்டு நிற்கும் எம்மனோர்க்கு இவர்கூற்று நகைப்பினைத்தருகின்ற தேயன்றி கௌரவத்தினைத் தரக்காணோம். தாம்படித்த சித்தாந்தத்துக்கு முரணாகவுள்ளவைகளை யுரைப்பவர்கள் அண்டத்தைப்புரட்டு மாற்றலுடைய வராயினும் அவருரையை மதியேமென்ற இவர், பிள்ளையவர்கள் விஷயமாக இது எமது சித்தாந்தத்துக்கிணங்காதது இது எமது சித்தாந்தத்துக்கிணங் காதது என்று கூறுமொவ்வொரிடங்களையும் தேவார திருவாசகாதி திரு நெறித்தமிழினைக்காட்டியும் ஆகமபுராணவேதங்களைக் காட்டியும் மறுத்த வுடன் இவர்சமயாசாரிய சுவாமிகளையும் மற்றைப்பெரியோரையும் மதிக் காதவர் என்பது தானேவிளங்கும். அப்பொழுது இவரது சைவசித்தாந்தமு மின்னதென விளங்கும். இவர் உண்மைச் சிவநேயமுடையாரென்பதும் நன்குவிளங்கும்

பின் இராமலிங்கபிள்ளையைப் பார்க்கிலும் எத்தனையோ மடங்கு விசேஷித்தகல்வியாளார் அவர்காலத்தும் அதற்கு முன்னரும் இருந்துளார்

அவர்களெல்லாரும் இவ்வாறனவேறுபாட்டுப் படிற்றொழுக்கில் புகுந்து உலகைக்கெடுக்கத் துணிந்தாரா? என்றா.

இவர் என்றும் இவ்வுலகத்திலேயே வசித்தவர் போலவும் பெரு காலத்துச்சரிதங்கள் தமக்குத்தெரியும்போலவும் அவர்காலத்தும் அதற்கு முன்னரும் இருந்தகல்வியாளர் பிள்ளையவர்களினுஞ் சிறந்த கல்வியாளா என்று கூறுகின்றார். முப்பத்தைந்து வயதிற்குட்பட்ட சரீரத்தினையுடைய இவர் முப்பத்தொன்பது வருஷங்களுமுன் நடந்தவிவாதவிஷயங்களையும் பிள்ளையவர்களின் செயல்களையும் எவ்வாறறிவார். பிள்ளையவர்களை யொப்ப மற்றைப்புலவர் என்செய்தாரில்லை என்று கேட்கின்றார். எந்தப்பள்ளிக்கூடத்திலேனும் வாத்தியாக இருந்து வயிறுபிழைக்க அங்குமிங்கு மோடித்திரிந்து இந்தமாதத்திலொரு பள்ளிகூடத்துத் தமிழ்ப்புலவரென்றும் மறுமாதத்து மற்றொரு பள்ளிக்கூடத்துத் தமிழ்ப்புலவரென்றும் வருடத்துக்குப் பன்னிரண்டு பள்ளிக்கூடத்துத் தமிழ்ப்புலவராகித் திரியுஞ் சிலரையொப்பப் பிள்ளையவர்களைக் கருதி இவரினுஞ் சிறந்தகல்வியாளா அவர்காலத்தும் முன்னருமிருந்தனரென்றல் தகுதியற்ற மொழியேயாம்.

எவரெவர் எதனை எதனைச்செய்ய வந்தார்களோ அவர் அவர் அதனை அதனைச்செய்து செல்வரென்பதனை மறந்து, பிள்ளையவர்களின் செயல்களைப்படிற்றொழுக்கமானவை யென்றும் அவராலுலகினரைக் கெடுக்கப்பட்டதென்றும் கூறுதல் வாழ்ந்தாரைப்பார்த்துக் கெட்டார் என்று கூறுபவரின்சொல்லினையே ஒத்து நிற்கின்றது.

பிள்ளையவர்களின் காலத்தில் எல்லாரு மெளிதாக அறிந்து துதிக்கத் தக்கவிதத்தில் அநேகமாயிரம் மதுரகவிகளுண்டானமையாலும் சிவகாருணிய ஒழுக்கம் வசனநடையில் நன்குதெரிக்கப்பட்டமையாலும் உலகினர் உய்யும் வழியையே எளிதிற்பெற்றனர். என்பதை இவரறியார்; விபரீதசிந்தனையுடன் ஆராய்வார் நல்லவைகளைக் கிரகிப்பார்களா? ஆறுமுகநாவலர் வசனகிரந்தங்களை எழுதியும் வாதம்புரிந்தும் தம்வாழ்நாளைக் கழித்தனர். அவர்காலத்திருந்த மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் அநேகந் தலபுராணங்களைப் பாடிக் காலந்தள்ளினார். இவ்வாறே ஒருவர்செய்த தொழிலை ஒருவர் செய்யாமைக்குக் காரணமென்னை என்ற விவரென்னபதில் கூறுவார்.

இப் பூர்வபக்கத்தாரின் இக்காலத்து, இவரினுமுயர்ந்த கல்வியாளர் அநேகம் பெயர்கள் சும்மாஇருக்க இவரையும் இவரின் பக்கத்தாரையும் இராமலிங்கபிள்ளையவர்களை இகழச் செய்தவர்கள் யாவர்? இவரையொப்ப எனைப்புலவர் துணிந்தாரா? இல்லையே இதுபோல்வதே அதுவும் எனக்கருதாதவாளராகாரிதத்தைப்புன்சாதக்கள் சிந்தையையுங் கறப்பித்தனர்.

“அவனன்றியோரணுவு மசையா”தென்பதற் குடன்பட்டார் எல்லாக் கல்வியாளரும் ஒரேமாதிரியாக நடக்கவேண்டுமெனக்கருதார்.

பின். இராமலிங்கபிள்ளை பாடல்களையும் அவர் பொய்நெறிகளையும் கண்டிக்கத்தொடங்கிய ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர், திருவாவடுதுறை மகாசன்னிதானம் சுப்பிரமணிய தேசிகசுவாமிகள், வேதாரணியஆதீனம் சற்குருநாத சுவாமிகளான உதயமூர்த்திதேசிக சுவாமிகள், மகாவித்வான்மதுரை இராமசுவாமிபிள்ளை அவர்கள், மகாவித்வான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள். திருவண்ணாமலையாதீனம் ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள். தருமபுரஆதீனம் சண்முகத்தம்பிரான் சுவாமிகள். திருவாவடுதுறையாதீன மகாவித்வான் சபாபதிநாவலர்.முதலிய அறிவாளர்கள் சாமானியரா இன்னவர் இராமலிங்கபிள்ளையைப் பார்க்கினும் எத்தனையோமடங்கு சிவபக்தியினும் கல்விகேள்விகளினும் சைவசித்தாந்த உணர்ச்சியினும் தற்போதவிழப்பினும் தேவார திருவாசகமுதலிய திருவருட்பாபத்தியினும் சிவனடியார் பத்தியினும் விசேடித்தவர் மறந்தும் புறந்தொழா மாண்பினையுடையவர் அத்துணை சிறப்புறூஉம் அறிவினர் பொறாமை பகைமுதலியவற்றாலும் அபிமானத்தாலும் பிடிவாதத்தாலும் பேதுற்று உண்மையையிழப்பவரல்லர்.

இராமலிங்கபிள்ளை யிடத்தும் அவர் பாடல்களிடத்தும் அருள்பிரகாசித்தமை தம் அறிவிற்குப் புலப்படுமாயின் மறுப்பான் செல்லார். அங்ஙனம் அவர்கள் யாவரும் ஒருகால் பொறாமை முதலியவற்றான் எழுந்தபோதினும் அவர்கள்யாவரும் இராமலிங்க பிள்ளையுடன் நேர்நின்று வார்த்தையாடியும் வாதிட்டும் நின்றாராகலின் அவரையடக்கி விடலாமே என்றார்.

இவர் காட்டிய ஒன்பது பெயர்களில் திருவாவடுதுறைப் பண்டாரசன்னிதியான கனம்பொருந்திய சுப்பிரமணியதேசிகர் இராமலிங்கபிள்ளையை நேரிற்கண்டு வார்த்தையாடியும் வாதிட்டும் நின்றவரென இவரெழுதியதனால் திருவாவடுதுறையாதீனத்தின் கௌரவமித்தகையதென இவரறியாதவராகின்றார். ஞானஅரசு செலுத்தும் ஆதீனமெனவும் சம்பத்துமுதலியவைகளால் அரசவைபவத்தினும் சிறந்ததெனவும் இட்டம்போல நினைத்தஇடங்களுக்கு திருவாவடுதுறைப் பண்டாரசன்னிதிகள் யாத்திரைபோகிறதில்லையெனவும் தம்மையடைந் திரந்தார்க்கு தக்கவாறீயுமுதாரகுணமுடையரன்றித் தாமெவருடனும் வாதிடுதன் முதலிய செய்யாதவர்கள் எனவும் இவரறியார் ஆதலின் திருவாவடுதுறை யாதீனத்துப் பண்டாரசன்னிதிகளையெழுதிவைத்தனர்;திருவாவடுதுறைச்சுப்பிரமணிய தேசிகர் இராமலிங்கபிள்ளையவர்களுடன் வாதிட்டவர் அல்லர் என்றும் வாதிடுதன்முதலியவைகட்கவர்கள் உடன்படத் தக்கவர்களல்லரென்றும் அனைவருமறிவராதலின் இவர்கூறிய இதனை யுண்மையன்றென அனைவருமறிவார்கள்.

மெய்யாகவே சுப்பிரமணிய தேசிகர் இராமலிங்கபிள்ளை யவர்களுடன் வாதம்புரிந்தனர் என்றிவர்கூறில் அதுபண்டார சன்னிதிகளின் யாத்தி

மைக் கணக்கி லம்மடத்திலிராமலிராது, அங்ஙனமன்றி வடதேபுரிந்தாரென்றுல்வென்றவர் இராமலிங்கபிள்ளையவர்களே யாகின்றனர். அது அவர்க்குத் திருவருட்பிரகாச வள்ளலார் என்றபெயரும் அவர்பாடலுக்கு திருஅருட்பா என்றபெயரும் வச்சிரலே கனமாயுலகில்இன்றும் வழங்கி வருதலாலென்க. பல்லாயிரஞ் சனங்கள் அவர்பாடலை அன்புடன்படித்தலு மதற்கொரு சான்றும்.

சுப்பிரமணியதேசிகரினும் ஆறுமுகநாவலர் சிறந்தவரென்று கருதிப் போலும் ஆறுமுகநாவலர் பெயரைமுன்னரெழுதிப் பின் சுப்பிரமணியதேசிகர் பெயரெழுதினர். ஆறுமுகபிள்ளைக்கு ஆறுமுகநாவலரென்ற பெயரளித்தவர் திருவாவடுதுறையாராதலின் திருவாவடுதுறையாதீனத்துப்பண்டாரசன்னிதியவர்களை இரண்டாவதெழுதியது இவர் கொள்கைக்கு நியாயம் போலும் மதுரை இராமசுவாமிப்பிள்ளையையும் சாமிநாத தேசிகரையும் முன்னரெழுதி மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்களை அவர்களுக்குப் பின்னரெழுதியது இராமசுவாமிபிள்ளையும் சாமிநாததேசிகரும் அவரினுஞ் சிறந்தாராதலாற் போலும் இவரனைவரும் இராமலிங்கபிள்ளையவர்களுடன் நேரினின்று வாதாடியதற்கு இவர் கண்டுபிடித்த ஆதாரமென்னை?

இவ் ஒன்பது பெயர்களையும் சுட்டி இவர்கள் சாமானியரா? என்று கேட்கின்றார்.

இவர்கள் இராமலிங்கபிள்ளை யவர்களினும் எத்தனையோ மடங்கு குறைந்த சிவபத்தியும் குறைந்த கல்விகேள்விகளும் உடையரென்றுரைப் பாரையிவர் கண்டிலர்போலும் இவ்ர்களைத் தற்போதம்இழந்தவர்களென இவரினத்தாரன்றிப் பிறரெவருமுரைக்கவு நினையார். சிவபெருமானிடத்திலன்பொருவனுக் குண்டாவதற்கேற்ப தேவாரதிருவாசகங்களினும் பத்திமிகும். சங்காருமூலக விவகாரங்களிலுழன்ற இவர்கள் தேவாரதிருவாசகங்களில் இராமலிங்கபிள்ளையவர்களினும் அதிகமான பத்தியுடையவரென்பது நகைப்பிற்கிடமேயன்றி மதிப்பிற்கிடமாகாது. இவர்கள் சிவனடியார் பத்தியிற்சிறந்தவர்களானல் சிவனடியவரான இராமலிங்கபிள்ளையை இகழுவார்களா? இதுவே இவர்களின் சிவனடியார் பத்தியின் சிறப்பைநன்கு விளக்குகின்றது.

"வேட்டியுந்தாழ் வடமும் வெண்ணீறும் வெண்பல்லுங,காட்டுவது ஞானக்களவுகாண் தேட்ட மற்றொன் பூரணன்காண் சிற்றறிவன் பொய்ப்பாசமென் றறிந்தார்க்கோர்வடிவும் வார்த்தையுமுண்டோ" என்று கண்ணுடையவள்ளலார் கழறியாங்கு சரியாமார்க்கத்திலுங் கிரியாமார்க்கத்திலு நிற்குமின்னவர் மறந்தும் புறந்தொழா மாண்பினராயது எங்ஙனம்.

சிவோகம்பாவனை முதிர்ச்சி யுடையாரன்றோ மறந்தும் புறந்தொழா மாண்பினர்.

வெளியில் மறந்தும் வணங்காது உள்ளில்வணங்குவோர் என்னின் சிவ பூசைமுதலிய புறப்பூசைகளையுடையரான அவர்கள் கொள்கைக்கே இவர் கூற்றுக்கூற்றாயது.

தன்னைத்தவிர, பரமெனவொரு பொருளின்மையால்தொழுதல் இல்லையெனநிற்கு மாயாவாதியர்கொள்கையை அவர்க்கேற்றின் அவரனைவருஞ் சைவராதலின் அதுதவறேயாம். சிவபெருமானைத்தவிர அன்னியமானதொன்றை மறந்தும் வணஙகாதவரென்னின், விநாயககந்தசங்கரி சூரியாதி நவக்கிரகங்களையும் தொழுமியல்பினராதலின் மறந்தும் புறந்தொழாரென்றது சரியை கிரியைகளின்ற இவர்கள் மாட்டினதென்று இவரறியாது கூறினர். இன்னோரை மறந்தும் புறந்தொழா மாண்பின ரென்றது இரப்போரை ஈவோரென்றதற் கிணையாம்.

சபாபதிநாவல ரென்பார் இராமலிங்கபிள்ளையவர்கள் இவ்வுலகிலனைவோருங் காணவிருந்த காலத்து, சபாபதிப்பிள்ளையாகவன்றி சபாபதிநாவலராக ஆயிரார் விகாரிவருட மச்சிட்ட திராவிடப்பிரகாசிகையுள் இராமலிங்கபிள்ளை யவர்களைக்குறித்து விவரித்த விவர் இராமலிங்கபிள்ளையுடன் நேரேநின்று வாதிட்டாரென்னு மிவரையும் இராமலிங்கபிள்ளையினேரேநின்று வாதிட்டவரென ஒன்றிரண்டுவருஷங் கழித் தொருவரெழுதினுல் சாமானியர் மெய்யென்றே கருதுவர்.சபாபதிப்பிள்ளைசபாபதி நாவலரான காலமாதிகளை அறிந்தவர்கள் இவருரையை மதியாரென்க.

பேசத்தெரிந்த நாள்முதல் சாகும்வரைக்கும் பிறர் குற்றங்கூறுதல் பிறர்மதம்பழித்தல் முதலியவைகளுடனிருந்த நாவலரை யுள்ளிட்டார் பொறாமை பகைமுதலியவைகளை இல்லாதவரெனல் உலகானுபவ விருத்தமான சொல்லேயாம்.

இவர்களிடம் பிடிவாதம் அபிமானமாதிய இல்லையென இவர்பக்கத்தை இப்பொழுது சார்ந்துநிற்கும் இத்தேயத்தவரில் பெரும்பாலார்சொலத் துணியாராயின் பிள்ளையவர்களின் பக்கத்தவர்கள் இதனை யங்கீகரியாரென்க.

இராமலிங்க பிள்ளையவர்க ளிடமும் அவர் பாடல்களிடத்தும் அருள் பிரகாசித்திருத்தலை அறிந்துகொள்ளும் பரிபாக மில்லாதவர்க ளாதலால் மறுக்கப்புகுந்து வலியழிந்து கழிந்தனர்.

இவர்களின் மறுப்பு வெற்றிபெற் றிருக்குமாயின் உலகினரனைவரும் இவர்வழிப்பட்டா ராகிநிற்பர். அனேகலட்சஞ் சனங்களால் அருட்பிரகாச வள்ளல் அருட்பா என இராமலிங்க பிள்ளையையும் அவர் பாடலையும் கூறிவருதலின் வென்றவர் இராமலிங்க பிள்ளையும் அவர் கூட்டத்தினருமேயாவர்.

தோற்றவர்கள் அவர்கொள்கையை மறுக்க முயன்றவர்களும் அவரைச் சார்ந்தாருமே யாவர். நாவலர் பக்கத்தார் கருத்து நிறைவேறியிருந்தால் அவரைசசார்ந்த இப் பூர்வபக்கத்தார் இராமலிங்கபிள்ளை பாடல் ஆபாச தர்ப்பணமென விவாத புததகமெழுத வேண்டுவதின்றாம். எழுதியிருததல் உண்மையாதலின் வெற்றிபெற்ற தின்மையை அதுவே காட்டுகின்றது.

பிள்ளையவர்களுடன் நேர்நின்று வார்த்தையாடியும்வாதிட்டுமிருந்தால் அவர் இவர்களை யடக்கியிருத்தலு முண்மையேயாம்.

இககுறித்தவாகள் எதிர்நின்று வாதிட்டிலர் என்பதனை யறியாதார் யாவர். இவர் தாமாகவே கட்டிக்கூறுங் கதைகளை எவருஞ் சம்மதியார்.

இவர்கூறிய ஆறுமுக நாவலராதியரை இவா இராமலிங்கபிள்ளையினும் எத்தனையோ மடங்கு சிறந்தவரென தாமே கூறினமையின் சிறப்பினையுடைய இவர்கள் இழிவினையுடைய பிள்ளையவர்களை அடக்கிவிடலாமே'

அங்ஙனம் அடக்க ஆற்றலற்றவர்கள் ஏன் விவாதம் புரிதல் வேண்டும் பிள்ளையவாகளை அடக்கியாளும் ஆற்றலற்றவர்களான இவர்களை இவரெடுத்தெழுதுவதனால் இவாது பக்கத்துக் கென்னவெற்றி, ஒன்று மின்மையாலிவைபயனற்ற வெற்றுரையென்க.

பின் இராமலிங்கபிள்ளை தம்பாடல்களில் "இன்புறு சித்திக ளெல்லாம் புரிகவென் றன்புடனெனக்கரு ளருட்பெருஞ் சோதி" என்பது முதலிய பாடலடிகளைக் காட்டி என்று இன்னவாறு தம்மைவியந்து பேசியிருக்கின்றனர்? என்றார். சைவசம்பிரதாயிகளான பெரியோாகள் தாம்பெற்றஞானசித்தியை எல்லாஞ்செயவலசித்தி எனவுரைத்தல். வழக்கமாதலின் ஞானசித்திபெற்ற இராமலிங்கபிள்ளை யவர்களுமுரைத்தனர் முன்னோருரைத்தாங் குரைததல் தமமைவியந்து பேசியதென விவர்கூறுதல்தவறேயாம்.

தாயுமானர் "எல்லாஞ்செயவல்ல வின்பவுருவைத் தந்தவன்னையே." எ—ம்.

"சாற்றரிய சித்திமுத்தியானவை யெல்லாந் தாமே யாகும். எ - ம.

பூவிற் காண்டக வெண்சித்திமுத்தி யெனக்குண்டாம். எ-ம். கூறியிருத்தலை யறிவரேல் இராமலிங்கபிள்ளை தம்மைவியந்து பேசியிருக்கின்றனர் என்றுரையார்.

. பறிநன்றாயிருக்கதென வொருபொற் கொல்லனுரைததால், சங்கதியின்னதென்றறியாத ஒருவன் அது இன்னதனைச சுட்டியுரைத்ததென அறிவானோ? தெரிந்தவன்பொன் நன்றாகவிருக்கின்றது என்றான், என்று

தெரிந்து கொள்ளுவான். சித்தியென்பதனை இராமலிங்கபிள்ளையவர்கள் உபயோகித்திருத்தல் இன்னதனைக் குறிக்கின்றதென அறியாத இவர்கள் வியந்துபேசியதாக வுரையாது வேறெதனையுரைக்க வறிவார்கள்.

"சித்தர் சிவஞானஞ் சென்றெய்து வோர்களே எ-ம்
சித்திக்கு வித்தாஞ் சிவோகமே"-எ-ம
"சிவமான ஞானந்தெளிய வொண்சித்தி"-எ-ம்
"திருவடி ஞானமேதிண் சித்திமுத்தி."எ - ம்.

"சித்தஞ் சிவமாகவே சித்திமுத்தியாம்" எ-ம் திருமூல யோகியார் திருமந்திரத்திற் கூறியிருப்பதன் பொருளை யுணர்ந்தவராயின் இவ்வாறு கூறார்.

சிவபெருமான் அடியவர் விரும்பியவைகளை அளிப்பவராதலின் பிள்ளையவர்களும் சிவபெருமானிடம் விரும்பிய ஞானசித்திகளைப் பெற்றமையை யெடுத்துரைத்தனர். சித்திகளைப்பெற்றவர்கள் சித்திகளைச செய்து காட்டுவாராயின் நிரதிசயவின்பமுத்தியை எய்தாரெனச் சிவபெருமானே திருவாய்மலர்ந்தருளி இருத்தலின் இப்பூர்வபக்கத்தார் பெரிதாக மதித்துக் கூறும் மாயசித்திகளை ஒருபொருளாக மதிததுச் சிவஞானியர் செய்யாரென்க.

இலிங்கபுராணம். "இன்னவட்ட மாசித்திவல்லோன் யாவும் விரும்பாது, முன்னுயழியாப் பரம்பொருளாய் மூவர் முதலாய் மதியினுல், பன்னுளெடுத்துப் பகர்ந்திடினும் பகர்தற்கரிய பரஞ்சுடரைக், கொன்னேயுணர்ந்து சமாதியினி லிருக்கின் முத்திகூடுவனுல்" என்றும். "விருத்தவட்ட மாசித்தி செய்யாதவனு ரிகக்கேழ்த்த,முருக்குந் துவருமழகழிக்குஞ் செய்வாய்முகிழ்மென்முலைபாகன்,உருத்தன் மனத்திலுணர்ந்திருக்க வல்லானென்னிலொருகாலும், வருத்தமில்லாத்தனிமுத்தி வீட்டின் மருவப்படுவனுல்" என்றும் உரைத்தலின் சிவஞானிகள் அட்டமாசித்தியை யுடையவராயினும் அவைகளைச் செய்யவிரும்பார். அன்றியும் சூதசங்கிதை சருவசித்திகரமுரைத்த இடத்து சொரூபசித்தியைத்தருஞ் சருவசித்திகரமானது மூவிதச செயல்களா லொருவனை யடையுமென்று கூறி யிருக்கின்றது. அவை காயிகவாசயாகங்களான சைவ புண்ணியங்களேயாம். ஆதலின் பிள்ளையவர்கள் உரைத்த தின்னசித்தியையென இன்னோரறிந்துகொள்ளாமல் புறமதத்தரினுஞ் சமானியர் கூறுமாறு கூறுகின்றனர்.

பின் எல்லாவற்றையுஞ் செய்யுஞ் சித்தைப் பெற்றவர் என்பது சத்தியமாயின் தம்மையும் தம்பாடல்களையுங் கண்டிக்கவந்த அவர்களைச் சாந்தராக்குவதா கூடாமை.

நம்பும்படி செய்வதா அவர்க்கு அருமையாயிற்று. எல்லாஞ் செய்யுஞ் சித்துக்கள் எவை என்றார். வசியமுதலிய மந்திரசித்திகளால் பிறர்களை வசப்படுத்துவோர் பாவிகளின் பாற்படுவோரென இவரறியாதவ ராதலி னிவ்வாறு கூறுகின்றனர்.

ஒருவர் தங்கொள்கையை மற்றொருவரை வஞ்சனையாக நம்பும்வண்ணஞ் செய்வோர் உண்மையான ராவார்களா? பாவிகளாக வன்றோ வாவார்கள். பாவச்செயல் இன்னது புண்ணியச்செய லின்னது என்றே இவரறியார் போலும். "பரவுறுவசியமாதியில் செம்பொன்பற்றல் - தேறுகவுபபாதகக்கிணையென்று" என்ற தணிகைப்புராணத்தினை இவர் அறியார்போலும் வசியாதியால் பொருள்வருதல் பாவமாமேல் வசியாதியால் பிறரைவஞ்சனையாகத் தன்வசப்படுத்தல் சாந்தராக்குதலாதிகளும் பாவத்தின் பாற்படுமன்றிபுண்ணியத்தின் பாற்படாவே. பிள்ளையவர்களை பாவச்செயல்செய்யஇவர் தூண்டுதல் தவ(று)

ஒருவன்முத்திக்குரிய ஞானயோகத்தினை யுடையவனாகி இருக்குங் காலத்து அவனிடம் சிவபெருமானால் சகலசித்திகளையுமளிக்கப்படுமென்றும் அங்ஙனங்கிடைத்த சித்திகளாலுலகினை மயக்கவிரும்புவோர் சாமானியசனங்களால் புகழொன்றைச் சிறிதுகாலத்துக்கடைவரேயன்றி அழியாதமுத்தியை அடையமாட்டாரென்றும் சித்திகள் காட்டத்தக்க சமயங்களேரினும் அவைகளில் மயங்காது நிற்பவர்களே முத்தியடைவார்களெனவும் அறிந்த பெரியவர்கள் சித்திகளைச்செய்து பொய்ப்புகழ்பெற விரும்பார். இதனை "குறுகலோங்குதல் குறுநடைக்குழவி நல்லுருவம், பெறுதல் வெண்ணரை பிறங்கிய மூப்புருவெடுத்த லறையு நால்வகைச்சாதியின் வடிவொடு மமைதன், மறுவினற்பெரும்பூதத்தின் வயங்குரு வெடுத்தல்."

முதலியனவாக உரைக்கும் அறுபத்துநான்கு சித்திகளையும் உடையவராயினும் அவைகளை மோட்சானுபவ விருப்பமுள்ள சிவஞானிகள் செய்யார் என "இன்னயாவையு மீறிலாதோங்கியமுத்தி, மன்னுதற்கிடையூறிவை மனங்கொளாதகற்றி, மின்னுநக்கவார் சடையவன் விரைமலர்ப்பாத, முன்னவேண்டுவர் முடிவிலாமுத்தியின் விழைந்தோர்." என இலிங்கபுராணமுரைத்தலின் பிறர்பொருட்டுச்செய்து காட்டவேண்டிய அவசியம் யோகசித்திகளையுடைய ஞானிகட்கில்லையாதலின் தமதுசித்தித் தன்மையைக்கொண்டு வாதிடவந்தாரைச் சாந்தராக்காமையால் இராமலிங்கபிள்ளை சித்திபெற்றவரன்றென்கை தவறென்க.

சித்தியிருந்தால் வாதிடவந்தாரை யடக்கியே இருப்பர் இல்லாமையாலன்றோ அடக்கினாரில்லை யென்னில், உபயவாதிகளாலும் சகல சித்திகளையுமுடையவர்களாக அங்கீகரிக்கப்பட்ட சமயாசாரியருள் ஸ்ரீ ஞானசம்பந்தப்பெருமான் தம்மொடுவாதிடவந்த சமணர்கள் தம்மடத்தில் எரிகொ

ளுவன் முதலிய செய்யவும் உடனே அவர்களைச் சிவபெருமானே பரம்பொருளெனக் கொண்டொழுகுமாறு செய்யாது கிடைத்தற்கரியமனித்த வுடலினையுடைய எண்ணாயிரஞ் சமணகுரு மார்களை கழுவிலிடுவித்து கொலை செய்விப்பானேன்?

தம்மனதிற்கு பொருத்த மற்றவிஷயங்களை ஒப்பாதவர்களை கழுவிலிட்டுச் சித்திரவதைப்படுத்தல் அருட்டிறத்துக்கு அடுத்ததொன்றன்றே? தமது ஞானப்பார்வையினாலும் ஞானவசனத்தினாலும் அவர்களைச் சாந்தகுணமுடையராக்கி விபூதிருத்திராக்கதாரணராக்கி சிவநாமமுச்சரிக்கச் செய்து தூய்மையாளராக்கி யிருக்கலாமே? அங்ஙனஞ் செய்யாமையால் சித்தியில்லாதவ ரென்னலாமோ?

சைவத்திறத்தில் நம்பிக்கையின்றி வாதுபுரியவந்து பிரயாணத்தினைத் தடைசெய்த புத்தநந்தியையேன் கொலைபுரிதல்வேண்டும். தம்மிடமுள்ள சித்திவிசேஷத்தால் அவனுக்குச் சைவசமயமே மெய்ச்சமயமென்னும் புத்தியையுண்டாக்கி யிருக்கலாமே? அங்ஙனமன்றி பரமசாந்த மூர்த்தியான ஞானசம்பந்தப்பெருமான் புத்தன்றலையி லிடிவிழச்செய்யலாமா? சாரிப்புத்தன் முதலிய பிறரை வாதில்வென்று சைவராக்கியதுபோல உலகிலுள்ளமற்றையபுத்தரையும் தமது சித்தின் வல்லபத்தால் சைவர்களாக்கி யிருக்கலாமே? அவ்வாறு செய்யாமையா லவரிடம் சித்திகளில்லையென்று கூறலாமோ?

சிவபெருமானால் திருநாவுக்கரசெனப் பெயரிடப்பட்டு அருண்மூர்த்தியாகி யற்புதச்செயலிற்சிறந்து நின்றபின்னர் அப்பர்சுவாமிகள் சமணர்களால் தூண்டப்பட்ட பல்லவமன்னவனின் தண்டனைகளான நீற்றறையுளிருத்தல் கடலில் கட்டியிடுதல் முதலிய கொடுஞ்செய்கைகளைச் செய்யச் செய்யாமல் சமணர்களையும் பல்லவனையும் தம்மிடத் தன்புள்ளவர்களாகவும் சைவத்திற் பிரியமுள்ளவர்களாகவும் ஆக்கி உய்விக்காததென்னை? காலக்கிரமத்தில் பல்லவமன்னன் மாத்திரம் சைவனானனேயன்றி அவனுடனிருந்த சமணர்கள் சைவப்பகைவர்களாகவே இருத்தலை நீக்கிச்சைவராக்காததென்னை? அஙஙனமாக்காமையால் அவர் சித்தியற்றவரோ?

நீற்றறையை நீர்வாவியாக்கியதும் யானையைத்தலைசாயச் செய்ததும் விடமருந்தி இறவாதிருந்ததும் தங்கள் மதத்திலிருந்தபொழுது கற்ற வித்தைகளாலெனச் சமணர்கருதிநிற்றலை மாற்றிச் சைவ மகத்துவத்தாலேயே நிகழ்ந்த அற்புதங்களென அவர்மனதிற்பட்டு திருநீறுபூசிச் சிவனடிமலர்களை வணங்கச் செய்யாததென்னை? அங்ஙனஞ் செய்திருந்தால் இவரைச்சமணரும், சைவரப்பரென்னு மெங்கள் மதத்தருமசேனர் எங்கள் மதத்திலிருந்து கற்றமந்திரசித்திகளைக் கொண்டு எங்களை மோசஞ்செய்தனரெனக் குறைகூற நேரிடாதே? அங்ஙனஞ் செய்யாமையா லவர்சித்தியற்றவராவாரா?

திருத்தெளிச் சேரியில் சிவலிங்கபெருமானென மறைத்து சமணவிக்கிரகத்தினைவைத்து தமது சிவதெரிசனத்துக்கு இடையூறுசெய்த சமணரைத் தாமொன்றுஞ் செய்யாது ஒருமூலையிலிருந்து வருந்தினமையால் சித்தியற்றவராவாரா? திருநாவுக்கரசர்.

சித்தியுள்ளவராகுல் சமணரின் மனநிலையைப் பேதித்து அவர்களை சைவராக்கி நாமங்கள் செய்ததபசாரம் எனஅவர்கள் மறைத்த சிவலிங்கபெருமானை அவர்களைக்கொண்டே வெளிப்படுத்தித் தாமும்வணங்கிஅவர்களையு நல்வழிப்படுத்தி யிருக்கலாமே? அரசனைக் கொண்டச சமணர்களுக்குச சரீரகட்டமுண்டாமாறு சிவபெருமான் செய்யுமாறிருந்தது நியாயமாகுமா? என்று அப்பர்சுவாமிகள்பொருட்டு வினவுதல் உசிதமாகுமா?

சிவபெருமான் றிருவருளா லனுப்பிவைதத தேவலோக மாதர்களை வெறுததுரைத்ததும், சிவபெருமானளித்த பொன்மணி முததுவயிரமாதிகளை உழவாரததாலேந்தி திருக்குளததி லெறிந்ததும் திருநாவுககரசு பெருமானுக்குத் தகுதியாகுமா? கடவுளாலனுப்பப்பட்ட மாதரின் ஆடல்பாடலாதிகளை அவர்கண்டு கேட்டு மகிழவேண்டாவோ? என்றுகேட்டல் நியாயமாகுமா?அவர் அவ்வாறு செய்யாமையால் அவை கடவுள் நியமனத்தாலார்ந்த தோற்றஙகளெனக் கோடல்பொய்யன்றே என்பது உசிதமாகுமா?

பட்டினததடிகள் இரவிற்பசியால் வருந்தி ஒருவன் கிரகத்துட்புகுந்து சோறுதேடியதனைக் கண்ட வீட்டிற்குடையவன் தன்மனைவியைவிபசரிக்க வந்தவொருவனெனத தடியெடுததடித்ததற்குப் படுமனமே என்றது ஏன்? அவன் தம்மைஅடிக்காதிருக்கச செய்யததக்க சித்தியெதுவுமில்லாமையாற்றன்றோ?சித்தியுடையவராகுல்அடிபடாமலவனைச சாந்தஞகச செய்திருக்கலாமே சகலசித்தியுமுடைய பட்டினததடிகள் ஒருவன் தம்மையடிக்காமற் சாந்தனுக்ச செய்வதாகூடாமை? என்பது நியாயமாகுமா?

சுந்தரமூர்ததிப் பெருமான் தம்மிடத்துத் தமதுசெயல்களால் பகைத்திருந்த ஏயர்கோன்கலிக்காம நாயனுரைத் தற்கொலைசெய்யும் வரைக்கும் வைய்யாமல் தம்மிடததில் விருப்பமுடையவராக ஏன்செய்து கொள்ளக் கூடாது? அஙஙனஞ் செய்யாமையாலவர் சிததியற்றவரா? தம்பொருட்டு இறந்தாரை யெழுப்பாமல் தாமுமிறக்கத துணிந்தது சகலசித்தியுமுடைய திருவருட்டன்மைக் கழகாகுமா என்று வினவுதல் நியாயமாகுமா?

திருவருளுற்றபின்னர் மணிவாசகப்பெருமான் பாண்டிய ஏவலாளரால் துன்புறுத்தப்பட்டனரோ பாண்டியனை தம்மீது அன்புடையானுகச செய்து நெற்றியில் கல்லேற்றல் கைகளில் கிட்டிக்கோலிடுதல் மத்தியான வெய்யலில் நிறுத்துதல் முதலிய கொடுஞ்செய்கைகளை யனுபவித்து அவைகளைச சகிக்கமாட்டாமல் சிவபெருமானை நினைதது அலறி அலறி அழாமற்

சுகமாக இருந்திருக்கலாமே அங்ஙனஞ் செய்துகொள்ளாமையால் அவர் சித்திபெற்றவராவாரா? என்பவர்கள் சைவசம்பிரதாயமுணர்ந்தவர்களாவார்களா? ஆதலின் தாம்பெற்ற சித்திகளால் தம்மொடு வாதிடவந்தாரைச் சாந்தராக்குதன் முதலியவைகளைச செய்யக்கூடாதா அங்ஙனஞ் செய்யாமையால் அவர் திருவருள் வழியாகச சித்துப்பெற்றவரல்லர் என்பார் சம்பிரதாயமுணராது தவறு கூறுவோரென்க.

தில்லையம்பலத்தில் வாதிடவந்த புத்தரைத் தம்வயப்படுத்தி அவர்களைச் சைவர்களாகச் செய்திருக்கலாமே அவ்வாறுசெய்யாது அவர்களைகற்செக்கி விட்டரைத்துக் கொல்லசசெய்ததுசைவமதசம்பிரதாயத்துக்குக் குறைவையன்றோ உண்டாக்கியது தம்மிடத்திலிருக்குஞ் சித்தின் விசேஷத்தால் அவர்களைச சாந்தராக்குவதா கூடாமை அவ்வாறு செய்யாததென்.

இது காருணியமுடைய மதமாதலின் ஜைனபுத்தர்களின் மனதைப் புத்தத்தினின்றுந்திருப்பிச சைவத்தில் விட்டிருந்தாலன்றோ இதற்குபெருமை அவ்வாறு செய்யாமலவர்களையவர்கள் மனம்போல விட்டு அனியாயமாக அழிக்கலாமா? திருவருள்விலாசமுஞ் சித்துமுடைய மணிவாசகனாருக்கிது தகுதியா? என்பார்க்கிதொன்றுரைப்பர்.

ஆகவே தெய்வத்திருவருளுஞ் சகல சித்தித் திறமுமுடைய சமயாசாரியர்கள் பட்டினத்தடிகள் முதலிய ஞானவான்களிடங் காட்டிய ஆட்சேபங்கள் உசிதமானவை எனக்கருதும் அவர்களே இராமலிங்கபிள்ளையவர்கள்சகலசித்தியும்பெற்றுள்ள துண்மையாயின்வாதிடவந்தாரைச் சாந்தராக்கி யிருப்பரென வுரைப்பர்.

எவரெவர் எவ்வளவெவ்வளவு காரியங்களைச் செய்து புகழிகழ்களைப் பெறவந்தார்களோ? அவ்வளவை அன்றி அதிகமாக இயற்ற எவராலுமாகாது. ஆகுமென்பிரேல் சிவபெருமானாகிய கடவுளும் அக்கடவுளின் கருணையைப் பெறுமான்மாக்களும் அதற்குரிய நற்செயல்களுமில்லையாகும்.

செத்தாரை யெழும்புந்திறமுடைய சுந்தரமூர்த்திப் பெருமானும் ஞானசம்பந்த சுவாமிகளும் வாகீசப்பெருமானும் இவ்வுலகிலிருந்தகாலத்து அவிநாசிக்கடுத்த ஏரியிலிருந்த முதலையால் விழுங்கப்பெற்ற அந்தணச் சிறுவரும் சிவநேசச்செட்டியார் மகளும் அப்பூதியடிகள் மகனுமன்றிப் பிறரெவருமிறந்ததே யில்லையா? அநேகம ஆயிரங்கோடிப் பெயர்களிறந்திருப்பார்களே அவர்களையெல்லாம் பிழைப்பித்து உலகினரனைவருக்குஞ் சந்தோஷத்தையுண்டாக்கி சைவேதரமதங்களைக் கட்டழித்து சிவபெருமானையே நேராக அனைவரையும் வணங்குமாறு செய்திருக்கலாமே. அவ்வாறு செய்யாமைக்குக் காரணமென்னை?

இறந்து பலவருடங்கள் கழித்து இறந்தமக்களை எழுப்பியதொன்று நிரம்பவேண்டிய வயதினையு நிரம்பச்செய்தெழுப்பினர்களோ அவ்வாறெழுப்பியிருக்க உலகினரனைவரும் அவர்களைக் கிட்டித் தங்குடும்பங்களில் இறந்தவர்களை எழுப்பித்தரவேண்டுமென ஏன்விரும்பினரில்லை? தெய்வத்திருவருளால் எழுப்பப்பெற்ற அவர்கள் பின்னர் ஏன் இறந்தார்கள்? இறக்கலாமா என்று கேட்பவர்கள் கடவுளின்நியதியை அறியாதவர்கள். வெயிலாலொளிருமணிபோல்வார் அருள்பெற்ற ஆன்மாக்கள் எவர்கள் அது செய்தாரில்லை இதுசெய்தாரில்லை அதனலவர்ஞானியரல்லர்சித்தரல்லர் அருளரல்லர்என்பார் அவர் தெய்வத் திருவருளின் தன்மையை உணராதவரே யாவர்.

சிவானுபவத்துக்கும் மாயாசாலச்சித்திற்கும் சம்பந்தமின்மையை அறியாதாரே சிவஞானியாகித் திருவருள் கைவரப்பெற்றால் அற்புதசெயல்கள் செய்தல் வேண்டுமென்பவர்கள். வேத சிவாகமங்கள் அவ்வாறு விதியாமையின் அவர் கூற்று வெறுங்கூற் றென்க.

இராமலிங்கபிள்ளை அவர்களின் பாடல்களிலுள்ள ஆபாசங்களை விளக்குவதாகப் பிரதிக்கினைசெய்த இப் பூர்வபக்கத்தார் நியாயமற்றவும் பொய்யானவும் பண்டே கண்டிக்கப்பட்ட வுமான விஷயங்களாலேயே தமது சுவடியைப் பெருக்கித் தமதறிவின்றன்மையைக் காட்டியிருக்கின்றனர்.

பின்-தம்மை நம்பியிருந்த பிராமணர் ஒருவரைச் சாகாமற் பண்ணுவேமென்று சொல்லிக் கைவிட்டுவிட்டனரே என ஒரு புளுகொன்றை எடுத்தெழுதியிருக்கின்றனர். இப்புளுகு இவரது சொந்தமன்று போலியருட்பா மறுப்பெழுதியவர் உண்டாக்கியது. இப்பொய் வெளிவந்த ஒரு மாதத்திற்குள் அப்போலியருட்பா மறுப்பைக் கண்டித்தவர் எழுதியிருக்கு நியாயங்களைக் காணுதவரைப்போல தாம் புதிதாக வெழுதினர். இராமலிங்கபிள்ளையவர்களை உலகினர் மதியாதிருத்தற்குத தக்க பொய்களையும் நிந்தைகளையும் வரைந்துவிடத் துணிந்த இவர் பிள்ளையர்வகள் பக்கத்தினர் மறுத்த விஷயங்களையே மீட்டு மீட்டு மெழுதுதல் அநுசிதமேயாம்.

பிள்ளையவர்கள் தம்மை நம்பியிருந்த பிராமணரை சாகாமற்பண்ணுவேமென்று சொன்னதேயில்லை. இந்த விஷயத்தைக்குறித்து போலியருட்பா மறுப்பின் கண்டனமான குதர்க்காரணிய நாசமகாபரசின் ௬0௬-வது பக்கத்தில் இவ்வாறெழுதியிருக்கின்றது.

“இனி அததீட்சிதர்களு ளொருவரும் இந்நாவலரைப் பலகாலும்கல்வியிற்பரீட்சித்துவென்று பலரறியத்தலைகுனியச செய்தவருமாகிய கணபதி சுப்பாதீட்சிதர் என்பவர் ஒருவர். பிள்ளையவர்கள் பால்கல்விமுதலியபயின்றிருந்தனர். அவர் ஆளுடையார் விஷயமாய்ப் பலதுதிகளுஞ்செய்திருக்கின்றனர். அவர் சிலநாளைக்குமுன் சிதம்பரதலத்திற்றனே சிவத்தியானத்

தோடு பரிபூரணதசையை யடைந்தனர். அதனுற்ருன் நமதுநாவலர் அதிக தைரியத்துடன் இக்கட்டுக்கதை கட்டதுணிந்தார். அக்காலத்தில் பிள்ளையவர்கள் வடலூர் பிராந்தியத்திலிருந்தனரென்று அச்சிதம்பர தலத்துள்ள யாவரும் அறிவர், அன்றிமற்ற தீட்சிதர்கள் பிள்ளையவர்கள் விஷயத்தில் மிகுந்த அன்புடையாராய் இன்று நாளையுமிருக்கின்றனரல்லாது பிள்ளையவர்களிடத்தில் மாணுக்கத் தன்மைபூண்டு வந்தாருமின்று, அவர்கட்குச் சன்னிபாத நோய்வந்ததுமின்று,பிழைப்பிக்கச்சொல்லிக் கேட்டதுமின்று, பிள்ளையவர்கள் அக்காலத்திலங்கிருந்து பிழைப்பிப்போமென்று சொல்லிக் கைவிட்டதுமின்று" என்று எழுதியிருத்தலைக்கண்ட நாவலர் மௌனஞ்சாதித்திருக்க அவர்பக்கத்தைச் சாதிப்பான்போந்த இவர் பின்னுமதனை யெடுத்தெழுதுதல் தவறேயாம்.

இந்த விஷயத்தினை நிரூபணஞ்செய்ய நாவலரை சிதம்பரத்தலத்தில் சென்ற சுக்கிலவருடம் ஆனித்திருமஞ்சனகாலத்து மகாசனசபையார் அழைத்ததற்கு நாமங்குவரோமென ஆறுமுகநாவலர் நின்றுவிட்டதனுலேயே இதுகட்டுக்கதையெனப் பலவருடங்களுக்கு முன்னரே அகிலசனங்களாலும் அறிந்தொதுக்கப்பட்ட விஷயம். இத்தகையதூர்ப்பல விஷயங்களால் இவரடைவது தோல்வியேயன்றி வெற்றியன்றென்க.

பின் ஈண்டுகொட்டப்பட்ட வித்வசிரோமணிகள் சித்தாந்த விடயமாக கேள்விகேட்டக்கால் விடைகூறத்தெரியாது விழித்ததென்னே? என்றூர்.

பிள்ளையவர்களைச் சைவசமயி அல்லர் சிவபெருமானை வழிபடுபவரல்லர். கல்வியுடையவரல்லர். என பாமரசனங்களைக் கொண்டுகூறவைக்கவேண்டுமென்னும் அபிப்பிராயத்தா லிவ்வாறெல்லாங்கூறுமிவர் பிள்ளையவர்களின் சித்தாந்தத்தினை இன்னதென உணராதவராதலின் மேற்காட்டிய வித்வசிரோமணிகளை வியக்கின்றனர்.

சித்தாந்தத்தின் நான்கு பாதங்களில் முதலிரண்டுபாதங்களிலுள்ள அநுட்டிப்புகளிலும்பூரண பரிசயமற்ற இவர்கள்நான்குபாதங்களிலும் நல்லபரிசயமுடையவராய் நான் காவதான ஞானபாதநிலையில்நின்றவரான பிள்ளையவர்களைக்கண்டு கேள்விகேட்டதேபொய். அவ்வாறு கேட்டதுண்டெனில் பிள்ளையவர்களுரைத்த சமாதானத்தினை அறிந்துகொள்ளும் ஆற்றலின்றி விழித்தவர்கள் அப்பூர்வபக்கத்து வித்வசிரோமணிகளே யாவர்.

இவர்சைவத்துள் அனேகவித சித்தாந்தங்களுண்டெனவும் அவையனைத்தும் வேதசிவாகம சம்பந்தமானவையே யெனவும் அறிந்துள்ளவரல்லர் ஆதலின்,சைவருள் ஒருசாராரின் அநுட்டிப்பு நூலிற்சிலகண்டு இவைகட்கு மேனுலே இல்லையென மனப்பால் குடிக்கின்றனர். இவர்காட்டிய வித்வசிரோமணிகளனைவரும் ஒருவகைச்சித்தாந்திகளல்லர் எனமுன்னர்க் காட்டினும்.

பலவேறு வகைப்பட்ட சித்தாந்தக்கொள்கையின் நின்றோர்களை ஒன்றாயெழுதி இவரனைவரையும் ஒருவகைச சித்தாந்திகளெனவும் ஒருவகை அபிப்பிராயமுடையவரெனவுங குறிப்பிற்காட்டியவிவரை, பிள்ளையவர்களையவர்கள் சிததாந்தவிடயமாகக் கேட்டகேள்விகள் எவை எனக்கேட்ட லனுவசியம்.

இராமலிங்கபிள்ளை யவர்களால் பதிலுரைக்க முடியாத அருமையான கேள்விகளை இன்னவையென இவரெழுதியிருந்தால் அனைவருமறிந்து அவைகளுக்குச் சமாதானங்களைத் தேடுவார்கள். இவ்வளவருமையான விஷயங்களை மறைத்துவைத்தல் பரோபகார சிந்தனையையுடையராய் இராமலிங்க பிள்ளை யவர்களால் உலகினர் கெடாவண்ண முயலுகின்றோமென்னுமிவர்க்கழகன்றென்க.

பின் ஆறுமுகநாவலரவர்கள் தமது பாடல்களைக் கண்டித்தகாலை அவர் மீது கோபமும் பொறாமையுங்கொண்டு சிதம்பரத்தின்கண்ணுள்ள ஆயிரக்கான்மண்டபத்திலிருந்து தம்மையடுத்த சில மருளரது தூண்டுதலால் "நாவலர்" என்ற சொற்கு அருத்தம் விரிக்கத்தொடங்கி நாவல்லாதவர். நாவினால் அலர் உண்டாக்குவோர். நாவினால் துன்பப்படுபவர் என்பன முதலாயகுழறுபடைகளைக் கூறி நிந்தித்து அதனாலல்லற்பட்ட தென்னையோ? என்றார்.

இராமலிங்கபிள்ளையவர்களை யடுத்தவர்களனைவரும் மருளரும் ஆறுமுக நாவலரும் அவரை யடுத்தவர்களும் அருளரும்போலும் நாவலர் என்ற சொற்குப்பொருள் விரித்தமையானே ஆறுமுகநாவலரையிகழ்ந்ததாகுமா? ஆறுமுகநாவலரை இகழ்ந்தாலன்றோ அவரை இகழ்ந்ததாகும். நிற்க நாவலர் என்ற சொற்குப் பொருள் விரித்தால் அது யாழ்ப்பாணத்து ஆறுமுகநாவலரொருவரையே, சார்ந்ததென்பதென்னை ஆயின் ஆறுமுகநாவலரை சிதம்பரத்து ஆயிரக்கான் மண்டபத்திற்கு சன்னிபாத நோயிலிருந்த அந்தணரை சாகாமல் வைக்கிறேனென்று பிள்ளையவர்கள் சொன்னதனையும் இரசவாதத்தாற் கிடைக்கும் இரண்டிலக்கம் ரூபாய்களை சிதம்பர சம்புரோட்சணத்திற்காகத்தருகிறோமென்றுபிள்ளையவர் பலர்எதிரே கூறினரென்பதனையுந் தாபித்துசசெல்லுமாறு அழைத்தபோது அஞ்சி வராமல் நின்றுவிட்டபொழுதுசெய்த பிரசங்கமாதலின் அவரைச்சார்ந்ததுபோலும் அதனாற்பட்ட அல்லலென்னை ஒரு அல்லலுமில்லையாதலினிது வெற்றுரையென்க.

பின் தம் பாடல்களைக் கண்டிக்க எழுந்த புலவர்களை யாதேனும் ஓர் சிததுககாட்டி ஏனோ தடுக்கவில்லை அவர்கள் யாதாவது சித்துக்களை அல்லது அற்புதஙகளைக் காட்டினால் நீவிர் சொல்வதை நம்புவோம். அருட்பாவென்பேம் அருட்பிரகாசவள்ளல் என்பேம், என்று இராமலிங்கபிள்ளையார்தம்மைப்பெரிதும் வேண்டவும், ஒன்றுஞ் செய்யமுடியாது விழித்து வெட்கிசசென்னையை விடுத்து ரெட்டிப்பாளையமோடியதென்னே என்றார்.

சைவசமயத்துக்குரிய எந்த நூலிலேலும் சித்துக்காட்டுபவர்களும் அற்புதஞ் செய்பவர்களும் பாடும்பாடல்களை நம்பும்வண்ணம் அல்லது அங்கீகரிக்கும் வண்ணம் உரைக்கக்கண்டிருக்கின்றார்களா? அற்புதச்செயலும் சித்துக்காட்டுபவர்களின் பாடல்களை அங்கீகரிக்கலாம் கேவலம் பத்தியாலும் கல்வித்திறத்தாலும் கடவுளைச்சுட்டிப் பாடும்பாடல்களை அங்கீகரிக்கப்படாது என்று விதிநூல்களெவையிலும் இல்லையாகவும் சிவபெருமானையே நினைந்து நினைந்துருகிய மெய்யன்பரான இராமலிங்கபிள்ளை அவர்களைக் கிட்டி அற்புதங்காட்டல் வேண்டும் சித்துக்காட்டல்வேண்டும் என்றுகேட்பவர்கள், வேதசிவாகமங்களின் வெளிக்கருத்துக்களையு முணராதவெள்ளறிவினரே யாவர்.

சித்துக்காட்டலும் அற்புதஞ்செய்தலும் வேண்டுமென்னு நியமமற்ற சைவசம்பிரதாயியான பிள்ளையவர்களின் நன்மனதினை சித்துப்பிராந்திமுதலிய வேறுவழிகளில் திருப்பிக்கெடுக்க இவர்கள் எவ்வளவு நினைத்தும் அவர் சிவத்தியானத்திலேயே நின்றது இவர்க்கு விழிப்பாகியது போலும்.

இந்தவிவாதநடந்து பலவருடங்களானமையின் இட்டம்போல எழுதலா மென்னுந்துணிவு நமது பூர்வபக்கத்தாருக்குண்டாகியே சென்னையை விடுத்து ரெட்டிப்பாளைய மோடியதென்னே என்று கேட்கின்றனர்.

சென்னை வாசிகளனைவரும் பிள்ளையவர்கட்கு விரோதிகளும் ரெட்டிப்பாளையவாசிகள் நண்பர்களும்போலும் பூர்வபக்கதினரை யொப்பவிலாப் புடைக்க உண்டுகொழுத்துப் பருத்துக்காணு முடலினரன்றே பிள்ளையவர்கள்; அவர் படத்தினைக்காணு மனைவரு மவரைத்துர்ப்பலசரீரமுடையவரென வறிவார்கள். மிகவுங்குறைவாயும் சத்துவகுணமாயு முள்ள உணவினை உட்கொண்டு வந்த பிள்ளையவர்களை ஓடினரென்றது இராமலிங்கபிள்ளையென்பவரொரு பெருமுரட்டாசாமியா யிருக்கலாம் சென்னையிலுள்ளாரால் அவமானம் உண்டாகி ரெட்டிப்பாளை பத்துக் கோடினர் எனச் சாமானிய சனங்கள் கருதுவார்கள் என்னும் எண்ணம்போலும், இவ்விதமாக அன்றி இன்னம் குறைவாக இவர்வரைந்து விடுக்கினும் அவர் புண்ணிய அளவிற்கேற்றவாறு அவர்பெயரும் அவர் நூலும் உலகில் நில்லாமலிராதென்க.

சித்தேனும் அற்புதமேனுங்காட்ட வேண்டுமென்று பெரிதும் வேண்டினோர் இவர்காட்டிய வித்வசிரோமணிகள் போலும் நல்லசிரோமணிகள் சாத்திரத்திற்கும் சம்பிரதாயத்திற்கும் விரோதமானவைகளைக் கேட்பவர்கள்தானோ வித்வசிரோமணிகள் இங்ஙனம் பெரிதும் வேண்டியதுண்மையேல் அன்னோர் கருவி நூற்பயிற்சியுடையரே யன்றிச் சமயநூற்பயிற்சியுடையராகார் உண்டெனில் அன்னியமதத்தினர் பரபட்சமாகக் கற்றலையொப்பவன்றிப் பாரம் பரியத்திலன்றாம். சைவநூல்களுக் குறையாதிய எழுதுமவர்களை யவ்வாறுகூறலாமோ என்னின் சைவசம்பிரதாய வுணர்ச்சியற்ற எத்தனையோ தமிழ்ப்புலவர்கள் சைவநூல்களுக் குறையாதி யெழுதி

யிருக்கின்றனர். அதுபோலு மன்றியின்றும். நூலாதாரமின்றி, சித்தேனும் அற்புதமேனும் காட்டவேண்டியது தவறேயாம். தவறாகக்கேட்டவர்களை யா மோதித்தே இவரும் எழுதினமையின் இவருரையுந் தவறென்க.

பின். அவர்க்கு அச்சித்துக்களைக் காட்டல் பிரியமில்லை என்பீராயின் நான்எல்லாஞ்செய்யுஞ்சித்துக்களைப்பெற்றுளேனென்றுதம்பட்டமடிப்பார் போல எடுத்தெடுத்து பலபல இடங்களிற் கூறவேண்டிய காரணம்என்னை? தாம் இவ்வாறு சித்துக்களைப் பெற்றேன்செய்தேன் என்று பாடிவிட்டாற் பின்னர்க் காலத்துத்தோன்றும் பற்பலருமுண்மையாகக் கொண்டு தம்மை எல்லாம் வல்லசித்தரெனப் போற்றிவழிபடுவார் பூசைசெய்வார் புகழ்கூறு வார் என்றஎண்ணமேயாம். இத்தன்மையான பொய்ப்புகழ் விரும்பித்தம் மை எல்லாம் வல்லசித்தனென்று சொற்றதனற் போந்த பயனென்னை? என்றார்.

இவரைப்பார்த்து எவரும் அவர்க்கச்சித்துக் காட்டப்பிரியமில்லை யெ ன்றாரில்லை. இவரே இந்த சமாதானத்தினைக் கூறிக்கொண்டனர்.

சித்துச்செய்பவர்கள் அன்னிய மதத்தினரிலும் இருக்கின்றார்கள். எவர்சித்துக் காட்டுக்கின்றார்களோ எவர் அற்புதங் காட்டுகின்றார்களோ அவர்கள் சொல்லை நம்புவோமென்னும் இவர்கள் சுயமத சித்தாந்தத்தி லின் னம் பூரணநம்பிக்கை யற்றவர்களே. உலகினர் பிரமிக்குமாறு அனேகஞ் சித்துக்களைச்செய்த சித்தரெவர்க்குங்கோவிலும்பூசையுச்சவங்களும் இல்லா திருத்தலும் யாதொரு சித்துஞ்செய்யாத சிவஞானிகளைச் சுட்டிப்பூசையுச் சவாதிகள் நடத்தலும் நமதன்பர் இன்னகாரணத்தாலென அறிந்தவரா யின் இவ்வாறெழுதார்.

கோரக்கர் கொங்கணவர் புலிப்பாணி மச்சேந்திரர் உரோமநாதர் சட்டமுனி முதலியசித்து மூர்த்திகள் செய்த அற்புதங்களனந்தமாகவும் அவர்களை யெல்லாம் கோவிலில் பிரதிட்டித்துப் பூசையுச்சவநடத்தாதஇத் தேயத்துச் சைவசனங்களும் பிறரும்ஞானமும் பத்தியுமுடைய நல்லோ ரை மதிப்பார்களேயன்றி மாயாசாலச் சித்துகளைச் செய்பவர்களை மதிப் பவரல்லராதலின் காலக்கிரமத்திற் தம்மை எல்லாம் வல்லசித்தரெனப் போற்றி வழிபடுவார் பூசைசெய்வார் என்று கருதினரென்பது தவறேயாம். இத்தகைய எண்ணம் பூர்வபக்கத் தாரிடமுண்டென்பதற்கு சில அறிகுறி கள் உள.

இராமலிங்கபிள்ளையவர்கட் கருட்பிரகாச வள்ளலாரென்றும் வள்ள லென்றும் பெயர்கூடாதென்று வீண்சண்டையிட்ட ஆறுமுகநாவலருக்கு அவரிறந்தபின் அருட்பிரகாச வள்ளலென்றும் வள்ளலென்றும் பாட்டிற்பா டி மகிழுவதனுல் காலக்கிரமத்தில் பலவித துராட்சேபங்களை யுண்டாக்கி இராமலிங்கப்பிள்ளைக்கிருந்த வள்ளலருட்பிரகாச வள்ளலார் என்னும் பெ

யர்கள் அவரோவொது செய்து அவரையென்றமையாலாறுமுகநாவலர்க்கு ண்டாகியதென்றும் அவர் சித்து மூர்த்தியென்றுங்கூறலாமென்னுங் கருத் தாற்போலுஞ் சற்குருநாத சுவாமிகளென்றும் சமயாசாரிகள் நால்வரு மொரு உருவமாக வந்தவரென்றும் பரசமயகோளரியென்றும் அருட்பிரகாச வள்ளல் - எ-ம். வள்ளல். எ - ம்.பலவாறுபாடி வைத்திருக்கின்றனர். இவை யை ஆறுமுகநாவலர் சரிதத்திறுதியிற்காண்க.

பிள்ளையவர்கள் கூறியுள்ள சித்துக்கள் இன்னவையென அறியாத இன் னோர் அவர் கொள்கையைக் கண்டிக்கவந்தது பொய்ப்புகழ் கருதியே யன்றி, பிள்ளையவர்கள் பாடியது புகழ்பெறவேண்டியன்று இன்பம்பெற வேயாம். அதனை அவர் பாடல்களைப் பொதுநிலையினின் றூன்றிப்பார்க்கு மெவ்வொரு வருமறியாதிரார். உண்மையிற்பாடிய பிள்ளையவர்களை பொய் ப்புகழ் கருதிப்பாடினா ரென்பது தவறேயாம்.

பின் எல்லாம்வல்ல சித்துக்களைச செய்பவன் சிவனேயாம் என்றார். சித்துக்களினிடம்எல்லாம் வல்லதன்மைஇரா.சித்துக்கள்எல்லாம்வல்லதன் மையினை யுடையனவாயின் அவைகளைப் பலவாகவுரையார். ஒருசித்து மற் றொரு சித்தினைச் செய்யாது. ஆதலின் சித்துக்கட்கெல்லாம்வல்லதன்மை கூறுதல்தவறேயாம். எல்லாம் வல்லசித்தன் சிவபெருமானே என்பதனை அன்றென்று கூறியகார்யாவர்.சிவபெருமான் எல்லாம் வல்லசித்தரல்லர்யா னே எல்லாம் வல்லசித்தன் என இராமலிங்கபிள்ளை அவர்கள்எங்கேனும் பாடியிருந்தால் அப்பாடலை எடுத்துக்காட்டி இவ்வாறு சைவசம்பிரதாய விரோதமாகப் பாடியிருத்தல்தவறு சிவபெருமானொருவரே எல்லாம்வல்ல சித்தர் என்றிவர் கூறினால் நியாயமாகும். அவ்வாறன்றி சிவபெருமானை எல் லாம்வல்லசித்தரல்லரென இராமலிங்கபிள்ளை கூறியிருப்பாரெனப் பாமர சனங்கள் மதிக்குமாறு எழுதியது தவறென்க. சிவபெருமானேஎல்லாம் வல்லசித்தராக எழுந்தருளினாரெனப் பிள்ளையவர்கள் பாடியிருத்தலை அவர் நூலைப்படிக்கு மனைவருமறிவர் ஆதலினீண்டு சிவனே எல்லாம் வல்லசித் துக்களைச் செய்பவன் என அகௌரவமாக உரைப்பதனுலிவர்பக்கத்துக்கு யாதொரு பிரயோசனமுமின்றென்க.

"எல்லாஞ் செயவல்லசித்தரின் மேவியெழின் மதுரை
வல்லாரின் வல்லவரென் றறியாமுடிமன்னன் முன்னே
பல்லாயிர வண்டமும்பய மெய்தப் பராக்கிரமித்துக்
கல்லானை தின்னக்கரும்பளித்தா ரெங்கடவுள்ரே."

என்று பாடித்துதித்தவர் இராமலிங்கபிள்ளை யாதலின் அவர் பக்கத்தார்க் கிவர் எல்லாம் வல்லசித்துக்களைச் செய்பவன் சிவனேயாம். என உபதேசி க்கவேண்டியதின்றென்றும் இராமலிங்கபிள்ளை தம்மைஎல்லாம்வல்லசித்த ரென உரைத்ததின்றென்றும் அனைவருமறிவர்.

பின் இராமலிங்கபிள்ளை தம்மை நிந்தித்தாரையும் தம்பாடல்களை மருட்பாவென்று பகர்ந்தாரையும் பெண்ணுருவாக்கி விடலாமே அல்லது கூன் குருடு, செவிடு, ஊமைமுதலிய வாக்கிவிடலாமே. அல்லது தம்மைதெய்வமென்று அல்லும்பகலுந்திரிந்த சண்முகபண்டாரம் வடலூர் அப்பாவு, கஞ்சி-மு-முதலிமுதலிய மூடவர் குருடர்க்குஅங்கத்தையுங் கண்ணொளியையுங் கொடுத்து யாவர்க்குந் தஞ்சித்துக்களி னுண்மையைக் காட்டலாமன்றோ என்றார்.

இவர்காட்டிய ஒன்பது பேர்களும் இராமலிங்கபிள்ளையை அருட்பிரகாசவள்ளல் என்று சொல்லாமலும் அவர்பாடலை அருட்பா வென்று சொல்லாமலும் இருந்து விட்டதனாலே அவர்க்கும் அவர் பாடல்களுக்குமுள்ள கவுரவங்குறைந்து போகுமா? அல்லது இவர்கள் அருட்பாவெனவும் அருட்பிரகாசவள்ளலெனவு முரைப்பதனாலதிக கவுரவமுண்டாகப் போகின்றதா? இரண்டுமில்லை. ஒருவரைப் பெண்ணாக்குதலும் ஊமைகுருடாதிய அங்கவைகல்யமுடையவராகச் செய்தலும் பாவச்செயலெனவும் தவச்செல்வத்தினை யுடையானொருவன் வைதல்வாழ்த்துதலாகிய இரண்டினாலுந் தவச்செல்வங் குறைந்தவனாவானெனவும் இவரறியார்போலும்.

"நாயேறி வீழ்ந்தென் நடாத்துகிலென் ஞானிக்குப்
பேயாஞ் சகம்பழித்தென் பேணுகிலென் தோயார்
பெருமை சிறுமையிலை பின்னுமுன்னுமிலை
வரைவற்று வேண்டுவசெய்வார்" எ - ம்.

"அவமதித்துக், கடந்தாலு மெஞ்ஞானி கமலவிலைப்புனல் போல்வான்" - எ - ம். ஒழிவிலொடுக்கஞ்சூதசங்கிதையாதி நூல்கள்ஞானிகள் புகழிகளை மதியாரெனக் கூறுதலை யிவரறியார்போலும் இராமலிங்கபிள்ளையையும் அவர்பாடல்களையும் நியாயவிரோதமாக இகழ்பவர்களைத் தக்கவாறு தண்டித்தற்கு இராமலிங்கபிள்ளை தமக்குவேறே ஒரு கடவுளிருக்கின்றாரென்றுணர்ந்தவராதலின் அக்கடவுளே அதனைச் செய்வர். சண்முகப்பண்டாரம் வடலூர் அப்பாவுஎன இரண்டு பெயர்களை எழுதிமூன்றாவது கஞ்சிமு-முதலி என்றெழுதியது எதற்காக? மற்றிருவரும் இறந்தவர்களும் இவரின்னமொருவேளை இறவாதிருக்கின்றவரும்போலும். அல்லது மு-என்றதலையெழுத்துமாத்திரமெழுதிவிட்டா லொருவர்என்னையெனெழுதினீர்என்றால் நும்பெயரன்று மற்றொருவர் பெயரென்று கூறலாமென்றோ அவரெண்ணம் இன்னதென அறியப்படவில்லை.எவ்வாறாயினும் இவ்வாறெழுதுதல் தவறேயாம். மு. முதலிஎன ஒருவனுக்குப் பெயரிராது. முன்னர் மு - என்னுந் தலை எழுத்துள்ளபெயரினை எழுதிப் பின்னரெழுதினும் குறிப்பெழுத்தென்றெண்ணலாம் அவ்வாறு மின்மையாலிது நியாயவிரோதமான செயலே.

பிள்ளையவர்கள் நாம் குருடர்க்குக் கண்ணளிப்போம் மூடவர்க்கு மூடநீக்குவோம் என்று பாடியிருப்பினிவர் கேட்பதற்குப் பதிலுரைக்கவேண்டு

வதுதான் அவர் அவ்வாறு கூறாமையின் இவர் கூறுமிச்செயல்களையன்று பிள்ளையவர்கள் கூறியது பிள்ளையவர்களின் கருத்திலில்லாதனவற்றை வரைந்து பாமரசனங்களை வஞ்சிப்பதனால் பயனின்றென்க.

பிடாரிகோவில் மாரிகோவில் மாடன்கோவில் மதுரைவீரன் கோவில் கறுப்பண்ணன்கோவில் முதலியவைகளை வலஞ்செய்து மனேகர் இன்றும் கண்முதலிய பெறுகின்றனராயினும் தெய்வநம்பிக்கையும் ஊழின்திறமு மவ்வாறொத்தார்க்கன்றி அத்தெய்வங்களுங் கண்முதலிய அளிக்கின்றில.

பூர்வபக்கத்தார் அற்புதச்செயல் செய்பவர்களை மதிப்பவர்களும்பிள்ளையவர்களின் பக்கத்தார் பத்திஞானம் வைராக்கிய மாதிகளையுடையவர்களை மதிப்பவர்களுமாக இருக்கின்றார்கள்.

ஒன்றிரண்டு வருடங்களுக்கு முன்னம் ஒரு துலுக்கனது சரீரத்தைப் புதைத்த இடத்தை அடைந்த ஒருகுருடன் உடனே கண்பெற்றானென்றும் அங்கே அநேகம் சனங்கள் கூடினார்கள் என்றும் இத்தேயத்திலொரு சத்தமுண்டாகியது, அப்போது சனங்கள் அவ்விறந்த துலுக்கனைக் குறித்துப்பலவாறு புகழாகச் சொல்லிக்கொண்டார்கள் இப்பொழுதந்த சத்தத்தையே காணோம். வேதாகமங்கள் கூறுமந்திரங்களை இன்னின்னவாறு செபித்தால் இன்னின்ன சித்திஉண்டாகுமெனவும் யோகாப்பியாசஞ் செய்வாரிடத்து இன்னின்ன சித்திகளுண்டாமெனவும் வேதாகமங்கள் கூறுவதனையுணர்ந்தசாதுக்கள் ஒவ்வொருவரு முயன்றாலெல்லாச் சித்திகளையும் பெறலாமென்னுந் துணிபுடையவர்க ளாதலின் பிறரிடஞ் சித்தியுளதோ விலதோ என ஆராய்வான் முயலார். இவ்விரகசியமறியாதவர்களை யொப்ப இராமலிங்கபிள்ளை சித்துக்காட்டினாரில்லை இராமலிங்கபிள்ளை சித்துக்காட்டினாரில்லை என இப்பூர்வபக்கத்தார் கூறித்திரிகின்றனர்.

இவர்கூறிய வடலூர் அப்பாவு முதலியவர்களின் குருடுமுடமாதிகளை நீக்குவதாகப் பிள்ளையவர்கள் கூறியதற்கு யாதோராதாரமும் இவர்காட்டாமையால் இவை இவர்களின் கட்டுக்கதைகள் பலவற்றுளொன்றேயன்றி வேறன்றாதலினிது வறுங்கூற்றே யென்க.

பின் இவையிற்றையன்றி அணிமாவாதி யட்டமாசித்திகளைக் காட்டினாராஎன்றார். பிள்ளையவர்கள் அணிமாவாதி அட்டமாசித்திகளைத் தாமுலகினர் முன்காட்டுவதாகவும் கற்றிருப்பதாவும் எங்குங் கூறாமையினிவருரை தவறென்க.

பின் ஆகருடணம் அதிரிசியம் அஞ்சனம் வசியம் வாதம் வயத்தம்பம் என்னுஞ்சாமானிய சித்திகளையேனுஞ்செய்துள்ளாரா? இல்லையே என்றார்.

ஆகருடணாதி இழிதொழில்களைத் தாஞ்செய்வதாகப் பிள்ளையவர்களெங்கு முரையாதிருக்க இவர்கள் அவர்மீது குறைகூறுவதாற் பயனென்

ஆகருடணவசியாதிகள் பாவச்செயலென இப்பூர்வபக்கத்தா ரெண்ணுததென்னை? ஆகருடணாதி அற்பச்செயல்களைச் செய்பவர்தாமோ சிவபத்தர்.சிவனடியார் விரும்பாத ஆகருடணாதிகளை இவர்வியந்ததனை அறிஞர்மதியாரென்க.

பின் செய்தாராயின் வசியமென்னுஞ் சித்தியாவது உலகரைத்தன் வசப்படுத்தல் அன்றோ?அந்தச்சித்தியால் தமக்குமாறுவெழுந்தபுலவர்களையெல்லாம் தம்வயப்படுத்தித் திருவருட்பிரகாச வள்ளலார்என்றும் திருவருட்பா என்றும் சொல்விக்கலாமே அதுமுடியாது கீழோர்போல அவர்களையெல்லாம் நிந்தித்திருந்த இராமலிங்கபிள்ளைக்கு மற்றைச் சித்திகளேதுஎன்றார்.

இவரையொத்த அறிவாளர் சொற்கேட்பவர்கள் விரைவினற்கதிபெறுவர். இவர்விரித்தபடி வசியமென்னுஞ் சித்தியால் பிள்ளையவர்கள்தம்முடன் வாதிட்டவர்களை வசப்படுத்தி,தம்மை அருட்பிரகாச வள்ளலென்றும்தமது பாடலை அருட்பா என்றும் கூறச்செய்தால் அதுவஞ்சனைச் செயலன்றோ? காமமந்திராதிகளால் மடந்தையரைத்தம்வசஞ்செய்யவிரும்பும் தூர்த்தரையும், தகாதனசெய்து நியாயத்தலத்திற் குற்றவாளிகளாய்க் காளிபிடாரிமுதலியவைகளை வணங்கியும்பூசித்தும் ஓமமுதலிய இயற்றியும்தம்மினும்இழிந்தார்தரும்குங்குமமாதிகளை நெற்றியிலிட்டுச்செல்வோரையும்.பிறரிடத்துள்ள பொன் பெண்முதலியவைகளைத் தம்மிடஞ் சேர்க்கத்தக்க விதமாயுள்ள செயல்களை விரும்பும் அவர்களையும்இவைபோன்றவையாய் நியாயவழியிலன்றிப் பிறர்மனதைப்பேதித்துத் தம்வயப்படுத்திக் கொள்வோர்களையும் ஞானசாரமுடைய பெரியவர்கள் சிறிதும் மதியாமையைஉணர்ந்துள்ள பிள்ளையவர்கள்அவைபோன்ற வஞ்சனைவித்தையான வசியத்தால்தம்பெயர் மீதும்தம்பாடல்கள் மீதும்பொருமை கொண்டவர்களை வஞ்சியாமை அவரது ஞானகுணத்தை விளக்கிநின்றதாதலினவர் செயல்தவருகாதென்க.

வசியமென்னும் வஞ்சனைச்செயலால் பிறரை வசப்படுத்தினோன் பின்னர் அன்னோரால் எதுவோ வசியத்தாலெம்மை வஞ்சித்தானிக்கள்வனென இகழுமிகழ்ச்சிக்குரியனாவான். சத்தியசிந்தையொடு பொறுமையுடனிருந்த பிள்ளையவர்கள் பூர்வபக்கத்தாரைக் கீழோர்போல நிந்தித்திருந்தன ரென்பது வாளாகூறலேயன்றி உண்மையாகாது. வஞ்சனைச்செயலான வசியாதிகளில் விருப்பமுடையவர்களாய்க் கபடமாகப் பிறரை வசப்படுத்த விரும்புவோரே கீழோர்போல. பிறரை நிந்திக்கமுற்படுவோர் கீழோர்செயலை விரும்பியவர்கள் பிள்ளையவர்கள் அல்லரென்பதனை ஞானசாரமு நடுவுநிலைக்குணமுமுடையோ ரறிவர்.

பின். தாமத இராசத சாத்துவித சித்திகளுமில்லை. அவற்றிற்குமேற்பட்ட அணிமாதி சித்திகளுமில்லை. யோகசித்திகள் அறுபத்துநான்கும் எல்லாஞ்செய்யுஞ் சித்திகளுமில்லை என்றார்.

இவர்சித்திகளை நான்குவகையாக்கிஉரைத்தனர். எவ்விதசித்தியும் முக்குணச்செயலுளன்றி அவைக்குமேற்செல்லாதாகவும் முக்குணசித்திகளிலன்றி அணிமாதிசித்திகளும் அவைகளையன்றி யோகசித்திகளும். அவைகளையன்றி எல்லாஞ் செய்யுஞ்சித்தியும் என வேறுவேறாக இருக்கின்றன என்றுகூறினர். ஞானசித்தியன்றியுள்ள அனைத்துச்சித்திகளும் அட்டமாசித்தியுளடங்கினவே யன்றி வேறின்றெனவும் அட்டமகாசித்திகளின் விரிவையே அறுபத்துநான்கு சித்திகளென வுரைப்பதெனவும் இவையன்றியுள்ளவையனைத்தும் இவையின்பாற்பட்டனவென வுணர்ந்த பெரியோர், கொள்கைக்கு மாறாய் முதலில் எல்லாம் வல்லசித்தியையும். பின் அணிமாதி சித்திகளையும் பின் - ஆகருடணாதிகளையு மெடுத்தெழுதிய இவர் பின்னர் தாமத இராசத சாத்துவிக சித்திகளென்றது முறையே தாமச்சித்தியெல்லாம் வல்ல சித்தியெனவும் இராசதசித்தி அணிமாதி சித்தியெனவும். சாத்துவித சித்தி ஆகருடணாதிக ளெனவு மன்றோ கொள்ளக்கிடக்கின்றது. அங்ஙனமாயினதுமொரழகுதான். ஆயின் அவற்றிக்கு மேற்பட்டஅணிமாதி சித்தியென்றதெவற்றை ?

மறவியாலுரைத்தார்போலும்.

பின் இவ்வாறு ஒரு சித்தியுமின்றி நம்போலிருந்து எல்லாஞ்செய் சித்தனென்று தம்மைச்சிவனாக அகங்கரித்த இவரா அருட்பிரகாச வள்ளலார்? நன்று! நன்று! எல்லாம் வல்லசித்தர் சிவபெருமான் ஒருவரன்றி வேறியாருமாகா ரென்பது பேதைப் பெண்களு மறிந்த விடயமே. அதனையறியாத இவர் தாம் எல்லாம் வல்லசித்துக்களை யடைந்தேன் செய்கின்றேன் செய்வேனென்று பொய் கூறியது சிவநிந்தையும், பொய்யும் உலகத்தை வஞ்சிக்கும் வஞ்சனையுமென்க. என்றார்.

சிவஞானியர்கள் நம்போல விராமல் ஆகாயத்திலூசி நிறுத்தி அதன் மேற் றலைகீழாகத் தொங்குவார்களோ? அல்லது வேறெதுவேனும் விபரீதச்செயல்கள் செய்வார்களோ? ஞானசித்தியையுடைய பெரியோர்களிருக்குமாறே இராமலிங்கபிள்ளையும் இருந்தனர். சிலர், பெரியவ ரென்றாலவரிட மென்ன விசேஷம் நம்மைப்போல உண்ணலு முடுத்தலு முடையவரா பெரியவர் எதாயினும் அற்புதச்செய விருக்கவேண்டுமெனக் கருதி சாத்திர விருத்தமான நடைகளையும் உணவுகளையு முடையவர்களாய் சிறுதெய்வங்களின் தயவாற் சிறுசெயல்களிற் சில செய்யத்தெரிந்தாரைச் சாலமதித்து கழுதைக்குட்டிச் சாமி, குதிரைக்குட்டிச் சாமி, துடைப்பக் கட்டைச்சாமி, யெனப் பெயர் பொருந்திய சிலரை மதித்து அறிவறிந்த பெரியர்ரை அவமதித்துத் திரிவதும் இத்தேசத்தி லாதலின் அற்புதச் செயலில் விருப்பமுள்ள பூர்வபக்கத்தார் இராமலிங்கப் பிள்ளையை நம்போ விருந்தவரென்று கூறுதென் னுரைப்பர். இராமலிங்க பிள்ளை இரவும் பகலுந் தைலதாரைபோல ஞானநிட்டையி லிருந்தவர். அவர் கண்களில் மணலூற்றுப்போல

சதா ஆனந்த பாஷ்ப மொழுகும். இனிய தேனினும் பாலினு முயர்ந்த சுவையினையுடைய கவிகளால் சிவபெருமானையே புகழ்ந்து துதித்தவர். மெல்லெனப்பேசுபவர். சிவகாருணியத்திலிருந்தவர். விரக்தியுடைய பெரியவர்களால் சிவஞானியென மதிக்கப் பெற்றவர். யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலராலும் அவரைச் சார்ந்தாரிற் சிலராலுமன்றிஉள்ள உலகினர் அனைவராலும் புகழப்பட்டவர். இப்பூர்வ பக்கத்தாரும் இத்தகைய செயல்களை எல்லா முடையவராகி இருந்தமையாற்போலும் நம்மைப்போ லிருந்தவர் என்று இலேசாக எழுதினர்.

"நந்தியருளாலே மூலனை நாடிப்பின், நந்தியருளாலே சதாசிவனாயினேன்." என் திருமந்திர முரைத்தலில் சிவஞானியர் தம்மைச் சிவமென்றது அகங்கார மாகாதென்க. "நாமகன்று சிவமாயவாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ"எனத் தமிழ்வேதமான திருவாசகம்வழி காட்டலையும் ஞானசார விரகசியத்தினையு முணராதவர்களே தம்மைச் சிவமென அகங்கரித்தார் என்பர் அகங்காரமற்ற விடத்தன்றோ தம்மைச் சிவமாக்குவராகிரியர். ஞானபாத வனுட்டானத்தினை யுடையார்க்குச் சிறிதும் வேறுபாடில்லாத வண்ணம் பாடியுள்ள பிள்ளையவர்களின் பாடலில் தம்மைச் சிவமெனவவர்கூறியதனை யிவர்காட்டுமிடத்து நியாய முரைப்பாம்.

வசியசித்தி யுடையரர்க் கருட்பிரகாச வள்ளலாரெனப் பெயரிருக்கலாமென வுரைத்த நூலெவையு மின்மையாலும் அற்புதமும் சித்தியுமுடையார் பாட்டிற்கே அருட்பா எனப்பெயரிடலாமென முன்னோர் நூலவையு முரையாமையானும் இவர் இராமலிங்க பிள்ளைபாட லவ்விரண்டு மின்மையால் அவர்க் கருட்பிரகாச வள்ளலென்றப் பெயரும் அவர் பாடல்களுக் கருட்பா என்றபெயரும் இருத்தல் கூடாதென்றல் எங்ஙனம்பொருந்தும். இன்ன சாத்திரத்திற் கூறும் இன்ன முறைமையால் இவர்க்கிவை பொருந்தா என்றால் அனைவரும் சரியென்பர். அவ்வாறன்றி இவர்கள் வைத்த விதியே விதியாக வுரைத்தால் அதனை அங்கீகரிப்பவர்கள் சாத்திர பரிசயமேயின்றிக் கிடக்கும் சாமானியரை யன்றி மற்றையோர் ஆகார் என்க. இவர் கூறியாங்கு எல்லாம்வல்ல சித்திகளை யடைந்தேன். செய்கின்றேன் செய்வேனென்று பிள்ளையவர்கள் கூறாமையால் பொய்கூறியவர் இராமலிங்க பிள்ளை அல்லர். ஆதலின் சிவநிந்தையும் பொய்யும் உலகத்தை வஞ்சிக்கும் வஞ்சனையு முடையவர் இராமலிங்க பிள்ளை யன்றென்க. எல்லாம்வல்ல சித்தர் சிவபெருமா னொருவரன்றி வேறியாரு மாகாரென்று பேதைப்பெண்களு மறிந்த விடயமென்றும் அதனைப் பிள்ளையவர்கள் அறிந்திலர் என்றுங் கூறியது தவறேயாம் என்பதற்கு முன்ன ரெழுதிய எல்லாம் செயவல. என்ற பிள்ளையவர்களின் பாடலையும்

"எல்லாஞ்செயவல்லா னெனந்தையருளம் பலவன், என்றும்,
எல்லாஞ்செய்வல்லதுரை எங்கணவரென்றால், என்றும்.

எல்லாமுஞ் செயவல்லதனி முதலே என்றும்
எல்லாஞ்செய் வல்லதனிப்பெருந்தலைமைச்சித்தனென
மறையாகமம் புகலுமென்னிறைவன் என்றும்"

இராமலிங்கபிள்ளை தமது பாடல்களிற் பாடியிருத்தலை யாராய்ந் தடங் காதிவர்கள் அவரைப்பேதைப் பெண்களினும் இழிந்த வராகவுரைத் தது தவறென்க. பிள்ளையவர்களின் பாடல்களில் விளக்கமாகவுரைத் திருப் பவைகளை இவர்கள் மறைத்தால் மறையுமா? சிவபக்தசிரோ மணியாயும் உலகினருக்குண்மை நண்பராயுமுள்ள இராமலிங்கபிள்ளையவர்களை இப்பூர் வபக்கத்தாரன்றி மற்றெவரும் சிவநிந்தகர் எனவுரைக்கவும் உலகத்தை வஞ் சிக்கும் வஞ்சனையுடையரெனக் கூறவுமனந் துணியார்.

பின் இங்ஙனம் இராமலிங்கபிள்ளை யவர்கள் எல்லாம் வல்லசித்தராயி ருந்தும் தமது தமயனாரை யங்கதப்பாட்டுப்பாடித் தம்பொய் நெறிகளை வின க்காவண்ணம் செய்தற்கு முடியாராயினரே என்றார்.

இவர் தாமெடுத்த விஷயத்தினைப் பூர்த்திசெய்த பின்னரும் பின்ன ரும் அதனையே யுரைக்கின்றனர். இங்ஙனம் எல்லாம் வல்லசித்தராயிருந் தும் என்று இவரே கூறுகின்றனர் எல்லாம் வல்லசித்தனுக ஒருவனிருந்தா லவனைப் பிறர் தூஷிக்காமலிருக்கவு மவன்செய்து கொள்ளல்வேண்டும் போலும்? இவ்வாறு கல்லாமாந்தருங்கழறுரே; உபயவாதிகளும் எல்லாம் வல்லசித்தரென வுரைக்கும் சிவபெருமானை அநேகர் தாருகாவனத்து முனிமனைவியரைக் கற்பழித்தது மோகினியைப் புணர்ந்தது கங்கையென் னுமனைவியைத்தலையில் சுமந்தது பிரமன்தலையைக் கிள்ளியதனுல் பிரமக த்தி சூழ்ந்தது முதலியவைகளைக் குறித்து அதிகமாக இகழ்ந்து பாடல்கள் பாடிவைத்திருக்கின்றார்களே அவ்வாறு தமதுசெயலை இன்னோர் இகழாத வண்ணம்செய்து கொள்ளாமையும் எல்லாம் வல்ல சித்தரான சிவபெருமா னுக்கு ஒருபெருங்குற்றமன்றோ? என்பார்க்கென்னுரைப்பர்.

இராமலிங்கபிள்ளை இவர் கருதியபடி எல்லாம் வல்லசித்தரென தம் மையுரைத்தாரல்லரென முன்னரே கூறிமறுத்தாம் ஆதலி னதனை மீண்டு மீண்டெடுழுதுதல் அநுசிதம்.

தம்பொய் நெறிகளை மறைத்தொழுகுவோர் தெய்வஞ் சருவசாட்சி யாக விளங்குகின்றது ஆதலின், நம்மால் பிறரறியா ததனையுஞ்செய்ய வியலாதென்னுங் கருத்துடைய ஆஸ்திகராவரா? சைவசம்பிரதாயிகள் கர ந்து நடக்குங்குணமுடைய ரல்லரென இவரறியாததென்னை? இவர்இரா மலிங்கபிள்ளை இழிந்த செயல்களைச் செய்திலரே செய்திலரே எனவருந்து கின்றார். இதுவுமொரு நியாயந்தானே?

இராமலிங்கபிள்ளை அங்கதப்பாட்டென்பது அவர் தமையனான சபாபதிப்பிள்ளை இவ்வுலகில் சீவித்திருந்தகாலத்து வெளிப்படாமல் அவர்இராமலிங்கபிள்ளையிடம் அதிக விசுவாசத்துடனிருந்து காலஞ்சென்ற பலவருஷங்கள் கழித்து இராமலிங்கபிள்ளையின் பெயரிலும் பாடல்களினும் பொறாமைகொண்ட பூர்வபக்கத்தாரிடம் மாத்திரம் இருந்ததற்குக் காரணமென்னையோ? இத்தேயத்தில் பிள்ளையவர்கள் காலமுதலிதுபோதும் உயிருடனிருக்கும் வயோதிகர்களான எவர்க்குமிச் சங்கதி தெரியாதிருப்பதும் ஆச்சரியத்தையே விளைக்கின்றது, சபாபதிப்பிள்ளையின் குடும்பத்தினர் சபாபதிப்பிள்ளை இவ்வாறு செய்வாரா? அவர் இராமலிங்கபிள்ளையவர்களி

.. அன்புடையவராக இருந்தவர் என்று கூறுகின்றார்கள். அப்பா -ல்களின் சொற்போக்குமிந்நாட்டுத் தமிழாகத் தோன்றவில்லை. இராமலிங்கபிள்ளையின் தமையனான சபாபதிப்பிள்ளையின் பாடலன்றவ் வங்கதப்பாடல். நிரபராதியான இராமலிங்கபிள்ளையவர்கள் மீது அவ்வசைபாடியவர்கள் அதற்குத் தக்கபரிசினை ஒவ்வொருவருஞ் செய்யு நற்செயல் தீச்செயல்களை அவரவர்களுள்ளத்திருந்து காணும் சிவபெருமான் அளிக்கப் பெறாமலிரார் ஆதலினது ஓர் ஆச்சரியமான செயலென்று எவருமறியார்.

“கூர்த்துநாய் கௌவிக்கொளக்கண்டு” மென்றமுன்னோர் மொழியையறிந்த முதியோர் தம்மை யிகழ்ந்தாரைத் தாமிகழார்.

“திறனல்ல தற்பிறர் செய்யினு நோநொந்
தறனல்ல செய்யாமை நன்று”

எனத்தெய்வப் புலமைத்திருவள்ளுவனார் செய்யத்தகாத கொடியவற்றை தன் கட்பிறர்செய்தாராயினும், அவர்க்கு அதனால் வருந்துன்பத்திற்கு நொந்து தான் அறனல்லாத செயல்களை செய்யாதிருத்தல் ஒருவனுக்கு நன்று என்னும்பொருள் பயப்பக்கூறியிருத்தலின், பொறுமையுடனிருந்த பிள்ளையவர்கள் இழிந்தவராகார். தந்தமையனார் அங்கதப் பாட்டுப்பாடாமல் தடுக்க வேண்டிய அவசியந்தமக்கின்மையின் அவர் தடைசெய்யாதிருந்தது தவறாகாது. அவர் தம்பொய் நெறிகளை விளக்காவண்ணஞ் செய்திலரேயென இவர் உரைத்ததே தவறெனக.

பின் அவர்மனைவி, ஓர்பண்டாரத்துடன் கூடித்திரிந்ததைக் கண்டவர்கள் அம்மே! இங்ஙனஞ்செய்வது தெறியா என்றுவினவியக் கால்கொண்ட பெண்டிரை விட்டுக்கோலம்போடுகின்றானே! பெண்ணைப்பரிதவிக்கவிட்ட பெரும்பாவியைக் கேளுங்கள் என்று தூற்றித்திரிந்ததை ஏனோஅடக்கினாரல்லர் என்றார்.

இராமலிங்கபிள்ளைக்குத் தமையனார் விரோதியாக இருந்தனர் எனவும் மனைவியும் விரோதியாக இருந்தனளெனவும் அவர் மனைவிவிபசாரி

யெனவும் பிள்ளையவர்களைப் பலவாறு தூஷணஞ்செய்தனனெனவும் அவ்வாறு செய்யாமல் தடுக்காமை ஒருபெருங்குறையெனவும் கூறுகின்றார்.

கற்புடைப் பெண்டிரொழுக்கத்திற்கு மாறான வொழுக்கமுடைய வொருமாது தன்கணவனை இகழ்ந்தாலதனைச் சரியானதென வங்கீகரித்து மகிழுமவர்கள் எத்துணைச்சிறப்புடைக் குணத்தினராவர். புருஷனைக்கண்டவாறு தூற்றித்திரிபவர்களைச் சிலாகித்தல் விதிநூல் விருத்தமேயாம்.

பெருந்தேவனார்பாரதம் "எப்பணியா லின்புறுவர் காதலராங் காதலரை, அப்பணியா லப்பொழுதே யன்புறுத்தி, யொப்ப - மனங்குழையும் வண்ணம் மகிழ்விப்பதன்றே, கனங்குழையார் தங்கள் கடன்" என்றும் திருக்குறள். "தற்காத்துத்தற் கொண்டாற் பேணித் தகைசான்ற, சொற்காத்துச்சோர் விலாள்பெண்" என்றும். இவ்வாறே அநேகநூல்கள் தன்புருடனிட்டப்படியே நடப்பவளே குலமகளென்று கூறியிருப்பதற்கு மாறாகக் கூறுமொருத்தியைச்சுட்டி அவளை அவ்வாறுசெய்யாது செய்யாமலல்லது சொல்லாமலிருக்கச்செய்திலரே எனக்கூறுதல் சிறப்பன்றெனக.

சகலகலைகளையு முணர்ந்தவரும் சிவபெருமான் திருவருள்பெற்றவரும் தேவகுருவுமான பிரகற்பதியும் சிவனடிந்தொண்டுசெய்வதில் சிறந்தவரும் முனிச்சிரேட்டரும் சிவனருள்பெற்றவருமான கௌதமரும் தம்மனைவியர்கள் செய்தவிபசாரத்தை முதலிலேயே செய்யாமற் தடுத்திருந்தாலழ காகுமே யெனக்கேட்பவர்கட் கிவரென்னுரைப்பர்.

மனைவியின் வினைக்கும்புருடன் வினைக்கும் சம்பந்தமென்னை? கணவனை வெறுக்காத மாதுகற்புடைப்பெண்டாய் சுகானுபவத்திற்குரிய புண்ணிய உலகினை கடவுள் கட்டளையாலடைவள். கணவனை வெறுத்து விபசாரமுதலிய துற்செயல்களுடனிருப்பவள் கற்பின்மகளாய் இழிவுற்று துன்பானுபவத்திற்குரிய நரகினைக் கடவுள் கட்டளையா லடைவா ளென்பதனை உணர்ந்தவராதலின் பிள்ளையவர்கள் மனைவியின் இகழ்ச்சியாதிகளைத் தடுக்காமை குற்றமாகாதென்க.

பூர்வபக்கத்தாரின் சொற்களுக்குப் பதிலெழுதினோமேயன்றி இராமலிங்கபிள்ளை யவர்களின் மனைவியின் செயல் உண்மையென்பதன்று எமதபிப்பிராயம்; அவர் மனைவியின் சரிதம் பொய்யாயிருக்கினும் அல்லது மெய்யாயிருக்கினும் எமக்கதைக் குறித்த வசியமின்மையா லென்க.

சிவபெருமானிடந் திருவருள் பெற்றோராயிருந்த பெரியோர்கள் தம்மைப்பிறரிகழாமற் செய்துகொள்ளாமலும் தம்மனைவியாதியரைக் குறித்து வருந்தாமலும் இருந்தார்கள் ஆதலின். உவகை வெகுளி முதலிய வுயிர்க்குணங்களைப் பற்றாது அன்பு மருளுமாதிய இறைக்குணங்களைப்பற்றி

நின்ற இராமலிங்கபிள்ளை யவர்கள் தமது மனைவியாதியரை இகழாமல் தடுக்காமை தவறென இவர்கூறுதலே தவறென்க.

பின் இவ்வாறு இராமலிங்கபிள்ளை யிருந்து சிவபெருமானுக்கே உரிய எல்லாஞ்செய் சித்துக்களை யுடையானென்னும் சிறப்புப்பெயரை தமக்காக்கி எல்லாம் வல்லசித்தனென்று பைத்தியகாரர் போலுரைக்கில் எவர் மனந்தான் சகிக்கும்? உண்மைச் சைவன் சகித்திருப்பானோ கூறுமின்? என்றார்.

இராமலிங்கபிள்ளை தம்மை எல்லாம்வல்லசித்தன்யானே என்று கூறியபாடலே கிடையாது. அங்ஙனம் இருந்தால் இவர்காட்டியே இருப்பார். அவர் சொல்லாதசொல்லை அவர் சொன்னதாகச் சொல்லி இவர் அவர் மீது வீண்பழிசுமத்துதல் தவறென்க. இவர் முன்னர்க்காட்டிய பாடலிலே தனிலும் எல்லாம் வல்லசித்தன் நானே என்று கூறக்கண்டிலேம்.

இனி, அவ்வாறுரைத்ததனால்தா னென்ன குற்றம் என்று கேட்பவர் கட்கியாதென்னையோ? உரைக்கும் பதில்? பொதுவுஞ் சிறப்புமான சிவநாமங்களைச் சைவர்தம்பெயராக வைத்து மகிழாமலில்லை, இலக்கணகொத்தியற்றிய சுவாமிநாதத் தம்பிரானுக்கு "ஈசானதேசிகர் எனப்பெயரிட்டுரைத்து வந்தார்கள்." "ஈசான ஸர்வவித்யானாம்"என்று வேதமுரைக்கும் ஞானாசாரியனை, சிவபெருமானின் சிறப்புப்பெயரை அவர்க்கிட்டு வழங்கலாமா? முக்களாலிங்கரை "சிவஞானயோகி" எனஸ்ரீகண்ட பரமேசுவரனுக்குரிய சிறப்புப்பெயரை வைத்து வழங்கலாமா? இவ்விதமன்றியும் சைவர்கள், உமாபதி, சந்திரசேகரன், கங்காதரன், திரிலோசனன், தாணு உருத்திரகோடி, அம்பலவாணன், நடராசன் பசுபதி, அம்பிகாபதி பரமேசுவரன் மிருத்துஞ்சயன் நீலகண்டன், நீலலோகிதன், என்பன வாதிசிவபெருமானுக்கே உரிய சிறப்புப்பெயர்களைத் தம்மாணவர்கள் புத்திராதியருக்கிட்டு வழ்ங்கலாமா? இவர்காட்டிய மறந்தும் புறந்தொழா மாண்பினரும் மகாவித்வசிரோமணிக ளென்பாரி லொருவருமான இராமசுவாமிப்பிள்ளையை திருஞானசம்பந்தப்பிள்ளை யெனப்பெயரிட்டழைங்கலாமா? இப்பூர்வபக்கத்தாருட்பலர் ஆறுமுகநாவலரை "பரசமயகோளரி"எனஎமதுஞானசம்பந்தப்பிரபுவின் சிறப்புப்பெயரை இட்டு எழுதியும் உரைத்தும் வருகின்றனரே அவ்வாறு செய்தல் உசிதமாகுமா? ஆறுமுகநாவலர் பரசமயகோளரியும்,இராமசாமிபிள்ளை ஞானசம்பந்தபிள்ளையுமாகியது மாத்திரம்உசிதமும் இராமலிங்கபிள்ளை யவர்களுக்குண்டென்று இவர்கள்கூறும் எல்லாம் வல்லசித்தன் என்னும் பெயர்மாத்திரம் அநுசிதமும்போலும் தமிழ்நாடு முதலியவைகளிலுள்ளார் சிவபெருமானுக்குரிய பெயர்களை மக்கட்கிட்டு வழங்கும் வழக்கமுடையவராதலின் வழக்கத்தை யனுசரியாதிவர் சிவபெருமானுக்குரிய பெயரினை இராமலிங்கபிள்ளை தமக்கு வைத்துக்கொண்டது தவறெனவும் அப்பெயரிருந்தால் அப்பெயருக்குரிய செயலினைத்தும் இருத்தல்வேண்டுமென்றுங் கூறுதல் தவறென்க.

நாமுன்னர்க் காட்டிய ஈசானாதிபெயரை யேற்றுநின்ற சைவர்களி
டஞ் சிவபெருமானிடமுள்ள பெயர்க்குணமனைத்துமன்றி ஏகதேசமுமின்
மையுண்மையின் இராமலிங்கபிள்ளை எல்லாம் வல்லசித்தன் அருட்பிரகாச
வள்ளல் முதலியபெயர்களின் செயலினை உடையவராக இராமையாலவை
யவர்க்கு தகாதென இவர்கூறுதல் தவறென்க.

ஒருவர் ஒருபெயரினை உரைத்தால் அதனையுரைத்தவர்கள் எந்தநோக்
கத்துடனுரைத்தனரென வாராயாது நீலகண்டன் என்றவுடனே அவன்
கழுத்திற் விஷவடையாளக்கறுப்பின்மையாலவனுக்கு நீலகண்டனென்
னும் பெயர்கூடாது என்றுகூறுதல் எவ்வாறுள்ளதோ அவ்வாறுள்ளதே
இவர் கூறுமிதுவும் நீலமணியணிவோன் - நீலமலர்சூடுவோன் களங்கு
ணத்தை உள்ளிடத்தில் உடையோன் முதலியோரும் நீலகண்டனென்னும்
பெயரைப் பெறுவர். இதனிலொருவனுக்கிப் பெயர் எவ்வாறு வந்தது என்
றாராய்ந்து இக்குறித்த வெவையிலுமில்லாவிடில் தந்தைதாயர் சிவபெரு
மானை நினைக்குமாறு இட்ட இயற்பெயரெனக் கருதுதல்வேண்டும். அவ்
வாறு கருதுவது மரபாகவும், இவர் அவ்வாறு எதுவுஞ்செய்யாமல் இராம
லிங்கபிள்ளைக் கில்லாதபெயரினை இவரே இட்டு அவர்தம்மை எல்லாம்
வல்லசித்தன் எனச் சிவபெருமா னொருவருக்கேயுரிய சிறப்புப்பெயரினை
வைத்து அச்செயலின்றி இருப்பதற்கெந்த சைவன்தான் சகிப்பான். என
இவர் கூறுமவையனைத்தும் சைவமரபிற்குரித்துப்போல உரைத்து வரு
ந்துகின்றனர். நாமிதுகாறுங் காட்டிய உலகநியாயங்களால் சிவபெருமா
னுக்குரிய பெயரினை சைவரிட்டு வழங்குதற்கு மனஞ்சகிக்காதவன் இவர்
கூறியாங்கு உண்மைச்சைவனாகாமல் போலிச்சைவனே யாவன் என்க.

பைத்தியகாரர்போல பொருத்தமற்றவைகளை யுரைத்திடர்ப்படுவோர்
இராமலிங்கபிள்ளையல்லர்; அவர் கூறுமொவ்வொரு விஷயமுஞ் சாத்திர
சம்பிரதாயங்களினின்றும் விலகாமையா லென்க.

பின் அதனாலே இராமலிங்கபிள்ளையின் தமயனாரும் உபாத்தியாரு
மாகிய இ. சபாபதிபிள்ளை அவர்கள் தமது தம்பியாரும் மாணாக்கருமாகிய
இராமலிங்கபிள்ளை மீதெழுந்த உலக அபவாதங்களைக் கண்டுங்கேட்டுஞ்
சகிக்காமே நடுவுநிலைநின்று இவரது நெறிகளையும் பாட்டின்படிறுகளையும்
கண்டித்து திருவருட்பிரகாசவள்ளலார் என்பதும் திருவருட்பா என்பதும்
சிறிதும் பொருந்தாதென்று நன்குதெரித்தார். அவற்றைப்பின்னர்க் காட்டு
தும் மற்றையோர் ஒருகால் நெறிபிறழ்ந்து கூறுவாராயினும் கூடப்பிறந்த
தமையன் கூறுவதும் பொய்யாமா? என்றார்.

இவர்காட்டிய சபாபதிப்பிள்ளையைக் குறித்திவருரைப்பன பொருத்த
மற்றனவென முன்னரே யுரைத்தாம். இவர் கூடப்பிறந்த தமையன்நெறி
பிறழ்ந்துகூறமாட்டானென பாமரசனங்களை வசப்படுத்துமாறு கூறி

-ப்பிறந்தவர்கள் ஒருவரையொருவர் பகைத்துக் கொள்ளுகிறதே இல்லைபோலும் சகோதரர்கள் ஒருவரையொருவர் வஞ்சித்ததுவும் வஞ்சிக்கமுயன்றதுவுமான சரிதங்களை நாமனேகமறிவோம் அவைகளில் திருவிளையாடற் புராணத்துக்கண்டவொன்றை இங்குரைக்கின்றோம். இராசேந்திர பாண்டியன் தம்பியான ராஜசிங்கபாண்டியனென்பான்தன துசகோதரனை

"செழியன் றனக்கு வரையறுத்த செய்தி கேட்டுச் செம்பியர்கோன்
கழியன்புடைய குலமகளைத் தான்போய்க் கொள்வான் கருதிமதி
வழிவந்த வற்குத் தம்பியென வந்தவ ரச சிங்கமெனும்
பழியஞ்சா தான் வஞ்சித்துப் பழனங்காஞ்சிப் பதி புகுவான்."

என சகோதரனது வஞ்சனையை விளக்கியிருத்தல் காண்க. கூடப்பிறந்த தமையன் மெய்யே சொல்வானு? என்பதனை ஒவ்வொருவரும் தங்களுக்குச் சோதரர் உளரேல் அவரிடைத் தாமும் தம்மிடையவரும் நடந்துகொள்வதனைக் கவனித்தால் நன்குவிளங்கும். கூடப்பிறந்த தமையன் பொய் கூறுனென்னு நியாயம் நிலைக்காதாதலினிவருரை வெற்றுரையென்க.

பின் இவ்வாறே இராமலிங்கபிள்ளை இப்பெயர்களைக் கொண்ட காலத்திற் றுனே கண்டனங்களெழுந்தமையாலும், அதனையவர் அடக்கி யொப்பச்செய்யும் வன்மை அவர்க்கின்மையாலும் இக்காலத்தும் இனிமேலும் உள்ள சைவர்களால் கண்டிக்கப்பட்டு வருமாறொருதலையே என்றூர்.

இராமலிங்கபிள்ளையின் பெயராதிகளுக்கெழுதிய கண்டனங்களுக்குப் பதிலின்மையும் அதனை யடக்கி யொப்பச்செய்யும் வன்மையவர்க்கின்மையும் உண்மையாலுல் இராமலிங்கபிள்ளைக்கு அருட்பிரகாச வள்ளலென்ற பெயரும் அவர் பாடல்களுக்கு அருட்பா என்ற பெயரும் அன்றே அழிந்தொழிந்திருக்குமே? அங்ஙனமாக அழிக்கப்பட்டதற் கிப்பூர்வ பக்கத்தார் கண்டனமெழுதவேண்டுவதனுவசியமன்றே? இப்பூர்வபக்கத்தார் தங்களாலும் வெல்ல முடியாதென்பதனை தாமே விளக்கினர். அது, இனிமேலுமுள்ள சைவர்களாலும் என்று வரைந்ததனுலென்க. ஆகவே இப்பூர்வ பக்கத்தாரும் வெல்லுங்காலமின்றென்றும் இராமலிங்கபிள்ளை யவர்களின் கொள்கையினர் தோற்குங்கால மின்றென்றும் இவருரையே காட்டுகின்றது. எப்பொழுதுந் தோல்வியையே இடமாகக்கொண்ட பக்கத்தை நமது பூர்வபக்கத்தார் அவலம்பித்தது விசனிக்கத்தக்கதேயாம்.

எத்தனை தலைமுறை கலகம் விளைவிக்கினும் சத்தியமே நித்தியமானதாக நிற்கும். இராமலிங்க பிள்ளையின் மெய்யான கொள்கை வெல்லுமேயன்றி பூர்வபக்கத்தாரின் பொய்யான கொள்கை வெல்லாதென்க. என்றும் வெல்லாதென்க

பின் தேவாரந் திருவாசகங்களாகிய திருவருட்பாக்களுக்கு அக்காலத்து யாரேனும் முறைகூற வந்தாரல்லர். இவரதுநெறியல்லா நெறி கண்டே முன்னரும் இப்போது முள்ளார் புலவர் கண்டிக்கா நின்றார், என்றார்.

தேவார திருவாசகங்களுக்கும் இராமலிங்க பிள்ளை யவர்களின் பாடல்களுக்கும் என்ன சம்பந்தம்? சம்பந்தமற்ற ஒன்றை எடுத்துக் காட்டிப் பயனில கூறலினாலிவ ரடைவதென்னை? தமிழ் வேதங்களான தேவார திருவாசகங்களுக்கும் தமது பாடல்களுக்கும் சமத்துவமேனும் அல்லது தேவார திருவாசகங்களினு மெமது பாடல்களுயர்ந்தனவென்றேனும் இராமலிங்க பிள்ளை கூறியிருக்கின்றாரா? அங்ஙனங்கூறிய பாடலை அன்றோ இப்பூர்வ பக்கத்தார் காட்டி யிவ்வாறு கூறியிருத்தலின் இது தவறெனக் கூறல்வேண்டும். அங்ஙனமன்றி வாளாகூறலிற் பயனென்னை? இராமலிங்க பிள்ளை தேவார திருவாசகங்களையும் அவைகளைப் பாடியருளிய சமயாசாரியர்களையும் புகழ்ந் திருக்கின்றனரே யன்றி வேறின்மை யறியாத சாமானிய ஜனங்கள் அவர் தேவார திருவாசகஙகளை இகழாவிடின் இவர் இவ்வளவு கோபத்துடன் பேசாரெழுதார் எனக் கதறுகின்றனர். தேவார திருவாசகங்கள் தோன்றியகாலத்திவர் உடனிருந்தவர்போல அக்காலத்து யாரேனுங் குறைகூற வந்தாரல்லர். என்று தாமே முக்காலமு முணர்ந்தவரை யொப்ப வரைந்தனர். தேவார திருவாசகங்கள் தோன்றியகாலத்து குறைகூறினாருளர் என இவருக்குரைத்தவர் யாவர்?

இவர் இராமலிங்கபிள்ளை யவர்கள் பாடி பதுபோலவே சமயாசாரியர் பாடி யிருப்பாரோ? என்னுஞ் சந்தேகத்தினை நிவிர்த்தித்துக் கொள்ளுதற்கு இல்லாதனவற்றை வலிந்து கூறுகின்றனரேயன்றி வேறின்றெனக.

சமயாசாரியர் பாடல்களுக்கும் இராமலிங்க பிள்ளை பாடல்களுக்கும் உத்பவாதிசெய லனைத்தும் வேறுபட்டு நிற்பதனைச் செய்யனே யறிந்தவராயின் இவர் இராமலிங்க பிள்ளை பாடல்களுக்குத் தேவார திருவாசகங்களை ஒப்பெனக் கொண்டாருளரென மயங்கார்.

இராமலிங்கப்பிள்ளையவர்களின் நெறியனைத்தும் வேதாகம வாதாரமுடையனவாய் சைவசம்பிரதாயமாய் நிற்பனவாதலின் அவர் நெறிகளை மறுப்பவர்கள் அவைதீகரும் அசைவருமாகி யொதுங்குதலைப் பின்னர்க்காண்க. 'முன்னருமிப்போதுமுள்ளார் புலவர் கண்டிக்காநின்றார்' என்றசொற்பிரயோகத்தில் கிடக்கு நயமனைத்துமுண்மையே.

பின் பூர்வபக்கத்தார் அகராதி முதலியவைகளை வரைந்த பொறாமை காரணமாகக் கலகம் விளைந்ததெனக் கூறி, சிவனடியவர்களான சிலரை அளவுகடந்து தாடனைபுரிந்து செவ்வனே தமிழ் ஆங்கிலம்ஆரிய முதலிய கற்றபுலவர்குழுவுடன் செந்தமிழ் வசனத்தொடரினையுந்தட்டித்தடுமாறியும்

படிக்க வறியாச் சிலரை வித்வாபிதானத்துடனெழுதி, தாங்கள் விவாத சபை யேற்படுத்திய தாதிகளை வாளாவரைந்து, காகிதங்களைக் கறுபித்தவிவர் இவற்றையெல்லாம் நேரில் நின்று கண்ட நாஸ்திகருட் பலரும் வைணவர் புத்தர் கிறித்தவர்களிற் பலரும் நகைத்து சிவநிந்தை சிவனடியார் நிந்தைசெய்கின்றனர் என்றும் இராமலிங்கபிள்ளையை யொப்ப சமயாசாரிய சந்தானாசாரியராதிகளையும் அவர் செயல்களையும் அவரடைந்த முத்தியையும் இகழுகின்றனரென்றும் அகலத்தில் வரைந்திருக்கின்றனர்.

இராமலிங்கபிள்ளையவர்கள் பாடல் பாடுதல் முதலிய செய்தற்குமுன்னர் நாஸ்திக வைணவாதியர்கள் சிவபெருமானையும் சிவனடியவர்களையும் நகைத்துப் பரிகசிக்காமலும் சமயாசாரிய சந்தனாசாரியராதியர்களின் திறங்களும் முத்திகளும் மெய்யென்றும் கொண்டு, இகழாமலும் பொய்யெனக் கொள்ளாமலும் இருந்தனர்போலும் இவரெழுதியாங்கு எந்த வைணவனும் நாஸ்திகனும் கிறித்தவனும் இராமலிங்க பிள்ளையின் பொருட்டாகச் சிவநிந்தை சிவனடியவர்நிந்தை மோட்ச நிந்தைகளைச் செய்தானல்லன். இராமலிங்கபிள்ளையின் நிமித்தம் பல தூடணங்களை நவீனமாக வரைந்து நாஸ்திகாரதியர்மீது பழிசுமத்திவிட்டவர் இப்பூர்வபக்கத்தினரேயாவர். இவர் கூற்றானே சைவரனைவரும் இராமலிங்க பிள்ளையை இகழாதவர்களென அனைவரு மறிவார்கள். அன்னிய மதவாதிகள் எஞ்ஞான்றும் தம்மதத்தினும் பிறமதங்கள் தாழ்ந்தனவென்று கூறுமியல் பினையேயுடையவராதலின் அவர்செய்யும் தூஷணை நூலாராய்ச்சியுடையார்க்கு வருத்தத்தினையும் வியப்பினையுந்தரா தென்க.

இவர்காட்டுங்குறிப்பினால் நாஸ்திக வைணவாதியர் இராமலிங்கபிள்ளைக்கு முந்தியகாலத்து சிவபெருமானிடமும் சிவனடியவர்களிடமுந் தேவார திருவாசகாதிகளிடமும் நன்குமதிப்பினை யுடையவராக இருந்தனர்போலும் அவர் என்றும் ஒருபடியாகவே இருப்பவர்கள்.

பின் இற்றைக்கு ஆயிரத்தைஞ்ஞூறு வருடங்களு முற்பட்ட சமயாசாரியர் சரிதங்களும் பிறசைவவியல்களும் இராமலிங்கபிள்ளை சரித்திரமெழுதி இருப்பதுபோலவும்அவர்போலவும் பாடல்கள்போலவும் இருக்குமென்பதற்குச் சந்தேகமென்ன என்கின்றனர் என்றார். சமயாசாரியர் திருவவதரித்தகாலம் ஆயிரத்தைஞ்ஞூறியாண்டிற்குமேலெனவிவர்கண்டதெங்ஙன் இராமலிங்கபிள்ளையின் சரித்திரங்களெல்லாங் குற்றமுள்ளவையன்று. அவரிடத்திலுள்ள குற்றமென்னை? அவர்பாடலிற் கண்ட குற்றமென்னை அவர் சரிதம் சத்தியமானதே; அவர்செயலுஞ் சத்திமானதே, அவர்பாடலு நல்லிசைப்புலவர் நன்கு மதிக்குமொல்காப்பெரும்புகழ்த் தொல்காப்பிய முதலிய பழைய விலக்கணப் பொலிவினையும் அருள்வளத்தினையுமுடையதே, இத்திறங்களை அறிந்துகொள்ளு மாற்றலற்றி கழும்புறமதத்தினர், அறிஞராலெள்ளி நகையாடத் தக்காராகின்றார்.

ஐந்தாவது பரமாசாரியரென இராமலிங்கபிள்ளை அவர்களை எவரு முரைத்திலராகவும் இப்பூர்வ பக்கத்தாரால்பரமாசாரியர்கள் நான்கு பேர்கள்என உரைக்கக்கேட்டோம் அவர்களை முறையே முதற்பரமா சாரியரிவர் இரண்டாவது பரமாசாரியரிவர் மூன்றாவது பரமாசாரியரிவர் நான்காவது பரமாசாரியரிவர் என எழுத மறந்தனர் போலும் பரமாசாரியர்கள் முன் நான்குபேர்கள் இன்மையின் இவருரை வெற்றுரையென்க.

பரமாசாரியனாவான் கல்லாலின்நிழலிருந்தெல்லா வறமுஞ் சொற்ற சிவபெருமானேயன்றி வேறெவருமாகாரென்க. எந்தக் குரவனிடம் ஒருவன் ஞானோபதேசம்பெற்றானோ அந்தசிஷ்டனுக்குஅந்தக் குரவன்பரமாசாரியனா கின்றான்; இம்முறையால் வருமவர்களெல்லாம் எல்லார்க்கும் பரமாசாரியராவரா? என்றுமாகார். சிவபெருமானொருவரே எல்லா வாசிரியருக்கும் பரமாசாரியராதலின் பரமாசாரியர் உள்ளுவாரு ளுள்ளுளெல்லாம் ஒழிய மற என்று மொருவராய் நிற்பவராகவும், இராமலிங்கபிள்ளையை ஐந்தாவது பரமாசாரியராகக் கொண்டனர் பிறரென்றவர் கண்ட முதற்பரமா சாரியரும் இரண்டாம் பரமாசாரியரும் மூன்றாம்பரமாசாரியரும் நான்காம்பரமாசாரியரும் யாவரோ? பரமாசாரியர் நால்வரின்மையால் ஐந்தாவது பரமாசாரியரென இராமலிங்கபிள்ளையவர்களை உரைத்தாரும் இலர். எவரேனும் ஒருவர் அவரை அவ்வாறு கூறியதாக இவர்கண்டிருந்தாலேனவரை இவரெழுதக்கூடாது. இல்லாத ஒன்றை எழுதுவதனாலிவரடையும் பயனென்னை? இராமலிங்கபிள்ளையவர்கள் முத்திகையந்தவ ராதலின் அன்பர்களவரை முத்திகைவந்தவரென்றனர். இதனாற் பூர்வபக்கத்தாருக்கும் புறமதத்தினருக்கு முண்டாகிய ஏரிவென்னை? தேவார திருவாசகங்களையும் அவைகளையுடைய சிவபெருமானையும் அவைகளினா சிரியர்களான நால்வர்களையும் துதித்துள்ள இராமலிங்க பிள்ளையவர்களின் பாடல்களை தேவார திருவாசகங்களினும் விசேட நூலென்றவர் யாவர்? எவரேனும் அவர்பாடலில் விருப்பமுள்ளவர்கள் தங்கள் நிலைமைக்கேற்றவாறு எளியநடையில் விளங்குதலின் தேவார திருவாசகத்திலும் மனவுருக்கமுடைய விசேஷநூல் என்றதனால் தேவாரதிருவாசகங்கள் தாழ்ந்தனவும் இவர்பாடல் உயர்ந்ததுமென்று பொருள்தருமா? மெய்யாக அதிக உருக்கமானவும் சிறந்தவானவுந் தேவார திருவாசகமென்றன்றோ பொருள் தருகின்றது. கரும்பினுமினிய சொல்லாள். சுரும்பினுங்கரிய குழலாள் அரும்பினும் வெள்ளியநகையாள் என்றால் இனிமையிலுயர்ந்தது கரும்பும் கருமையிலுயர்ந்தது சுரும்பும் வெண்மையிலுயர்ந்தது அரும்பும்என உவமையுயர்வுப் பொருளாய்நிற்றலை இவரறியார்போலும் "ஓரீ இக்கூறலு மரீஇயபண்பே" என்பதிலக்கணமாதலின் வேறுபடக் கூறிலுமுவமை யுயர்ந்ததேயாம்.

"உயர்ந்ததன்மேற்றே யுள்ளுங்காலை" என்ற வொல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியரின்உவமைப்பெரு மொழியாலுவமையாயுயர்ந்ததேயாதலின் தேவார திருவாசகங்கள் இராமலிங்க பிள்ளை பாடலுக் குவமானப் பொரு

ளாயுள்ளனவாதலினி னுரைப்பார் குறிப்பறியாதின்னோர் இராமலிங்க பிள்ளைபாடலை யுயர்த்தின ரென்றல் தவறென்க.

நாஸ்திகராதியர் இராமலிங்க பிள்ளை விஷயமாகக் கூறும் அவைக ளால் சிவனடியார் பத்தியும் சிவபத்தியும் தேவார திருவாசகாதி தமிழ்வேத பத்தியும் கெடுமோ? சிவனடியார் பத்தி சிவ பத்தி தேவார திருவாசகாதி தமிழ்வேதபத்தி முதலியவை இராமலிங்க பிள்ளை காலத்திலும் அவர் மறைந்த பின்னரும் மேலுமேலும் அதிகமாகி இருத்தலின் இராமலிங்க பிள்ளை யவர்களால் இவை கெடுக்கப்பட்டன வென்றல் பொருந்தாத விஷயம். இராமலிங்க பிள்ளை யவர்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு நாஸ்திக கிறித்தவ வைணவாதியரை வாளாகாட்டி பலபல பொருந்தா விடயங்களைக் கூறிச் சாமானிய சனங்களின் சிவபத்தி அடியவர்பத்தி தேவார திருவாசகாதி தமிழ்வேதபத்தி முதலியவைகளைக் கலைத்தவர் பூர்வ

பின் இராமலிங்க பிள்ளையினாலே அநேக சைவர்கள் சைவசமயமும் பொய் அதனை அநுட்டிப்பவர்களும் பொய்யர். அவ்வுண்மையினை இராம லிங்க பிள்ளையினாற் கண்டு கொள்ளுங்கள் என்று கிறித்தவர் சொல்லிச் சொல்லித்திரிய அவற்றை நம்பிச் சைவத்தை வெறுத்துச் சிலர் கிறித்தவ ராகவும், சிலர் புத்தராகவும், சிலர் நாத்திகராகவுஞ் சென்றனர். இன்னும் அவ்வாறு இராமலிங்கரால் புறமதப் படுகுழியில் விழுகின்றனர். அவரைத் தடுக்கவும் இப்பொய்மைகளைக் கூறிப் பாவஞ் சம்பாதிப்பார்க்குப் புத்தி புகட்டவுமே யீதெழுதத் தொடங்கினும். என்றார்.

சைவசமயத்தினை இராமலிங்க பிள்ளையை யாதாரமாகக் கொண்டு கிறித்தவர்கள் இகழ்ந்தால் இவர்கள் கண்டிக்க வேண்டுவது கிறித்தவரை யன்றோ? கிறித்தவ ரவ்வா றிகழ்ந்தன ரெனவும் இகழ்கின்றன ரெனவும் இதுகாறும் யாதொ ராதாரமும் யாங்கண்டிலேம். கிறித்தவ மதத்தில் நம் பிக்கையுஞ் சைவமதத்திற் பிரசாரமுமுள்ள ஒருவர் கூறுமாறு தாமாகவே "சைவசமயமும் பொய் அதனை அநுட்டிப்பவர்களும் பொய்யர் என இப் பூர்வபக்கத்தின ரெழுதி விடுத்தனரேயன்றி வேறன்றும். இராமலிங்க பிள்ளையவர்களின் சரிதாதிகளையுணர்ந் துண்மைகூற இப்பூர்வபக்கத்தின ரே ஆற்றலற்றவராயின் அன்னியதேசத்து மதமாகிய கிறித்தவ மதத்தி னைப் பழகியுள்ளவர்கள் எவ்வாறுணர்வார்கள். "அக்கிராரத்துச் சங்கதி வேஷக்கீரா லப்பையைக் கேட்டால் தெரியுமா? அவ்வாறு கிறித்தவர்களின் நிந்தாபிரசங்காதிகளைக் கேட்டு சைவத்தினை வெறுத்துச் சில சைவர்கள் கிறித்தவர்களானார்கள் என்றால் இதனை எவர் நம்புவார்கள். "சொல்லு வார் சொல்லினுங் கேட்பார்க்கு மதியில்லையா?" என்றவாறு இவர் கூறு மிப்பொய்ம்மொழியை விவேகிகள்மதியாரென்க. கிறித்தவர் சொல்லித் திரிதலைக் கேட்டுக் கேட்டுத் திரிந்து சைவத்தினை வெறுத்தவர்களென

இவர் கூறுஞ் சைவர்கள் தம்மத விடயங்களி லெட்டுணையும் பரிசயமற்றவர்களாகவும் கிறித்தவர்களுடனுண்டல் கிறித்தவர்களுடன் ஒரு கிரகத்தில் வாசஞ்செய்தல் கிறித்தவர்களுடன் சம்பந்தஞ்செய்துகொள்ளுதல் கிறித்தவர்களைத் தொடுதல் முதலிய எவையுஞ் சைவர்க் காகாதன என்றறியாத சாமானியராய் இருந்தாலொழிய கிறித்தவர்களின் பிரசங்கத்துக்காகச சைவத்தினை இழக்கமாட்டார்கள். இத்தேயத்திலுள்ள எத்தகைய இழிஞனும் அவ்வாறு செய்ய மனமிசையான் ஆதலினிவருரை வெற்றுரையென்க.

கிறித்தவர் சொல்லித் திரிவதற்காகப் புத்த மதத்தினைச் சைவர்கள் அடையவேண்டிய காரணமென்னை? சைவங் கிறித்தவம் புத்தமென மூன்று மதங்களையேயுடைய தேயமிது என்று கருதினர்போலும்.

இத்தேயத்தவர்களிற் புத்தமதத்தினரைக் கண்ணாரக் கண்டவர்கள் வெகு சுருக்கமாகவே இருப்பர். உதாரணம் காஞ்சிபுரமாகிய உத்தம க்ஷேத்திர வாசிகளான 50000-சனங்களுக்கதிகமானவர்களில் ஐந்து பெயர்களை புத்த மதத்தினரைக் கண்ணாரக் கண்டவர்களாகக் காட்ட ஒருவராலாகாதானால் இலங்கை பர்ம்மா சைனா முதலிய மிலேசச கண்டங்களிலுள்ள புத்தமதத்தினரை இராமலிங்கபிள்ளையின் பொருட்டுத் தழுவிக்கெட்டனர் சைவரிற் சிலரென்றாலதனை அங்கீகரிப்பவன் யாவன். சைவாலயங்களுட் பிரவேசித்தல் சமயாதி தீட்சைகளைப் பெறுதல் சைவ நூல்களைப் படித்தல் முதலியவைகளைசசெய்தற் கருகரல்லாதாராய் நெற்றியின்மாத்திரம் விபூதி தரித்துத் திரியும் துளையர் கொலைஞர் வலைஞர் சண்டாளர்முதலியவர்களை உத்தேசித்துப்போலும் நமது நண்பர் சிலர் புத்தராயினர் என வருந்திக் கூறினர். உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி கருடனாகாவாறு இத்தேயத்திலிழிஞரை இழிஞராகவே கருதுதல் வழக்கமாதலின் நமதன்பர் சைவர் புத்தரானாரென்றது சாலத்தவறென்க.

சைவருளெவரும் இதுகாறுங் கிறித்தவர்களாக சைவ மதத்துப் பொருளினையுணர்ந்து, பின் இகழ்ந்தடைந்தாரின்றென்றும் சைவகுலத்துட் பிறந்தும் தீவினை வயத்தால் சைவ வொழுக்க வழக்கங்களிற் பயிலாது இளமை தொட்டு கிறித்தவ வழக்க வொழுக்கமுடையாருடன் பழகி ஊனருந்தல் முதலிய ஆபாச விடயங்களி லிச்சையுண்டாகி கிறித்தவ மதத்துட் சிலர் புகுந்துளாரன்றி, சைவராயிருந்து கிறித்தவர்களானவர்களின்றென்க.

சைவ குலத்துட் பிறந்த வொருவன் கிறித்தவனாகவோ புத்தனாகவோ ஆனால் அவன் தனது தாய் தந்தை உற்றார் உறவினர் சாதியினர் சமயத்தினர் ஆகிய அனைவராலும் நிஷித்தமானவனாக ஒதுக்கப்பட்டு வருந்தவேண்டியவனாகவுள்ளவனென இவரறியாது சிலர் கிறித்தவர்களாகவும் சிலர் புத்தர்களாகவும் ஆயினார்களென வாளா எழுதிவிட்டனர்.

சைவர்கள் தம்மதங்களினின்றும் வேறு மதங்களிற் பிரவேசித்தல் கிறித்தவ புத்த நாஸ்திகாதிகளிற்போலும் என்ன அழகு. இம்மூன்றுஞ் சைவத்திற்கடுத்த மதமெனக் கருதினர்போலும் நன்று நன்று சைவ சித்தாந்த உணர்ச்சி இவரிடம் இவ்வாறான விபரீதங்களையே உண்டாக்கியதுபோலும்.

இராமலிங்கபிள்ளை அவர்களால் எவரும் கிறித்தவபுத்த நாஸ்திக மதங்களிற் பிரவேசித்தாரல்லர். இராமலிங்கபிள்ளையின் சரிதங்களையும் பாடல்களையும் உணர்ந்தவர்கள் கிறித்தவ புத்த நாஸ்திகாதி மதங்களை வெறுக்குங் குணமுடையராகவே ஆவார்கள். இராமலிங்கபிள்ளைபாடல்களைப்படிப்பவர்கள் தேவார திருவாசகங்களில் அதிக அன்புடையவராகவே ஆகின்றனர் ஆயினர் ஆவர் ஆதலின் இவர் கூறியவனைத்தும் தவறென்க.

இராமலிங்கபிள்ளையின் சரிதாதிகளை உரைப்பவர்கள் உண்மை கூறுபவர்களும் அவர் சரிதாதிகளைப் பொய்யென்னும் பூர்வபக்கத்தினரோ இல்லாது கூறிப் பாவஞ் சம்பாதிப்பவர்களுமாதலின் இவரெழுதியதனைப் படித்து இவர் கூறுமவைகளை மெய்யென நம்புமவர்கள் பாவங்களைக் கிரகிக்கவேண்டியவர்களேயாகின்றனர். இவரெழுதியவைகளால் சைவர்க்கு நலம் விளையாது தீங்கு விளைதலைக் காட்டவன்றோ இவர் இராமலிங்கபிள்ளை விஷயமாக வுரைக்கும் ஒவ்வொன்றினையு மறுத்தற்கு நாம் நியாயவச்சிர குடாரமெழுதப்புகுந்தேம். இவருரையி னுண்மையை நண்பர்கள் இறுதியிலறியாதிரார்.

இராமலிங்கபிள்ளை பாடலாபாச தர்ப்பணமென்னுஞ் சுவடியின் மூன்றாவது பக்கமுதல் பத்தொன்பதாவது பக்கம்வரைக்கும் பூர்வபக்கத்தார் இராமலிங்கபிள்ளையின் பெயர்ப்பொருட்டாகவும் செயலின்பொருட்டாகவும் பாடலின்பொருட்டாகவு முரைத்தவையனைத்திற்கும் தேவாராதி சைவ நூல்களைக்கொண்டே மறுத்தமையின் எமது நியாயவச்சிரகுடாரத்தால் இவரது ஆபாசதர்ப்பணத்தின் மூன்றாவது பக்கமுதல் பத்தொன்பதாவது பக்கம்வரைக்கும் வரைந்திருந்தவை கண்டிக்கப்பட்டொழிந்தமை காண்க. இனி எஞ்சியவைகளின் கதியுங் காண்பீர்களாக.

## சரிதம் பொய்யென்றதனை மறுத்தல்.

இராமலிங்கபிள்ளை சரிதம் பொய்யே என்ற தலைப்பின்கீழ் "இராமலிங்கபிள்ளை பாடல்களில் எழுதப்பெற்ற சரிதம் பொய்யேஎன்று தொடங்கி தொழுவூர்வேலுமுதலியாருடையவரலாறு முழுதும் பொய்யென்க". என்று பல வரிகளைவரைந்து முக்காலுமுண்மையே என்று முடித்திருக்கின்றனர்.

சென்ற சுக்கில வருஷம் வைகாசிமீ வெளியான போலியருட்பாமறுப்பின் கண்டனமான குதர்க்காரணிய நாசமகாபரசு என்னும் புத்தகத்தில்

கருங்குழி இராமலிங்கபிள்ளை என்றெழுதியது நியாயவிரோதமெனவும் தொழுவூர் வேலாயுதமுதலியார் அவர்களை வேலுமுதலினனஎழுதுதல் நியாயவிரோதமெனவும்நியாயங்காட்டிமறுத்திருந்தும்"போலியருட்பா மறுப்பிலாங்காங்கு காட்டியிருத்தலை யாரறியார் என வுரைத்தல் முழுசெவிடர் தந்தடையையன்றிப் பிறர் விடைகளை யுணருந் திறமின்றி தாங் குழறின வைகளையே மீட்டுங் குழறுமாறுபோலுமன்றி வேறுகாதென்க. இத்தேயத்தவராயுள்ளபிள்ளையவர்களின் சனனத்தலம் மருதூரேயாயினும்அவரது நீண்டகாலவாசஞ்சிதம்பரத்தாதலாலும்இன்றும் அவர்சகோதரர்சந்ததியாரான பிரசங்க ரத்நாகரம் வடிவேலுப்பிள்ளை அவர்களை சிதம்பரம் வடிவேலுப்பிள்ளைஎன வழங்கிவருதலாலும் எழுதிவருதலாலும் சிதம்பரம் இராமலிங்கபிள்ளை என்பதேமுறை, அவ்வாறன்றி, கருங்குழி இராமலிங்கபிள்ளை என்றது சாலத்தவறென்க. தம் முன்னோர் இருந்த ஊரையே தம்மூராக எழுதிவருதல்வழங்கி வருதலாதிகளை இத்தேய வழக்க ஒழுக்கங்களை ஆராய்ந்து கூறாமல் தம் விடாப்பிடியையே காட்டுகின்றனர். பிள்ளையவர்களுடன் பழகினவர்களைப்போல கருங்குழியிற் பிறந்தவரென அன்னிய தேசவாசிகள் அழுக்காற்றாலுரைப்பதனை விவேகிகள் அங்கீகரியாரென்க.

கருங்குழியென் றெழுதியதற்காகக் குதர்க்காரணிய நாசமகாபரசுகாரர்கடிந்து கண்டித்தகாலத்து வாய்மூடிப் டலவருடம் இருந்த போலியருட்பாமறுப்பு நூலினையுடையார் காலஞ்சென்றபின்னரும் பூருவபட்சிகள் அதே விஷயத்தினையுரைத்தல் சால நகைப்புக் கிடமாகின்றதேயன்றி வேறின்றென்க.

பிள்ளையவர்களின் மாணவரொருவர் கருங்குழி என்பத மங்கலமொழியாதலின் மருதூரெனப்பிள்ளையவர்களே மாற்றி எழுத வுரைத்தனரென இப்பூர்வபட்சிகளிடம்உரைததனராம்உரைத்தார்பெயரினை இவர்கள்கேட்க மறந்துவிட்டனர்போலும் திருவருட்பா முதன்முதலச்சிட்டது அட்சய வருஷத்தில் அதற்குமுன்னரே ஒழிவிலொடுக்க நூலிலுள்ள "வள்ளல் குருராயனென்ற" பாடற் குரையெழுதியதனீற்றில் இவ்வுரை யெழுதியவர் சிதம்பரம் இராமலிங்கபிள்ளை என்றெழுதியிருத்தலை அறியாதவருமுளரோ? போலியருட்பா மறுப்புகாரர் சிதம்பர சத்தத்தினு மத்தலவாசிகளான தீட்சிதர்களிடத்தும் திருச்சிற்றம்பலமென்னு மொழியினிடத்து முட்பகையுடையாராதலின் சிதம்பரம் இராமலிங்கபிள்ளை என்னாது கருங்குழி இராமலிங்கபிள்ளை யென்றெழுதினரென குதர்க்காரணியநாசமகாபரசுகாரர் சுக்கிலவருஷம்ஆடிமாதத்திலேயேவெளியிட்டிருக்கின்றனர்.முப்பதுவருடங்களுக்கதிகமாகின்றமையால் எவருமிதனை நினைவில்வைத்திராரெனபூர்வபட்சிகள்சிதம்பரம் இராமலிங்கபிள்ளை என்னாது கருங்குழி இராமலிங்கபிள்ளை என்று கூறி மகிழுதல் ஆராய்சசியில்லாக் குறையானேயன்றி வேறன்றென்க. போலியருட்பா மறுப்பி லாங்காங் கெழுதியிருத்தலை யாரறியரென்பதற்கு சிறு புத்தகமாகிய போலியருட்பாமறுப்பிலுரைத்த கருங்குழி என்பதனை பெரும் புத்தகமான குதர்க்காரணிய நாசமகாபரசு கண்டித்திருத்தலை எல்லாருமறிவர் ஆதலினதற்கு மறுப்பதுவே என்று மறுக்கின்றோம்.

*"மருதூர் இராமலிங்கபிள்ளை என்பதனை மாற்றி சிதம்பரம் இராமலிங்கர் என எழுதினார்" என்று குழறுகின்றனர். இன்னவிடத்தில் மருதூர் இராமலிங்கர் என்றெழுதினார். அதனை மாற்றி இன்ன இடத்தில் சிதம்பரம் இராமலிங்கர் என எழுதினார் என ஆதாரமில்லாது கூறுவதற்கு மருதூர் இராமலிங்கபிள்ளை என அவர் தம்மை எழுதினாரென்பது பொய் என்பதே மறுப்பாம். இனி, சிதம்பரம் இராமலிங்கபிள்ளை என இப்பூர்வபட்சிகளுரைத்ததேயன்றி அப்பெரியவரைச் சிதம்பரம் இராமலிங்கபிள்ளை அவர்கள் என்றே உலகின் மற்றையோருரைக்கின்றனர். ஆதலின் இராமலிங்கர் என அவர் பெயரை குறைவுபட எழுதிய பூர்வபட்சிகளின் வெகு தீர்க்கமான பெயர்களை குறைவுறவுரைத்தலே முறையாமேனும் இக்காலத்திற்கதுசிதமன்றென விடுத்து இராமலிங்கரென அவர்க்குப் பெயரின்மையான் அதுவெற்றுரையெனத்தகர்த்து இவ்வாறே வடலூரான் உத்தர சிதம்பரத்தானென்பதற்கும் ஆதாரம் காட்டாமையால் நிராதாரமான பெயர்களென ஒதுக்கிமறுக்கின்றாம்.*

*இச்சென்னையினும் பிற நாடுகளினும் உள்ள நற்குடிமக்களுளனேகருக்கு பிறத்தலும் தங்குதலுமின்றியே ஊர்ப்பெயர் வழங்கியிருத்தல் காண்க.*

*பட்டினத்திலேயே பிறந்தும் வளர்ந்தும் உள்ளவர்களிலனேகர் கைச்சாத்திடுங்கால் காஞ்சீவரம் இராமசாமி நாயுடு.*

*சவலை வெங்கிட்டராமசுவாமி முதலியார்.*

*பூண்டி. அரங்கநாத முதலியார் என ஊர்ப்பெயர் காட்டியிடுதலும்.*

*பிற நாடுகளில் - காஞ்சீபுரத்திற் பிறந்தவர்களுள் அனேகருக்கு பெண்ணகர் சுப்பராயமுதலியார், விஞர் சுந்தரமுதலியார் பெருநகர் முருகேச முதலியார் என்பன வாதி ஊர்ப்பெயரிடுதலும் அழைத்தலும் எழுதலும் உலகறிந்த சாமானிய விஷயமாதலின் இதனி லிப்பூர்வபட்சிகளுக்கொரு வெற்றியு மின்மையையூன்றி யுணர்வாராக.*

*பின்' இராமலிங்கபிள்ளை தமயன் சபாபதிபிள்ளையிடத்தும் ஒரு பிராமணரிடத்தும் படித்தாரென்று சரித்திரவசனத்தார் சொல்ல தொழுவூர்வேலு முதலியார் ஓதாதுணர்ந்தாரென்கின்றார். இவ்வாறே தொழுவூர் வேலுமுதலியார் திருவருட்பா வரலாறு எனப்பாடியதும் ஒன்றற்கொன்று மாறுபட்டதறிக." என்றார்.*

*இப்பூர்வபட்சிகள் கொண்ட தப்பெண்ணப்படியேனும் சரித்திரவசனம் பிற்பட்டதும் திருவருட்பா வரலாறு முற்பட்டதுமாக. முன்னொடு பின் முரணவைத்துரைத்தலே தங்கள் அவசரபுத்தியை வெளிப்படுத்தியது.*

இங்ஙனம் மாறுபட்டமையா னிராமலிங்கபிள்ளை சரிதம் பொய் என்பது இவர்கள் அபிப்பிராயம்.

சரித்திரவசனம் எழுதியவர் திருவருட்பா வரலாறெழுதியவர் கருத்துக்குச்சிறிதும் மாறாக எழுதாமல் ஒத்தே எழுதியிருக்கின்றனர். தொழுவூர் வேலுமுதலியாரென இவர்கள் எழுதும் - தொ. வேலாயுதமுதலியார். பாடிய வரலாற்றில் பிள்ளையவர்களுக்கு அட்சராப்பியாசமே செய்விக்கவில்லை என்றேனும் சபாபதிபிள்ளை முதலியவர்களிட மவர்படிக்கவில்லையென்றேனும் எழுதப்பட்டிருக்கிறதா இல்லை. அல்லது சரித்திரவசனத்தில் ஓதாதுணர்ந்தாரில்லை ஓதியே எக்கலைகளையு முணர்ந்தாரென்றெழுதப்பட்டிருக்கின்றதா அதுவுமின்று பூர்வபட்சிகள் வாளா ஒன்றற்கொன்றுமாறுபட்டதறிக என்று குழறுகின்றனர். மீதானத்துயர் பள்ளிமேவ வெமை வைக்குமெங்கள்மே தாவைப்பள்ளி விழைந்தருளிற்றென்பதெவன் என அட்சராப்பியாசஞ் செய்வித்ததனை விளக்கியிருத்தலை அழுக்காற்றான் மறைத்துரைப்பதனா லிவர்க ளெண்ணம் பலிக்குமோ பலியாது பலியாது.

இப்பூர்வபட்சிகள் ஒருவர் சரிதத்தில் சிலவும் பலவுமான வேறுபாடு கண்டால் அவர்சரிதத்தினைப் பொய்யென்பர் போலும்.

வைதீக சைவோத்தமரான ஹரதத்தாசாரியர் சரிதத்தில் ஒருசரிதம் நந்திகேசுரரே ஹரதத்தராக அவதரித்தரென்று கூறுகின்றது. மற்றொன்று நாராயணமூர்த்தியே ஹரதத்தாராக அவதரித்தனரென்று கூறுகின்றது இவ்வாறிரண்டு படுதலால் இவர்க்கு ஹரதத்தசரிதமும் பொய்யாகும் போலும்.

ஞானசம்பந்த சுவாமிகள் சரிதத்தில் பகவதியார் திருவயிற்றிற் பிறந்தாரென்று ஒருபுராணமும் சிவபாதவிரதயரினுபாசனாமுகத்திற்கந்தக் கடவுளே ஒருசிறுகுழந்தையாகி எதிரேதோன்றினரென மற்றொருபுராணமும், சுப்பிரமணியரே ஞானசம்பந்தரென்றும் அபர சுப்பிரமணியரேயன்றி சுப்பிரமணியர் அன்றென்றும் பலமாறுபாடுகள் இன்றும் வழங்கிவருதலின் கௌணியகுலதிலகரான ஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிகள் சரிதத்தினையும் பொய் பொய் முக்காலும் பொய் என்பர் போலும். திருப்பெண்ணாகடத்தில் பிறந்த சுவேதவனப் பெருமான் பிள்ளையாகிய மெய்கண்ட சிவனை திருவெண்ணெய் நல்லூரிற் பிறந்தவரென திருவாவடுதுறையா ரொருவர் எழுதியிருத்தலை யிவர் கண்டிலர் போலும். பரஞ்சோதியாரிடம் எல்லாக் கலைகளையும் ஞானோபதேசத்தினையும் பெற்றனரென்றும் பொல்லாப் பிள்ளையாரிடம் ஐந்துவயதிலேயே வேதசிவாகமாதியோதி யுணர்ந்தனரென்றும் சரிதமாறுபாடுகள் காணப்படுதற் கென்செய்வார்கள். மெய்கண்ட சிவசரிதந்தடுமாற்றத்தினை யுடையதாதலின் அதுபொய் பொய் முக்காலும் பொய் என மற்றொரு சமயத்தில் உரைப்பார்கள் போலும்.

கங்காதேவியும் பார்வதிதேவியும் மேனாதேவியின் புத்திரிகள் எனச் சிலபுராணங்களும், பார்ப்பதியை தவநிலையில் மலையரசன் மலர்மீதிருக்கக் கண்டெடுத்து வளர்த்தானென்றும் பார்வதியின் கைவிரல்களில் கங்கை பிறந்தாளென்றும் சிலபுராணங்களும் ஒன்றற்கொன்றுமாறு படுதலாலவைகளை பொய் பொய்முக்காலும் பொய்என்பர் போலும். இவ்வாறியர்கள் உரைக்க நேர்ந்தது வைதீக சைவசித்தாந்தங்களி லதிகபரிசயமும் உபதேசமுமில்லாக் குறைவினாலேயே என விவேகிகள் கருதாமலிரார்.

பின் "தேகம் பிணவியலாகிஇம்மண்ணிலே விழாது மூவகைச்சித்தியுள் ஓர்வகைச் சித்திபெற்று நிற்பதே முடிவான முத்திநிலை என்றவாறு" என்று சரித்திரவசனத்துட் காட்டப்பட்டமையால் அது சைவசித்தாந்த வுணர்ச்சி சிறிதுமில்லாதவர் எழுதிக் கொடுத்ததாகத் தெரிகிறது." என்றார்.

சைவசித்தாந்த முணர்ந்தவர்களாக மனப்பால் குடிக்கும் இபூர்வபட்சிகள் சித்தாந்த வரம்பினையுணராது விகுசகனக நியாயமாய தாமறிந்தவளவெவ்வளவோ அவ்வளவேயன்றி வேறுசித்தாந்தமென ஒன்றுங் கிடையாதென, தவறுதலாக நினைக்கின்றனர்.

பூர்வபட்சிகளிற் பெரும்பாலார்க்கிந்த வைதீக சைவசம்பிரதாயமே தெரியாது. வைதீகசைவக்குழுவினர் எனத்தம்மைச சொல்லிக்கொள்ளுதலொன்றானே வைதீக சைவசித்தாந்தவுணர்ச்சியின் மிக்கவராய் விட்டதாக அவர்கள் கருதி இவ்வாறு கூறுகின்றனர்.

வாதுளாகமமானது தேகம் பிணவியலாகி விழுதலுடையார் முத்தியடைந்தவ ராகார் என்று கூறுகின்றது. பெரியநாயகியின் திருவருள் பெற்று விருத்தசைலத்திருந்த குமாரதேவர் தாமியற்றிய சுத்தசாதகத்துள் இவ்வாறு கூறியிருக்கின்றனர்." அடுத்தமற்றிரண்டு சனனத்தில் வீட்டை யடைந்திடுந்தோம்பத நெறியோர். அடுத்த மற்றொன்று சனனத்தில் வீட்டையடைந்திடுந் தற்பதநெறியோர். அடுத்தவிச்சனனந் தனிலடைந்திடும் அசியத நெறியுளோரிவரும். அடுத்தவிவ்வுடலோ டடைந்திடாவிடின் மேலாக்கை யொன்றெடுத்துமென் றுணர்வாய்" ஒடுங்கிடுங் காலந் தோன்றியவடைவி னொடுங்கிடு மென்றுரைப்பதனு லொடுங்கிடுங் காலஞ் சத்தியவாதிக் கொடுங்குமிவ்வுடறன் மாத்திரையி, னொடுங்கிடுங் காலம் சத்தியவாதிக் கொடுங்குமிவ் வுடல்சத்தியமா, யொடுங்கிடுங்கால முடலிங்கே வீழ்ந்தாலொடுங்கினதில்லை யென்றுணர்வாய்.

மேலொருவடிவை யெடுத்ததேயாகின் மேவுமிவ்வுடலிங்கே வீழு, மேலொருவடிவை யெடுத்ததின்றாகின்மேவு மிவ்வுடலிங்கேவீழா, மேலொரு சிவத்தைச் சீவன் சென்றடையுமேவு மிவ்வுடலிங்குத்தானே, மேலொரு சிவத்தின் வடிவதாமருளாய் வெளியதாயுலகு கண்டிடவே"என்பவைகளை யங்கீகாரமாக வுடையவர்கள் சித்தாந்திகளல்லர் என்பவர்கள் சைவ

நிந்தனைசெய்தோராவர் ஆகமங்களுட் சிறந்தவாதுளக்கருத்தினைக்கொண்டு சரித்திரவசன மெழுதியவர்களின் குருமரபினை ஆராய்ந்தறியு மாற்றலின்றி சைவசித்தாந்த வுணர்ச்சி சிறிதுமில்லார் எழுதிக்கொடுத்ததெனத் தெரிகிறது என்றது ஸ்வகபோல நியாயமா யொழிந்தது.

மூவகைச்சித்தினை சமயம் வாய்த்துழிவிரிப்பாம்.

பின் "சிவபெருமானே இராமலிங்கபிள்ளையாக வந்தாரென்றது அதி பாதகம் அதிபாதகமென்க என்றார்.

பலநற்சீடருக்குச் சன்மார்க்காசாரியராக விருந்த இராமலிங்கபிள்ளையை சிவபெருமானே என்றது அதிபாதகமாஞல், ஏனையரையும் சிவபெருமானுகக் கூறுதல் அதிபாதகத்திலு மதிபாதகமன்றோ?

> "கண்ணுதலுங் கண்டக் கறையுமகரந்தருளி
> மண்ணிடையின் மாக்கள் மலமகற்றும் - வெண்மணிநல்லூர
> மெய்கண்டானென்றொருகான் மேவுவராவ்வேறின்மை
> கைகண்டாருள்ளத்திற் கண்."

என்று மெய்கண்ட சிவஞகிய சுவேதவனப் பெருமாள்பிள்ளையவர்களை அவர் சீடர் மரபார் சிவபெருமானே எனக்கூறியிருத்தலானும்.

தருமையாதீனத்தும சிலாமணிப் பண்டாரசன்னிதியை குமரகுருபர சுவாமிகள்.

> "விளங்கெழின்மிடற்றோர் களங்கமுண்டென்பயக்
> காசுலாமலினங்கரந்த காரணத்தான்
> மாசிலாமணியென வண்பெயர்நிறீஇ
> மேன்மையோடமர்ந்த ஞானசம்பந்த"

என்றும் "சணிகோண்ட கொன்றைத்தொடைமாசிலாமணி" என்றும் பண்டாரமும்மணிக் கோவையுள் கூறியிருத்தலை இக்குழுவினர் படித்தறிந்தவராயின் அந்தோ! அதிபாதகம் அதிபாதகமென்ஞர் சைவசித்தாந்த வாசிரியர்களான மெய்கண்ட சிவஞரையும் மாசிலாமணிப் பண்டாரம் அவர்களையும் இக்குழுவினர் மறுப்பர்போலும் அங்ஙனம் மறுப்பின் இக்குழுவினர் வேதாகமமரபறியாதார் என அறிவுடை அனைவராலு மொதுக்கப்படுவர்.

சிவபெருமானேயென உரைத்தலால் இழுக்கில்லை எனப்போதிய பிரமாணங்காட்டி மறுத்தாம்.

"மாணமருஞ் செங்கைமதில் வெண்ணெய் வாழ்மன்ன! குளித்தமதுக் கொன்றை யெங்கோ கருமாகடல் விடமுண்ட கண்டப்பெருமான், திரு வெண்ணெய் நல்லூர்ச் சுவேதவனத்தான், உருவென்ன வந்தெடுத்தா னுற்று." என்பனவாதி சொற்களாற் சிவபெருமானே என்று திருவெண் ணெய் சுவேதவனப்பெருமாள் பிள்ளையவர்களான மெய்கண்ட தேவரைக் கூறியிருத்தலானும் ஞானாசாரியனை சிவபெருமானே என்று கூறுதல் ஆன்றோராசார மாதலானும் சாத்திரசம்பிரதாய விரோதமாக வுரைத்த வவ்வதிபாதகமொழிகளைப் பூர்வபட்சத்தார்க்கே திரும்பவளித்து சிவபெரு மானே வந்தாரென்னல் கூடும் எனமுன்னுரைத்தவைகளை நாட்டினும்.

பின் "இராமலிங்கபிள்ளை ஒன்பது வயதிற்பாடினாரென்பதும் ஒற்றியூ ரில் சிவனே குருவாக வந்தாரென்பதும் பிறவும் பொய்க்கதையென்றறிக. என்றனர்.

ஒன்பதாவதுவயதிற் பாடவராதென்று இவர்கள் எந்தஆதாரங்கொண் டுரைத்தார்கள். ஒற்றியூரிற் சிவபெருமான் குருவாகவந்திவர்க் குபதேசித்தி லர் என்பதற்கு இவர்கள் காட்டிய ஆதாரமென்னை?

இப்பூர்வபட்சிகள் எதனையுரைத்தாலும் இவ்வுலகினர் மெய்யென நம் புவர் என்று கருதினர்போலும் சிவபெருமானே குருவாக வந்தனர் என்றத னால் சைவசித்தாந்தத்துக்கு இழுக்கொன்றுமில்லையாகவும்இங்ஙனமுரைத் தல் குருகுலவாசஞ்செய்து சன்மார்க்க நூல்களை ஆசிரியர் உபதேசவழி யாக அறிந்தனுட்டிக்கப் பரிபாகமில்லாக் குறையேயன்றி வேறின்றென்று சத்சம்பிரதாயிகள் கருதாமலிரார்.

"மெய்ஞ்ஞானந் தானே விளையும் விஞ்ஞானகலர்க்
கஞ்ஞான வச்சகலர்க் கக்குருவாய் - மெய்ஞ்ஞானம்
பின்னுணர்த்து மன்றி பிரளயா கலருக்கு
முன்னுணர்த்துந் தான் குருவாய் முன்."

என்று சிவஞானபோதமுரைத்தலின் பக்குவமுடையா ரெவருக்கும் சிவபெருமானே குருவாகவந்துபதேசிப்பவராதலின் பிள்ளையவர்கட்கு சிவ பெருமா னொற்றியூரிற் குருவாகவந் துபதேசித்தது பொய்யாகாதென்க.

வெளியூர்களிலுள்ளாரிற் சிலர் இப்பூர்வபட்சிகளின் அந்தரங்கங்களை அறியாதாராதலின் மயங்குகின்றார்கள். பாடுந்திறமும் குருபதேச மரபும் உடையவர்கள் இராமலிங்கபிள்ளை ஒன்பதாவது வயதிற்பாடியதற்காகவும் சிவபெருமானையே குருவாகக்கொண்டதற்காகவுஞ் சந்தேகங்கொள்ளார்.

பின் செத்தாரை யெழுப்புவேமென்று கதைகட்டி நாளைக்கழித்துவர ஆங்காங்குள்ளார் நிந்தித்து பலவாறுகூறினர் அவ்வவமானம் பொறுக்க லாற்றாது தாமே தம்முயிரை மாய்க்கத்தொடங்கி சிவனைநோக்கி முறை யிட்டார் என்றார்.

தம்முயிரைமாய்க்கத் தொடங்கிச் சிவனை நோக்கி முறையிட்டாரென்ற பூர்வபட்சிகள் நுண்ணறிவில் வியாழனும்பிற் படத்தக்கவரியர். சிவனை என்ற இலேசானே இவர்க்கெஞ் சிவபெருமானிடத் தன்புண்மையினின்மையை நன்குதெரிக்கின்றது. இவர்கள் தாமோ உண்மைச்சிவநேயராவார் மறந்தும் புறந்தொழா மாண்பினராவார்.

கிறித்துவம் புத்தம் முதலிய அன்னியமதவேக தேசிகளன்றோ இவ்வாறுபசுபதிப்பெயரிய தனிமுதற்கடவுளை சிவன்சிவன் என அகவுரவமாக உரைப்பார்கள்.

நிற்க, பிள்ளையவர்கள் "சிவனை" நோக்கி முறையிடுங்கால் அருகிலிப் பூர்வபட்சிகள் இருந்தனர்போலும் பிள்ளையவர்கள் சிவபெருமானைக் கண்களாற்கண்டனர் என்பதற்குச் சான்று இப்பூர்வபட்சிகளே யாகின்றனர்.

பிள்ளையவர்கள் சிவபெருமானைக்கண்டு இறந்தாரை யெழுப்புமாறு இரந்த ஞான்று எழுப்பாதுவிட்டகுறை பிள்ளையவர் களதுபோலும் சிவபெருமானைநோக்கி முறையிடுவார் எம்மார்க்கிகளினு முயர்ந்த சன்மார்க்கிகளன்றோ? சன்மார்க்கிகட்கு அவமானநிகளால் உயிர்விடுந் துணிவாதிய இழிகுணங்களுமுண்டாகுமோ?

'இதுதருணந் தவறுமெனி லென்னுயிர் போய்விடுமென்பதாதி சிலபாடலை எடுத்துக்காட்டிய விவரநிலிருந்தபடி யென்னை?சிவபெருமானைத் தரிசிக்குமாவலாற்பாடிய வப்பாடல்களுக்க பார்த்தங்கருதி எடுத்துக்காட்டியிருக்கின்றனர். அவையோ ஒன்றற்கொன்று யாழ்ப்பாணத்துக்கும் காசிக்குமுள்ள சமீபம்போல அதிநெருக்கத்திலுள்ளன. இவர்கள்காட்டிய நான்குபாடல்களும்பிரியேனென்னும் பதிகத்தும் திருவருட்பேறென்னும்பதிகத்தும் உண்மைகூறலெனும் பதிகத்தும் உள்ளனவேயாம்.* நுணுகிய அறிவினையுடைய பிள்ளையவர்களின் அபிப்பிராயத்தினை அறியும் ஆற்றலற்ற இப்பூர்வபட்சிகள் உலகினரை வஞ்சித்துப் பொய்ப்புகழ்பெறுவான் கட்டிவிட்ட கதைக்கஞ்சுவோர் யாவர். இவர்கள்காட்டிய பாடல்களில் செத்தாரை எழுப்பாவிடில் உயிர்விடுவேன் என்று கூறியிருக்கின்றதா இல்லையே இல்லாதபோதிவர் பக்கமெங்ஙனம் நிலைபெறும் இறுதியில் இராமலிங்கபிள்ளை தாமே தம்முயிரை மாய்த்துக்கொண்டார் என்று கூறுகின்றூர். இப்பூர்வபட்சிகள் முப்பத்தைந்து வயதிற்குமேற்படாத இளைஞரேயன்றி உடலான் முதியோருமல்லர். முப்பதுவருடங்களுக்கு முன்னிருந்த இராமலிங்கப்பிள்ளை என இவர்களே தம் வழுப்புழுவொளியும் புத்தகப் பீறலில் எழுதியிருத்தலின் இக்கூற்று பிறர்மொழியை நம்பி ஆலோசனையின்றி இவர்களெழுதியதேயாம். ஐயோ? பாவம் பிள்ளையவர்கள் புத்தகப்பகைவராகிப் பண்டிண்டிருந்தாரில் ஒருவர் தங்குடும்பத்திலுண்டான மனஸ்தாபத்தால் அன்னபானநிகள் இன்றிக்கிடந்துயிர் துறந்தமைக்குச்

சிலர் குறைகூறுதலைமறைக்க சன்மார்க்கசிரோமணியான பிள்ளையவர்கள் மீது இக்குற்றத்தினை வைத்துக் கூறுகின்றனர்.

பிள்ளையவர்கள் தாமேயுயிர்மாய்த்துக் கொண்டதற்கு எந்தத்தகுந்த ஆதாரமும் இவர்கள் காட்டாதவாளா பொய்கூறினுல் இவரையொத்தவ ரன்றிப் பிறர் அதனை அங்கீகரிக்கமாட்டார்கள் அவர் தாமே தம்முயிரை மாய்த்துக்கொள்ளவில்லை என்பதே அதற்கு மறுப்பு.

தம்முயிர்க்குத்தாமே வஞ்சகராயினுர் என்பது முதலிய மொழிப்பிர யோகங்கள் இன்னபக்குவத்தினையுடையரைக் குறிப்பதென்றிப் பூர்வபட் சிகளறிந்திருந்தா லிவ்வாறுரையார். சாமானியர்களான சீவர்களின்பொ ருட்டுரைத்தனவற்றை யதிகாரிபேத மாராயாது குழறுதற்கு அறிவுடைய சம்பிரதாயிகள்பரிகாசஞ்செய்யாதிரார். பிரமாணங்காட்டாது அருணூல்க ளாகிய வேதசிவாகமங்களைச் சான்றுகூறினர். வேதசிவாகமங்களிலுள்ள விஷயங்கள்தெரிந்திருந்தால் இந்த விபரீதசிந்தனைஉண்டாகாதே. பிரமாண வாக்கியங்களைக் காட்டாமையா லிவர்கூற்றினைப் பொய்யென மறுக்கின் ரும்.

பின் தம்மைச் சிவனென்றும் சிவபெருமானது மனைவியென்றும், சிவ னது பெரியபிள்ளை, தலைப்பிள்ளை, செல்வப்பிள்ளை என்றும் திருவருட்பிர காசவள்ளலா ரென்றும் தம்பாடல்கள் திருவருட்பாசமரசவேதம்திருமுறை என்றும் அவை வேதாகமங்களினுஞ் சிறந்தவென்றும் கூறிச்சிவநிந்தை. அடியார் நிந்தை வேதசிவாகமநிந்தை, தேவார திருவாசகாதி திருவருட் பாநிந்தை என்னும் இவ்வதிபாதகங்களே இராமலிங்கபிள்ளையைக் கொன் றனவென்க. என்றார்.

இவர்கள் கருத்தின்வண்ணம் நிற்பவர் எரிவாய் நிரையத்துக்கா ளா வார்கள் 'எதனுலென்னில் பூர்வபட்சிகளின் வஞ்சனையினையுடைய சொல் லினைத்து சிவநிந்தையும் அடியார்நிந்தையும் வேதசிவாகமநிந்தையும் தேவா ரதிருவாசகாதி தமிழ்வேதநிந்தையும் ஆகிநிற்றலையுடையதாதலி னென்க. பத்தாந்திருமுறையான திருமந்திரத்து திருமூலயோகிகள் தம்மை சிவ னென்றுகூறி இருக்கின்றனர் ஆதலினவரும் சிவநிந்தை செய்தவராகின் றனர் இவ்வதிபாதகமே அவரைக்கொன்றதென்று மிவர் கூறுவர்போலும் 'நந்தியருளாலே மூலனை நாடிப்பின் நந்தியருளாலே சதாசிவனுயினேன் நந்தியருளாலே மெய்ஞ்ஞானத்து நண்ணினேன், நந்தியருளாலே நானி ருந்தேனே. என்று கூறியிருக்கின்றனர்.

தமிழ்வேதமாகிய திருவாசகத்து மணிவாசகப் பெருமானுர்.

"அவமாய தேவரவ கதியி லழுந்தாமே
பவமாயங் காத்தென்னை யாண்டுகொண்ட பரஞ்சோதி

நவமாய செஞ்சுடர் நல்குதலு நாமொழிந்து
சிவமான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ."

என்று தம்மைச் சிவமென்று கூறினர். இனி இவ்வெம்பெருமானையும் அவ்வாறு கூறுவர்போலும்.

திருநாவுக்கரசு சுவாமிகள் மூன்ருர் திருமுறையுள் சிவபெருமானை பிதாஎனவும் மாதாஎனவும் குருவெனவும் அன்புடைய மாமனெனவும் மாமியெனவும் சமத்துவமனைவியெனவும் புத்திரனெனவும் சாதினனவும் இனத்தினர்எனவும் வாழுமூரெனவும் உண்ணும்பொருள்கள் எனவும் கொடுக்கும்பொருள்கள் எனவும் சகோதரன் எனவும் மனசசெயல்களை மாற்றுபவனெனவும் இன்னமனேகவிதமாகவும் அருளிசசெய்திருக்கின்றனர்.

பிதாவென்றமையால் பிள்ளையாகின்ருர மாதாவானுலும் அவ்வாறே ஆகின்ருர். ஆகவே மூன்னர்ச சிவபெருமானை அப்பனெனவும் அம்மையெனவுங்கூறிய இம்மாதவச் சிவஞானியரும் இப்பூர்வபட்சிகளின் ஆணைக்கிலக்காகவேண்டிய வர்தாமோ? வைதிகசைவமரபினை யுணராது இவ்வாறு கூறுதலால் இவர் கூற்றுவெறுங கூற்றென்க.

## தனி, த்ருத்தாண்டகம்.

"அப்பனீயம்மைநீயையனுநீ யன்புடைய மாமனுமாமியுநீ, ஒப்புடைய மாதருமொருளுநீ யொருகுலமுஞ்சுற்றமுமோரூருநீ, துய்ப்பனவுமுய்ப்பனவுநோற்றுவாய்நீ துணையாயென்னெஞ்சந் துறப்பிப்பாய்நீ,யிப்பொன்னீ யிம்மணிநீயிம்முத்துநீயிறைவனீ யேறூர்ந்தசெல்வனீயே" என்பதேயாம்.

சரிதம்பொய்என்றதற்கு மெய்என்றும் கருவகுழியிற்பிறந்தா ரென்பதற்குஅன்றுஎன்றும்போலியருட்பா மறுப்பென்பதனைஅதன் அபலத்துக்கேற்றபடி அது பிறந்ததொண்ணூறு நாட்களுக்குள்ளேயே மகாபரசாலதுவழிதலால் அதனிலுள்ள மொழிகள் பயனற்றனவென்றும் அமஙகலமுதலிய கருதுக்கள் சுத்ததவறென்றும் பெயரினைக் குறைவுறவெழுதுதல் குற்றமென்றும் வரலாற்றிற்கும் வசனததுக்கும் மாறுபாடின்றென்றும் தேகம் பிணவியலாகி இம்மண்ணில்விழாது மூவகைசசிததியுளோர் வகைச்சித்தி பெறுதலே முடிவான முத்திநிலையென்றும் அசசரிதம் சைவசித்தாந்த உணர்சசியின் மிகுந்தாராலேயே எழுதப்பட்டதென்றும் சிவனென பிள்ளையவர்களை யுரைத்தமைபாவ மாகாதென்றும் ஒன்பது வயதிற்பாடிய துண்மையென்றும், சிவபெருமானே உபதேசம் செய்தாரெனபது உண்மைச்சரிதமென்றும் செத்தாரை யெழுப்புவோமெனக் கதைகட்டிக்காலங் கழிக்கவில்லையென்றும். அவமானம்பொருமல் தம்முயிரைமாய்க்கவில்லை

யென்றும் உயிர்மாய்க்கத் தொடங்கிச் சிவனைநோக்கி முறையிட்டாரென்பது பொருத்தமற்ற பொய்யென்றும் அவருயிர்க்கு அவர்வஞ்சகராஞரில்லையென்றும் சிவகாருண்ணியம் அவரிடம் உண்மையிலிருந்ததென்றும் அவர்வெளிவேடமொன்று முடையரல்லரென்றும் அவர் அனைத்துயிர்கண்மீதுங் கருணையுடையவரே யென்றும் அருணூல்களான வேதசிவாகமங்களுரைக்கு நரகவேதனையைப் பிள்ளையவர்கள் அடையாரெனவும் தம்மை சிவனெனலாதிகள் ஆன்றோராசா ராநுசாரமாத லிலப்பாதகம் அவரதன்றென்றும் வேதாகமங்களினுந் தம்பாடல் சிறந்ததென்றது நுங் கருத்தன்றென்றும், இப்புண்ணியச்செயல்களை பாவச்செயலெனக் கூறி யறங்கடையார்க்கவர் பூர்வபட்சிகளே யெனவும் கண்டித்து இராமலிங்க பிள்ளை சரிதம் உண்மையெனச் சித்தாந்தஞ்செய்தமையின் பூர்வபட்சிகளின் ஆபாசதர்ப்பண, மெமது நியாயவச்சிரகுடாரத்தால் பத்தொன்பதாம்பக்க முதல் இருபத்தோராம் பக்கம்வரைக்குஞ் சிதைந்தழிந்தமை காண்க.

## இராமலிங்கபிள்ளை சமயப்பற்றிலார் என்றதன் மறுப்பு.

"இராமலிங்கபிள்ளை சமயபற்றில்லார் என்ற பீடிகையின்கீழ் இராமலிங்கபிள்ளையவர்களுக்கு சைவசித்தாந்தவாசனை சிறிதுமின்று என்று தொடங்கி சமரசசன்மார்க்க மென்றெழுததென்னே" என்று சிலவழுவாசகத் தொடர்களை வரைந்துவைத்தனர்.

சமயப்பற்றில்லார் என்றெழுதிய இப்பூர்வபக்கத்தார் தந்நிலையைப் பிள்ளையவர்களதாகமறந்து கூறுகின்றனர். சமயப்பற்றில்லாதார் இவர்களை யன்றி அவரல்லர். பிள்ளையவர்கள் இன்னசமயத்தில் பற்றில்லாதவர் என்றுகாட்ட மறந்தனர்போலும்.

இனர் இராமலிங்கப்பிள்ளை யவர்கட்கு சைவசித்தாந்த வாசனைசிறிதுமின்றுஎன்பது கரதலாமலகம்போற்காண்பர் பெரியர் என்றார். பிள்ளையவர்கட்குசைவசித்தாந்தவாசனை சிறிதுமின்றென்பதற்கு தக்கநியாயமுரையாமல் காண்பார்பெரியர் என்ற வெறுமொழியே இவர்கள் புத்திசாதுரியத்தை விளக்குகின்றது. இவர் கூறும் பெரியர் உயரம் வயது முதலியவைகளாற் பெரியராக ஒருவேளை இருக்கினும் அறிவான் மிகச்சிறியராகவே விளங்குவர். இப்பூர்வபக்கத்தார் தம்மொழிக்குப்பதிலான மொழியே கிடையாது என்று கருதுகின்றவர்கள் என்பதை அவர்கள் கூறுந்துணிவுரைகள் காட்டுகின்றன.

"சமயாசாரிய சுவாமிகள் இறைவனோடிரண்டறக் கலந்த அத்துவித நிலையராயிருந்தும் சைவசித்தாந்தம் என்னும் பெரும்பயிரையடர்ப்பான் வந்த சமணம் புத்தம் முதலிய புறச்சமயங்களை கட்டுவெந்தாரன்றிச் சமயத்தை வெறுத்தாரல்லர். என்று வரைந்திருக்கின்றனர். இந்த மலைபோன்ற

உத்தியை எந்தநீவாந்தரத்தினின்றுங்கொண்டு வந்தார்களோ? இன்னோர்.
சமயாசாரியசுவாமிகள் இறைவனோடிரண்டறக் கலந்த பின்னரும் இவ்வுல
கில் இருந்தனர்போலும்? சமயாசாரியசுவாமிகள் அறிவாற்சிவபெருமானாக
விளங்குவோர்களாதலின் நாங்களவ்வாறுரைத்தோம் என்றும் இதுவே எங்
கள் மரபென்றும் கூறுமிவர்களை சைவ ஏகதேசிகளென்றன்றி வைதிகசைவ
சித்தாந்திகளாக வைதீகசைவ நூலுணர்ந்தோர் கருதார்.

சிவபெருமானோடிரண்டறண்டறச் சமயாசாரியவர்கள்கலந்தபின்னர்இவ்
வுலகில் வசித்தனரெனஅவர்கள் சரிதங்கள் கூறவில்லையாதலின் இவருரை
வெற்றுரையென்க. அன்றியும் அத்துவிதநிலையாராவார் சன்மார்க்கிகளன்
றோ? சற்புத்திரமார்க்கத்தையும் தாதமார்க்கத்தையுஞ் சார்ந்தவையன்றோ
பரார்த்தலிலிங்க வழிபாடாகிய, இவர் கருதும் அத்துவிதநிலையராவார் சம
யப்பற்றில்லாதாராகவே இருத்தல்வேண்டு மென்பதேயாம் என்பதற்கு
அவர் குறித்த உம்மையே சான்றுபகரும்.

சத்திநிபாதத்துத் தமரன்றோ குருபரனோக்கிற்குழை வுண்டகன்ற
மலத்தினராகி அத்துவிதானுபவிகளாவோர். சமயாசாரியர்களும் அத்தகை
யரேல் நம்போன்றவர்களா யிருந்து பரிபாகமடைந்த பசுக்களாகவன்றோ
வாகின்றனர். வைதிகசைவசித்தாந்திகள் எங்காழிப் பெருந்தகையைக்குமர
குருபரனே என்றுகொண்ட கொள்கைக்கிணங்கிநின்ற சென்னை வேதாக
மோக்த சைவசித்தாந்திகள்தங் கொள்கைக் குமாரூகவரைந்துள்ள இச்சுவ
டியின் பிரசுரக்காரர்களாக முற்பட்டது வியப்பினும் வியப்பே. புத்
தஞ் சமணமுதலிய மதங்கள் சைவமென்னும் பயிருக்குக்களையே யன்றி
சைவசித்தாந்த மென்னும் பயிருக்கு மாத்திரம் களையாயினவோ? "வேத
நெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்கப் பூதபரம் பரைபொலி
யபுனிதவாய் மலர்ந்தழுத சீதவளவயற்காழித் திருஞானசம்பந்தர்பாதமலர்
தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்" என்ற அருண்மொழித் தேவர்
திருவாக்கினையும் பொருட்படுத்தாது. அநேக வேறுபாடுகளையுடைய சித்
தாந்தங்களை உட்கொண்டு நிற்கும் சைவசமயத்தி னொருவகைச் சித்தாந்த
மான மெய்கண்ட சித்தாந்தத்தினைக் குறிப்பாற்சுட்டி சைவசித்தாந்தம்
என்னும் பெரும்பயிரை யடர்ப்பான் வந்தபுத்தமுதலியவை என்றமையா
னே இவர்க்குவைதீக மார்க்கங்களிலுள்ளபலவேறுபாடான சித்தாந்தங்களை
யுடைய சைவமார்க்கத்திலிருக்கும் வைஷம்மியம் இவ்வளவென நன்குவிள
ங்குகின்றது.

"சமயத்தை வெறுத்தாரல்லர் - என்றூர். சமயத்தை வெறுத்தாரல்லர்
என்றமையால் விரும்பினரென்று பொருளாகின்றது. எந்தசமயத்தை! என்
பார்க்கிவர் சைவசமயத்தை யென்றன்றோ பதில் கூறல்வேண்டும் அங்ஙன
மாயின் பிள்ளையவர்கள் சைவசமயத்தை வெறுத்தனரென்று இவர்காட்
டாமையின் சைவமல்லாத சமயத்தினை வெறுத்திருக்கலாமேயன்றி சைவ

சமயத்தை வெறுத்ததாக இவர் ஒருமொழியையு மவர்பாடலினின்று வலி ந்துகாட்ட இயலாதவராவர்.

எல்லாசசமயமு மொன்றென்று கூறினரல்லர்." என்றார் இதுசமயா சாரியர்கள் திருவாய் மலர்ந்தருளிய திருநெறித்தமிழ் வேதங்களை இகழா மல் இகழ்ந்ததாகும் எவ்வாறெனின் "சமயவாதிகள் தத்தம் மதங்களிலமை வதாக அரற்றிமலைந்தனர்" என்பதாதி வேதவசனங்கட்கு மாறுபடுதலின் சமயங்கள் அநுஷ்டிப்பவர்களின் பக்குவத்துக்கேற்ப சிவபெருமானாலேயே ஆக்கப்பட்டு நடைபெறுவதென்னும் வரம்பினை யழிப்பான் இவர்எல்லாம தமுமொன்றென்று கூறப்படாதென்கின்றனர்? உரைத்தோன் கருத்தினை யுணருமாற்றலின்றி தூட்டை நெஞ்சினருவக்கவாளா கூறுவதிலொருபயனு மில்லையாதலினது பொருந்தாதென்க.

"சமயம் சமயமென்பது பொய்யாம் என்றும் அதனாற் பிரயோசனம் இல்லையென்றுங் கூறினர் என்றார். இதனாலிவர் சமயம் சமயம் என்பதை மெய் என்றும் அதனாற் பிரயோசனமுண்டென்றும் கருதினவராகின்றார். இவருக்கும் பிள்ளையவர்களுக்கும் வெகுதூரமாதலினிவர்க்கு அவருபேதசம் இன்பத்தினை யளியாது. இவ்வளவோடு விடாமல் சாதியபிமானங்களும் தேசாபிமானங்களும் இருத்தல் வேண்டுமென்று குறிப்பிக்கின்றார். இவை களால் விளையுந் தீமைகள் இன்னவையென இவர் அறிந்திலாதவராதலின் இவ்வாறு கூறுகின்றனர். சமயங்களெல்லா முத்தியாகிய வந்தமிலின்பத தினை யடைதற்குச் சோபான மாதலினென்க என இவரே மறந்துரைத்த னர். என்செய்வர் பிள்ளையவர்கள் மீதுண்டான பொறாமை காரணமாக இவர் பலதவறுரைக்கினும் அவைகளினிடையே அச்சலத்தினை மறந்துஉண் மையையு முரைக்கின்றனர் இவ்வுண்மைகள் இவர் மனநிலைகளை கெடுக் கின்றன. சோபானமென்பதுபடி. அளக்கும்படியும் குளத்தின்படியுமன்று மேனிலைக்குக்கீழ் நிலையிலுள்ளாரேறிச செல்ல மாளிகையை அல்லது மேனிலையை அமைத்தவன் அதனில் கட்டமின்றி ஏறிச்செல்வதற்குஅமை த்தபடிகளைச் சோபானமென்ப. இசசோபான மனைத்திற்கு முரியோனுண் மையி லொருவனேயன்றி அநேகராகார். இதனால் இவருரைப்படியே முத்தியாகிய அளவிலின்பத்தை யடைதற்குச் சோபானமானபடிகள் பொ துவாராய்ச்சியில் ஒன்றாயும் சிறப்பாராய்ச்சியில் வேறுவேறாயும் ஆராய்ச சிக்கேற்றவாறு தோனறுதலின் பிள்ளையவர்களும் ஒன்றென்றுகூறநேர்ந்த விடத்து ஒன்றென்றும் அன்றென்று கூற நேர்ந்தவிடத்து அன்றெ ன்றுங் கூறி யிருக்கின்றார்கள். இம்முறையாலவர் சமயப்பற் றில்லாத வராகார். "புறசசமயநெறி நின்றுமகச் சமயம்புக்கும்" என்றதொ டர்மொழியைக் காட்டி மகிழ்ந்தனர். புறச்சமயத்து நின்றோன் அகசசம யத்துட்புகுந்தால் புறச்சமயத்தினைப் புகழ்வானோ? இகழ்வானோ புகழ்வா னானல் அகச்சமயம் புகவேண்டா இனி ஒரு சமயத்தினுட் கிடைகளிலுள் ளாரோ ஒருவரை யொருவர் இகழ்தலும் தந்நிலையே மெய்ந்நிலை யென்ற

லும் இன்னோர் அறிந்தவராயின் இவ்வாறு கூறமுற்படார் சன்மார்க்கிகள் ஏனைய மார்க்கங்களைக் கண்டித்தலும் ஏனையர் ஒன்றன்பின்னொன்றாய் சன்மார்க்கத்தினை யடைதலும் சன்மார்க்கநிலையில் சமயாதீத பழம்பொருளை எய்திச்சுகித்தலும் இவர்களறிந்தவரல்லர். அறிந்தவராயின் பிள்ளையவர்களை சமயப்பற்றில்லாதார் எனஇகழார். "பரசமயங்கட்கெலாம் பாக்கியம் பண்ணுணதே" என்ற தானும் செந்தமிழுப நிடதமாகிய சிவஞானசித்தி யாருங் கூறுகின்றது என்றனர். திருநெறித்தமிழ் வேதங்களாகிய தேவார திருவாசகஙகளுக்கு வழங்கும் பெயர்களை மாற்றி அருட்பா எனப்புதுப் பெயரிட்டுத் தாபனஞ் செய்ய முயலுமிவர்கள் சிவஞான சித்தியைச் செந் தமிழ் உபநிடதம் என்றனர் இனி அச்சிவஞானசித்தியின் முதனூலான மற்றையசிவஞான போதமாதி யவைகளுக்கும் மாறிமாறி நூதனவபிதானங் கள் வைத்தழகாக வுரைக்கப் பின்னிடார். நிற்க, இதற்குமாறாக சமயம் பொய்யென்றும் பேயாட்டமென்றும் கூறி, அச்சமயஙகளாற் பிரயோசனம் யாதுவில்லை யென்றார். என்றனர். இதனால் இவர் சமயத்தை மெய் யென்றும் பேயாட்டமன்றென்றுங் கொண்டவராகின்றார்.

தமிழ் வேதமாகிய திருவாசகமானது "உவலைச் சமயங்களோய்வாத சாத்திரமாஞ் சவலைக்கடலுளனாய்க் கிடந்து தடுமாறுங் கவலைக்கெடுத்துக் கழலிணை கடந்தருளுஞ் செயலைப்பாவி நாந்தெள்ளேணங்கொட்டாமோ" என்று முழக்குவதனை ஓதுவார் வாய்மொழியாலேனும்கேட்டிரார்போலும் இஃதெமக் குடன்பாடன்றென்பர்போலும் அஙஙனமிவர்க ளுரைத்தால் இவர் மொழிகளை எவர் மதிப்பவர்.

சமயஙகளாற் பிரயோசனம் யாதும் இல்லை யென்றார். அப்பாடல்கள் வருமாறு என்று வரைந்த தன்கீழ் பிள்ளையவர்களின் பாடல்களிற் சில துண்டுகளை எடுத்துக்காட்டி யிருக்கின்றார். அவையாவன-சாதிகுலஞ்சமய மெலாந் தவிர்த்தெனை மேலேற்றி - என்பதுமுதல் மதம் பிடித்தவரெல் லாம் வாய்பிடிப்புண்டு வந்து நிற்கின்றார், என்பதிறு வாயானவையேயாம்- இவைகளே இவர்க்குப் பிள்ளையவர்களைச் சமயப்பற்றில்லாதவ ரெனக்காட்டுகின்றன. இவர்காட்டிய இத்தொடர்களால் பிள்ளையவர்களை அறிஞர் களெவ்வாறு மதிப்பர் என்பதை ஊன்றி யாராய்வாருணர்வா.

சாதிகுலஞ் சமயமெலாந் தவிர்த்தெனை மேலேற்றி என்றதிவர்க்குக் குற்றமாயிற்று. இது அருள்விளக்க மாலையின் உஉ - வது பாடலினைக் காலடியினுங் குறைந்தபாகம் அந்த பாடலை முழுவதும் எழுதினால் இவர் கருத்தினையதுவே யழிக்குமென்றே தம்பட்சத்துக்கு வேண்டியவளவுகாட் டினர்போலும். அஙஙனமாயினு மிவரதிற்கண்ட ஆபாசமென்னை? சாதி யையுங் குலத்தையுஞ் சமயத்தையுந் தவிர்க்காது ஒருவன் மேனிலையை அடையமுடியாதுஎன்பதை இவரறியார்.(மேனிலையென்றது சிவசன்னிதா னத்தினை) சதாசாரமுடையவர்களி னபிப்பிராயங்களை கன்மகாண்டப் பிர

வேசகமுமில்லாதா ரெங்ஙன முணர்வார் - இவர்கள் செந்தமிழுபநிடதமெ ன்ற சிவஞான சித்தியினெட்டாஞ் சூத்திரத்து முதல் விருத்தயாப்பான "மன்னவன்றன் மகன் வேடரிடத்தே தங்கி, வளர்ந்தவனை யறியாது மய ஙகிநிற்பப், பின்னவனுமென் மகனீயென்றவரிற் பிரித்துப் பெருமையொ டுந்தானாகப் பேணுமாபோல்"என்பதற்கு குருமுகமாகப் பொருளறிந்திருந் தால், சாதிகுலஞ் சமயமெலாந் தவிர்த்தெனை மேலேற்றி யென்பதற்கு மயங்கார். "சமயாசாரமுஞ் சங்கற்பவிகற்பமும்-அமையாதாங் குலவாசார மானதும், இமையாதநும் விடாதவிவ்வாழ்க்கையும் அமையார் தோளாய் விடுதலாசாரமே. என சிவபெருமான்ஞானசார விலக்கணத்தினை உமாதே வியாருக் குபதேசித்ததாக சிவாகமமான தேவிகாலோத்தரங் கூறியி ருத்தலானும் "பன்முகத்திரைச் சமயம் பாழ்படக் கல்லாலடிக்கீழ் சின்முகத் திரை யரைசைச சேர்வேனோ பைங்கிளியே" என்று தாயுமானார் சமயப் பற்றில்லாமையைக் கருதியிருத்தலாலும்.

"மெய்த்ததுலங்கல்விபுனை வேடமெல்லா மோடவிட்டசித்தரொன்றுஞ் சேராச்செயலறிவ தெந்நாளோ" குலங்கல்விவேடமாதியைத்தாயுமானார் வெறுத்துரைத்திருத்தலானும் பிள்ளையவர்கள்ஆன்றோரொழுக்க வழக்கங் களை யநுசரித்துரைத்தவை ஆபாசமாகாமலிவர்கள் அபிப்பிராயங்களே ஆபாசங்களாயின. பின்னர் திருஞானசம்பந்தப் பெருமான் மாணிக்கவா சகசுவாமிகள் முதலாயினோர்கள் இவரைப்போல உரை நந்து விடுவாராயின் சைவசித்தாந்தங் காணப்படுமோ? என்று வினவுகின்றனர். இவர்கள் சமயா சாரிய சுவாமிகளை தங்களையொக்க அறிவாளிகளெனவும் தாம் சமயத்தா பன உத்தாரணாதிகள் செய்ததும் செய்வதும் போலவே செய்தவர்கள் என வுங கருதுகின்றவர்களாதலின் இவ்வாறு கூறுகின்றனர். சின்னாட்கு முன் னுள் ஞானசம்பந்த பெருமானைச சிறுபிள்ளை யாதலின் பொலிவற்ற பா டல்களைப்பாடி யிருக்கின்றார் என்று குழறியவர்களும் இக்குழுவினருக் குற்ற தோழர்களாதலின் சைவசித்தாந்தங் காணப்படுமோ என்றுங்கேட்பா ர்கள் இன்னம் அதிகமாகவும் கேட்பார்கள் இன்னஞ் சிலதினங்களில் சைவசித்தாந்தம் சீரணமடைந்து போயதனாலன்றோ யாமதனை உத்தார ணஞ்செய்தே மென்றுங்கூறுவர் இவ்வறுமொழிகளை கிரட்சகுட்சிகளா யுள் ளாரன்றிப் பிறர் மெய்யெனக் கருதார்.

"கையார் சோறுகவர் குண்டர்களுந் துவருண்ட
மெய்யார் போர்வை மண்டையர் சொல்லும் மெய்யல்ல."

என்பனவாதி அனேக வேதவசனங்களாற் புத்தஞ்சமணமுதலிய மத ஙகளை இகழ்ந்திருத்தலின் இவர்கருத்து சமயாசாரியர்களிடஞ் செல்லா தென்க.

சைவசித்தாந்த வாசனைசிறிது மில்லாதாரென்றதற்கு சைவசித்தாந் தத்தை நன்குணர்ந்த ஞானியென்றும் புத்தர் முதலியோர் சைவசித்தாந்

தத்தினை அடர்ப்பான் வந்தாரென்பது வஞ்சனைக் கூற்றென்றும் ஞான சம்பந்தப்பெருமானை சிவபெருமானே டிரண்டறக்கலந்த அத்துவித நிலைய ரெனல் அடாதென்றும் எல்லாச்சமயமு மொன்றென்று கூறவேண்டிய அவசியமவர்க்கின்மையால் கூறினாரலர் என்றும்-சமயம் சமயம் என்பது ஞானநிலையினருக்குப் பொய்தானென்றும் திருநெறித்தமிழ் வேதாதிப்பிர மாணங்களைக் காட்டி எமது நியாயகுடாரியால் இராமலிங்கப்பிள்ளை சம யப்பற்றில்லார் என்றபாகமனைத்தும் உடைத்தொழிக்கப்பட்டது காண்க.

## எம்மதமுஞ் சம்மதமேன்றதன் மறுப்பு.

பிள்ளை எம்மதமுஞ் சம்மதமென்ற தலைப்பின்கீழ் இங்ஙனம் சமயங்க ளைப் பொய் என்றும் என்று தொடங்கி இதுவும் பொய்யென்று முணர்க. என்று வரைந்திருக்கின்றனர்.

இதனில் சமயங்களைப் பொய் என்றும் பேயாட்டமென்றும் வெறுத்த விவர் அவற்றிற்கு மாறாக எம்மதமும் சம்மதமென்றல் சரியாமா? என்று வினவுகின்றனர். என் சரியாகாது பற்பல விடங்களிற் சமயங்களை வெறுத்த தாயுமான சுவாமிகள் எல்லாச்சமயமு மொன்றென்று கூறியிருந் தலைத் துவேஷமிகுதியான் மறந்தனர்போலும் "வேறுபடுஞ் சமயமெலாம் புகுந்துபார்க்கின் விளங்கு பரம்பொருளே நின்விளையாட்டல்லால்,மாறுப டுங்கருத்தில்லைமுடிவின்மோன,வாரிதியினதித்திரள்போல்வயங்கிற்றம்ம" என்ற பாடற்கண்ணுரைப்பர். இது மரபறியாது ஆட்சேபிக்க நேர்ந்ததாலு ண்டான தோஷம். முன்னுண்டான அது சரியானால் பின்னுண்டான இது வுஞ் சரியாகும். 'எம்மதமுஞ் சம்மதமென்று சொல்லிவிட்டால் சுகமாக இருக்கலாம் பலரும் வந்து தம்மைக் கும்பிடுவார்' புகழுவார் என்று நினைத் தனர்போலும் என்றனர். ஐயோ பாவம் சுகமாக இருத்தற்குரிய மார்க்கத் தினை இவர் எவ்வளவெளிதிற் கண்டுபிடித்தனர் இவ்வழியை இனி இவரும் இவர் குழுவினருமகொண்டு நிற்கும் வழியென அறிஞரொள்ளி நகையாடா திரார். சுகமாக இருக்கலாமென்பது முதலிய போலித்துணிபுகள் எவ்வழி யிலேனும் பொருண் முதலிய வீட்ட விரும்புவோர்க்குண்டாமேயன்றி துற வறத்தினராகிய பிள்ளையவர்கட் குண்டாகாதென்பதனை அனைவருமறிவா.

"அவைமட்டோ, என இரைந்து" சைவசித்தாந்தமொன்றே மெய்ச சமயமென்று சொல்லின் விவாதம் செய்யவேண்டும் அப்பொழுது அற்புதங் கள் காட்டவேண்டும் சித்தாந்தவுணர்ச்சிவேண்டும் அவையெல்லாந் தமக்கு இல்லையென்று நினைத்துப் பயமுற்று எம்மதமுஞ் சம்மதமென்று கூறிவிட் டார் என்றனர். இது என்ன வியப்பு ஒருவர் மனோபாவத்தினை மற்றொ ருவர் உணருவதென்றால் எளிதன்று. நமது பூர்வாட்சியார் வெகு விரைவி லெதனையு முணருகின்றனர். இவர் துணர்ச்சி குருவுக்கு. குதிரை வாங் கச் சென்றவர்களின் நுண்ணிய ஞானாசிரியனுமா நுண்ணியதென்றுபா ராட்டுவர் மாபுணர மாண்பினா

சைவசித்தாந்தமொன்றே மெய்ச்சமயமென்றால் விவாதஞ்செய்யவே ண்டும் என்றார். இவர் மொழியால் சைவசித்தாந்தமென்பது சண்டைக்கிட மானது. சாந்தம்லாக் கொள்கையினது என்றன்றோ பொருளாகின் றது. இவர் சைவசித்தாந்த வுணர்ச்சியுடையவரென்று தம்மைச சொல்லிக் கொள்ளினும் இவர் வசனங்கள் அதனை மாறுபடுத்துகின்றன. இவர் கொ ள்கைப்படியே பார்ப்போம், இவரிடத்தி லெவர் விவாதஞ் செய்யச் சென்றவர்கள் எத்தனை மதாசாரியர்களை இவர் தம் மாணவராகக்கொண்ட னர் அல்லது தமது வெற்றியினையுடைய மதத்திற் புகுத்தினர். ஒரு மதம் மற்றொரு மதத்தினை அரிக்காதென்பதனை இவரறியார். வரம்புமீறி நடக் கும் மதங்களை இறைவனே சமப்படுத்துவோன். இதனை சமணமுதலிய வீறியஞான்று இறைவன் சமயாசாரியர்கள் வழியாய் அதன் வீறடக்கியதனு லுணர்க. பிறர் - வம்பரெனவும் வாயாடிகள் எனவுங்கூறுபவர்களான மன வடக்க மற்றவர்களே சைவசித்தாந்திகளெனக் கருதுமாறு சைவசித்தாந்த மான உத்தமமார்த்திற்கே தோஷந கற்பிக்கின்றனர்.

அன்னியதீவாந்தரங்களிற்போல இப்பாரதவருஷத்துக் குமரிகண்டம் வரம்பற்றதன்றே. சைவசித்தாந்த மரபினர் சைவசித்தாந்த மரபினராகவும் மற்றையமரபினர் மற்றையமரபினராகவுங கட்டுப்பாடுடையராய் விரோத மின்றி அவரவர் கொள்கையில் அவரவர் நிற்குமியல்பினர் என்பதை இன் னோர் இதுகாறு முணர்ந்திரார். பல்லாயிரந்தலை முறைகளாகச் சைவசித் தாந்த மரபினையே பின்பற்றிவரும் இந்நாட்டுச சைவசித்தாந்திகள் எவரோ டும் விவாதஞ்செய்ய விசையார். அன்னியமதாவலம்பிகளாக இருந்து இம் மதத்தில் வந்தவராயின் விவாதாதிகளை விரும்புவர். தலைமுறை தலைமுறை யாக சைவசித்தாந்தவழியினிற்போர்க்குவாதமேன்? விவாதம் வேண்டுமென் றியர் கூறின் இவர்கூட்டத்தவர்கள் "ஒன்றது பேரூர்வழியாறதற்குள-வென் றதுபோலவிருமுச்சமயமுநன்றிதுதீதிதுவென்றுரையாளர்கள்-குன்றுகுரை தெழு நாயையொத்தார்களே" என்ற திருமந்திரத்தினை யுணராதவராவர்.

சைவசித்தாந்திகள் விவாதப் பிரியரல்லர் மௌனப்பிரியர். இதனைத் திருமூலர் திருமந்திரம் "கத்தித்திரிவர்கழுவடி நாய்போல், கொத்தித்திரி வர் குரக்களிஞானிகள், ஒத்துப்பொறியுமுடலு மிருக்கவே, செத்துத்திரிவர் சிவஞானியோர்களே" என்றுரைக்கின்றது ஆதலின் விவாதஞ்செய்ய வேண்டிய ஆவசியகமின்மைகாண்க.

பின் "அப்போது அற்புதங்கள் காட்டவேண்டுமென்றார். அற்புதங்கா ட்டியவர்யாவர்? இக்குழுவினர் சுத்தாத்துவித சைவசித்தாந்த பானுவும்மகா வித்வசிரோமணியும் என்றெழுதியிருக்கிற ம-ா-ா-ஸ்ரீ, திருமயிலைத் தணி யாசலமுதலியாரவர்கள் எத்தனை அற்புதங்கள் செய்தனர். இவர்கள்தாமிவ் வாறு கூறினும் அவர் சைவசித்தாந்திகளென்று வெளிவருவோர் அற்புதஞ் செய்யும் ஆற்றலுடையவர்களே யாவரெனக் கூறமுன்வரார். இராமலிங்க

பிள்ளையவர்களின் கொள்கை சைவசித்தாந்த விரோதமானவை என்றும் எங்கள் பட்சமான சைவசித்தாந்த மொன்றே மெய்ச்சமயமென்றுங் கூற வந்த பூர்வபட்சத்தாரில் எவரேனும் அற்புதஞ்செய்யும் ஆற்றலுடையராக இருக்கின்றார்களா? இருந்தார்களா? ஆறுமுகநாவலர் சுப்பிரமணியதேசிகசுவாமிகள் சற்குருநாதசுவாமிகள் - உதயமூர்த்தி தேசிகசுவாமிகள் - மகாவித்துவான் மதுரை இராமசுவாமிப்பிள்ளை-மகாவித்வான் கோ. சாமிநாததேசிகர்-மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள்-திருவண்ணாமலையாதீனம் ஆறுமுகத்தம்பிரான்சுவாமிகள்-தருமைஆதினம் சண்முகத்தம்பிரான் சுவாமிகள்-திருவாவடுதுறையாதீன மகாவித்வான் சபாபதி நாவலர் என்பவர்களையே இவர்கள் இராமலிங்கலிங்கபிள்ளையின் கொள்கைகளை மறுப்பான் வந்தவர்களாகவும் சைவசித்தாந்தமொன்றையே மெய்ச்சமயமெனக்கொண்டவர்களாகவும் வரைந்திருக்கின்றார்கள். இவர்களில் ஆறுமுகநாவலர்சரிதம் அவரை அபிமானித்தவர்களாலேயே எழுதப்பட்டு வழங்குகின்றது. அதனில் அவர்செய்த அற்புதங்களொன்றுங் காணோம் சனனம்முதல் மரணபரியந்தம் எழுதியவர்கள் அவர்செய்த அற்புதங்களை ஏன் எழுதாதுவிடுத்தனர். ஒருவேளை இக்குழுவினர் கொள்கைகள் அச்சரிதவாசிரியருக்குடன் பாடில்லாமையா யிருக்கலாம்.

ஆறுமுகநாவலர் முதல் சபாபதி நாவலர் பரியந்தம் இவர்கள் காட்டியிருக்குஞ் சைவசித்தாந்திகள் ஒருவரையொருவர் மறுக்குஞ் சித்தாந்த பேதங்களையே யுடையவர்கள். இ-ர்களனைவரும் கல்வியறிவொழுக்கங்களையுஞ் சிவபத்தியையு முடையவர்களாக இருந்தார்களென்றன்றி அற்புதச் செயல்செய்யும் இயல்பினரான சித்துமூர்த்திகளாக விளங்கினார்களென்று அவர்களைச் சேர்ந்தவர்களு முரைக்க முன்வரரார். இப்பொழுதிவ்வுலகிலில்லாத இவர்களையன்றி இவ்வுலவாசிகளாக தத்காலமிருக்கும் வேதாகமோக்த சைவசித்தாந்த சபையார்களிலும் அர்புதஞ்செய்யத்தக்கவர் எவருமில்லையாக வாளா அற்புதங்காட்ட வேண்டும் என்று தங்களை அறிவிலிகள் அற்புதமூர்த்திகளென மதிப்பார்களென இவ்வாறு கூறுவதனுலொரு பிரயோசனமு மின்மையை இனிமேலேனுமிவர்கள் அறிவார்களாக. சைவசித்தாந்தமொன்றே மெய்ச்சமய மென்று அதன்வழி நிற்பார் அற்புதங்காட்ட வேண்டியதில்லை யென்பதனை "சினமிறக்கக் கற்றலுஞ் சித்தியெல்லாம் பெற்றலும், மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே" என்றுதாயுமானுர் கூறியிருத்தலின் அற்புதச்செயல்களான சித்தியாதிகளை சமானியமானவைஎனவெறுத்தவர்களேசைவசித்தாந்தத்துக்குரியரென்றும் சைவசித்தாந்திகள் முத்தியையன்றிச்சித்தியை விரும்புகிறதில்லையென்றும் அறியப்படுதலின் இவர்கொள்கை இவர்பட்சத்துக்கே கேட்டைவிளைத்தது. பின்-சித்தாந்தவுணர்ச்சிவேண்டுமென்றார். திருவுந்தியார்முதல்சங்கற்பநிராகரணமிறுதியாகவுள்ள மெய்கண்டசாத்திரங்களிற் பழக்கம்வேண்டு மென்கின்றார். நிகண்டு இலக்கியம் இலக்கணந்தருக்க முதலிய கருவிநூற்பயிற்சியுடையராகி சமயம் முதற்கலாசோதனை பரியந்தமுள்ள தீட்சைகளைப்

பெற்றுக்குருகுலவாசஞ்செய்து அரிதிலுணரற்பாலதானசித்தாந்தநூல்கள் பக்குவர்க்கன்றி வாதிகட்குப்பயன்படாததென்பதுமுதலியஇரகசியங்களை அறிந்த அறிவுடையோர் இந்தவிஷயத்திலிவரிடம்அதிகபட்சமுடையராவர். சித்தாந்தவுணர்சசி வேண்டுமென்றவிவர் இன்ன சித்தாந்த வுணர்ச்சிஎனக் காட்டாமையால் சித்தாந்தகௌமுதியென வடநூலிலக்கணமொன்றற்கும் சித்தாந்த லேசமென அத்துவித நூலொன்றற்கும் சித்தாந்த சந்திரோதயமென தருக்கநூலொன்றற்கும் பெயராதலின் இவைகளிலெதனை மதிப்பது. தருக்கத்தினையே சித்தாந்தமென்றா மென்பரேல் தமிழுணர்ச்சியை மாத்திரமுடையநீவிர் வேறுபாடைகளிலுள்ளவைகளைச் சுட்டிக்காட்டுவதனா லென்னை பயன்என்பேம். சித்தாந்தவித்தியாசங்களை யுணராமலும் பிள்ளையவர்களின் சித்தாந்த வுணர்சசி இத்தகையதென நியாயங்காட்டி மறுக்காமலும் பிள்ளையவர்களைச் சித்தாந்தவுணர்ச்சி இல்லாதவரென்று கூறுதல் குபேரனை நித்தியதரித்திரன் வறியோனென விகழ்ந்ததற்கொக்குமேயன்றிப் பொருந்தாதென்க.

பின்னர் அவையெலாந் தமக்கு இல்லையேயென்று நினைத்துப் பயமுற்று எம்மதமுஞ் சம்மதமென்று கூறிவிட்டார் என்றார். அவையென்பன அற்புதச்செயல்களும் சித்தாந்தவுணர்ச்சியும் இவைகள் பிள்ளையவர்களிடம் இல்லாததற்காக அவர்பயமுற்றதெற்றிற்கு பயமுற்றுரைக்க வேண்டியவர்கள் இப்பூர்பட்சத்தினரே. இவர்கள் அடிப்பட்ட சான்றோரின் ஆட்சியிலில்லாத அற்புதாதிகளை உடையராதல் வேண்டுவோராதலினென்க. எம்மதமும் சம்மதமென்பவர்கள் பயமுற்றவர்களா? தம்மதமாத்திரம் சம்மதமென்பார் பயமுற்றவர்களா? எம்மதமுஞ் சம்மதமென்பவர்களை ஒவ்வொரு மதத்தினரும் உமது கொள்கைக்கு மாறாகவுள்ள எமது மதமுமக் கெவ்விதத்தாற்சம்மதமாயதென்பார்க்குத் தக்கபதிலுரைப்பவர்கள் பயந்தவரல்லர் துணிந்தவரென்றுணர்க. எல்லாமதஞானவுணர்ச்சியையு முடையார்க்கன்றி மற்றையர்க்கிதுபயன்படாதென்பதனை பூர்பட்சத்தாராலோசித்திருந்தால் அவ்வாறுரையார்.

பின்னர் இஙஙனஞ்சொல்லியதனாலே அவரையடுத்த மூடர்கள் தாமுமவ்வாறு சொல்லி சமயப்பற்றில்லாமல் உலகை கெடுக்கின்றனர். என்றார்.

இதனால் இவர்கருத்து இராமலிஙகபிள்ளையின் அபிப்பிராயமே இத தமிழுலகத்திற்கு எல்லாசசமயமு மொன்றென்னும் விஷயத்தில்முற்பட்டதென்றும் அவரையடுத்தவர்களால் அவ்வாறுரைக்கப்பட்டு வருகின்றமையினவரே இதற்கு முதற்காரணர் என்றும் கொண்டதாக ஆகின்றது. இது இவர் இந்நாட்டுப்பெரியர் தம்வழியினிற் பார்பொருட்டு பகாரமாக உரைத்துள்ளவைகளையும் அவர்களெங்கிருந்து அம்முறையைப் பெற்றனரென்பதையும் அறியாமையா லுரைத்ததேயாம்.

பிள்ளையவர்கள் காலத்துக்குமுற்பட்ட சுவாமி தாயுமானவர் சமயங்களனைத்தையும் ஒன்றென்று கருதினரென்பதற்கு வேறுபடுஞ் சமயமெலாம் புகுந்துபார்க்கின்... ..... .. .. .....மாறுபடு கருத்தில்லை என்று கூறியிருத்தலே முன்னரே விளக்கினும். தாயுமானவருக்கு முந்திய திருமூலநாயனரும் எல்லாச்சமயமும் ஒன்றென்றார் என்பதற்குரிய திருமந்திரம் காட்டாகக்காட்டினும். அதாவது ஒன்றதுபேரூர் வழியாறதற்குள என்பதேயாம். இவ்விருவரும் அச்சமயங்களின் முதலாசிரியனை தமதவலம்பமதகுரவனன சிவபெருமானென்று கண்டாராதலின் அவ்வாறு கூறினர்கள். அவர் வழிப்பட்டோரும் அவ்வாறே கூறுவர். ஆதலின் இவர் கருத்தின்வண்ணம் எல்லாச் சமயமும் ஒன்றென்றதனனுலகங் கெடுமெனில் அக்கெடுதிக்கு திருமூலர் தாயுமானவராதி பெரியோர்கள் பாத்திரராகின்றனர். அவர்கள் தாமாக ஆலோசித்து எம்மதமுஞ் சம்மதமென தம்மிட்டம்போல வுரைத்தாரல்லர். மத நூற்குரவனை யுத்தேசித்து கூறியிருக்கின்றார்கள். "இருநிலத்து ளபன்னூல்களுஞ் சுயமே எம்பிரான் படைத்தனன் மாதோ என்று காந்தமகா புராணத்து, சூதசங்கிதை கூறுகின்றதனுலும். "எந்தவாருயிர் யாதோர்பொருளினைச் சிந்தையாற் பற்றிக்காரியஞ்செய்திடின், அந்தயோனியதா மென்றறிவினல் பந்தமில் பொருள்பற்றுதறக்கதே - என்றுதேவிகாலோத்தாரகமம் கூறுவதனுலும்; வைதீக சைவாதி மார்க்கங்களிலுரைக்கப்படுஞ்சமயங்களையெல்லாம் சிவபெருமானே முதன்முதலுண்டாக்கினுதலாலும் அவரவர் பக்குவநிலைக் கேற்றவாறு அந்தந்த மத உண்மைகளை அவைகளை நம்பினவர்கள் அடைகின்றார்கள் என்பதனுலும் இது நம்பூர்வ பக்கத்தார் முன்னுரைத்தவண்ணம் சமயங்களெல்லாம் முத்தியாகிய அந்தமிலின்பத்தையடைதற்குச் சோபானமென்கவென்றதற்கு மாறில்லாமையாலும் தவறன்றென்க.

இறைவன் கட்டளையும் ஆன்றோராட்சியையும் அடியோடு மறைத்து பிள்ளையவர்கள் உபதேசத்தாலும் அவரை யடுத்தவர்களாலும் இங்ஙன மூலவினரை கெடுக்கப்பட்டதென்பது வறுங் கூற்றேயாம்.

அவரையடுத்த சில மூடர் என்றார். சிவபெருமானுரைத்த விதியை உல்லங்கனஞ்செய்யாது பாரம்பரியமாக அநுட்டித்துவந்த திருமூலர்தாயுமானவர் முதலியவர் கூறியவைகளின் சாரங்களைத் தமது ஆசிரியரான பிள்ளையவர்கள் பாலுணர்ந்து எமதாசிரியர் கருத்து, தாயுமானவர் திருமூலராதிய பெரியோர்களின் கருத்தேயாம் என்று கூறுபவர்கள் மூடர்களாவார்களா? சாத்திரத்துக்கும் சம்பிரதாயத்துக்கும் முழு விரோதமாக உரைப்பவர்களன்றே மூடராவர்.

பின் எம்மதமுஞ் சம்மதமென்றவர், சமயங்களி னெறிகளெல்லாம் பொய் என்றும் பேயாட்டமென்றும் அவற்றின் கற்பனைகளை யொழித்தேன் என்றும் கூறுதல் மாறுகொளக் கூறலும் அறியாமையுமே என்றார்.

இவ்வாறு கூறவதின்ன மரபினர்வழக்கம்இன்னது என்பதையறி யாதசின்னஞ்சிறுமிகள் மணல்வீடுகட்டி மணலைச் சோறாகவும் கறியாகவுங் கருதி உண்டதுபோனடித்து ஏப்பம் ஒன்றைமாத்திரம் உண்மையில் பன் முறை விடுமாறு இன்னோரும் பிள்ளையவர்களின் பாடல்களின் ஆபாசங் களைக் காட்டுபவர்கள்போல பொருத்த மற்றவிஷயங்களையே எழுதி எழுதி

தமிழ்வேதத்து மணிவாசகப்பெருமான் கண்ணுவியாலுங் கண்டெடன் காண்க என்று முன்னருளிச்செய்து.

பின் உள்ளத்துணர்ச்சியில் கொள்ளவும் படாஅன்
கண்முதற் புலனாற் காட்சியுமில்லோன்

என்றருளிச்செய்திருத்தலைப் படிக்கநேருங்காலிதற்கும். மாறுகொளக்கூற லும் அறியாமையுமேற்றவர்போலும்.

எம்மதமுஞ் சம்மதமென்ற ஞானம் எமது சமயாசாரிய சுவாமிகட் கும் சந்தானசாரிய சுவாமிகட்கும் ஏனோ தெரிந்திலது என்றார். எம்மதமும் சம்மதமன்று என்று சமயாசாரிய சுவாமிகளும் சந்தானசாரிய சுவாமிக ளும் எங்கே கூறியிருக்கின்றார்கள்.

நிலவுலகாயுதாதி நிகழ்சிவாத் துவிதாந்தத்துட்
குலவின ரளவளவாக் கொள்கையதாதி

என்று சந்தானசாரியரான உமாபதி சிவனார் கூறியிருத்தலால் அன்னிய மத சித்தாந்தங்களை அவர் சம்மதமன்றென்று கூறினாராவரோ? ஒருவர் ஒன்றைச் சம்மதமென வுரைத்தல் அதனிலுள்ள விஷயம் உண்மையாதலா லன்றோ? சம்மதமென்றதனானே தனது மத உண்மையையும் அன்னியமத உண்மையும் ஒன்று என்று கொண்டதாகுமா ஆகாதென்க.

ஒரு ஊருக்கு முன்னே சென்ற ஒருவன் பின்னே வருபவனை இகழ்த லறமன்று. சமயாசாரிய சுவாமிகள் முதலியோர் சிவானுபவத்தையே கூறி னார்கள். அன்னியமதத்தினர் கொண்ட முத்திக்கொள்கையும் சிவபெருமா னே கூறினரென முன்னரே உரைத்தாம்.சிவசம்மதமானவை அனைத்தும் சமயாசாரியர்களுக்கு அசம்மதமாகாது."வேதவேள்வியை நிந்தனைசெய்துழல் ஆதமில்லிய மணொடுதேரரை" என்று சமயாசாரிய சுவாமிகள் கூறிய வேத வேள்வியைஇப்பூர்வபக்கத்தார்அங்கீகரிப்பார்களா?யாகத்தில் யாடு குதிரை பறவை முதலியன கொல்லப்படுதலினதுதீயகருமம் அது எமக்குரித்தன்று என்றன்றி எமது சிவாசாரியர்களும் யாடுங் குதிரையும்பறவையுமாதிகளைக் கோறல் செய்தற்குரியர் என்று ஒப்புவார்களா? "பறப்பைப் படுத்துப் பசு வேட்டெரி யோம்புஞ்சிறப்பர்." என்ற ஸ்ரீஞானசம்பந்த சுவாமிகள் தில்லை

வாழ்ந்தனரை அதீட்சிதர்களென இகழுமிப் பூர்வபக்கத்தார் சமயாசாரியர்கள் கூறியிருந்தா லொத்துக்கொள்பவர்களைப்போல யாளாவனோர்த்தனு

எம்மதமுஞ் சம்மதமெனப் பிள்ளையவர்கள் கொண்டது சிவபெருமானு லுண்டாக்கப்பட்டமையா லவைகளையி கழுதல் சரியன்றென்றும் எம்மதத்திலெவர் நிற்கின்றார்களோ அம்மத முத்தியை அவர்கள் அடைவ துண்மையாதலாலும் அங்ஙனம் அவர்க ளடையு முத்தி உண்மை முத்திகாறு மிறைவனால் ஒன்றன்பின்னொன்றாக மேன்மேலு மநுபவிக்கச்செய்து இருவினைகளுங்கழலுஞான்று ஞானசத்தியைப் பதியச்செய்து தானே குரவனு யருளுபதேசஞ்செய்து தன்னில் சேர்த்துக்கொள்ளுவான் என்னுந் துணிபினால் - இறைவனைச் சுட்டி "எம்மத னிலையு நின்னருணிலையி லிலங்குத லறிந்தனன்" என்று சிவபெருமானது கருணைத்திறத்தினை வருணித்திருத்தலை உணராது சாத்திர விரோதமாக இவர் கூறுமிது நிகமாகம விரோதமென்க.

பின் இராமலிங்கபிள்ளை தாமுஞ் சிவனுமொன்று என்று கூறுவதனால் அவர்க்கு முன்னே அந்த ஞானத்தை உணர்த்திவிடலாமன்றோ? என்றார். இதனால்சைவ சம்பிரதாயிகள் இருந்த வூரினுங் குடியிருந்தறியாதார் என்று நாம் நினைக்க இடமுண்டாகின்றது.

சன்மார்க்கிகள் சிவோகமெனப் பாவனைசெய்தலை வழக்கமாக உடையரென்பதனை இன்னவரறியார்போலும் "அகம்பிரமமென்று அமலனைத் தன்னுட்கண்டு சகலர்க்குப் பாசந்தடுத்து" என்ற சைவக் குறளினை யிவர் கண்டதேயில்லையோ? இக்குறட் குரை யெழுதியவராக வழங்குகின்ற ஆறுமுகநாவலர் அகம் பிரம மென்பதற்கு சிவோகம்பாவனை யென்று தானே பொருளெழுதியிருக்கின்றனர். தன்னைச சிவரூபமாகப் பழகாத சன்மார்க்கி முடிவான நிரதிசய இன்பத்தினையடையானோ?

"சித்தனும் பரமேசன் யானென்ற நிச்சயிக்கின்
முத்தனல னெனினுமவன் முத்தனாவன்"

என்று சிவபெருமானே உமாதேவியாருக் குரைத்திருத்தலை மறந்தற்கிவர் எழுந்தமையால் சிவபெருமானுக்குண்மையுபதேசஞ்செய்யத் தெரியாதென்று இவர் கருதினவராகின்றார். இவ்விதியறியாதவர்களென்றால் வாய்மூடிக்கிடத்தலே நலம். நாமீண்டுகோட்டியது சிவாகமமான தேவிகாலோத்தரம். இதனை அங்கீகரியோமென உரைப்பவர் சிவபெருமானையும் அவரருளிச் செய்த வேதாகமங்களையும் இகழ்ந்து சிவன் தேவனல்லன் ஒரு பிசாசு வேதாகமங்களென்பன அப்பிசாசால் உண்டாக்கப்பட்டன என்றிகழும் நவீன மதத்தினரான கிறித்துவர்களையன்றோ ஒப்பாவர்.

"அவமாய தேவ கதியி லழுந்தாமே
பவமாயங் காத்தென்னை யாண்டுகொண்ட பரஞ்சோதி
நவமாய செஞ்சுடர் நல்குதலு நாமொழிந்து
சிவமான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ"

என்று சமயாசாரிய சுவாமிகளான மாணிக்கவாசகப் பெருமான் தன்னையுஞ் சிவனையு மொன்றாகத் திருவாய்மலர்ந்தருளியிருத்தற் கென்செய்வர்.

சிவனுந் நானுமொன்றென்பதனை இவராபாசமாகக் கொண்டது தவறென வேத சிவாகமங்களானே மறுத்தாம. அவர்க்கு முன்னே யந்த ஞானத்தை யுணர்த்திவிடலாமன்றோ? என்ற வியனை சமயாசாரிய சந்தானாசாரியரிடத்துஉள்ளன்புள்ளவர் என்று எவரோ கருதுபவர்.பாவம் என்செய்யர் இராமலிங்கபிள்ளை பாடலுக்குக் கண்டனமொன்றெழுதினுல் தம்மைப் பலருமறிந்துகொள்ளுவர் என்றமாத்திரங் கருதியவராதலின் அஞ்சாது வரம்புமீறிச் சன்மார்க்க விரோதமாக அவர்க்குமுன்னே அந்த ஞானத்தை உணர்த்திவிடலாமன்றோ என்றார். அதனாது சமயாசாரிய சுவாமிகளையும் சந்தானாசாரியர்களையுமேயாம். சமயாசாரிய சுவாமிகளில் இன்னார் இன்ன இயல்பினர் என்பதையுணராத இன்னோர் இராமலிங்கபிள்ளையை சமயாசாரியருக் குபதேசஞ்செய்ய மாத்திரந்தானு உரைப்பர். காலக்கிரமத்தில் வேறு பல விதமாகவும உரைப்பர் இவ்வுலகில் நானுஞ்சிவனுமொன்றெனநின்றோர்இராமலிங்கபிள்ளையவர்கள் ஒருவர்தாமே ஒருவேளை இவர் பாடலைமாத்திரந்தான் இப்பூர்வபட்சநார் படித்திருப்பர் என்று நினைக்க இடமுண்டாகின்றது. பலவித சைவ சம்பிரதாயங்களைச் செவ்வனே உணர்ந்திருந்தால் இரப்பெரிய அபசாரத்துக்குள்ளாகார். சன்மார்க்க உபதேசவழியாற் சிவனையடைந்தவர் சிவனேயாவ டென்பதனை "எல்லாமறியு மறிவுதனை விட்டு எல்லாமறிந்து மிலாபமங்கில்லை, எல்லாமறிந்த வறிவினை நானென்னி லெல்லாமறிந்த விறையெனலாமே" என்றும் "ஆமாறறிந்தே னகத்தினாற்பொருள், போமாறறிந்தேன் புகுமாறு மீதென்றே, யோமப் பதிலையினி யோரிடமில்லை நாமா முதல்வனு நானெனலாமே" என்று திருமூலநாயனுர் யானுஞ் சிவனுமொன்றென்ற பிள்ளையவர்களுக்கு விதியளித்திருக்கின்றனர்.இவைகளை யெவ்வாறு மறுப்பர். பின்உணர்த்தினுல்அவர்கள் வாதங்கள் புரியவும் தேவார திருவாசக முதலியவற்றில் அவையிற்றைக் கண்டிக்கவும், மெய்கண்ட சாத்திரங்களை யியற்றிப் பொய்ம்மதப்புறவிருளை ஒழிக்கவும் போகாரன்றோ பிள்ளையவர்கள் அங்ஙனஞ் செய்யாது விட்டது விசனிக்கத்தக்கதேயென்றார். இவரறிவிருந்தபடி யென்னே? சமயாசாரியர்களை தங்களை யொப்ப வாதம்புரிந்தவர்கள் என்று கருதினர்போலும் ஞானசம்பந்தப் பெருமானைக்கொண்டு சிவபெருமான் அளவுமீறி நடந்த சமணர்களை அளவாய்நிற்குமாறு அடக்கினுரேயன்றி வேறின்றென்பதனை இவர் மறந்து கூறுகின்றனர். சமணர் அனைவரும் அழிந்திருந்தால் ஞான்றுஇ இத்தமிழ்நாட்டில் சமணர்கள் இருப்பார்களா? திருநாவுக்க

ச பெருமானைத் தன்புறமூறிய சமணர்களோடு அவர் வாதம்புரிந்தனரா? சிவபெருமானே அரசன் வழியாக அவர்களுழுக்கிணங்க நடத்தினர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் எங்கு அன்னிய மதஸ்தர்களுடன் வாதம்புரிந்தனர்? புத்தர்தம்மதக் கோட்பாட்டுக்குமீறித் தீயூழால் இராட்சசனான இராவணன் நகரமான இலங்கையினின்றும் போந்து ஸ்ரீ நடராசப்பெருமானையும் வைதீக சைவோத்தமர்களான தீட்சிதர்களையும் வேத சிவாகமங்களையும் இகழ்ந்து வாதிட வழைத்தமையால் ஸ்ரீ நடராசப்பெருமானது கட்டளையால் தீட்சிதர்களால் அரிதிலழைப்பிக்கப்பெற்று சிவாஞ்ஞையை யநுசரித்து புத்தரோடு அவரிட்டம்போல வாதபுரிந்து வென்றனர். இன்னும் பரபக்ஷம் அழிக்கத்தொடங்கினரா? இல்லை அந்நிலையுள்ளார்பண்டுசெய்த அகங்காரம் அடங்கின. "தோல்வியும் வெற்றியுந் தோன்றுமதஞ் சேர்வேலாங்காலபோதந்தி லுண்டுந்தீபற கருத்தர் சேயலக்கேற்றுந் தீபற" என்றும் வாதிடங்களுக் கல்லார் மதங்களுக் கோடாரிவலியின்மையுந்தீபற. ஓதியுணர்ந்தோரே ளுந்தீபற என்றும் சிவஞானபோதகாரர் முதலிய சுவாமிகள் கூறியிருக்கவும் னும் இவர்கள் அறிந்திருந்தால் புறமதங்களை அழிப்பதாக வரையார். மெய்கண்ட சாத்திரங்களுண்டாவதற்கு முன்னர் இத்தமிழ்நாட்டிலிருந்த பக்குவர் புறமத விருள் நமொறினர்போலும் குருவுணர்ந்த சிவானந்தப் பெருவாழ்வுடையத் தக்ககால சிறிதுமெய்சிவபெருமானை குருவாகி அவனை துமலமோசனஞ்செய்யச சிந்தமாயிருக்கின்றனர். சந்தானசாரியார் வழிநாயச் சைவசித்தாந்தத்துள் வெளியாகப் சித்தாந்த தாற்பரியத்தினை இறையன் பக்குவிகட்காக வெளியிடுவித்தனன். இதனில் நூலாசிரியர்கள் நாயே சில மதங்களின் முதலின் இயல்பினை விளக்கி சுயமதசித்தாந்தபாவனை மதம் எழுதிவைத்திருக்கின்றார்கள். ஒவ்வொரு சித்தாந்திகளும் பரபட்சங்களையு ரைத்து பூர்வபட்சஞ்செய்து சுயபட்ச ஸ்தாபனஞ் செய்கிற வழக்கம் இதனை பழைய நூலான மணிமேகலை யென்னும் புத்த நூலில் சமயக்கணக்கர் தந்திறமுரைத்த காதையுள் சாத்தனார் தாமே புத்தமன்றிபுள்ள மதங்களைப் பூர்வபட்சஞ்செய்துபுத்தமத சித்தாந்தப்படுத்தியிருக்கின்றனர். அதனுட்காண்க. இதனுல்பிறமதங்களெல்லாம் பொலிவிழந்துபுத்தமிறந்ததா? இல்லை. எந்தனை மதங்களைவருவித்துக்கண்டிக்கினும் அவை பொய்யாம். நூல்யு மேல்இவருரைமெய்யாம். எல்லாமதங்களையும் ஆன்மாக்களின் பக்குவத்துக் கேற்ப நமது சிவபெருமானே உண்டாக்கினனென்ப துண்மையாதலினவை யழிவெய்தா. ஆதலினிவருரை தவறென்க. சாத்திரங்கட்கும் சம்பிரதாயங்களுக்கும் விரோதமாய் தம் மனம்போனவாறு வரைந்து விடுத்த துப்பூர்வபக் கத்தார் விஷயத்தில் இவர் நூல்வடிம்புசடநடைதெழுதியது விசனிக்கத்தக்கதே யென இவரெழுதிய விசனிக்கத்தக்கதே என்பதனை இவருக்கே உபயோகப்படுத்தினும்.

பின் எம்மதமும சம்மதமென்று கூறிய் கிறிஸ்து சமயமும் சமணம் புத்தம் வைணவம் முதல் பசமயங்களும் இவர்க்குச சம்மதமாதல்வேண்டும் எலசாயா  சட ஆள் இல்லைடென்று கூறுவாரா   அதனை  சு

மதித்துக்கொண்டாராயின் உலகாயதரைக் கண்டித்ததென்னோ? அதனால் அத்தனையவர் சம்மதிக்கவில்லை யென்பதூஉம் அதுபோய வாதத்தை யென்பதும் பாவாகக்கும் புலப்படுமே என்னார் ஆட்சேபிக்கவந்த விவர்கள் சமாதானமும் உரைக்கின்றனர் இவருரைத் தாக்கே அனைவருக்கும் புலப்படும் என்றார் இந்த பூனை கண் மூடிக் பூலோகம் கண்மூடுமென்று கூறும் பேதைச் சிறுபான் கூற்றைப்போத் தாமே அன்றி அறிஞர் மொழிக்கேற்பார் காத

சமயத்துள் சமயத்தெல்லார்க்குங் காரணமென்றதனை இவர் அறிந்திருந்தாலிவ்வாறு குழறுபடையாகக் கூறார் பிள்ளையவர்கள் எல்லா மதங்களையும் தாநெடுப்பு கடவுளே செய்தனரென்பதை பிமாணமுந்தக்காலறிந்தவராதலின் சிவபெருமானைச் சுட்டி யாபாத நிலையு நின்னாநணிலையிலிலங்குதலறிந்தனர் எல்லாஞ் சமயத்துமாச் சிக்கொள்கின்றேனென்றார் இதனால் போதம் இழுக்கென்னே? எல்லா மதங்களுஞ் சிவபெருமானால் மைக்கப்பட்டதென உணர்ந்த இவ்வமேனி" மேறுமேவரன கோட்பாடுகளையுடைய மதங்களை தம் அத்தனை யாயிருப்பதென்னறு கருதிய அடியேன் அவைநின்த் கருணைடாநின்று நின் நிலைகினனருண்ணிலையாலறிந்தேன் நின்னருளை — மதங்கண் இல்லாதெதாயுமே வையழிந்தேயொழியுமாதலின் நினக்குச் சமயத்தான அமைதிகளிலடியேனுஞ் சம்மதபுத்தியுடையவனாக விருக்கச்செய்க கொள்ளுகின்றேன என்று கூறியதன்றி வேறொன்றுமன்றே. இம்மேதனை மெய்கண்ட சாத்திரமானது லோகாயத நூலை இந்தப் புறோகித் தனைத்தனென்று கூறியிருக்கின்றதே அது மெய்கண்ட நூலாயிறம் சிவபெருமான் லோகாயத நூலைச் செய்வாரா? இச் சிக்கு என இறைக்கிசைக்கா சிருப்பதற்கு ளகாநந் புராணத்துச் சூதசங்கிதையில் சிவபெருமானே லோகாயத நூலினை இயற்றியதென்பதனை உமைத் தத்தனைக்காட்டி விளக்கிட பின்னர் மாமைகளை பாரப்பவர்

கருகிருவிருந்தாரபனுக்கமேக மலவொழிபு மறைந்தம
யருகனுக்கமேபுத்தனுக்கமேமபறையுலோகாயிதநூலே
யருவுசாங்கியமேதருக்கசாத்திரமீமாஞ்சமேயிவைகளுயினனு
மருவிலத்துளபனுலகளுஞ்சுபம்மியெமபிரானபடைத்தனனமாதோ"

என்று கூறியது காண்க இவர் காட்டிய லோகாயிதமானது கடவுளையுண்டென்றுமெல்லன இல்லையென்று மெல்லன இறைவனாலாக்கப்பட்டிருத்தலாலதனை வெறுத்தல் அதாவது இகழுதல் கூடாது என்பதன்றோ பிள்ளையவர்கள் கருத்து

சிவபெருமானே அவ்லோகாயிதத்தினை உண்டாக்கி யிருந்தாலும் அதனை நாங்கீகரிக்கலாமோ என்னின் அங்கீகரிக்கலாகாது. ஏனெனின்

"வளங்கொணீர்ப் பிரவாகங்களுக் கொலிவாரிதி முடிவா யிருப்பதுபோ" விளம்பிறை முடித்தோ ளொருவனே முடிவாயிருப்பன்பன் மார்க்கங்களுக் கும். என்றது சுதஒளுலி மாலையாதலின் உலோகாயிதமும் சிவபெருமானை யே சென்றடையு முடிவின தாதலின் சம்மத மென்றமையா விழுக் கின்றென்க.

பின் இனி கிறிஸ்துமதஞ் சம்மதமாயின் சிவனை விடுத்து கிறிஸ்து என்று தோத்திரித்து அழவேண்டியதே என்றூர்.

சிவனை விடுத்துக் கிறிஸ்து என்றழுதால் எம்மதமுஞ் சம்மதமெனல் எங்ஙனமாகும் ஒரு மதத்தை விடுத்து மற்றொரு மதத்தைத் தழுவுதல் எம் மதமும் சம்மத மென்பார்க்கின் றூதலினிவருரை தவறுரை யெனக.

கிறிஸ்து மதமென வொன்றுண்டென எந்தமெய்கண்ட நூலில் கண்டார் எந்த சமயாசாரிய சுவாமிகள் வாய்மொழியா லறிந்தனர். பிராமணன் முதற் சண்டாளன் பரியந்தம் கிறிஸ்து மார்க்கப் பிரவேசத்தினை விரும்பி னுல் பின்னர் பிராயசசித்தம் இன்மையால் அதனைச்சேர விரும்புகிற தில்லையே. பிரவேசித்தவர்களை சைவசமயத்திற் சேர்க்கிறவழக்கம் என்றும் இல்லை அன்றியும் கிறிஸ்து மதமானது பாரதவருஷவாசிகளின் மதமன்று. பசு முதலியவைகளைக் கொன்று தின்னுகிற சனங்களின் மதம். இதனில் இவர்களுக்கு இவ்வளவு நெருங்கிய புத்தி யுண்டானது விசனிக்கத் தக்கதே யாம். எம்மதமு மென்று பிள்ளையவர்களும் பிறரும் உரைப்பதெல்லாம் வே தாகம பிரதிபாத்தியமான மதங்களையே யாம். இம்மரபறியாத இன்னோர் சிறுபிள்ளைத் தனமாய் மனம்போனவாறு கூறுவதனை எந்த சன்மார்க்கி யும் அங்கீகரியா னென்க.

சில தீவாந்தரங்களில் உள்ளவர்களான சனங்கள் சிலகாலங் கிறிஸ்த வர்களாகவும் சிலகாலம் சைவர்களாகவும், இருக்கின்றூர்கள் என்று சில ஆதாரங்களால் அறிகின்றோம். அன்னவர் கொள்கையை இன்னோர் தழுவி னவர்கள்போல சிவனைவிடுத்து கிறிஸ்துவென் றழவேண்டியதே என்றது பரிதாபகரமானதே. எம்மதமும் என்பதனில் கிறிஸ்துமதஞ் சேராதுஎன்று முன்னரே காட்டினும்.

கிறிஸ்துமதஞ் சம்மதமென்னு மிவர்க்கா திருவருட் பிரகாச வள்ளலார் என்ற பெயரும் இப்படிப்பட்டவர் பாடல்களுக்கா திருவருட்பா என்ற பெயரும் இட்டனர் அந்தோ! கொடுமை கொடுமை என்றூர்.

பிள்ளையவர்கள் கிறிஸ்துமதஞ் சம்மதமென்று கூறியதற் கிவர்கள் யா தொருபிரமாணமுங்காட்டாமையாலும்.இவர்க்கா திருவருட்பிரகாசவள்ளல் என்ற பெயரும் இவர் பாடல்களுக்கு திருவருட்பா என்ற பெயரும் இட்

டனர். என வாளா கூறினரே யன்றி இவ்விடத்துத் தக்க காரணங்கூறு தொழிந்தமையானும் அவை வெற்றுரை யென்க.

பின் கிறித்துமதஞ் சம்மதமென்று கொண்டமையினாலோ பிணங்களைச் சுடவேண்டாம் புதையுங்கள் எனக்கூறியும் செத்தவர்கள் உயிர்த்தெழுவாரென மருட்டியும் வேதாகமங்களை நிந்தித்தும், கிறித்தவர் தமது பைபிளுக்குச் சத்தியவேதம் எனவும் லேவியாகமம் எண்ணாகமம் என்றின்னவாக ஆகமம் எனவும் வைத்ததுபோல இராமலிங்கப் பிள்ளையும் தமது பாடல்களுக்குச் சமரசவேத மெனவும் திருமுறை எனவும் பண் நட்டராக மெனவும் வைத்தும் தம்மைக் குமாரனென் றுரைத்தும் சாதிகளும் ஆச்சிரமங்களும் பொய் என்றுங் கூறினர். அன்றியும் அவர்சன்மார்க்க புத்தக சங்கத்தார் என்பது போலத் தாமும் சன்மார்க்க சங்கத்தாருள் ஒருவனென்றும் பரமண்டலங்களில் எங்கள் பிதாவே! ஆண்டவரே!! என்று கண்கள்மூடிக் கத்தும் கிறிஸ்தவர்கள்போல இராமலிங்க பிள்ளையும் சன்மார்க்க சங்க சத்திய விண்ணப்பமென்றும் சுத்த சன்மார்க்க சத்தியப் பெரு விண்ணப்பம் எனவும், சமரச சுத்த சன்மார்க்க சத்திய விண்ணப்பமெனி மூவகை வசனங்கள்செய்து சிவபெருமானுக்குரிய சிறப்புப் பெயரொன்றுங் காட்டாது அருட்பெருஞ்சோதி யாண்டவரே! அருட்பெருஞ் சோதித் தனிப் பெருங் கடவுளே! சுத்த சன்மார்க்கலட்சிய சத்திய ஞானக்கடவுளே! என்பன முதலாக எழுதியுள்ளார் என்றார். இவர் சைவசம்பிரதாய முணர்ந்தவரையொப்ப துணிந்தெதனையு முரைக்கின்றனர். பிணங்களைச் சுடவேண்டாம் புதையுங்கள் என்றமையானே பிள்ளையவர்கள் கிறித்துமத நம்பிக்கையுடையவரானால் பிணங்களைப் புதைத்த சைவரனைவரும் கிறித்தவமத நம்பிக்கையுடையராக வேண்டும்.

சந்தானாசாரியருள் முதல்வரான மெய்கண்டதேவர் சரீரத்தினை திருவெண்ணெய் நல்லூரில் புதைத்தனரேயன்றி தகனஞ்செய்திலர். அந்த சமாதி இன்னம் அடையாளமாக இருக்கின்றது.

திருவாவடுதுறை நமசிவாய மூர்த்திகள் சரீரத்தினை திருவாவடுதுறை மடத்துள் புதைத்து வைத்திருக்கின்றனர். இவ்வாறே திருவாவடுதுறை மடத்தவர்களான தம்பிரான்கள்சரீரங்களையும் ஆசாரியர்களான பண்டார சன்னிதிகள்சரீரங்களையும் சிவஞானயோகிகள்கச்சியப்பமுனிவர்என்பவர்களின்சரீரங்களையும்முறையேதிருவாவடுதுறைகாஞ்சிபுரங்களில்புதைத்துப் பூசித்துவருகின்றனர். தருமபுரவாதீனத்தார்களான துறவிகளனைவர்களின் சரீரங்களும் மரணத்திற்குப்பின் புதைப்பதுவழக்கமாதலும்இவ்வாறே சிவப்பிரகாசசுவாமிகள் சாந்தலிங்கசுவாமிகள் குமாரதேவசுவாமிகள் குமரகுருபரசுவாமிகள் சிதம்பரசுவாமிகள்முதலிய ஆன்றோர்களின் சரீரங்களை அவர்களின் மரணத்திற்குப்பின் புதைக்கப்பட்டனவேயன்றிச் சுடப்படாமையாலும்.

விசாகப்பெருமாளையர் சரவணப்பெருமாளையர் சபாபதையர் முதலிய வீரசைவர்களின் சரீரங்கள் புதைக்கப்பட்டிருத்தலாலும் இப்பூர்வபக்கத்தாரிற் பலர்க்காசிரியரெனவிருந்தஏகாம்பர சிவயோகியவர்களின் சரீரத்தினைகாஞ்சி,காயாரோகண தீர்த்தக்கரையிற்புதைத்தமையாலும்இன்னோரனைவரும் சித்தாந்தமதத்தினை மெய்யென நம்பியவர்களாகவன்றோவாக வேண்டும். இவர்களையெல்லாங் குறைகூறினால் இவரைச் சைவசித்தாந்த முணர்ந்தவராக எவரேயோ மதிப்போர்.

சைவருளுயர்ந்தோரான துறவிகளின் சரீரங்களையொப்ப அனைவருடலங்களையும் புதைத்தல் நலமெனப்பிள்ளையவர்கள் விரும்பியது சைவசம்பிரதாய பரிசயத்தானேயாதலின் இவருரை வெற்றுரையென்க.

சைவர்கள் பிணங்களைச் சுடுதலையும் சித்தர்கள் பிணங்களைப் புதைத்தலையும் கண்டுங்கேட்டு முள்ளவராதலின் புதைத்தற் சடங்கு சித்தர்க்கே யுரித்தென நாதன்பர்மயங்கிக் கூறிவிட்டனர். என்செய்வர் அவையறிந்ததனைக் கூறினர். கூறியது தவறுதலின் வழக்கங்காட்டி மறுத்தாம்.

சைவர்களி னுடலத்தினைப் புதைக்குமாறு ஸ்ரீமூலயோகிகள் திருமந்திரத்துள்,

> "அந்தமின்ஞானிதன் னாகந்தீயினில்
> வெந்திடினாடெலாம்வெப்புத்தீயினில்
> நொந்ததுநாய்நரிநுகரினுண்செரு
> வந்துநாய்நரிக்குணவாகும்வையமே" எ - ம்.
>
> எண்ணிலாஞானியுடலெரிதாவிடி
> லண்ணறந் கோயிலழிவிட்டதாங்கொக்கு
> மண்ணின் மழைவிழாவையகம்பஞ்சமாம்
> எண்ணருமன்னரிழப்பாரரசே. எ - ம்.

சிவஞானிகளி னுடலங்களைத் தீயிலிட்டெசுட்டால் நாட்டிற் சுரநோய் பரவுமெனவும் நாயுநரியுந் தின்னவிட்டால் நாட்டிற் கலகமுண்டாகி மற்றையருடலநாய் நரிதின்னநேரு மெனவும் சிவஞானியின் சரீரத்தினைத் தீயிலிட்டுக் கொளுத்தினால் சிவாலயத்தினை நெருப்பிட்டழித்ததற் கொக்கும் அன்றியும் மழை குன்றும் நாட்டிற் பஞ்சமுண்டாகும் அரசினர் தங்களரசினை யிழப்பர். எ-ம். கூறியிருக்கின்றனர். இக்கருத்தினை யுத்தேசித்தே பிள்ளையவர்கள் சுடுவதனிலும் புதைப்பதே சிறந்ததென்றார் ஞானியர்க்கன்றோ இச்சடங்கெனில் ஞானியையும் அஞ்ஞானியையு மறிவதெங்ஙன் சுடுவதனாலறியாதுதீங்குநேரும். புதைப்பதனாலங்ஙன நேரிடாதாதலின் அவ்வாறு கூறினர்.

"புண்ணிய மாமவர் தம்மைப் புதைப்பது
நண்ணிய னல்கோக்கி னூட்டி வழிவாகும்
மண்ணி லழியி லலங்கார பங்கமாம்
மண்ணுல கெல்லா மயங்குமனன் மண்டியே."

என்று சைவருடலைப் புதைப்பதுபுண்ணியமென சைவாக்கிரரானதிரு மூலநாயனார் கூறியிருத்தலையறியாதிவர் கிறித்தவக்கொள்கையே புதைத்தலென்றுகூறியது தவறென்க.

இந்நாட்டுச் சைவ சாம்பிரதாயிகளிலெவரு மிவ்வளவு நுணுக்கமாக கிறித்து மதவுட்செயல்களை உணர்ந்திரார்; காரணம், இவர்கள் கிறித்தவப் பள்ளிகளில் பிரவேசிக்கிற வழக்க மின்மையாலும் கிறித்தவர்களைத் தொட்டால் குளித்தல் முதலியவைகளால் தூய்மை செய்து கொள்ளல் வேண்டுமென்னுங் கட்டுபாடுடைய ராதலானும் கிறித்தவர் கண்மூடிக்கத்தும் வழக்கத்தினை யறியார். நமது பூர்வபக்கத்தார் கிறித்தவர்களின் மத நூல்களை நன்குயறிந்தவர்களும் சடங்குகளை யருகிலிருந்து கண்டவர்களும் அவைகளில் நீண்ட அநுபவ முள்ளவர்களுமாக அவர்கள் அம்மத உண்மைகளிலுள்ள சில சடங்குகளை அறிந்துரைத்தலால் அறியலாம். நிற்க. கிறித்தவர்கள் தங்கள் பைபிலுக்கு சத்தியவேதம் என்றதனை யொப்பிப் பிள்ளையவர்கள் தமது பாடல்களுக்கு சமரச வேதமெனப் பெயரிட்டிருக்கின்றனர் என்பது பொருத்த மற்றதேயாம். சத்திய வேதத்துக்கும் சமரச வேதத்துக்கும் என்ன சம்பந்தம். லேவியாகமம் எண்ணாகமம் என்பவைகளுக்கும் திருமுறை பண் நட்டராகம் என்பவைக்கும் என்ன சம்பந்தம். தம்மைக் குமாரனென்றதற்கும் கிறித்தவ மதத்துக்கும் என்ன சம்பந்தம்.சாதிகளும் ஆச்சிரமங்களும் பொய் என்றதற்கும் கிறித்தவமதத்துக்கும் என்ன சம்பந்தம். சன்மார்க்க புத்தக சங்கத்தார் என்பதற்கும் சன்மார்க்க சங்கத்தாருள் ஒருவன் என்பதற்கும் என்ன சம்பந்தம். பரமண்டலங்களில் எங்கள் பிதாவே என்று கண்கள்மூடிக் கத்துங் கிறித்தவர்களுக்கும் சன்மார்க்க சங்க சத்திய விண்ணப்ப முதலிய மூவகை விண்ணப்பங்களுக்குமென்ன சம்பந்தம். அருட்பெருஞ் சோதி யாண்டவர் என்பது சிவபெருமானுக்குரிய சிறப்புப் பெயரன்றி கிறித்துவுக்குரிய சிறப்புப் பெயராக எங்ஙனமாகும். அருட்பெருஞ்சோதி என்பதற்கு, கருணைப் பிரகாசன் ஞானப் பிரகாசன். என்பன வாதியாகக்கொள்ளப்படும் பொருளுக்குரியன் சிவபெருமானன்றோ? அருட்பெருஞ் சோதி என்றும் அருட்பெருஞ்சோதித் தனிப்பெருங் கடவுளென்றுங் கூறுதல் கிறித்துவுக்கே உரித்தானால் அருட்பா, அருட்பிரகாச வள்ளல் என்பன எமது சிவபெருமானுக்கே உரியன என்று இவர்கள் சண்டையிடுதல் எதைக்கருதி. சைவர்கள் எங்கள் கடவுளின் சிறப்புப் பெயரினை எடுத்தாளுதலடாது என்று சண்டையிட வேண்டியவர்களாமாறு இவர்களே கிறித்தவர்களுக்கு வழிகாட்டுகின்றனர். எவர் வாளா தூண்டினும் எவர் சண்டை யிடுகினும் அருட்பெ

ருஞ் சோதி யாண்டவன் அருட்பெருஞ் சோதித் தனிப்பெருங் கடவுள் சுத்த சன்மார்க்க லக்ஷிய சத்திய ஞானக் கடவுள் என்பன, சிவபெருமானுக்கே யுரிய காரணச் சிறப்புப் பெயரென பிள்ளையவர்கள் அறிந்தவராத லின் அவ்வாறு கூறினர். சைவநூற் பழக்கமுடைய எவரும் இதனை மறுக்க விசையார்.

தமிழ் வேதமானது சிவபெருமானை சோதியே! சுடரே! சூழொளி விளக்கே! என்று கூறியிருத்தலை யுணர்ந்தவர்கள் அருட்பெருஞ் சோதி. என்பது சிவபெருமானுக்குச் சிறப்புப்பெயரன்று என வுரையார். நிகண்டும் பெருமானுக்கு. "சோதியெனச் சிறப்புத் திருநாமம் இருப்பதை விளக்கு கின்றது. பிங்கலம். "சோதி சம்பு சூலி பிஞ்ஞகன்" என்றுரைத்தல் காண்க. சித்தாந்த சாராவளியும், "சிவாக்யமகலம் ஜோதி: ப்ரபத்யே. என சிவபெருமானை - சிவமென்னும் பெயருள்ள நிஷ்களமான எங்கும்பரி பூரணப் பிரகாசமான தேஜஸை த்யானிக்கின்றேன் என்று கூறுதலால் பிள்ளையவர்கள் அட்பெருஞ்சோதி யாண்டவ னென்றது சிவபெருமானை யேயா மாதலின் இவர் கிறித்தவ மார்க்கானுசாரியாகப் பிள்ளையவர்களைக் காட்டியது கிறித்தவ நூல்களிற்போல சைவநூல்களிற் பரிசய மின்மையா லென ஒதுக்கிறும்.

பின் - புத்தர் முதலிய சிலர்க்கு உயிர் என்ற பொருளும் கடவுள் திரு வருள் என்பனவும் பொய்யாய் இருத்தலால் இவரெவ்வா றெப்பினரோ தெரிகிலேம் என்றார்.

"தொழுது வானவரும் போற்றத் தொல்பிடகங்களான
வழுவிலாகமங்கள் சொன்ன மாதவனுதனுவான்"

என்று மெய்கண்ட சாத்திரமானது தேவர்களுள் தொழுது துதிக்கப் பட்டவரும் பழைய பிடக நூலாகிய விகழ்ச்சி யில்லா வாகமங்களை யரு ளிய புத்தமுனியேகத்தா வாவான் என்று கூறியிருத்தலின் புத்தர் கடவுளை யில்லையென்று ரென்பதும். "பழுதிலா வருளினாலே பரதுக்க துக்கனுகி" கெடாத வருளினையுடையனு னெனக் கேட்கப்படுதலால் அருள் பொய் என்பதனையும் புத்தர் கொண்டார் என்பது தவறு. நிகண்டில் சிவன்முத லிய தேவர் பெயர் கூறும் வரிசையில் புத்தன் பெயருங் கேட்கப்படுதலால் புத்தர் புத்தனைக் கடவுளெனக் கொண்டவரல்லர் என்றார் என்பது எங்ஙனம்.

பிங்கல நிகண்டானது, இரண்டாவது வானவர் வகையுள். புத்தன் பெயரினை. பார்மிசை நடந்தோன் பகவன் புங்கவன். என்பன வாதிமொ ழிகளால் புத்தக் கடவுளை யுரைத் திருத்தல் காண்க. தமிழ்வேதமும் "புத் தன் புரந்தராதி யயன் போற்றிசெயும் பித்தன்". எனச் சிவனை வழிபடுவ

னாகவே புத்தனை கூறியிருத்தலின் புத்தன் கடவுளை இல்லை யென்றவ னாகான் இல்லை யென்றவனே என்றால் மறுத்தற் கிசையாத தமிழ்வேதந் தவறுடைய தாகும். ஆதலினிவருரை யிந்தப் புத்தன் விடயத்தில் வெற்று ரையென்க. இல்லை இல்லை இலங்கை பர்மா சீனாதிகளிலுள்ள புத்தர் களை யாமறிவோம். அவர்கள் கடவுள் இல்லை யென்பவ ரென்பீரேல் அவர் கள் கொள்கையை நீவிரும் ஆதிப் புத்தன் கொள்கையைப் பிள்ளையவர் களும் கருதிநிற்பவர்க ளாதலின் பொருந்தாமையுணர்க. புத்தனையொப்ப உயிருங் கடவுளுந் திருவருளும் இல்லை யென்னுஞ் சிலர் யாவர் அவரைத் தேடியெடுத்து எழுத நேரமின்மையால் விட்டனர்போலும் ஒருவேளை மா னுஷீக மதத்தினரை யெவரையேனும் இவர் காட்டின் மரபறியாது கூறுத லடாது என மறுக்கச சித்தமா யிருக்கின்றோம். எவ்வா றாயினரோ அறியோமென்ற விவர்கள் பிள்ளையவர்கள் கருத்தினை அறிந்தவால்லவென் பதனை இதுகாறுங் காட்டிய பிரபல நியாயங்கள் நிலைநிறுத்தும்.

பின் மார்க்கமெலா மொன்றாகும்மாநிலத்தீர் வாய்மையறிந்து மாநிலத்தி லொன்ற பாடலடிகளை வரைந்தனா

இதுகான் பிள்ளையவர்கள் பாடலிலியா எமமதமுஞ் சம்மத மென்ப தற்குத் தேடியெடுத்த முதற்பாடல்.

> " அன்றென்றுமா மென்றுமாறு சமயங்கள்
> ஒன்றொன்றோ டொவ்வா துரைக்கநாலு. மென்று
> மொருதனையே நோக்குவா ருள்ளத் திருக்கு
> மருதனையே நோக்கி வரும்."

என்ற பதினோராந் திருமுறையை அங்கீகரிப்பவர்களானால் இவர்களிதனு லடங்கி நிற்பார்களாக.

இராமலிங்க பிள்ளை யவர்களுக்கு முன்னரே பட்டினத்தடிகள் எல் லாச சமயப்பொருளும் சிவபெருமானையே அடையும் எனக் கூறியிருத்த லால் பிள்ளையவர்க ளிவ்வாறு புதிதாகக் கூறியவ ராகார். பட்டினத்தடி கள் தாயுமானவர் திருமூலா முதலியவாகளைக குறைகூற வேண்டிய இன் னோர் அவாகள் வழிநின்ற பிள்ளை யவர்களோத தவறுடைய ரென்னல் தவறேயாம்.

எம்மத நிலையும் என்னும் பாடலடியையும், அகம்புறமற்றை யகப்புற மென்னும் பாடல்களி னடிகளையும் எம்மதமும் சம்மத மென்றவர் கூறிய தற்கு குறித்திருக்கின்றனர். இவை யனைத்துக்கு நாங்காட்டியபதினோராந் திருமுறை திருமந்திரம் தாயுமானவர் முதலிய சைவநூல்களே பிள்ளையவர் களின் பட்சத்தைத் தாபித்து இவர்கள் பட்சத்தைப்பூர்வபட்சப்படுத்தியது காண்க.

பின் எம்மதமும் எக்கக் கோட்பாடும் என்று தொடங்கி அவர்காலத் திருந்த மகாவித்வசிரோமணிகள் பலர் நமக்கு திருவருட்பிரகாசவள்ளலார் முதலிய பெயரும் நம்பாடலுக்கு திருவருட்பா திருமுறை என்ற பெயரும் சிறிதும் பொருந்தா என்றும் தருக்க நியாயங் காட்டியகாலை அக்கோட்பாட்டிற்கு எவ்வாறு சம்மதப்படாது அவர்களை நிந்தித்திருந்தார் என்றார்.

எம்மதமுஞ் சம்மதமென்று இறைவன் திருவருள் வலத்தாலுணர்ந்தே னென்ற பிள்ளையவர்களிடம் அநேகம் வித்வசிரோமணிகள் வாதாடினர் போலும். யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலரவர்கள் எழுதியதென வழங்கிவருகின்ற போலியருட்பா மறுப்பென்னும் சுவடியின் மறுப்பான குதர்க்காரணிய நாசமகாபரசு என்னு நூலில் பிள்ளையவர்களைக் காஞ்சிபுரம் சபாபதிமுதலியார் திருத்தணிகை விசாகப்பெருமாளையர் அஷ்டாவதானம் வீராசாமிசெட்டியார் சோமசுந்தரம் நாராயணமுதலியார் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் தேவிக்கோட்டை முத்துசாமிப்பிள்ளையவர்கள் முதலிய பெரும்புலவர்களும் திருவாவடுதுறைத் தாண்டவராயசுவாமிகள் மதுரைத் திருச்சிற்றம்பலசுவாமிகள் சிதம்பர சுவாமிகள் முதலிய மகாவித்வசிரோமணிகளுஞ் சாலப்புகழ்ந்தார்களென்று தாமெழுதியிருந்ததை இக்குழுவினர் அறியார்போல இந்நாட்டுப் புலவரெல்லாம் பிள்ளையவர்களோடு பகைத்து நம்பாடல் திருவருட்பாவாகா நமக்குத் திருவருட்பிரகாசவள்ளல் என்னும் பெயர் சாலாது எனத் தருக்க நியாயங்காட்டித் தண்டித்தனரென்னல் முழுப்பொய்யான விஷயமேயாம். சுக்கிலவருஷம் ஆனித் திருமஞ்சனகாலத்து மகாசனசபையில் ஆயிரக்கால் மண்டபத்தில் பிள்ளையவர்களுடன் வாதப்போர்புரியத் தீர்மானித்தபடி மயிலாப்பூர் திருஞானசம்பந்தையர் சிதம்பரம் திருவேங்கடம்பிள்ளையவர்கள் முதலிய செளரிய புருஷர்களின் வழிகாட்டியாயமைந்ததற்கு ஆறுமுகநாவலர்வாதிடவராதொழிந்துவிட்டனரென எழுதியிருந்ததை இவர் அறியார்போலும். பிள்ளையவர்களின் நுண்ணறிவான அக்கினிமலை இவர்களின் குதர்க்கப் பஞ்சுப்பொதிகளை ஒருகணப்பொழுதிற் சுட்டெரிக்குமென்பதனை இவர் அறியாதவராதலின் ஆறுமுகநாவலரையுள்ளிட்ட பூர்வபக்கத்தார் வாதிட்டனரெனக் கூறினார்.

ஒருவர்க் கெம்மதமுஞ் சம்மதமாகுமெனவே வலங்கொண்டுணர்ந்த பொருள்களை எத்தையுஞ் சம்மதமென்று கொள்ளல் வேண்டுமென்று இவர்கள் கருதுகின்றார்கள் அங்ஙனமாயினும் இவர்கள் கோட்பாடு எம்மதத்தோடும் சம்மதமானதன்றே. ஆகாதபோது பிள்ளையவர்கள் எங்ஙனஞ்சம்மதிப்பர். மாதாவையும் ஒருதன்மையென்றல் மனைவிக்கும் மாதாவிற்கும் மகட்கும் வித்தியாசமின்மையாகக் கருதியதைக் கடிக்க முயல்பவனை யொக்கிறது வருந்தவறிஞர். நியாயங்காட்டி வாதிக்கா பெருவருத்தன்மையாமன்றோ நியாயங் காட்டினரில்லையென்றார் பண்டைப்போர

பிள்ளையவர்களெவரையு நிந்திக்குமியல்பினரன் றென்பதற்கு சான்றும் வேண்டுமோ? பிறரை நிந்தனைசெய்தலையே தொழிலாகவுடையவர்கள் பூர்வபக்கத்தினரேயாவர்.

பின் இவற்றுனே எம்மதமுஞ் சம்மதமென்றது கல்விகேள்வியிலார் சொல்லுமூடக்கொள்கை என்றும் சமயங்கள் பேயாட்டமென்று வெறுத்தவர் பின்னர் இவ்வண்ணமுரைத்தமை முரணுமென்றும் இவர் திருவருட் பிரகாசவள்ளல் திருவருட்பா என்றமை பொருந்தா என்ற காலை அவற்றை யொப்பாததனுல் இதுவும் பொய் என்று முணர்க. என்றுர். பிஷ்டபேஷணமாய் முன்குழறி வழிந்தனவற்றையே பின்னரும் குழறிவழிந்தனர். முன்னுரைத்தவற்றுக்குப் பின்னுரைத்தவை முரணினமையானேயது பொய்யாகாதென்பதற்கு முன்தமிழ்வேத வுதாரணங் காட்டினும்.

திருவருட்பிரகாசவள்ளல் திருவருட்பா வென்பவை இவர்க்கும் இவர் நூலுக்குங் கூடாமைக்கு இங்கு பூர்வபக்கத்தார் நியாயங்காட்டாமையால் யாமும் இவர்க்கும் இவர்பாடலுக்கும் திருவருட்பிரகாசவள்ளல் திருவருட்பாஎன்பன பொருந்தும் என அநேக வித்துவசிரோமணிகள் பதினுரைத் திருத்தலைக்கண்டுள்ளாராயி னிவ்வாறுகூறுரென இவரதிக்கூற்றினைவெறுப கூற்றென விலக்கிமறுத்தாம்.

எம்மதமும் சம்மதமென்றல் சரியாமா? என்றதற்குச் சரியாகுமென்றும் சைவசித்தாந்தமொன்றே மெய்ச்சமையமென்றுல் விவாதஞ்செய்ய வேண்டுமென்றது தவறு என்றும் அற்புதங்காட்ட வேண்டுமென்றதற்கு அது மரபறியாதார் கூற்றென்றும் பயந்தவர் என்றதற்கு பயப்படவேண்டியவர்கள் பூர்வபக்கத்தினரே என்றும் சிலமூடர் உலகைக்கெடுக்கின்றனர் என்பது தவறு என்றும் உலகாயதாதி மதங்களை ஒப்புவது சரியாமாவென்றதற்குச் சம்மதமாகும் எனவும் கிறித்தவமார்க்கம் இவர்க்குச் சம்மதமா என்றதற்கு அது அன்னியதிவாநதரவாசிகளின் மதமாதலாலதனை அங்கீகரிக்க வேண்டியவர்கள் பிள்ளையவர்களல்லர் என்றும் அதன் சம்பந்தவிடய மனைத்தும்முரணுந்தவறு மெனவும், அருட்பெருஞ்சோதியாதிநாமங்கள் சிவபெருமானுக்கே உரித்தென்றும் - புத்தர்முதலியர் கூற்றிலிவர் பட்சந் தவறென்றும் இவர் குற்றமென்று காட்டிய பாடலையொப்ப திருமூலர் பட்டினத்தார் தாயுமானவராதி மேலோர் பாடியிருத்தலால் தவறென்றது தவறென்றும் வித்வசிரோமணிகள் வாதிக்க வந்ததும் நியாயங்காட்டியதுந் தவறென்றும் எம்மதமுஞ் சம்மதமென் றவர் எல்லார் மொழிகளையுஞ் சம்மதமாகக் கொள்ளவேண்டுமென்றது பிதற்றென்றும் காட்டினமையின் தமிழ்வேதம், திருமந்திரம், பதினேராந் திருமுறைமுதலிய பிரபலசுருதி நியாயவச்சிரகுடாரியினுல் இராமலிங்கபிள்ளைபாடல் ஆபாசதர்ப்பணத்தின் உரு- உச உகிலும் பக்கத்துள்ளவிஷயங்களனைத்தும் எற்றுண்டு கெட்டமைகாண்க.

## பிள்ளை புத்தமதப் பித்தமுங்கொண்டார் என்பதன் மறுப்பு.

பிள்ளை புத்தமதப்பித்தமுங் கொண்டார் என்றதலைப்பின்கீழ், கருங்குழியார் தேவார திருவாசகங்களிற் புத்தமதத்தைக் கண்டித்திருப்பதைக் கண்டு என்று தொடங்கி பன்னிருதிருமுறைகளாம் அருட்பாக்களை யோதியுய்யும்படியே யாம்வற்புறுத்தவந்தேம் எனவுரைத்திருக்கின்றனர் இவர்காட்டியவனைத்தும் சைவசாத்திர ஆராய்ச்சியற்ற சாமானியர் அபிப்பிராயத்தினும் இழிந்தன வாதலினவைகளை அவலமானவையென வொதுக்கியப்பாற் போகலாமெனின் சமயவாராய்ச்சியற் றாருட்பலர் இந்தபாகத்தினை மறுக்க வலியின்மையாற் சாக்குரைக்கின்றன ரென்பதனை யகற்றிப் பிதிக்ஞா விரோதமின்மையை நாட்டி மறுத்தலேநலமாகும்.

இவர் சிதம்ப ம் இராமலிங்கபிள்ளை யெனவனைவரும் உரைக்குமாறுரையாது கருங்குழி இராமலிங்கபிள்ளை யெனவுரைத்தலின் சிதம்பரசத்தத்தினை இவர் வாயுரைக்கவும் கையெழுதவும் அஞ்சுகின்றதென்றே நினைக்க வேண்டும். பிள்ளையவர்கள் கருங்குழியாரல்லாரென போலியருட்பா மறுப்பின் மறுப்பான குதர்க்காரணியநாசமகாபரசு நூலார் அனேக நியாயங்களைக் காட்டியிருத்தலை முன்சரிதம் பொய் என்றதனை மறுத்த இடத்துக் காட்டினோம்.

கருங்குழியார் தேவார திருவாசகங்களில் புத்தமதத்தைக் கண்டித்திருத்தலைக்கண்டு அதற்கு எதிராக புத்தமதத்தைப் போற்றிக் கூறுகின்றார். என்றார். இதனால் பிள்ளையவர்கள் தேவார திருவாசகங்களின் வைரியான புறமதக் கொள்கையினரென இவர்கள் கருதினவர்களாகின்றார்கள். எந்தவகையிலேனும் பிள்ளையவர்களை இகழவேண்டுமென கங்கணங் கட்டிக்கொண்டவிவர்கள் தம்மனதுக்குஞ் சம்மதமற்றஆபாசவிஷயங்களை யுரைக்கின்றனர். பிள்ளையவர்கள் தேவாரதிருவாசகங்களில் கண்டவிஷயங்களுக் கெல்லா மாறுவிஷயமெழுதாது தேவாரதிருவாசகவிரோதமான புத்தமதமொன்றைமாத்திரம் போற்றிக் கூறினாரென்பது எவ்வளவுதூரம் பொய்யாகாது நிற்கின்றது பார்க்கலாம். தேவார திருவாசகங்களைத்தமது ஆன்மார்த்த நூல்களாகக்கொண்டுள்ள பிள்ளையவர்கள்அவைகளுக்குவிரோதமாக புத்தமதத்தைப் போற்றுவாரா? அந்தரங்கத்தில், நாஸ்திக புத்தமதாவலம்பிகளாக வுள்ளவர்கள் பூர்வபக்கத்தா ராதலின் அவருரை வெற்றுரையென்க.

பின், தேவார திருவாசகங்கள் சைவர்க்கு மாத்திர முரியவேதம். தம்முடைய தாழ்வாராக தெருவாசகப்பாடல்கள் எல்லார்க்கும் பொதுவான சமரசவேதம் என்றதை மெய்ப்பித்தற்கோ, புத்தமதத்தையும் பிடகத்தையும் வியக்கின்றார், என்றார்.

இப்பூர்வபக்கத்தார் சிவபெருமானையே துதித்த பாடல்களால்நிரம்பப் பெற்ற புத்தகத்தினைத் தாழ்வாரத் தெருவாசகப்பாடல் என்றமேதஇவர்கவி ன் பத்தித்திறத்தினை பரக்க விளக்குகின்றது. புத்தமதத்தையும் பிடகததை யும் குறிப்பால்வியந்து தம்மனநிலையைவெளியிட்ட வரின்னவரேயன்றிப் பிள்ளையவர்களல்லர்.

பின் வியக்கின்றதுமட் டோ புத்தமதத்தை யநுட்டிககுமாறு உண்டாக்கிய செத்தொழிந்த புத்தனையும் துதித்துக் கூத்தாடினார் அது. "புத்தந்தருபோ தா வித்தந்தருதாதா. நித்தந்தரும்பாதா சித்தந்திரும்பாதா" என்று கூறிய தனாற் கரதலாமலகம்போற் காணப்படும் என்றார்.

புத்தமதத்தையும் பிடகத்தையும் வியகின்றார் என்றியாகளா கூறிவிட் டால் இல்லாது சொல்லுவார்களா? என்னும் அறிவிலிகளையன்றி விவே கமுள்ளவர்கள் அங்கீகரிப்பார்களா? புத்தமதத்தையும் பிடகத்தையுமபாட லாற் புகழ்ந்திருந்தால் இன்ன இன்னபாடல்களால் புத்தமதத்தையும் பிட கத்தையும் புகழ்ந்தனர் என்று காட்டியிருப்பர். அங்ஙனம் பிள்ளையவர்கள செய்த பாடல்களைக் காட்டாமையால் அவ்விருவிஷயமுந் தவறென்க. பிள் ளையவர்கள் சிவபெருமானது கலியாணகுணங்களை வருணித்து அம்பலத் தரசேயருமருந்தே - யானந்தத்தேனே யருள்விருந்தே, நடராசர்பாட்டே நறும்பாட்டு, ஞாலத்தார்பாட்டெல்லாம் வெறும்பாட்டு, என்று ஆனந்தமே லீட்டாற்கூறிய அற்புத நாமாவளியில் ஞானசபாபதியே மறைநாத சுநா கதியே தீனதயாநிதியே பரதேவியுமாபதியே. என்றதற்கடுத்த நாமாவளி யான "புத்தந்தரும்போதா வித்தந்தருந்நாதா நித்தந்தரும்பாதா சித்தந் திரும்பாதாஎன்ற சிவநாமாவளியேஇவர்காட்டிய புத்தனைப்புகழ்ந்ததென் றபாடல் இச்சிவநாமாவளிப் புத்தகம்எல்லாப்புத்தகக்கடைகளிலும் கால ணவுக்கு மேற்போகாத விலைக்குக்கிடைக்கும் ஒவ்வொருவரும் வாங்கி வா சித்து இப்பூர்வபக்கத்தார்கூறியதன் உண்மையை உணரலாம். பிள்ளையவா கள் சிவபெருமானைத் துதித்திருக்க புத்தமதத்தை அநுட்டிக்குமாறு உண் டாக்கியபோதன் என்னும் செத்தொழிந்தபுத்தனையுந் துதித்துக் கூத்தாடி னார் என்று இவர் கூறிவிட்டதனாலிவர்பட்சநிலைபெறுமா பெறாது பெறாது. இவர்பொய்யர் எனவுலகமறிந் திகழ்தலே இதனாலிவா பெற்றபேறு. இவா் காட்டிய நாமாவளியில் புத்தம் என்றொருசொல்லும். போதா எனவொரு சொல்லுங் கண்டெடுத்து இவைபோதுமென மகிழ்ந்துபிள்ளை புத்தமதப் பித்தமுங்கொண்டார் எனவரைந்து குழறிமகிழ்கின்றனர். பிள்ளையவர்கள் பாடலை யாபாசப்படுத்துமாறு வைரங்கொண்டுதேடியவிவர்க்குஅவர்பாடலி லெங்கும் ஆபாசங்கள் கிடையாமையால் மனம்வருந்தி எரிவுற்று இந்நா மாவளிக்கேனும் புத்தமதச சார்பாகப் பொருள்காட்டி நமதெண்ணத்தினை நிறைவேற்றலாம் எனப்புகுந்தனர். இருசீருள்ள நாலடிகளுறழ்ந்தஅந்நாமா வளியில் இருசீரிலன்றி யேனைசசீர்களி லிவர்வஞ்சநெஞ்சம் புகவியலாது திரும்பிவிட்டாமையால். புத்தந்தரும்போதா என்ற இவ்விருசீர்த்தொடா

சக பர்த்தங்காட்டி மகிழுகின்றனர். இருசீராலாகியநாலடியுள்ள ஒரு நாமாவளியிலும் ஆறுசீர்கள் இவர்க்குப்பொருந்தாமல் இவரைவிட்டு விலகியதானால் இவரது விடாப்பிடியித்தகையது என வுலகினரினியேனுமறிவர்! தமதுபக்கத்தைச சாதித்தற்கு ஒருபாடல் கிடையாவிடினும்இருசீருள்ள ஓரடி கிடைத்ததேபோதும் என்றுகருதி அதற்குரையுமெழுதி எம்முரையையன்றிவேறுரை கொள்ளற்க. கொண்டால் சலமெனும் தோல்வித்தானமாம் எனக்குழறிவழிந்தனர். நிதானம்.-பதினாயிரம்பாடல்களால் சிவபெருமானையே துதித்த நூலுள் பிள்ளையவர்கள் இருசீருள்ள ஆத்யபாதமான ஒருநாமாவளிக்கவஷணத்தால் புத்தனையும் பிடகத்தையும்துதித்தனரென்றால் பேதையரும்பின் புறத்திலன்றோ நகைப்பர். முந்நூற்றுமுப்பத்தாறு பாதங்களாலாகிய எண்பத்துநான்கு நாமாவளிகளில் இவர்தேடித் தேடியெடுத்த ஒரு நாமாவளியிலும் இவர்க்குச சாதகமாக இவர்கொண்ட ஒருபாதத்தினைக் கொண்டு புத்தனைத் துதித்தாரென்றால் மற்றையமூன்று பாதங்களையும் கொண்டு துதித்ததேவரை அவ்வொருபாதமேனும் இவர்பக்கத்தைசசாதிக்குமாசாதிக்காது. சைவதத்துவங்கள் முப்பத்தாறென்பதனை விளக்கவமைந்த முப்பத்தா றெழுத்துகளாலாகிய அந்நாமாவளி தருமாதிபுருடார்த்தங்களையும் சரியாதிமார்க்கங்களையும் சாலோகாதி முத்திகளையும் அண்டசாதி யோனிகளையும் பிரமசரியமாதி யாசிரமங்களையும் சமயாதிதீட்சைகளையும் அகமாதி மார்க்கங்களையும் போலநான்கடிகளாலாகிச சைவசமயக் கடவுளான சிவபெருமானுக்கே முன்னும் பின்னுமுள்ள சம்பந்தமுடையதாய் விளங்கும். இவ்வரிய நாமாவளியினேகபாதத்தினைப் புத்தனதாக்குதற்கு இவர்களாலாகுமா? ஆகாது. ஒன்பதுபேதங்களாகவிளங்கும்சிவபெருமானுக்குரியதென்பதனை விளக்க ஒன்பதெழுத்துக்களாலமைந்த ஒவ்வோரடிகளையுடைய தந்நாமாவளி. அன்றியும் நவாவத்தை நவாபிமானி நவகுண்டம் நவாட்சரிமுதலியவைகளையுடையது சைவம். அதுவே நமது மதமெனவிளக்க ஒன்பதெழுத்துக் களாலாகிய ஒவ்வோரடிகளையுடையதாய் விளங்குமச்சிவநாமாவளியின் ஏகபாதத்தினை கவரவந்த விவர்க்குப் பிடகாதி சாமானிய நூல்களிலன்றி சைவநூலில் பரிசயமில்லாதவர் சைவமரபுணராதவரென்று உரைக்கும் மொழியே சனங்களாலிந்த விஷயத்திற் கொடுக்கப்படுஞ்சன்மானம் என அறியாதாரெவர். இவர்காட்டிய இப்பாடல் சிவபெருமானுக்குரியதே யன்றி புத்தனுக்குரிய தன்மையால் இவருரை வெற்றுரையாயது காண்க.

கரதலாமலகம்போற் காணப்படும் என்றார். கரதலாமலகம்போற் காணப்பட்டது சைவத்திறமன்றி புத்தத்திறமன்று. சிவபெருமானது கல்யாணகுணங்களையன்றி புத்தகுணமொன்றும் இல்லாத சைவப் பாடலிவரள விற்குப்புத்தப்பாடலானது ஆச்சரியம்! ஆச்சரியம்! கரதலாமலகம்—உள்ளங்கை நெல்லிக்கனி.

புத்தம்தரும் புத்தமதத்தைத் தந்த, போதா போதனே. என்பது பொருளாகக்கொள்க. என்றுரை திருவுளம்பற்றினர் இப்புத்தமத நண்பர்.

புத்தனுக்குப் போதனென்னும்பெயர் நிகண்டிலில்லை. பிங்கலநிகண்டு வானவர்வகை. புத்தன்பெயர்; "பார்மிசை நடந்தோன் பகவன் புங்கவன் தருமன் சாந்தன் முனிவன் வாமன் புனிதன் சினன்வரனறிஞன் பிடகன் போதிவேந்தன் புத்தன் பெயரே. என்று கூறியதேயன்றி போதன் என்று புத்தனுக்குபெயர் கூறாமை காண்க.

சூடாமணி நிகண்டிலும் புத்தனுக்கு போதனென்று பெயர் கூறக்காணோம். சூடாமணி. தெய்வப்பெயர்த் தொகுதி.

"தருமராசன் முனீந்திரன் சினன் பஞ்சதாரை விட்டே
யருள்சு ரந்தணர்வு கூட்டேந்த தாகதனுதி தேவன்
விரவுசாக்கிய னேசைநன்வி நாயகன் சினங்தவிர்ந்தோன்
அரசுநீழலி லிருந்தோன் றிவாகரன்பகவன் செல்வன்"
"அண்ணலே மாயாதேவி சுதனகளங்கமூர்த்தி
நண்ணிய கலைகட்கெல்லா நாதன்முக்குற்ற மில்லோ
னெண்ணில் கண்ணுடையோன் வாமனேற்ற புண்ணியத்தின்மூர்த்தி
புண்ணிய முதல்வன் சாந்தன் பூமிசை நடந்தோன் புத்தன்"

என்றின்னன பெயரே புத்தனுக் குரைத்திருக்கின்றதே யன்றி போதன் என்று கூறிற்றிலது. கடைச்சங்கத்தார் காலத்து நிகண்டான பிங்கலத்தும் பிற்றைக்காலத்து நிகண்டான சூடாமணியிலுங் கேட்கப்படாமையாலிப் போதனென்னும் பெயர் புத்தர்க்கின்றெனமறுத்தலே அனைவரு

வடமொழி நிகண்டான அமரகோசரும் புத்தன் பெயரை யுரைக்குமிடத்து ஸர்வக்ஞஃ ஸுகதோ புத்தத் தர்மராஜஸ்ததாகதஃ ஸமந்தபத்ரோபகவான் மாரஜித்லோகஜித்ஜ்ஜினஃ

ஷடபிக்ஞோத சபலோவத்வய வாதீவிநாயகஃ
முனீந்திரஃ ஸ்ரீகனஃ சாஸ்தாமுனிஃ சாக்யமுனிஸ்துயஃ
ஸசாக்யஸிம்ஹஃ ஸர்வார்த்தஸித்தஃ ஸௌத்தோதனிஸ்சஸ
கௌதமச்சார்க்கபந்துச் சமாயாதேவீசுதச்சஸஃ

என்று கூறினதே யன்றி போதன் என்னும் பெயர் புத்தனுக்குள்ளதாக கூறவில்லை ஆதலின் இவருரை வெற்றுரை யென்க.

சைவரனைவரும் புத்தமதத்தையும் பிறமதங்களையும் ஆதியிலுண்டாக்கினோன் சிவபெருமானே யெனவும் நாராயணன்முதலிய புத்தரும் கௌதமாதி புத்தரும் சிவபெருமானருளிய அருள்வலத்தால் அவைகளை விளக்கினரெனவும் அவைகளின் வழிநிற்போர் அவைகளிலுரைக்கும்பயனையடைந்து பின்னர் சைவத்திற்புகுந்து காலக்கிரமத்தில் சிவபெருமானை யடைந்து

நிரதிசயவின்பானுபவிக ளாவார்கள் என்றும் கருதுபவர்களேயன்றி இவரை யொப்பப்புத்தன்என்பவன் புத்தமதத்தையுண்டாக்கினன்சிவன்என்பவன் சைவமதத்தை யுண்டாக்கினன் பிரகற்பதி உலோகாயதமதத்தினை யுண்டாக்கினன் மற்றையமதங்களை இவ்வாறே ஒவ்வொருவர் உண்டாக்கினர் என்றுகருதார். வேதாகம வழக்கறியாத சிலர் கூறியுள்ளவைகளை மெய்யெனக் கருதி இங்ஙனமுரைக்கும் இவர்களைச் சைவர்மதியாரென்க.

புத்தம்முதலிய வினைத்துமத க்கூ நூல்களுக்கும் சிவபெருமானே முதலாசிரியன் என்பதனை,

"கருகிருணிறத்து மாயனாகம மேகமலம் வாழ்பிரமனாகமமே
யருகனாகமமே புத்தனாகமமே யறையுலோகாயித நூலே
மருவுசாங்கிய மேதருக்க சாத்திரமீமாஞ்சமே யிவைகளுமின்னு
மிருநிலத்துள பன்னூல்களுஞ் சுயமே யெம்பிரான் படைத்தனன்மாதோ.

அன்னவனருளான் மாலயனாதி யமரருமியக்கர் சித்தர்களு
நன்னயமருவு வித்தியாதரரு நாடிராக்கதர் முனிவாரும்
பன்னலநாருந் தத்தஞானத்தின் பண்பினுக் கனுகுணமாவம்
முன்னவன் வகுத்தநூல்களை விரித்துஞ் சுருக்கியு மொழிந்தனர் பின்னர்
என்று காந்தமகாபுராணத்து சூதசங்கிதை யிசைத்தல் காண்க.

"விஷ்ணுவாக மாம்ஸ்ததாப்ரம்மான் புத்தார் ஹாத்யாகமானபி
லோகாயதம் தர்கசாஸ்த்ரம் பகுவிஸ்தார ஸம்யுதம்
மீமாம்ஸாமதி கம்பீராம் ஸாம்கயயோ கௌததைவச
அனேகபேத பின்னானித தாசாஸத்ராந்தராணிச
நிர்மமே சங்கர ஸாக்ஷாத்ஸர்வக்ஞஸங்க்ர ஹேணது
ப்ரஸாதாதேவ ருத்ரஸ்யப்ர ஹமவிஷ்ணுவாதய ஸுராஃ
ஸித்தாவித்யாதராஃ யக்ஷாராக்ஷ ஸாத்யாஸ்த்தைவச
முனயச்சம னுஷ்யாம்ச்ச யதாபாதம் த்விஜோத்தமாஃ
தான்யேவ விஸ்தரேணை வவாபுன' குர்வந்தி

என ஸ்காந்த மகாபுராணத்துக் கேட்கப்படுதலின் சிவபெருமானே புத்தமதத்தினை யாதியிலுண்டாக்கினவர் என்பவர் சைவர்;பிறரென்பரசைவர். ஆதலின் மரபறியாது கூறிய இவருரையே வெற்றுரையென்க.

செத்தாரை எழுப்புவே மென்பதற்கு வேறுபொருள் கூறுமாறிதற்கும் வேறுரை கூறுவரிலிங்கரைச் சார்ந்தார் என்றவிவர் புத்தனுக்குச் சார்பாகவும் உயர்வாகவும் வருந்திப்பொருள் விரித்தவராதலி னிவர்புத்தனைச் சார்ந்தவராகின்றார். பிள்ளையவர்களின் கட்சியாரெவரும் செத்தாரை எழுப்புவோம் என்றதற்கு வேறருத்தம் பண்ணினரில்லை அதற்கும்பொருத்த

மற்றபொருள் கூறுவோர் இன்னவரேயென சேத்தாரை யெழுப்பும் விஷயத்திலிவர் காட்டிய ஆட்சேபங்களை மறுக்குமிடத்து விளங்கவுரைப்பாம்.

சமரசவேதம் என்று தமது பாடலுக்குப் பிள்ளையவர்கள் பெயரிட்டதற்கு இவர்கள் ஆதாரங்காட்டாமல் தாங்கூறு மனைத்தையு மூலகினர் நம்புவரெனக்கருதிக் கூறுகின்றனர்.

பிள்ளையவர்களின் சரிதத்து எதிர்காலத்து எழுதுங்கிளவியான சமரசவேதம் வெளிப்படும் என்றுகூறினரென் றெழுதியிருத்தலைக் கண்ட இன்னோர் பிள்ளையவர்கள் தமது பாடல்களுக்குச் சமரசவேதமென்று பெயரிட்டிருக்கின்றனர் என்பது தவறென்க. பிள்ளையவர்களின் பாடலுக்கு பொதுவாகவழங்கும்பெயரும்எழுதும் பெயரும்திரு.அருட்பா என்றேயாம்.

சமரசவேத மென்பதன்கதியே பொதுப்பாட்டென்பதன் கதியும் இல்லாததனை யுரைத்தமையா லிழுக்குற்றயர் பூர்வபக்கத்தினரே யன்றி பிறரல்லர் ஒன்றையெழுதினுலது இன்ன இடத்திற்கண்டதிது என்றெழுத வேண்டும் அங்ஙனமெழுதாது இவர்களிட்டம்போலகுழறிவழிந்தால் அதனை எவர் சம்மதிப்பவர்.

பின் - புத்தம் போதமென்ற சொற்கள் சிறப்பிடு குறியில் புறப்புறச்சமயத்துக்கும் புத்தனுக்கும் பெயராகக் கூறப்படாலானும் முரணென்க என்றூர்.

புத்தியின் சம்பந்தமான பொருளனைத்திற்குமுரிய புத்தமென்னுமொழி எங்ஙனஞ் சிறப்பிடுகுறியாகும் போதமுடையா ரனைவருக்குமுரிய போதனென்னும் பெயர் இவர் விரும்பிய புத்ததெய்வத்துக் கெங்ஙனம் சிறப்பிடுகுறியாகும். அவைகாரண விடுகுறியாதலி னிவருரை தவறுரையென்க. புத்தம் என்பதற்கு புதுமை புத்தியென விரித்தலும் பொருந்தா என்றூர். இத்தமிழுலகினருக்குப் புதுவிதிகளை யமைக்கவந்த இவர்சொல்லனைத்தும் விதியாகத் தானே அங்கீகரித்தல் வேண்டும் புதுமையெனவும் புத்தியெனவும் இன்னவர் விரித்தனர் இன்ன இன்ன நியாயங்களாலது பொருந்தாது இவர்களுரையால் அதுபொருந்தா இது பொருந்தா என்றல் நியாயமாகுமா? காரணகாரியவாத மறியாதாரையொப்ப புத்தியின் காரியமான புத்தம் என்பதனை புத்தம் என்பது புத்தி எனக்கூறலடாதெனக் கருதினர் போலும் மண்ணின் காரியமான கடத்தை மண்ணென்பவர்கள் அவிவேகிகளாகாமையால் புத்தியின் காரியமான புத்தத்தை புத்தம் என்பது புத்தி என்பவர்கள் சிறந்த அறிஞராதலி னிவருரை வெற்றுரையென்க.

பின் போதன் என்பதும் "புண்ணிய முதல்வனை போதனுர் பிடகமூன்று நண்ணியிதென்ப என்னும் புத்தநார் மீகத்திரட்டானும் புத்தர்க்குப் பெயராதல் காண்க என்றூர்.

இவரோ புத்தரின் நாஸ்திகப்புத்தமதத்தை வியப்பவர். இவர்கருத்தின் வண்ணம் அவர்கள் உயிர் இறை-அருண்முதலிய இல்லாததாதலானுண்மையேல் புண்ணியமவர்க்கேது புண்ணிய முதல்வன் என்றது புத்தனையாரேல்இவர்க்கதெவ்வாறு சம்மதமாயது சிவபெருமானை சிவன்சிவன் எனவெழுதாய் இவர்கள் புத்ததெய்வத்தினை கௌரவமாகப் புத்தர் என்று வரைந்திருக்கின்றனர் மறந்தெழுதினே மென்பர்போலும்.

பின் புத்தியைத் தரும்போதன் எனில் முப்பத்தாறு தத்துவத்துக்கு மேற்பட்ட சிவன் நானேனென் சிற்றம்பலத்தில் நடிப்பவனும் நானே என்ற பிள்ளைபுத்தியைப் பொருளாகக் கொண்டாரென்னல் பொருந்தாதென்றென விடுக்க என்றார்.

இவரறிவிருந்தபடியென்னை? வேதசிவாகம வழக்கங்களை யுணராத அன்னியர்கள் பொருளுரைக்குமாறு பொருத்தமற்ற சொற்களை விரித்துட்டெர்ப்படுமிவரை எங்ஙனம் சைவசம்பிரதாய முணர்ந்தவரென மதிப்பேம். பிள்ளையவர்கட்கு புத்தமதப் பித்துண்டென்ற வின்னவரோ புத்தமதப்பித்துதங்கொண்டாராகின்றனர். புத்தன் புத்தித்தத்துவத்தை யுடையனென்னு நூல்களிலுள்ள பழக்கத்தாலோ மறவியாலோ அநர்த்தஞ் செய்கின்றனர்.

முப்பத்தாறு தத்துவத்துக்கு மேற்பட்ட சிவன் நானேனென் சிற்றம்பலத்தில் நடிப்பவனும் நானே என்றதிவர்க்குத் தவறாகத்தோன்றியது ஆசரியமன்று நோயுண்ட விழிக்குவிளக்குவிகாரமாகக் காண்டலைப்போலப்ப சன்மார்க்கா னுட்டானங்கள் பாவனைகளெல்லாம் சாமான்யவிசாரமுடையவர்களும் உபதேச வழியானெழுகாது தாமேபுத்தகங்களைப் பார்த்துச் சைவத்திற முணருமவர்களும் அறியாமையைப் பொப்பஇவர்களுந்தாலோ பிள்ளையவர்களின் சன்மார்க்கா னுட்டானத்தில் வெறுப்புந்தோற்றுது விருப்புந்தோற்றுமா? தோற்றாது. சிவோகம்பாவனையால் தம்மைச்சிவனிற் காணுமவர்கள் தம்மைச் சிவனென்றமையா விழுக்கின்றதலின் இவ்வுரை வெற்றுரையென்க.

பின் ஒருகால் இவற்றிற் குத்தம் குத்தியுத்தியால் அர்த்தாபண்ணி உண்மையை மறைத்துச் சைவரை வஞ்சிப்பாராயினும் பின்வரும் பாட்டிற்கென் சொல்லுவார் என்றார்.

நாம்துகாறுங் காட்டிய பிரபல நியாயங்களால் குத்தியுத்தியால் அர்த்தம்பண்ணி யுண்மையை மறைத்தவர் பூர்வபக்கத்தவரேயன்றி பிறரா காரென அனைவருமறிவர்.

குத்தியுத்தியால் அர்த்தம்பண்ணி என்பதற்குப் பாதிசெய்து என்று பொருளுரைத்தலின் பிள்ளையவர்களின்பாடலிரெண்டியைப்பாதிசெய்து

எடுத்து அபார்த்தம் செய்தவர்கள் இவர்களேயாதலின் இக்குத்திரயுத்திய
வர்க்கே யுரித்தாதல் காண்க. பிள்ளையவர்களைச் சிவஞானியெனவும் சிவ
பத்தரெனவும் முதுமொழி பெரும்புலவரெனவும் அருண்மூர்த்தி யென
வும் எண்ணியிருந்த சைவசாதுக்களிற் கோழையறிவினரையும் சபலபுத்தி
யுடைய இளையோரையும் வஞ்சித்து பிள்ளையவர்களை இகழ அவர் பாடல்
களுக் கபார்த்தஞ்செய்து தூண்டிவிட்டவர்கள் பூர்வபக்கத்தாராதலின்
இக்குத்திரயுத்தியும் வஞ்சனையும் இவர்க்கேயுரித்தெனை மறுக்க.

இந்தப்பாட்டில் இவர்கள் எண்ணம்பலியாமையை யுணர்ந்தே பின்
வரும்பாட்டிற்கென் செய்வரென்றூர்கள். இவர் காட்டும். பின்வரும் பாட்
டும் இவர்களின் வஞ்சனைச்செயலை வெளிப்படுத்தலை இவர்கள் அறியாது
கூறிமகிழுகின்றனர். அதுவும் இவர்கள் பக்கத்தைச் சாதிக்காமையை இத
னைப் படிப்பவர்களுணராதிரார். இவரிந்தப் பாட்டின் வெற்றுரையை இவ்
வளவோடு பூர்த்திசெய்தமையால் இனி அப்பாடற்கு எமது பக்கத்துப்
பொருளினை இங்குரைத்து இவர்களை மறுத்தலே உசிதமெனத்தோன்றுத
லால் அதனை யீண்டெழுதத்துணிகின்றும். புத்தந்தருபோதா என்னும்
இது பிள்ளையவர்கள்பாடிய சிவநாமாவளி பங்தியின் இறுதிப்பாடலாத
லால் இதன்பொருளனைத்தும் சிவபெருமானையே சென்றடையும். அங்ங
னம் சிவபரமாகப் பொருளுரைக்கவகையறியார் சைவரல்லாதவரே யாவர்.

புத்தந்தரும்போதா வித்தந்தருந்தாதா
நித்தந்தரும்பாதா சித்தந்திரும்பாதா.

(இதன்பொருள்) புத்தம் - போகத்தை, தரும் - கொடுக்கின்ற, போ
தா - அறிவுருவமானவனே! வித்தம் - ஞானத்தினை, தரும் - அளிக்கின்ற,
தாதா - வள்ளலே! நித்தம் - அழியாதசிவலோக வாழ்வினை, தரும் - கொடு
க்கின்ற பாதா - திருவடிகளையுடைய சுவாமியே! சித்தம் - தேவரீர் திருவு
ளம், திரும்பாதா - அடியேன்பக்கமாக ஆகாதா? எ-று.

(மற்றொருரை) புத்து-புதிதாயுண்டாகிற, அம்-சந்திரகலா மிருதத்தினை,
தரும்-அடியேனுக்கு யோகவழியா லளிக்கின்ற,போதா - ஆயிரத்தெட்டிதழ்
களையுடையதாய் துவாதசாந்தத்து விளங்கும் தாமரைமலரை யிடமாகவு
டைய சுவாமியே!வித்தம்-அடியருட்போககாமிகள் விரும்பிய செல்வத்தினை
யளிக்கும் தாதா - தந்தையே! நித்தம் -சுவேதமார்க்கண்டாதிகளையொப்ப
விரும்பிய வடியருக்கு, நித்தியத்துவத்தையளிக்கும், பாதா - திருவடிகளையு
டையாய்,சித்தம்-என் னுளம், திரும்பாதா-விடையபோகங்களிற் செல்வதை
விட்டு தேவரீர் திருவடிப்பக்கமாகமாறிநிற்கமாட்டாதா? எ-று.

(மற்றொருரை) புத்தம் - தரிசிப்பவர்களுக்கு ஆச்சரியத்தை, தரும் - வி
ளைக்கின்ற, போதா - இருதயபுண்டரீகப் போதையுடையவனே!, வித்து -
உலகசிருட்டிக்குவேண்டிய சகலவித்துக்களையும், அம் - அவைகளை வளரச்

செய்யும் நீரையும், தரும்- அளித்த தாதா - ஆதிப்பிரமனே! நித்தம் - நாள் தோறும் தரும் - தரிசிக்கத்தருகின்ற, பாதா—சிவசூரியனே ! நித்தம் அடியேன் மனம் திரும்பாதா துறவறத்திற்கு செல்லாதா (எ - று.)

இம்மூவித உரையையன்றி இன்னம் வேறுபலவிதங்களாகவும் சிவபரமாகவே செம்பொருள் கருத்துப்பொருள் ஆக்கப்பொருள் முதலியவாக அநேக உரைகளுரைத்தற்கியைந்த சிவநாமாவளியின் ஏகபாதமும் இவர் பக்கத்தைச் சாதிக்காமல் இவருரையை வெற்றுரையாக்கி எமது பக்கத்தைச் சாதிக்க நின்றமையால் இந்தபாகத்தி லிவருரையனைத்தும் பயனற்றனவென வொதுக்கி மேற்புகுவாம்.

பின் ஐயோ மாணிக்கக் கல்லிருக்க மதியாச் சிறுகற்களால் நெஞ்சைப் புண்படுத்தும் போலிச்சைவரே அதற்கு என்ன அருத்தம்பண்ணுவீர் உங்கள் செபம் அதன்கட்பலியாது? உங்கள் போலிக்குருவாகிய புளுகரை நொந்துநொந்து அவரைப்போல தலையின் முக்காடிட்டு புலம்புதிர் புலம்புதிர் என்றார்.

ஐயோ என உண்மையிலிரங்குவாரை யொப்பக்கூறிய இவர், மாணிக்கக்கல்லிருக்க மதியாச் சிறுகற்களால் நெஞ்சைப்புண்படுத்தும் போலிச்சைவரே என்று விளித்ததெவரை? மாணிக்கக்கல்லும் மதியாக்கற்களும் நெஞ்சைப் புண்படுத்துமா? மதியாச்சிறு கற்களென இவர் குறிப்பித்ததுபிள்ளையவர்கள் பாடல்களையானால் அவை எவர்மனதையும் அழுவிலிட்ட வெண்ணெய்ப்பாவையை யொப்ப தம்மிடம் புகுந்தாரைச் செய்தனவேயன்றி எவ்விதத்தானும் 'நெஞ்சினைப்புண்படுத்தா. படிப்பவர் கேட்பவர்களாகிய அனைவர் மனைத்தினையுமகிழுவிக்கும் பிள்ளையவர்களின் சைவப்பாடல்களின்மீது வறும்பொறாமையுடையார் இப்பூர்வபக்கத்தாராதலின் இவர் நெஞ்சை யொருவேளை புண்படுத்தியிருக்கலாம். சிவசம்பந்தமின்ன பாடலைப் புத்தசம்பந்தமானதெனத் தவறுகூறிய இப்பூர்வபக்கத்தினர் திறம் போலித்திறமாயினமையால் இவர்கூறிய போலிச்சைவப்பட்டமும் இக்குழுவினருக்கேயமைய விசைவதன்றி சிவபெருமானைத் துதித்தபாடற்குச் சிவபரமாகவே செம்பொருள்கூறும் பிள்ளையவர்கள்பக்கத்தார் போலிச்சைவராகார் இதனைக்குறித்து நடுநிலையினரான அனைவரும் ஆலோசியாமலிரார்.

அதற்கென்ன அருத்தம்பண்ணுவீர் உங்கள்செபம்அதன்கட் பலியாது. என இவர்கூறியிருத்தலைக்காணும் அனைவரும் அதன் அருத்தமும் இவர் வஞ்சனையும் காணுமாறு விளக்கி எமது பக்கத்தைச் சாதித்தவுடனே எவர் செபம்பலியாது போகுமோ பார்க்கலாம் செபத்தில் எங்கள் செபம் பஞ்சாட்சர முதலிய மந்திரசெபங்களாதலி னவைகாலக்கிரமத்தி லெங்களுக்கு அபீஷ்டங்களை அளியாமலிரா என நினைவுள்ள எங்களைப்பார்த்து செபம்

பலியாது என்றால் நாங்கள் சும்மா இருந்து விடுவோமா? பிள்ளையவர்கள் உண்மைக்குருவும் உண்மை உரையும் உடையவரென்பதை அறிந்துள்ள நாம் நியாயவழியாக இவருரைகளை மறுத்து போலிக்குருத்துவம் புளுகு முதலியன உடையவர்கள் பூர்வபக்கத்தவரென காட்டி மறுத்தபின் நிலையின்கண் முக்காடிட்டுப் புலம்பவேண்டியவர்கள் நமதன்பர்களான பூர்வ பக்கத்தவரே யாவரென அறிந்துகொள்ளாமையாலிவ்வாறு கூறிவிட்டனர் என்னமோ அவசரத்தா லிவ்வாறு கூறிவிட்டனர்போலும். புலம்பவேண்டியவர்கள் தோற்றபக்கத்தவ ரென்பதனை நாமறவா வாறு இப்பூர்வபக்கத்தாரும் மறக்கமாட்டார்கள்.

பின் இராமலிங்கர் பாடிய அம்மருட்பா வருமாறு என்றார். இப்பூர்வ பக்கத்தவர்கள் தம்பெயரையேனும் தம் பக்கத்தார் பெயரையேனும் குறை வுற எழுதினால் அல்லது சொன்னால் எவ்வாறு மனம் வருந்துவார்களோ அவ்வாறு பிள்ளையவர்களின் பக்கத்தவர்கட் குண்டாகாதென்ப தின்னோர் கருத்துப்போலும் பிள்ளையவர்கள் சன்மார்க்கானுட்டானியாதலின் அவரை யெவரெவ்வாறு கூறினும் அவர் உவகையு மவலமும் உறுவாரல்லர் ஆயினும் முறைபிறழ்ந்து எழுதுதல் தவறென எச்சரிக்கின்றோம்.

பிள்ளையவர்கள் பாடலில் மருள் நிறைந்துகிடப்பதாகக் கருதி, அவர் பாடலை மருட்பா என்றார்போலும் மருட்சியுடைய இப்பூர்வபக்கத்தாருக் கன்றி தெருட்சியுடைய வனைவருக்கும் பிள்ளையவர்கள் பாடல் மருட்பா வாகாமையையும் இன்னோர் மொழிகளே மருண்மொழியாதலையும் காண்க. தெருளுடையவர்போன்ற இன்னோர்.

"சாக்கிய வேதம் தேக்கிய பாதம்
தாக்கிய ஏதம் போக்கிய பாதம்"

என்றிரண்டடிகளை எழுதி இருக்கின்றனர். இது புத்த மதத்தையும் புத்த நூலையும் பிள்ளையவர்கள் புகழ்ந்தபாடலென உண்மைவிளம்பிகளான இன்னோர் வரைந்திருக்கின்றனர். இது பிள்ளையவர்கள்பாடிய சிவநாமாவளியில் பத்தாவதாய்,

"நீடிய வேதந் தேடியபாதம், நேடிய கீதம் பாடிய பாதம்
நோடிய கீதம் பாடிய பாதம், ஆடிய பாதம் ஆடிய பாதம்"

என்ற பாடற்கிரண்டாவதாய்,

"சாக்கிய வேதந் தேக்கிய பாதம் தாக்கிய ஏதம் போக்கிய பாதம
சோக்கிய வாதம் ஆக்கிய பாதம் தூக்கிய பாதம் தூக்கிய பாதம்."

என்பதன் முன்னிரண்டடிகளே இவர்கள் காட்டிய மருட்பாவென்னும்பாடல்.

இதனையொப்ப இன்னம் ஆறு நாமாவளிகளால் இந்த பாகம் நிலைபெற்றுச் சிவநாமாவளியாய் விளங்குதலைப் படித்தவுடன் சிறுவருமுணர்வர். பிள்ளையவர்களைப் புளுகரென்ற இவர்கள் நடராசப்பெருமானது தூக்கிய பாதப் புகழினை மறைத்துப் புத்த மதத்தினைப் புகழ்ந்தமையால் அப்புளுகரென்ற அபிதானத்துக் கருகரானமையி னவர் பக்கத்துக்கே அதனைத் திருப்பிவிடுத்தாமென்க.

பின் இதன்கண் சாக்கியவேதமென்றது. பௌத்தநூலாகிய பிடகம் அன்றோ? அதனைத் தன்னிடத்து நிறைத்தபாதம் சிவபாதமோ? ஆராய்திர். ஆராய்ந்து உண்மைகாணுதிர் என்றார். சாக்கியம் என்பதற்கு கூட்டம்என்றபொருளிருத்தலை அறியாத இவர் சாக்கியவேத மென்பதற்கு தவறுறுரை கூறினால் அதனை எவர் அங்கீகரிப்பவர். எமதிறைவனான சிவபெருமானது குஞ்சிதபாதத்தினைப் புகழ்ந்தபாடலடியை புத்தநூலுக்காக்கினால் அது நிலைபெற்று வலியுற்று நிற்குமா? புளுகர் எனப்பிள்ளையவர்களை அஞ்சாதுரைத்த இவர் தூக்கியபாதத்தை மறைத்ததெல்லாம் பிடகநூற்குப் பெருமிதங்காட்டிப் புத்தமதாவலம்பிகள் புத்திசாலி யெனக்கொண்டாடற்குப்போலும். சைவர்க்குரிய வேதங்கள் அளவற்றனவாதலின் பிள்ளையவர்களும். சாக்கியம், கூட்டமான - வேதம். இருக்காதிவேதங்கள் - தேக்கிய, பாதுகைமுதலியவையாக நெருங்கி நிறைந்தபாதம் - திருவடியே தூக்கிய பாதம்; ஸ்ரீ நடராசப்பெருமானது குஞ்சிதபாதம் குஞ்சிதபாதமென. பொருட்பொலிவுறக் கூறியிருத்தலை யொன்றியுணராது சாக்கியவேதமென்றால் பிடகமான புத்தாகமமெனக் கூறுதல். பதி - என்றால் அலரிப்பதி. பிச்சிப்பதி. (அலரி-கத்தூரிப்பட்டை - (பிச்சி - சாதிமுல்லை)பசு - என்றால் கறவைமாடு - பாசம்என்றால் அதனை இறுக்கிவீக்குங்கயிறு என்றும் - மும்மலமென்றால் மலமூத்திர சுக்கிலங்களாகிய மலங்களென்றும் கூறி இவைஎங்களுக்குத் தெரியாதா என்னும் சாமானியருடைய கூற்றையன்றோ ஒத்துநிற்கின்றது. கூட்டமானவேதங்களால் தேக்கப்பெற்ற பாதமென்பதில், சைவபட்சத்துக்கு விரோதமும் ஏனையபட்சங்களுக்கு அவிரோதமு மாகுமெனக் கருதவும் இடமில்லாதிருத்தலின் இப்பூர்வபக்கத்தார் கூற்றுவறுங் கூற்றெனமறுக்க.

பிடகத்தினைத் தன்னிடந் தேக்கியபாதஞ் சிவபாதமோ? ஆராய்திர் என்ற இன்னோர் இனியேனும் ஆராய்ந்து தாங்கூறியவை தவறெனஅறிந்தடங்குவாராக. பிடகத்தினை புத்தாகமமென்று கூறுதல்வழக்காக வேதமென்றுங் கூறுகின்றனர். கரந்துரையால் புத்தமதத்தைப் புகழ்வோர் பூர்வபக்கத்தாரேயன்றி பிள்ளையவர்களல்லர் என்பதனை எமதுரை நன்குவிளக்கியதனால் புத்தமதத்தைப் புகழ்ந்தோர் பூர்வபக்கத்தினரே யாவர்.

பின் பாதவடிவாகச் செய்யப்பட்ட பதுமையைவைத்து வழிபடுபவர் புத்தரன்றோ?என்றார்.இந்நண்பர் புத்தப்பள்ளிகளிலும் புத்தநூல்களிலும் நனிபயின்றவர் என்றும் சிவாலயங்களிலும் சைவநூல்களிலும் புத்தாலயபுத்த

நூல்களிற்போல பயிற்சிஇல்லாதாரெனவும் என்னும் வண்ணமாக இவ்வாறு கூறுகின்றனர்.

புத்தாலயமும் பாதவடிவாகச் செய்த பதுமையை வணங்குவோரும் பிள்ளையவர்களின் சஞ்சாரபூமிகளான தமிழுலக முதலியவைகளில் இன்மையால் அவர்க்கதனில் விருப்பமுண்டாக இடமில்லை ஆதலின் அருமையான இவ்விரகசியத்தினை வெளியிட்ட பூர்வபக்கத்தாரே அவ்விரகசியமறிந்தவர்கள் அவர்க்கே அது உரித்தாகுக.

குருமடங்களிலும், திருப்பெருந்துறை முதலிய இடங்களிலுள்ள குருமூர்த்தி சன்னிதானங்களிலும் ஏனைய சிவாலயங்களிலும் வராகபீட முதலிய சத்தியாலங்களிலும் திருவடிகளான பாதுகைகளை வைத்து வழிபடுதலும் தரிசிக்கவருவோர் சிரங்களிலவைகளை வைத்து திருவடி தீட்சை செய்தலும் நித்தியநைமித்திய பூசாகாலங்களில் மேற்குறித்த இடங்களில் தரிசனார்த்தம் செல்லுமவர்கள் அநுபவித்து வருதலுங்கேட்டுமுணர்ந்திராத இன்னோர்பாதவடிவமான பிரதிமையைவைத்து வழிபடுதலை யுடையார் புத்தரென்றுகூறுது மற்றெதனைக் கூறுவர். புத்தரையன்றிச் சைவராதியரும் பாதவடிவான பதுமையைவைத்து வழிபடுதலி னிவருரை வெற்றுரையென்க.

பின் சாக்கியவேதம் என்பதற்கு என்ன அருத்தஞ்செய்வீர் என்றார். சாக்கியவேதம் என்பதற்குக் கூட்டமான வேதமெனவும்சகலவல்லமைகளையும் உள்ளவேதம் எனவும் அருத்தம்செய்வேம் என்பதேபதில்

பின் சாக்கியர் என்பதனை வேறொருவருக்கும் நிகண்டுவிதிக்கவில்லை என்றார். பிள்ளையவர்களின் பாடலில் காணப்படுவது சாக்கியம் என்னும் பதமே அன்றி சாக்கியர் என்னும் பதமன்று ஆதலின் சாக்கியர் என்னும் பதப்பொருள் இவ்விடத்திற் செல்லாதெனை மறுக்க.

"மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்கு மடியேன். என ஏழாவது திருமுறையும் என்றார். ஏழாந்திருதிறையென இவர்காட்டிய பாடலடிக்குப் பெயரில்லை. அது சுந்தரமூர்த்தி சுவாமிகளருளிச்செய்த திருநெறித்தமிழ் வேதத்ததாதலின் அதனை திருநெறித்தமிழ் வேதத்ததுக் குறிக்கும், என்றுயினும் அல்லது தேவாரத்து என்றேனும் உரையாது புத்தகம் என்பதைக் குறிக்கும் ஏழாந்திருமுறை யென்றது தவறென்க.

பின் - மறுசமயச் சாக்கியர் தம் வடிவினால் என்பது முதலிய சிலவரி எழுதி எனப் பன்னிரண்டாந் திருமுறையுமாகிய திருவருட்பாக்கள் புத்தர்க்கன்றே விதித்தன என்றார்.

திருத்தொண்டர் புராணமான பெரிய புராணத்துப் பாடலடிகளை எழுதிய இவர் - எல்லாரு முரைப்பதுபோல உரையாமல் பன்னிரண்டாந திருமுறையுமாகிய திருவருட்பாக்கள் என்று முப்பது முழு நீளம் வரைவதனுலிவர் பிள்ளையவர்கள் பாடலிற் கண்ட ஆபாசமென்னை.

பிள்ளையவர்கள்;—"சாக்கியரன்றெறிந்த கல்லெறிக்குங்கதி காட்டின ர்கா ணெங்கடவுளரே" எனக் கல்லெறிந்த சாக்கியர்க்குக் கதியளித்த சிவ பெருமானைத் தமது கடவுளெனக் கூறியிருத்தலை இவரறியார்போலும்.

"எப்பொரு ளெச்சொலி னெவ்வா றுயர்ந்தோர்
செப்பின ரப்படி செப்புதன் மரபே"

என்ப திவர் மதிக்குப் புறம்பாகியது விசனிக்கத்தக்கதேயாம். திருமுறை யெனவும் திருவருட்பா எனவுங் கூறிவிட்டதனாலேயே இவர் பக்கம் நிலை பெறுமா? ஏழாந்திருமுறை யென்பதற்கு ஏழாவது புத்தகமென்றும் பன்னி ரண்டாந்திருமுறை யென்பதற்கு பன்னிரண்டாவது புத்தகமென்றும் பொ ருளன்றி வேறின்றாதலின் அதனிலொரு வியப்பு மின்மையை இவரறியா மையாலவ்வாறு எழுதினர். திருவருட்பா என இவர் கூறாவிடி னவைகளி ழிவுறும்போலும் திருவருளாலாகிய பாவினைத்தாந் திருவருட்பாக்களேயாயி னும்பண்டையோர்எவைஎவைகளுக்கெந்தெந்தப்பெயரிட்டுவழங்கியவர்தார்க ளோ அவை அவைகளுக்கு அந்த அந்தப் பெயரை வழங்குதலே சிறப்பா மன்றித் தம்மனம்போனவாறெல்லாம் பெயரிட்டு வழங்குதல் சம்பிரதாய விரோதமாதலின் அவ்வாறெழுதுதல் தவறென்க.

சாக்கியவேதம் என்பதற்கு ஆபாசங் காட்டவந்தஇவர் அதனை விடுத்துப் புத்தரையுணர்த்து மற்றொரு மொழியான சாக்கியர் என்பதற் குதாரணங் காட்டினு லது சரியாகுமா? ஆகாமையினவை சோதனையில் ஆபாசப்பட்ட ழிந்தமை காண்க.

பின், புத்தர் சாக விருட்சங்கள் (தேக்குமரங்கள்)அடர்ந்த தேசமாகிய உத்தரகோசலத்தில் வசித்தமையால் சாக்கியர் எனப்பட்டார் என்பது பன் னூற்றுணிபு என்றார். புத்தர்கள் உத்தரகோசலத்திலுள்ள தேக்குமரம டர்ந்த இடத்தில் வசித்தமையா லப்பெயரெய்தினாராஞல் அவ்வுத்தரகோச லத்தில் வசிக்கும் பிராமணர் முதல் பறையரிறுதியாக எல்லாச் சாதியாரும், சைவர் முதலிய எல்லாச் சமயத்தாரும், சாக்கியரென் றழைக்கப்படுவர். அவ் வாறின்றி புத்தர்க்குமாத்திரஞ் சாக்கியர் என்று பெயர் வைத்தழைத்தல் முறையாகாது. சக்கியமுடையவர் சாக்கியர். சக்கியம்-அன்பு. உயிர்கண் மாட்டு அன்புடைய ரென்னும் அபிப்பிராயம் உடையராதலின் சாக்கிய ரென்று புத்தர்கள் அழைக்க இசைந்தமைத்துக் கொண்டன ரென்பதே சாக்கியரென்பதற்குப் பொருளாதலின் இவர் கூறிய சாகவிருக்க நியாயஞ் செல்லாதென்க. பன்னூற்றுணி பென்றவர் பன்னூலிற் சின்னூலேனுங் காட்டவேண்டியதைவிட்டு வாளாபன்னூற்றுணிபு பன்னூற்றுணிபென்றால் போதுமா? பன்னூல்களைக் காட்டியிருப்பினும் அவை நியாயமற்றவைகளா னல் அவைகளை நியாயங்காட்டி மறுக்காமலிரேம்.

பின், வடலூர்ச் சுடுகாட்டிலிருந்த பிள்ளை புத்தர் வேதத்தை முகந்த திருவடியென்று கூறியது அடுக்குமா? என்றார்.

வடலூர்ச் சுடுகாட்டில் வசித்தமையால் பிள்ளையவர்கட் குண்டான இழுக்கென்னை? இச்சென்னையின்கண் எத்தனை கந்தராலயங்களும் சிவாலயங்களும் சுடுகாடிருந்த இடங்களில் சிறப்புற்று விளங்குகின்றன.

நாடு காடாதலும் காடு நாடாதலும் கோவில்கள் சுடுகாடாதலும் சுடுகாடுகள் கோவிலாதலும் இறைவனுணையா லென்பதனை இவர்களறிந்திருந்தால் ஆசசரியமாக உரையார். சுடுகாடு நிஷித்தமான இடமாதலின் அதனில் வாசஞ்செய்த பிள்ளையும் நிஷித்த கொள்கையை யுடையராயினர் என்று கருதியவராதலின் சுடுகாட்டிலிருந்த பிள்ளை என்றனர். பிள்ளையவர்கள் சுடுகாட்டில் வசித்திலராயினும் சுடுகாடு சிவபெருமானுடைய வாசத்தலங்களி லொன்றென்பதனையும் தூய்மையினையுடைய தென்பதனையும் நியாயவழியால் விளக்கிப்பின் மற்றையவைகளைப்பற்றி விசாரித்தலே நலம்.

"மறையுமோதி மயானமிடமாக வுறையுஞ்செல்வர்" எ-ம் "கோயில் சுடுகாடு" எ-ம் தமிழ்வேத முரைத்தலானும், ஏனைய நூல்களும்சுடுகாட்டை உருத்திராலயம் என்று கூறுதலாலும் சிவபெருமானுக்குரியஇடமான சுடுகாடு பிள்ளைவர்கட் கிடமாயதெனக்கூறி யதனில் இழுக்கின்மைகாண்க,

கோவில் சுடுகாடென்றதற்கு ஊர்ஊர் தோறுமுள்ள சுடுகாடென்று சைவர் கூறார். இது அசைவர்கூற்று, எல்லாமழிந்த இடமாகிய சுடுகாட்டிலிறைவன் நடனஞ்செய்வா னென்பதே சைவமரபினர் கொள்கையெனில் நன்று கூறினாய்; காரைக்காலம்மையார் ஊர்சசுடுகாடுகளைச் சிவபெருமானுடைய நடனவரங்காகஉரைத்திருத்தலை உணர்வா ரவ்வாறுரையாரென்பேம். அம்மையார் அவ்வாறுரைத் திருக்கினும் அதுஎமக்கங்கீகாரமன்றென்றுகூறுவோர் சம்பிரதாய சைவராகாரென மறுப்பேம்.

### அம்மையார் அருளிச்செய்த மூத்த திருப்பதிகம்.

"புந்திகலங்கிமதிமயங்கிஇறந் தவரைப்புறங்காட் டிலிட்டுச
சந்தியில்வைத்துக்கடமைசெய்து வக்கவரிட்டசெந்தீவிளக்கா
முந்தியமரர்முழவிேனைசை திசைதிசைக்கதுவசசிலம்பார்க்கவார்க்க
வந்தியின்மாநடமாடுமெங் களப்பனிடந்திருவாலங்காடே."

என்று ஊர்ப்புறங்களிலுள்ள சுடுகாடுகளைசசிவபெருமானுக்கு நடனசாலைகளாக உரைத் திருக்தலின் சுடுகாடுபூர்வபக்கத்தாரால் இகழப்படுமிடமாயது தவறென்க.

புண்ணிய தலங்களுள் ை ்ந்த காசிக்கு மகாஸ்மசானம் எனும் பெயரிருத்தலையும், காஞ்சியில் திருக்கசிமயானமெனுந் திருத்தலமிருத்தலையும் இவரறியார்போலும். அன்றியும், சிவபெருமான் உமாதேவியை நோக்கி உரைத்ததாக

"அவ்வாமகனுக்கீந்தேயகிலத்துமயானத்தாடு
செவ்வியினிருப்பேனென்னைத்தெளிந்தவர்புனிதமாந
தவ்விடமென்பர்தேராசுசியென்றாகல்லாவென்றான்
கொவ்வைவாயணங்குமீளக்குறித்தொன்றுபுகல்வதானாள்."

என்று பாரதங்கூறுதலின் சிவபெருமானை யுணர்ந்தவர்கள் சுடுகாட்டினைச் சிறந்த இடமெனக் கொள்வார்களாதலின், இவருடைய 'வெற்றுரை'யெனக்.புத்தர்வேதத்தைமுகந்ததிருவடியெனக்கூறுமேவா இப்பூர்வபக்கத்தினரோவென்பதை முன்னுரைத்து மறுதலிருத்தலின் அவ்வழுக்காமை இவர்கள்பக்கமே சார்ந்தழியாது நிற்றல் காண்க.

பின், இவ்வாறாகிய பித்தப் பாடல்களை திருவருட்பா எனப்பெயர். அந்தோ! அந்தோ! இவனமுள பாடல்களையும் அவற்று மருட்கொள்கைகளையும் அறியாதார் சிலர் வஞ்சிக்கப்பாடிய சிலசெய்யுளைக் கண்டுவிட்டுச் பூச்சி விளக்கில் வீழ்வதுபோல பாடிப்பாடிப் பாவஞ் சம்பாதிக்கின்றனர். என்றார்.

இதுகாறும் யாங்காட்டிய நியாயங்களால் பித்தமொழிகளையும் மருட்கொள்கைகளையும் உடையோரும், உலகினை வஞ்சிக்க முயன்றோரும் தம்பொய்மொழிகளால் சிவபெருமானது கல்யாணகுணங்கள் நிறைந்த பாடல்களை இகழ்ந்தவர்களும், அதனால் பாவஞ்சம்பாதிப்போரும், இப்பூர்வபக்கத்தினரேயென்று விளக்கினோமாதலின், இவர் பத்திதிறமும்புத்தித் திறமும் இத்தகையதென அனைவருமுணர்வர். பின், பேதையாம்மாயையின் புத்திரனுய்த்தாயைக் கொன்று மயிர்பிடுங்கும் புத்தனின் நூலை எமது சிவபெருமான் திருவடிகளாதேக்கின என்றார். இவ்வாறெழுதியிருப்பதனைக் காணுமவருள் சிற்றறிவினர் பலர் இவர் சிவபத்தியில் சிறந்தவரென்று கூறுவாரன்றி சம்பிரதாயிகளான சைவர் புத்தம்முதலிய நூல்களின் ஆதி ஆசிரியன் சிவபெருமானென்பதனை உணராது பிறழ்ந்து கூறுகியறிவிருந்தபடியென்னை யென்றிகழ்தலையே செய்வார்கள்.

இப்பூர்வபக்கத்தாரைப்பெற்ற தன்னையெல்லாம் அறிவிற் சிறந்தவராக ளும். மாயாதேவியென நிகண்டுகள் கவுதமாக உரைக்கும் கௌதமபுத்தரின் மாசாமாத்திரம் பேதையுமாதற்குக் காரணமென்னவென்று விளங்க வில்லை. கௌதமபுத்தனைத் தாய்க்கொலைசெய்த பாவியென்றதனைப் புத்தர் முன்னிலையிலுரைத்துமெய்ப்பிக்க இயராலாகுமா? பெற்றதாயைப் புத்தன் கொன்றானென்று இவர் கூறுவதனாலேயே இவர் கடவுள் நியதியை யறியாதவர் என நினைக்க இடமுண்டாகின்றது.

பாஷாணமுதலிய நஞ்சுகளாலும் வாள்முதலிய ஆயுதங்களாலும் கயிறு முதலியவைகளால் மூசசைப்பிடித்தல் முதலியவைகளாலுமன்றி புத்தன்பாதாவான மாயாதேவி புத்தனது யாக்கை சனனத்தாலிறந்தால் அம்மரண

துக்குப் புத்தன் யுக்தவயதில்லாத இளம்பாலகனாக இருந்தகாலமாதலின் குற்றவாளியாகானென்பதனை. தருமசாத்திரநிபுணர்களிடங்கேட்டுணர்வாராக. புத்தன்பிறந்தகாரணமாக அவனன்னை யிறந்தாளாதலின் அவனே அக்கொலைக் குற்றத்துக்குரியனென்றால் அறுபான் மும்மைநாயன்மாருள் கோச்செங்கட் சோழநாயனாரின் சனனங்காரணமாக அவரன்னை இறந்திருத்தலால் அவரும் தாயைக்கொன்றவராதல்வேண்டும். சைவராயிருந்தும் இவ்வாறுகூறலாமோ எனின் நியாயம்பேசுமிடத்து சைவமெனவும் அசைவமெனவும் பார்த்தால் நியாயம் வெளிப்படுமோ? ஒருதலைவழக்குப் பேசுதலொழுங்காகுமா? ஒருவேளை இந்தசரிதம் புத்தர்க்குத் தெரியாதென்றும் சைவரிதனை யெடுத்துக்காட்ட மாட்டாரென்றுங் கருதினர்போலும்; புத்தர்காலத்துக்கு முன்னும் பின்னும் எத்தனையோ சைவர்கள் தமது பிறவியே காரணமாக மாதாவிறக்கப்பெற்றுள்ளார்;அன்னோரெல்லாம்தாயைக் கொன்ற பாவிகளாகாதபோது புத்தனும் தாயைக்கொன்ற குற்றமுடையனாகான். ஆதலின் புத்தன் தாயைக்கொன்றானென்றல் தவறென்க. மயிர்பிடுங்குதற் குரியோர் அம்பட்டர்முதலிய இழிசனரேயன்றி க்ஷத்திரியனான புத்தன் மயிர்பிடுங்கினானென்பது பெருந்தவறு. குற்றமற்ற பாடற்குக்குற்றங்கூறவந்தவர் எதையேனும் வரைந்து ஒரு சுவடியாக்கவேண்டுமே யதற்காக இவ்வெறு விஷயங்களை வரைந் திருக்கின்றனர். இவைவழூஉச்சொற்புணர்த்தன்முதலிய குற்றத்தின்பாற்பட்டு அவலமுற்றழிந்தமைகாண்க.

பின், இருக்குமுதலான வேதங்களுக்குங் காணப்படாமல் ஒளித்த எம்பெருமானது திருவடிகள் பேதைப்புத்தனின் பிடகமென்னும்தமது கூடைநூலுக்கா எட்டின. பிள்ளை இவ்வாறாய் சிவதூஷணம்புரிந்தோ சமரசத்தை நாட்டிக்கொள்ளவேண்டும். என்றார்.

இருக்குமுதலிய வேதங்கள் சிவபெருமானுக்குப் பாதுகைகளாகவும். பூடணங்களாகவும் வாகனங்களாகவும் பூசகர்களாகவும் பாடல்களாகவும் விளங்குதலைச சைவநூல்கள் உரைப்பதனை அறியாதார் கூறுமாறு கூறி வேதங்களுக் கிழிவுகாட்டும் விருப்பத்தினை நிறைவேற்றிக்கொண்ட வின்னவர் வேதங்கள் சிவபெருமான் திருவடிகளைக் காணத்தக்கனவன்றென்று மாத்திரந்தானா உரைப்பார்கள். வேதங்கள் சிவபெருமான் திருவுருவங்களாக உள்ளவையென்பதனை

"பண்ணார் தருமறையாய் எ - ம்.
மாறா மறைநான்காய்" எ - ம்.

ஒருந்திரு நெறித் தமிழ்வேதங்களைக்கொண்டு கூறுமவர்க் கென்னுரைப்பர். சிவபெருமானை

"மழமால்விடை மிகவேறிய மறையோன் எ - ம்.
மறையவன் மறை வழிவழி படுமறை வனமமர் தருபரமனே எ - ம்

மாணப்பாடி மறைவல்லானையே பேணப்பறையும் பிணிகளானவே
இருக்கின் மலிந்த விறைவரவர்" எ - ம். [எ - ம்

"மறையு மோதி மயானமிட மாக வுறையுஞ் செல்வமுடையார் எ - ம்
வெந்தபொடி பூசிய வேத முதல்வன் எ - ம்
வித்தக வேத முதல்வன் எ - ம்
பன்னுநான் மறைகள் பாடிட வருவார்" எ - ம்.

திருநெறித் தமிழ்வேதம் முழக்குநிலை அறிந்துள்ளவரல்லாதார் ஆதலினவ்வுரை வெற்றுரையென்க. வேதங்களால் முகரப்படாத திருவடியென்றால் மற்றெதனால் முகரப்பட்டதென்று எவரேனுங் கேட்டால் ஆகமங்களாலெனப் பதிலுரைகரு மின்னோர், ஆகமமென்பது வேதமூலத்தின் நுண்பொருளுரையென்பதனை அறிந்திருந்தால் வேதத்தினையன்றி ஆகமமென ஒன்றின்றென அறிவர்; அங்ஙனமறியாது பசுவை யிகழ்ந்து பாலைப்புகழும் பாமரரையொப்ப வேதஞ் சைவர்க்கு முக்கியமானதன்று ஆகமமே முக்கியமெனக் குழறினால் நடுநிலை யுணர்வினர் நகையாது வியவாராதலின் இவ்வுரை தவறுரையென்க. சிவபெருமான் றிருவருளால் புத்தாகமங்களை காலத்துக்கிணங்கவுலகிற்பரவச்செய்தபுத்தனை மணிவாசகசுவாமிகள் "புத்தன்புரந்தரன் மாலயன் போற்றிசெயும்" எனக் கூறியிருந்தற்கு மாறாய்ப் பேதையென்று கூறுதல் முறையன்றென்க. புத்தம் முதலிய மதங்களைச் சிவபெருமான் றிருவருள் வலத்தால் புத்தனாதியர் விளக்கினரெனவும் புத்தம்முதலிய மதங்களின் ஆதி ஆசிரியர் சிவபெருமானே என்றும் பிரபல சுருதிகளால் முன் விளக்கியிருத்தலின் இவர் அவ்விஷயத்தினை விடுத்து புத்தனைப் பேதையென்றும் அவன் நூலைக் கூடைநூலென்றுங் கூறுதல் சைவசன்மார்க்கிகட் கழகன்றென்க. இவ்வுரைப்படி பேதைப்புத்தனின் பிடகமென்னுங் கூடைநூலுக்கெட்டின சிவபெருமான் றிருவடிகளெனப்பிள்ளையவர்கள் எங்குமுரையாதிருக்க இவ்வுரைபுனைகாய் இவர் பக்கமே சாய்ந்தழியாது நிற்குமா?

சிவபெருமானைத் துதித்த மொழிகளனைத்தும் புத்தர் சார்பாகச் சேர்க்க முயன்றவர்கள் பூர்வபக்கத்தினராதலின் சிவதூஷணம் புரிந்தார் பூர்வபக்கத்தினரேயன்றிப் பிள்ளையவர்களல்லர். பிள்ளையவர்களையன்றி சமரசஞானம் பேசுவோரையும் பேசினோரையும் இவர் வேறெவரையு மறியார் போலும் சைவ சன்மார்க்கிகள் சமரசிகளே என்பதனை குளச சோமசுந்தரநாயக ரியற்றியுள்ள சமரச ஞானதீபம் என்னும் புத்தகத்தாலுணர்க.

பின். வேதசிவாகமங்களென்று வீண் வாதமாடுகின்றீர் என்னபயனோ விவை. எ - ம். சதுமறையாகம சாத்திரமெல்லாம் சந்தைப்படிப்பு நஞ் சொந்தப்படிப்போ, எ-ம். இரண்டுபாடல் வரிகளைவரைந்து, என்றின்னனவாகப் பற்பலவிடங்களிற் சிவபெருமானருளிச் செய்த வேதசிவாகமங்க

ளைத் தூஷித்த அதிபாதகரான இராலிங்கபிள்ளை சாக்கியவேதத்தைப் புகழ்ந்ததும் புத்தரைக் கொண்டாடியதும் கலியுகக்கூத்தே என்றார்.

பிள்ளையவர்களின் பாடல்களின் பொருளுணரும் சன்மார்க்கவழக்கமில்லாக் குறையானும் சிவஞானியர் நிந்தனையிற் சிக்கவேண்டிய தீவினையானும் நல்ல பாடல்களை யெல்லாம் கெட்ட பாடல் பாதகப்பாடல் அதிபாதகப்பாடலெனத் தூறிஇறுமாந்த இவர்பொய்ம்மை எத்தனைநாள் இவ்வுலகினர் மனதினிற்கும், அப்பாடல்களின் செம்பொருள்கருத்துப் பொருள்களை எடுத்துக்காட்டு மளவுமன்றி அதற்கு மேனில்லாமையை இவர்கருதினவரல்லர் அவ்வாறு கருதி இருந்தால் இவ்வாறெழுதார்.

"வேதாக மங்களென்று வீண்வா த மாடுகின்றீர்
வேதாகமத்தின் விளைவறியீர் - சூதாகச்
சொன்னவலா துண்மைவெளி தோன்ற வுரைத்தவிலை
என்ன பயனோ விவை." எ - ம்.

"சதுமறையாகம சாத்திர மெல்லாஞ்
சந்தைப்படிப்பு நஞ்சொந்தப் படிப்போ
விதுநெறி சுத்தசன்மார்க்கத்திற் சாகா
வித்தையைக் கற்றனனுத்தர மெனுமோர்
பொதுவளர் திசைநோக்கி வந்தனனென்றும்
பொன்றாமை வேண்டிடிலென் றோழிநீதான்
அதுவிது வென்னும லாடேடிபந்து
அருட்பெருஞ்சோதி கண்டாடேடிபந்து." எ - ம். கூறிய

இவைகளில் முதலது சுத்தசிவநிலையென்ற தலைப்பெயரின்கீழ் நாற்பத்தேழு வெண்பாக்களால் சன்மார்க்கானுபவ நிலையைஉரைத்திருக்கின்ற தொடரில் முப்பதாவதுபாடல். "இதன்பொருளை யுள்ளவாறுணருமாற்றலின்றி பிள்ளை வேதாகம நிந்தனை செய்தனர் என்று அவர்மீதுபழி கூறுகின்றனர்.

இதே தொடரில்"ஆரணமு மாகமமு மாங்காங் குரைக்கின்ற,காரணமுங் காரியமுங் காட்டுவித்தான்." எ - ம்.

"சாத்திரங்க ளெல்லாந் தடுமாற்றஞ் சொல்வதினி, நேத்திரங்கள் போற்காட்ட நேராவே-நேத்திரங்கள், சிற்றம்பலவன் றிருவருள் சீர்வண்ணமென்றே,உற்றறிந்தேனுவந்து" எ - ம்.

வரும் பாடல்க ளிவர் பக்கத்துக்குரித்தாய் வேதாகமமென்று வீண்வாதமாடுகின்றீர். என்ற பாடன் மட்டிலுந் தவறினைத் தலைமீதுகொண்டு நின்றீதாய் வெளிவந்ததைக் கருதினால் உலகினர் பிள்ளையவர்கண்மீது

கொண்டுள்ள நன்குமதிப்பைக் கெடுக்கவேண்டுமென்னும் அபிப்பிராயமே யன்றி வேறின்றென அனைவருமுணர்வர்.

“ நவிலுகலை யறுபத்து நாலுமுணர்வோரும் பவலயம தறுசுத்த பரம முணராரே.”

என்றுரையிவர் அறியார் போலும். வேதங்களை யோதியதனாலும் ஆகமங்களை யோதியதனாலும் அவ்விருநூல்களும் இறைவனைக் காண்டற்குக் கண்களாகா எனவும். சிற்றம்பலவன் றிருவருளே அவ்விறைவனைக் காண்டற்கு விழிகளெனவும் சன்மார்க்கிகள் கருதுமாறு கருதியபிள்ளை அவர்கள் வேதங்களாலும் ஆகமங்களாலும் இறைவனைக் காணலாமெனக் கருதும் கலைஞானிகளைக் கண்டித்து வேதாகமங்கள் மார்க்கங்களெனவும் மார்க்கத்திற் சென்றாலும் குருடன்பொருளைக் காணுந்திறமில்லாதவனா வானேயன்றி கண்ணுடையானே யொப்பப்பொருளைக் காணான். அவ்வாறு திருவருட்கண் பெறாதார் சிவபெருமானாகிய பொருளினைக்காணார் என்பதனை இவரறிந்திருந்தால் பிள்ளையவர்கள் வேதாகமநிந்தனை செய்தனர் என்றுகூறார். முன்காட்டியபாடலால் வேதாகமநிந்தனைசெய்தவராகப் பிள்ளையவர்களைக் கருதுமவர்கள் வேதாகமவழக்கறியாதாராதலின் அன்னவரே வேதாகமநிந்தனைசெய்தாராவர். பிள்ளையவர்களின் பாடல்களில் அநேகம் ஆயிரம் இடங்களில் வேதாகமங்களின் பெயர்களைக் காட்டி யனைவருக்கு மெளிதிலுணரத் தக்கவிதமாய்ப் புகழ்ந்திருத்தல் இவர்கள் கண்களுக்குப் புலப்படவில்லைபோலும், பிள்ளையவர்கள். “ போதாந்தபுரேச சிவாகம நாதாந்தநடேச் நமோநம. என்று ஆகமத்தினையும்” வேதவுறவே சுக போதநறவே. என வேதத்தினையும் ஆக வேதசிவாகமங்களைப் புகழ்ந்திருத்தற் கென்செய்வார். சமயிகளிற்சார்ந்த இவர் சமயாதீதக்கொள்கையை அறிதலெங்ஙனம்.

பிள்ளையவர்கள் வேதசிவாகம நிந்தனைசெய்த அதிபாதகரென இவரெழுதிவிட்டதனாலேயே அவர்கள் அதிபாதகராய் விடுவோர்களா? ஆகார் ஆகார். இவர்காட்டிய பாடற்கு சன்மார்க்கிகள் கொள்ளும் பொருள் சமய மார்க்கத்தினிற்கும் இவர்க் கிணங்காதுபோலும்.

பட்டினத்தடிகள், தந்திரத்தையுன்னித் தவத்தை மிகநிறுத்தி, மந்திரத்தையுன்னி மயக்கித் தடுமாறி, விந்துருகி நாதமாமே லொலியைக் காணாமல், அந்தரத்தே கோலெறிந்த அந்தகன்போ லானேனே. என்று ஆகமத்தைச் சுட்டிக்கூறி யிருத்தலை இவர் அறிந்திருந்தால் பிள்ளையவர்களை இகழ முற்படார் (தந்திரம் - ஆகமம்.)

திருமூலர், “சாத்திரமோதுஞ் சதிர்களைவிட்டு நீர்
மாத்திரைப்போது மறித்துள்ளே நோக்குமின்

என்று திருமூலர் சாத்திரங்களைக்குறித்துக் கூறியிருத்தலை நமது பூர்வ பக்கத்தார் அறிந்தவரல்லர். திருமூலர் பட்டினத்தடிகள் என்னு மிவர்களை யன்றி, தாயுமானவரும்,

"சுருதியே சிவாகமங்களே யுஙகளாற் சொல்லு
மொருதனிப் பொருளளவை யீதென்ன வாயுண்டோ
பொருதிரைக் கடலுண் மணலெண்ணினும் புகலக்
கருதவெட் டிடாநிறை பொருளளவை யார்காண்பார்." என்று

வேதசிவாகமங்களைக் குறித்துக் கூறியிருத்தலைத் தழுவிப்பிள்ளையவர்கள் கூறியபாடல் தவறுடையதன்றென்க. (அதன்பொருள்)வேதாகமஙகள் என்று-இருக்காதிவேதங்கள் எனவும், அவையன்றியுள்ள - ஆகமஙகளென வும்,கூறப்படுமவைகளில்-தாம் தாம் பயின்றவைகளுக் குயர்வும், பயிலாதவைகளுக்கு இழிவுங்கூறி-வீண்வாதம் ஆடுகின்றீர், பயனற்றவிவாதஙகளைச செய்கின்றீர்கள், வேதாகமத்தின் - நீவிர்சிறப்பாகக்கொண்ட, வேதாகமஙகளினால்-விளைவு, உண்டாதலை அறியீர் - இன்னதென அறியமாட்டீர்கள், இவை - இவ்வேதாகமங்கள், சூதாக-கபடமாக, சொன்னவலால்- உரைத்ததன்றி, உண்மை-மெய்ப்பொருளான சிவம், வெளி - சிதாகாயவெளியில், தோன்ற-நம்மிடத்துவெளிப்பட,உரைத்தஇலை-சொனனவையன்று,என்ன பயன் - அங்ஙனமுரையா விடத்து அவைகளால் நமக்கென்ன பிரயோசனம், ஓ-ஐயோ. (எ - று.)

வேதாகமங்கள் ஒன்றை யுரைககுஙகா லதனையே மெய்யென்று கூறி மற்றொன்றினை யுரைக்குங்கால்முன்னுரைத்ததனை இழித்துஇதுவே உயர்ந்தது என ஒன்றன்பின் ஒன்றாகக் கண்டிததுச் செல்லுமுட்கருத்துடையவையாதலின், அவைகளின் மொழிகளைச சூதென்றார்.

சரியைக் கழற்றி கிரியைக் கழற்றி யோகக்கழற்றி என ஒன்றின்பின்னொன்றை இகழுமானால் சூதுமொழியன்றி உண்மையாகுமா? ஆதலின் அளவினில்லாமல் அவைகளை யருளிய இறைவன்றிருவருள் வழிநில்லுங கள் ஒருவரை யொருவரிகழன்மின் என்பார். என்ன பயன் என்றார். பலபேதமான கொள்கைகளையுடைய வைதீகர்களும்பலபேதமான கொள் கைகளையுடைய சைவர்களும் ஒருவரோடொருவர் முரணி எம்பக்கமே சிறப்புடைப்பக்கம் நும்பக்கம் இழிவுடைப்பக்கம் எனக்கூறி மதச்சண்டையிடுதற்குக் காரணம் வேதாகமங்களின் விளைவறியாமையே விளைவறிவீரானல் நும்முள் நீவிர் சண்டையிட மாட்டீர்கள். எல்லாம் மெய்ப்பொருளான அறிவுருவனை யம்பலவாணனையன்றி இல்லையென்பது திருவருட் பேறுடையார் துணிபு. ஆதலின் நும் விவாதங்களால் நுமக்கும் உலகினருக்கும் உண்மைப்பயன் கிடையாதென்பது எமதுபட்சம் என்பார். என்னபயனோ இவை என்றார்.

"சமயகோடிகளெல்லாந் தந்தெய்வ மெந்தெய்வ மென்றெதிர் வழக்கிடவுநின்றதெது" என்ற தாயுமானாரின்வாய் மொழியாலேனும் சமயவாதிகளுளரெனவும் அன்னோரனைவரும் வேதாகமங்களால் வாதிடுபவர்களெனவும் இவரறியார்போலும். சண்டைவேண்டாம் சண்டைவேண்டாம். நூலினுட் கருத்தினை நுண்ணறிவினு லுணராது கலாம்விளையாதீர் என்றபெரியவரோ? வேதாகமநிந்தகராவர். அவருட்கருத்தினை உணராத பூர்வபக்கத்தவர் கூறியபொய்மொழிகள் ஆலோசனையில் அவலமுற்றழிந்தமை காண்க.

இதுகாறுஞ் சுத்த சிவநிலையைக்குறித்துரைத்த வெண்பாவைப்பற்றியுரைத்தாம். இனி இவர் காட்டிய மற்றொரு பாடலைப்பற்றியுரைக்கின்றாம். இதுஆனந்தமேலீடென்னும் தலைப்பெயரின்கீழ்பியாகடைஇராகத்தினையும் அடதாளத்தில் சாபினையுங்கொண்டு பாடவேண்டியதாய் ஒரு பல்லவியையும் பததுச்சரணங்களையும் உடையதாய் விளங்கும் ஒருபேரின்ப கீர்த்தனையின் நான்காவது சரணத்தின் முதலடியேயாம். அது, "சதுமறையாகம சாத்திரமெல்லாஞ் சந்தைப்படிப்பு நஞ்சொந்தப்படிப்போ" என்பதேயாம். இவ்வாறு கூறியிருத்தலை வேதாகம நிந்தையாகக்கொள்ளுதற்கிவர் கட்கதனிலோராதாரமும் இல்லையாகவும் ஏனைய மூன்றடிகளையுமறைத்து ஓரடியைமாத்திரங் காட்டி இது, பிள்ளையவர்கள் வேதாகமத்தை நிந்தித்த அதிபாதகப்பாடலென்றால் அதனை அறிவிலிகளன்றிப் பிறரெங்ஙனம் மெய்யெனக்கொள்ளுவர். சந்தைப்படிப் பென்பதன்பொருளை இவரறியாது வேதசிவாகமங்களை இகழ்ந்ததாகப் பிறழ்ந்து கூறுகின்றனர். பிறர்க்குணர்த்தும் கூசசலான படிப்பேயன்றி நம்மியல்பில் நாமிருத்தற்குரிய படிப்பு அருளுபதேசமாதலின் அதனையடைதற்கு சுத்தசன்மார்க்கத்தையடைந்தேன், பெற்றேன் என்றது வேதாகமத்தினை இகழ்ந்ததாகுமா? ஆகாது. பன்மார்க்கங்களுளுயர்ந்த சன்மார்க்க நெறிநின்ற சிவஞானியின் பாடலின்பொருளை யின்னவகையதெனவுணராது அவர்மீது நிந்தைகூறிய இப்பூர்வபக்கத்தார் சொற்கள் சன்மார்க்க சோதனையுட் சாய்ந்தழிந்தொழிந்தமை காண்க. சந்தை - இரட்டை முதலியவாக ஓதுமோரிலக்கணம்.

சந்தை - பண்டம் விற்கும் இடம். இவ்விரண்டிலெதனைக் கொள்ளினும் இழுக்காது. நான்குவேதங்களையும் ஒருவன் பலவருடங்களோதி,கனபாடி சடாவல்லவன் த்ரைவேதி முதலிய் பட்டங்களைப் பெறினும் அச்செயல் புண்ணியச் செயலாய் பிறவிக்கேதுவாய் நிற்குமேயன்றி, சனனமரணவொழிவைக் கொடுக்குமென்று எவருமுரையார் ஆதலின் அச்செயல் சன்மார்க்கச் செயலினும் இழிந்ததேயன்றி உயர்ந்ததாகாதென்க.

ஆகமங்களை எத்தனை இலக்கந் தொகைகளாகத் தான் மனனஞ் செய்து அவைகளைப் பிறர்க்குரைத்துலவுவதனால் புண்ணியமும் புண்ணியலோக வாழ்வு முண்டாகுமேயன்றி உதீயாமரியா வுணரா மறவா விதிமாலறியா விமலனைக் கூடியனுபவிக்கச் செய்யுமா?செய்யாது செய்யாது. அங

னஞ் செய்யுமேல் சகலாகம பண்டிதரெனச் சிறப்புப் பெயர் தாங்கி யிருந்த அருணந்தி சிவாசாரியர் தம்போ லாகமங்களைக் கற்றாரல்லாத மெய்கண்ட சிவாசாரியரிடத்து அருளுபதேசம் பெறவேண்டுவதின்றாம். பெற்ற பின்னரே பிறவிநீக்க முற்றதென "என்னை யிப்பவத்திற் சேராவகையெடுத் தென்சித்தத்தே தன்னை வைத்தருளினாலே தாளிணைதலை மேற் சூடு மின்னமர் பொழில்சூழ் வெண்ணை மேவிவாழ் மெய்கண்டான்" என்று துதித்ததுமன்றி தாமியற்றிய சிவஞான சித்தியுள் வேதாதிகள் இறைவனை யுணர்த்தாதென்றும், வேதாகமங்களை யுணர்ந்த பின்னர் இறைவன் திருவடியைச் சிந்தித்தல் வேண்டுமென வேதாகமம் பயிற்சியி னும் இறைவன் திருவடிச் சிந்தனமான சன்மார்க்கத்தில் நிற்பவர்களே சிறந்தவரென்றும்உண்மை கூறியிருத்தலையும் "மாலயன்மா மறையறியாவா திமார்க்கம், வையகத்துக்கமம் வேதமற்றுள்ள நூலெலா முணர்ந் திறைவன் கழலே நோக்கு நோன்மை யருந்தவர்" எனும்செய்யுட் பாதியை கேட்டுணர்ந்தா ரெவரும் உணர்வர் ஆதலின் இவர் பிள்ளையவர்கள் கருத்தினை யுணராது குற்றங் கூறினமைமயி னிவருரை தவறுரையென்க.

இவர்,பிள்ளையவர்கள் திருமூலர் முதலிய பண்டையோர் மரபை யனுசரித் துரைத்த பாடல்களுக் கபார்த்தஞ் செய்ததும் பிள்ளையவர்கள் புத்த மதத்தைப்புகழ்ந்தாரெனதவறுரைத்ததும்பல்லாயிரஞ் சாதுக்களின் மனங்களைப் புண்படுத்தியதே கலியுகக்கூத்தன்றி பிள்ளையவர்கள் உரைத்த நியாயமொழிகள் ஒருநாளுங் கலியுகக்கூத்தாகாதென்க.

பின்.இவர் தாமா திருவருட்பிரகாச வள்ளலார்? இப்பாட்டுக்களா திருவருட்பா? அன்பீர் இவர் தெருள் மருட்பிரகாசப் பொள்ளலாரும் இவர் பாடல் பெருமருட்பா எனவுங் கூறுதிர் என்றார், யாம் முன்காட்டிய பல பிரபல நியாயங்களால் பிள்ளையவர்கள் புத்தனையும் புத்தமதத்தையும் புகழ்ந்தின்மை பெறப்படுதலின் புத்தனையும் புத்தமதத்தையுங் கரவிற் புகழ்ந்தவர் இப் பூர்வபக்கத்தவரே யாதலின் இவர் விளித்த வன்பர்கள் ஒருநன்னாளில் இவர் பிள்ளையவர்களுக் கிட்டு வழங்க வமைத்து விடுத்த சிறந்த பட்டப்பெயர்களை இவர்க்கே சூட்டிமகிழ்வாராக.

தெருமருட்பிரகாசப் பொள்ளலும் பெருமருட்'கொள்கையும் இப் பூர்வபக்கத்தா ரிடத்தன்றி பிள்ளையவர்களிட மின்மையா லென்க.

பின், அம்பலப் பாட்டே அருட் பாட்டு, என்ற இராமலிங்க பிள்ளை அல்லாத பாட்டாகிய புத்தப்பாட்டைப் பாடினமையால் "அல்லாத பாட்டெல்லாம் மருட்பாட்டு" என்று அவர் காறியுமிழ்ந்தது அவர் முகத்தி னீங்காது அவர்க்கே வீழ்ந்தது காண்க என்றார். என்ன துணிவு அம்பலப் பாட்டான அருட்பாட்டையன்றி அல்லாத பாடலான புத்தப்பாடலைப் பாடினா ரென்று கூறினாரேயன்றி இன்னபாடலெனக் காட்டாமையா

னும் "புத்தந்தரு போத" என்பதும் அம்பலப்பாட்டன்றிப் புத்தப்பாட்
டன்றென்று தக்க நியாயங்களால் யாம் மறுத்திருத்தலைக் காணுமவர்
கள் அல்லாத பாட்டென சைவப்பாட்டினைக் காறியுமிழ்ந்தவர் இப் பூர்வ
பக்கத்தவரே யென நன்குணர்வர். ஆதலின் இவருரை தவறுரையென்க.

பின் இங்ஙனம் இவர் சொன்ன துண்மையாயின் மாணிக்கவாசகசுவா
மிகள் புத்தர்களை வாதில் வென்றதும் திருஞான சம்பந்த வள்ளலார் புத்
தர்களை வென்றதும் அவ்வாறு திருவருட்பாவை எழுதியருளிய அடியார் புத்
தநந்தி தலையையுருட்டியதும் பயனின்மையும் கொடுஞ்செயலுமாக முடியு
மென்க என்றார்.

இதுகாறும் இவர் கூறியவற்றைப் பார்த்தும் இவர்க்கே உடன்பாடற்ற
வை யென்பதை, இவரே இங்ஙனம் இவர் சொன்ன துண்மையாயினென்று
கூறியதனால் நன்கு விளங்குகின்றது. இங்ஙனமன்றவர் கூறியது நமது
பொருமையே இங்ஙனமெல்லா முண்மை யுரைக்கச் செய்தது என இங்கு
யாமவசியம் கூறநேர்ந்தமையிற் கூறினோம். திருஞான சம்பந்த சுவாமிகளை
திருஞான சம்பந்த வள்ளல் என்று கூறியது மரபன்மையிற் றவறென்க.
புத்தரை வாதில் வென்றவர் சம்பந்த சரணாலயரேயன்றி சம்பந்தப் பெரு
மானல்லர். ஆதலினது தவறென்க. ஞானசம்பந்த சுவாமிகள் திருவாக்கி
னின்றும் வெளிப்போந்த ஞானவாணிக்கு இதுகாறும் இத்தேயத்தில்
வழங்கி வரும் பெயர் தேவார மெனவும் திருநெறித் தமிழ் வேதமென
வும் தமிழ்வேதமெனவும் அன்றிஇவருரைக்குமாறு திருவருட்பா என்றன்று
என்பதனை இவரறியாமையால் திருவருட்பா திருவருட்பா என்று கூறுகின்
றனர். தேவார திருவாசகங்களுக்கு அருட்பா எனப் பெயரிட்டவர் இப்பூர்
வபக்கத்தவரி லொருவராய் இவர்க்கு முன்னிருந்த யாழ்ப்பாணத்து நல்
லூர் ஆறுமுக நாவலரே யன்றி வேறெவரு மல்லர். இராமலிங்கபிள்ளையவர்
கள் பாடற் புத்தகம் திருவருட்பா என வெளிவந்துலாவுவதனைக் கண்டு
அதனைக் கெடுக்கக்கருதி அகத்தியர் தேவாரத்திரட்டு திருவாசகம் திருவி
சைப்பா திருப்பல்லாண்டு பெரியபுராணச் செய்யுட்டிரட்டு என்பவைகளை
ஒரேபுத்தகமாக அச்சிட்டு வெளியிட்டகாலத்து அப்புத்தகத்தின் ஆசனத்
தில் அருட்பாஎனப் பொன்னெழுத்தால் எழுதி வெளியிட்டனர். அதுமு
தல் அவர்பக்கத்தாரான பூர்வபக்கத்தார் அவைகளை அருட்பா அருட்பா
என வழங்கி வருகின்றனர். பொருமை காரணமாக அவர் எழுதிவழங்கிய
தனை இத்தேயத்தவர்கள் ஒருபொருட் படுத்தா திருந்தார்கள். நாவலர்
அவர்களும் அருட்பா என்னும் பெயர் தேவார திருவாசகங்களின் முன்
னே நிற்றற் குரித்தன் றென்று கருதிப் போலும் புத்தகத்தின் பிற்புறத்
துப் பதித்தனர். இவர் அதனை மறந்து யாம் திருவருட்பா என்னும் பெய
ரைத் தேவார திருவாசகங்களுக்கே உரியதாகச் செய்வேமென ஒவ்வோ
ரிடங்களிலு மறவாமலெழுதுகின்றனர். இராமலிங்கபிள்ளை பாடல் ஆபாச
தர்ப்பணம் என்னும் எழுச்சுவடியிலன்றி தாமச்சிட்ட அகத்தியர் தேவாரத்

திரட்டு முதலியவைகளில் ஞானசம்பந்த வள்ளல்பாடிய அருட்பா திருநா வுக்கரசு வள்ளல்பாடிய அருட்பா சுந்தரமூர்த்தி வள்ளல்பாடிய அருட்பா மாணிக்கவாசக வள்ளல்பாடிய அருட்பா சேந்தவள்ளல் பாடிய அருட்பா கருவூர்த்தேவவள்ளன் முதலிய வள்ளன்மார்பாடியஅருட்பாக்கள்சேக்கிழார் வள்ளல் பாடிய அருட்பா என்றசசிட்டு வழங்கக்காணேம். அவைகளை யச சிடுங்காலத்து இவ்வளவு விரோத நிதழாமையால் அவ்வாறெழுத மறந்தனர் போலும்? இப்பூர்வபக்கத்தாரிடம் பெயரினைக்கொண்டு கூறுதற்கு இத்தே யததவர்கள் மாணிக்கவாசக ரெழுதிய திருவாசகங் கிடைத்தது அவர் பா டிய தேவாரம் ஒன்று வாங்கித் தருவீரென்றும் சம்பந்தர்பாடிய தேவாரங் கிடைத்தது அவர் பாடிய திருவாசகமொன்று வாங்கித் தருவீர் என்றுங் கூறும் புதுசைவ சம்பிரதாயிக ளன்றே, தலைமுறை தலைமுறையாக திரு ஞானசம்பந்த சுவாமிகளெனவும் திருநெறித் தமிழ்வேதமெனவும் தமிழ் வேதமெனவும் தேவாரம் எனவும் வழங்கிவரும் மரபினராதலின் ஸ்ரீஞான சம்பந்தப்பெருமானை ஞானசம்பந்த வள்ளலென்றலும் அவர் திருமொழிக ளைத் தேவாரமென்னுது அருட்பா என்னலும் இழுக்கின்றேனும் வழக்கின் மையின் கூறுரென்பதனை இவர் அறியாமையாலுரைத்தனரன்றி அறிந்து ரைத்தா ராகார்.

இசசென்னையி லிருந்தோரும் மகாவித்துவ சிரோமணியும் உரையா சிரியருமான காஞ்சிபுரம் சபாபதிமுதலியார் அவாகளால் இயற்றி சென்ற குரோதனஞ்ம் பங்குனிமீல் வெளியிட்ட திருநெறித் தமிழ்வேதச சந்தப் பா மாலையில் ஞானசம்பந்த சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய தேவாரங் களைத் திருநெறித் தமிழ்வேதமென்றன்றி அருட்பா என்று கூருமை காண்க.

திருநெறித் தமிழ்வேதச் சந்தப் பாமாலை.

"தெருளுறுத்தியதேவ குருவியற்றியபூசை
திகழ்தலத்தட மீதுசேர்
கரையினுற்றிகொன்மு னினைவுபெற்றழவீசர்
கருணைபெற் றருளாயதோர்
பரைமுலைத்திருஞான வமுதருத்தியவாயர்
பகர்தரப் பொலிவாகுமே
திருமறிக்கரநாத ரொருபிறைசசடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே."

என்று கூறியிருத்தல் காண்க. ஆதலின் இவருரை வழக்கவிரோதமா கித தேய்ந்தழிந்தமைகாண்க.

புததநந்தி தலையை யுருட்டியதற்கும் இராமலிங்கபிள்ளை பாடற்கும் எனன சம்பந்தம். பிள்ளையவர்கள் புததனைப் பாடியிருநதால் அதன்பயனை

அவருடையதேயன்றி சம்பந்த சரணாலயர் புத்தகத்தின் கொடுஞ்செயலைக் கண்டு "வித்தக நீறணிவார் வினைப்பகைக்குத் திரமாவனவஞ்செழுத்துமே" என்று தமிழ்வேத மந்திரஞ் செபித்து இடிவிழச் செய்தது பயனின்மையும் கொடுஞ்செய்கையுமாக எவ்வாறாகும். இவர்க்கவைகளைப் பயனின்மையுங் கொடுஞ்செய்கையுமாக உன்னவை எனக்கூற விருப்பமிருந்தால் தாமே கூறாமல் பிள்ளையவர்களின்பாடல்களுக்குஞ் சமயாசாரிய சுவாமிக ளருளிச் செய்த தமிழ்வேதங் களுக்கும் சம்பந்தங் கற்பிக்க வேண்டியதென்னை? இத னால் இவருட்கருத்து தேவார திருவாசகங்களும் இராமலிங்க பிள்ளை பா டல்களும் சமானமானவையேயாம் புத்தரைப் புகழ்தல் முதலிய சிலதவறு கள் தான் பிள்ளையின் பாடலிலுள்ளன அவையின்றேல் அவைகளை யொத் தனவே என்ற கருத்து இவருக் குண்டென்பதனை இவர் குறிப்புரை விளக்

தேவார திருவாசகாதி களுக்கும் இராமலிங்கபிள்ளை பாடல்களுக்கும் இப் பூர்வபக்கத்தாரை யன்றிப் பிறரெவரும் சமத்துவம் கூறவந்தாரில்லை. தேவார திருவாசகாதிகளின் சமுதாயப்பெயர் திருநெறித்தமிழ் வேத மென்பதே. இராமலிங்கபிள்ளை அவர்களின் பாடற் சமுதாயத்திற் கிட்டு வழங்கும் பெயர் திருவருட்பாவே. புத்தக வியாபாரிகளிடஞ் சென்று அரு ட்பா வொன்றெடுத்திரென்றால் இராமலிங்க பிள்ளை பாடற்றிரட்டினை எடுத் துக் கொடுப்பார்களேயன்றி தேவாரத் திருமுறையை எடுத்துக் காட்ட மாட்டார்கள் ஆதலின் தேவாரம் திருநெறித்தமிழ் வேதம் தமிழ்வேத முத லிய பெயர்களையன்றி திருவருட்பாஎன சமயாசாரியர் திருவாய்மலர்ந் தருளிய தேவார திருவாசகாதிகளை யுரைத்தல் வழக்க விரோதமாதலின் தவறென்க.

பின், அன்றியும் என்று தொடங்கி சமயாசாரியர்கள் புத்தசமணாதிக ளான மதங்களை யுடையார்களைச் சுட்டி - அவர்மொழி கேளாதேயுங்களெ ன்று கூறியுவைகளுள் சில காட்டி என்றின்னனவாகச்சமயாசாரிய சுவாமி கள்நால்வருரைத்தருளியு அருள்மொழிகளும் பயனில்லன வாகும் சந்தான சாரிய சுவாமிகள் மெய்கண்ட சாத்திரத்தி லருளியவும் பிழைபடும் வேதசி வாகமங்களும் முரண்படும் என்றார். ஹா ! ஹா !! இவரது புத்தி சாதுரியத் துக்காக இவரை மெச்சாதவர் யாவர் பாலூரி லிருந்த தொற்றனொருவன் செய்தது தவறானால் வேலூரிலிருந் தரசுபுரிந்தவ ரனைவருங் குற்றஞ் செய்த வர்களே என்பதனை இவர் ஒத்தவராகின்றார், சமயாசாரிய சுவாமிகள் சமய விரோதிகளாகப் புத்தர் முதலியோர் மிகுதிப்பட்ட ஞான்று இறைவனானை யுதல் திருவவதாரஞ் செய்தவராதலின் புத்தமதாதிகளைக் கண்டித்து அவை களிலனுவுமீறி நடந்தவர்களின் செருக்கினை யடக்கினர். இராமலிங்க பிள்ளையவர்களை இவர் சமயாசாரியருடன் சேர்த்தும் இவர் மொழிகளை வேதசிவாகமங்களுடன் ஒப்பிட்டுந் தந்நெஞ்சறியாமலே தவறுகூறி இடரு றுகின்றனர்.

உள்ளான் முதலிய சிறு குருவிகள் இயல்பாக வாற்புறத்தினை அடிக் கடி யசைத்தலைக் காணுமறிவிலிகளான சிறுவர்கள் பூமி கவிழ்ந்து விடுமோ என்னுஞ் சந்தேகத்தால் அசைத்துப் பார்க்கின்ற தென்றும்; கிளிமுதலியவைநீரருந்துவதைக்கண்டு இனிக் கடனீர்வற்றிவிடுமோவென்று மெண்ணு மவர்களையு மொப்ப நமது பூர்வபக்க நண்பர் இராமலிங்கபிள்ளை தவறுரைத் திருப்பரேல் வேதாகமங்களும் முரண்படும் என்று வேதசிவாக மங்களையும் திருநெறித் தமிழ் வேதங்களையும் மெய்கண்ட நூல்களையும் உறழ்த்திக்குழறி வழிந்ததெல்லாம் தவுறாய் இவரிட்டப்படி,பிள்ளையவர்கள் சிவபெருமானையே துதித்தனரன்றி புத்தனையும் பிடகத்தையும் துதித்தா ரில்லையென நியாயங்காட்டி மறுத்திருத்தலின் சமயாசாரியர் அருண்மொ ழிகள் பயனுடயவையாயும் மெய்கண்ட நூல்கள் பிழைபடாதனவாயும் வே தாகமங்கள் முரணற்றனவாயும் விளங்குகின்றன எனச் சமாதான சித்த முடை யவராவாராக.

ஆகையா லிப்படிப்பட்ட மருளரது பாட்டுக்களை விட்டொழித்து தே வார திருவாசக முதலிய பன்னிரு திருமுறைகளாம் அருட்பாக்களை யோ தியுய்யும்படியே யாம் வற்புறுத்த வந்தேம் என்றார்.

இவர் காட்டியபடி யாதொருமருளும் பிள்ளையவர்களிடம் இன்மை யாலும் தேவாரமுதலிய பன்னிரு திருமுறைகளையும் ஓதுதற் கனைவரும் உரியரன்மையாலும் ஓதவேண்டின் சமயம் முதலிய தீட்சை பெறுதலும், ஓதுவார்களிடம் பல்லாண்டு பண்வரிசையாகப் பழகுதலும் நியமவிரதங் களுட னிருத்தலுமுடையவர்களாதல் வேண்டும். பிள்ளையவர்களின்பா டல் எல்லாரானும் ஓதத்தக்க எளியநடையையுடையதானும் தீட்சைமுத லிய பெற்றேபடித்தல் வேண்டுமென்னு நியமமுடைய தன்மையானும் இராமலிங்க பிள்ளைபாடல்தாயுமானவர் பாடல் முதலியவைகளைச் செவ் வையாய்ப் பாடப்படிக்க வந்தவர்களே தீட்சைமுதலியபெற்றபின்னர் தே வார திருவாசகங்களைப் படிக்கத்தக்கோராதலினானும் இவர் பிள்ளையவர்க ளின் அருட்பாவினை படித்தல் கூடாதெனல் மரபுணராமையா னேர்ந்த தவறென்க.

சைவசம்பிரதாயிக ளனைவரும் பன்னிருதிருமுறைகளுள்தேவார திரு வாசகங்களை இவ்விதமாக மதித்திருப்பவர்கள் என்பதை யறியாதபுறமதத் தினரையொப்ப இவர் உலகினரனைவரையும் பொதுவாகப்பார்த்து பன் னிருதிருமுறைகளாம் அருட்பாக்களை யோதியுய்யும்படியே யாம்வற்புறுத்த வந்தேம் என்றல் சம்பிரதாய சைவர்களான தேசிகர்கள் ஓதுவார்கள் சிவா சாரியர்கள் முதலியோருக்கு அருவருப்பைக் கொடாமலிராதென்க.

பிள்ளையவர்கள் தேவார திருவாசங்களுக்கு மாறாகப் புத்தனையும் பிட கத்தையும் புகழ்ந்தனரென்பதற்கு பிள்ளையவர்கள் சிவபெருமானையும் வே

தங்களையும்புகழ்ந்தனரேயன்றிபுத்தத்தையும் பிடகத்தையும் புகழ்ந்ததென் பது தவறென்றும் புத்தனுக்குப்போதனென்றுபெயர் என்றதற்கு அன்றெ ன்றென்றும் புத்தர்க்கும் போதரென்றது புத்தனையும் பிடகத்தையுந் துதி த்ததென்றதற்கு அதுசிவபெருமானைத் துதித்ததேயென்றும் சாக்கியவேதம் என்றது, புத்தர்வேதத்தை யென்றதற்கு அவ்வாறு பிள்ளையவர்கள் கூறினரெ னக் கூறுவோர் மடமறியாரென்றும் வேதாகமங்களை நிந்தித்தனரென்ற தற்கு நிந்தித்ததில்லை யென்றும் தக்கநியாயங்களைக்காட்டி இராமலிங்க பிள்ளைபாடல் ஆபாசதர்ப்பணமென்னுஞ்சுவடியின் உ௩ம் பக்கமுதல் ௨௯-ம் பக்கம்வரைக்கு மெழுதியிருக்க எல்லாவிஷயங்களையு மெமது நியாயவச்சி குடாரத்தினால் தகர்த்தழித்தமை காண்க.

ஏமமதமுஞ் சமமதமென்றவர்

உலகாயதக்கோள்கையை யொப்பாததென்பதற்கு மறுப்பு.

பின் ஏமமதமுஞ்சமமதமென்றவர் உலகாயதக் கொள்கையையொப்பாத் தென் என்றதலைப்பின் கீழ் இராமலிங்கபிள்ளை "எம்மதமுஞ் சம்மதமென் றவர் என்று தொடங்கி அபிமானமின்றியாய்கிர என்று முடித்திருக்கின் றனர். எம்மதமுஞ் சம்மதமென்றவர்" பின்னர் அதற்குமாறாக உலகாய தமதத்தைக் கண்டிக்கார் எனகின்றார் இவர் மர்மமறியாது விடுக்குங்கடாக் களை நாம விடுக்கும் நியாய விடைகள் முட்டியடிக்குமென்பதை இவர் நினைத் திருந்தால் இவ்வாறெழுதத் துணியார்

எம்மதமுஞ்சம்மதமென்றவர் உலகாயதத்தினை யொப்பாததேனென் பவர்க்கு அவர் அவ்வாறு கூறியது அவரது சொந்தமன்று அவர் கொண்டுட்டான மதமான சைவமதமானது அத்தகையது சைவமெல்லாமாயும் அல்லவாயும் இருக்குமதமாகி மதாதீதப்பொருளைக்கொண்டு நிற்பதாதலின் எல்லாமாய் நிற்குமியல்பை விசாரிக்குமிடத்தில் எல்லாமதமுஞ் சம்மதமென்றும் அல் லதுமாய் நிற்றலை விசாரிக்குமிடத்தில் மற்றையமதங்களைப் பூர்வபட்சஞ் செய்தொதுக்கியு நிற்குமியல்பினதாதலின் அவ்வாறு கூறினார் என்க.

ஒருவன் உடன் முழுமையும் ஒரு தன்மையானது நானென்றுணர்தற் கிருஷ்ட நிகாஷ்டங்களை ஆராயாத ஆசனமும் வாயுமொன்றே தானென்று கொள்ள வேண்டுமென்றும் வாயவழி உட்புகுத்தும் பதார்த்தங்களை ஆசன வழியாகவும் உட்புகுத்த வேண்டுமெனவும், காலிலணியும் செருப்பினைத் தலையிலு மணியவேண்டுமென்றும் இலிங்கத்தின வழிக்கழியும் நீரினால் முகங்கழுவினால் தோஷமில்லை யென்றும் இவ்வாறெல்லாம் செய்ய சம்ம திக்காத ஒருவன் உடன் முழுமையு மொருதன்மையானது நான் என்று கூறுதல் கூடாது என்றுரைத்ததற்கே நமதுபூர்வ பக்கத்தாருரையுமிணையா கின்றது.

உலகாயதரெந்தக் கொள்கையைப் பிடித்தனரோ அந்தக்கொள்கையி லுலகாயதர் நிற்கின்றனர். இவரவ்வாறன்றி முக்குணவயத்தின், முறை

மறந்தறைவோரென்று பிள்ளையவர்களை இகழுகின்றனர். இதனால் இவர் கருத்து ஒவ்வொரு மதத்தினரும் அந்தக்கொள்கையிலேயே நிற்றல்வேண்டுமென்றாகின்றது. அன்னியமதங்களை அடைதல் கூடாதென்றால் புத்த மதத்தில் நின்ற சாக்கியர்சைவ சமயக்கடவுளை வழிபட்டுமுத்திபெற்றதும், தீவாந்தரவாசிகளிலனேகர் கிறித்து மதத்திற்புகுந்து பின் அறிஞருரையாலதினின்று நீங்கி சைவமதத்திற் புகுந்தார்களென்று தீவாந்தரநூல் கூறுதலும் அச்சுதானந்தர் சோமசுந்தர நாயகர் சண்முகம்பிள்ளை முதலியோர் மாயாவாத வைணவங்களில் சிலகாலம் பயின்று பின் வைதீகசைவம் ஆகம சைவமுதலிய சைவமார்க்கங்களில் பிரவேசித்து நின்றதுந் தவறாகவன்றோ இவரபிப்பிராயப்படி ஆகின்றது.

பிள்ளையவர்கள் முன்னொரு மதத்திலும் பின்னொரு மதத்திலும்புகுந்து தடுமாறினாரென்பது பொறாமையாலன்றி உண்மையிலன்று. பிள்ளையவர்கள் சைவசமயானுட்டானமுள்ள குலத்திலே பிறந்தனர். தாமுந் தீட்சை முதலியவை பெற்று சைவானுட்டானத்திலேயே இருந்தனர். பரிபாககாலத் தாசிரியனருணோக்கால் கிடைத்த சன்மார்க்க வழியிலே நின்றனர். சன்மார்க்கத்தினின்றும் அணுத்துணையும் பிசகினவரல்லர் என்பதை அவர் பாடல்களைப் பொதுமையாகப் படிப்பவர்கள் உணர்வர்.

தத்துவ விசாரணிப் பத்திராபர் முதலியோர் கடவுள் ஆன்மா என்பன யாவை, என்று இவரையுசாவிய காலை தக்கவிடை யிறுக்க முடியாது வாயில் வந்தவந்தாங்கு குழறினாரென்றும். அதுபற்றி அவர் அக்குழறுபடிகளையெல்லாம் மறுக்க, கோபங்கொண்டு அவரை வைதாரென்றும் அவர்கள் தத்துவ விசாரணி யென்னும் பத்திரிகையில் இவரது பொய்யொழுக்கங்களையும், மூடத்தன்மைகளையும் மூர்க்கப் பெற்றியையும் வெளியிட்டார். அந்தக் கோபத்தாற்றான் அம்மதத்தைக் கண்டித்தார். அல்லதேற் கண்டிக்கமாட்டார். உலகாயதத்தில் முதிர்ந்து மகளிர் கூட்டமே இவர்க்கு இறுதிக்கூட்ட மாண்மையால் இவர் மதமே உலகாயதமென்க. என்று உலகாயதத்தைக் கண்டித்தற்கு நியாயங் கூறுகின்றார்.

இவர்க்கு தத்துவ விசாரணிப்பத்திரிகையும் அதன் ஆசிரியர்கொள்கைகளும் சத்தியமானவைகளாய் பிள்ளையவர்களின் கொள்கையாதிய பொய்யாய் விளங்கியது ஆச்சரியம்! தத்துவவிசாரணி என்றபெயரினாலேயே உலகினர் அது ஞான விஷயங்களை எழுதும் ஒரு பத்திரிகையென்று கருதுவார்களன்றி ஒருமுறை அப்பத்திரிகையின் சிலவரிகளைப் படித்தவர்களும் அதனை விரும்பார்.

அது, கடவுள் என்றொரு பொருளில்லை; ஆன்மா என்று ஒன்று கிடையாது. சாதியும் சமயமும் மனிதர்கள் காலத்துக்கேற்க அமைத்துக் கொண்டதேயாம். என்பனவாதி நாஸ்திக விஷயங்களை எழுதி வெளியி

டும் பத்திரிகை ஆஸ்திகர்களான நமக்கு நேர் விரோதிகளான நாஸ்திகர்களின் கொள்கைகளை விளக்கும் அப்பத்திரிகை பொய்யன்றி மெய்யை உரைப்பதாக இவர்க்குத் தோன்றியது வியப்பினும் வியப்பே.

இவரபிப்பிராயப்படி தத்துவ விசாரணியின் ஆசிரியர் முதலியவர்கள் உலகாயத மதத்தினர் என்று எண்ண வேண்டியவர்களாகின்றார்கள். அவர்களதற் கிணங்குவார்களா? விரோத மதஸ்தர்களின் வாக்கு மூலமாக லால் பிள்ளையவர்களை இகழ்தல் தவறென்க. நாஸ்திகர்களுக்கும் உலகாயதர்களுக்கும் வேற்றுமையின்றென்று இவர் கருதுகின்றார்; எல்லாமதங்களையும் பொய்யென்று கூறும் தத்துவ விசாரணிக்காரர் உலகாயத மதத்தினைமெய்யாக்கித் தம்மதமாகக் கொள்ளுவார்களா? தத்துவ விசாரணி எழுதிய காலத்து நாஸ்திகரான பிரசித்திபெற்ற அதன் ஆசிரியர் இப்பொழுது ஆஸ்திகராய் தாமெழுதியவைகளைத் தாமே வெறுத்துக் கொள்ளுதலையும் இராமலிங்க பிள்ளை யவர்களைச் சிறந்தவர் தானென்று கூறுதலையும் இவரறியார் போலும்.

பலபெண்களாற் சூழப்பெற்று ரனைவரும் உலகாயதராகுல் எத்தனையோ சைவகுடும்பங்களில் பத்திருபது பெண்களும் ஒரு புருடனும் ஒரு கிரகத்தில் வாழுகின்றார்கள்.

அகால மரணமான பேதி, கொள்ளைநோய், வசூரி முதலியவைகளால் ஆண்துணை யிழந்து பெண்களே குழுமி வாழவும் பெண்களை யிழந்து ஆண்களேதனித்து வாழவு நேரிடுதலை இவரறியார்போலும்? இன்னோரில் முன்னுரைத்தார் உலகாயதராவரோ? இறுதிக்கூட்டம் மகளிர் கூட்டமென்பது தவறுளத்தரான சிலராலுரைக்கக் கேட்ட இவர் அவ்வாறெழுதுதல் தவறென்க.

பிள்ளையவர்களின் பாடலி னுபாசங்களை விளக்குவான் ஆரம்பித்த இவர்க்கவர் பாடலிலாபாசங்கள் கிடைக்காமையால் பிரதிக்ஞா விரோதமாய் பொய்யும் புளுகும் எழுதித் தொலைத்தனர்.

பின், உலகாயதத்தைக் கண்டித்தது வருமாறு. என்று தொடங்கி. பரமேது.............................. .. .. .. .......... .. .. .. .கூடாதருள் என்னும் பாடலடிகளைக் காட்டி யிருக்கின்றனர். இது பிள்ளையவாகள் சென்னையிலிருந்த ஞான்று கந்தக் கடவுளான தமது உபாசனு மூர்த்தியைத் துதித்த அநேகம் பாடல்களுள் தெய்வமணி மாலையென்னும் முப்பது பாடல்கொண்ட பாகத்தின் இரண்டாவது செய்யுள். இதனை உலகாயத மதத்தினைப் பொறாமை காரணமாக் கண்டித்த பாடல் என்று அதனீற்றடியை மறைத்து மற்றதனைக் காட்டி யிருக்கின்றனர்.

சின்னஞ்சிறுவரு மதனைக் குமரக்கடவுளைத் துதித்தபாடல் எனக் கருதுவார்களே. அங்ஙனங் கருதினுல் தங்கருத்து நிறைவேறுவதெங்ஙன். இங்ஙனம் வஞ்சனையாக எழுதுதல் சிறப்பாகாதென்க.

பிள்ளையவர்களின் பாடற்றிரட்டுப் புத்தகத்தின் 722 - ம் பக்கத்தும் 632 - ம் பக்கத்துங்கண்ட பாடல்களால் பிள்ளை எம்மதமும் சம்மதமென் றாரென்று முன்னரெழுதி பின்னர் 443 - ம் பக்கத்துப் பாடலைக் காட்டி முன் எம்மதமும் சம்மதமென்றவர் பின் உலகாயதமதத்தைக் கண்டித்தார் என்றார்.

443 - ம் பக்கம் முன்னிற்பதா ? 722 - ம் பக்கமும் 632 - ம் பக்கமும் முன்நிற்பதா? இராமலிங்கபிள்ளையவர்களிடமும் அவரின் புத்தகக் கண்ட னைக் காரரிடமும் அபிமானம்வையாது பொதுநிலையாக ஊன்றியாராய்வார் இவர்களபிப்பிராயத்தினை இன்னதென்றுணராமலிரார்.

முன்னுரைத்ததைப் பின்னென்றும் பின்னுரைத்ததை முன்னென் றுங் கூறுதலால் இவர் பிள்ளையவர்களின் புத்தகத்திற்கு எதிரியாகவந்தமை யால் அதனைப் படித்தலும் எதிராகவே இருத்தல்வேண்டுமென்று கருதினர் போலும். இவர் காட்டிய பாடலினீற்றில்.

“தரமேவு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர் தலமோங்கு கந்த வேளே, தண்முகத்துய்யமணி யுண்முகச்சைவமணி சண்முகத் தெய்வமணி யே” என்றிருத்தலில் அது இவர்கருதியவண்ணம் உலகாயத மதத்தினை மறு த்த பாடலன்றாதலானும் தமது உபாசனாமூர்த்தியைத் துதித்த பாவாத லானும் இவருரை வெற்றுரையென்க.

கடவுளையும் வினையையும் அதன்பயனையும் சுவர்க்கத்தையும் சீவனை யும் பந்தத்தையும் புத்திமுத்திகளையும் சீவகாருணியத்தையும் பாவபுண் ணியங்களையும் இல்லையென்று கருதி ஆகாரநித்திராமைதுனங்களிலுழலும் அறிவிலிகளுடன் என்னைச் சேராது செய்து இரட்சிப்பாயாககுமரக்கட வுளே என்றுதுதித்ததைத் தவறென்று கூறுதல் தவறன்றி பிள்ளையவர்கள் பாடல் ஆபாசப்பாடலாகாதென்க.

பின் அநுசிதமான சிலவரிகளை வரைந்திருக்கின்றனர். அவைகளில் இங்ஙனமுரைத்தவர் தாஞ்சாகுங் காலத்தில் என்னமதத்திலிருந்தாரெ னில் இந்த உலகாயதமதத்திலிருந்தாரென்க. என்பவையுஞ் சேர்ந்தவை யேயாம்.

இவரெவ்வா றெழுதிவிடினும் இத்தேயத்தினர் மெய்யெனக்கருதுவர் என்று கருதியே இத்தவறுரையை வரைந்தனர்.

பிள்ளையவர்களை இறந்தவரென இவரெழுதியது எமது கொள்கைப் படி அவர் உலகினர்கண்களுக்குப் புலப்படாது மறைந்தகாலத்தையேயாம். அது இப்பொழுது நிகழும் விசுவாவசுவருடத்துக்கு முப்பத்து மூன்றாவது வருடமான ஸ்ரீமுகவருஷம் ஆதலின் நமது பூர்வபக்கத்தார் அக்காலத்து

இவ்வுலகத திருப்பினும் தொட்டிலில் விளையாடுஞ் சிறுகுழந்தையாக வோ? பள்ளிச்சிறுவருடன் பயிலுமவராகவோ அன்றி யுக்தவயதுடையவ ராக இருந்திரார் என்பதனை அவருமங்கீகரிப்பர். ஆகவே அவ்வளவு இள வயதில் இவர் பிள்ளையவர்களி னிருப்பிடத்துக்குச் சென்று இவர் கொள் கைப்படி அவர்தாஞ் சாகுங்காலத்தில் உடனிருக்க நேர்ந்திராது. பிள்ளை யவர்களின் பகையாளர் சிலர் கூறக்கேட்டிவ்வா றெழுதுதல் தவறென்க.

இந்தவிஷயத்தி லிவரே முன்னொடு பின்முரணிக் கூறுகின்றார். இரா மலிங்கபிள்ளை சரிதம்பொய்யென் றிவரெழுதியபகுதியில் தாமேதம்முயிரை மாய்க்கத்தொடங்கிச சிவனை நோக்கி முறையிட்டார் என்றும் தாமே தம் முயிரை மாய்த்துக்கொண்டா ரென்றும் எழுதியிருக்கின்றார். தாம் உயிர் விடுங்காலத்துச சிவபெருமானை நோக்கி முறையிடுபவர் உலகாயதராக எங்ஙனம் ஆவர். ஆகார் ஆதலின் இக்கூறுரை பொய்யுரை யென்க.

பின் செத்தவர்களை யெழுப்புவோமென்று கதைகட்டி ஊரிலுள்ள கைம்மை மகளிரையெல்லாம் அழைப்பித்து வைத்துக்கொண்டு நிருவாணி களாகநின்று கொங்கை குலுங்கக்கும்மியடியுங்கடி. என்ற தமது மருட்பா பாட்டுக்களைப் பாடிக்கொம்மி யடிக்கச்செய்து பார்த்துமகிழ்ந்த உலகாயத மதப்பிரபு இவரல்லவோ? என்றார்.

ஊரிலுள்ள கைம்மைமகளிரையெல்லாம் அழைப்பித்து வைத்துக்கொ ள்ளுதலும் அவ்வனைவரையும் நிருவாணிகளாக நிற்கச்செய்தலும் கொங்கை குலுங்கக் கும்மியடியுங்கடி என்றதும் உண்மையாகுமா? ஊரிலுள்ள கைம் மைமகளிரனைவரும் அழைப்பிக்கப்பட்டு வைத்துக்கொள்ளுதற்கு எவ்வாறு மாகா தென்பதை மறந்து இவ்வாறு கூறியதோ அல்லது தமிழ்நாட்டுக் கைம்மை மகளிரனைவரை யும் கற்பின்மகளிர் என்று கூறவேண்டுமென்னுந் துரெண்ணமோ அல்லது இவ்வாறுகூறுவதனால் பெருந்துயறு நேரிடுமென் றெண்ணுமையாலோ துணிவுகொண்டு இவ்வண்ணமெழுதி விடுத்தனர். அநுசிதம் அநுசிதம். ஊரிலுள்ளகைம்மை மகளிரை எல்லாம் என்றமையால் புருஷனிறந்தவுடனே பெண்களைப் பிள்ளையவர்களிடம் விட்டுவிடுவார்க ளா? ஊரிலுள்ள குடும்பிகளனைவரும் தமது குலமடவியர்களை நிருவாணிக ளாக்கிக் கும்மியடிக்கவிட்டாரென்றால் அக்காலத்திலிருந்த புருடரனைவ ரும் நாணமும் ரோஷமும் வெட்கமும் இல்லாதவர்கள் போலும்.

பொருட்பெண்டிரி லிழிந்தோருஞ்செய்ய விரும்பாத நிருவாணிகளா தலை,குலத்திற்பிறந்த குணசாலிகளான பெண்கள் செய்யவிரும்புவார்களா? கூட்டமாக ஆடையின்றிநின்றுகும்மியடிக்கச சம்மதிப்பார்களா? ஆடையின் றிவிலங்குகளை யொப்பக்குழுமி நின்று கும்மியடித்தல் எத்தேயத்திலேனும் இரகசியத்திலேனும் வழக்கமுண்டா?

ஊரிலுள்ளகைம்மைமகளிரையெல்லாம் என்றதனால்அக்காலத்திலிருந் தவெல்லாச சாதிப்பெண்களுமென்று பொருளாதலை மறந்தனர்போலும்

பார்ப்பனக்கைம்மையர்முதல்பறைக்கைம்மையரிறுவாயாகஅனைத்துக் கைம்மையரையும் இவர் பிள்ளையவர்களெதிரேமானங்காட்டி மதியிழந்தவர்களாகவுரைத்தல் மிகுபாவமென்க.

“கொங்கை குலுங்கக்கொம்மியடியுங்கடி” என்றபாடலடியை ஆதாரமாகவைத்துக்கொண்டு அறிவிலிகள்சிலர்சொன்னவைகளைநம்பி எழுதினவராதலின் இப்பெருந்தவறுக்கிவர்பாத்திரராயினர்.எவருமுரைக்கக்கேட்டிலேம் என்பரேல் இவருமுடனிருந்தவராவர். யாமுடனிருந்ததுமில்லை பிறருரைத்ததுமில்லை எனின். நீவிரிந்த ஆபாச விஷயங்களை எந்த ஆதாரத்தைக்கொண்டெழுதினீர் என்றுதிரேம். இவ்வாறு உலகினரனைவருக்கும் வெறுப்புண்டாகும் வண்ணம். எல்லாக்கைம் மையரையும் இகழ்ந்துரைத்தலின் இதுதவறென்க.

கலனிழந்த கைம்மைமகளிருடன் கூடிவாழுதல் உலகாயதரின் வழக்கமென இவரெந்த நூலில் கண்டனர். அவ்வாறொரு நூலின்மையின் உலகாயதப் பிரபுவென பிள்ளையவர்களை இவருரைத்தது அநாதாரமாய் அழிந்ததறிக.

ஊரிலுள்ள கைம்மையரை எல்லாம் அழைப்பிக்கும் ஆற்றலும் அவர்களை நிருவாணிகளாக்குந் தந்திரமுமதனால் மகிழ்ச்சியுமடைய விரும்பிய பிள்ளையவர்கள் தாலியுள்ள பெண்களை அழைப்பித்தால் வாரார் என்று அவர்களை யழைப்பிக்க வில்லையோ?

எல்லாக் கைம்மையரும் பிள்ளையவர்களின் வழிப்பட்டவர்களானால் வீடுகளிலிருந்த சுமங்கலிகள் கன்னியர்முதலியோர்,அக்கைம்மைமகளிரின் மக்கள் மருமக்கள் தங்கையர் தமக்கையர் மாமியர் தாயர் பாட்டியர் முதலியர்களாகத் தானே இருப்பார்கள். இவர்களை யவர் விரும்பாமலும் அழையாமலும் விடுத்து முண்டைகளை மாத்திரங் கண்டு மகிழ்ந்தது, முண்டைச்சிகளிடம் எதாயினும் விசேஷ மிருக்குமென்று கருதிப்போலும் ஆலோசிக்குமிடத்து இவை அனைத்தும் பொய்யேயன்றி உண்மையன்றென்க.

பின், அம்மடப் பெண்களுக்குப்புருடருக்குப்பதிலாகபுத்திரவரங்கொடுத்துச்சிலரைப் புருடர்சென்ற வானுலகுக் கனுப்பியும் சிலரைத் தம்மனைவியைப்போல கள்ளப்புருடருடன்கூட்டியனுப்பியும் சிலரைத்தம்மைப்போல சாதிமுதலியவற்றைத்துறந்த துறவில்விட்டும் அலைத்தவர் இராமலிங்கபிள்ளையாகும் பாவி அன்றோ? என்றார்.

இது முன்னுரைத்த விஷயத்தினும் கொடியவிஷயமேயாம். சைவசித்தாந்தியெனத் தம்மைச்சொல்லிக்கொள்ளுமிவர்.ஆன்மாக்களின் சுதந்தரம் இவ்வளவுதூரம் என்பதனை மறந்து பிள்ளையவர்களைச்சுட்டிப் புருடருக்குப் பதிலாகப் புத்திரவரங்கொடுத்தும் என்று கூறினார்.

இவருரை யானே பெண்களைக் கைம்பெண்கள் என வறிந்தோம். கைம்பெண்கள் புத்திரவரங்கேட்பார்களா? விபசாரிகளான பெண்களின் கணவர்கள் வானுலகில் வாழ்தலை எந்த நூலாதாரத்தாலறிந்தனரோவறியேம். விபசாரஞ்செய்திறந்த பெண்களுக்கு வானுலகங்கிடைக்குமா? கிடைக்காதாதலின் பெண்களை வானுலகனுப்பினர் எனக்கூறுதல் தவறேயாம்.

சிலரைத் தம் மனைவியைப்போல கள்ளப்புருடருடன் கூட்டியனுப்பியும் என்றதனால் பெண்களுக்குச் சொந்தப் புருடர் யாவர். பிள்ளையவர்கள் மனைவி கள்ளப்புருடருடன் கூடி வாழ்ந்ததற்காதாரமென்னை? பிள்ளையவர்களாலேயே யவர்மனைவிக்கொரு புடருனை நியமித்துக்கூட்டியனுப்பப் பட்டால் அவன் கள்ளப்புருடனுவானு? பிள்ளையவர்களின் ஊழிற்கும்அவர் மனைவியின் ஊழிற்கும் என்ன சம்பந்தம்? இவர் உலகில்நடக்குமனைத்தும் மானுஷீகமென கருதியவராதலி னவ்வாறுகூறினர். இவரையன்றியுள்ள சைவசம்பிரதாயிகளெவரும் இவ்வாறு கூறார். அவர்கள் பிராரத்துவங்களைப் புசிப்பிப்போன் கடவுளென்றும் புசிப்போர் ஆன்மாக்களென்றும் ஆன்மாக்கள் சுதந்தர ஈனரென்றும் கூறுநூல்களினுடன்பாடுள்ளவர்க ளாதலினென்க.

வன்மையற்ற உணவினையுடையராய் மெல்லிய உடலினையுடையராய் ஒடுங்கிய பொறிகளையுடையராய் சிவயோகியாய் விளங்கிய இராமலிங்க பிள்ளையவர்கள் அநேகமாயிரம் பெண்களைக் கற்பழித்தாரெனக் குறிப்பித்தலான பிள்ளை வரங்கொடுத்த லென்பது அநுசிதமுந் தவறுமாயுள்ளதேயன்றி உண்மையன்றென்க.

இவர் எடுத்துக்காட்டும் ஒவ்வொரு விஷயத்திற்கும்பிள்ளையவர்களின் பாடலைக் காட்டவேண்டியவராக அங்ஙனம் காட்டவகையின்றி தம்மனம் போனவாறெல்லாம் எழுதியிருத்தலே அதற்குச் சான்றென்க.

பின் சிலரைத்தம்மைப்போல சாதிமுதலியவற்றைத் துறந்த துறவில் விடுத்தும் அலைத்தவர் இராமலிங்கபிள்ளையாம் பாவி அன்றோ? என்றார்.

சாதி முதலியவைகளைத் துறத்தல் துறவன்றென்று இவர் கருதியவராதலின் சாதிமுதலியவற்றைத் துறந்ததுறவினை இகழுகின்றனர்.

சாதிமுதலியவைகளைத் துறவாது பின்னெதைத் துறப்பது துறவு. துறவறத்திலிவருக்கு விருப்பமில்லாவிடி னதனை இகழுதலறமாகுமா? சாதியாதிகளைப் பந்தமெனவும் பொய்யெனவும் அறிந்துவிட்டவனே துறவியென்பதனை இவரறியாது கூறிவிட்டதனால் விவேகிகளதனை அங்கீகரிப்பார்களா?

யாம் முன்னுரைத்த ஆதாரங்களால் அது புண்ணியச்செயலாக அறியப்படலானும்பிள்ளையவர்கள் இச்செயலால்எவ்வாறுபாவியாவார். நந்தன்

பர்க்குப் புண்ணியமனைத்தும் பாவமாகவும் பாவமனைத்தும் புண்ணியமாகவும் தோற்ற நேர்ந்தது வியப்பேயாம்.

இவரிவ்வாறு கூறுவதற்காதாரமிது எனக்காட்டாமையால் யாமும் இவர் மெய்யெனக் கூறியவைகளைப் பொய்யென மறுத்தாம்.

பின் எத்தகைய உலகாயதர் தாமும் பூப்புள்ளாளைப் புணருதற்குக் கூசுவர். நமது இராமலிங்கபிள்ளையோ தாம் அப்படியுள்ள பெண்களைச் சேர்ந்ததாகத் தாமேயுரைத்துளார் அப்பாடல்கள் வருமாறு என்று வரைந்து அதன்கீழ் "பூப்புப்பெண்களைப் புணர்ந்தாரிலிங்கர்" என்ற தலைப்பின் கீழ்"போகமேவிழைந்தேன்என்றும் பூப்பினும் பலகான்மடந்தயரென்றும்" ஆரம்பிக்கப்பெற்ற இரண்டுபாடலடிகளைக் காட்டி இருக்கின்றனர்.

இவ்விதமாகப் பாடியிருப்பதனு லிவர்பிள்ளையவர்களை "பூப்புடைப் பெண்களைப் புணர்ந்தாரிலிங்கர்" என்றிகழுகின்றனர். ஒருவர் தமது குற்றங்களைக் கடவுளிடம் விண்ணப்பஞ்செய்து கொள்வதில் உபயோகப்படுத்தும் மொழிகளின் தாரதம்மியங்களை ஆராயாது அவரவ்வாறு கூறியிருத்தலால் அச்செயல் செய்திருப்பாரெனக் கோடல் நியாயமாகாது; கடவுளைத் துதித்த ஒவ்வொருவரும் தந்நிலையை இழித்துக்கூறுவது இத்தேசத்துச் சைவசம்பிரதாயிகளின் வழக்கம் என்பதனை மறந்து இவ்வாறுரைத்தனர்.

"பெண்ணாகி வந்தொரு மாயப்பிசாசம் பிடித்திட்டெனைக்
கண்ணால் வெருட்டி முலையான் மயக்கிக் கடிதடத்துப்
புண்ணாங் குழியிடைத் தள்ளியென் போதப்பொருள் பறிக்க
எண்ணாது னைமறந்தே னிறைவாகச்சியே கம்பனே." எ - ம்.

"ஈங்கிவைசெய்யாதுயாங்களெல்லாம்
பழுதின்றுயர்ந்தளழுநிலைமாடத்துஞ்
செந்தாது திர்ந்தநந்தாவனத்துந்
தென்றலியங்குமன்றிலகத்துந்
தண்டாச்சித்திரமண்டபமருங்கிலும்
பூவிரிதரங்கவாவிக்கரையிலு
மயிற்பெடையாலக்குயிற்றியகுன்றிலும்
வேண்டுழிவேண்டுழியாண்டாண்டிட்ட
மருப்பினியன்றவாளரிசுமந்த
விருப்புறுகட்டின்மீமிசைப்படுத்த
வைவகையமளியணைமேற்பொங்கத்
தண்மலர்கமழும்வெண்டுகில்விரித்துப்
பட்டினுட்பெய்தபதநுண்பஞ்சி
னெட்டணையருகாக்கொட்டைகள்பரப்பிப்

பாயன்மீமிசைப்பரிபுரமிழற்றச்
சாயலன்னத்தின்றளர்நடைபயிற்றிப்
பொற்ருேரணத்தேச்சுற்றியதுகிலெனு
வம்மென்குறங்கிலெனும்மென்கலிங்கங்
கண்ணுமனமுங்கவற்றிப்பண்வர
விரங்குமணிமேகலைமருங்கிற்கிடப்ப
வாடரவல்குலரும்பெறனுசுப்பு
வாடவீங்கியவனமுலைகதிர்ப்ப
வணியியல்கமுகையலங்கரித்ததுபோன்
மணியியலாரங்கதிர்விரித்தொளிர்தர
மணிவளைதாங்குமணிகெழுமென்ருேள்

வுத்தரியப்பட்டொருபாலொளிதர
வள்ளைவாட்டியவொள்ளிருகாதொடு
பவளத்தருகாத்தரளநிரைத்தாங்
கொழுகிநீண்டகுமிழொன்றுபதித்துக்
காவன்வேலுங்காமபாணமு
மாலகாலமுமனைத்துமிடைத்த
விரண்டுநாட்டமும்புரண்டுசுடைதுயல்தர
மதியெனமாசறுவதனம்விளங்கப்
புதுவிரையலங்கல்குழன்மிசைப்பொலியு
மஞ்சொன்மடந்தையராகந்தோய்ந்தும்"

என்றும் பட்டினத்தடிகள் புணர்ச்சித்திறத்தினை விரித்துக் கூறித் தாமவ்வாறு செய்ததாகக் குறிப்பிட்டிருத்தலானும்.

தாயுமானவர்.

"யாம் பாவியேம், விரவு மறுசுவையி னுடு வேண்டுவ
புசித்தரையில் வேண்டுவ வெலாமுடுத்தி
மேடைமாளிகையாதி வீட்டினிடை வைகியே
வேறொரு வருத்தமின்றி
யுபக லேழையர்கள் சையோக மாயினேம்." எ - ம்.

"மின்போலு மிடையொடியு மொடியுமென மொழிதல்போல்
மென்சிலம் பொலிக ளார்ப்ப
வீங்கிப் புடைத்து விழுசுமை யன்னகொங் கைமட
மின்னார்கள் பின்னேவலாய்
வென்போ லலைந்தவர்கள் கற்ருர்கள் கல்லார்க
ளிருவர்களி லொருவ ருண்டோ
என்செய்வேனம்மம்ம வென்பாவமென்கொடுமை
யேதென்றெடுத்து மொழிவேன்." எ-ம்.

"வீங்கித்தளர்ந்து விழுமுலையார் மேல்விழுந்து
தூங்குமதன் சோம்பைத்துடைக்கு நாளெந்நாளோ"?-எ-ம்.

"பருவங்குலவுகின்ற மடமங்கையர் தொடங்கு
கபடந்தனில் விழுந்துகெடுநினைவாகி,
வலையின்புடைமறிந்த மறியென்ற வசமுண்டு.

வசனந்திரமுமின்றி அவரிதழுறல்
பருகுந்தொழிலிணங்கி யிரவும்பகலுமின்சொல்
பகரும்படிதுணிந்து குழலழகாக
மாலைவகைபலசூடியுடனே.

பதுமந்தனை யிசைந்த முலையேன்றதை யுகந்து, வரிவண் டென வுழன்று கலிலெனவாடுஞ்-சிறுகிண்கிணி சிலம்பு புனைதண்டைகண் முழங கும். ஒலி நன்றென மகிழ்ந்து செவிகொளநாசி, பசுமஞ்சளின் வியந்த மணமுந்திட முகந்து, பவமிஞ்சிடவிறைஞ்சி, வரிசையினூடு,

காலின்மிசைமுடிசூடிமயலாய்

மருளுந் தெருளும்வந்து கதியென்பதை மறந்து
மதனன்சலதிபோங்க விரணமதான
அளிபுண்டனை வளைந்து விரல்கொண்டுற வளைந்து
சுரதஞ்சுகமிதென்று பரவசமாகி

மருவுந்தொழில் மிகுந்து தினமுந் தினமும் விஞ்சி வளரும் பிறை குறைந்தபடி மதிசோர. எ. ம்.

பெண்போகஞ் செய்ததாக உரைத்திருத்தலை இனியேனுங் காணுமி வர் பட்டினத்தடிகளும் உலகாயதர் தான் தாயுமானவரும் உலகாயதர் தான் என்று கூற மனமிசைவாரா? இவ்விரு பெரியோர்களு மடவாரைப் புணர்ந்தோமெனச் சுருங்க வுரையாது நன்றாய் புணர்ச் சித்திறங்களை விரித்தே உரைத்திருக்கின்றனர். இவர்களின் நூலின் வழியொழுகுவோ ராதலின் பிள்ளையவர்களும் தமது குறைகளைக் கடவுண்மாட்டு விண்ணப் பஞ்செய்தது தவறுகுமா? உலகாயத மதத்தர் கடவுளைச் சுட்டியு முரைப் பார்களோ? உரையார் என்பதை இனியேனு நினைப்பாராக.

அவர் சொன்னதைத் தானே நாமுரைக்கின்றோம் நாம் புதிதாக வெ தனையு முரைக்கவில்லையே யென்பீரேல். நீவிர் காட்டிய பாட்டின் முதலா வதின் இரண்டாவ தடியில் - "ஏகமே பொருளென் றறிந்திலேன்" எ - ம். இரண்டாவதன் இரண்டாவதடியில்"பள்ளனேன் கள்ளனே" எ-ம். அதன் றொடரான மூன்றாவது பாடன் முதலியவைகளில்"புழுத்தலைப் புலையேன்" எ - ம். "கொக்கனேன்" எ - ம். சுணங்கன் சழக்கன். எ - ம். பட்டிமாட னேயேன். எ - ம். பூஞையேன். எ - ம். குப்பைமேற்போட்ட செட்டிலைய

னேயேன். எ - ம். குப்பைமேற்போட்ட நெட்டிலை - உண்டு கழித்த எச்ச
விலை. வெறியேன். எ - ம். துரும்பினுங் கடையேன். எ - ம்-அசடன் எ-ம்.
அறிவிலேன். எ - ம். கழுதெலாமனையேன். எ - ம்.

வருமிவைகளை யெல்லாம் சம்மதமாகக் கொண்டால் பூனை, நாய், எச்சலிலை; எருது முதலியவாக பிள்ளையவர்கள் உருக்கொண் டிருந்தாரென் றுமதுவாயா லுரைக்க நேரும். அங்ஙன நேர்ந்தால் உலகாயதருக் கிவையுடன்பாடா வென்பேம் ஆம் என்றால். போம் உமக்கு உலகாயத மதப்பெயரன்றி அதனிலை தெரியா தென்பேம்.

இதனைவிரு புறத்திலுஞ் சொற்பல்குதலன்றி முடிவு சித்திக்காது. ஆதலின்,முன்னுளோர் கூறியவாறு தங்குறைகளைக் கடவுள்சன்னிதியில் கூறிய பிள்ளையவர்கள் பூப்புடைப் பெண்களைப் புணர்ந்தா ரென்றது தவறென்க.

பின் இப்பாடல்களுக்கு ஆத்தும விசாரத் தழுங்கல் என்னும் பெயர் கொடுத்தார். இவை தானோ ஆத்துமவிசாரத் தழுங்கல் நல்ல அழுங்கல்! அழுங்கல்!! நீவிர்களும் அழுங்கள் என்றார்.

நியாயந் தெரியாதார் வாயில் வந்தனவற்றை அஞ்சாது கூறுமாறு இவரும், கூறுகின்றாரே அன்றி இன்ன நியாயத்தாலிது கூடாது என்று கூறாமல் வாளாபரிகசிக்கின்றனர்.

இவருக் கதற்பொருள் தெரியாமையா லழவேண்டியதை விடுத்து பிறரை நோக்கி நீங்களும் அழுங்கள் என்று கூறியதே இவரது நுண்ணறிவினை நன்கு விளக்கிக் காட்டுகின்றது.

ஆத்தும விசாரத் தழுங்கல். என்பதற்கு சீவவியாபாரத்துக்காக வருந்தல் என்றே பொருள். ஆன்மா இறைவனைக்கூடி யனுபவிப்பதனை விடுத்து மலத்தைக்கூடி யனுபவித்தல் தக்கதன்றென வருநதுவோர் சன்மார்க்க சைவராதலின், சன்மார்க்க சைவரனைவருக்கு முடன்பாடான அப்பெயர் இவர்க்கு விகாரமாகத் தோன்றிய தாசசரியம்.

பாடலின் பொருளுக் கேற்பவமைத்த பெயரை ஆராயாது தவறெனச்சுட்டியது தவறென்க.

பின். சமயாசாரிய சுவாமிகள் - குலம்பொல்லேன் முதலாகக் கூறியதுபோல கூறினாரெனல் சிறிதும் பொருந்தாது. என்னை இங்ஙனம் திரிடத்தும் சமயாசாரிய சுவாமிகள் முதலிய திருவருட்பாக்காரர். கூறாமையானும் இராமலிங்க பிள்ளையிடம் இக்கொடுஞ் செய்கைகள் சாங்காறுமிருந்தமையானு மென்க. இதற்குதாரணம் இடக்கரடக்கலாகலின் வெளிப்படுத்த வெள்கினோம். என்றார்.

சமயாசாரியர்கள் இவ்வாறு ஓரிடத்தும் உரைத்திலர் என்றமையால் அவர்கள் உரைத்தவற்றிற் சிலகாட்டுகின்றாம்

"கொள்ளேர் பிளவகலாத் தடங்கொங்கையர்
கொவ்வைச் செவ்வாய் விள்ளே னெனினும்
கண்டாய். எ - ம்.

காருறுகண்ணிய ரைம்புலனுற் றங்கரை மரமாய்
வேருறுவேனை விடுதி கண்டாய். எ - ம்.

செழுகின்ற தீப்புகுவிட்டிலில் சின்மொழியாரிற்
பன்னாள் விழுகின்ற வென்னை விடுதிகண்டாய். எ - ம்.

கொழுமணியேர் நகையார் கொங்கைக்குன்றிடைச்
சென்றுகுன்றி விழுமடியேனை விடுதிகண்டாய் எ - ம்.

வலைத்தலை மானன்ன நோக்கியர் நோக்கின் வலையிற்பட்டு
நிகண்டாய். எ - ம்.

உழைதரு நோக்கியர் கொங்கைப்பலாப் பழத்தீ
யினைப்பாய் விழைதருவேனை. எ - ம்.

"சுருள்புரி கூழையர் சூழலிற் பட்டுன்றிற மறந்திங்கிருள் புரியாக்கை யிலே கிடந்தெய்த்தனன்." எ - ம். அனேக இடங்களில் மாதர் மோகத் துச்சிக்கியதாக சமயாசாரிய சுவாமிகளுள் மாணிக்கவாசக சுவாமிகள் கூறி யிருத்தலானும்,

"செஞ்சேலன கண்ணார் திறத்தே கிடந்துலறி, நஞ்சேனனடியேன் நலமொன் றறியாமையினல்; என்று சமயாசாரிய சுவாமிகளுள் சுந்தரமூர்த்திசுவாமிகளும்,

"தம்மானங் காப்பதாகித் தையலார் வலையுளாழ்ந்து
அம்மானை யமுதன்றன்னை யாதியை யந்தமாய
செம்மான வொளிகொண் மேனிச்சிந்தையு ளொன்றிநின்ற
எம்மானை நினையமாட்டேன்"

என்று சமயாசாரிய சுவாமிகளுள் திருநாவுக்கரசு சுவாமிகளும் கூறி யிருத்தலின் இவர் சமயாசாரிய சுவாமிகள் அவ்வாறு கூறினரில்லையென்று கூறியது தவறென்க.

சமயாசாரிய சுவாமிகள் - குலம்பொல்லேன் முதலாகக் கூறியன பிறர்க்குரியவையாயின் அவர் அன்பற்றவரும் பொய்சொற்றவரும் ஆவர்.

அவர்கண்ணீராருயொழுக அழுதழுது பாடினரென ஆங்காங்குரைத் திருத்தல் நாடகத்தின் பாற்படும் என்பதனை மறந்து இவ்வாறு கூறினர். சந்திரவதி முதலிய வேஷங்களைத் தாங்கி நிற்கும் ஆடவர்கள் கேட்போர் மனமுருகுமாறு தேவதாசன் முதலியரின் மரணத்துக்காக அழுது புரண் டடித்துக் கொள்ளுதலையன்றோ இவர் கூறிய பாகங்களில் சமயாசாரியரா கின்றனர்.

கூத்திலழுவோன். உண்மையில் துக்கமேயில்லாது நடிப்பாக அழுவதனை அறிந்துள்ளவர்கள் அவன் துக்கத்தாலழுகின்றானென்று நம்புவார்களா? அவ்வாறே பிறரின் பொருட்டே சமயாசாரிய சுவாமிகள் உருகி உருகிப் பாடியதென்றால் உருகுதல்முதலிய அவர் செயலனைத்தும் பொய்யாகி அவர்முத்தியும் அவ்வாறே நடிப்பாக முடியும். இத்தேயத்து நன்மக்களிலெவரும் இவ்வாறு எக்காலத்தும் நினையார் ஆதலின் இது இப்பூர்வ பக்கத்தாரபிப்பிராயமேயாம்; ஆகவே இவர்கள் சமயாசாரியர்களிடம் நன்கு மதிப்புவைத்திருப்பவர்களென்று யாம் எடுத்துக் காட்டவேண்டுவதின்றாம்.

சமயாசாரியசுவாமிகள் அன்பின் மேலீட்டால் ஒப்புமுயர்வுமற்ற இறைவன் முன்னர் தம்மையன்றிப் பிறரின் பொருட்டுத்தா நடிப்பாகக் கூறினாரென்றல் தவறென்க.

அநுசிதமான அநேகஞ் சொற்களால் தமது வழுச்சுவடியை அலங்கரித்த இவர் இதற்குதாரணம் இடக்கரடக்கலாதலால் வெளிப்படுத்தவெள்கினேம். என்றதெதனையோ? இடக்கரடக்கலென்பது நன்மக்களிடத்தே சொல்லத்தகாத சொல்லை அவ்வாய்பாடுமறைத்துப்பிறவாய்பாட்டால் சொல்வதன்றோ? அதுமலங்கழீஇவருதுமென்பதைக்கால் கழீஇவருதுமென்றும் பீ என்பதைப்பகரவீ என்றும் பவ்வீ என்றும் கூறுவனவாதியவேயாம். ஆகவே தகுதிவழக்கிற்குரிய இடக்கரடக்கலை வெளிப்படுத்த வெள்கினேம் என்று கூறுதல் தவறென்க.

இடக்கர்மொழிகளை அவைகளை யுணர்த்தும் வேறுமொழிகளால் கூறுவதே இடக்கரடக்கலாதலின் இடக்கரடக்கலைக் கூறவெள்கும் இன்னோர் இடக்கர் மொழிகளை உரைக்க வெள்கார்போலும் இதென்ன விபரீத உணர்ச்சி இடக்கரடக்கலை உரைக்க வெள்குதல் தவறென்க.

பின், பெண்ணோயினாற் பெரிதும் வருந்திய இவர் சிவஞானது போதிசயமே என்றார்.

இவர் சன்மார்க்க சம்பிரதாய முணராதவரை யொப்ப விவகரிக்க வந்தாரேயன்றி இவர் கூற்றனைத்தும் சன்மார்க்க விரோதமானவையே.

சிவமாய் விளங்கும் ஞானிகள் இருவினையற்றவராயினும் மூவகை பிராரத்துவ கன்மங்களை அநுபவித்தே தீருதல்வேண்டு மென்பதனை மறந்து கூறுகின்றார்.

ஒருவன் ஒருவனைப் பார்த்து இவன் சில்லாண்டுகளுக்கு முன்னர் சிறுவனாக இருந்தானாதலின் இப்பொழுது பெரியோனானானென்பது தவறு என்றால் அதனை யாவரேனும் சரியென் றங்கீகரிப்பார்களா? ஓரான்மா ஒரேசனனத்தில் காம போகாதிகளினும் சிவானுபவத்திலும் நிற்காது என்றன்றோ இவர் கருதுகின்றார் இவரதிம்மொழி ஞானசாரமுடையாரிடம் பயன்படாதென்க

பிள்ளைவர்கள் பெண்ணேயால் பெரிதும் வருந்தினுரென இவரும் இவ ரினத்தரும் கூறுவார்களேயன்றி வேறெவரும் அவரைக் காமநோயால் வருந்தினுரென்றும் இவரெழுதி யிருக்கும் ஆபாசச் செயல்களைச் செய்தா ரென்றுங் கழறுவாரல்லர்.

இவ்விதமான பாடல்களைப் புதிதாகக் காண்பவராதலின் இவர்க்கதி சயத்தினை விளைக்காம லிராது. அதனுற்றுன் அதிசயத்திலும் பேரதிசய மென்றுர்.

பின். என்னைக் கொடுத்தேன் பெண்பேய்கட் கின்பமெனவே யெ னக்கவர்நோய் தன்னைக் கொடுத்தார் நானந்தோ தளர்ந்து நின்றேன். என்னும் பாடலடியை எடுத்துக் காட்டி பிள்ளை பெண்ணேயிற் பெரிது மலமந்தார். என்று கூறிமகிழுகின்றுர்.

இவர் காட்டிய பாடலில் பெண் போகத்தைப் பிள்ளை யவர்கள் இகழ்ந்து கூறியது தவறுனுல் இவருக்குப் பெண் போகத்தைப் புகழ்ந்து கூறியபாடலே ந்யாயமாகவேண்டும் அவ்வாறுனுல் இவர் கொள்கை சால வழகிதேயாம்.

ஒற்றியூரின்க ணெழுந்தருளியிருக்கும் ஒளிமணியுருவப் பெருமானே அடியேன் பெண் பேய்களின் வசமாகிக் கண்ட வின்பமென்பது துன்ப மன்றி வேறென்றின்மையில் ஆவாகெட்டேனேஎன இளைத்துநின்றேனல் லது செவ்விய பொன்னைக்கொடுத்தும் பெறுதற்கரிய பொருளே உன்னை துதிக்கின்றிலேன் துன்பத்தைத் தருகின்ற பாவச் செயலினையுடையேன். எதற்காக இவ்விடத்தில் நிற்கின்றேன் என்னும் பொருளைத்தரும் அப்பா டலைக் காணும் ஒவ்வொருவரும் பிள்ளையவர்களின் அன்பின்திறத்தைக்குறி த்து வியந்து பேசுவார்களேயன்றி இவர்களைப்போல இகழ்ந்துபேசமாட் டார்கள்.

"என்னைக் கொடுத்தேன் பெண்பேய்கட் கின்பமெனவே
யெனக்கவர்நோய்
தன்னைக் கொடுத்தார் நானந்தோ தளர்ந்துநின்றே
னல்லதுசெம்
பொன்னைக் கொடுத்தும் பெறவரிய பொருளே யுன்னைப்
போற்றுகிலே
னின்னற் கொடுத்தபவமுடையே னெற்றுக்
கிவணிற் கின்றேனே."

என்பதில் குணமன்றிக் குற்றமின்மை விவேகிகள் அறியாதிரார்.

பின் இதனுலே பெண்ணேயாற் பீடிக்கப்பட்டாரென்பது நன்குவி ளங்கும். பூப்புள்ள பெண்களைப் புணர்ந்தா ரென்பதும் இதனுற் சித்தித் தது பூபுள்ளப் பெண்களைப் புணர்ந்த இவர்க்கப் பெண்ணேய் வந்த தென்பது ஓரதிசயமன்று. அதற்காகவே இரசஞ்சேர்ந்த மருந்தினை பரிகா

ரிகந்தப் பிள்ளையிடம் வாங்கியுண்டு அதனாலே இராமலிங்கபிள்ளைக்குப் பற்களும் விழுந்தமை யார்க்குந் தெரிந்ததொன்றே என்று வரைந்திருக்கின்றனர்.

இவ்வாறானால் நாமெடுத்துக்காட்டிய பாடல்களின்வண்ணம் பட்டினத்தடிகள், தாயுமானார், மாணிக்கவாசக சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள் முதலிய பெருந்துறவிகளும் மாதரைப்புணர்ந்தவல முற்ற இழிவிற்குப் பாத்திரராதல் வேண்டும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் அக்குற்றத்துக்குரியவாராவர். இக்காட்டிய பெரியோர்களைத் தமது ஆன்மார்த்தமூர்த்தியான சிவபெருமானைப் பாவித்து வணங்கும் பிள்ளையவர்களும் அவர்களுடனிவ் விழிவுக்குரியாராதலுண்மையே லதனாலிழுக்கின்றென்க. அவ்வாறிசைந்தற்கெவருமிசையாராதலின் இவர் காட்டிய வினைத்தும் இவர்க்கும இவரினத்தவர்களுக்குமாத்திரம் உடன்பாடாகுமேயன்றி இத்தமிழுலகினருக்குடன்பாடாகாதென்க. ஒருவர் பாடலின் உட்கருத்தினை நோக்காது ஒன்றிரண்டு சொற்களைக்கொண்டு நம் மனம்போனவாறு அதனை இழுத்தலைத்தால் அது நிலையுறுமா நிலையுறாதென்க.

பிள்ளையவர்களிடம் அநேகம் பெயர்கள் அநேகம் மருந்துகளைத் தெரிந்துகொண்டு அதனால் சிறந்தவைத்தியர்களாகி இன்றும் இவ்வுலகில் இருக்கின்றார்கள். என்பதனை இவரறியாதவராதலின் பரிகாரிக்கந்தபிள்ளையிடம் இரசஞ்சேர்ந்த மருந்துண்டு பற்களை யிழந்தனர் என்று கூறுகின்றனர்.

வைத்தியனுக்குப் பரிகாரியெனப் பெயரிருப்பினும் இத்தேயத்தில் அம்பட்ட வைத்தியர்கட்கே அப்பெயர் வழங்குகின்றது.

பரிகாரி,கந்தப்பிள்ளையானது எந்த வரிசையோ அறிகிலேம்.

இரசங்கலந்த மருந்தருந்தினால் பற்கள் விழுந்து போமெனசசாமானியர்கள் உரைப்பதனை நம்பி இவர் இரசங்கலந்த மருந்தருந்தி இராமலிங்க பிள்ளை பற்களை யிழந்தார். என்றுகூறுதல் பெருந்தவறு இராமலிங்கபிள்ளை இரசங்கலந்த மருந்தருந்தவுமில்லை அவர்பற்களை இழக்கவுமில்லையாதலின் இவர் கூற்றுவெறுங் கூற்றென்க.

இரசங்கலந்த மருந்தினாலும் தனி இரசமருந்தினாலும் பற்கள் விழுந்து போமெனக் கூறியது வைத்திய சாத்திரத்திற் பழக்கமுள்ளவரென்று காட்டற்குப்போலும்; வைத்திய சாத்திரமானது இவ்வாறு கூறுதற்கு இடந்தராதென்று எச்சரிக்கின்றோம்.

**இதுபற்றியே திராவிடப் பிரகாசிகை, 102 - ம் பக்கத்தில்**
**(துதர்க்காரணிய நாசமகாபரசு கண்டனம்.)**

வெள்ளைமா நதியின்மாடே விளங்கவோளூர் கண்டேழா
னுள்ளுயிர் துறந்தோர் யாக்கை யூங்குறப் புதைப்பித்திட்டுக்

*கொள்ளையா மாந்தர்கூடி யுயிர்ப்பிப்பலெனப் பொய்கூறி*
*வெள்ளிடி யொடுநோயுண்டு வீந்தவன் மருளனாவான்.*

என எடுத்துக் காட்டப்பட்டது என்றார்.

திராவிடப் பிரகாசிகையின் ஆசிரியர். யாழ்ப்பாணத்துச் சபாபதிநாவலர். இவரிதனை யியற்றி யச்சிட்டது சென்ற விகாரிவருடம் கார்த்திகை௴ அது இப்பொழுது நிகழும் விசுவாவசு௵ சித்திரைக்கு. ஐந்து வருடமும் ஐந்து மாதமுமாகியது. அதனுள் இவர் காட்டியபடி குதர்க்காரணிய நாசமகாபரசு கண்டனத்தி லுள்ளதென்று இவர் காட்டிய பாடலைக் காட்டவில்லை. அன்றியும் காட்டியதனிலும் வீந்தவன் மருளனாவான் என்றுங் காட்டவில்லை. ஆதலினிது குதர்க்காரணிய நாசமகாபரசு கண்டனமென்னுஞ் சுவடியிலுள்ள தன்றென்றும் அங்ஙன மொருசுவடி இதுகாறுமெவருமெழுதினா ரில்லையாதலின் சபாபதி நாவலர் போலியருட்பா மறுப்பின் பெயரையே வரைந்திருக்கின்றனர். தாமே போலியருட்பா வழுத்திரட்டெனப் பெயர்தந்து வேறெடுத்துக் காட்டுதும் என்று வரைந்து வைத்து இறந்தனர். முப்பது வருடங்களுக்கு முன்னரே போலியருட்பா மறுப்பென்னும் வழுச்சுவடியை அது தோன்றிய தொண்ணூறு நாட்களுக்குள்ளேயே குதர்க்காரணிய நாசமகா பரசினால் கண்டித் தொதுக்கியும் பின்னரு மதனையே மீட்டும் மீட்டும் எழுதுமிவர்களின் விடாப்பிடிக்கு நகையாதாரிந்நாட்டில் வெகு சுருக்கமென்க.

தாமே ஒரு பாடலைப்பாடி இது அதனிலுள்ளது எனறு கூறினாலதனை படியாமாந்தரன்றிப் படித்த மனிதர்கள் நம்புவார்களா? யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலரை யபிமானித்த யாழ்ப்பாணத்துச் சபாபதிநாவலர் கூறிய ஆபாச விஷயங்களை சன்மார்க்கிகள் அங்கீகரியா ரென்பதனை இனியேனு மிவருணர்வாராக. பிள்ளையவர்கள் பாடல்கள் அச்சயந்திரமேறிப் புத்தகவுருவமாகிப் பலவாயிரஞ் சனங்களின் கரங்களில் தங்கி அவர்கணெஞ்சறையுட் புகுந்துறைத்து வேரூன்றி நிற்கத்தொடங்கியபின் இருபத்தெட்டு வருஷங்காறு மாலோசித்து ஒரு பாடலெழுதி தமது திராவிடப் பிரகாசிகையி னொருபுறத்துத் தூரபிமானத்தாற் சொருகி வைத்ததனால் இந்நாட்டுச் சற்சனர்களில் விருப்பமுள்ளவர்கள் பிள்ளையவர்களின் பாடலை அலட்சியஞ் செய்வார்களா?

கிறித்தவர் முதலிய அன்னிய மதவாதிகள் தெருக்கள் தோறுநின்று வேதசிவாகமங்களையும் கடவுளையும் அளவு கடந்து இகழுகின்றார்களே அதற்காக இத்தேயத்தவர் சைவமுதலிய மதங்களில் வெறுப்புக்கொண்டு அன்னிய மதங்களில் பிரவேசித்தார்களா? பிரவேசிப்பார்களா? அதுபோல இவர்களின் இகழ்ச்சி மொழிகளைப் பொருட்படுத்தி இத்தேயத் தறிஞர்கள் மகிழாரென்பதனை இவரறிந் திருந்தால் திராவிடப் பிரகாசிகையை யெடுத் துதாரணங் காட்டார்.

பின் இங்ஙனம் உலகாயதமதப்பயனை யடைந்த இவர் உலகாயதத்தைக் கண்டித்ததும் பின்னர் எம்மதமுஞ் சம்மதமென்றதும் தகுதியில்லாதனவேயாம் என்றார்.

சிவனைபெருமாத் துதித்தவர்கள் துதிப்பவர்களனைவரும் உலகாயத மதப்பயனை அடைவதுண்மையேல் இவரும் அடைவர் அங்ஙனமெய்த நூலுமுறையாமையால் இவருரை வெற்றுரையென்க.

இவர் பிள்ளையவர்கள்முன் எம்மதமுஞ் சம்மதமென்றார் என்றவர். உலகாயதத்தைக் கண்டித்தது தவறென்று கூறிப் பின்னர் உலகாயதத்தைக் கண்டித்த இவர் பின்னர் எம்மதமுஞ் சம்மதமென்றதும் தகுதியில்லாதன என்ற இவர் முன்னொடு பின் முரணிக்கூறியதே தகுதியற்றதென்க.

உலகாயதக் கொள்கையை ஒப்பாததென் என்றதற்கு உலகாயதக் கொள்கையை ஒப்பவேண்டியவிடத் தொப்பியும் மறுக்கவேண்டியவிடத்து மறுத்தும் கூறுதல் ஆன்றோராசாரமாதலின் இழுக்கின்றென்றும் உலகாயதத்தைக் கண்டித்ததாக ஆதாரங் காட்டாமையால் நம்முரை தவறென்றும் ஒவ்வொராட்சேபங்களுக்குந் தேவாரம் திருவாசகம் பதினோராந்திருமுறை தாயுமானவர் முதலிய பிரபல சுருதிகளால் விடையிறுத்து எமது நியாயவச்சிரகுடாரத்தால் இராமலிங்கபிள்ளை பாட லாபாசதர்ப்பணச் சுவடியின் உக - வது பக்கமுதல் nn - வது பக்கம் வரைக்கும் அழிக்கப்பட்டமை காண்க.

## மாயாவாதவைணவங்களை மறுத்தாரென்றதன் மறுப்பு.

மாயாவாத வைணவங்களை மறுத்தார் என்ற தலைப்பின்கீழ் எம்மதமுஞ் சமமதமென்ற இராமலிங்கபிள்ளை உடனே அதனை மறந்து நாம் பிரமமென்னும் போலி வேதாந்திகளையும் வைணவத்தையும் கண்டித்ததென் என்றார். இவர் சைவசமயமானது எல்லாமா யல்லதுமா யிருக்கு மதமென்பதனையும் அதனதன் அளவிற்குச் சம்மதமென்றன்றி எல்லா மதமும் ஒரு தன்மையானதுதான் ஆதலின் சம்மதமெனக் கூறுவதன்றாதலின் பிள்ளையவர்களும் அங்கீகரித்து மறுத்திருப்பின் இழுக்கின்றென்றென வுணராததென்.

மாயனு மயனுங் காணாத கடவுளென்றதனால் வைணவ இரணிய கருப்ப வாதங்களை மறுத்தார் என்றார். இதனால் சைவ சமயத்துக்குஞ் சமயிகளுக்கும் இழுக்கொன்று மில்லையாதலினிவைகளை யெடுத்துக்காட்டுதல் அநுசிதமென்க.

பின்னும் மாயாவாதத்தைமறுத்துங்கொண்டார் என்றாரம்பித்து சத்து என்பது பிரமமொன்றேயுள்ளது. எல்லாம் ஒன்று என்பது மாயாவாதக்

கொள்கையாகும். என்று சில பாடலடிகளைக்காட்டி அவைகளை மாயாவா தத்தை மறுத்துங்கொண்ட பாடல் என்கின்றார்.

அவைகளிலொன்று

இவ்வுலகங் கானலென்றே சொல்லும் வகையறிவித்தாய் என்பது மாயாவாதத்தை மறுத்துக்கொண்டதாம்.

இங்ஙன முரைத்தல் மாயாவாதமன்று சைவசன்மார்க்கமேயா மென்ப தனை அறியாதாராதலின் மயங்கிக் கூறுகின்றனர். தாயுமானசுவாமிகள் "பாராதியண்டமெலாம் படர்கானற்சலம்போற் பார்த்தனையே என்று கூறியிருத்தலினாலும்.

## திருப்போரூர் சந்நிதிமுறையில்.

"சுருதியின்றுணிவா னினைவுகொண்டுலகந்துச்ச மென்றுணர்த னிச்ச யமாம். கருதுறுநினைவையடக்கி யிவ்வுலகங்கானலேன்றுணர்ந்திடல்சமாதி இருவகையாய் முன்னுரைத்தவையின்றி யிலஙகறி வுருவமாயிருத்தல், பொ ருவறுசகச ஞானமென் றிசைத்தான் போரிவாழாறுமாமுகனே"என்று கூறியிருப்பதனாலுமது சைவசன்மார்க்கப் பாடலேயாதல் காண்க.

"பொய்ம்மாயப்பெருங்கடலிற் புலம்பாநின்ற" என்று சமயாசாரிய சுவாமிகள் கூறியிருத்தலின் உலகங்கற்பனை யெனவுங்கானனீ ரெனவுங் கண்டல் மாயாவாத மாகாதென்க.

"தூக்கி முன்செய்த பொய்யறத்துகளாறுத் தெழுதரு சுடர்சசோதி, யாக்கியாண்டு தன்னடியரிற் கூட்டிய வதிசயங்கண்டாமே."என்று தமிழ் வேதங் கூறுதலின், அருட்சோதியானே னென்றது மாயாவாதமாகாதெ ன்க. "எல்லாமறிந்த வறிவினைநானெனன்னி; யெல்லாமறிந்த விறையென லாமே"-என்பது திருமந்திரமாதலானும்சன்மார்க்கிகள் சிவோகம்பாவனை யுடையராதலினாலும், தானேநானேனென்றதுமாயாவாதமாகாதென்க.

"ஏகனனேகனென்றும்;"ஒன்றாகியுலகனைத்து மானார்தாமே"என்று தமிழ்வேதங் கூறலின் - எல்லாஞ் சிவரூபமாகக் காணலான வண்ணம் வேறென்னினும் என்றது, மாயாவாத மாகாதென்க.

"சீவனெனச் சிவனென்ன வேறில்லை
சீவனார் சிவனாரை யறிகிலர்
சீவனார் சிவனாரை யறிந்தபின்
சீவனார் சிவனாயிட் டிருப்பரே."

என்பது திருமந்திரமாதலின் "உள்ளதேயுள்ள திரண்டிலை யெல்லா மொருமயமென வுணர்ந்தனால்" என்றது மாயாவாத மாகாமைகாண்க.

"ஏகநாயகனை இமையவர்க்கரைசை" என திருவிசைப்பாவிலும் "ஒருருவாயினை" எனவும், ஒன்றவன்றானே "ஏகனனேகன்" எனவும் தமிழ்வேதத்துங் கேட்கப்படுதலாலும் ஏகமே பொருளென்றது மாயாவாத மாகாமை காண்க.

இராமலிங்கபிள்ளை அவர்கள் சன்மார்க்க சைவராகவுள்ளவ ரென்பதை அறிந்துகொள்ளும் ஆற்றலற்றவிவர்.

இப்பாட்டுக்களாலே இராமலிங்க ரென்பார் மாயாவாத மதத்தைக் கைக்கொண்டவ ரென்பது தெளிவாகக் காணப்படும். என்றார். மாயாவாத சைவசன்மார்க்காதிகளின் தாரதம்மியங்களை அறியாத இவர் மாயாவாதியெனப்பிள்ளையவர்களை உரைத்தல் தவறெனை யாம்காட்டிய பிரபல நியாயங்கள் நிலைநிறுத்தின ஆதலின் இவருரை வெற்றுரையென்க.

பின் இங்ஙனம் விவர்த்தமாகிய ஏகான்மவாதப் புறச்சமயக்கொள்கையுடையவரா திருவருட்பிரகாசவள்ளலாவார். இப்பாடல்களா திருவருட்பா எனப்படும் என்றார்.

இவர் மாயாவாதமொழிகளென மருண்டு காட்டிய மொழிகளனைத்தும் வைதீக சைவசித்தாந்த மொழிகளாய் விளங்குதலை நியாயபூர்வமாகத்தமிழ்வேதமுதலியபிரமாணங்களைக்காட்டி மறுத்தமையின் இவர் இராமலிங்கபிள்ளையை **திருவருட்பிரகாச வள்ளலார்** எனவும் அவர் பாடல்களைத் **திருவருட்பா** எனவுங் கூறக் கடமைப்பட்டவராகின்றார்.

பொறாமை காரணமாகக் கண்டனை எழுதவந்தவர் எந்த நியாயங்காட்டினும் தங் கொள்கையை விடுவாரா? விடார் விடார்.

பின் இம்மாயாவாதமருள் இவர்க்கெங்ஙனம் வந்து மூடிற்றோ கூறுமின் என்றார்.

இதனை யிவர் அறிந்துகொள்வதனாலிவர் பக்கத்துக்கென்னவெற்றி? மாயாவாத மருள் மூடியது இராமலிங்கபிள்ளை யவர்களையன்று என்பதே அதற்கு விடை. இராமலிங்கபிள்ளையின் மாணாக்கரான வேலுமுதலியாரும் மறந்து மருட்பா வரலாற்றில் வாதியாயருள் விழுங்கி மாயாவாதியனுகி என்று இராமலிங்கபிள்ளையை மாயாவாதியாகக் கூறிவிட்டார் என்று கூறி மகிழுகின்றனர் மருட்பா வரலாறெனை ஒன்று கிடையாது.

பிள்ளையவர்களின் மாணாக்கரான வேலாயுதமுதலியாரை ஆறுமுகநாவலர் வேலுமுதலி என்றெழுதியதற்கு அது கூடாதெனத் தக்க சமாதானங் குதர்க்காரணிய நாசமகாபரசி லெழுதியிருப்பதை அறியாதார்போன்று வேலுமுதலியார் என்றெழுதுகின்றனர். இவர் காட்டிய பாடலடியால் அது அருட்பா வரலாற்றிலுள்ளதென்றும் தொழுவூர் வேலாயுதமுதலியார் பாடியதென்றும் அறிகின்றோம்.

அது, வேதியாய் மலக்களிம்பை நீக்கியெமைப் பொன்னாக்கும், வாதியாயருள்விழுங்கி மாயாவாதியனாகிச் சோதியாய் விளையாடுந் தோன்றல். என்பதனிடையில் நின்ற மாயாவாதியனாகி யென்பதன் பொருளுணர்ந்தவரைப்போல குழறிவழிந்தனர். இதன்பொருள். வேதியாய்-ஞானவேதியாய், மலக்களிம்பை-மும்மலங்களாகிய களிம்பினைநீக்கி-அகற்றி, எமை-எம்மை, பொன்னாக்கும் - பொன்னாகச் செய்கின்ற, வாதியாய் - இரசவாதியாய், அருள் - அருளால், விழுங்கி - மூடப்பெற்று, மாயா - கெடாத, ஆதியன் - ஆகி, முழுமுதலான சிவனைத் தன்னி லுடையவனாகி, சோதியாய் ஞானப்பிரகாசனாய், விளையாடும் - விளையாடுகின்ற, தோன்றல் - தலைவன், என்பதேயாம். இங்ஙனம் அன்றி சந்திபிரியாது இவர் மறந்து மாயாவாதியன் என்று கூறிவிட்டார் என்றதன்றி மாயாவாதியனெனக் கூறின தின்மையின் இவருரைபடிற் றுரையென்க. அருளால் விழுங்கப் பெற்றானும் மாயாவாதிய னாவனோ? பூர்வோத்தர சம்பந்தத்தினை ஆராயாது இவ்வாறு கூறிய இவர்க்குச் சைவசித்தாந்தம் வெகு துல்லியமாய்த் தெரியுமென்பது ஆச்சரியத்துக் கிடமாகின்றது.

பின், மாயாவாதப் படுகுழியில்வீழ்ந்த இவரை வாய்கூசாது திருஞானசம்பந்தப் பெருமான் முதலிய சமயாசாரியருர்கு ஒப்பாய்ச் சொல்லும் மதியிலிகள் கொடுநரகடைவ ரென்பது சத்தியம் சத்தியம் என ஆணையிட்டுரைத் திருக்கின்றார்.

சாத்திரத்துக்குஞ் சம்பிரதாயத்தும் விரோதமாக எதனையுந் துணிந்து கூறும் இவர் பிள்ளையவர்களைச் சமயாசாரியருக் கொப்பாக உரைப்பவர்களை மதியிலிகள் எனவும் கொடுநர கடைவாரெனவுந் தானா ஆணையிட்டுரைப்பர். இவையினுமிழிந்த தொன்றின்மையா லிவ்வளவோடு நிறுத்தினர்.

பிள்ளையவர்களை யவர் சீடர்கள் சமயாசாரியர்களான ஞானகுரவருக்குத் தானா இணையாக உரைப்பார்கள். சிவபெருமானாகவு முரைப்பார்கள் அவ்வா றுரைத்தற்கு,

“சிந்தனை செய்க சிவனிவனே யென்றுணர்ந்துட்
பந்தம றுப்பானைப் பரிந்து.” எ - ம்.

“சிவனைக் குரவனெனச் சிந்தியே லிந்த
வவமதியா லாழ்வ ரவலத்து.” எ - ம்.

“இட்டனெனக் காண்ப னவனே வலரையே வலரென்
றிட்டனையார் காண்பா ரியம்பு.” எ - ம்.

சைவசமய நெறிக்குறள் இடந்தந்து நிற்றலாலென்க. இராமலிங்கபிள்ளையவர்களைச் சமயாசாரிய துல்லியமாக உரைத்ததனால் நரகம் வராதென்றும் சமயாசாரிய சுவாமிகளை இராமலிங்கபிள்ளைக்குச் சமமாகக் கூறினான் மாத்திரம் அது கேட்டிற்கிடமாமேயன்றி இவர் கூறியாங்கு கூறியதனால் நரகம் வருமென்றல் தவறென்க.

"முன்னூலி னில்லாப் பொருளை மொழிவாரேரு
ரின்ரு நிரயத் திழிந்து." என்பது.

விதியாதலின் நூலினில்லாப் பொருள் கூறுவோரே மீளாநரகிற் காளாகத்தக்கவர்களென்பதனை நமதன்பர் சிந்திப்பாராக. இவர் கூறியதனையே மீட்டும் மீட்டுங்கூறி காலம் போக்குகின்றனர்.

பின் சிவபெருமான் தானேயென்றும் தமது பாடல்கள் வேதாகமங்களுக்கு மேலானவென்றுந்தமக்கு அருளரசாட்சி செய்யசெங்கோலுமுடியும் சிவபெருமா னருளினரென்றும் சொன்ன கருங்குழிக் கணக்கனர் புல்லறிவாளரென்பது யார்க்குந் தெரிந்த விடயமே என்ருர்.

தமது பாடல்களை வேதாகமங்களுக்கு மேலான என்ருர் என்று இவர் வாளா கூறியதனுல் இவருரையை வெற்றுரை யென்க.

செங்கோலு முடியுஞ் சிவபெருமா னளிக்கப்பெற்ருரென்றவர் கூறிய தற்காதாரமென்னை? அது காட்டாமையால் இவருரை தவறுரை யென்க. சிதம்பரம் இராமலிங்கபிள்ளை யென்ஞது கருங்குழிக் கணக்கனர் என்றது சிதம்பர நாமத்தினைக் கூற இட்டமில்லாமையாற்போலும் இவ்வாறுரைத் ததனை முன்னர் மறுத்தாம்.

காரணங் கூருது புல்லறிவாளரென்றலும் அது யாவர்க்குந் தெரிந்த விடயமென்பதும் தவறு. இத்தேயத்தறிஞரனைவரும் அவரை பேரறிவாளரெனவே கொண்டு நிற்கின்றனராதலின் இவருரை இங்குச செல்லாதென்க. தம்மைப்போன்ற சிவபத்தரன்மையால் அவரை சிவபத்தரன்றென்று கொள்க என்ருர். ஒருவரிடம் பத்தியிருத்தலையும் இல்லாததனையும் சிவபெருமாஞெருவரேயறிய வல்லவரன்றிப் பிறராலாகாதாதலின் இவருரையை யிவ்விடத்தி லொருபொருட் படுத்தாமென்க.

அவரையடுத்தார் ஏகான்மவாதிகளும் வைணவரும் போலிச சைவர்களும் ஆதலால் மாயாவாதத்தைக் கண்டித்தமைகண்டு ஏகான்மவாதிகள் சினக்க அவரை மகிழ்வுறச்செய்வான் அவர்கொள்கையையுங் கூறினர்போலும் என்ருர். பிள்ளையவர்களை யபிமானித்த சைவரனைவரும் போலிச் சைவர்களும் அவர்விரோதிகளெல்லாம் உண்மைச சைவரும் ஆதலாலிவரவ்வாறு கூறிஞரோ? அல்லதுசும்மா கூறிஞரோ? எனின்அதன் றிற நமக்கெவ்வாறு தெரிதல் கூடும்.

ஆயினும், நெற்றியில் சாம்பரையணிந்து கழுத்தில் உருத்திராக்கம் பூண்டு வீடுகளில்காளி, மதுரைவீரன், பிடாரி, காத்தவராயன், பெரியதம்பிரான், மாடன், இருளன், வீரன், காட்டேரி முதலியதெய்வங்களைக ஞடிப்படம் காகிதப்படம் மரக்கட்டை மண்ணுருகட்டி, செங்கல் முதலியவைகளில் பாவித்து அகத்திக்கீரை பிண்ணுக்கு பனங்கள் தென்னங்கள் ஈசன்கள் சாராயம் ஆடுகோழிபன்றியாதிகளின் ஊனங்கள் பிட்ட தீப கொழுக்கட்டைமுதலியவைகளை எதிரிற்குவித்து ஆருளி பம்பை சிலம் சேகண்டி எமகாளம் தப்பட்டைமுதலியமேளதாளங்களுடன் அப்பேய்களை

வழிபடுபவர்களும், இவ்விதமும் இன்றி இடையாடையை யவிழ்த்துக் கொடியில்வைத்துவிட்டு கண்டம் வரைக்கும் கழுவி பின் சாம்பலாற்பல்துலக்கி அதனிற் சிறிது மிகுத்திகின்ற இடத்திற்பாதியை உதிர்த்து கவிழ்ந்தவண்ணம் நெற்றியிற் பூசி கௌபீனத்நாற் முகந்துடைத்துச் சென்று போசனம் அருந்திவாயுங் கையுமாத்திரம் பூசி - பிரமபத்திராஞ்சுருட்டி அதனிலக்கினி பகவானைஏற்றி உதரத்திற்குத தூபமிட்டு அதனைமற்றொரு வேளைக்காகப் பத்திரப்படுத்தி தும்மல் இருமலாதிகள் நேர்ந்தகாலத்து, ராமானுச என்பவர்களும்; மீன்பிடித்தல் முதலிய தொழில்களையுடையயவர்களும் மதுபுலை முதலியவிற்பவர்களும்சமயமுதலிய தீட்சைகளும்குருவும்இல்லாதவர்களும் தீட்சைமுதலியவைகளிருக்கவேணுமென்ப தனவசியம்பத்தியிருக்கவேண்டியதுஎன்று கூறி தியானசமாதி யோகாதி அப்பியசிப்பவர்களை இகழ்ந்து திரிபவர்களும் கூடை கட்டுவோர் செக்காட்டுவோர் சவரம்செய்வோர் ஆடை வெளுப்போர் கோணி விற்போர்முதலியோரிற் சிலருமே பிள்ளையவர்கட்கு விரோதிகளாக இருக்கின்றார்கள்.

ஆதலின் இவர்கள் அனைவரும் உண்மைச சைவர்களாக இருக்கலாம். இது கலியுகமாதலின் இவ்வாறுள்ளோர் உண்மைச சைவராகவும், சிவபெருமானை வணங்கு முறையையும், குருவருளாற் தீட்சைபெற்று சிவபூசை செய்தல், தேவார திருவாசக பாராயணஞ் செய்தல், அடியாரை வணங்கல், கலியுகத்தி லிழிகுலத்தோருக்குத தெய்வமாக விளங்கும் மாரி வீரியாதிகளை வழிபடாமை வீடுகளில் விநாயகா முதலிய சைவ விம்பங்களை வைத்து அன்புடன் பூசிப்பவர்களும், சிவசின்னங் தாங்கினவர்களை சிவபெருமானாகப் பாவித்து வழிபடுதலையும், உடையவர்களே பிள்ளையவர்களைப் பெரியவர் சிவானுபூதிமான் எனக்கொண்டாடுபவர்கள். இவர்கள்போலிச சைவர்களாகவும் ஆகாமல் வேறுதற்கு இந்த சமயம் வழியில்லை யாதலின் போலிசைவரென்றே வைத்துக் கொள்வோம். மாயாவாதிகளும் வைணவரும் பிள்ளையவாகளை எதற்காக அபிமானித் திருந்தார்கள். துறவறத்தில் நின்றாரென்று அறியப்படுகிற பிள்ளையவர்களைப் பொய்யர் என இவர் கருதுமாறு கருத அவர்கட் கறிவில்லாது போயிற்றுப்போலும். ம-ா-ா-ஸ்ரீ, சோமுச் செட்டியார். ம-ா-ா-ஸ்ரீ, உமாபதி முதலியார் அரசாங்கதந்ா' .^ கல்விச் சாலைத்கமிழ்ப்போத காசிரியரான வேலாயுத முதலியார், சோடசாவதானம் சுப்பராயசெட்டியார். காஞ்சிபுரம் சபாபதி முதலியார். அட்டாவதானம் வீராசாமிசெட்டியார். சண்முகம்பிள்ளை. இலக்குமணப்பிள்ளை கோடக நல்லூர் சுந்தரசுவாமிகள் சிதம்பரம் தீட்சிதர்கள். அனேகம் சைவ பண்டாரங்கள். முதலியவர்கள் பிள்ளையவர்களிடம் நன்கு மதிப்புடையவர்களாக இருந்தவர்கள்; இவர்களெல்லாம் போலிசைவர்களும் வைணவர்களும் ஏகான்மவாதிகளுமாக வுள்ளவர்கள்போலும், அவர்களில் ஏகான்மவாதிகளின் விருப்பத்திற்கிணங்கி மாயாவாதியானார் அதற்கேற்றப்பாடல்களை பாடினாரென்றுஇவர் தாமேகூறுகின்றாரன்றி அதற்காதாரம்இதுஅல்லதிவை என ஒன்றும் வரையாமையால் அதனை பிரமாணமற்றதென ஒதுக்குக்கோ நலம்.

ஆசீவகர் தார்க்கிகர்பாட்டர் முதலாயினோரும் இவருடன்பழகி இருந்தால் அவர் கொள்கைகளையும் காட்டி யிருப்பாரெனக் குழறிய இவர் இத்தேயத்திலில்லாத புத்தர் பிள்ளையவர்களுடன்வந்து கூடாதிருக்க அவர் எதற்காகப் புத்தமதத்தையும் புத்த நூலையும் புகழ்ந்தனர் துதித்தனர். என்றீரே. இதற்கென்ன சமாதானஞ் சொல்லுவீர் என்பார்க்கிவ்வொன்றப்பர்.

ஆசீவகர்களும் பாட்டரும் தார்க்கிகரும் இத்தேயத்திலன்றிப் புத்தரையொப்ப இலங்கை முதலிய தீவாந்தரங்களில் வசிப்பவரன்றே, ஆசீவகராதியர் இத்தமிழ்நாட்டில் அதிகமாக இருக்கின்றார்களே. அவ்வாறு பிறர் புகழவேண்டுமென்னும் ஆசையால் பாடினவராயின் அவர்களையும் பாடியிராரா? அவ்வாறு பாடக்காணாமையின் இவருரை பொய்புரையென்க.

பின், ஆகவே இவர் தமக்குப்பெருமை வரவேண்டுமென்று எண்ணிச செய்தவரன்றி உலகமுய்யுமாறு உண்மையைப் போதிக்க வந்தவருமல்லர் திருவருள்பெற்றுச் செய்தவருமல்லர் என்றார்.

ஒருவன் தனக்குப்பெருமை வரவேண்டுமென்றுகருதி அழுதழுதுதான் பாடுவானோ? பிள்ளையவர்கள் தமது தெய்வத்தைத் துதித்தனரேயன்றி இவர் கூறுமாறு பிறமதங்களை வரம்பு கடந்து புகழ்ந்தாரென்பது பெருந்தவறென்பதனை இவர் காட்டிய ஒவ்வொரு விஷயங்களையும் மறுத்து மறுத்து முன்னரேகாட்டினும் ஆராயுமிடத்து பூர்வபக்கத்தாரே அவருரைத்த அபிப்பிராயத்தையுடையோர் இல்லாதவற்றை உரைத்ததே யதற்குதாரணம் என்க. பிள்ளையவர்கள் தாமுய்வதற்குக் கடவுளைத் துதித்தனரேயன்றிவேறன்றாம். உலகமுய்ய வேண்டுமென்று பாடுமவர்களை யுண்மையன்பரெனக் கொள்ளுவோர் இப்பூர்வபக்கத்தவரேயன்றி பிறரெவருமாகார்.

பிள்ளையவர்கள் இறைவனைத் துதித்தபாடல் இத்தேயத்தவர்களுக்கினிமையானவை யாகத்தோற்றினமையா லவைகளைத் தாங்களும்பாடி இறைவனை நினைப்பாராயினர். இவ்வுண்மையை அறியாதபூர்வபக்கத்தார் பிறர் மகிழப்பாடினரென்றல் தவறென்க.

மாயாவாதிகள் முதலிய பிறமதத்தினர் பாடல்களை யிவர்பார்த்திருந்தால் குமரக்கடவுளின் துதிமுதலியவற்றி லவைகு ரியகுமாகக் காணப்படும் தொடர் மொழிகளில் தம்மை மயக்குமவைகளைத் தேடியெடுத்து இவைகளால் இவர் இராமலிங்கபிள்ளையவர்களை மாயாவாதியென்னார் இவர்செயல் நகைப்புக்கே இடமாகின்றது.

மாயாவாதிகள் பாடும் பாடல்களை யிவர் கண்டிலரேல் முத்திலிங்க வாத்தியாரெனவும், அச்சுதானந்த பரதேசி எனவும், ஏகாம்பர சிவயோகியெனவும் வழங்கும் பெரியவர் மாயாவாதச் சார்பிலிருந்த ஞான்று பாடியதென அவர் கூட்டத்தினர் வழங்குஞ்சுதியானுபூதி யென்னும் புத்தகத்தினைத் தேடிப்படித்துக் காண்பாராக.

தேவார திருவாசகங்களிற் கூறும் பொருணிச்சயத்தினை யுடையதாய்
திருமந்திரப் பொருள் விரவியதாய் விளங்கும் பிள்ளையவர்களின் பாடல்
களை மாயாவாதப் பாடலெனவும் அவரை மாயாவாதியெனவும் அவர்க்குச்
சிவபத்தியே இல்லையெனவும் கூறுதல் குலமகளை விலைமக ளெனவும்
ஒழுக்க முடையவனை இழுக்கமுடையவ னெனவும் ஆஸ்திகனை நாஸ்திக
னெனவுங் கூறும் முழுவிரோதத்துக்கே இணையாகுமென்க.

பின், திருவருள்பெற்றுச் செய்தவருமல்லர். என்னை திருவருள்பெற்று
ரிங்ஙன் முறைமறந்து விதிவிலக்கயர்த்து மனுடரின் நிலையுதலில்லாத்தாட்
சிணியங் காரணமாக ஒன்றைச் செய்வாரல்லர் என்றார்.

முறைமறந்தறைந்ததும் விதிவிலக்கினை அயர்த்ததும் தாட்சிணியங்
காரணமாக எதையுஞ் செய்ததுமில்லையாகவும். அவ்வாறெல்லாம் தோன்று
தல்பூர்வபக்கத்தாருக்குச்சைவசம்பிரதாயத்திலுள்ளஅந்தரங்கபகிரங்கவேறு
பாடுகள் இன்னின்னவையென விளங்காமை காரணமாகவாதலில் அவை
பிள்ளையவர்களின் தவறன்றென்க.

பின், ஒருகால் தெரியாது கூறினரெனில்,ஓதாது எல்லாம் உணர்ந்தா
ரென்பது பொய்யே என்றார். எவரேனுந் தெரியாது கூறினரென்றால்,
அவர்கள் இவர் பக்கத்தினரேயன்றி பிள்ளையவர்கள் பக்கத்தையுடையாரவ்
வாறு கூறார். ஒருவரு முரையாத ஒன்றை வருவித்து இவரே யுரைத்து
இவரே மறுப்பதனில் என்னையுளது. தெரியாது கூறினரென்போ ரின்மை
யாலும் அவர் கூறியிருக்குமனைத்தும் ஆட்சேபமற்றவையு நூலிலுள்ளவையு
மாதலாலும் இவர் கூறுமாட்சேபங்கள் பொய்யென நாங்கூறுஞ்சமாதானம்
விளக்குதலில், ஓதாதுணர்ந்தமை பொய்யாகாதென்க. ,

பின், பிரளயாகலராவார் விஷ்ணு முதலினோரென்று எழுதினமையா
லும் இராமலிங்கபிள்ளைக்குச் சிறிதுஞ் சைவசித்தாந்தந் தெரியாதென்க
என்றார்.

பிள்ளையவர்கள் விட்டுணு முதலினோர் பிரளயாகலரென ஒழிவிலொ
டுக்க வுரையிலெழுதிய தின்மையின் பிள்ளைவர்கள்மீது அவர் செய்யாத
ஒன்றைச் செய்ததாகப் பழிகூறுதல் தவறென்க.

ஒழிவிலொடுக்கத்துக் குரைசெய்தவர் திருப்போரூர், சிதம்பரசுவாமி
களென்று தெரிந்து கொள்ளாத இவர் பிள்ளையவர்கட்குச் சைவசித்தாந்தம்
சிறிதும் தெரியாதென்று கூறியது பரிதபிக்கத் தக்கதே.

சன்மார்க்கியான பிள்ளையவர்களைச் சைவசித்தாந்தந் தெரியாதவர்
என்று கூறவேண்டு மென்னும் விருப்பம் இவருக்கிருந்தால் ஒரு தவறு
ரைத்துத்தானு தந்நிலையை வெளியிடுதல் வேண்டும். ஒழிவிலொடுக்கமென்
னுநூல் வெகுவாகக் கிடைக்கக்கூடியதாதலின் உபயவாதிகளி லுண்மையு
ரைத்தவ ரின்னவரென்று விருப்பமுள்ளவர் ஒழிவிலொடுக்கத்தினைச் சமா
தான சித்தத்துடன் ஆராய்ந்து காண்பாராக.

பின், இவற்றானே மாயாவாதத்தைக் கண்டிப்பவர்போல் முன்னர்ப் பாசாங்கு பண்ணினு ரென்பதற்கும் பெரு மருட்பிரகாசப் பிள்ளையெனக் கூறுவதற்கும் திருவருட்பா என்னும் பெயர் இவர் பாடல்களுக்கு அனுவ ளவும் பொருந்தாதாக. அது தெருமருட்பா என வுரைப்பதற்கும் இவை யிலக்காமென்க என்றார்.

பிள்ளையவர்கள் மாயாவாத கண்டனமென ஒருநூலாயினும் பாடலா யினுஞ் செய்தாரல்லர். மாயவாதமாகவும் ஒன்று மியற்றினாரல்லர் சிவபெரு மானைத் துதித்து வழிபட்டாரன்றி இவர் கூறுமாறு எதொன்றுஞ் செய்தவ ரல்லர் ஆதலின் இவருரை யனைத்தும் பொய்யாய் வெறுங்கதையாய் போ யொழியுமாறு இவரதாபாச தருப்பணத்தினை எமது நியாவச்சிர குடாரம் சின்னபின்னமா உடைத்தழித்தமையால் இவர் கூறும் பெருமருட்பிரகாச பிள்ளையைம் தெருமருட்பா வெனுமொழியு இவர்பக்க மெய்தி எம்மை எந்திநிற்றற்குரியதகுதியாளர் நீவிராதலின் நும்பக்கமே திரும்பஎய்தினோம் எனச்சாரலாயது காண்க.

தேவாரம் திருவாசகம் திருவிசைப்பா திருமந்திரம் திருப்போரூர் சன்னிதிமுறை முதலிய பிரபலசுருதிப் பிரமாணங்களாகிய நியாயவச்சிர குடாரத்தால், மாயாவாதத்தையும் வைணவத்தையும் மறுத்தாரென்றதற்கு அங்ஙனஞ் செய்திருந்தாலது சைவமரபாதலி னது ஆட்சேபமாகக்கொ ண்டதுதவறு என்றும் மாயாவாதத்தை மீட்டுங்கொண்டா ரென்றதற்குஅவ் வாறு கொண்டவர் பிள்ளையவர்களல்லர் என்றும் பிள்ளையவர்கள் சைவசித் தாந்தத்தையே கொண்டவரென்றும், பெருமையைக் கருதி இவ்வாறெல் லாஞ்செய்தார் என்றதற்கு பெருமைக் குழைப்பவர் பூர்வபக்கத்தாரேயெ ன்றும்நன்கு விளக்கிக் கண்டித்தமையால் இராமலிங்கப்பிள்ளை பாடல் ஆபாசதர்ப்பணம் என்னுஞ் சுவடியின் ௩௩-ம் பக்கமுதல் ௩௭-ம் பக்கம் வரைக்கும் அழிந்தகன்றமை காண்க.

## பாஞ்சராத்திரப்படுகுழியில் வீழ்ந்தார் என்பதற்கு மறுப்பு.

மாயாவாதிகள் பக்கத்தைக்காட்டி என்று தொடங்கி முடிபுரையின்றி அப்பாடல்கள் வருமாறு என்று வரைந்திருக்கின்றனர்.

பிள்ளையவர்கள், வைணவரும் தம்பாடல்களையும் தம்மையும் மதிக்க வேண்டுமென்னும் பொய்ப்புகழைப் பெரிதா மதித்து சீராமநாமப்பதிகம். இலக்குமி தோத்திரம் கலைமகள் தோத்திரம், என்று செத்துப்பிறக்குஞ் சிறு தெய்வங்களின் தோத்திரங்களையும் பாடிவிட்டார் என்றார்.

இத்தேயத்து மதசம்பிரதாயங்களில் பழக்கமில்லாத இப்பூர்வபக்கத் தார் சைவவைணவ சம்பிரதாய நூல்களை நன்றாய்ப் பழகாதவரென்றும் பொருத்தமற்ற எந்த விஷயங்களையும் துணிந்து கூறுபவரென்றும் இவ ரிசைத்த இராமலிங்கபிள்ளை பாடலாபாச தர்ப்பணச்சுவடி நன்குதெரிக் கின்றது.

பாஞ்சராத்திரப்படுகுழியில்விழுந்தாரென்ற தலைப்பெயருக்கேற்பவிஷயங்களைப் பொருத்தமாக எழுதாமல் சீராமநாமப்பதிகம் இலக்குமி தோத்திரம் கலைமகள் தோத்திரம் என்று செத்துப்பிறக்கும் சிறுதெய்வங்களின் தோத்திரங்களையும் பாடிவிட்டார் என்று வெகுசியாய முணர்ந்தவரைப் போன்று குழறி மகிழுகின்றார்.

இலக்குமிதோத்திரமும் கலைமகள் தோத்திரமும் பாஞ்சராத்திரப் படுகுழியில் வீழ்ந்தவருக்குத் தான் அங்கீகாரமானவை போலும் திருச்செந்தூரில் ஐந்துவயதுப் பருவத்தில் குமரக்கடவுள் திருவருள்பெற்று ஊமைத்தன்மை நீங்கி அப்பொழுதே கந்தர் கலிவெண்பாவென வுலகங்கூறும் அற்புத நூலியற்றி முருகக் கடவுளைத் துதித்தவரும் மீனாட்சி பிள்ளைத் தமிழ்பாடி மீனாட்சிதேவியால் முத்தாரஞ் சூட்டப் பெற்றவரும் சைவத்துறவியுமான தருமையாதீனத்தைச் சார்ந்த காசிமடாலயம் குமரகுருபரசுவாமிகள் கலைமகளை தோத்திரஞ் செய்திருத்தலும் குமரக்கடவுளின் திருவருள் பெற்றுக் கந்தபுராணம் பாடிக் குமரக் கடவுளால் திருத்தி யளிக்கும் பேறுபெற்றவரும் குமரகோட்டத் தருச்சகரும் ஆகிய கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளும், சைவசித்தாந்த சாத்திரங்களுள் மெய்கண்ட நூல்களினுரையாசிரியரும் சேதுபுராணம் பாடியவரும் சைவாசாரியருமாகிய சேதுமடாதிபதி நிரம்ப வழகிய தேசிகரும் திருவிளையாடற் புராணம் பாடிய பரஞ்சோதி முனிவரும், கலைமகளைத் தோத்திரஞ் செய்திருத்தலின் இப்பெரியவர்களும் பாஞ்சராத்திரப் படுகுழியில் விழுந்தவர்கள்தானோ? கலைமகளைத் துதித்தல் பாஞ்சராத்திரக் கொள்கையன்றென் றுணராத இவரா? பிள்ளையவர்களின் பாடல்களில் ஆபாசங் காட்டத்தக்கவர்.

இலக்குமியைச் சந்தனப் பொதியத் தடவரையிருந்த செந்தமிழ் முனிவரான அகத்தியர் தோத்திரஞ் செய்திருத்தலை காசிகண்டத்துக்காண்க.

வென்றி வடிவேலாற் குன்றம் பிளந்த குகனுரிடத்து அருளுபதேசம் பெற்றவரும் அலைகடல் குடித்தவரும் விந்தம் பிலம்புகச் சுந்தரக்கரசீட்டியவரும் குற்றாலத்துக் கோவின்மாலைப் பொற்றாரிதழிப் புனிதனைச்செய்தவருமான மகத்துவமிகுந்த அகத்திய முனிவர் இலக்குமியைத் துதித்தமையின் அவரும் பாஞ்சராத்திரப் படுகுழியில் விழுந்தவர் தாமோ? இக்காட்டிய பெரியவர்க ளனைவரும் இராமலிங்கபிள்ளை அவர்கட்கு முற்பட்டவர்களும் அருண்மூர்த்திகளும் ஆதலின் அவர்வழிநின்ற பிள்ளையவர்களை பாஞ்சராத்திரப்படுகுழி விழுந்தவர் என்று கூறுமிவர் அவர்களையும் பழித்தவராகின்றார். இலக்குமியின் தோத்திரமான ஸ்ரீ சூக்தமென்னும் வேதமந்திர பாகத்தால் சிவசத்தியான உமாதேவியாரை வழிபடும் ஆதி சைவோத்தமர்களும் பாஞ்சராத்திரப் படுகுழியில் வீழ்ந்தேறமுடியாது தடுமாறுகின்றவராவார்.

வைதீக சைவ சம்பிரதாயிகளான இப்பெரியவர்களும் இவர்களையொத்த பிறரும் சென்ற வழியில் சென்ற பிள்ளையவர்கள் படுகுழியில் வீழ்ந்தவ

ராவாரா? ஆன்மாக்களின் பக்குவத்துக்கிணங்கச் சிவபெருமானியற்றியுள்ள மாயஞகமத்தின் ஒரு பகுதியாய் விளங்கும் பாஞ்சராத்திரம் படுகுழியாயது எவ்விதத்தாலோ? படுகுழியென்பது கள்ளப் பள்ளமான யானைக்கொப்பம் முதலியவையும் ஏறு துறை இறங்கு துறை முதலிய வையும் இன்றிக் கிடக்கும் புதர்முதலிய மூடிய பெரும் பள்ளங்களும் அன்றோ? அத்தகையதாலுல் பாஞ்சராத்திரமுறைப்படி வணங்கவேண்டிய நாரணனை சிவாலயத்துள் பிரதிட்டித்துப் பூசிக்கச சைவர் இடங்கொடுப்பார்களா? கிறித்தவமும் சைவமும்போல ஒன்றற்கொன்று சம்பந்தமற்றதும் பரஸ்பரம் முழுவிரோதமானதுமாக சைவவைணவங்கள் இருப்பதாக இத்தேய அநுட்டிப்பில் காணப்படவில்லை. ஒரு குடும்பத்தில் பிறந்த ஒருவன் சைவனுகவும்மற்றொருவன்வைணவனுகவும்இருத்தலைப்பிராமணகுடும்பமுதலிய பல சாதிக் குடும்பங்களிற் காணலாம். திருவரங்கம் ஆழ்வார் திருநகரிதிருநெல்வேலிமுதலிய இடங்களில்இவ்வழக்கத்தினை அதிகமாகக் காணலாம்.

சைவ சித்தாந்தியெனப் பிரசித்தமாக இச்சென்னையிலிருந்த சோமசுந்தரநாயகர் வைணவரான பாஞ்சராத்திரிப் "படுகுழி" வீழ்ந்தாரை பந்துக்களாகவுடையராயிருத்தலை இவரறியார்போலும்? சென்னைச் சிவனடியாரென்பவர்களில் பலரின் குடும்பங்களில் அநேகம் பெயர் வைணவர்களாக இருத்தலையும் இப்பொழுது வைதிக சைவர்களாக இசசென்னையிலிருப்பவர்களில் பலருக்கு கோவிந்தராசன், நாராயணன், கோவிந்தன், பரசுராமன் முதலிய வைணவப்பெயரிருத்தலும் வைணவருட் பலருக்கு செங்கல்வராயன், அருணசலன், சங்கரன், பசுபதி முதலிய சைவப்பெயரிருத்தலும் சைவ வைணவங்களை ஒன்றற்கொன்று அநுட்டிப்பவர்களால் சம்பந்தமுடையதாயிருத்தலை நமதன்பர் அறியாரென்று நினைக்கின்றோம். நீவிர் வைணவப் பெயர்களாக உடைப்பனவற்றுக்கெல்லாம் யாம் சைவப் பெயர்களாகப் பொருள்கூறவேமெனனின் நீவிர் வைணவப் பாடலாக உரைக்கும் அனைத்தையும் சைவப் பாடலாகப் பொருள் கூறும் ஆற்றல் எம்பாலும் இருப்பதை நினைப்பூட்டுவேம் ஆகவே இருவர்செயலும் உலகநடையடிக்கைக்கு விரோதமானதாகும். அவ்வாறன்றி நடந்து கோடலே உசிதமாதலிற் சென்ற காலத்தவர்கள் கலைமகளையும் இலக்குமியையும் துதித்ததை யொப்ப பிள்ளையவர்களும் துதித்தனராதலின் அவை நமருக்காமை காண்க.

இவர் கலைமகள் துதியை வைணவத்தின் பாற்படுத் துரைத்தது எவ்வாறனும் ஒப்பப்படாத தவறேயாம். பாஞ்சராத்திர நூல்களை வைணவத்தின் பாற்படுத் துரையாமையை அறியாத இவர் கலைமகளை பாஞ்சராத்திரமத தெய்வமாகக் கருதிக்காட்டியது இவரது மதவைராய்சசியின் நுண்மையை நன்கு விளக்குகின்றது.

சீராமநாமப்பதிகம் முதலிய வைணவப் பாடல்களிவை என ஒரு சிறிதுங்காட்டாது பிள்ளையவர்கள் சிவபெருமானைப் பாடிய பாடலடிகளைக் காட்டிப் பலபொருந்தா விடயங்களை வரைந்து வைணவர்களை இகழவேண்டுமென்னுந் தமது விருப்பத்தினை நிறைவேற்றிக் கொண்டனர். இலக்குமிமங்கிலிய பிசசைகேட்டது முதலியவைகளைப் பிள்ளையவர் இல்லையெனவெங்கேனுங்கூறியிருக்கின்றனரா? இருந்தால்எடுத்துக்காட்டியிருக்கலாமே? அவ்வாறு செய்திருந்தால் நாமுஞ் சந்தோஷத்துடன அதற்கு மறுப்பெழுதக்கூடுமாகு லெழுதுவேம். இவர் அவ்வாறு செய்யாது மற்றொன்று விரித்தலாய் சைவப்பிரபாவங்களைக் குற்றபடையாக எழுதி பிள்ளையவர்கள் மீது குறைகூறுதல் தவறென்க.

இதனின் - முக்கியமானது பிள்ளையவர்கள் தமது பாடல்களை அச்சிடுமாறு வாசுதேவர் சீனிவாசவாதர் முதலிய வைணவரை இந்தகாலை அவர் சீராமர்மீதும் திருஎவ்வுளூர் வீராகவர் மீதும் பாடல்கள் இயற்றிச சேர்

பீராயின் பணங்கொடுப்பே மென்ன இரசவாதந் தெரியுமென்று வீண் கதைகட்டி நடித்த கணக்கு இராமலிங்கம் பாடிச்சேர்த்துப் பணம்வாங்கிக் கொண்டார். அதனை வரலாற்றில் தொழுவூர் வேலாயுதமுதலியாரும் மற ந்துகாட்டியுளார். அப்பாடல்கள் வருமாறு. என்று கூறி.

"சிவநேசச் சிவராசயோகியர்க் காந்திருச்சிறந்த
தவநேசன் வாசுதேவப் பெயர்கொட குதியனே."

என்ற பாடலடிகளையும் நேசமெல்லாமென்ற பாடலையும் தங்களை முன்னி ட்டவரை என்ற பாடலடியையுங்காட்டி முடிபுரையாது விட்டனர். ஒரு வர் பெயரைத் தம் மனம்போனவா றெல்லாம் தவறுதலாக குறைத்துநீட்டி யும் பெருக்கியும் கூறுவதில் சிறந்தவரான இவர் தம்பெயரை ஒருவர்குறை த்து நீட்டியுமெழுதினுலல்லது கூறினுல் சும்மா பொறுமையுடனிருப்பாரா? கணக்குஇராமலிங்கமென அவர்பெயரைக்குறைத்துக்கூறுதல்உசிதமாகுமா? வேலுமுதலி யென ஒருவிடத்திலும் வேலாயுதமுதலியாரென மற்றொருவி டத்திலும் பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதராயிருந்த தொழுவூர் வேலாயுதமுதலியாரை இவர் கூறுதலும் எழுதுதலும் சரியென அறிஞர் கள் அங்கீகரிப்பார்களா?

வைணவரென இவர் காட்டிய வாசுதேவரென்பவர் வைணவராளுல் சிவ நேசச் சிவராச யோகியர் காந்திருச்சிறந்த தவநேசன் என வேலாயுதமுத லியார் கூறியதனைக் கேட்ட வாசுதேவர்க்குக் கோபம் உண்டாகாமலிருக் குமா? தமது செல்வத்தினை சிவநேசர்கள் விஷயத்திலும் சிவராஜயோகிகள் விஷயத்திலும் உபயோகப்படுத்துவோர் சைவர்களாக இருப்பார்களேய ன்றி வைணவர்களாக இருக்கமாட்டார்கள் என்பதனை இவரறியாது கூறி னரேயன்றி வேறன்றாதலின் இவர் காட்டிய பாடலின் வண்ணம் வாசுதே வர் என்பார் சைவரேயன்றி வைணவரன்மையால் இவருரை வெற்றுரை யாயது காண்க.

பின்,நேசமெல்லாம் என்று மற்றொரு பாடலைக் காட்டினர் அதனில் சடகோபன் எனவும் சீனிவாச வரதன் எனவும் இருமொழிகள் இருத்த லின் அவைகளைக்கொண்டு தம் பக்கத்தைத் தாபிக்கலாமெனக் கருதினர் போலும் அதனிலும் இவரெண்ணம் பலியாமையை யாமெழுது நியாயங்க ளாலுணர்க.

"நேசமெல்லா முடையார்க்கா யுள்ளமுருகி நிறையழிந்த
தேசனெங்கள் சடகோபன் தெய்வத்தமிழோர் வடிவாகிப்
பாசங்கழன்று வடகலைப் பாற்கடற்கோர் பஃறியாஞ்சீனி
வாசவர தப்பெயர்கொ ளறங்கறையு நாவின்மறைக் கொழுந்து"

என்பதே இவர் காட்டிய பாடல், இதனில் இவர்க்கு யாதொரு வெற்றியு மில்லாதாக எனோ விதனை வரைந்தனர்.

இஃதொரு குளகச்செய்யுள். இதன் பொருள் நேசம் - அன்பு. எல் லாம்-அனைத்தையும். உடையார்க்கு ஆய்-திருமேனியாகவுடையாகவுடைய எல்லாம் வல்ல இறைவனுக்காக, உள்ளம் உருகி-மனம் இளகி, நிறை-தன் னிலை-அழிந்த-கெட்ட(அதாவதுபரவசனுகிய)தேசன்.ஞானப்பிரகாசத்தினை யுடைய, எங்கள்-எம்முடைய,சடகோபன்-சடகோபனென்னும் இயற்பெய ரினையுடையவனும்,தெய்வத்தமிழ்ஓர்வடிவுஆகி-தெய்வத்தன்மையினையுடை யதமிழினைமுற்றுக்கற்றுஅதனுருவேதன்னுருவாகி,பாசங்கழன்று-ஆசாரியா னுக்கிரகத்தால் பந்தமொழிந்து, வடகலை-ஆரியபாஷையாகிய, பாற்கடற்கு பாலாழியைக்கடத்தற்கு:ஓர்-ஒப்பற்ற, பஃறியாம்-கப்பலாக உரைக்கத்தக்க நிலையினனை - சீனிவாச வரதப்பெயர்கொள் - சீனிவாச வரதனென்னும் இயற்பெயரினை உடைய, அறங்கறையும் - தருமநீதிகளையே உரைக்கின்ற, நாவின்மறைக்கொழுந்து - நாவினையுடைய உபநிடதங்களை யுணர்ந்தவ

னும் எ-று. என்பதேயாம் இதனில் - சடகோபன் என்பாரையும் சீநிவாச வரதன் என்பாரையுங் காட்டியிருத்தலின் அவர்கள் வைணவர்களே என்றல்கூடாது வைணவர்களானால் இதற்கடுத்த பாட்டில்-வேதனார்மாலார்காணருமுக்கண் விகிர்தனார் என்று சிவபெருமானைக் கூறியிருத்தலை அங்கீகரித்துப் பணமளிப்பார்களா? அளியாராதலின் இவருரை தவறுடையென்க.

பின், தங்களை முன்னிட்டவரை என்னுஞ் செய்யுளடிகளை வீணில் வரைந்தனர். இதனில் பிள்ளையவர்கள் பணங்கேட்டாரென்பது முதலியவையும் இல்லையாகவும் வாளா காகிதத்தினைக் கறுப்பித்தனர்.

இங்குக்காட்டிய நியாயங்களால் பிள்ளையவர்கள் வைணவர்களைப்பொருள்கேட்டதாகவும் அவர்கள் சீராமரையும் திருஎவ்வுளூர் வீரராகவரையும் இலக்குமியாம் பெரியபிராட்டியாரையும் பாடச்சொன்னதாகவும் பிள்ளையவர்கள் பாடிச்சேர்த்ததாகவும் இல்லையாக விளங்குதலின் இவருரையெற்றுரையென்க.

பலதனிகர்கள் பிள்ளையவர்களின் சீடர்களாக இருந்தனரென்பதையும் அவர்களே பிள்ளையவர்களின் பாடல்களை அச்சிடுவித்தவர்களென்பதனையும்எவரிடமுங் கேட்டுணராதவராதலின் இவ்வாறு தவறுகூறினரென்க.

சென்ற சுக்கிலவருடம் வைகாசிமீ௴ வெளியிட்டபோலியருட்பாமறுப்பென்னும் சுவடியின் பதினைந்தாவது பக்கத்தில் ஆறுமுகநாவலர்பிள்ளையவர்களைமீது பொறாமைகொண்டு இரசவாதந்தெரியுமென பிள்ளையவர்கள் கூறுகின்றாரெனச் சிலஎழுதியதற்கு குதர்க்காரணிய நாசமகாபரசு கண்டனம் ௧௱௭-வது ௧௦௮-வது பக்கங்களில் செவ்வையாய் மறுத்தும் அது ஆறுமுகநாவலர் கட்டிவிட்ட கதையெனச் செவ்வனே கண்டித் தொதுக்கியும் அதனை யங்கீகரியாது பின்னரும் அதனை எடுத்துக்கூறுதல் நியாயமாகுமா? போலியருட்பா மறுப்புத் தோன்றிய அடுத்த மாதத்திலேயே இந்நாவலர் கட்டிவிட்ட பொய்யென்று தீர்மானஞ் செய்திருக்க நாவலரின் பக்கத்தாராய் முப்பது வருடங்கழித்துப் பிள்ளையவர்கள்மீதும் அவர் பாடல்கள்மீதும் பொறாமைகொண்டு தோன்றிய பூர்வபக்கத்தார் எம்மதன்றென பிள்ளையவர்கள் பக்கத்தாரால் மறுத்து நாவலர் பக்கமாக ஒதுக்கிவிட்ட கட்டுக்கதையைப் பின்னும் பின்னும் பிள்ளையவர்கள்மீது சுமத்தவந்தால் சுமத்த வந்தவர்க்கப்பட்டத்தினைச் சூட்டியனுப்புவதல்லது மெய்யெனக் கொள்ளுவார் அன்றுமின்று மின்மையால் இரசவாதந் தெரியுமென வீண்கதை கட்டிக்கொண்டவர் பூர்வபக்கத்தாரேயாவர்.

பிள்ளையவர்களின் பாடலிலிவர் காட்டிய விஷயங்களை மறுத்து எமது பக்கத்துக்கே சித்தாந்தப்படுத்திக் கொண்டமையின் பிள்ளையவர்கள் பாஞ்சராத்திரப் படுகுழியில் வீழ்ந்தாரெனல் தவறாயழிந்தமை காண்க.

இதனால் இராமலிங்கபிள்ளை பாடலாபாச தர்ப்பணத்தின் ௩௭-ம்பக்க முதல் ௪௪-ம் பக்கம் வரையிலும் உள்ள விஷயங்களனைத்தும் எமது நியாயவச்சிரகுடாரத்தால் அழிந்தொழிந்தமை காண்க.

**திருவருட்பிரகாச வள்ளற் பெயர்ச் சிதைவு என்றதன் மறுப்பு.**

திருவருட்பிரகாசவள்ளற் பெயர்ச் சிதைவு என்ற தலைப்பின்கீழ் கருங்குழிக் கணக்கனார் என்று தொடங்கி தமக்கு ஒன்றுமில்லையென்றது மேற்காட்டுதும் என்று வரைந்திருக்கின்றனர்.

கருங்குழிக் கணக்கனார் தமக்கு வள்ளல், திருவருட்பிரகாச வள்ளலார் ஓதாதுணர்ந்தார் முதலிய பெயர்களை வைத்துக்கொண்டார். கல்விகேள்வியறிவு நிரம்பாப் போலிச் சைவர்கள் சிலரும் அவற்றினுண்மைப்பெயர் தெரியாது கொண்டாடி மகிழ்கின்றார் என்று கூறியிருக்கின்றார்.

தமக்குரியது பிறர்க்கும் என்பதுலக வழக்கு இவர் தம் பெயரெழுதுங

கால் மாயாவாததும்சகோளரி அத்துவித மதோத்தாரணர் முதலிய பெயர்களை எழுதுகின்றனரே அவைகளைப் பிறரால் வைக்கப்பட்டு வழங்கப்படுவதாஞல் பிள்ளையவர்களின் சிறப்புப்பெயரை தாமே வைத்துக்கொண்டனர் என்று கூறத்துணியார். வள்ளல் என்று தனியே கூறுதலின்ருகவும் இராமலிங்கபிள்ளை தமக்கு வள்ளல் என்று பெயர் வைத்துக்கொண்டார் என்று தவறுரைக்கின்றனர்.

இராமலிங்கபிள்ளையவர்கள் பாடல்களில் அவர் தம்மை எம்பெயர் திருவருட்பிரகாசவள்ளலார் என்று எங்கேனுங் கூறியிருக்கின்ருரா? இருந்தாற் காட்டியிருக்கலாமே. அவர் வாய்மொழியென அவர் பாடலிலிருந்தெடுத்துக் காட்டிஞலன்றே நியாயமுரைத்தனர் என்று அனைவரு முரைப்பார்கள்.

பிள்ளையவர்கட்கு ஞானசாரியரிட்ட பெயரே அருட்பிரகாசவள்ளல் என்பது.

கிரியாவதியென்னுந் தீட்சையால் மந்திர சரீர மந்திர நாம மந்திர வியாபாரங்களையுடையானும் திரிபதார்த்த விசாரணையில் சிறந்த ஞானசாரியனை நாடித்திரியும் சன்மார்க்கத்துக்குரிய சத்சீடன்பொருட்டு ஞானசாரியன் கருணைகூர்ந்து எதிரெய்தி சற்சீடனுடைய உடல்பொருளாவிகளைப் பெற்று அருள் சிவஞானங்களையளித்து அருண்மூர்த்தியாக்கி அருண்நாமஞ்சூட்டுதல் வழக்கமென்பதனை இவரறிந்திருந்தால் அவ்வாறுரையார். அநேக பேதங்களையுடைய சைவ ஞான சம்பிரதாயங்களுள் இராமலிங்கபிள்ளையவர்கள் வைதீக சுத்தாத்துவித சித்தாந்த சமரச சன்மார்க்க சம்பிரதாயியான திருமூலர் சிற்றம்பல நாடிகள் கண்ணுடைய வள்ளல் சிவஞான வள்ளல் சிதம்பர முனிவர் சிவப்பிரகாச முனிவர் குமாரதேவர் முதலிய சமரசசன்மார்க்கிகளின் சார்பின ரென்பதனையும் இவரறிந்திருந்தால் இவ்வாறுகூறுர்.இராமலிங்க பிள்ளை குருபுத்திரராய ஞான்று திருவருட்பிரகாச வள்ளல் என்று குருநாதரா லளிக்கப்பட்டதென்பது சன்மார்க்க வழியில் நிற்கும் ஒவ்வொருவரும் அறிவர்.

இத்தகைய இத்தேயத்து சன்மார்க்க சம்பிரதாய வனுட்டிப்பில் பழக்கமில்லாத நல்லூர் ஆறுமுகநாவலர் போலியருட்பா மறுப்பி லிவரெழுதியவாறே முன்ன ரெழுதி விடுத்தனர். அதற்கு அக்காலத்திருந்த அறிஞர் குதர்க்காரணிய நாசமகாபரசு என்னும் புத்தகத்தின் ௧௮-ம் பக்கத்து ௧௧-வது வரியில், தம்முடைய பரமாசாரியர் கட்டளையின் அவரருள் வழிப்பட்டோரால் திருவருட் பிரகாச வள்ளலெனப் புகழப்பட்டன ரெனவும், ௧௨௬-ம் பக்கத்து அவர்க்கருட் பிரகாச வள்ளலார் என்னும் பெயர் நலலோர் கோட்டியுள் வீற்றிருந்த பரமாசாரியர் தந்த தீட்சா நாமமெனவும் அவர் பாடலுக்கும் அவ்வண்ணமே திருவருட்பா எனவும் கூறப்பட்டது. என்றுகாட்டியிருத்தலின் முப்பதுவருடங்களுக்குமுன்னரே அருட்பிரகாச வள்ளலார் என்பது தீட்சா நாமம் எனக்குறித்திருந்தும் பின்னரும் அதே விஷயத்தினைப் புதுவதுபோல இவர்காட்டிஞல் அறிவிலிகளானசிலரன்றி மற்றையோர் அதனை அங்கீகரியாரென்க.

பிள்ளையவர் தாமாக அருட்பிரகாச வள்ளல் என்னும் அபிதானத்தினை வைத்துக்கொண்டவ ரல்லர் ஆதலினிவருரை வெற்றுரையென்க.

கவரன்மெண்டு கல்லூரியில் போதகாசிரியராக இருந்த தொழூவூர் வேலாயுத முதலியார் சுப்பராய செட்டியார் முதலிய அறிஞர்களும் கல்வியறிவொழுக்கங்களி லிவர்களை ஒத்த பலரும் பிள்ளையவர்கள் பாடல்கள் அருண்மயமாக இருத்தலின் அவரது பாடல்மஞ்சரிக் கருட்பா எனப் பெயரிட்டு வழங்கி வந்தார்களே யன்றி நால்வர் நான்மணிமாலை முதலிய சிறுநூல்களையும் முறையேபயிலாதவெம்மினுமுயர்ந்தஅறிஞரெவருமிவர்என்

று கூறுமவர்களல்லர்பிள்ளையவர்களின் பாடல்களை அருட்பாக்கள் எனவுரைக்கலாமெனக் கூறுமவர்கள்.

இத்தேயத்துச் சாதுசனங்கள் வரம்புகடந்து நடப்பவர்களல்லர் ஆதலின் எவரெவர்க்கு எதுஎதுபெயரோ அவரவரை அவ்வப்பெயர்களானே வழங்குவர் ஆதலின் இராமலிங்கபிள்ளை யவர்கட்கு திருவருட்பிரகாசவள்ளல் எனத்தீட்சாநாமம் இருத்தற்காக ஆலோசனை செய்பவர்களல்லர். பிறரைநோக்கி இராமலிங்கபிள்ளை யவர்களை நீங்கள் திருவருட்பிரகாசவள்ளல் என்று கூறுங்கள், அவர் பாடல்களைத் திருவருட்பா எனச்சொல்லுங்கள் எனவற்புறுத்த மாட்டார்கள் இத்தேயத்துச சனங்களும் வள்ளல் முதலிய பெயர்கள் பலர்க்கிட்டு வழங்குதலை யறிபவர்களாதலின அவைகளைக் குறித்தாலோசிக்க மாட்டார்கள். ஆதலின் இவ்விருவிஷயங்களும் அநுபவிருத்தமானவையே யாம்.

பின். உண்மைச் சிவநேயமுடையார் யாவரும் சிவபெருமானொருவர்க்கே வள்ளல் திருவருட்பிரகாச வள்ளலார் என்னுந் திருநாமங்கள் உரியனவென்றும், வள்ளன்மைக் கிருதலுவினோர் பங்கேனுமில்லாத மருட்பா இராமலிங்கற்கு அப்பெயரிட்டழைத்தல் மகாபாதகமாகு மென்றுங் கொள்ளாநிற்பர் என்றார்.

இவர் கூறியதுண்மையாயின் பிறரெவர்க்கும் இட்டு வழங்குதல் கூடாதென்றும் அதிலும் இராமலிங்கபிள்ளைக்கிட்டு வழங்குதல் மகாபாதகமென்றுங் கூறுதல் நியாயந்தானா?

இவர் உரைத்த வண்ணம் பன்னிருதிருமுறைகளிலெதிலேனும் சிவபெருமானுக்கு வள்ளல் என்றும் திருவருட்பிரகாச வள்ளலார் என்றும் பெயரெனவும்; இப்பெயர்களைப் பிறர்க்கிட்டுவழங்குவோர்அதிபாதகரெனவுமொன்றிரண்டு வரிகளை எடுத்துக்காட்டி யிருந்தாலும் பண்டைப்பெரியோர் இவ்வாறு தீர்மானஞ் செய்திருப்பதறகுமாறாக இராமலிங்கபிள்ளை அவர்களுக்கு வள்ளல் திருவருட்பிரகாசவள்ளலார் முதலியபெயர்களை அவராசிரியரிடினும் உலகினர் உரைக்கினும் யாமும்இவரை யொப்ப அவை தகாதனவே என்பேம். இவா அவ்வாறெதனையுங் காட்டாது புலவறிவின்மாக்கள் புந்திமருண்டு மெய்மெய்; இல்லாதுரைப்பாரானா? சிவபெருமா னொருவரேவள்ளல், திருவருட்பிரகாசவள்ளல்;என்றும பெயர்களுக்குரியராகஇருக்க, இவரென்ன அந்தரகாப் பெயரினை வை கொண்டனர் என்றுரைப்பதுபோல இப்பூர்வபக்கத்தாரின் பொய்மொழிக்கிணங்கி நாம் நிலேலம். நியாயத்துக்குக் கட்டுப்படுவேம்.

சிவபெருமானுக்கு வள்ளல் - என்பதொரு பெயரென்வும் திருவருட்பிரகாச வள்ளலாரென்ப தொருபெயரெனவும் இருகாறும்வழங்கும் எந்நிகண்டுங் கூறுமையை இதுவரையுணர்ந்தவரே யன்றி யுணராதவரல்லர். இததேயத்தவர் சொன்னவையை நம்புமவர்கள்தாமே, நாம்சொன்னால் நம்பிவிடுவார்கள் என்றே இவ்வாறு கூறுகின்றனர். இவ்வளவோடு நிறுத்திவிட்டால் நிகண்டிலிப்பெயர்கள் இருக்கின்றதோ இல்லையோ எனப்பிறர் நினைக்க இடமுண்டாகும்.

வடமொழி நிகண்டான அமரத்தில்.

"ஸரம்புரீசஃபசுபதி சிவஃசூலி மகேஸ்வரஃ
ஈஸ்வரஸர்வ ஈசானஃ ஸங்கரசசந்த்ரசேகரஃ
பூதேசஃ கண்டபரசுஃ கிரீசோ கிரிசோம்ருடஃ
ம்ருத்யுஞ்சயஃ க்ருத்திவாஸாஃ பினாகி ப்ரமதாதிபஃ
உக்ரஃ கபர்த்தி சரீகண்ட - ச்சிதிகண்டகபாலப்ருத்
வாமதேவோ மகாதேவோ விரூபாட்ச ஸ்த்ரிலோசனஃ
க்ருசானுரேதா ஸர்வக்ஞோ தூர்ச்சடிர்நீலலோகிதஃ

ஹர: ஸ்மரஹரோபர்க ஸ்த்ரியம்பக ஸ்திரிபுராந்தக.
கங்காதரோந்தகரிபு: க்ருதுத்வம்ஸி வ்ருஷத்வஜ:
வ்யோமகேசோபவோபீம: ஸ்தாணூருத்ர உமாபதி:" என்றன்றி
வள்ளல் திருவருட்பிரகாச வள்ளலார் எனக் கூறவில்லையாதலாலும்,

தமிழ்நிகண்டான சூடாமணியில்.

"சங்கரனிறையோன் சம்பு சதாசிவன் பேயோடாடி,
பொங்கரவணிந்தமூர்த்தி புராந்தகன் பூதநாதன்,
கங்கைவேணியன் கங்காளன் கடுக்கையங்கண்ணிசூடி,
மங்கையோர் பாகன் முக்கணன் மகேச்சுரன் வாமதேவன்
நீலகண்டன் அமரர்தேவன் நிருமலன் குன்றவில்லி,
சூலபாணி ஈசானன் பசுபதி சுடலையாடி
காலகாலன் கபாலி உருத்திரன் கலையாளி
ஆலமர்கடவுள் அத்தன் அம்முதல்வன் பரசுபாணி,
அந்திவண்ணன் முக்கண்ணன் அழலாடி அண்டரங்கன்,
சந்திரசேகரன் அனந்தன் சடைமுடியனந்தன் நந்தி
நந்தி சூரியோன் எம்மான் அற்பரன் அணிந்தோன்
அனந்தீச்சுரன் நீரார்ந்தோன் அக்கன் அமர் ஞானமூர்த்தி,
வரன் மற்றும் முதல்வியோகி மானிடமேந்தி சித்தி,
பிரமன் மாற்கரியோன் அணு பிஞ்ஞகன் பினாகபாணி,
பரமனெண்டோளன் கூற்றைப் பதைத்திடவுதைத்தநாதன்
அரனதுநாமமாறைந் திரட்டியாமனந்தமற்றும்."
என்னும் பெயர்களையன்றி வள்ளல் திருவருட் பிரகாச வள்ளலார் எனக் கூறாமையானும்,

பிங்கல நிகண்டானது.

"அரன்சிவன் ரூபி யானந்தன் உருத்திரன்,
பரன் கறைமிடற்றோன் பார்ப்பதிகொழுநன்,
காலகாலன் பசுபதி கண்ணுதல்
ஊருவெண்குணன், சங்கரன் நந்தி,
யாதிசித்தர் ஐம்முகன் பிஞ்ஞகி,
சோதிசம்பு சூலிபிஞ்ஞகன்,
முக்கண்ணன் பிறைசூடியோன், முன்னவன் பிறப்பிலி,
அக்கன் சடையோன் ஐயன் சயம்பு
காமநாசன் பித்
தேவதேவன் திரிபுராந்தகன்
மானிடமேந்தி பேயோடாடி
முத்தன் முதல்வன் சித்தன் யோகி
வேதமுதல்வன் ஸ்ரீபாக
ஆலமர்கடவுள் பவனேயநாதி
நீலகண்டன் நிருத்தன் பூதேசன்,
கங்காதரன் மழுவாளி கபாலி
மங்கணன் கைலையாளி கங்காளன்
அக்கரவார்த்தோன் அழலாடி தீம்பர்
அனித்தன் அமலன் நீறணிகடவுள்,
யானையுரித்தோன் அமலன் அனந்தன்,
வாமதேவன் மகேச்சுரன் சதாசிவன்
திரியம்பகன் விமலன் இந்திரசேகரன்
மாலயற்கரியோன் அத்தன் எண்தோளன்
ஞானமூர்த்தி நம்பன் பரமன்

[illegible]மன்கிரீசன் வரனுமாபதி
[illegible]பூதபதிபுண்ணியன்புரித்தோ லுடையோன்
[illegible]மாதேவன்கொன்றை மாலையன்பித்தன்
[illegible]ச்சுரனீச மில்லோனிறைவன்
பாசுபதன்குன்ற வில்லிபிண்டரங்கன்
[illegible]ஈசன்பிரமனு மெம்பிரான்பெயரே.

அந்திவண்ணன் காமாரி அந்த காரிபர்க்கனென் றனந்தமீசன்பெயர். என்னும் பெயர்களை யுரைத்ததேயன்றி இவர் சிவபெருமானுக்கே உரித்தென உண்மைச் சைவர் கொள்ளுமியர் என்ற வள்ளல் என்பதும் திருவருட்பிரகாச வள்ளலார் என்பதும் இதனிலும் கேட்கப்படவில்லை ஆதலின் அது சிவபெருமானுக்குரிய அானரூபி யனந்த னுருத்திரனுதி பெயர்களைப்போலச் சிறந்தனவென்று அறியாதாரு முளரோ? இராமலிங்கபிள்ளையவர்கள்மீதும் அவர் பாடன்மீதும் அழுக்காறடைந்த ஆறுமுக நாவலர் கொண்ட மருட்கையை மெய்யெனக் கருதி அவை சிவபெருமானுக்கே யுரியன என இவர் நியாய விரோதமாக வுரைத்தவைகளை அறிவிலிகளின்றிப் பிறரங்கீகரியாரென்க.

நூல்வழக்கினும் செய்யுள் வழக்கினும் இல்லாத ஒன்றை உரைத்தது அதனால் அதிபாதகஞ்சம்பாதிப்பவர்கள் பூர்வபக்கத்தவர்களேயன்றிப் பிறரொருவரன்றென்பது உண்மை.

பிள்ளையவர்களிடம் இருந்த வள்ளன்மை இன்னதென இவரறியாதவராதலின் வள்ளன்மைக்கிருதளவி னேர்பங்கேனுமில்லாத மருட்பாஇராமலிங்கர்க்கு அப்பெயரிட்டழைத்தல் அதிபாதக மாகுமென்றுநாணு உரைப்பர் இன்னம் அதிகமாகவும் உரைப்பர். உண்மையிலுரைப்பவரானால் வெகு சனங்களால் கௌரவமாக மதிக்கப்பெற்ற பிள்ளையவர்களை அகௌரவமாக உரையார். இவர் அகௌரவமாக உரைப்பதனாலேயே பிள்ளையவர்களுக்குள்ள பெருமைகுறையாதென இவர்க்குத்தோன்றாது போகியது ஆச்சரியமன்று பிடிவாதமுடைய ஒவ்வொருவரிடமும் இசசெயல் இராமலிராது.

பின், எல்லாமதமும் எல்லாத்தெய்வமும் ஒன்றென்னும் சமரசமார்க்கத்தவராம் அவலமார்க்கத்தவர் சிலரே அங்ஙனங்கொண்டு சிவனடியார் நிந்தைக்கும் திருவருட்பா நிந்தைக்கும் இலக்காயினர். என்றார்.

இவர் எல்லாசசமயமும் எல்லாத்தெய்வமும் ஒன்றென்பவரை அவலமார்க்கத்தவரென்றார். சமயங்கள்தோறுமுரைக்கும் தெய்வங்களெல்லாம் வேறுவேறானவையே. ஒன்றென்பவர் அவலமார்க்கத்தவரேயென்றாராயின் இவர்மதஞ் சைவமன்றெனவும் சைவமென்றுகொள்ளின் அதுபேத வாதமேயுடையதாய் கடவுள் நிலையை நன்குவிளக்காததாய் நிற்பதொன்றேயன்றி கடவுள் நிலையை நன்குவிளக்குவதன்றென்றே விவேகிகள் கருதுவார்கள்.

அறிஞர்சிகாமணியான தாயுமானார் பாடலில் திருவருள்விலாசப் பரசிவவணக்கத்துள்.

"சமயகோடிகளெல்லாந் தந்தெய்வ மெந்தெய்வமென் றெங்குந் தொடர்ந் தெதிர்வழக்கிடவு நின்றதெது. கருத்திற்கிசைந்ததுவே எ - ம். ஆகாரபுவனம் சிதம்பரரகசியத்துள்.

செப்பரியசமயநெறியெல்லாந்தன் றன்தெய்வமேதெய்வமெனுஞ்செயற்கையான, வப்பரிசாளருமஃதேபிடித்தாலிப்பா லடுத்ததந் நூல்களும்விரித்தேயனுமானுதி, யொப்பவிரித்துரைப்பாரிங்ஙன்பொய்மெய்யென்ன வொன்றிலையொன்றெனப்பார்ப்பதொவ்வா தார்க்கு, மிப்பரிசாஞ்சமயமுமாயல் பலவாகி யாதசமயமும்வணங்குமியல்பதாகி, இயல்பென்றுந்திரியாமலியம

மாதி, யெண்குணமுங்காட்டியன்பர்லின்பமாகிப், பயன்றுளப் பொருள் கள் பரிவாரமாகிப், பண்புறவுஞ் சௌபான பட்சங்காட்டி மயலறுமந்த ரஞ் சிட்சைசோதிடாதி மற்றங்கநூல் வணங்கமௌனமௌலி, யயர்வறச் சென்னியில்வைத்து ராசாங்கத்தில மைவது வைதிக சைவமழகிதந்தோ.

சன்மார்க்க ஞானமிதின் பொருளும் வீறுஞ்சமய சங்கேதப் பொரு ளுந் தானென்றகப், பன்மார்க்க நெறியிலுங் கண்டதில்லை பகர்வரியதில் லைமன்றுட் பார்த்தபோது, சென்மார்க்க மிருக்குதெல்லாம் வெளியே யென்ன, யெச்சமயத்தவர்களும் வந்திறைஞ்சா நிற்பர், எ - ம். பொன்னை மாதரை என்பதில், ஆனமான சமயங்களாறுக்குந் தானமாய் நின்று தன் மயங்காட்டிய, ஞானபூரண நாதனை நாடியே, தீனனேனின் பந்தேக் கித்திளைக்கவே எ - ம். அகவலில்.

“ அமயாக்காதலிற்சமயகோடி
அறம்பொருளாதிதிறம்படுநிலையிற்
குருவாயுணர்த்தியொருவர்போலனைவருந்
தத்தநிலையேமுத்திமுடிவென
வாததர்க்கமும்போதநூல்களும்
நிறைவிற்காட்டியேகுறைவின்றியவயங்க
அங்கங்குநின்றனையெங்குமாகி ” எ - ம்.

கூறியிருத்தலின் தாயுமானசுவாமிகள் இவராலிகழ்ந் துரைக்கப்பட்ட வருளொருவராகின்றார். அன்றியும், திருநாவுக்கரசு சுவாமிகள் திருநெறித் தமிழ்வேதமான தேவாரத்து,

காலமுநாள்களுழி படையாமுனேக வுருவாகி மூவருருவிற்
சாலவுமாகி மிக்கசமயங்களாறினுருவாகி நின்றதழலோன். எ - ம்.
“சமயமே லாறுமாகித் தானொரு சயம்புவாகி
யிமையவர் பரவியேத்த வினிதினங் கிருந்தவீசன். எ - ம்.

எல்லாசசமயமும் எல்லாத தெய்வமுமொன்றென கட்டளையிட்ட சம யாசாரிய சுவாமிகளான திருநாவுக்கரசு சுவாமிகளும் எல்லாச் சமயமும் எல்லாத் தெய்வமு மொன்றென்னும் அவலமார்க்கத்தவராகின்றார்.

செந்தமி ழுபநிடதமென இவர்கூறும் சிவஞான சித்தியில் “யாதொரு தெய்வங்கொண்டீ ரத்தெய்வமாகியாங்கே மாதொரு பாகனார்தாம்வருவர்” என்று கூறியிருத்தற்கு என்ன பொருள் கொள்வாரிவர். இங்கெடுத்துக் காட்டிய வைதீக சைவசித்தாந்திக ளனைவரும் சமரச சன்மார்க்கிகளே யாதலின் அன்னோர் கொள்கைகளைத்தழுவிச செல்லுவோர் அவலமார்க் கத்தவராக ஆகார். இப்பூர்வ பக்கத்தவர்களின் கொள்கையான தெய்வ முமனேகம் சமயமுமனேகம் எனக்கொள்ளும் பேதவாத திமிரமுடையவர் களே அவலமார்க்கசதவராதலி னியருரை யெற்றுரையென்க.

இராமலிங்க பிள்ளையவர்களின் பாடல்களைத் திருவருட்பா என்றமை யால் திருவருட்பா நிந்தகராக எங்ஙனமாவர் ஒன்றற்கே யுரியசிறப்புப்பெ யராயிருந்து அப்பெயரினைப் பிறர் கையாளுதல் கூடாது என விதியுமிருந்து அவ்விதிக்குமீறி நடந்திருந்தால் சிறப்பான திருவருட்பா என்னும் பெய ரைப் பொதுவாக்கி ஆண்ட குற்றத்தால் அவ்வாறு செய்தவர் அத்திருவட் பா நிந்தைக் குரியராவர். தமிழுலகத்து இதுகாறும் சைவத்துக் குரியதாய் திருவருட்பா என ஒரு சிறப்புநூ லில்லையாகவும் திருவருட்பா நிந்தகராகப் பிள்ளை யவர்களின் பாடல்களைத் திருவருட்பா என்றவர்கள் எவ்வா றுவார்கள்.

விதிவிலக்குநசனா ஆதியிலமைத்த இறைவன் வாக்கினை ஆட்சேபித்தல் கூடாதென்று விதியிருத்தலை யொப்ப இப்பூர்வ பக்கத்தா ரவைகளை யுரைக்கினும் அவைகளை ஆட்சேபித்தல் கூடாதென அனைவருங் கருதி மபங்குவார்கள் என்றே அவ்வாறெழுதினரா யிருக்கலாம்.

சாத்திர சம்பிரதாயங்களை உணராது ஒருவர் சொன்னவைகளை மெய்யாயிருக்கலாமென நம்பி அவர் வழிப்படுவோர் அறிவிலிகளன்றி விவேகிகளிந்நாட்டிலிரார் என்பதை அனைவரு மறிவர்.

தைரியநாதன் முதலிய ஊணர்மொழிகளுக்கு மயங்கிச் சைவசமயத்தைவிடுத்து கிறித்துமதத்திற் பிரவேசித்து விவிலியநற்சுருதி வாழ்க எனப் புகழ்ந்துகூறிக் கிறித்தவர்களின் நூலகளைப்பற்றி யொழுகி சைவர்கள் கிறித்தவமதத்தை இகழ்ந், தைக்கண்டு கிறித்துமதத்தை விடுத்துச சைவ ராதலை உடையவர்கள் ?குதியாக இத்தேயத்தி லிழிசனரியன்றி இன்மையும் தீவாந்தரங்களில் அதந்தேயத்தயர் குடிமக்களும் சித்தங்கலங்கி அத்தனை மறந்து கிறித்துவை நினைத்தல் இருந்ததும் இருக்கலுமே இத்தேயத்தவர்களி னுடையவும் தீவாந்தரவாசிகளி னுடையவும் சலனசித்தத்தை நன்கு விளக்குகின்றது. ஆகலின் இவ்வுரைக்குறிப்பொய்மொழிகளைத் தீவாந்தர வாசிகளையொப்ப இத்தேயத்தவர் நம்பார் நமது நண்பர் திருவருட்பாவென எதனைக்கூறினும் அதற்கப் பெயரின்மையை உதாரணங்களுடன் கூறிமறுப்பேம். இதனால் இவர் கூறுந்திருவருட்பா நிந்தையென்பது கனவிற்கண்ட பணம் விழித்தபின் செலவுக்குதவாமைபோல எமது மறுப்பைப்படித்த பின்னர் அனைவராலும் பொய்யெனக் காணப்படுமாதலின் திருவருட்பா எனப்பிள்ளையவர்களின்பாடலையுரைப்பவர்கள். நிந்தகராகாரென்க.

பின் செந்தமிழ் நாட்டினன்றிக் கொடுந்தமிழ் நாட்டிலும், அவை சூழ்ந்த நாடுகளிலும் இராமலிங்கபிள்ளை வள்ளன்மை ஒருசிறிது மில்லாரென்றும் பரபலரிடத்தும் வேண்டிய பொருளைத் தாமே பறிக்காமே மோசஞ்செய்தாரென்றும் கைம்மை மகளிர்பாற் கணவரைக் கொடுப்போமென்று நகைகள் பொருள்கள் மிகுதியும் வாங்கி அவர்க்கெல்லாம் நாமம்போட்டனரென்றும் பரவியது எவரேயறிகிலார் என்றார்.

இவர் கூறுந்திரமனைத்தும் பொய்யென்பதற்கு அவர் பாடல்களைப் பலதேயத்தவர்களும் சிரத்தையுடன் படித்தலும் அவரை யொருபெரியவரெனக்கருதி வழிபடுதலுமே சான்றாகும். இவரும் உள்ளத்தில் அதனை ஒத்துக்கொண்டவராயினும் ஆறுமுகநாவலரின் கொள்கையைத் தாமேனும் நிறைவேற்றி விடவேண்டுமென்னும் பிடிவாதங் காரணமாகவும், தாம் இவ்வாறெல்லாஞ் செய்வதனை இத்தேயத்தவர்கள் சாலமதிப்பார்களென்னு நினைவு காரணமாகவு ? தகைய விபரீதமொழிகளை யுரைக்கின்றனர்.

விபரீதவுணர்ச்சி ?பர்த ?ணர்ச்சியாக முடியுமேயன்றி அனைவராலுஞ்சரியென அங்கீகரிக்கற்கேற்றதாகாது. காலக்கிரமத்தில் ஈழநாட்டாரன்றியுள்ள பூர்வபக்கத்தா ரனைவரும் பிள்ளையவர்கள் நிலையை யறிந்து சர? ?ன்மார்க்கத்தைச் சரியான மார்க்கமெனக்கொள்வர். பின்னுஞ் சிலகால கழிய ஈழநாடும் பிள்ளையவர்களை மதிக்கும் என்றே சமாதான நிலையை விரும்பும் அறிஞர் எண்ணுகின்றார்கள்.

பிள்ளையவர்கள் கடன்படவேண்டிய நிமித்தம் இன்மையை அவர்தங் குடும்பத்துடனின்றி, துறவியாக இருந்ததே விளக்கும். நகைகளையும் பணங்களையுங் கொடுத்துப் புருஷரை எழுப்பித் தரசசொல்லு மடந்தையர்கள் இருக்கமாட்டார்களெனவும் ஒவ்வொரு குடும்பங்களிலும் பெண்கள்சுயேச்சையாக எதனையுஞ்செய்ய வியலாதாரெனவும் இத்தேயத்துக் குடும்பிகள் ஒப்புக்கொள்ளாம லிரார். ஆகவே இப்பூர்வ பக்கத்தார் இன்னது தான் கூறக்கூடுமென்பதனை மறந்து ஊரிலுள்ள கைம்மை மகளிர்பால் நகையும் பணமும் வாங்கினரென்றும் இராமலிங்க பிள்ளை பாடலாபாச தர்ப்பணத்தின் ௩௰-ம் பக்கத்தில் அவர்களை நிருவாணிக ளாக்கினரென்றும் பிள்ளை வரங்கொடுத்தா ரென்றும் பலவாறு இந்நாட்டுக் கற்புடை மகளி

ரில் அக்காலத்துக் கைம்மைகளா யிருந்தா ரனைவரையும் இகழ்தல் இத்தேயத்தாரிடம் வைத்த அன்பாலன் றென்பதனை யூகித்துணரும் ஒவ்வொருவரும் இவர் கூறுமனைத்தும் நம்பத்தகா விஷயங்களேயென வெறுத்தகற்றுமலிரார்.

இவ்வாறெல்லாம் எழுதுதல் தானோ? இராமலிங்க பிள்ளை பாடல் ஆபாச தர்ப்பணம். நல்ல தர்ப்பணம். சாம்பிய காளிதமுடைய இத்தர்ப்பணம் எத்தனை காலம் அறிஞர் கரங்களிலமரும்.

பின். முத்திறவள்ளன்மார்களி லிவரெத் திறவள்ளல் எ-ம். அங்ஙனம் அவர்களி லொருவரெனின் திவாகர கயாகராதி நிகண்டுகள் வள்ளல்களை வரையறுத்துக் கூறியது பொய்த்ததுபோலும் என்றார்.

முதல்வள்ளல் இடைவள்ளல் கடைவள்ளல் என வள்ளலர் ஒவ்வொரு பகுதியிலெவ்வேழுபெயராக இருபத்தொருபெயரே வள்ளலரென்பாரென்பது இவர்க்குடன்பாடாறேல் உண்மைச சைவர் சிவபெருமானொருவரையே வள்ளலாகக் கொள்வர் என்றதற்கு ஆதாரமெங்கே? இம்மூவகை வள்ளலரில் சிவபெருமானும் ஒரு வள்ளலோ? அங்ஙனமாத லுண்மையேயல் சிவபெருமான் பெயரும் அவ்வள்ளன்மார் பெயருடன் கலந்து வரல் வேண்டுமே? மூவகைவள்ளலருள் முதல் வள்ளலர் குமுணனும் சகரனும் சகாரனும் செம்பியனும் துந்துமாரியும் நளனும் நிருதியும் ஆகிய எழுவரையன்றிச சிவபெருமானையுரைக்கு நூலெவையு மில்லையென்க.

இடைவள்ளலர். அக்குரூரனும், அந்திமானும், அரிச்சந்திரனும், கன்னனும் சந்திமானும் சிசுபாலனும் தந்தவக்கிரனுமே யாவர் இடை வள்ளலும் உண்மைச் சைவர் வள்ளலெனக் கொள்ளும் சிவபெருமான் பெயரைக் கண்டிலேம்.

கடைவள்ளலர். எழிலியும் ஓரியும் காரியும் நள்ளியும் பாரியும் பேகனும் மலையனுமே யாவர். இக்கடை வள்ளலா பெயருளும் சிவபெருமான் பெயர் கேட்கப்படாமையால் இவர் கூறும் உண்மைச சைவர்களுக்குச் சிவபெருமா னொருவரே வள்ளலாபது எந்த ஆதாரத்தால், முன் சிவபெருமானொருவரே வள்ளல் என்றார் பின் மூவகை வள்ளலரையன்றி வேறும் வள்ளலர் இருந்தால் கயாகர திவாகராதி நிகண்டுகள் வள்ளலரை வரையறுத்துரைப்பானேன் என்றார். அங்ஙனம் வேறு வள்ளலர் இருந்தால் அவை பொய்த்ததுபோலும் என்று கூறுகின்ற இவர் தாமெழுதியநாலைந்துவரிகளிலேயே இவ்வளவு பிறழ்ச்சி உண்டாகுமானால் இவரைக் குறித்து எவர் தாம் வருந்தார்.

பின். வள்ளலாரா யிருக்கும் இவரை அந்நிகண்டுகளுள் சேர்த்துப்பாடுவோர் யாவர்? என்கின்றார். இதனாலிவர் பழயநூல்களில் புதிய விஷயங்களைப் பழயதாக எழுதிச சேர்க்கும் வழக்க முடையவரென்று எண்ணத்தகவராகின்றார்.

இவ்விருபத்தொரு வள்ளன்மார்க்கு முற்பட்டவரன்றோ சிவபெருமான், அவரை அந்நிகண்டுகளைச் செய்தவர்கள் ஏன் சேர்த்தெழுதவில்லை? மறந்து விட்டார்கள் என்று கூறுவாரோ? அல்லது அவர்க ளனைவரும் தம்மைப்போல உண்மைச் சிவநேய முடையவரல்லர் என்பரோ அறிகிலேம். நிகண்டு காரர்களுக்குச் சிவநேய முதலிய அவசியமின் றென்றும் அவர்கள் உள்ளதை உள்ளவா றெழுதவந்தவர்களென்றும் யாம்பதிலுரையாமலிரேம்.

பின். இராமலிங்க பிள்ளையவர்கள் இப்போதுள்ள வேதங்கள் உபநிடதங்கள் ஆகமங்கள் புராணங்கள் மிருதிகள் முதலாய நூல்கள் பயனிலவென்றும் அவற்றினின்றுஞ் சிறந்த சமரச வேதமொன்று தம்மாற் செய்யப்பட்டு, நடராசரால் திருத்தப்பட்டு வருகிறதென்றும் அதனையே எல்லோரும் அநுட்டிக்க வேண்டுமென்றும் கூறியிறந்தது போலின்றி அவரைச

சார்ந்தோர் யாராவது ஒரு நிகண்டு புதிதாகச் செய்து இராமலிங்கர் பெயரையும் வள்ளலெனச்சேர்த்து தந்தூருகமுதிர்ச்சியை காட்டுவோராகவென்றார்.

இத்தேயத்தார்கள் ஒன்றையும் நூதனமாகச் செய்யவும் நிகண்டுமுதலியவைகளில் பழையதாகக் காட்டவும் அல்லது அழியாது வைக்கவும் வேண்டுமென நூதனமாக இயற்றிச்சேர்க்க முன்வாரார். பூர்வபக்கத்தாரிடம் இந்தவழக்க மிருத்தற்குச்சில ஆதாரங்கள் வேண்டுமானாலும் காட்டுவாம்.

கவிச்சக்கரவர்த்தியான கம்பனையும் பிறபுலவரையும் அருண்மூர்த்திகளாகிய சேக்கிழார் சுவாமிகளாதியவரையும் சமயாசாரிய சுவாமிகளையும் இன்னமுள்ள பெரியோர்களையுமெந்த நிகண்டுகாரர் அகராதிகாரர் முதலியோர் தமதுநிகண்டுகள் அகராதிகள் முதலியவைகளிற் சேர்த்து எழுதினார்கள் பூர்வபக்கத்தார் தாந்திரட்டிய அகராதியில் நல்லூர் ஆறுமுக நாவலரைக் குறித்து விசேஷமாக எழுதி இருத்தலை அவ்வகராதியைப் பார்ப்பவர்கள் உணர்வார்கள். இராமலிங்கபிள்ளையின் பாடல் முதலியவற்றின் எதிரியான ஆறுமுகநாவலரை அகராதியிலவர் எழுதிச்சேர்த்ததுபோல இராமலிங்கபிள்ளையவர்களைச் சார்ந்தவர்கள் ஒருமையே தம்மைப்போலச்செய்தாலுஞ்செய்யவெனக்கருதியேயிவ்வாறுகூறினர்போலும். அன்றியும்வீரசைவபண்டாரமானகச்சபாலயஐயர்அவர்களை ஆதிசைவபிராமணரென்று தமது அகராதியுள் எழுதிவைத் திருக்கின்றனர் காஞ்சீபுரத்தைச் சார்ந்த ஐயன்பேட்டையிலின்னந் தாழ்ப்புலவரான கச்சபாலய ஐயரின் குடும்பத்தினர்கள் இல்லாமலில்லை ஆதிசைவப் பிராமணர்களை ஐயர் என எத்தேயத்தி லழைக்கின்றார்களோ அறியோம். ஆறுமுக நாவலர் காலத்து இத்தேயத்தில் இருந்த தாண்டவராய முதலியார் விசாகப் பெருமாளையர் சரவணப் பெருமாளையர் இராமாநுச நாவலர் சபாபதி முதலியார் கதிரைவேற் கவிராயர் சிவக்கொழுந்துதேசிகர் முதலியவர்களை இவர் திரட்டிய அகராதி வரிசையில் சேர்க்கத்தக்க யோக்கியதை அவர்களெவருக்கும் இல்லைபோலும் ஆறுமுக நாவலர் பெயரினை வசன நிகண்டான அகராதியில் சேர்த்து அதனிலவரைப் பரசமய கோளரி என எழுதி வைத்தவர் பூர்வபக்கத்தா ராதலாலும் எல்லாப் புலவர் பெயர்களையும் எழுதி இருக்கினும் அவ்வாறெழுதவேண்டிய அவசியம் இல்லையென்றே கருதும் இத்தேயத்தவர்களுள் பிள்ளையவர்களின் பக்கத்தாரும் பிறருஞ் சம்மதமற்ற இச்செயலைச் செய்யவிரும்பார் ஆதலின் பூர்வபக்கத்தாரே ஒரு நிகண்டுசெய்து அதனுள் வள்ளல் திருவருட் பிரகாச வள்ளலார் முதலிய பெயர்களைச் சிவபெருமானுக்கே உரிதென வரைந்து தமதபீட்டத்தை நிறைவேற்றிக் கொள்ளுதலே தகுதி என்று கருதி அன்பீர் நுந்தூருகத்தை இந்த விஷயத்தில்உபயோகப் படுத்திக்கொள்ளுதல் நலமெனக்கூறி மரியாதையுடனிதனை அந்தப் பக்கத்துக்கே அனுப்பிவைத் திருக்கின்றோம். இத்தூருகசித்தி பிறரால் நிறைவேறுவது துர்லபம். ஆதலின் பிள்ளையவர்களின் பக்கத்தாருக் கிவர்செய்த உத்தரவை அங்கீகரிக்க விருப்பமின்மையை யுணர்ந்து விடுத்தாரிடமே விடுத்தாமென்க.

பின். வேண்டாதன சிலகூறி கருங்குழியார் வள்ளலாராயின் அவர் கொடுத்த பெருங்கொடை அருட்கொடையா? பொருட்கொடையா? ஒரு கொடையுஞ் செய்திலார். என்றார். இவரே கடாக்களை விடுத்து விடையையும் விடுத்தால் மற்றையோர் மௌனமாக இருப்பார் என்று கருதினார் போலும். அருட்கொடை யவரிட மிருந்த தென்பதனை அவரதருட் பாடல்களைக் காண்பாரிற் பூர்வபக்கத்தா ரன்றியுள்ள அனைவரு மறிவார். பொருட்கொடையைக் குறித்து அவரிடஞ் சென்றிரப்போர் அறிவிலிகளே யாவர். துறவிகளிடம் பொருள் விரும்பிச் செல்லுவோர் விவேகிகளாவார்களா? ...ண்ணுடைய வள்ளல் சிவஞான வள்ளல் ஆளவந்த வள்ளல் முதலிய அநே

கர்கள் வள்ளலெனப் பெயர் பூண்டிருந்ததனையும் அவர் மரபினரி லிப்பொழுதும் வள்ளல் எனப்பெய ருடையராய்ச் சீடர்கள் வீடுகளை யடைந்து அவ ரளிக்கும் அரிசி,பருப்பு முதலியவைகளாலு தரபோஷணஞ் செய்தலையும் அவர்சீடர்விரும்பும்உபதேசங்களையன்றிவேறெக்கொடையும் இல்லாதிருத்தலையும் இவரறிந்தவராயின் வள்ளலென்னும் பெயருக்காக வழக்குப்பேசவாரார்.

பின். செத்தாரை யெழுப்புவேமென்று பொய் கூறி அநேகரையே மாற்றிப்பணம் பறித்த கொடுமையினாலே அபவாதம் நேர அதற்கஞ்சியன்றோ இறந்தார் என்றார்.

இவ்வித மொன்றுஞ் செய்யாது வெகு சுத்தராக இருந்ததாக இவர் மதிக்கும் ஆறுமுக நாவலர் சபாபதி நாவலர் முதலியவர்களெல்லாம் ஏன் இறந்துபோனார்கள். இராமலிங்க பிள்ளை இறந்ததற்காக இவரென்ன ஆதாரங்கண்டு பிடித்திருக்கின்றார். இவர் காட்டிய ஆதாரங்களை முன்னரே நிராதார மாக்கினோம். இவ்விடத்து வாளா கூறினமையால் வாளா விடுத்தாம்.

இப்போது விளங்குந் தில்லைத் தலமாகிய சிதம்பரத்திற்குக் கும்பாபிடேகத்தின் பொருட்டு இரண்டிலக்கம் ரூபாய் கொடுப்பேமென்று கூறிப் பின் ஒன்றுங் கொடாமை இவரது வள்ளற் றன்மையை நன்குவிளங்கிற்றே என்றார்.

பிள்ளையவர்கள் தம் வாயாலுரையாததொன்றை உரைத்ததாகப் போலியருட்பாமறுப்பிலாறுமுகநாவலர் வரைந்துவிட்டதனைப் பொய்யென நிரூபிக்க சென்ற சுக்கிலவருஷம் ஆனித்திருமஞ்சனகாலத்து வடலூரிலிருந்து பிள்ளையவர்கள் அநேகம் ஆயிரம் சனங்களுடன் சிதம்பரத்தையடைந்து இந்தவிஷயத்தினை உண்மையென நிரூபித்துச் செல்லுமாறு பல தகுநிலையுடையவர்களைக் கொண்டழைப்பித்ததற்கு நாவலர் வராதுநின்றுவிட்டதே எம்மனோர்க்கு இது போலியருட்பா மறுப்புகாரர் கட்டிவிட்ட கதையென நன்கு விளக்கிற்று. ஆதலின் பிள்ளையவர்களவ்வாறு கூறினாரில்லையென்று பதிலுரைப்பதே தகுதி. நிற்க.

இச்சைவசிகாமணி இப்போது விளங்குந் தில்லைத்தலமாகிய சிதம்பரத்திற்கு என்றதை ஆலோசித்தால் இதற்குமுன் விளங்கிய சிதம்பரம் வேறேயென்றும் அது தில்லைத்தலமன்றென்றும் இனி விளங்கும் சிதம்பரமும் வேறொன்றுண்டாகுமென்றும் எண்ண இடந்தருகின்றது. எப்போதும் விளங்குஞ் சிதம்பரம் தில்லைவனமன்றி வேறெதும் இல்லையாக இப்போது விளங்குந்தில்லைவனமென்றதெற்றிற்கு? எவரேனும் இவரைநோக்கி நண்பீர் இஃது பழயசிதம்பரமன்று அஃதுவேறு அஃதிறந்தொழிந்ததுஎன்று கூறிமயக்கினரோ? அல்லது தமது நாடுகளிலெங்கேனும் ஒருசிதம்பரமிருந்ததென்று கேட்டிருக்கின்றனரோ? மேலைச்சிதம்பரமென ஒன்றிருத்தலின் கீழைச்சிதம்பரம் வடக்குச்சிதம்பரமென வேறுசிதம்பரங்கள்இருக்கின்றனவோ? அங்ஙனமுளவேலிது தெற்குச்சிதம்பரமாதலின் இதனிலிப்பொழுது விளக்க மதிகமாக இருக்கின்றதென்று கருதினரோ? எவ்வாறு கருதினும் அது தவறேயென்பது நிச்சயம். இவ்வாறு பொய்யும் புளுகுமெழுதுவதுதானோ? இராமலிங்கபிள்ளை பாடல் ஆபாசதர்ப்பணமென்பது.

பின். செட்டிப்பாளையத்திலிருந்த ஒரு பணக்காரரிடஞ்சென்று அவர் பகைவரைச் சூனியஞ்செய்து கொல்வதாக உறுதிகூறி ஆயிரம்ரூபாச்சவரன் வாங்கினபிள்ளையாவள்ளலாவார். என்றார்.

ஊரைக்குறித்தஇவர்பெயரைக்குறிக்கமறந்துவிட்டனர்போலும் இறந்துபோன ஒருவர்பெயரை எழுதிவிட்டால் அவர் வந்து பிள்ளையவர்கட்காகப் பரிந்துபேசப்போகின்றாரா? பிள்ளையவர்கள் செய்யாதனவற்றைச்

செய்ததாக சாட்சியங்கூறுஞ் சிலரைப்போல உண்மைகூறத்தக்க துணிவுள்ள எவரையேனும் உடனிருந்து கண்டதாக எழுதி இருக்கலாம் அவசரத்தில் ஞாபகத்துக்கு வரவில்லைபோலும். சிவகாருணியமே ஒரு உருவமாகவந்ததோ என்று கருதத்தக்க நிலையிலிருந்த பிள்ளையவர்களை ஒருவரைக் கொல்லத் துணிந்தனரென்றும் அதற்காக ஆயிரம்ரூபாச் சவரனை பெற்றாரென்றுங் கூறுதலை எவருமங்கீகரியாரென்க. இதுதானோ இராமலிங்க பிள்ளை பாடலாபாசதர்ப்பணம்.

சூனியமென்பதே இல்லாததன்றோ? இல்லாததனைச்செய்து கொல்வதெங்ஙன்? இவ்வியாபாரத்துக்கிணங்கியபணக்காரன் எவனுமிரான். நிற்க பிறரிடம் பொருள் பெறுபவனெவனும் வள்ளல் எனத்தகாதவன் என்று கருதினரோ? அல்லது தீக்குண முடையான் வள்ளலாகான் என்று கருதினரோ? இருவிதமாகக் கருதினும் விவேகிகள் தவறென்றே கருதுவார்கள். ஈகைக்குண மாறாதவனே வள்ளல் இக்குணத்துக்கு பணமுடையவனெனவும் ஏழை எனவும் வேண்டுவதில்லை. அரிச்சந்திரனாகிய வள்ளல் விசுவாமித்திரன் கேட்ட அளவு பொன்னைக் கொடுக்க இயலாது வருந்தியதும் நீசமாதர் விரும்பிய வண்ணம் கொடுத்தற் கியையாது கவன்றதுவும் அரிச்சந்திரன் கதையைப் படித்தவரெவரு மறியாமலிரார். கவற்சிகொண்ட அவ்விடங்களிலும் ஈகை விருப்ப மாறாதவனாகவே இருந்தான் அதனாலவன் வள்ளலானான்.

வள்ளலான குமணன் தன்னை யிரந்த புலவனுக்கு ஏதுங் கொடுக்க வகையின்றி வருந்தியதனை யாவரே உணரார். இல்லாத ஞான்று மீதல் விருப்பமே யுடையனாகவே இருந்தமையால் வள்ளலானான்.

வள்ளலான கன்னன் தன்னை யிரந்த பார்ப்பானுக்கு ஏதுங்கொடுக்க வழியின்றிக் கவன்றதனையறியாதாரெவர் கவன்றஞான்றும் ஈகைக்குணமே மிகுதியும்உடையனாக இருந்தமையின் வள்ளலானான். கொடுக்குங் குணமுடையவனுக்கு வள்ளலென்று பெயர். இதனை யறியாத இவர் ஆயிர ரூபாச் சவரன் வாங்கின பிள்ளையா வள்ளலாயார் என்று கூறுதல் தவறென்க.

பின், வாங்கிய சிலநாளுள் பணங்கொடுத்தவ ரிறந்தமையா லன்றோ இராமலிங்கரது வஞ்சச்செய்கை மறைந்திருந்தது என்றார்.

கொடுத்தவரு மிறந்து வஞ்சச்செய்கையு மறைந்திருந்த துண்மையாயின் இவர்களுக்கு மாத்திரம் அதனை உரைத்தவர் யாவர். உலகினர் எந்தத் தவறுதல்களையும் முதலில் விபரீதமாகப் பாராட்டினும் பின்னர் சமானமாகப் போதல் வழக்கமாதலின் பல வருடங்களுக்கு முன்னே நடந்ததிச் செயலாயின் இப்பொழுததது புதிதாக வெளிவருமா? வராது வராது இறந்துபோன பணக்காரன் மீட்டும் பிறந்து இந்த இரகசியத்தினை இவர்களிடம் சொல்லினனோ? அல்லது இவர் யோக காட்சியில் பிள்ளையவர்களின் இத்துர்ச்செயலை யுணர்ந்தனரோ வேறெவ்விதமாக இந்த இரகசியத்தினை இவரறிந்தார். தன் பகையாளியைப் பிள்ளை யவர்களைக் கொண்டு அழிக்க நினைத்தவன்பனோ மனோவாக்குகளாற்செய்தபாவமுடையனாதலின் இறந்தானென் றிவர்கூறும் பணக்காரன் நரகு முதலிய இழிந்த இடங்களில் அநேகவருட காலங்கிடந்து பின் திரியக்காதி சென்மங்களையடைந்து மனிதரிற் சண்டாள சென்ம மடைதற்கே அநேக இலக்கம் வருடங்கள் செல்லுமே ஆதலின் அத்தனிகன் பிறந்து கூறியிரான். யோகக் காட்சியுடையவரானால் சிவஞானியான பிள்ளையவர்களை இவ்வாறெல்லாம் இகழுமுற்படார். இவ்விரு விதத்திலு மன்மையால் இது பிள்ளையவர்கள் பாடலை மதித்துப் படிப்பவர்களின் மனநிலையைக் கெடுப்பதற்கு பூர்வபக்கத்தார் கூறியதவறே இது என ஆலோசனை செய்யத்தக்க ஒவ்வொருவரும் அறியாதிரார்.

பின். அங்ஙனந் தீயவழியில் தேடிய தங்கக் காசுகளை மடித்துக்கடிதத்திற் சுருட்டி செம்புருக்குவோர் போல கம்மியரிடம் உருக்குவித்து பொன்னுக்குகிறேமென்று விபூதியைத் தூவித்தம்மை யிரசவாதியென்று பறையடிப்பித்துக் கபடநாடகக் கூத்தாடிய கருங்குழியாரா திருவருளைப் பிரகாசித்திடும் வள்ளல் அந்தோ கொடுமை! கொடுமை!! என்றார்.

கம்மியரொன்றைக் கையில் கொடுத்தவுடனே அதன்கண முதலியவைகளாலும் அது உருகுங் காலவளவினாலும் அதனை இன்னதென அறிந்து கொள்ளும் வழக்கமுடையவர், உலையிலிட்ட காகிதமுடனே வெந்து போவதாலும் பிள்ளையவர்கள் கொடுத்ததை இன்னதென்று தெரிந்து கொள்ளாம லிருப்பார்களா? உருகுவது சவரனேயானால் அதனில் விபூதி தூவினால் கம்மியர் சும்மா இருப்பார்களா? ஒருவர் தம்மை இரசவாதியென்று பறையடிப்பித்த சிறிது நேரத்துக்குள் அவர்கள் வாசஞ்செய்ய வேண்டிய இடம் இன்ன இடம் என உணராத இப்பூர்வபக்கத்தா ரிவ்வாறு கூறினும் இவ்விந்தியா வாசிகளான சனங்கள் அதனை நம்புவார்களா? அர சாங்கத்தாரின் சட்டத்துக்கு விரோதமாக ஒருவர் தம்மை பொன் முதலிய செய்யத்தெரிந்த இரசவாதியெனப் பறையடிப்பித்தலேயோ? பத்திரிகைகளின் வாயிலாக விளம்பரப் படுத்துதலேயோ செய்தால் சட்டத்துக்கு மீறிய குற்றத்துக்குட்பட்டவர்களாக வாவார்கள். பிள்ளையவர்கள் அவ்வாறு பறையடிப்பித் திருந்தால் அரசாங்கத்தார் சும்மா விடுவார்களா? விடார் என்பதை இவரறியார் ஆதலின் பொருத்தமற்ற இப்பொய்யை வரைந்து விடுத்தனர். இராமலிங்க பிள்ளையின் பாடலாபாச தர்ப்பண மெழுதவந்த இவர் அவர் பொன்செய்யத் தெரியுமென்று பாடிவிடுத்த பாடலிருந்தால் அதனைக்காட்டி அதனிலுள்ள ஆபாசங்களை விளக்கினால் நாமதற்குத் தக்க சமாதான முறைப்பேம் அதனை விடுத்து தம்மனம் போனவா றெல்லாங் குழறினால் நம்முரை வெற்றுரை என்று கூறுதலையன்றி வேறென் செய்வேம். கபடநாடகக் கூத்தாடியவர் இந்த இரசவாத விஷயத்தில் இராமலிங்க பிள்ளையன் றென்பதனை இனியனைவரு மறியாமலிரார். திருவருட் பிரகாச வள்ளல் என்பதற்கு திருவருளைப் பிரகாசித்திடும் வள்ளல் என இவர் இராமலிங்கபிள்ளை விஷயத்தி லெழுதியது அநுசிதமென்க. திருவருளால் பிரகாசித்திடும் வள்ளலென்றே சமரச சன்மார்க்கத்தார் கொண்டு கூறிவருகின்றனர் இவ்வுண்மையை உணராது தம்மனம் போனவா றெழு

பின். வள்ளல் என்ற பெயர் சிவபெருமானுக்குஞ் சுப்பிரமணியபெருமானுக்கும் உரியதாக இராமலிங்க பிள்ளை தாமே தமது மருட்பாவிற்கூறியுள்ளார் என்றார். சிவபெருமான் சுப்பிரமணிய பெருமானுமியருக்கு வள்ளலென்று பெயர் கூடாது எமக்கே அப்பெயருரித்து என்று காட்டியிருந்தாலன்றோ இவராட் சேபிக்கவேண்டும் இதனில் இவர் கூறும் ஆட்சேபம் சிவபெருமானையும் சுப்பிரமணியக் கடவுளையும் வள்ளலென் றழைத்த இராமலிங்கபிள்ளை அப்பெயரை தமக்குவைத்துமகிழ்கூர்ந்து ஒப்பின்றது நீதியாமா? தம்மையபிமானித்த தங்கணக்கர் குலத்தாருட்சிலர்வள்ளலென் றழைத்தால் மற்றையோரும் அழைப்பாரா? தாண்டகவேந்தர் நாவுக்கரசமாணிக்கவாசகர் என்று சமயாசாரிய சுவாமிகளையும் அம்மை அப்பன் எனமுறையே காரைக்கா லம்மையார் கண்ணப்ப நாயனார் என்பாரையும் பரமநாதன் தன் திருவாயா லழைத்தமையாலன்றோ உலகமும் அங்ஙனம்போற்றுகிற்கும் இவரை வள்ள லென்றுவது திருவருட் பிரகாச வள்ளலென்றுவது சிவபெருமான் அழைத்தருளினாரா? இல்லையே தொழுவூர் முதலியாரும் - கஞ்சி மு. முதலியாரும். அழைத்தமை சிவவாக்காமோ? என்றார்.

தாண்டக வேந்தரென்னும் பெயர் திருநாவுக்கரசு சுவாமிகளின் சரிதமெழுதிய சேக்கிழார் வழிவழங்கி வந்ததென்று சைவரிற் சிறுவரு மறி

வர். இவர் தாண்டகவேந்து எனசிவபெருமான் தமது திருவாயாலழைத்த னர் என்றார். பெரிய புராணத்து ளவ்வாறு கேட்கப்படாமையாலது தவறென்க.

"நாவுக்கரசென்று லகேழினு நின்னுமங்கணயப்புற நண்ணுக" என்று காயவாணியால் இறைவன் கட்டளையா லுரைக்கப்பெற்ற தென்றவாறு தாண்டக வேந்தரெனப் பரமநாதன்றன் றிருவாயாலழைத்தாரென இவர் கூறிவிட்டதனாலேயே அதனை மெய்யென நம்புவோர் யாவர் இதனாலிவர் திருநாவுக்கரசு சுவாமிகளின் புராணத்தினை பலமுறை படித்துணர்ந்தவரென அனைவருமறைவர்.

இறைவனால் அழைக்கப்பெற்ற பெயரென்ற நாவுக்கரசர். மாணிக்க வாசகரென்னு மிருபெயரை யன்றியுள்ள ஞானசம்பந்தர் நம்பியாரூரர் முதலியவர்களின் பெயர்களைசிவபெருமானே இட்டழைத்தனரோ? அன்றாக வும் அவை உலகில் நாவுக்கரசர் மாணிக்கவாசகர் என்னும் பெயர்களுடன் கலந்து வழங்குதற்குக் காரணமென்னை? அப்பன் என கண்ணப்ப நாயனா ரை பரமநாதனறன் றிருவாயாலழைத்தனரா? பெரியபுராணத்துள் "நாக- நந்தனனுமுதல்வாகக் கண்ணப்ப நிற்க. வென்றே" என்றழைத்ததாக இருக் கின்றதேயன்றி இவர் வரைந்தாங்கு அப்பன் என அழைத்ததாக இன்மை யால் பரமநாதன்றன் றிருவாயாலப்பனென அழைத்தாரென்றது பெரிய புராணத்துள் பகுதியும் பழகாது கூறியதனாலுண்டாகிய தவறேயாம்.

சமணர் இன்றுந் திருநாவுக்கரசு சுவாமிகளை தருமசேனர் என்று கூறுதலையன்றி நாவுக்கரசெனக் கூறாமையும் - சிவபெருமானு லம்மை யென வழைக்கப்பெற்ற புனிதவதியாரை தம்பிரான்றோழர். பேயார்க்கு மடியேன். எனப்பேயார் எனமாறிசகூறியிருத்தலையுமிவரேன் நினைவிற்குக் கொண்டுவந்திலர். கணக்கர் குலத்தாருட் சிலர் இராமலிங்கபிள்ளையவர் களை வள்ளலென அழைத்தால் மற்றையோரும் அழைப்பாரா? என்று வினவுகின்றனர். இராமலிங்கபிள்ளையவர்களை வள்ளல் திருவருட்பிரகாசவள்ள லாரென அழையுங்களென கணக்கர் முதலிய எவரும்பிறரை வற்புறுத்து வோரின்றாகவும் மற்றையோரும் அழைப்பாரா? என்றது எவ்வளவு வியக் கத்தக்கவிஷயம். விருப்பமுள்ளவர்களன்றிப்பிறர்எவர்பெயரையும்மகிழ்வுட னழைக்கக் கூசுவர். இராமலிங்கபிள்ளையவர்களின் எதிரியாயிருந்தஆறுமுக நாவலரை யாழ்ப்பாணத்தார் சிலர் சற்குருநாதசுவாமிகள் என்றழைக்கின்ற னர். அய்யாழ்ப்பாணர் அனைவருமழைப்பார்களா? அன்றியும் இராமலிங்கபிள்ளை யவர்களுக்கிட்டுவழங்கப்படாநின்றனும்வள்ளல். அருட்பிரகாசவள்ளல் என் னும்பெயர்களை ஆறுமுகநாவலருக்கிட்டுவழங்குகின்றனர். அவ்வாறு அவ ரை அம்மானிருந்த பலர் அய்யாழ்ப்பாணவாசிகளும் வழங்குவார்களா? இராமலிங்கபிள்ளையவர்கட்டருட்பிரகாசவள்ளலெனப்பெயரிட்டழைத்தல் அதிபாதகமென்ற ஆறுமுகநாவலருக்கப்பெயர் கூறுவார்களாஇது நாமவே றுமெனக் கட்டிவிட்டகதை யென்று சனங்கள் நினையாதிருத்தற்காக ஆறுமுகநாவலர் சரித்திரத்துக்கண்ட சிலபாடல்களை இங்குதகரிக்கின்றோம்.

ஆறுமுகநாவலர் சரித்திரம் கரு-ம் பக்கம் "கல்விக்களஞ்சியங் கற்ற வர்கவேறு கருணை வள்ளால் - என்று கூறியிருத்தலால் இவர் கூறியவாறு சிவபெருமானொருவரையே வள்ளலென அழைத்தல்கூடுமாயின் சிவபெரு மானல்லாத ஆறுமுகநாவலரை வள்ளல் எனல் தகுதியாமா? ஆறுமுகநாவ லர் சரித்திரம் கசுக-வது பக்கம்.

"எத்திசையுநனி தீபம்போலச சோதியெறிக்கு மருட்பிரகாச வள் ளால்" என்று ஆறுமுகநாவலரை அருட்பிரகாச வள்ளலாக இப்பூர்வபக் கத்தாரிசைத்தற்கு எங்ஙனம் மனமிசைந்தனர். இங்ஙனங் கூறுதலைத தானே உண்மைசிவநேய முடையார் துணிபு என்றனர்.

வள்ளலென்னும் பெயரும் அருட்பிரகாச வள்ளலென்னும் பெயரும் ஆறுமுகநாவலருக்கு மாத்திரம் உரித்தாகி இராமலிங்கபிள்ளைக்கு மாத்திரம் உரித்தல்லாததாகியதற்கு இவரென்ன நியாயமுரைப்பர்.

இராமலிங்க பிள்ளையவர்களைப்போல ஆறுமுக நாவலருக்கு விரைவாகக் கவிபாடவரும் என்னும் வழக்கச்சொல் இவ்வுலகிலிருந்தால் அவர் பாடிய சிலபாடலெனச் சிலகவிகளைத் திரட்டி இஃது சற்குருநாதசுவாமிகளெனவும் அருட்பிரகாச வள்ளலெனவும் பரசமயகோளரியெனவும் வழங்கும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் திருவாய்மலர்ந்தருளிய திருவருட்பாக்கள் என வழங்குவர். இதுகாறு மவ்வாறு செய்யப்படாவிடினும் இனியேனும் அவ்வாறு செய்வர். ஆறுமுக நாவலரைப் பரசமய கோளரியென ஈழநாட்டுச் சைவருட் பெரும்பாலார் வழங்கிவருதலாலன்றோ இப்பூர்வபக்கத்தார் திரட்டி யச்சிட்ட அகராதியில் பொருளகராதியில் ஆறுமுகநாவலரென்ற தலைப்பின்கீழிடையில் அவர் பரசமயகோளரியாகி என்று குறித்தனர் இதனை யறியாதார் யாவர். அன்றியும் ஆறுமுகநாவலர் சரிதம் கஙக-வது பக்கத்தில் பரசமயகோளரியே என்று கூறியிருத்தலுங் காட்டாம். ஞானசம்பந்த சுவாமிகளையன்றி தமிழ்நாட்டுச் சைவர் பிறரெவரையும்பரசமயகோளரியென வுரையார்.

“சீர்நிலவு திருத்தெளிச்சேரிசேர்ந்துசிவபெருமான்றனைப்பரவிச்செல்லும்போது, சார்வறியாச் சாக்கியர் தம்போதி மங்கை சார்தலு மற்றதுவறிந்த சைவரெல்லாம், ஆர்கலியின் கிளர்ச்சியெனச்சங்குதாரை யளவிறந்த பல்லியங்கண் முழக்கியார்த்துப், பார்குலவு தனிக்காளஞ் சின்னமெல்லாம் “பரசமய கோளரி வந்தானென்றூத”என்றுபெரியபுராணத்துள் ஞானசம்பந்தப் பெருமானுக்கே பரசமய கோளரியெனப் பெயராக சிவபெருமானளித்த திருச்சின்னம் பரசமய கோளரி வந்தானென் றூதுமாலனல் அதனை ஆறுமுக நாவலருக் கிட்டுரைத்தல் மாத்திரம் நியாயமும் பிறர்க்காயின் அதிபாதகமும் ஆதல் தவறேயன்றி உண்மை யாகாமையால் இராமலிங்க பிள்ளையை தங்கணக்கர் குலத்தாருட் சிலரன்றி மற்றையர் வள்ளல் திருவருட் பிரகாச வள்ளலென இசைக்க இசையாரா என்றது ஆறுமுக நாவலருக்கு இவர்களிட்டு வழங்கும் அருட்பிரகாச வள்ளல் பரசமய கோளரி சற்குருநாத சுவாமிகள் முதலிய பெயர்களை நாமறியோமென்றுகருதிப்போலும்கஞ்சி. மு முதலியாரும்தொழுவூர்முதலியாரும் அழைத்தல்சிவவாக்காமா? என்ற இவர் ஆறுமுக நாவலரை அவர் மாணாக்கர்களும் மாணாக்கரின் மாணாக்கர்களும் மாணாக்கரின் மாணாக்கர்களும் வள்ளல் அருட்பிரகாசவள்ளல் என்று அழைத்தலை எந்தவாக் கென்பீர் என்றுரெலன்னையோ நன்கு கூறும்பதில்.

பூர்வபக்கத்தார்க்கு மாத்திரம் வள்ளல் அருட்பிரகாச வள்ளலாதி பெயர்களை இட்டு வழங்க சிவவாக் கவசிய மில்லையாலனல் இராமலிங்க பிள்ளைக்கு மாத்திரம் அப்பெயர் இட்டு வழங்குதற்கு சிவவாக் கெங்ஙனம் அவசியமாகும். இயற்பெய ரன்றியுள்ள பெயரினை விருப்ப முள்ளவரன்றி மற்றையோ ருரையாரென்ப துண்மையாதலின் சிவவாக்காமா என்றது தவறேயென்க.

பின், சிவபெருமானையுங் குமரப் பெருமானையும் வள்ளலென்ற இராமலிங்க பிள்ளை தமக்கு அதற்கு மேல் திரு அருள் பிரகாசம் என்னு மொழிகளைச் சிறப்பெனச் சேர்த்து வழங்குவித்தது சிவனடியார் என்பதையா காட்டுகின்றது சிவகுகக் கடவுளுக்கு மேலவர் என்ற எண்ணத்தையன்றோ தெரித்து நின்றது என்றார். இராமலிங்க பிள்ளைக்கு மாத்திரம் சிவகுகக்கடவுளுக்குமேலென்றபொருளும் ஆறுமுகநாவலர்க் கிட்டுவழங்குதல் சிவகுகக் கடவுளுக்குக்கீழென்ற பொருளும்காட்டிற்றுப்போலும் பிறரிடத்துத் தாங்

குற்றமெனக் காணுமொன்றை நம்முடத்தும் தம்மைச் சார்ந்தாரிடத்தும் காண்டலேக்குணமாகக் கருதுவோர் நியாயவாதிக ளாவார்களா?

திருவருட்பிரகாச வள்ளல் என்றது சிவகுருக்கடவுளருக்கு மேலென நம்மைக் காட்டவைத்த பெயரெனல் தவறென்க. சிவகுருக் கடவுளருக்குத் திருவருட்பிரகாச வள்ளலென ஒருவர் அல்லதொரு குழுவினர் பெயரிட்டு வழங்கினு லப்பெயர்ப்பொருளை விரிக்குங்கால் இராமலிங்கபிள்ளை முதலிய அறிஞருக்கிட்டு வழங்குவதை விரிப்பதுபோல பொருள் விரிப்பவர் புல்லறிவின் மாக்களன்றி நல்லறிவின் மாக்களாகார். கடவுளர்மாட்டு அருளைப்பிரகாசித்திடும் வள்ளலெனவும், அறிஞர்மாட்டு அருளால் பிரகாசித்திடும் வள்ளலெனவும் பொருள்கோடல் சிறப்பேயன்றி இவர்கருத்தியாங்குரைக்கி னறிஞர் நகுவரென்க. மெய்யெலறிபரிதி யென்பதூஉம். மெய்யிலாலெறி பரிதியென்பதூஉம் பொருள் வேறுபடுதல் போலவென்க.

திருவருளாற் பிரகாசித்திடும் வள்ளல்-திருவருட்பிரகாச வள்ளல். திருவருளின் சேர்க்கையால் பிரகாசித்திடும் வள்ளலென்று பொருள்கொண்டால் வள்ளலென்றும் இராமலிங்கபிள்ளை திருவருளைப் பூர்ந்த சேர்க்கையாற் பொருளால் பிரகாசிக்கின்றனரன்றி தாமன்ன பிரகாசப்படுபவர் எனற பொருளாம். திருவருளைப் பிரகாசித்திடும் வள்ளல் என்றுக்கால் இயற்கைத்திருவருளையுடைய சிவபெருமானுக்கேயன்றி பிறர்க்கு ஏற்படாதெனச் சிலர் விருப்பார். பானுவின் கிரணத்தையேயாதல் பிரகாசிக்குமாதி, பளிங்காதிகளைப் போல இறைவனது கருணையான திருவருளால் விளக்கமுற்றவராதலின் அவரை யபிமானித்தவர்கள அப்பெயரானவரை யழைக்கின்றனர். முன்னு மனேக திருவருட்பிரகாச வள்ளலரிருந்திருப்பார்கள் இப்பொழுதும்அனேகரிருப்பார்கள். இனிமேலும்அனேகம் திருவருட்பிரகாசவள்ளலர் உண்டாகாமலிரார். இறைவன் திருவருளால் கிடைக்கப்பெற்ற ஞானாசாரியத்தன்மையுடையார் யாவரும் திருவருட்பிரகாச வள்ளற் பெயர்க்குரியரேயாவர். இவ்வுண்மையறியா தாமே பிறர்க்குப்பலஅபார்த்த முரைத்திடர்ப்படுவோயார்.

பின், அப்பெயர் அவர்க்குச் சம்மதமன்றேல் தொழுவூர் முதலியார் திருவருட்பாவரலாறு என்ற மருட்பா வரலாற்றுள் அருட்பிரகாச வள்ளல் என்று பாடியதை ஒப்பிவைத்ததும் அதனை யக்காலத்துள்ள வித்வசிகாமணிகள் மறுத்த காலே அவரை யதைச் சினைத்து நின்றதும் என்னே? இங்ஙனம் செய்தமையெல்லாம் சிவநிந்தையன்றோ? என்றார். அப்பெயர் அவர்க்குச் சம்மதமில்லாததெனவுரைத்தவர் யாவர்? சம்மதமில்லாத பெயரைத் தாங்கி நிற்பவர்கள் பூர்வபக்கத்தாரேயன்றி பிள்ளையவர்களல்லர். உமக்குத் திருவருட்பிரகாச வள்ளலென்னும்பெயர் தகாதென்றவர்களுக்கு அவரைச் சார்ந்தவர்க ளப்பெயரை எவ்வாறுசூட்டினார்கள்.கிரியாசாரசீலத்தில்விருப்பமுள்ள ஆறுமுகநாவலரை யுள்ளிட்டார் அருட்பிரகாச வள்ளலென்றழைக்கத்தகுதியுடையோரும் இராமலிங்கபிள்ளைமாத்திரம் அப்பெயர்க்குவிரும்பி நின்றது சிவநிந்தையுமாகியது பொருத்தமான விஷயமன்றென்பதனையும் நியாயமின்றி ஒரு விஷயத்தினை மறுப்பவர்களிடம் எவரும் விருப்ப முடையராயிரார் என்பதனையும் நமதன்பர் உணர்வாராக. ஒன்றை எமக்குத்தகும் பிறர்க்குத் தகாதென்பவர்கள் நியாயவாதிகளன்றென்பதனை மீட்டும் எச்சரிக்கின்றோம்.

பின், "பொக்கைவாயன் பொரிமாவை மெச்சினான்" என்ற பழமொழிப்படி இராமலிங்கபிள்ளை தமது மைத்துனரானமையால் அவர் பாடல்களை மெச்சும் பொன்னேரி சுந்தரம்பிள்ளை என்பார் பஞ்சாக்கர மந்திரத்தினும் பார்க்கத் தமது மைத்துனரின் பெயரான இராமலிங்க பிள்ளை என்னுமந்திரஞ் சிறந்ததென்றும் அது சனிப்பிறப்பை யறுக்குமென்றும் "நாம

வெழுத்தைந்தோவன்றியருளிராமலிங்க வற்புதப் பொற்பெயரோ?"என்று
மருட்பா சிறப்புக் கவியென்று ஓர் வறப்புக்கவி கொடுத்துளார். பஞ்சாக்
கரத்திலும் பார்க்க இராமலிங்க பிள்ளை யென்னும் பெயர் சிறந்ததென்று
கூறியதை இராமர் உவகையுடன் கேட்ட பாவத்திற்கு பிராயச்சித்தமில்லை
யென்க என்றார்.

இவர் எடுத்துக் காட்டும் ஒவ்வொரு விஷயங்களும் சாஸ்திர விருத்த
மானவையும் அயுக்தமானவையும் அன்றி உசிதமானவையாகக் காண்டல்
வெகு துர்லபம். பொன்னேரி சுந்தரம்பிள்ளை தமது மைத்துன ரென்பத
னால் இராமலிங்க பிள்ளைக்குச் சிறப்புக் கவியென ஓர் வறப்புக்கவி கொ
டுத்தனர் என்றார். அக்கவியிலுள்ள செம்பொருளை உணராது மயங்கி பஞ்
சாக்கர மந்தரத்திலும் பார்க்க இராமலிங்க பிள்ளை யென்னு மந்திரஞ்
சிறந்ததென்று கூறினார், எனக்கூறுதல் தவறன்றி நியாயமாகாது.

சுந்தரம் பிள்ளை என்பவர்க்கு இராமலிங்க பிள்ளை குருவாதலின்
குரவனைச் சிவனாகக் காணுங் கொள்கையினை யுடையவராய் எமது வினைத்
தொடக்கை யறுக்கச் சிவபெருமான் ஆசாரிய மூர்த்தமாக எழுந்தருளிய
பின்னர் யாங்கண்டது, எண்டோளோ இருதோளோ என்றும் முக்கண்
ணோ இருகண்ணோ என்றும் சிவபெருமானைக் குறிக்கும் பெயரின் எழுத்
துக்கள் ஐந்தோ அல்லது இராமலிங்க னென்னும் அற்புதப் பெயரோ
என்றுங் கூறினார் இவைகுற்றமாகாதென்க.

ஆசாரியனைச் சீடர்கள் சிவபெருமானாக வழிபடுதலை பண்டாரமும்
மணிக்கோவையாதி குருத்துதிகளாலும் இராமலிங்க பிள்ளை யவர்களின்
எதிரியாக விருந்த ஆறுமுக நாவலரை அவர் மாணவர்கள் தெட்சணா மூர்த்
தியாயமர்ந்தகாவலனே"யென்றும்"அருட்பிரகாசவள்ளலே"யென்றும்"சங்
கரிதனையோர் பங்கினில் வைத்த, நிர்க்குண நின்மல நித்தியானந்த தற்பர
னாஞ் சிவசம்பு நிகர்த்தோய்" எ-ம்.

"எம்பந்த மறுக்குஞ் சம்பந்த நாமனு, மாலமர் கடவுளா மால் விடை
யோனை, யைங்கதிப் பரியிற் றங்கு வித்தோனு, மிடங்கர் வாயி லடங்கு
மறையோ, னுபவீத மன்ற லுறவிதித் தோனு, மும்மதக் களிறு தம்மை
மதிக்கப், பரனைவந் தித்த உரனார் சீலனு, மொருவடி வெடுத்தென வந்
தனோடு போலிவோய்." என்றுங் கூறியிருத்தலைக் காணாதவர்போன்று
பொன்னேரி சுந்தரம் பிள்ளைமீது குற்றங் கூறுகின்றனர். தத்தம் ஆசாரி
யர்களைச் சிவபெருமானாகக்கருது முறையிலவ ரறைந்ததனை பஞ்சாக்கரத்
திலும் பார்க்க இராமலிங்கபிள்ளை யென்னும் பெயர் சிறந்தது என அவர்
கூறினாரென்றல் தவறென்க. பொன்னேரி சுந்தரம் பிள்ளை கூறாததனைக்
கூறியதாகக் கூறும் நமதன்பர்க்கு பாவமும் பிராயச் சித்தமும் இல்லை
போலும்.

பின், சிங்கவுருவெடுத்து இறைவன் ஆளுடைய வரசை விழுங்கினா
ரென்று சிவனடியார் தூஷணஞ்செய்த இராமலிங்கர் மைத்துனரும் அவர்
போன்றாரும் தரித்திர இராமலிங்கரைச் சிவபெருமானுக்கு மேலென்றும்
ஒப்பென்றுஞ் சொல்வதற்கு மனப்பயமுறார் என்றார்.

இவர் வம்புச் சண்டைகளை வலிய இழுத்து வளர்த்துவதில் நிகரற்றவ
ராக இருக்கின்றார். பொன்னேரி சுந்தரம் பிள்ளைஒருவர்தானோ சிங்க உரு
வெடுத்துஇறைவன்திருநாவுக்கரசு சுவாமிகளை விழுங்கினாரெனக்கூறியவர்.
அப்பர் சுவாமிகள் முத்தியடைந்த தலமான திருப்பூம்புகலூரிலும் அதற்க
டுத்த கிராமங்களிலும் அந்நாள் தொடங்கி இந்நாள்காறும் அனைவரும் இவ்
வாறே வழங்கிவருதலும் இந்தஅற்புதச்செயலைஅத்தலத்தில் உத்ஸவமாகக்
கொண்டாடுதலும், பல்லாயிரஞ்சனங்கள் தரிசிக்கப் சித்திரைமீ த்துச்சதய

த்தில் சிவலிங்கபெருமானில் சந்தனத்தினால் சிங்கவுருவமைத்து ஆளுடைய அரசுகள் அச்சிங்க வுருவினுட்புகுந்ததாக ஐதீகநாடகத்திக்காட்டுதலும் உடைத்தாயிருத்தலை யாராய்ந்து இஃதிறைவன் சம்மதமெனநில்லாது, சிவனடியார் நிந்தை செய்ததாகக் கூறுதல் நியாயமாகுமா? தவறேயாகும் என்க.

சிவபெருமானே சிங்கவுருவமாக வந்து அப்பர்சுவாமிகளை எடுத்து விழுங்கினார் என்றால் வருந்தோஷமென்னை? சிவபெருமானாகிய சிங்கவுருவிற்புகுந்தால் வாகீசவடிகளுக்கு மோட்சமில்லையென இவர்கண்ட தெங்ஙன். கற்கண்டினாலாகிய வேம்புகசப்பதில்லை யென்பதுபோல சிவபெருமான்கொண்ட சிங்கவுருவம் வாகீசப்பெருமானுக்குத் துன்பம் விளைக்காதென்றிவரறியாதா ராதலின் அடியவர் நிந்தைசெய்தவரென்று கூறுகின்றனர். உள்ளதனை உரைப்பவர் அடியவர் நிந்தகராவரோ? ஆகார்.

ஒருதலத்தில் வருடந்தோறுநடத்து மைதீகத்தினை எடுத்துரைத்த ஒருவர் அடியவர் நிந்தைசெய்தவராக ஆகா ராதலின் இவருரை வெற்றுரையென்க.

பொன்னேரி சுந்தரம்பிள்ளையைக் குறித்து சிலவருடங்களுக்குமுன், இந்தவிஷயத்தில் சண்டையிட்ட ஒருவர் நீர்தகாது கூறினமையில் விரைவிலிறந்து படுதிர் என்றார். அவர் கூறியது தகாத தாதலின் அவ்வாறுரைத்தவரே முன்இறந்தனர். பொ - சுந்தரம்பிள்ளை இன்னமும் தத்சரீரத்துடனே இருக்கின்றார்.

தமது நூதனக்கொள்கைக கிணங்காத சைவவிஷயங்களையெல்லாம் மாற்றமுயலும் சிலரையொப்ப இவரும் சிங்கவிஷயத்திலது தமது சைவசித்தாந்தத்துக்கு முரணெனமனப்பால்குடிக்கின்றார். அப்பர்சுவாமிகளை இறைவன் சிங்கவுருவமாக விழுங்கியருளினார் என்றதனாலேயே சைவசித்தாந்தங் கெடுமோ? வைதீக சைவசித்தாந்தியான திருநாவுக்கரசு சுவாமிகளின் கொள்கைதத்கால சித்தாந்திகளின் சாமானியகொள்கையன்றென்பதனை "இறுமாந்திருப்பன்கொலோ? ஈசன்பல்கணத்தெண்ணப்பட்டு, சிறுமானேந்திதன் சேவடிக்கீழ்ச்சென்றங், கிறுமாந்திருப்பன்கொலோ" என்றதிருநெறித் தமிழ்வேதவசனத்தினை யூன்றியுணர்வா ருணர்வர்.

பின், உண்மைச சைவசித்தாந்தி இதனையுன்னுவானோ? அங்ஙனமாய இராமலிங்கபிள்ளையென்ற பெயரிருக்கவும் வேறுபெயர்களை வைத்தனமையெற்றிற்கு என்றார்.

இவையனைத்தும் இவர்கொண்ட திரிபுணர்ச்சியேயன்றி பொ. சுந்தரம்பிள்ளை என்செய்தார். ஆறுமுகநாவலரெனச் சிறந்த பெயரிருக்க அவரை யபிமானித்தவர்கள் அவரை சற்குருநாத சுவாமிகள், பரசமயகோளரி, வள்ளல், அருட்பிரகாசவள்ளல் முதலிய வேறுபெயர்களா லழைப்பானேன்? இப்பூர்வபக்கத்தாருக்குத் தெய்வப்பெயரொன்றைத் தந்தைதாயர்களிட்டு வழங்கிவராநிற்பவும் பலசிறப்புப் பெயர்களை என்தாங்கிநிற்கின்றனர். இப்பெயர்களைக்குறித்து இப்பெயர்களைத்தாங்கிநிற்றற்கு நீவிராற்றலுடையவரல்லீரெனஆட்சேபித்தவர்களுக் கிவரென்னபதிலுரைத்தனர். இராமலிங்கபிள்ளையென்பது இயற்பெயர். அருட்பிரகாசவள்ளல் என்பதுசிறப்புப்பெயர். இதனைத் தீட்சாநாமம் எனவுமுரைப்பர். அதுஆசிரியரளித்த பெயராயதென்றென்க. முக்களாலிங்க பிள்ளைக்குச் சிவஞானயோகி எனப்பெயர்வந்ததும் சுவேதவனப்பெருமாள் பிள்ளைக்கு மெய்கண்டதேவநாயனார் மெய்கண்டதேவ சிவாசாரியர் மெய்கண்ட சிவாசாரியர் மெய்கண்டசிவம்சத்தியஞானதரிசனிகள் என அனேகம்பெயர் வந்ததும் இராமசாமிப்பிள்ளைக்கு ஞானசம்பந்த பிள்ளையெனப்பெயர் வந்ததும் இவரறியார்போலும். ஒருவருக் கியற்பெயரன்றியும் அனேகஞ் சிறப்புப் பெயர்கள் அவர்களின் நிலை

மைக்குத் தக்கபடி உண்டாவது வழக்கமென்றும் பூர்வபக்கத்தாரும் இயற்பெயரையன்றி வேறு பலபெயர்களைக்கொண்டு நிற்றலுண்மையாமென்றும் அனைவருமறிவர் ஆதலின் பிள்ளையவர்களின் பெயர்களைக் குறித்து இவர் ஆட்சேபித்தல்சுவகபோலநியாயமான தவறென்க. "தன்குற்றநீங்கிப் பிறர்குற்றங்காண்கிற்பி னென்குற்றமாகுமிறைக்கு", என்னுங் குறளையூன்றியாராய்வாராக.

ஒருவருக்கொரு பெயரிருக்கவும் வேறு பலபெயர் வைத்தல் உபயவாதிகளிடமும் இருத்தலின் இவர் இராமலிங்கபிள்ளையென்னும் பெயரிருப்பவும் வேறுபெயர் வைத்தலெற்றிற்கெனவு சாவல் தவறென்க.

பின், வள்ளல் குருராயன் வாதுவென்ற சம்பந்தன். என்று ஒழிவிலொடுக்கக்காரர் திருஞானசம்பந்த பெருமானுக்குக் கூறியுள்ளார். அதனைத் தவறாகப் பதிப்பித்த இராமலிங்கபிள்ளை தம்மைத் திருஞானசம்பந்தராக நினைத்தே வள்ளலென்ற பெயரினை வைத்துக்கொண்டனர் அது அதிபாதகமே. திருஞானசம்பந்தப்பிரபு சுப்பிரமணியக் கடவுளின் திருவவதாரராய் கிருட்டினர் முதலினோர்க்குச் சாரூப்பிய முத்தியும் மணக்கோலந்தரிசிப்பான்வந்த அடியார்க்கு சாயுச்சியமுத்தியும் அளித்தனர் ஆகலினவர்க்குப் பொருந்தும் இ. பிள்ளை என் செய்தார் என்றார்.

இராமலிங்கபிள்ளை தம்மை ஞானசம்பந்தரென்று கருதியவரென்பதற்கு இவர்கண்டுபிடித்த ஆதாரமென்னை? ஒருவேளை ஞானசம்பந்தரென்றே நினைந்து வள்ளலென்று வைத்துக்கொண்டாலும் அது அதிபாதகமாவதெங்ஙன். ஞானசம்பந்தருக்கன்றி மற்றெவருக்கும் அவ்வள்ளற்பெயர் கூடாதாயின் அறிஞரெனதனை தமக்குவைத்து அதிபாதகத்துக்காளாகின்றனர்.

ஞானசம்பந்தரிடந் திருவருள்பெற்ற கண்ணுடையவள்ளல் சிவஞானவள்ளல் ஆதியரும் அதிகபாதகர்களேயானால் இராமலிங்கபிள்ளையவர்களும் அதிபாதகராகலாம். வள்ளல் என்றபெயர் எல்லாச்சாதியாராலும் எல்லாச்சமயத்தாராலும் கையாளப்படாமல் சைவசமயத்தில்மாத்திரம் வழங்கப்பட்டு வருவதொன்றன்று. சைவத்திலும் ஞானசம்பந்தப் பெருமானுக்கே வழங்குவதான நியமமின்றாகவும் இன்னோர் ஞானசம்பந்தர் கிருட்டினர் முதலினோர்க்குச் சாரூப்பியமுத்தியும் மணக்கோலங் தரிசிப்பான் வந்த அடியவருக்குச் சாயுச்சியமுத்தியும் அளித்தனர்என்றும் இவரவ்வாறென்ன செய்தனர் என்றுங் கேட்கின்றனர்.

வள்ளலென்ற பெயரொருவர் தரித்தற்கு இவ்விதநியமம்வேண்டுமென எவரும் விதித்தவரிலராகவும் வாளா இவைகளை யுரைக்கின்றனர்.

ஞானசம்பந்தர், கிருட்டினர் முதலியோருக்குசாரூப்பியமுத்தியளித்தனரென்றவிவர் இந்தபரமரகசியத்தினை எங்குக்கண்டு பிடித்தனரோ அறிகிலேம். கிருட்டினர் இவ்வுலகில் வாழ்ந்தகாலம் துவாபரயுகத்தினிறுதியும் ஞானசம்பந்தரிவ்வுலகி லிருந்தகாலம் கலியுகமும் ஆதலின் கிருட்டினரும் ஞானசம்பந்தரும் ஒருவரையொருவர் சந்தித்ததில்லையாகவும் இவர் கிருட்டினருக்குச சாரூப்பியமுத்தியை அவர்கொடுத்தனரென்னல் நியாயமாகுமா? விண்டு மூர்த்தியையே யாம் கிருட்டினரென்றுமென்பிரேல் அவ்விண்டுவிற்கு சாரூப்பியமுத்தியிலிச்சையுண்டானதற்கென்னகாரணம். விட்டுணு சாரூப்பியமுத்தியை ஞானசம்பந்தராற் பெற்றாரென்றால் ஞானசம்பந்தர் காலத்துக்குப் பிந்தியகாலத்துச் சைவரனைவரும் கிருட்டினரை சங்குசக்கரங்களை எறிந்து மான்மழுக்களைச் சுமந்து சந்திரனையும் கங்கையையும் தாங்கி நீலகண்டம் பொருந்தி இடபத்திலுலாவுவோராகவன்றோ கூறுதல் வேண்டும்.

பிற்றைச சைவரும் இற்றைச் சைவரு மவ்வாறு கூருது நீலமேனிய
னெனவும் திருமறு மார்பின னெனவும் கூறிவருதல் வழக்க மாதலின்
விட்டுணு சாரூப்பியமுத்தியைப் பெற்றதின்றென்றும் இதுசாமானியமான
ஒருகதை யென்றுங் கூறவார்க் கிவரென்னுரைப்பர்.

இற்றைக்கு மூவாயிரம்வருடங்களுக்கு முன்னரிவ்வுலகிலிருந்தஸ்ரீஞான
சம்பந்தரால் விஷ்ணுவும் வேறு சிலரும் சிவசாரூப்பிய முத்தியையைப்பெற்
ருராயின் முத்திபெற்ற விட்டுணுவிற்குப் பதில் இரட்ச கருத்தாவாக
இருப்பவர் யாவர்? அந்த உத்தியோகம் இப்பொழுது எவராலும் வகிக்கப்
படாமல் சும்மா இருக்கின்றது போலும்,

பிரளயகால பரியந்தம் ஓரே உருவினராகவே விளங்கும் விஷ்ணு
மூர்த்தியைக் குறித்து ஞானசம்பந்தரால் சாரூப்பிய முத்தி கொடுக்கப்
பெற்றதென்பது தவறென்க.

சாரூப்பிய சாயுச்சியாதி முத்திகளை அளிப்பவர் அம்முத்திகளையுடைய
சிவபெருமா னொருவரேயன்றிப் பிறரெவரு மன்றென்றும் ஞானசம்பந்த
சுவாமிகளின் திருமணக்காலத்தி லங்குவந்திருந்தா ரனைவருக்கும் முத்தி
யளித்தவர் சிவபெருமானே யன்றி ஞானசம்பந்த ரல்லர் என்றுங் கூறு
வாரு முளராதலின் இவர் கூறியவை நிலைப்படுங்ஙன்.

ஞானசம்பந்த சுவாமிகள் கிருட்டின ராதியருக்குச் சாரூப்பிய முத்தி
கொடுத்ததற்கு ஞானசம்பந்தர் சரித்திரத்தில் யாதொ ராதாரமு மின்மையா
லும் ஞானசம்பந்த சுவாமிகள் காஞ்சி புரத்துக் கெழுந்தருளிய ஞான்று
திருமேற்றளித் தலத்தில் விட்டுணுவுக்குச் சாரூப்பியங் கொடுத்தன ரெ
னின். ஞானசம்பந்த சுவாமிகள் காஞ்சிபுரம் எழுந்தருளுதற்கு முன்னர்
எழுந்தருளிய திருநாவுக்கரசு சுவாமிகள் திருமேற்றளியை யடைந்து சிவ
பெருமானைப் பதிகத்தாற் றுதித்திருத்தலின் திருமேற்றளி சிவாலயமாக
விளங்கிய துண்மை யாதலானும் திருநாவுக்கரசு சுவாமிகள் திருமேற்றளி
யீசரைத் துதித்த பதிகம் இன்றும் அடங்கன் முறையுள் காணப்படுதலா
னும் ஞானசம்பந்த சுவாமிகள் விட்டுணுவிற்குத்திருமேற்றளியில்சாரூப்பிய
முத்திகொடுத்ததுண்மையாயின் அவ்வற்புதத் திருமுறையைச் சிவபெருமா
னுலகினில் அழியாது நிலவச்செய்வ ரவ்வாறு செய்யாமையாலும்

"சொல்லின் பெருவேந்தர் தொண்டைவள நாடெய்தி
மல்குபுகழ்க் காஞ்சி யேகாம்பர மன்னு
செல்வர்கழல் பணிந்து சென்றதெல்லாஞ் செப்புதலும்
புல்குநூன் மார்பரும்போய்ப் போற்ற மனம்புரிந்தார். என்று

பெரியபுராணத்துட் கேட்கப்படுதலாலும் காஞ்சிபுர யாத்திரையின் முற்
பட்ட திருநாவுக்கரசு சுவாமிகளுக்குச் சிவபெருமானாக விளங்கிய மேற்றளி
நாதர் ஞானசம்பந்த சுவாமிகள் வருங்காலத்து விட்டுணுவாலயமாக அத்த
லத்தைச் செய்திரார். அவ்வாறன்று சிவாலயமான மேற்றளியிலிருந்த கிரு
ட்டினர் சாரூப்பியமுத்தியைப் பெற்றனரென்றால் கிருட்டினமூர்த்தி சாரூப
பிய முத்தியைப் பெற்றபின் அவரைச்சுட்டிய பாஞ்சராத்திராதி மதங்களை
அழித்துத் தம்மைவழிபடுமவர்களைச் சிவபெருமானைவழிபட வக்கிருட்டினர்
செய்திருத்தல் வேண்டும். சாரூப்பிய முத்திபெறாது நாராயணன் விளங்கு
தற்கு நாராயணசமய மின்னுமிருத்தலே சான்றாம். உலகினர் உண்மையை
யறியாது கூறுங்கட்டுக் கதைகளை யெடுத்தெழுதி யவலமுறுவதனு லவா
டைதல் தோல்வியையன்றி வேறின்றாம்.

ஞானசம்பந்த சுவாமிகள் விஷயமாக இவர்கள் காட்டியவை ஆட்சே
பத்துக் கிடமானவையென்று காட்டுதற்கே சிலவுரைத்தேம். சிவபெருமா
னையன்றி யெவராலும் யாதொன்றுஞ்செய்ய வியலாதென்று கொண்ட

எமது பட்சத்திற்கு இவரது வசனங்கள் முரணினை யுடையதாய் நின்றமையினால் ஞானசம்பந்தசுவாமிகள் கிருட்டினர் முதலாயினாருக்குச் சாரூப்பிய முத்தி கொடுத்திலர் எனவும் திருமணத்தி லுற்றாரனைவருக்கு முத்தியளித்தவர் சிவபெருமானே அன்றி ஞானசம்பந்த சுவாமிகள் அல்லர் எனவும் காட்டினாம். ஆகலின் இவர்கூறிய இவைகளைச்சுட்டியே ஒழிவிலொடுக்க நூலார் வள்ளல்எனக் கூறினாரெனல் தவறாயொழிந்தமை காண்க.

இராமலிங்க பிள்ளையவர்கள் பதிப்பித்த ஒழிவிலொடுக்க நூலினைத்தவறாப் பதிப்பித்தனர் என்ற இப்பூர்வபக்கத்தினர் பதிப்பித்த ஒவ்வொரு நூலிலும் தவறிருத்தலை அறிந்திலர்போலும். அச்சப்பிழைகளை ஒருபொருளாக மதிப்ப துசிதமன்றாதலின் அதனை இங்குக்காட்டாது விடுத்தாம்.

தமக்கு ஞானதானஞ் செய்த தாதாவாதலின் ஞானசம்பந்தப்பெருமானைக் கண்ணுடைய வள்ளலார் வள்ளல் குருராயனென்று கூறினராதலின் இவருரை வெற்றுரையாயது காண்க.

இனி இவருரைத்தவைகளையே மேற்கொண்டு கிருட்டினர் முதலியவர்கட்கும் திருமணங்காணிய வந்தார்க்கு முறையே சாரூப்பியசாயுச்சிய முத்தியை யளித்தமையினவர்க்கு வள்ளல் என்ற பெயர்தரும் என்ற இவர் பிள்ளையவர்களைச் சுட்டி இவரவ்வாறென்ன செய்தனர் என்றமையால் வள்ளல் என்றழைக்கத்தக்கா ரனைவரும் சாரூப்பிய சாயுச்சிய முத்திகளை அளித்தவர்களாக இருத்தல் வேண்டுமென்று தானேயேற்படுகின்றது.

ஞானசம்பந்தசுவாமிகள் அவ்வாறு செய்தாரென்று வைத்துக்கொள்ளுவோம். அவரை அவ்வாறு பாடியவரும் ஒருவள்ளல் அன்றோ அவர் எத்தனை பேருக்குச் சாரூப்பிய சாயுச்சிய முத்திகளை அளித்தனர்.

இக்கண்ணுடைய வள்ளலையன்றி சிவஞானவள்ள லென்பவரும் சில நூல்கள் செய்திருக்கின்றனர் அவர் எத்தனைபேருக்கு சாரூப்பிய சாயுச்சிய முத்திகளைக் கொடுத்தனர். இப்பூர்வபக்கத்தவருக்குத் தலைவரான யாழ்ப்பாணத்து ஆறுமுகநாவலருக்கு வள்ளலென்ற பெயரிருக்கின்றதே அவர் எத்தனை பேருக்கு சாரூப்பிய சாயுச்சிய முத்திகளைக் கொடுத்தனர். "கருணைவள்ளல்" எ - ம். அருட்பிரகாசவள்ளல் எ - ம். அவரைப்புகழ்ந்து பாடியிருக்கின்றனரே அவரைச் சார்ந்தவர்கள், ஒரு முனிசாமி நாயகரென்பவரை இப்பூர்வபக்கத்தார். "வரசையன் மீதன்பு வைத்தவன் சீர்முனிசாமி வள்ளலெனப்பாடியிருக்கின்றனர். அம்முனிசாமிநாயக்கர் எத்தனைபேருக்குச் சாரூப்பிய சாயுச்சியமுத்திகளைக்கொடுத்தவர். சாரூப்பியசாயுச்சியாதி முத்திகளைப் பிறருக்களிக்காதாருக்கும் வள்ளலெனப் பெயர்கேட்கப்படுதலின் இவர் இராமலிங்கபிள்ளை தம்மை ஞானசம்பந்தப்பெருமானென்று கருதியேஅவ்வாறுவைத்துக்கொண்டனரென்றுதுணிந்துகூறினரேஅது எங்ஙன்பொருந்தும். முனிசாமிநாயக்கர்ஞானசம்பந்தரையொத்தவர்போலும்.

இவர்கருத்து ஞானசம்பந்தப் பெருமானே வள்ளல் என்றபெயரைச ஏற்றுநிற்றற்குரியோர் இராமலிங்கபிள்ளை அல்லரென்பதேயாம். ஸ்ரீஞானசம்பந்தசுவாமிகள் தாந்திருவாய்மலர்ந்தருளிய ஒவ்வொரு பதிகத்தினிறுதியிலும் தமது திருநாமத்தினை ஞானசம்பந்தரென்றே காட்டியிருக்கின்றனர்.

ஒழிவிலொடுக்ககாரர் ஞானசம்பந்தப்பெருமானை யுரைக்குமிடத்து வள்ளலெனக் கூறினார். ஞானாதிதான வல்லவராதலின் சுவாமிகளை அவர் அவ்வாறு கூறினார். ஞானசம்பந்தப்பெருமானுக்கே உரியதாதலின் கூறினாரென்றல் தவறேயாம். அவ்வெண்பாவினை இயற்றியவர் பெயர் வள்ளல் ஆதலின் இவரெண்ண மதன்கட்பலி யாதென்க. தமிழுணர் புலவரனைவரும் ஒருவரையுயர்த்திக் கூறுமிடத்து வள்ளலென்னு மொழியை யுபயோ

கிப்பது வழக்கம். இவரெண்ணியாங்கு அவ்வள்ளற்பெயர் சிவபெருமானுக்கே சிறப்பாக உரித்தானால் மற்றையவ ரவ்வாறுரையார். ஞானசம்பந்தப் பெருமானுக்கே உரித்தாயினுமுரையார். வள்ளலென்னுமொழிபொதுவாக நிற்பதொன்றாதலி னனைவரு முபயோகப்படுத்துகின்றனர்.

நூல்வழக்கு முலகவழக்கு முணராத பேதைமாந்தரையன்றிப் பிறர் வள்ளல் என்னும்பெயர் ஞானசம்பந்தர்க்கே சிறப்பாக வுரித்தென்றும் சிவபெருமானுக்கே சிறப்பாக உரித்தென்றும் கூறுதலைக்கேட்டு மெய்யென நம்பி இராமலிங்கபிள்ளை அவர்கட்கப்பெயர் தகாதென்றார். பலர்க்குரியவொன்றைச்சிறப்பென்ப தெங்ஙன் ?

சிந்தாமணியென்னுஞ் சைனகாவியத்துள் அநேக இடங்களில் அநேகரை வள்ளல் எனக்கூறியிருத்தலை இவரறியார் போலும்.

திருத்தக்கதேவர் சீவகனைச்சுட்டி வள்ளன்மேலப்புமாரி யார்ப்பொடு சிதறினரே எ-ம்.

உலகபாலனைச்சுட்டி "வள்ளாறன் வல்லவெல்லாம் மாட்டினன். எ-ம். கூறியிருத்தலாலும், இன்னமிவரே அநேக இடங்களில் பலமாந்தருக்குவள்ளல்என்ற பெயர்காட்டியிருத்தலாலும் ஈழநாட்டுப்புலவர் பெருமானாகிய அரசகேசரியவர்கள் இரகுவமிசத்தில் சூரியவங்கிசவரசனை இரகுவினை வள்ளல்என்று "வள்ளலுன்மயிலனுடன்மணிவிரன் மலர்க்கைபற்றி என்று கூறியிருத்தலாலும்அன்றியும்அவ்விரகுவமிசத்தவதார நீங்குபடலத்து,கூ-வது கவியுள், முதலடியில்தாசரதியை "வள்ளறலைவற்குரைவகுக்கவும்படானாய்"என்று கூறியிருத்தலாலும் ஸ்ரீமத்பாகவதபுராணத்தினை மொழிபெயர்த்த புலவர் திலகராகிய ஆரியப்பப்புலவர் பாகவதம் முதலாங்கந்தம்.பரீட்சித்துக்கலிகடிந்த அத்தியாயத்து "வள்ளறன்றிருமகன்வழி விளக்குறும்" எ-ம். அ. வது பாடலில் அருச்சுனன்மகனான அபிமன்னுவை வள்ளல்எனக் கூறியிருத்தலாலும்.

நாராயணசமயத்தோர்க்குரிய திருவாய்மொழி என்னுந் திவ்வியப் பிரபந்தத்துள் நம்மாழ்வார நாராயண மூர்த்தியை, "வள்ளல் வல்வயிற்றுப் பெருமான்" எ-ம். "வள்ளலேகண்ணனே என்றும் எ-ம். "வள்ளல் மணிவண்ணன் றன்னைக்கவிசொலவம்மினோ. எ-ம். "வள்ளலேயோ வையங்கொண்ட வாமனாவோ - எ-ம். நாராயண மூர்த்தியை வவ்ளல் வள்ளல் எனச் சாலக்கூறி யிருத்தலாலும்.

கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் இராமாயணத்துள் தயரதமன்னவனை "வள்ளல் வள்ளுறையயில் மன்னர் மன்னனே" எ-ம். இராகவனை "வள்ளலு முனிவனை வணங்கிக் கூறுவான்" எ-ம். "எள்ளில் பூவையு மிந்திரநீலமும், அள்ளல் வேலையு மம்புதசாலமும்,விள்ளும்வீயுடைப் பானலுமேவுமெய், வள்ளல்தன்னைமதி முகநோக்கியே." எ-ம், கூறியிருத்தலானும்.

கச்சியப்ப சுவாமிகள் காஞ்சிப் புராணத் திரண்டாங் காண்டத்து, நகரேற்றுப்படலத்து, உஉஉ-வது கவியிற் கரிகாற் பெருவளவனை "வள்ளல் காமருக் குருவுடன் மதனிருந்தானேல் உள்ளமாழ்குவன்" எனக் கூறியிருத்தலாலும்.

வள்ளலென்னும் பெயர் சிறப்புடையனைவர்க்கும் பொதுவாக வுரித்தென்றறியப்படுதலின் இவருரை வெற்றுரை யாயதுகாண்க.

வள்ளல் என்றபெயர் ஞானசம்பந்தப் பெருமானையன்றியுள்ள பிறர்க்கும் கேட்கப்படுதலால் பலராலுபயோகப்படுத்தப்பட்ட பெயரினை இராமலிங்கபிள்ளை தமக்குபயோகப்படுத்துதற்கு நம்மை ஞானசம்பந்தரென்று பாவிக்கவேண்டுவ தின்றென்று யாங்காட்டிய பிற புலவராட்சிகளே சான்

ருகும் ஆதலின் பிள்ளையவர்கள் வள்ளலென்ற பெயரின் பொருட்டுத் தம்மை ஞானசம்பந்தராகக் கருதவேண்டிய தின்றென்க.

வள்ளலென்ற பெயரும் பிள்ளையவர்கட்குப் பிறர்வைத்து வழங்கும் பெயரேயன்றி, தாமே தமக்கப் பெயரினை வைத்துக் கொண்டதற்கு அவர் பாடலினின்று இவா கண்டெடுத்ததெதனை? ஆதாரமின்றி இவர், அவர் தாமே வைத்துக் கொண்டனர் என்றால் உலகிலவ்வாறு வழக்கமின்மையாலதனை யெவர் சரியென்று கருதுவோர். இப்பூர்வ பக்கத்தினரின் பெயர்களை இவர்களே வைத்துக் கொண்டனர்போலும் அவ்வாறு தாமாக வைத்துக் கொள்ளுதல் வழக்க விரோதமென் றிவரறிந்திருந்தா லிவ்வாறுகூறார். பிறரால் வள்ளல்என்று கூறத்தக்கதகுதி யவரிடமிருந்தமையாலவரை யபிமானித்தவர்கள் வள்ளல் என்ற பெயரினை அவர்க்கிட்டுரைத்து வருகின்றனர். இம்முறையறியாதிவர் கூறினமையி னிவருரை யெற்றுரையென்க.

பின், தம்மை திருஞானசம்பந்தராக நினைத்தாரல்லர்என்று பூர்வபக்கிகள் கூறுவார்போலும், அது இவ்வள்ளல் என்ற நாமத்தாலும், இராமலிங்க பிள்ளை சரித்திரச் சுருக்கம் எனப் பொய்ம்மையாக எழுதியதில் நாற்பத்தீராயிர வருடகாலஞ் சித்தராக வமர்ந்திருந்து சகல சித்திகளும் சித்திக்கப் பெற்று ஆனந்தத திருவிளையாட் டயர்ந்திருந்து அதற்குமேல் பிரணவ தேகியாகி ஞானசம்பந்த குருதவ நிலையைப் பெறுவேம் என்னுங் குறிப்பை வெளியிட்டார் என்றதனாலுந் தெரிந்திடுக. என்றா.

இராமலிங்க பிள்ளையவர்கள் இன்னம் நாற்பத்திராயிரம் வருடங்கழித்து ஞானசம்பந்த குருத்வநிலையைப் பெறுவேம் என்றனரேயன்றி தம்மை ஞானசம்பந்தரென்று நினைத்தனரெனக்கூற இவர்காட்டிய வசனமிடந்தராததனை இவருணரறியாராயாதது விசனிக்கத்தக்கதேயாம்.

பிரணவதேகம் பெறுதலும் ஞானசம்பந்த குருதவமெய்தலும் இவ்விதமென விவரறியாதாராதலின் ஞானசமபந்த சத்தமொன்றை மாத்திரங் கண்டு இராமலிங்கபிள்ளை தம்மை ஞானசம்பந்தரெனக் கருதினவரென்று வழுவுரைத்தனர்.

ஞானசம்பந்த குருத்வமென்றது இப்பூர்வபக்கத்தார் கருதிய விதமன்று, சிவஞானியான முத்திகாமி - குரவனுபதேசப்படி நின்று சகல பிராரத்தங்களு மநுபவித்து ஒழிந்து பூதவுடலம் பூமியில்விழாது சாயாபுருஷனைப்போல தோற்றன்மாத்திரமுள்ள பிரணவசரீரமாகி தத்தபடம்போன்று காணப்பட்டு செயலற்ற பரமுத்தியில் சிதாகாயமாகி அருளாதலேயே ஞானசம்பந்தகுருத்வமென்றனர்.

“வினையினி லெடுத்த விவ்வுடன்மேலும் வினையுளதெனி லிங்கேயகலும், வினையிலதெனி லிங்கிவ்வுடலூனே வினையாறுமோ மயமாகி, வினையுளவுடல் போற்றோற்றன் மாத்திரமாய் விளங்கியே வெந்துறுபுரிபோல், வினையிலாப் பரமமுத்தியில் வெளியாய் விமலநல்லருளதாய் விடுமே” என்ற சுத்தசாதகக் கவியினைக் குருபணிசெய்துபதேச வழியாலுணர்ந்தாரிடைக் கேட்டறிந்து ஞானசம்பந்த குருதவமென்ற திதனையென்றுணர்ந்தடங்குக.

பிரணவதேக தாரணத்திற்குப் பின்னர் எய்தநின்ற ஞானசம்பந்த குருத்வமானது ஸ்ரீஞானசம்பந்த சுவாமிகளான கவுணிய குலமணியின் சம்பந்தமானதென்றுமருளற்க. அது, பதியிற்கலந்துபதியேயாகப்பேரறிவுருவனாய்நிற்கும்பெருநிலையினையென்றுணர்க. இந்நிலையினையுற்றோரே இனிப் பிறவாநெறியினராவர். மாணிக்கவாசகசுவாமிகள்முதலியசிலரே இந்நிலையெய்தினரெனவறிக. இவ்வரிய நிலையினை நாற்பத்தீராயிரம் யாண்டுகளுக்குப் பின்னர் அடைவையெனத் திருவருளுணர்த்த உணர்ந்தவராதலி னவ்வாறு

கூறினர். இதனுலிவர் சமயத்திற் குண்டாகிய கேடென்னை? ஞானிகள் பிரணவதேகிகளாதலை, ஓமெனுமோங்காரத்துள்ளே யொருமொழி, யோமெனு மோங்காரத்துள்ளே யுருவரு, மோமெனு மோங்காரத்துள்ளே பலபேத, மோமெனு மோங்காரமொண் முத்திசித்தியே. எ-ம். ஓங்காரத்துள்ளே யுதித்தவைம்பூதங்கள், ஓங்காரத்துள்ளே யுதித்தசராசரம், ஓங்காராதீதத் துயிர்மூன்று முற்றன, வோங்காரஞ் சிவபரசிவரூபமே. எ-ம். வருக்கஞ் சுகமாம் பிரமமாகு, மருக்கஞ் சராசரமாகு முலகிற், றருக்கிய வாதார மெல்லாந்தன்மேனி, சுருக்கமின்ஞானந் தொகுத்துணர்ந்தோர்களே. என்றுங்கூறுந் திருமந்திரங்களாற் பூதசூட்சுமங்கள் பிரணவ வடிவமானவை யெனவறிக. இங்ஙனம் பிரணவவுருவமாக விளங்கும் பூதசூட்சுமங்களை யுடலாகக்கொண்டு நின்று தத்துவாதீதராகிச் சிவபெருமானை யடையு முயலுந் தருணத்தி லம்முயற்சி கைவந்தார் பெறுவதே பிரணவதேகம் இத்தேகநிலையும் இதனுலெய்தும் அதீதமுத்தியுண்மையும் நமது நண்பர்க்கு வெகுதூரப் பொருளாதலின் வெறுப்புற்று பிரணவதேகாதிகளை இகழ்ந்தனர்.

பெரிய புராணத்திலிவர் படித்தறிந்த ஞானசம்பந்தப் பெருமானதுநிலை இந்நிலையெனவும் அது பெறுவானின்னு நாற்பத்தீராயிரம் யாண்டுகள் கழிதல்வேண்டு மென்றும் பிள்ளையவர்கள் கூறினதாகக் கொண்டாலும் ஒருவன் ஞானசம்பந்த குருத்வநிலையை யெய்துதல் அரிதிலுமரிதான விஷயமென் றன்றேயாகின்றது. இதனுல் இராமலிங்கபிள்ளையவர்கள் ஞானசம்பந்த சுவாமிகளை எவ்வளவுயர்ந்த தரத்தில் மதித்தவராகின்றனர். தமக்கு முத்தியின் பின்னையருளும் அநாதிசித்த வியாபகசம்புவாகவன்றே மதித்தனர். இம்மதிப்பினுல் இவர் மதத்திற்கு ஓர் உயர்வன்றித் தாழ்வொன்று மின்றாதலின் இவர்கூற்று பொருண்மையை முன்னிட்டெழுந்தவறுங்கூற்றென்க.

பின் வாட்டமிலருளுங் கோட்டமில் குணனுமெனச் சிலவரி வரைந்து, என்பது விதியாதலின் இவ்விலக்கணங்களுள் ஒன்றேனுஞ் சிறிதுமில்லாத இவர் வள்ளலாதல் யாங்ஙனம் என்றனர்.

இவ்விலக்கணங்களிலொரு சிறிதும் பிள்ளையவர்கட்ட மில்லாதிருந்தமையை இவரறிந்த தெங்ஙன்? அவர் பாடல்களிலவர் தம்மைப்பலவாறிகழ்ந்து பாடியிருத்தலிற்போலும்? ஒருவர் தம்மிடத்துள்ள உயர்குணங்களையே வியந்துபாடினுலது கடவுளைத் துதித்த துதியாக வெங்ஙனமாகும். அற்றன்று. பாடலிலுள்ளவாறே யக்குணங்களைப் பாடலைப்பாடியவருடையரெனக் கோடுமென்னில், தமிழ்ப்பாடையிற் சைவபரமான உயர்ந்த பாடலே கிடையாவென் றெச்சரிக்கின்றோம். பன்னிரு திருமுறைகளிலோவெனின் அவையினும் ஊன்றியாராய்வார் அவ்வாறுள்ள சொற்களைக் கூடைகூடையாக பொறுக்கிச் சேர்ப்பர் என்பாம்.

## திருநெறித் தமிழ்வேதத்து

“பேச்சொடு பேச்சுக்கெல்லாம் பிறர்தமைப் புறமேபேசக் கூசிலேன் எ-ம். காமரங்கற்றுமில்லேன். எ-ம். பெரியதோர் வாவிற்பட்டேன். எ-ம். மக்களே மணந்ததார மவ்வயிற்றவரை யோம்புஞ் சிக்குளே யழுந்தியழுந்தி யீசன்றிறம்பட்டேன் எ-ம். மையரிமதர்த்த வொண்கண் மாதரார் வலையுட்பட்டுக் கையெரி சூலமேந்தும் கடவுளை நினையமாட்டேன் எ-ம். பத்தனுய் வாழமாட்டேன் பாவியேன். எ-ம். திருநாவுக்கரசுபெருமான் கட்டளையிட்டிருத்தலின் அவரை புறங்கூறுவோரெனவும். இசையறியாதாரெனவும் பேராசைக்காரர் எனவும் - மனைவியையும் மக்களையும் உடையராய் அவரைக்காக்க வுழைக்குஞ் சிக்கினர் எனவும் சிவபத்

தியில்லாதவரெனவும் அரிபரந்த கண்ணியரான மாதர்கண் வலையுட்சிக்கியவரெனவும்பத்தியற்றவரெனவும் பாவியெனவும் இசைக்க இவரிசைவரா? பாடலி லுள்ளவாறு கொள்வமென்பா ரிவ்வாறு கொண்டால் கொள்பவர் சைவத்திறம் சால அழகிதேயாம். "விண்டொழிந்தன நம்முடை வல்வினை" எ-ம். என்னபுண்ணியஞ் செய்தனை நெஞ்சமே யிருங்கடல் வையத்து முன்னநீபுரி நல்வினைப் பயனிடையென்றும் ஸ்ரீஞானசம்பந்தப்பெருமான் உரைத்தருளியிருத்தலின் அவரை இருவினைகளையுடைய ஒரு மும்மலப்பசுவெனக்கோடல் முறையாகுமா? அங்ஙனமுணர்வோர் வைதிகசைவத்திற முணர்ந்தாராவரா? ஆசாரியப்பிரபாவ முதலிய கிரந்தங்களை அங்கீகாரமாக வுடையோராவாரா?

"மருளனேன் எ-ம். அருநரகில் வீழ்வேற்கு எ-ம். கல்லாதபுல்லறிவிற் கடைப்பட்ட நாயேன் எ-ம். பொய்களே புகன்று கருங்குழலினார் கண்களாலேறுண்டு கலங்கியே கிடப்பேன் எ-ம். கொடியேன் கெடவேயமையும் எ-ம். மாணிக்கவாசகப் பெருமான் கட்டளையிட்டிருத்தலி னவரை மருளர் அருநரகில் வீழ்வோர். கல்லாதபுல்லறிவினாற் கடைப்பட்டநாயனையார். பொய்பேசுபவர். மாதர்கண்களால் கலக்கமுற்றுக் கிடப்போர். கொடியவர். கெடுந்தன்மையினர் என உரைகூறுவோர் எத்துணைச் சைவசித்தாந்திகள் என்னலாம்.

அற்பன் எ-ம். ஏழையற்கென் னுடன்பிறந்த ஐவரும் பகை எ-ம். திருவிசைப்பாவுடையார் கட்டளையிட்டவைகளைக் கண்டு அவைகளாலவர்களை அற்பரெனவும் ஏழைஎனவும் உடன்பிறந்தா ரைவரும் பகையாளிகளெனவு கொள்ளுதலழகாகுமோ? அங்ஙனங்கொள்வோர் சைவசித்தாந்திகளாவரோ ஆகார். அவ்வாறே இராமலிங்கபிள்ளை யவர்களின் பாடல்களில் கடுவெட்டிவாங்கினவர். கூட்டைச்சட்டியாயினும் பிறர் எடுக்கப் பொறுக்க மாட்டார் கடுமனத்தார் பிறர்க்குத் துன்பத்தைப்புரிந்தவர் என்பனவாதி பலகூறி இகழ்தலுமாமேயன்றி வேறாகாதென்க.

வாட்டமி லருளுமெனச் சிலவரி வரைந்து உள்ளலென்பார்க்கிவ் விலக்கணமமைத்து மிருத்தல் வேண்டுமென இவர் காட்டியவையே விதியாயின் இவ்வாறுமுன்னிருந்தாரும் இப்பொழுதிருப்பவரும் இனிமேலிருப்பாரு மிலரென்க. உளரென எவரையேனுங் காட்டினாலவரை இவ்வியல்பினின்று மாறினாராக யாங்காட்டிமறுப்பேம்.

பிள்ளை, திருவருட்பிரகாச வள்ளலார் என்ற பெயர்க்காசைப்பட்டது, குருட்டுமுடவன் பூரணமதியைக் கொள்ள விரும்பியதுமானும் என்றார்.

பிள்ளை விரும்பியது தான் குருட்டுமுடவன் பூரணமதியைக் கொள்ள விரும்பியதை மானுமாயின் குருடுமுடமுமற்ற பிறர் விரும்பினால் பூரணமதியையன்றேனும் இளமதியையேனும் கொள்ளமுடியுமா? இஃதன்ன புத்திசாலித்தனம் முடமுங்குருடு மல்லாதாரானும் அடையமுடியாத மதியை உவமைகாட்டியது இவரது மதியை நன்குவிளக்கிக் காட்டுகின்றது.

பின் சிவபெருமான் தம்மை மாலையிட்டாரென்றும், அவர் தமக்குக் கணவரென்றும், தம்முடைய பெயரும் மற்றையாது எல்லாப் பெயருஞ் சிவன்பெயராகுமென்றும் விபரீதங்கள் கூறிய பிள்ளை தமக்கு மாத்திரம் உயர்ந்த பெயர்களை முழு நீளமாக வைக்கத் துணிந்ததென்னே? என்றார்.

சிவபெருமானை ஆன்மா கூடியனுபவித்தலுண்மையானால் ஆன்மாவாகிய நாயகிக்கு சிவபெருமானே நாயகன். இவ்விதஞானசாரத்தினையுடைய திருநாவுக்கரசு பெருமான் தமிழ்வேதத்து "என்புது நலமுண்டிகழ்வானோ? எ-ம். எழினலமுண்டிகழ்வானோ எ-ம். தம்மைச் சிவபெருமான் புணர்ந்ததாகக் கூறியிருத்தலின் புணர்ச்சிக்குரிய தலைவனை மாலையிட்ட

என் கணவனென்றமையால் தவறின்றாதலின் இவருரை வெற்றுரையாயது காண்க.

“நானலாதுலகமில்லை” என்றும். “சொல்லானைச் சொல்லார்ந்த பொருளானை” எ-ம். “பல்லுயிராய் நெடுவெளியாய்” எ-ம். “பல்லுயிராய்ப் பார்தோறு நின்றாய்” எ-ம். “நானன்றி வேறொன்றுமில்லா ஞானப் பொருளை” எ-ம். “பாரவன்காண்” எ-ம். “சொல்லும் பொருளெலாமானார்” எ-ம். எண்ணுபிரங்கோடிப்பேர் போலும். எ-ம். தமிழ்வேதத்து வாகீசமுனிவர் கூறியிருத்தலானும் திருவிளையாடற்புராணத்து பரஞ்சோதிமுனிவர் “உலகத்தயன் வரவுகாணுள் மாலிடங்காணுள் விண்ணோர். குலத்தையுங்காணுள் மண்ணோர்குழாத்தையுங்காணுள் ஞானப்புலத்தவர்போலக்கூட பொருளெலா மழுமான் செங்கைத் தலத்தவள் வடிவாக்கண்டாளொருத்தனித்தையன் மாது” என்றுரைத்திருத்தலானும் உலகத்திலுள்ளபொருள்களனைத்தையும் வைதிகசைவநூலின் வண்ணம் சிவரூபமாகவேகாணும் ஞானசாரமுடையவர்கள் எல்லாப்பெயரையும் எல்லாப்பொருளையும் சிவபெருமான்பெயராகவும் சிவபெருமானாகவும் காண்பாராதலின் முன்னோரனுபவத்திற்கு விருத்தமின்றியுரைத்த பிள்ளையவர்கள் பரிபூரணியத்தினையுடைய ஞானசீலரேயாவர். அவருரைத்த ஞானவசனங்களை யாராய்ந்தறியுமாற்றலின்றி யவரை யிகழுமவர்கள் பேதபுத்தியுடையராயுரைத்தமைஆதாரமற்றவையும்பிள்ளையவர்களுரைத்தவை ஆதாரமுற்றவையுமாதலின் நிராதாரமான வசனங்களை வரைந்து சிவபெருமானது பூரணத்தன்மைக்குக் குறைவுகாட்டியவர்களே சிவநிந்தகராவரென்க.

கழுதை, குதிரை, நாய், பன்றி.பூனை, குரங்கு,எலி,மூஞ்சூறு முதலான பெயரினாலும் சிவனை அழைக்கலாமென இராமலிங்கபிள்ளையவர்கள் விதித்தவரல்லர். “பாரவன்காண்” என்பனவாதிசுருதிகளின்படி மண்முதலிய பூதங்கள்சிவரூபமேயாதலால்அப்பூதவிகாரமான சரீரங்கள் சிவரூபமன்றோ? “பல்லுயிராய்ப் பார்தோறுநின்றாய்” என்ற வேத வசனப்படி, இவர் காட்டிய உயிர் வருக்கங்களும் சிவரூபமானவையன்றோ? உயிராயும் உடலாயுமிருப்பவன் சிவபெருமானேயென, தமிழ்வேதத்தாலறிந்த ஞானிகள் எல்லாப் பொருளையும் சிவரூபமாகவன்றி வேறுவிதமாகக் காண்பார்களோ? இவ்வித அநுபவம் இவர் சித்தாந்தத்துக்கு முரணானால் பிள்ளையவர்களைச் சித்தாந்த வுணர்ச்சியற்றவரெனவும் சிவநிந்தைபுரிந்தவரெனவும் இவர் கூறுவதிலென்ன பிரயோசனம். “வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி, யூனாகி யுயிராகி யுண்மையுமாய்” எ-ம். “ஊனுயிரா யுணர்வா யென்னுட் கலந்து” எ-ம். உடலுஞ்சிவன் உயிருஞ்சிவமென்று திருநாவுக்கரசர் மாணிக்கவாசகசுவாமிகள் முதலிய சமயாசாரியர்களன்றோ. இவ்வாறு தமிழ்வேதத்துக்கூறியுள்ளார் இவர்க்குடன்பாடான பேதவாத சித்தாந்தத்துக்கு இத்தமிழ் வேதவசனங்கள் முற்றிலும் முரணாதலின் சித்தாந்தந் தெரியாதவர் சிவநிந்தகரென எவரை இகழ்ந்தவராகின்றனர் நமது நண்பர்.

தமிழ்வேதம் சிவபெருமானை ஊனுருவமாக இருக்கின்றானை என்றதனை ஆதாரமாகக்கொண்டுசிவபெருமானை ஆட்டுக்கறியே!கழுதைக்கறியே! குதிரைக்கறியே! நாய்க்கறியே! பன்றிக்கறியே என இறைச்சிப்பெயர்களாலும் அழைக்கவிழைவார்களா? அவ்வாறு விரும்புவோர் சிவனடியாராவரா? அவ்வாறே பிள்ளையவர்களும் எல்லாஞ் சிவமாகக் கண்டவிடத்துரைத்த எல்லார் பெயரும் என்றறிக. ஞான சபா நடன தெரிசனஞ்செய்தவர்க்கன்றி பிறர்க்கு எல்லார் பெயரும் எல்லாப்பெயரும் சிவன் பெயராக விளங்காது என பிள்ளையவர்கள் கூறியிருப்பதால் பிறரவ்வாறனைத்துயிரின் பெயரும் எல்லாப்பெயரும் சிவன் பெயராகக்கொள்ள அருகரல்லர் எனத் தானே

விளங்குகின்றது. அங்ஙனமாகவும்கழுதை நாய் முதலிய பெயர்களை வரைந்து இப்பூர்வபக்கத்தா ரிடருறுகின்றனர். அது, **சிற்சபையிலென்கணவர் செய்யுமொரு ஞானத்திருக்கூத்துக் கண்டளவேதெளியுமிது தோழி** என்ற பிள்ளையவர்களின் வசனமே இவர் கொள்கையை மறுத்துரைத்திருத்தல்.

பின், வேண்டாதன பலகூறி, சமயாசாரிய பிரபுக்கள் முதலாயினோர் பிருதிவி முதலாய அசுத்தசுத்தாசுத்த தத்துவங்களையெல்லாங்கடந்து சுத்தத்துவமாகிய சாதாக்கிய நிலையினின்று உயிர்கண்மாட்டுள்ள கருணையால் தேவாரமுதலிய திருவருட்பாக்களை வெளிப்படுத்தினர் என்றார்.

சமயாசாரிய சுவாமிகள் அசுத்த தத்துவமான பிருதிவியில் (அதாவது, மண்ணுலகில்) தமிழ்நாட்டில் வாதவூரிலும் ஆமூரிலும் சீகாழியிலும் நாவலூரிலும் பிறந்தனர். அவர்கள் இம்மண்ணுலகிலுள்ள மதுரை யாரூர்சிதம்பர முதலிய தலங்களிலேயே யாத்திரைசெய்தனர். பிருதிவிமுதலிய அசுத்தபூத சரீரங்களையுடைய நாராயணாதி தேவர்களுடையவும் திரிபுரர் ராவண சலந்தர இரணியாதி யசுரர்களுடையவும் சம்பந்தமானவிஷயங்களொடு கலந்தே சிவபெருமானை பண்ணொடுபயின்ற தமிழான தேவார திருவாசகங்களைப்பாடித் துதித்தனரெனபதனை யனைவரு மறிவர்.

இவரிம்முறைக்கு முழுவிரோதமாக சமயாசாரியர்கள் சதாக்கிய தத்துவத்தினின்று உயிர்கண்மாட்டுள்ள கருணையால்தேவாரதிருவாசகங்களாகிய அருட்பாக்களைப்பாடினரென்றால் எவ்வாறு பொருத்தமாகும், அன்னோர் உயிர்கண்மாட்டுவைத்த கருணையாற்பாடியதாயி னவைகளை, சிவபெருமான் றிருவடிக்கன்புடையவென எங்ஙனம்பொதுநிலையுடையோர் கருதுவார். பிறர்பொருட்டே சமயாசாரியர் தமிழ்வேதங்களை யருளிச்செய்தனரென்றிவர் கூறுவதூஉ மவரேயாம். இவர் கூற்றுண்மையாயின் சமயாசாரியரனைவரு பொய்யன்பேயாம். ஊன்றியாராய்வா ரிவ்வுண்மையை யுணர்வர்.

சாதாக்கிய தத்துவமானது இப்பிருதிவி தத்துவத்துக் கப்பாலனேக **நூறுலட்சங் கோடிகோடி யோசனைகளுக் கப்பாலுளது.** மண்ணுலகிலுள்ள சிவசன்னிதிகளினின்று சிவபெருமானை துதித்தசமயாசாரியர்களை சாதாக்கிய தத்துவத்தினின்று பிறர்பொருட்டுப்பாடினரென்னல் எங்ஙனம் பொருந்தும்.

சிவானுபவத்திலிருந்தலை யவ்வாறு கூறினரெனச் சிலர் கூறுவார்களாயிருக்கலாம். அன்னோ சதாக்கியதத்துவத்திற்கப்பால் விந்துதத்துவம் விந்துதத்துவத்திற்குமேல் சிவபெருமான் நிஷ்களரூபியாக எழுந்தருளியிருத்தலின் சிவாநுபவத்துக்குரிய விடஞ் சாதாக்கிய தத்துவத்திற் கனேக கோடி யோசனைக்கப்புறத்திலென அறியாதாரே யாவர். இவ்வுண்மையை **க்ஷமாதத்வம் சதகோடி யோஜனமபப்ராரப்ய கோணாந்தகம்பங்கியா தத்துணைத்ததா பிரகிருதிதோயாயாவலானம் ஸதாத்-ஸாஹஸ்ரச்சஸ்தா சிவாலதிததஸ்ஸக்தியாந்தகம் லட்சகுஸ்யாதூர்த்தவஸ்ஸி வோப்யமோபா விபவோவிந்தோரதிஷ்டாயக** என்ற சித்தாந்தஸாராவளியால் பிருதிவிதத்துவத்திற்குஞ்சதாக்கியதத்துவத்திற்குமுள்ள தூரத்தினையுமதற்குமேல் சிவபெருமானிருப்பிடமு மறிகதடங்குக. சாதாக்கியதத்துவமிருக்கு மிடத்திலிருந்து சமயாசாரியர்கள தேவாரதிருவாசகங்களைப் பாடினார்களென்பது பொருந்தாததேயாம். சதாசிவதத்துவ வாசிகள் விஞ்ஞானகலராகிய வான்மாக்கள். அவர்களுக்கு சத்ததாதுக்களாலான இவ்வசுத்த பூதசரீராதிகளில்லையென்பதனை சாதாக்கிய தத்துவவாசிகளுக்கு ப்ரபோதாகலரென்னும் பெயரிருத்தலே விளக்கும். தூலசரீரிகளாக இவ்வுலகிலிருந்தகாலத் தருளிச்செய்த தேவாரதிருவாசகங்களை தூலசூக்கும சரீரசம்பந்தமேயில்லாத

சாதாக்கிய தத்துவத்தினின்று பாடினாரெனல் எவ்வாறாகும். சாதாக்கிய தத்துவத்தில் வாக்குமுதலிய இந்திரியநிகழ்ச்சி யனுபவநிலையி லிராதாக, உயிர்கண்மாட்டுக் கருணைக்குரிய திருவுளமும் (மனமும்) அத்திருவுளக் கருத்தை நிறைவேற்றவாக்குஞ் சாதாக்கிய தத்துவானுப நிலையிலில்லையேயவ் வனுபவ நிலையினின்றிடஞ் சாதாக்கியதத்துவமன்றே. ஆதலின் சமயாசாரிய சுவாமிகள் சாதாக்கிய தத்துவத்தினின்று உயிர்கண்மாட்டுவைத்த கருணையாற் பாடினாரென்றாலும் அவ்வாறன்றி ஞானானுபவநிலையில் சாதாக்கிய தத்துவத்தினின்று பாடினாரென்னினும்அக்காலங்களில் வாக்குமுதலிய நிகழாதாதலின் பொருந்தாமையா லிவருரை வெற்றுரையாயது காண்க.

திருவருட்பிரகாச வள்ளலென்ற பெயர் இராமலிங்கபிள்ளை யவர்கட்குத் தகாதெனபூர்வபக்கத்தார்வரைந்துவிடுத்தவெவ்வொரு விஷயங்களையும்பன்னிரு திருமுறை முதலிய பிரபல பிரமாண நியாயவச்சிரகுடாரத்தாலெழுந் தொழிந்தமையின் இராமலிங்கபிள்ளைபாட லாபாசதாப்பணத்தின் சச-ம் பக்கமுதல் ருச-ம் பக்கம் வரைக்குஞ் சிதறியழிந் தொழிந்தமை காண்க.

ஓதாதுணர்ந்தா ரென்றதுண்மையன் றென்பது ॥ ரு ॥.

இராமலிங்கபிள்ளை ஞானசம்பந்தராதியரையொப்ப வோதாமலுணர்ந்தேமென்று கூறினர். அது குற்றமெனச் சில வரைந்து ஓதாதுணர்ந்தயாவர கவியாண்டான் முதலியோருங் யாழ்ப்பாணம் கந்தப்பசுவாமிகள் முதலிய பல புலவருமென்றனர் அன்றியும்ஓதாதுணர்ந்தோர்என்பவர்ஒருவரிடமுங் கற்காமலே எல்லாவற்றையுமறிந்தவராக இருத்தல்வேண்டுமெ இராமலிங்க பிள்ளைதமது தமயனாரிடமும் பிறரிடமும் படித்தவரேயன்றி யோதாமலுணர்ந்தவராவாரா என்று பல இழிமொழிகளுடன் இராமலிங்கபிள்ளை யோதாம லுணர்ந்தாரென்பது பொய் என வரைந்திருக்கின்றனர்.

ஞானசம்பந்த சுவாமிகள் புராணத்து "போதநயப்ப வோதியுணா புகலிவந்த புண்ணியனு ரெண்ணிறந்த புனிதரேயும்" என்று சுவாமிகளை யந்தணர் இடையில் வேதமோதியவராக வுரைத்தலி னியவருரை பொய்யவாறு உண்மையாகும். அருணகிரிநாதரும் அட்சராப்பியாசஞ் செய்விக்கப்பட்டவரோ. அவர் பள்ளிக்கூடத்திற் சிரத்தையுடன் படித்தாரில்லையென்ப. வென்றிமாலைக் கவிராயரும் இளமையிற் பள்ளியிருந்தப்பெற்று படிப்பிக்கப்பட்டவரே யாவர். திரிலோக சுந்தரரா குலதிலகரான வென்றிமாலையந்தணர்மணியாதலின் அட்சராப்பியாசஞ் செய்துகொண்டாரில்லையென்றல் தவறுரையேயாம். குமரகுருபர சுவாமிகள் ஓதாமையயனோதா துணர்ந்தவராயின தருமை யாதீனத்து மாசிலாமணித் தேசிகரிடம ஞான நூல்களையுணரவேண்டிய நிமித்தமில்லை. "ஐந்துபேறறிவுங் கண்களே" என்ற பாடற்குப் பொருடோன்றாது மயங்க வேண்டுவதில்லை. காளமேகப் புலவரும் அட்சராப்பியாசஞ் செய்விக்கப்பட்டு திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்தவரே. யாழ்ப்பாணங் கந்தப்ப சுவாமியென்னு மோதாதுணர்ந்தவர் சரிதம் இத்தகைத் தெனயாமறியோம். பொய்யாமொழிப் புலவரும் திண்ணைப் பள்ளிக்கூடம் படித்தவரே. இவ்வாறு படித்திருந்தலி னிவர்கள் ஓதாதுணர்ந்தவர்களாக ஆவாரென நமது பூர்வபக்கத்தார் கொள்கைப்படியே கொள்ளவேண்டியதே. ஆயினும் ஓதாதுணர்ந்த லென்றதற்கும இத்திண்ணைப் பள்ளிக்கூடப் படிப்பிற்கும் விதநியாசஞ் சாலவுளது.

உலகின்கணுள்ள மனிதரிற் பெரும்பாலார் பல சில உபாத்தியாயர்களிடமோதி யுணர்ந்தவர்களாகவே இருக்கின்றனர். யெரெவர் எவ்வளவு எவ்வளவு படித்தாரோ அவரவ ரவ்வள வவ்வளவு கலையறி வுடையவராக விளங்குகின்றனர். கைபேடு பேரேடெழுதவுங் கூட்டல் கழித்தல்களைச் செய்யவும் தங்கள் வியாபாரத்தி லுண்டாகும் வினாக்களுக்கு விடையிறுக்க

வும் படித்துக்கொண்டதனாலே அன்னவர் ஓதி யுணர்ந்தவ ராவர்களா? நமது பூர்வபக்க நண்பர்களும் மேற்குறித்தவர்களுஞ் சமானமாவர்களா? இரு பகுதியினரும் படித்தவராகவும் அவர் படித்தவர் இவர் படித்தவரெனச் சிலரைப் பலர் கூறக் காரணமென்னை?

இராமலிங்கபிள்ளை ஒரந்தணரிடமுந் தமையன் சபாபதிப் பிள்ளையிடமும் படித்த தன்மையே. அவை அரிச்சுவடி வரிக்காபாடம் ஆத்திசூடி கொன்றைவேந்தன் அருணகிரியந்தாதி கிருட்டினன்தூது முதலியவைகளேயாம். பின் பிள்ளையவர்கள் தெய்வோபாசனை வலத்தால் இலக்கண இலக்கியங்களையும் மதுரகவி பாடுந் திறத்தையும் பூர்வபட்ச சித்தாந்தங்களையும் சமரச சன்மார்க்கமான உண்மை நிலையையும் அவைகளை யறிந்த புலவர்களிடம் பயிலாது திருவருளின் வழியாக உணர்ந்து கொண்டமையின் தமக்கத்தகைய அறிவினைத்தந்த சிவபெருமானைக் குறித்துப் புகழ்ந்து "என்னையாண்ட வருட்பெருஞ் சோதியே நின்னருள் வலத்தா லோதாதுணரவேண்டிய கலைகளையுணர்ந்தேன்" என்று கூறியது பணிந்தசொல்லேயன்றி இவர் கருதியாங்கு பெருமிதங் கருதி யுரைத்ததன் றென்க. சைவ சம்பிரதாய வனுட்டானத்தி னின்றுரி லெத்தனையோ வாயிரம்பே ரோதாதுணர்ந்தவர்களாக இருந்தார்கள் அதனைச் சிந்திக்காத விவர் சிலரைக் காட்டி யோதாதுணர்ந்தோ ரிவரேயென்று கூறுகின்றனர்.

திருவள்ளுவர். "ஒருமை கட்டான் கற்றகல்வி யொருவற் கெழுமையுமேமாப் புடைத்து" என்று கூறியிருக்கின்றனர். பரிமேலழகருமதற்கு "ஒருவனுக்குத்தா னொருபிறப்பின்கட் கற்றகல்வி எழுபிறப்பினுஞ்சென்றுதவுதலுடைத்து" எ - று. என்றுரை கூறினாராதலின் விட்டகுறை சிரப்புவான் வந்த பிள்ளையவர்களும் தாம் பண்டெபயின்ற நூல்களை வாசனை பலத்தா லின்றே தாமே திருவரு ளுபகரிக்கவுணர்ந்து ஓதாமே யனைத்து முணர்ந்தேனென் றுண்மை கூறினர். இதனால் சைவசமயத்துக் கொரு அகௌரவமு மில்லையாகவும் இவர் ஆட்சேபிக்கின்றனர். பிள்ளையவர்கள்தாமோதா துணர்ந்ததாக வுரைக்கு மிடங்களிலெல்லாம் திருவருள் வலத்தாலுணர்ந்ததாக வுரைத்தலின் குற்றமாகாதென்க. சைவசமயவிரோதமான நூல்களை சைனராக விருந்தகாலத்தி லியற்றிய. திருநாவுக்கரசு சுவாமிகள் இவர் கருத்தின் வண்ணம் தந்தை தாயர்களாற் பள்ளியில் வைக்கப் பெற்றவரும் சைவர்களிடமும் பிறரிடமும் படிக்கப்பெற்றவருமாக விருந்தும் "கலைஞானங் கல்லாமே கற்பித்தானை" கல்லாதனவெல்லாங்கற்பித்தானை யென்றும், ஓதா துணர்ந்ததாக உரைத்திருக்கின்றனர். பலரிடத்தும் படித்துவிட்டு பின் ஓதா துணர்ந்தே னெனவீம்பு பேசுவது கயவர்குணமே என்ற இப்பூர்வ பக்கத்தினர் திருநாவுக்கரசு பெருமான் பலரிடை யோதி யுணர்ந்தவராகவும் ஓதாதுணர்ந்ததாகக் கூறியிருத்தலைப் புகழ்ந்தவ ராவரோ? சபாபதிப்பிள்ளை இராமலிங்க பிள்ளைக்கு சிறு பருவத்தேயக்கரங்களை யுணர்த்தினமையானே இராமலிங்கபிள்ளையின் கல்வி முழுமையுஞ் சபாபதிப்பிள்ளையிடங் கிரகித்ததாகக்கருதுவோர் திண்ணைத் தூங்கி வாத்தி யொருவனிடம்எழுதப் படிக்கத்தெரிந்த ஒருவன்தனது நல்லூழ்வலத்தால் யம். ஏ. எல், எல், டி. முதலியபட்டதாரியாகியதும் திண்ணைத் தூங்கிவாத்தியாரின் படிப்பளவா லென்றல் பொருந்துமா? அவ்வாறே சபாபதிப் பிள்ளையிட மட் சராப்பியாசஞ்செய்து கொண்டதனாலேயே இவரறிந்தன வனைத்து மவரிடைப் பெற்றதாகாது. இராமலிங்க பிள்ளை அவர்களை அவர் தமயனார் அங்கதப் பாட்டாலிகழ்ந்தன ரென்பது பொய்யான விஷயம். இராமலிங்கபிள்ளையவர்களையவர் தமயனார் சாலப்புகழ்ந் துரைத்த கவிகளைப் பின்னர் எடுத்து காட்டுவோம் நிற்க. பிள்ளையவர்கள் ஓதா துணர்ந்தே னென்றது இறை

வன் நிறங்களும் ஆன்மாக்களின் நிறங்களும் அன்றி நெடுங்கணக்கு முதலியவைகளை யன்றாதலின் இவருரை வெற்றுரையேயாம்.

### ஓதியுணர்ந்தேனென வுரைத்தனர் பிள்ளையென்றதன் மறுப்பு.

ஓதாம லுணர்ந்தே னென்றவர் மறந்து படித்தறிந்தேன் படித்தேன் என்று கூறியுள்ளார் ஆதலினிவர் பொய்யா என் கூறுகின்றார். ஓதாதுணர்ந்தேனெனப் பிள்ளையவர்கள் கூறியதற் கிவர் காட்டிய பாடல்கள் 777-729-781 முதலிய பக்கங்களதுந் ஓதா துணர்ந்தா னென்றதற்குக் காட்டிய பாடல் 75-ம் பக்கத்தது மாறு முன்னுரைத்ததெத்துவோ இதுநிற்க சபாபதிப் பிள்ளை சினந்ததற்காகவோ உண்மை தானாக வெளிப்பட்டதோ படித்தே னென்றார் என்று கூறி மகிழுகின்றனர். இவர் காட்டிய பாடல்களாலிவர் பக்கமழிந்தொழியுமேயன்றி நிலையுறாது. "படித்தேன் பொய்யுலக நூலெலந் தாய் நீயே படிப்பித்தாய்" என்று கூறியபாடலையே காட்டினர். நீயேபடிப்பித்தாயென்று கூறியது சிவபெருமானையேயாதலின் சிவபெருமானிடமுணர்தலையன்றோ எம்மவர்கள் ஓதாதுணர்தலாகக்கொண்டுளார். அம்முறையில் இவர் கண்ட, சபாபதிப் பிள்ளையிடம் உணர்ந்ததனை யெங்கே கூறியுள்ளார். இரண்டாவது காட்டு. "கற்பனவறிந்து கற்கிலேனென்றது" இது ஆற்றாவிண்ணப்ப மென்னும் பதிகத்திறுதிக் கவி. சழக்குக்கல்வியெனத்தாமாகக் கற்ற பசுநூற் கல்வி களை யிகழ்ந்து கூறியிருத்தலின் அவர்க்கே கல்வியில் விருப்பமின்றென்றும் இறைவனருள் வழியுணரு முணர்ச்சியே சிறந்ததென்றுங் கொண்டவ ராகின்றார். "படிப்பித்தயாறே." என இறைவ னுணர்த்திய வண்ணமே யென்றனரன்றி சபாபதி பிள்ளையிடத்தும் அந்தணரிடத்தும் படித்ததனை யுரைத்தாரில்லை. 'படித்தவென் படிப்பும்" என்றதில் சிற்றம்பலத்தே நண்ணியபொருளுமென் றறிந்தேனெனென்றமையில் ஞானம்பலப் பொருளையே படித்தேனென்றாரன்றி சபாபதிப் பிள்ளையாசிரியரிடம் படித்ததாக இன்மை காண்க. ஓதாதுணர்ந்தே னென்றது உலகின் மனிதரோதுமாறு ஓதாமல் திருவருள் வழியா லுணரவேண்டியவைகளை யுணர்ந்தே னென்றும். ஓதியுணர்ந்தே னென்றது திருவருளிடமேயுணர்ந்தேனென்றுங் கூறியிருக்கின்றனரேயன்றி பூர்வபக்கத்தினர் கருதியாங்குசபாபதிப்பிள்ளையிடமு மந்தணரிடமுங் கற்றதனையன்றவர் கூறியிருத்தல். பிள்ளையவர்கள் தமது தவமுதிர்ச்சிக்கிணங்கக்கிடைத்த அருளினலுணரவேண்டியவைகளை யுணர்ந்தவ ரென்பதே யுறுதியாம். பொறாமை காரணமாக நமது நண்பர் எடுத்துக்காட்டிய பாடல்கள் எமது பக்கத்துக்குச் சாதகமாகி நின்றதேயன்றி இவர்க்கோரனுகூலமுஞ் செய்யாமையினிவருரை வெற்றுரையே யாயதுகாண்க. ஓதாணர்ந்தவராக இவர்காட்டிய யாழ்ப்பாணங் கந்தப்பசுவாமி என்பார்பாடிய கதிர்காமக்கலம்பகத்து தம்மை யருள்பெறாதாராகவே கூறியிருக்கின்றனர் "அவ்வாறவர் கூறியிருத்தலினவர் அருள்பெறாதவராகத்தானே இவர் கொள்ளுதல்வேண்டும். கதிர்காமக்கலம்பகம். "ஆழ்க்கைபெற நின்னருளாங் கலத்தைப்பற்றி அகங்களிக்குங்காலமென்றோ" எ-ம். "பேயானேனெனக்கெங்ஙனின்னருள்வந்தடுத்துறும் எ-ம். கூறியிருக்கின்றனர் இங்ஙனமிவர் கூறியிருத்தலாலவரிழிந்தவராவரா! இறைவனைத் துதிக்கும்பெரியவர்கள் தம்மைப் பலவாறு கூறுதல் வழக்கமேயாம். அவ்வழக்கத்தினை யநுசரித்த இராமலிங்கபிள்ளையவர்கள் ஓதி யுணர்ந்தேனோ தாதுணர்ந்தேனென்பனவாதிமொழிகளுரைத்தமையா லிழிந்தவராகார்.

### கருணீக குலதிலகரேனல் கனமன்றேன்க என்றதன்மறுப்பு.

இரௌரவசுப் பிரபேதாகமங்களின் சாரமான தருணகிரிப்புராண

மென்றும் அதன் கண்கணக்கரை இகழ்ந்து கூறியிருக்கின்றதென்றும் மந்திரித்தொழில் கணக்கர்க்கு வேதசிவாகமங்கள் விதித்ததேயில்லையென்றும் பிள்ளை “ தம்முடைய சாதி கீழாயிருத்தலாலேயே சாதிகுலமாதிகளை யிகழ்ந்து கூறியிருக்கின்றனர் என்றும்வரைந்து மகிழுகின்றனர். திருநாவுக்கரசுபெருமான். “சாத்திரம் பலபேசுஞ் சழக்கர்காள், கோத்திரமுங்குலமுங்கொண்டென் செய்வீர்” என்றுரைத்தருளி யிருத்தலின் அவருந்தமது சாதி இழிவுடையதாதலி னவ்வாறு கூறினாரென்றிவர் சொல்லுவார்போலும். சாதியைப்பற்றித் தமிழ்வேதவசனத்தினாலே மறுப்பெழுதியுள்ளேமாதலினிங்குபிள்ளையவர் கூறியதாக இவர்கூறும்வாய்மொழியன்றிதம்மைக்கருணீககுலதிலகரென பிள்ளையவர்கள் எங்கும்வரைந்ததின்மையின் இவருரை வெற்றுரையெனஒதுக்கினும்.

அருணாசல மான்மியத்தினொரு பகுதியான அருணகிரிப் புராணமானது இரௌரவசுப்பிரபேதங்களின் சாரமென்றிவர் கூறியது தவறேயாம். அதனாசிரியர்காலத்தே அருணாசலப்புராணமென ஒன்று தோன்றி நின்று நிலவுதலும் இது அருகிவழங்குதலும் நமதன்பர் அறியார்போலும். எந்த வேதாகமங்களோ சூத்திரர்களை அமாத்தியர்களென வுரைத்தன. கருணீகர்களை ஆமாத்தியராதற் கருகரல்லரென விதித்த வேதாகமங்களவை! அவ்வேதாகம வசனங்களைக்காட்டினாலன்றோ அறிஞரங்கீகரிப்பர். இவ்வாறு ஒருசாதியினரைத் தூஷித்தால் அச்சாதிச்சனங்கட்கு மனவருத்தமுண்டாகுமென நமது நண்பர் நினையாதது விசனிக்கத்தக்கதே. சாதிவிடயமாக அதிகமாக எழுதினால் வெகுசனங்களுக்கு மனவருத்தமுண்டாமாதலின் அவ்விஷயத்தை விரிக்காது வேண்டியவற்றை அநுவதித்து மறுத்தாமென்க.

### எல்லாம் வல்லசித்த ரென்றதேற்கா தென்றதன் மறுப்பு.

“இராமலிங்கபிள்ளை தம்மைக் கடவுளாகக்காட்ட விரும்பி” யாங்காங்கு இல்லாத விடயங்களை யெலாமெடுத் துரைத்துளார் என்றுகூறியிருக்கின்றார். கடவுளாகத் தம்மைக்காட்ட வேண்டியவர் இல்லாதவிடயங்களை யுரைப்பார்களா? உரையாரென்க. இந்த பாகத்திலிவர் காட்டியவைகளை முன்னரே மறுத்தாமாதலின் ஈண்டு மீண்டும் வரைதல் வேண்டாமை காண்க. இதனில் பிள்ளையவர்களை தம்மையும் பாடல்களையும் கண்டித்தாரை யாதேனுமோர் சித்தியால் அடக்கிவிடுவாராயின் யாமுமிப்போது கண்டித்தற் கெழமே? பாவம். என்ற விடயமதிகமாகக் காணப்படுகின்றது.

இவர் கண்டனை நியாயமற்றதாதலின்றே இவரை யாமும் நியாயவசிரகுடாரத்தாற் கண்டிக்கவெழுந்தேம். நியாயமானதாயின் கண்டனைவராதன்றோ? பிள்ளையவர்களைப் பரதேசி எனஎழுதி இருக்கின்றனர். பரதேசி என்னும் அபிதானத்துக்குரியோர். பரத்தின்தேசுபடிந்தவர்களேயாதலின் பிள்ளையவர்கட் கப்பெயரானிழுக்கொன்று மின்றென்க. பிள்ளையவர்களின் புத்தகவைரிகளிற் பெரும்பாலார் பரதேசிகளே. எவ்வாறெனில் பிள்ளையவர்களின் சுயதேசமான இவ்விந்தியாவொடு சம்பந்தமின்றிக் கடல் நடுவில் பரதேசமாக நிற்கும் நாட்டினரே யாதலிற் பரதேசிகளாகின்றார்கள். பரதேசிஎன இராமலிங்கபிள்ளை யவர்களை இப்பூர்வபக்கத்தாரிகழ்வதிற்பயனின்றென்க.

### தருக்கத்தில் இராமலிங்கர் நடுங்கிச்சாய்ந்தா ரென்றதன் மறுப்பு.

“ இராமலிங்கபிள்ளை சித்தாந்தத்திற்கும் இலக்கணத்திற்கும் மாறான பலவிஷயங்களைத் தம்மனம்போனவாறு பாடியிருத்தல்கண்டு சிதம்பர தீட்சிதர்முதலிய பலர் பிள்ளையவர்களுடன் தருக்கித்த காலத்து சமா[illegible]னஞ் சொல்லமுடியாது நடுநடுங்கிச் சென்றதும் ஓடிப்போனதும் யாவு

மறிவர்" என்று கூறுகின்றார். இவரெடுத்தெழுதுமாறு ஒன்று நிகழ்ந்ததில்லையென்பதற்கு இப்பூர்வபக்கத்தாரிற் பலரிடத்து வெறுப்புடையவரும் பிள்ளையவர்களிடத்து அதிக பிரியமுள்ளவர்களுமா யக்காலத்திருந்த சிதம்பரம்தீட்சிதர்களைப்பிள்ளையவர்களின்விரோதிகளாக இவர்எழுதியதேசான்ருகும். இவர்காட்டிய சிலரின் சித்தாந்ததநிற் கிணங்காதவையனைத்தும் ஆட்சேபத்திற் கிடமானவையேபோலும்?வைதிகசைவர்களான தில்லைவாழந்தணருக்கு இவர்களின் சித்தாந்தமுடன் பாடானதன்மையி லிவருரைவெற்றுரை யென்க.

வேதாகம சித்தாந்தங்களைமுற்றமுணர்ந்தவரை யொப்ப இராமலிங்க பிள்ளையை வேதாகம விருத்தமாக உலகெலா மென்பதற்குரை விரித்தவ ரென்கின்ருர். இவை வேதாகமங்களி லில்லாதவை யென இப் பூர்வ பக்கத்தார் காட்டியிருப்பின் வேதாகமவசனங்களைக் காட்டி இவர்கள் பக்கத்தைக் கண்டித்திருப்பேம். இவ்வாகளவ்வாறொன்றுஞ் செய்யாது உலகெலாமுணர்ந்தோதற்கரியவ னென்பதற்கு தவறுயுரை யெழுதினரென்றமையின் இராமலிங்கபிள்ளை அவர்கள் உலகெலா மென்பதற்குச் சரியான பொருளெழுதி யிருக்கின்ருர். அதனைப் படித்துணரு மாற்றலின்மையா லவ்வுரையை யிப்பூர்வபக்கத்தா ரிகழுகின்றனர் என்று கூறிமறுத்தாம்.

இராமலிங்கபிள்ளை பாடலுமிதனை விளக்குமென இரண்டு பாடலடிகளை வரைந்து இவை இராமலிங்கபிள்ளை தருக்கத்தில் சாய்ந்ததற்காதாரம்என்று கூறுகின்றனர் அவையோ பிள்ளையவர்கள்பாடிய பிள்ளைப்பெருவிண்ணப்பத்தில் ௩௮-ம் கவியிலும் ௪௦-ம் கவியிலும் கூறியவையேயாம். இவ்விண்ணப்பமானது ௧௨௧ - கவிகளால் பூர்த்தியெய்தப்பெற்றது. இதனில் எல்லாம்வல்ல இறைவனை நினைந்துத் தமது மனதின் சபலசெயல்களை எடுத்தெடுத்துக் கூறியதிலிவையுஞ் சேர்ந்தவையேயாம். இவைகளின் நுண்பொருளுணரு மாற்றலின்றி தருக்கத்திலிராமலிங்கர் நடுங்கிச்சாய்ந்தாரென்றல் தவறென்க. வீண்தருக்கஞ் செய்பவர்களைக் கண்டால், சதாசாரமுடையோர் உள்ளநடுங்காது பின்னென்செய்வர்.

## பிள்ளையின் பேதைமைத்தன்மை என்றதன்மறுப்பு.

பிள்ளைப் பெருவிண்ணப்பத்தில்பிள்ளையவர்கள்கூறியவைகளை எடுத்துக்காட்டி இகழுகின்றனர். பிள்ளையவர்கள்பல்லிகள் சொல்லியகாலத்துப்பதைப்பேனென்றதுமுதலியவையோஇவராட்சேபிப்பன. பல்லிகள்ஆன்மாக்களின்போக நுகர்ச்சியை யுரைப்பனவாதலின் அவைகளின் நிலையற்றதன்மைக்காக நடுங்குவோ ரறிவுடையரேயாவர். கூகைகுழறல் நேகாணித்தியத்தைக் குறிப்பதாதலினதுகேட்டு நடுங்கினவர்அறிவுடையரேயாவர். இவ்வாறே அவசகுனங்களைக் காணுந்தோறும் என்னநிகழுமோ எனவருந்தியவர் அறிவாளரேயன்றி மடமையுடையரலலர். இப்பூர்வபக்கத்தாரிவைகளை மறுத்தமையா லிவைகளுக்குமாருன விடயங்களில் துணிவுடையவரும் பல்லி கூகைபருந்து முதலியவைகளின் குழறுதலாதிசலை அப்பிரமாணமாகக் கொள்பவருமாகின்றனர். பிள்ளையவர்களுரைத்த வசசெயல்களை இகழ்பவர்கள்கன்னெஞ்சுடையவரும்பெண்கள் முதலியவர்கள் இழுத்தல் முதலிய செய்தால் அஞ்சாது அவரெண்ணப்படி நடப்பவரும் ஆக உள்ளவர்களைப் புகழ்பவர்களாகவன்ருே யாகின்றனர். இவ்வாறிருப்பவர்களைச் சிறந்தவர்களாக எந்தச சைவசித்தாந்தத்துட் கண்டனரோ இன்ஞேர். சிவ சிவ, நல்லவைகளைக் கெட்டவைகளெனவுங் கெட்டவைகளை நல்லவைகளெனவும் இரக்கமுதலிய விருத்தல் மடைமைத் தன்மையெனவும் கூறுஞ் சைவசித்தாந்த மின்மையின் இவருரை வெற்றுரையே யென்க.

பின் இராமலிங்கபிள்ளையைச சிறுவயதின் மாலையிட்டு ஆண்டிருந்

தால், நடுக்கம்பயந்தியக்க முதலியவற்றால் வருந்தியது வியப்பே எ - ம்.
"அஞ்சுவதி யாதொன்றுமில்லை அஞ்சவருவதுமில்லை" என்று ஆளுடைய
அரசு அருளிய துணர்ந்தார் இவரது தன்மையை யறிவரென்க. என்றுங்
கூறிமகிழுகின்றார்.

சிவபெருமானாலாளப்பட்டருண்மூர்த்தியாகிய அப்பர்சுவாமிகள். நித்
தலுந் தூயேனல்லேன். எ-ம். கழித்திலேன்காமவெந்நோய்எ-ம். பாம்பின்
வாய்த்தேரை போலப்பலபல நினைக்கின்றேன் எ-ம். மாழையொண் கண்
ணினார்கள் வலைதனின் மயங்குகின்றேன் எ - ம் அஞ்சலென் றருளவேண்
டும் எ - ம். திகைத்து நாள் செலுத்தினேன். எ-ம். தூய்மையின்மையேன்
எ - ம். காமநோயுடையன் எ-ம். தடுமாறுளத்தன் எ - ம். பெண்ணேயில்
வருந்தினேன் எ - ம். அச்சமுற்றேன். திகைத்து நின்றேன் என்றுமனேக
மாகக் கூறியிருத்தலின் சிவபெருமானாலாளப்பட்டோர் நடுக்கம்பயந்தியக்
கமுதலிய உடையராக தம்மைக்கூறுதலா விழுக்கின்மையின் இவருரை
வெற்றுரையாயது காண்க. இதுகாறுநாமெடுத்துக்காட்டியநியாயங்களால்
இராமலிங்கபிள்ளை பாடலாபாச தர்ப்பணத்தின் கசு-ம் பக்கம்வரைக்கும்
அழிந்தொழிந்தமை காண்க.

## சென்னையை நிந்தனை செய்தனர் அந்தோ என்றதன் மறுப்பு.

பிள்ளையவர்கண்மீது பழிசுமத்தவந்தவின்னோர் சென்னையை எமது
சென்னையெனத் தன்மையிலுரைத்து மயிலையொற்றி வான்மியூர் முல்லை
வாயில் வலிதாயம் வேற்காடு முதலிய வேறு நகரங்களையும் சென்னையென்
றும் பட்டினத்தடிகள் முத்தியடைந்தது சென்னையிலென்று மத்தகைய செ
ன்னையைப் பிள்ளையவர்கள் இகழ்ந்தனரென்றும் பல இல்லாதனவற்றைக்
கூறிமகிழுகின்றனர். இதனில் பிள்ளையவர்கள் பாடலென "சென்னையை
போல தீமைசெயுமிடங் காணேம்" என்பதை எடுத்துக்காட்டினா. இரா
மலிங்கபிள்ளை சஞ்சாரஞ்செய்த நாடுகளுள் சென்னைபெரியதொரு நகரம்.
இதனில்தெய்வவுருவமான பசுக்களைநாளொன்றிற்கனேகமாயிரங் கொலை
செய்துசகடங்களிலிட்டு வீதிவீதியாயிழுத்துசசேறலயும் யாடுகோழிபன்றி
யாதியின் உயிர்க்கொலைக்களவின்மையும் பல்லாயிரங்கட்கடை சாராயக்க
டைகள்மலிந்து கிடத்தலையும் மாமிசாகார மருந்தும் பிறமதத்தினரின் மலி
வினையும் கங்கைமுதலிய எவ்வித உத்தமதீர்த்தமுமின்மையும். மானுடப்
பிரதிட்டாலிங்கங்களையுடைய சிறுசிறு தேவாலயங்களையன்றி சுயம்பு முத
லிய இலிங்கமூர்த்திகளையுமில்லாததாய். புராணேதிகாசங்களாற்புகழப்படு
ங்காஞ்சி சிதம்பரம் அருணையாதிகளைப்போல புராணேதிகா சங்களாற் புக
ழப்படாததாயும் வாணிப முதலியவைக்காய் அன்னிய தேயத்தாரால் குடி
யேறப்பெற்றதாய் ஸ்நாநசந்தியாவந்தன சிவபூசாதி உத்தம காரியங்களையு
டையவர்களைச் சுருக்கமாகவுடையதாய் வாசக்கிரகத்திலேயே மலசல
மோசனஞ்செய்யவேண்டியதாய் விளங்குஞ் சென்னை தீமையாலன்றி நன்
மையான் மலிந்ததாமோ? சுசீலர்களான காஞ்சியாதி நகரவாசிகளைக் கேட்
டால் சென்னையின் நன்மைச்செயலின்னதென்று விளங்குமே?

தமதுமூனது சென்னையில் வசிக்கச்செய்வதனாலேயே சென்னைஸ்நா
னசந்தியாவந்தனங்களுக்கும் ஓமசிவாராதனாதிகளுக்குந் தகுந்ததெனஉரை
த்துவிடலாமோ? சென்னையில் 'அங்கண நீர்மலிந்த கழிகளையன்றி வேறு
நதிகளைக் காணேமே? மிருகாலயமான பீபில்ஸ் பார்க்கையன்றி நந்தவ
னங்களைக் காணேமே இத்தகைய சென்னையைக் குறித்துபிள்ளையவர்கள்
சென்னையைப்போல தீமைசெயு மிடங்காணே மென்றது பிறநகரங்களில்
சிறு கிராமங்களிலும் இவ்வாறான செயலொன்று மின்மையாலேயேயாம்.
உண்மையை யுரைத்தமையால் அவர் குற்றமுடையவராவரோ? பல சான்

ளூர் உதரம்பரிகளாகச் சென்னையில் வசிக்கின்றனரே யன்றி சென்னையைச் சிதம்பர மருணை காஞ்சி திருவாரூர் முதலியவைகளைப் போல கருதியிருப்பவரல்லர். பட்டினத்தடிகள் திருவொற்றியூரின் முத்திபெய்தினரென்பது உலகமறிந்த விஷயமாகவும் சென்னையில் முத்திபெய்தினரெனத்தவறு கூறுகின்றனர். பட்சபாதமற்ற வுள்ளத்தினர் சென்னையை ஞானதான சிலங்களைக் கைப்பற்றிய சாதுக்களால் நிலைசெய்யு மிடமெனக் கருதத் தக்கதே என்றொப்புக் கொள்ளுவர். சென்னையைத் நிலைசெயு மிடமென்றதனை விவாத மதசித்தாந்தத்திற் குண்டான இழுக்கென்னை? நமது நண்பர் சிறு கிராமங்களில் வசிப்பதனை லுண்டாகுமகுணங்களைக் கேட்டு மறியாதவ ராதலின் சென்னையைச் சாலப் புகழுகின்றனர். "தேட்டிலே மிகுந்த சென்னை எனப் பிள்ளையவர்கள் சம்பாத்தியத்தில் மிகுந்த சென்னை" என்றது சென்னையை இகழ்ந்ததாகாது. தமது நிலைமைக்குக் கட்டமாக இருந்தமையின் சிலுகு விளையுமென்று நினைத்தனர். சிலுகு - துன்பம் இது தவறாகாது. பிள்ளை யவர்களின் மனோபாவத்தினை உணராது சென்னையை இகழ்ந்தனர். ஆதலின் அவர் பாடலைத் தொடாதீர் என இவருரைப்பதற்காக உண்மை யுணர்ந்த சென்னைவாசிகள் மயங்காரென்க. இவர் மற்றையவிடத்திற் றீமைகள்விளையாவோ வாங்குள்ளார் சன்மார்க்கிகளோ? என்று பிறநகரவாசிகளை இகழுகின்றனர். பிறநகரவாசிகள் துன்மார்க்கிகள் என்றவியவை சென்னையரல்லாதார்எவ்வாறு மதிப்பார்களோ அறியேம். புகழ்ந்துரைக்க வேண்டுமிடத்துப் புகழ்ந்தும் இகழ்ந்துரைக்கவேண்டுமிடத்து இகழ்ந்துங் கூறுதல் கவிகட்குள்ள முறைமாதலின் பிள்ளையவர்கள் சொற்கள் குற்றமாகா வென்க.

## பிள்ளைசீடர் பெரிதுந் தீயரென்றதன் மறுப்பு.

பிள்ளையவர்கள் "குணமிலர் சொல்லியுங் குற்றங்கள் பேசியு, மணங்கிவாழ்த்துவ ரன்புடையாரெலாம." என்ற திருநெறித் தமிழ்வேதத்தினை ஆதாரமாகக்கொண்டு, தம்மைக் கொடிய குணமுடையவரினையரினும் கொடியவரெனவும் அத்தகைய கொடியவரான தம்மை நல்லவரையாளும் பெருமானுண்டால் எவ்வாறுண்டாமெனச சந்தேகதனக் கிடமாகுமே என்றுந் தம்மை இழித்துப் பிற அன்பர்களை யுயர்த்திக் கூறியிருக்கின்றனர். இவ்வாறு கூறியது தொழுவூர் முதலியார் முதலியவர்களையென இப்பூர்வபக்கத்தினர் தவறு கூறுகின்றனர். தமிழ்வேதத்து "பொய்யர் பெறும் பேறத்தனையும்பெறுதற் குரியேன் எ-ம், முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனை எ-ம. செம்மைநல மறியாத சிதடரொடுந் திரிவேனை எ-ம், பொய்களே புகன்றுபோய் எ-ம், கருங்குழலினார்கண்களால் லேறுண்டு கலங்கியே கிடப்பேனை." எ-ம், கேட்கப்படுதலை இவர் நினையாதிவ்வாறு கூறுகின்றனர். இது தவறென்க. இவ்வாறெழுதுதல்தானோ இராமலிங்கபிள்ளை பாடல் ஆபாசதர்ப்பணம்.

## சித்தாந்தத்தாற் சிவனையறிதலில்லையாம் என்றதன் மறுப்பு.

சத்தியவேதாந்தமென்பனவாதி சில பாடலடிகளைக் காட்டி சித்தாந்தமனுவளவுந்தெரியாதவரென பிள்ளையவர்களை இகழுகின்றனர். பிள்ளையவர்கள் சத்தியவேதாந்தமெலாமென்றதனால் வேதாந்தங்கள் அநேகமெனவும், சித்தாந்தமெலாமென்றமையால் சித்தாந்தங்கள்அநேகமெனவும், அவைகள் ஒவ்வொன்றாய்த்தேடியுங்காணமுடியாதபொருள்சிவமெனவுங்கூறியதனாலிறைவன்சாத்திரவாராய்ச்சியாற் காண்டற்கரியவனென்றுஇறைவனதருமையைவிளக்கினர். இதனால் இவர்சித்தாந்தத்துக்கிழிவென்னை? சித்தாந்தத்திற்கு மேலாக வேதாந்தம் நாதாந்தஞ் சொன்னமையின் பிள்ளைக்கு அணுவளவுஞ் சித்தாந்தந் தெரியாதென்க. என்று கூறுகின்றார். "தெருட்டெரு வே

தாந்தந்திகழ் சித்தாந்தத்தினுந் தித்திக்குந்தேனே என்றவருமிவரன்றோ ?
திருமூலர், "வேதத்தினந்தமு மிக்கசித்தாந்தமு, நாதத்தினந்தமு நற்போத
வந்தமு, மோதத்தகுமெட்டி யோகாந்தவந்தமு மாதிக்கலாந்தமு மாறந்தமா
மே."என்று வேதாந்தஞ் சித்தாந்தம் நாதாந்தம்போதாந்தம்யோகாந்தம்க
லாந்தமும் என சித்தாந்தத்திற்குப் பின்னர் நான்கந்தங்களை உரைத்திருந்த
லின்,அவர் வழிநின்ற இராமலிங்கபிள்ளைசித்தாந்த வேதாந்தநாதாந்தமென்
றதுகுற்றமாகாமையும் திருமூலரொடுபகைத்திவர் கூறியகூற்றே சித்தாந்
தவுணர்ச்சியனுவளவுமற்றது மாகின்றமையு மிவருரை வெற்றுரையென்க.

வேதாந்தங்களாலுஞ் சித்தாந்தங்களாலும் அறிதற் கரியவனும் நித்தி
யமான சிற்சபையின் நடுவில் நிறைந்து நின்று நடனம் செய்கின்ற நித்திய
பரிபூரணனை அந்தவேதாந்தசித்தாந்திகள்சென்றடையுமிடமாகவுள்ளவனை
அருமருந்தை அடியேனுயிரை எனச் சிவபெருமானைப் புகழ்ந்து பாடிய பா
டலின்பொருளினைத் தவறாகக் கிரகித்து இவர்க்குச் சித்தாந்தந் தெரியாது
என்றவிவர்க்குச் சித்தாந்தந் தெரியாதென்று யாங்கூறுதலும் வேண்டுமோ?
திருமூலரினும் இவர் சித்தாந்த நூலுணர்ச்சியிற் சிறந்தவர்போலும். சித்
தாந்த நூலான சிவஞான சித்தியாரில் வேதாகமங்களின் துறவிறந்து குறை
விலா வளவினாலும் என்று படிக்கப்பட்டிருந்தலை இவர் கண்டிலர்போலும்
வேதத்தின் முடிவு வேதாந்தமும் ஆகமத்தின்முடிவு சித்தாந்தமுமென
விவேகிக ளுரைக்கின்றனர். சித்தாந்த மென்னுஞ்சொல்லின் பொருள்
அறிந்தவ ரல்லர் பிள்ளையென்றவிவர் "சித்தம்பரமேயிருற்று நீண்மனஞ்,
சத்தமுதலைந்துந் தத்துவந் தானீங்கிச், சுத்தமசுத்தந் தொடராவகை
நிறைந், தத்தன் பரன்பாலடைதல் சித்தாந்தமே" என்ற திருமந்திர
முணர்ந்திருந்தால் பிள்ளையவர்களை சித்தாந்த வுணர்ச்சியற்றவரென்னார்.
திருமந்திர பாராயணரான பிள்ளையவர்களைச் சித்தாந்தவுணர்ச்சியற்றவ
ரெனல் சேடனைமூட னென்பது போலாம். இதுகாறுங்காட்டிய நியாயங்
களால் பிள்ளையவர்கள் சித்தாந்தத்தினை இகழ்ந்தவ ரல்லரென்று பெறப்
பட்டமையி னிவருரை வெற்றுரையாயது காண்க.

## வேதாகம நிந்தனை என்றதன் மறுப்பு.

பிள்ளை வேதாகமங்களை இகழ்ந்தனரெனப் பலதுடணைகளைவரைந்து
சில பாடலடிகளைக்காட்டி இவைகள் தாம்வேதாகமங்களை இகழ்ந்த பா
டல்கள் என்கின்றனர். அவைகளில் சதுமறையாகம மென்ற பாடற்கு
94 - 95 - 96 - 97 - 98 - ம் பக்கங்களில் முன்னரே நியாயங்கூறி மறுத்
திருத்தலினது நிற்க "குறித்த வேதாகமக் கூச்சலு மடங்கிற்று.
கொதித்த மனமுருட்டுக் குரங்கு மடங்கிற்று." என்பதனை இவர் கா
ட்டி யிருத்தலி னதனையுந் தோஷ மற்றதாகக் காட்டுவோம். இது
கல்ல தருண மெனையாள என்ற கீர்த்தனையிலுள்ளதிது. வேதாகமங்களைக்
கொண்டு அத்தகைய தித்தகைய தென்னும் வறுங்கூச்சலால் நீ யென்னை
யாளுதலாகிய பிரயோசன மின்மையால் அவை யடங்கின; மனக்குரங்கு
மதுவிதுவெனநாடியலுத்தது.அதனாலென்னை யாளல்வேண்டுமென்று கூறி
னர்.இவ்வாறுகூறியவர் வேதாகமங்களையிகழ்ந்தவராவரா?எவ்வளவுவேதாக
மங்களைப் படித்துரைக்கினும் நீ கருணைசெய்தா லொழிய நின்னையடைய
முடியாதென சிவபெருமான தருமைப் பாட்டினைவிளக்கிய பாடலைச்செய்
தவர் வேதாகம நிந்தனைசெய்தவ ராவரா? இவ்வுண்மையை யுணராது பழி
கூறுவோரே அத்தகையராவ ராதலினிவருரை வெற்றுரையென்க.

## தஞ்சொற்களோ வேதாகமங்கள் என்றதன் மறுப்பு.

இராமலிங்கபிள்ளை வேதாகமங்களைச் சிறப்பித்துரைத் திருத்தலை
மறைத்து அவர் கருத்தறியாமல் புலவாறிகழ்ந்து அவர் தஞ்சொற்களை

வேதாகமமென்றோரென சிலபாடலடிகளைக் காட்டி மகிழுகின்றனர்.

தமது பாடல்களைச் சிவபெருமான் நமது திருவடியிலணிந்தமையை வியந்து தமதிழிவினையும் சிவபெருமானது உயர்வினையும் விளக்கி என்பாமாலையையுமேற்றணிந்தாரே சிவபெருமான் எனவுரைத்தது தவறாகாதாதலின் இவருரை வெற்றுரையென்க.

இவர் "ஏதாகுமோவென நானெண்ணியிசைத்தவெலாம் வேதாகமமென்றே மேலணிந்தான்." என்ற பாடலடிகளைக் காட்டி இவ்வாறுரைத்தல் குற்றமென்கின்றார். இவர் காட்டிய பாடலின் மற்றொருபாகத்து "பாதாரவிந்தமெனது சிரமேலமர்த்தி மெய்யளித்த வென்னை நடராசனிசைந்து" என்றிருத்தலானும் என்னேயதிசயமென்பதனீற்றில் "எல்லாஞ்செயவல்லான்றிருக் கருணைவாய்ப்பு" என்றிருத்தலானும் இவ்வாறே இவர்காட்டிய பாடல்களில் நடராசப்பெருமான் தம்மாட்டுவைத்த கருணைப்பெருக்கினையும் தமது இழிவினையும் காட்டி உயர்நிலையினின்ற தமது பாடல்களை அங்கீகரித்தற்காக உயர்நிலையினிற்கும் வேதாகமங்கள் காரணமென்றது குற்றமாகுமோ ஆகாது. தற்சுதந்தரமின்மையைப் பிள்ளையவர்களுணர்ந்தார்கள். நமது பூர்வபக்கநண்பர் அதனையுணராமல் வீணாகப் பொருளையாராய்ந்து குறைகூறுகின்றனர் இவர்காட்டிய பாடலடிகளும் வேதசிவாகமங்களை யுயர்த்திக்கூறிய பாடல்களேயாம். ஒவ்வொரு பாடல்களையும் முன்பின் றொடராக வாராய்ந்து காண்பாரிதனுண்மையை யறிவார்.

இவ்வாறு தமது சொற்களெல்லாம் சிவன் சொற்களெனவும், தாம் பாடுவனவெல்லாம் வேதசிவாகமங்களெனவும், அவற்றிறைவர் பாமாலைகளாகச் சூடமாகக்கொண்டு தமது திருவடிகளில் அணிந்துகொண்டாரென்றும். அதனால் வேதசிவாகமங்கள் வெட்கமுற்றன வென்றுமகூறினார். இது தவறானகாரியமெனக்காட்டி இவ்வாறு கூறியவரை யருட்பிரகாசவள்ளலெனவும் அவர் பாடல்களை அருட்பாக்களெனவும் கூறுதலடாதெனப் பல கூறுகின்றார் "கருவிகளனைத்து மென்னுட் கலந்து நின்றியக்காநிற்கு, மொருவனையன்றி யானேயுஞற்றுக வின்மையாலே" என்றும், பசுகரணங்களெல்லாம் பதிகரணங்களாகவசிபெறுமடியார்க்கு, என்றுங்கூறுந்தன்மைப்பாரான பரிபூரணமும் "திருஞான மிவையெலாங்கடந்த சிவஞானமாதலால் சிவன்முத்தர் சிவமே கண்டிருப்பர்" என்றுசிவஞானசித்திகூறுதலானும்,சிவஞானியரான பிள்ளையவர்கள் தம்பாலிகழுஞ் செயலனைத்தையும் ஈசன்செயலாக வுரைத்தனர் அதனால் சைவசித்தாந்தத்திற் கிழுக்கின்மையி னியருரை வெற்றுரையென்க.

## வேதசிவாகமங்களின் முடியிலே இராமலிங்கர்பாட்டு ஏறியிருக்கின்றதாம். என்றதன் மறுப்பு.

வேதசிவாகமங்களின்முடியிலே இராமலிங்கர் பாட்டு ஏறி இருக்கின்றதாம். என்ற தலைப்பின் பலபல தூடணைகளையமைத்து இவ்வித ஆபாசப்பாட்டுக்களை யாங்காங்கு உளறிவைத்திருக்கும் மடமைகளை யறியாது சிற்சில பாட்டுக்களைப் படித்துவிட்டு இராமலிங்கரை வியக்கின்றார் சிலமூடர் என்றுகூறிய விவேகியார் "பலர்பால் பகலிரவும்படித்த சமய சாத்திரமும்" என்ற வடிமுதலிய பாடலடியைக் காட்டினர். அதனில் இவர் இகழ்ந்து கூறுமாறு இன்மையின் இவருரைவெற்றுரையேயாம். அமையங்கூறலென்னும் பெயரின் கீழ்க்காணப்பட்டபதிகத்தின் எட்டாவதுசெய்யுளிலுள்ள வடிகளே யிவர்காட்டியவடிகள் இவர்காட்டியவளவினும் இவர்கூறும் நிந்தனையதனிலின்மையைஅக்கவியைப்படிப்போரனைவருமறிவர். பலர்பாற் பகலிரவும்படித்த சமயசாத்திரமும் பலராற்செய்த தோத்திரமும் விரவிக் களித்து நாத்தடிக்கவிளம்பி விரித்த பாட்டெல்லாம் வேதாகமத்தின் முடி

மீது விளங்குந் திருப்பாட்டாயினவே, கரவொன்றறியாப் பெருங்கருணைக் கடவுளிதுநின்றய விதனைக்கருதுந் தொறுமென் கருத்தலர்ந்து சுகமேமய மாய்க்கண்டதுவே.

(இ - ள்.) அடியேன் பலரிடத்து மிரவுபகலாகப்படித்தசமயநூல்களும் பலராற் செய்யப்பெற்ற தோத்திரமுங்கலந்து படித்துமகிழ்ந்து நாவானது தடிப்பேறுமாறு பலமுறையுரைத்துப் பழகி உரைகூறிய வேறுவேறபிப்பிராயங்களையுடைய பாடலனைத்தும், வேதத்தின் முடிவான வேதாந்தமாகவும், ஆகமத்தின் முடிவான சித்தாந்தமாகவுமாயின. இவ்வாருயது வஞ்சகமற்ற பெருங்கருணைக் கடவுளே நினதுகருணையானேயாம். இவ்வரியசமரசநிலையை நினைக்குந்தோறு மெனதுள்ள மகிழ்ந்து ஆனந்தவடிவமேவடிவாக நின்றது (இதுநின்கருணையால் யான்பெற்ற பெருவாழ்விலொன்றென் பதேயாம்.) (எ - று.) இதனில் தமது பாடல்கள் வேதாகமங்களின் முடியிலேறியிருக்கின்றது என்று பிள்ளையவர்கள் கூறினு ரில்லையாகவும் அவர்மீது பழிசுமத்தும் இவரை எவ்வளவுபொதுநிலையுடையரென்னலாம். இல்லாதவைகளை யெழுதுவதனு லென்னையோ பயன்? இதுகாறும் யாமுரைத்தவுரைகள் பிள்ளையவர்கள் வேதாகமங்களின் முடியிலே தம்பாட்டேறியிருக்கின்றாரென்றது தவறென நன்குவிளக்குதலி னிவருரை தவறுரையா யழிந்தமைகாண்க.

### கருங்குழியார்பாடல் கண்ணுதன் முடியணியோ? என்றதன் மறுப்பு.

இராமலிங்கபிள்ளையவர்கள்தமதுபாடல்களைச்சிவபெருமானது திருமுடிக்கண் அணியாக அணியப்பட்டதென்று "புல்லைமுடிக்குமணிகின்றாயென் புன்சொன்மாலையே, புனைந்தென் னுளத்திலிருக்கப் புரிந்தாய் நின்பொற்காலையே" என்ற இச்செய்யுளாற் றெரித்தாரென்றுகூறி நிந்திக்கின்றனர். இவருதாரணமாகக் காட்டிய அப்பாடலடிகளில் சிவபெருமான் தமது பாடலைமுடிமீதணிந்தனர். என்றவர்கூறவில்லையாதலி னிவருரை வெற்றுரையென்க. இவர் காட்டிய பாடலடிகள் எனக்கு முனக்கு மிசைந்த பொருந்தமென்ற கீர்த்தனையிலுளது. இவர் கூறமாட்சேபங்களிற் பெரும்பாலன இக்கீர்த்தனையிலும் பிற கீர்த்தனைகளினு முள்ளனவேயாம்.

பிள்ளையவர்கள்மீ திவர்க்குண்டாகிய பொருமையானது இவரை தவருகவுரைக்க விடுத்தது. "புல்லைமுடிக்கு மணிந்தாய்! என்புன்சொன்மாலையே, புனைந்தென்னுளத்திலிருக்கப் புரிந்தாய் நின்பொற்காலையே"(என்றதன்பொருள்) புல்லினைமுடியின்மீது மணிந்த என்னுண்டவனே! நினது அழகிய திருவடிகளில் எனது இழிந்தசொற்களாலான பாமாலையைத் தரித்து எனதுளத்திலேயே அத்திருவடிகளை இருக்கச்செய்தனை என்பதேயாம். ஆதலின் இவருரை வெற்றுரையென்க. புல்லைமுடிக்க மணிகின்றாயென் புன்சொன்மாலையே. என்றும்பாடமுளது. எந்தப்பாடத்திலும் இவரெண்ணமீதன்கட்பலியாமை காண்க. ஒருவர் பாடற்குரை பாடினவரினபிப்பிராயத்தினை யாலோசித்துப் பொருந்தவுரைத்தா லனைவருநன்று நன்றென்றுதலை யசையாநிற்பர். இப்பூர்வபக்கத்தின ரவ்வாறுசெய்யாமை பரிதபிக்கத்தக்கதே. இவர்காட்டியபாட லெமதுபக்கத்தையே சாதித்து வரம்புமீறுது நிற்றலின் இந்தப் பாகத்திலிவர் வரைந்தன வயனைத்துங் கூர்ம சருமமாயது காண்க.

### பஞ்சகிருத்தியம் பண்ணுவேனென்னும் படிற்றுரை என்றதன் மறுப்பு.

இப்பூர்வபக்கத்தார் இராமலிங்கபிள்ளை பஞ்சகிர்த்தியங்களை இறைவன் றனக்களித்ததாகக் கூறியது தவறெனவும் அவர் சைவசித்தாந்தமெட்டுணையுந் தெரியாதவரெனவும் பஞ்சகிருத்திய முடையவராக இருந்தால் பரபுருடருடன்கூடித் திரிந்த தமது மனைவியையழித்துவிடமுடியாதிருந்த

னரே தம்மை நம்பினோர் அநேகரைக் காவாதுவிட்டனரே. தம்மையிகழ்ந்தார்
பலரைச்சங்கரித்துவிடலாமே. என இகழ்ந்தனர். இராமலிங்கபிள்ளையவர்
கள் கொலைக்குற்றத்துக்காளாகாமல் சாதுவாக இருந்ததியவர்க்கு அவர்பஞ்
சகிருத்தியம் பெறாதவரென்பதை விளக்கிநிற்கின்றது. பிள்ளையவர்கள் தம
திறைவனால் பஞ்சகிர்த்தியம் அளிக்கப்பெற்றதாகவும் அவைகளைத்தாஞ்
செய்வதாகவும்கூறியது உண்மையன்றி பொய்மையன்றாம்.

இப்பூர்வபக்கத்தார் தம்மைச் சித்தாந்தத்தில் நிகரற்றவராக மதித்தல்
மனப்பால் குடித்தலின்பாற்படுமேயன்றி உண்மையெனக்கருத இவர்மொ
ழிகள் இடந்தரக்காணோம். மனைவியைக்கொலைபுரிதலும் பகைவரைக்கொ
லைபுரிதலுந்தானோ பஞ்சகிர்த்தியங்கள்? இவர் உதாரணமாகக் காட்டியபா
டல் "உலகுயிர்த்திரளெல்லாமொளிநெறிபெற்றிட, விலகுமைந்தொழிலை டம்
யான் செயத்தந்தனை"யென்ற பாடலடியே; இவரதபிப்பிராயத்தினை அது
வே மறுக்கின்றதே. உலகின்கணுள்ள உயிர்களனைத்தும் ஞானமார்க்கத்தி
னையடைய விளங்காநின்ற பஞ்சகிர்த்தியங்களை அடியேன் அனுட்டிக்கும்
வண்ணமளித்தருளினீர் என்பதேயாம். எல்லாருந் தாம்பெற்ற இன்பி
னைப் பெறுமாறு தம்மைப்பஞ்சகிர்த்திய முடையவராகச் செய்தனர் என்று
கூறியபாடலானது இப்பூர்வபக்கத்தாரை சைவசித்தாந்த சம்பிரதாயவுண
ர்ச்சி குறைந்தவராக அன்னோரபிப்பிராயத்தால் விளக்குகின்றது. இராமலிங்
கபிள்ளையவர்களின் குருமரபினர் பஞ்சகிர்த்தியத்தினை "அஞ்சுதொழிலா
வதுவேயஞ் சவத்தைகிஞ்சலிலா வஞ்சிடத்துங்கொள்ளி வட்டமாகவே,
பஞ்சவன்னம் வைத்தபடிகம்போன் மாறுதனை மயக்கல் சித்திரக்கூத்தா
கத்தெளி" என்ற கண்ணுடைய வள்ளலுபதேசக் கருத்தையேகொண்டவர்
களாதலின் பிள்ளையவர்களதனை விளக்கமாகக் கூறியிருக்கின்றார்கள். இம்
மரபறியா இப்பூர்வபக்கத்தினர் ஞானநூற் பயிற்சியற்ற புராணிகர்களை
யொப்ப பஞ்சகிர்த்தியமென்பன அவையன்றோ இவையன்றோ எனக்குழ
றுவதனாலென்ன பிரயோசனம்?

சாதுக்களான சற்சைவர்கள் இராமலிங்கபிள்ளை தமக்குப் பஞ்சகிர்த்
தியங் கிடைத்ததென்றும் அவைகளைச் செய்கின்றேனென்றும் கூறியிருத்த
லினவரொரு பொய்யராகவே இருப்பரோ எனச் சந்தேகிக்காமல் இரா
மலிங்கபிள்ளை யுண்மையான சிவஞானியே யென்றுஞ் சைவசித்தாந்தத்
தினின்று மணுத்துணையும் வேறுபட்ட மொழிகளையுரையாத உண்மை
யாளரெனவும் பூர்வபக்கத்தார் சித்தாந்த உணர்ச்சியி னிரம்பாதவர்க
ளென்றுந் தெரிந்துகொள்ள வேண்டிய தவசியமாதலின் பஞ்சகிர்த்தியங்
களை விளக்கமாக்குதற்கு யாங்காட்டிய "அஞ்சுதொழி" லென்ற பா
லின் பொருளினை ஈண்டெழுதுவாம். (சிதம்பரசுவாமிகளுரை) "சிவனது
பஞ்சகிருத்தியங்கள் யாவை யெனின் சாக்கிர முதலிய வஞ்சவத்தைகளு
மாஞ் சுருக்கமில்லாத இவ்வஞ்சவத்தைகளிடத்துங் கொள்ளிவட்டம்போ
லாக வதிசீக்கிரமாக மாறி மாறிவரச் சுழற்றிவைக்கப்பட்ட பஞ்சவன்ன
தின் மயமாம் படிகம்போல நீ சேர்ந்தவத்தையாத தன்வயமாக்கி யிடைய
றாததனை மயக்குதலவனதழகிய திருக்கூத்தாகவறிதி" எ-று. "முப்பத்தா
கருவிகளொடு மான்மா தேகபோகங்களையறிதலிற் சாக்கிரத்தே சிருட்டி
யாயுமிச்சாக்கிரத்திற் புசித்தவாதனை சொப்பனத்துமறிந்துநிற்றலாலிதனை
திதியாயுமிச்சொற்பனம்போற் சிறிது நிழலெழத்தோன்றி மறைத்தலா
சுழுத்தியைச் சங்காரமாயும்பிராணவாயுவியக்கமின்றியொன்றுந் தோன்ற
திருத்தலின் துரியத்தைத் திரோபவமாயும் அதீதம் கருவிகளெதுவுமின்
யாணவவிருளாயிருந்ததாயினு மதனிமித்தமாய் மாயையிற்றனுவாதி கொ
த்தல் இருவினையொப்புவருவித்தல் ஆசாரியமூர்த்தமாய் வந்துபதேசித்த

முதலிய வனுக்கிரகம்பெறுதலி னிவ்வநீதத்தை யநுக்கிரகமாயுங் கூறினர்.”
எ - ம். “கிஞ்சலிலா வென்றவிதப்பால் உடல் தோன்றிகின் றழிவது சிருட்
டிதிசங்காரம். உயிருண்மயக்கமுந் தெளிவும் வருவனதிரோபாவ அநுக்கி
ரகம்” இங்ஙனம் உடலின் மூன்றும் உயிரினிரண்டுமாக வருவனவும் எ-ம்.
ஓர் இந்திரியத்தில் ஆன்மா பிரவேசித்தல் சிருட்டி அதனாலறியும் விடயத்
தை யனுபவித்தல் திதி அஃதெப்போது வருமென்று திகைத்துநிற்றல் சங்
காரம். அப்பொருளின் மயங்குதல் திரோபாவம். அதனைத் தெளிந்துகோ
டல் அனுக்கிரகம் இங்ஙனங்கரணத்தில் வருவனவும் எ - ம். இவை முத
லிய பெத்தத்தில் வரும் பஞ்சகிருத்தியங்களும் முத்தியில் அருள்வடிவமாகு
தல் சிருட்டி. ஆனந்தப்பேறு திதி. இதிலதீதப்படுதல்சங்காரம். ஞாதுருஞா
னஞேயமென்னுமூன்றுந் தோன்றாதிருத்தல் திரோபாவம். இவை நான்கு
மெக்காலமும் விளங்கல் அநுக்கிரகம் ஆகிய விம்முறையே வருவனவுங்கொ
ள்க. எனப் பஞ்சகிருத்தியங்களை ஞானசாரமுடையவர்க்காக வைந்துவித
மாக விளக்கிக் காட்டியிருக்கின்றார்கள். இவ்வித பஞ்சகிர்த்திய விரகசியங்
களையே பிள்ளையவர்கள் இறைவனிடம் பெற்றதாகவுஞ் செய்வதாகவுங்
கூறினர். ஒழிவிலொடுக்க நூலாரின் பரம்பரையினரெல்லாம் பஞ்சகிர்த்தி
யங்களை இவ்வாறு குருமுகத்தாலுணர்ந்தனுட்டித்தல் வழக்கம். அவ்வநுட்
டிப்பில் முதிர்ந்த பிள்ளையவர்களும் அவைகளைத் தாமறிந்தனுபவித்தற்குக்
கருணைசெய்த இறைவனைச் சுட்டிப் புகழ்ந்து துதித்திருக்கின்றனர். இவ்
வுண்மையறியாத பூர்வபக்கத்தார் நிந்தைகூறுவதிற் பயனின்மைகாண்க.
முத்தான்மாக்களுக்குரிய பஞ்சகிர்த்தியமே பிள்ளையவர்கள் கூறிய பஞ்சகி
ருத்தியங்களாதலினிவருரை சித்தாந்த வரம்பிற்கு விரோதமான தவறுரை
யாயதுகாண்க. இதனிடையில் சங்கிராந்தவாத சிவசமவாதங்களை இகழ்ந்த
னர். அந்தோ! சிவ சிவ? சங்கிராந்தவாதியும் சிவசமவாதியும் சிவபெரு
மானையே பரம்பொருளாகக்கொண்டுநிற்பவர்களெனவும்வேதாகமங்களைப்
பிரமாணமாகக் கொண்டவர்களெனவும் இவ்வழியிலிவ்வுலகினின்றவர்கள்
அகோர சிவாசாரியார் முதலிய பெரியோரெனவும் இச்சிவசமவாதாதி அநு
ட்டிப்புடைய பல சைவாதீனங்கள் (மடங்கள்) இன்று மித்தமிழ்நாட்டிலு
ளவெனவு மிவர் கருதாது சங்கிராந்தவாத சிவசமவாதங்களைப் புறம்பழித்
துக் கூறுதல் நன்றன்றெனக.

## செத்தாரை யெழுப்பும் பாட்டுரை என்றதன் மறுப்பு.

இப்பூர்வபக்கத்தார் இராமலிங்கபிள்ளையவர்களைத் தம்பக்கத்தார் சம
யாசாரியர்களையொப்ப இறந்தவரை யெழுப்பன் முதலிய அற்புதச் செய
ல்களைச் செய்து காட்டுமாறு பன்முறை கேட்டமையினாலேயே அவரதற்கி
சைந்து நின்றாரெனவும் உரைத்தவாறு எழுப்பாதுவிட்டது தவறெனவும்
செத்தவர்களை எழுப்புவதாக வுரைத்து எழுப்பாமையால் கிறித்துவைப்
போல கைம்மையர்க்காகவும் செத்தவர்க்காகவும் இறந்து ஒழிந்தனரென
வும் அவருடலழுகியதனைப் பலர் கண்டுளாரெனவும் பலவாறு நிந்தை
களை நிரப்பி செத்தாரை யெழுப்பாமையாலிவர் அருள் பெற்றவராகார்.
இவர்பாடலருட்பாடலாகாதென்று செத்தவர்களை யெழுப்பித் தருகின்றே
னென்று கூறிப் பிணங்களைப் புதைப்பித்தனரெனவும் அவ்வாறெழுப்பிக்
கொடாமை தவறெனவும் பல தூடணங்களை வரைந்து மகிழுமிப் பூர்வபக்
கத்தார் அருளின் தாரதம்மியத்தினை யறியாதாராதலி னுட்சேபிக்கின்ற
னர். சிவபெருமானிறந்தாரை யெழுப்புமருளினை யளியாமையாலவரெழு
ப்பினாரில்லை. இராமலிங்கபிள்ளை யவர்கள் தாமாக எழுப்பித்தருகின்றேன்
செத்தவர்களை யெனக் கூறாமையினவர்மீது பழி சுமத்துதல் தவறேயாம்.
தடங்கருணைப் பெருங்கடலென அன்பர்களும் வேதாகமங்களுமறை

யும் பார்வதிபாகரும் இவ்வற்புதச் செயலினைத் தம்மைக்கொண்டு நடத்து வாரென்னுந் துணிவினால்துணிவுபற்றி "வருமுன்வந்ததாக்கொள்ளுந்தலைணக்குவழக்கம்.வள்ளல் நீ மகிழ்ந்தருட்சோதி தருமுன்றந்தனையென்றிருக்கின்றேன் றந்தைநீதரல்சத்தியமென்றே." என்று செத்தார் எழுந்திறத்து மற்றையவைகளினு முரைத்தனர் செத்தவர்களை எழுப்பவேண்டிய கடமை சிவபெருமானதேயாம். மகாப் பிரபுவான பரமேசுவரன் எதைக் கருதியோ அவ்வாறுசெய்திலர். சமயாசாரியர் முதலிய எவரும்இறந்தாரை யெழுப்புந்திறமுடையரன்றென்றும்;சகலகர்த்துருத்துவங்களையுமுடையதனித்தலைமைப் பரம்பொருளே இஷ்டம்போல எல்லாஞ்செய்ய வல்லவரெனவும் முன்னரே எழுதி மறுத்திருத்தலினீண்டு விரிப்பதனாவசியம். இறைவனையிரந்த விச்செயற் கிறைவனியவரை யிவ்விழி தொழில்லிறக்கி மாயாமோகிதராக்கி வையாது உண்மை ஞான நிலையில் நிற்குமாறே செய்து அவர் செய்ததவ வலத்தாலாதலின் விவேகிகள் இப்பூர்வபக்கத்தார் மொழிகளை பொருட்படுத்தாரென்க. இறந்தவரெல்லாமெழுந்திட வென்பதாதியா விவர்காட்டிய பாடலினைத் துணிவுபற்றி யுரைத்தனவாதலி னவையின்வண்ணம் பார்க்கினும் செத்தாரை யெழுப்பவேண்டியவர் சிவபெருமானே யாகின்றனர். சிவபெருமானெழுப்பாதநற்கவரை யிகழவேண்டிய இவர் எய்தவினை நோவாம லம்பைநோவாரையொப்ப இராமலிங்க பிள்ளையவர்களை இகழுதல் தவறென்க.

நமதுநாட்டில்எத்தனையோ அடியவர்கள்பிள்ளைவேண்டுமெனவும்செல்வம்வேண்டுமெனவும்,நோய்தீரவேண்டுமெனவும்சிவபெருமானைக்குறித்துத் தவஞ்செய்து தமதெண்ணம் விரைவினிறை வேறுதயர்களாக விருக்கின்றார்கள். கூற்றுயினவாரென்னுந் தமிழ்வேத பாராயணஞ்செய்து பலர் குன்மநோயினின்றும் சூலைநோயினின்றும் விடுபட்டிருத்தலையும் சிவபெருமானிடத்ததிக வன்புள்ள வொருவர் அவ்வாறு செய்தும் குன்மநோய் தீராதிருத்தலும் யாமறிவேம். இவை இரண்டுவிதமும் உடையவர்களில் நோய் நீங்கியவர்கள் உயர்ந்தவர்களும் நோயுடையோ ரிழிந்தவருமல்லர். எந்த அபிப்பிராயத்தினாலோ இறைவன் றிருவுளமவ்வா றிருக்கின்றதென்றன்றி வேறுவிதமாக விவேகிகளெண்ணார். அவ்வாறே இராமலிங்கபிள்ளையவர்களின் சங்கற்பத்திலுமென்றறிக. அவர் நாம் இறந்தாரை யெழுப்புவோமென வெங்கு முரையாமையால் அவர்க்கதனை விழுக்கின்றென்க.

### பிணங்களைப் புதைப்பித்த பெரும்பாவம் என்றதன் மறுப்பு.

பிள்ளையவர்கள் பிணங்களைப் புதைக்கச் சொன்னது பாவமென முன்னரிவருரைத்த விடத்து,அச்செயல்பாவமாகாமையைத்திருமந்திரவுதாரணங் கூறிமறுத்திருத்தலி னீண்டதனைக் குறித்தெழுதுவ தனுசிதமே யாமாயினும் இப்பூர்வபக்கத்தாரின் சைவநூலாராய்ச்சியைக் குறித்துப்பின்னுமிந்த விஷயத்திற் சிறிது ஆராய்வாம். சைவாகமங்கள் புதைக்கும் விதியையும் விதித்திருக்கவும் புதைத்தற்கு விதிக்கவில்லையெனத் தவறுரைத்து இராவணன் தாரகன் சிங்கன் முதலியோரிறந்த காலத்துப் புதைக்கப்படாமல் சுட்டனரெனவும் சூரியோதனாதிகளை யவ்வாறே சுட்டனரெனவும்ஆதலிற் றகனஞ் சிறப்பெனவும் எழுதியிருக்கின்றனர். நமது நண்பர் காட்டிய மூவருமுத்தம புருடர்களுமுத்தமச் செயலுமுடையயர்களே. இவர்காட்டிய அரக்கர் இராக்கதர் அசுரர் என்னற்குரிய துட்டர்கள் போர்க்களத்தில் வெட்டுக்குத்து முதையுமடியு மிடியும்பட்டு அங்கவைகல்லியமடைந்து மாண்டவர்கள். பாவச்செயலுள்ள இராவணாதிகளை யொத்தவர்களை யன்றே பிள்ளையவர்க ளுரைத்தது. சதாசாரமுள்ள உத்தமரையன்றே? இறந்தவர்களைப் புதைப்பதனால் தீட்டுடையவர்களெனக் கருதப்படுவோர் சைவசாமான்னியர்களான கிரியாகாண்ட ஏகதேசிகளே யாவர். பிள்ளையவர்களுரைத

த்து ஞானகாண்டிகளைச சுட்டியேயாம். யானைக்கும் யாட்டிற்கும் உள்ள வித்தியாசம் புதைத்தலுஞ் சுடுதலுமாகிய இந்தவிஷயத்திற்கில்லாமலில்லை. சைவருள் வீரசைவர் புதைக்குமியல்பினரென்பதனையும் சைவகுரவர்களான மடாதிபதிகள் புதைபடலுடைய ரென்பதனையும் அந்தணருளுயர்ந்த துரியாசிரமிகளு மேலை ஏகாசியருள்ளுந் துறவிகள் ஞானசாரமுடையோரும் புதைக்குமியல்பின ரென்பதனையும் நமதநண்பர்விசாரித்தறிந்து சுடுவதினிலும்பிணங்களைப்புதைத்தல்விசேஷமானதெனக் கருதியடங்குவாராக.

### சாகாவரம்பெற்றேனென்ற சுழிந்த எழுதுதன் மறுப்பு.

பிள்ளையவர்கள்பாடிய "சாகாதவரங்கொடுத்துத் தனக்கடிமைப்பணித்தான்" என்பதாதி சிலபாட லடிகளைக் காட்டி அசுவத்தாமாதிகளை யொப்பப்பிரகாலத்தவர்கள் நீரேகுமாறு இவ்வாறு பொய்கூறுகின்றனர் எனக் குழறியிகழுகின்றனர்.

உடலம்பிறந்தபடியே இருக்கின்றனரென அசுவத்தாமனையும் அநுமானையும் மார்க்கண்டேயனையும் இவ்வுலகிற் பூசிப்போரெவருமில்லையாகவும் பிள்ளையவர்கள் சாகாவரம்பெற்றேனென்றது அவர்களை யொப்பப் பூசைபெறுதற்கு என்றல்லவோ எனம பொருந்தும. சாகமாட்டேன். சாகமாட்டேன் என்று சொல்லிச்சத்தமிட்ட இராமலிங்கபிள்ளைபாட்டுகள் மருட்பாவென்பதிற் றடையொன்றின்றே. என்று கூறியிருக்கின்றனர்.

பிறத்தலுமிறத்தலும் பெருந்துன்பமெனக் கண்டாரன்றே பிறவியையறுத்து ஞானாசாரியனைத்தேடி ஞானம்பெற்று பிறவியொழிந்தவரானோ. "அடியோமுக்கருள் புரிந்து பின்னைப்பிறவியறுக்க நெறிதந்த பிததற்குப் பல்லாண்டு கூறுதுமே. எ - ம். "பெருமையிற் சிறுமைபெண்ணோடாணுயென் பிறப்பிறப்பறுத்தபேரொளியே. எ - ம். 'மற்றொருபிறவியிற் பிறந்து பொய்க்கெடாவண்ணம் காததெனக்கருளேபுரியவல்லர் எ-ம். ஒன்பதாந்திருமுறையுள சேந்தனார் கருவூர்த்தேவர் மாளிகைத்தேவர் முதலிய ஆன்றோர்கள் கூறியவைசாகாவரம்பெற்ற சழக்கினதன்றே? ஒருவன்பிறத்தலில்லாமையை யடையவேண்டுமானால் இறத்தலில்லாமையை யுடையவனாதல்வேண்டும். "பின்னைப்பிறவியறுக்க நெறிதந்தபித்தன். என்பதற்கினிப்பிறவா மார்க்கமளித்த பித்தனென்றே பொருள். இனிப்பிறவாமை வேண்டுமானால் சாகாமலிருத்தல்வேண்டும். என்பிறப்பறுத்தபேரொளி" என்றால் எனது சனனத்தினைக் கெடுத்த பெருஞ்சோதி. என்றுபொருள். இறப்பற்றாலன்றோ பிறப்பறும் - மற்றொருபிறவியிற்பிறந்து போய்க்கெடாவண்ணம். என்றாலினி யொருபிறப்பன்றோ இனியொருபிறப்புறாதிருத்தல்வேண்டுமாயினிப்பிறப்புக்கெடாதிருக்கவேண்டாவோ? ஒன்பதாந் திருமுறைகாரர் கூறிய பிறப்பறுத லாதியவைகளையே பிள்ளையவர்கள் விளக்கமாக சாகாவரம்பெற்றேனெனக்கூறினா. ஞானானுபவமெய்தினோ இனியொரு தேகமெய்தாதாரு மிந்தேகத்தினை சோதனையிற் கழித்தோரும் பிரணவதேகதாரணருமாதலி னவர்க்குச்சாவின்மையுண்மையி னிவருரை வெற்றுரையென்க.

பொருமைகாரணமாக வைணவர் "நீருடிதான்காணமாட்டாததாமரைக் கலசசேவடியை, யான்காணவல்லேற்கிது" என்றுசிவபெருமானால் காண்டற்கருமையான காலுடையன் நாராயணன்எனஎழுதியவைதிருத்தலும், சம்பந்தப்பெருமான் கையிலிருந்தவேலினை ஓராழ்வான் பிடுங்கிக் கொண்டானென்று கதைகளைந்துவைத்திருத்தலுமபோல்வதுமேபிள்ளையவர்களுடலமழுகிப்போயதனைக்கண்டதுவு மாதலினிதனை யொருபொருட் படுத்தாயென்க. "பொய்யாமுடல் பொருளாவியை வாங்கியுன் பொன்னருளான், மெய்யாமுடல் பொருளாவியு மீந்தவிரகையுன்னிப், பொய்யாமொழிகொடேன் 'பாசாம்புயத்தினைப் போற்றியன்பாங், கையாலுனைத் தொழக்கண்டு

கொண்டேன் கச்சியேகம்பனே. என இராமலிங்கப்பிள்ளையவர்கட் கெத்தனையோவருடகாலங்களுக்குமுன்னரிவ்வுலகில் விளங்கிய சிவஞானவள்ளலார். தாம் மெய்யாமுடல் பொருளாவிகளைப் பெற்றாராகக் கூறியிருக்கின்றனர். இவ்வாறு பெற்றதனையன்றோ சாகாவரம்பெறுதலென அறிஞர் கூறுவரதனையன்றோ பிள்ளையவர்க ளுரைத்தார்கள். இவ்வுண்மையறியாத பூர்வபக்கத்தார் சைவசம்பிரதாயமுணராத அன்னியமதத்தினர் கூறுமாறு மரபறியாது கூறுதல் தவறென்க. சாகாவரம்பெறலாகுந் சந்ததமுமென்ற குகநமசிவாயதேவரை, இவருன்றியாராயர் திருநால் சாகாவரத்தினர்க்கு அசுவத்தாமாதிகளான மூவரைச்சான்று கூறார். ஞானானுபட்டானநகைவந்தார் சாவாதாரும் மற்றையோர் சாவாருமென்பதனை யறிந்தடங்குவாராக.

சிவோபாசனையால் சிவனருள்பெற நிர்ப்பாரிடை சிகழுந்தேகேந்திரியகரண வியாபாரங்களின் சிட்டைசட்டைகளனைத்தருந்சிவபெருமானே நடத்துத லுண்மையின் சிவோபாசனை முதிர்ச்சியுடையஇராமலிங்க பிள்ளையவர்கள் சிவபெருமான் தமக்குபகரித்ததாக வுரைக்கு மொய்மொரு விடையமுமுண்மையேயன்றி பொய்யாகாது. எட்டிச்சுரைக்காய் கறிக்காகா தென்றபடி நூலளவினிற்கு மிப்பூர்வ பக்கத்தினர் இவ்வும் பகலுங்கைதலநானைபோல சிவத்தியானத்தி லிருந்தவரும் மனவு முதலியவைகளைக் குறைந்தளவில் வைத்திருந்தமையால் தூர்பல சரீர முடையவருமான பிள்ளையவர்கள் சிவகங்கையில் தவறி விழுந்த காலத்து அடைமுதலிய தனையாமற் சிவபெருமானெடுத்துவிட்டனரென்றமையாலுமவர் கையில் கங்கணமணிந்தமையாலும்இவரதுமதத்திற்குத்தாழ்வொன்றுமில்லையே? இத்தகையஅற்பகாரியசித்திகளையுடையார்சைவருளனேக ரிருத்தலையிவ ரறியார்போலும். சிவபெருமான் உடுக்கையிழந்தவன் கைபோல இடுக்கணுறுமிடத்து துயரியல்பின ரென்பதனைப் பஞ்சாட்சர மந்திர முதலிய சைவமந்திரங்களைக் கோடிகோடியாகச் செபித்தவரன்றோ வறியர். புத்தகங்களைப் படிப்பதிலேயே காலம்போக்குவோ ரெவ்வாறறியர். சிவபெருமா னிவ்வாறெல்லாஞ் செய்யார் எனக் கருதியவராதலினிவ்வாறுகூறுகின்றார். சிவகங்கையில் விழுந்த ஞான்று ஒருமனிதனே கரையேற்றிவிடினும் பிள்ளையவர்கட் கம்மனிதன் சிவபெருமானன்றி வேறன் றென்பதனை உபாமலிங்க ளங்கீகரிப்பார்கள். இவ்வாறே அவர்க்குச் சிவபெருமான் நடத்திய உபகாரங்க ளனைத்துமென வறிந்தடங்குக. படகிலேறி விழுந்து கன்மேட்டிலேறினரா? என இவர் கேட்பது "ஆறுதெருவி லகப்பட்ட சந்தியிற், சாறுபடுவன நான்கு பனையுள, வேறற்கரியதோ ரேறியிட்டப்பனை, யேறலுற்றேன் கடலேழுங் கண்டேனே" எ-ம். மலைமேன் மழைபெய்ய மான்கன்று தள்ளக், குலைமேலிருந்த கொழுங்கனிவீழ, வுலைமேலிருந்த வுறுப்பெனக் கொல்லன் முலைமேல மிர்தம் பொழிய வைத்தானே. எ-ம். மூங்கிலெழுந்தவேநார் வேம்புண்டு வேம்பினிற்சார்ந்துகிடந்த பனையிலோர் பாம்புண்டு,பாம்பைத்துரந்திட்டு வேம்பைத் தின்பாரின்றி, வேம்புகிடந்து வெடிக்கின்றவாறே. எ-ம். தோணி யொன்றேறித் தொடர்ந்து கடல்புக்கு. வாணிபஞ்செய்து வழங்கி வளர்மக, ளிலிக்கிறையுமே னெற்றி னிலைத்தளர்ந், தாலிப்பழம்போலளிக்கின்றவப்பே. எ-ம். இவை போல்வனவாயும் வருந்திருமந்திரார்த்தங்களையே உட்கொண்டு நிற்கு மதனை யறியாது சாமானியமாக இவர் படகிலேறி விழுந்து கன்மேட்டிலேறினரா? சோறுகண்ட மூளியார் சொல் என விளைவிலைதற்குப் படகிலேறி விழுந்து கன்மேட்டி லிறைவனருளாலேற்றப் பட்டனர் என்றும்;பசித்துக் கிடந்தபொழுதசோறளித்தனனென்றும் சாமானியமான பதில் உரைத்தலே தகுதியாம். இறைவ னிவ்வா றெல்லாஞ்செய்யார் என இவர்பன்னிரு திருமுறைகளாலேனும் வேறுநூல்களாலேனும் உதாரணங் காட்டி மறுத்திருப்பின் [illegible]

யென பன்னிரு திருமுறைகளாலும் பிறநூல்களானும் இவர் கூற்றனைத்தையு மறுத்திருப்பேம்.

### பரதாரகமனம் பாவமாகாதா? என்றதன் மறுப்பு.

இராமலிங்க பிள்ளையவர்களைச் சாமானிய சனங்கள் ஒரு காமசோரர் என நினைக்குமாறு இவர் அவரிட மில்லாதன பலவற்றை உடனிருந்து கண்டவரை யொப்ப வரைந்து அவர் கவுரவத்துக்கு ஆனிதேடுகின்றனர்.

சிலநாளொரு வேளையும் பின்னர் ஒரு வேளையிலு நாளுக்கு நாள் முக்கால் அரை·காலாகவும் ஆகாரங்கொண்டு அதனையு நிறுத்திப் பாலுண்டு குறைத்து அதனையுநிறுக்துத் தூதுளங்கீரையைத்தின்று அதனையுநிறுத்திச் சுத்தசலமருந்தி அதனையு நிறுத்தித்தேனருந்தித் தமது சரீரத்தினை வன்மையற்றதாகச்செய்துவைத்திருந்த இராமலிங்கபிள்ளையவர்கட்குப் பலபெண்களைத்தழுவுமாற்றல் எங்ஙனமுண்டாகும்? உண்டு கொழுத்தவர்களன்றோ காமானுபவத்திற்குரிய ராவர். இராமலிங்க பிள்ளை யுண்டு கொழுத்துத் தடித்தவுடலின ரன்மையின் இவருரையை இவ்வுண்மையறியாதவர்களும் அறிந்தும் சாரசோராதிகளில் விருப்ப முடையவர்களுமே மெய்யென மதிப்பர். ரெட்டிப் பாளையத்திற் சில பெண்களைக் கற்பழித்ததாக எழுதிய நண்பர்களந்த ரெட்டிப் பாளையஞ் சென்றுலந்த வுண்மை வெளிப்படும். ரெட்டிப் பாளைய வாசிகள் இராமலிங்க பிள்ளையவர்களிட மதிக மதிப் புள்ளவர்கள். பெண்ணேயிற் பெரிது மலமந்தாரென்ற பக்கத்தி லெழுதிய விடயங்களே இவையு மாதலி னிவற்றினை மறுத்துக் காலம் போக்குவதிற் பயனின்றென்றும். பரதாரகமனம் பாவமாகாதெனப் பிள்ளையவர் கூறுதிருக்கவும் அவர் பரதாரகமனம் பாவமாகாதெனக் கூறினார்போல இவர்காட்டி மருட்டுதல் தவறென்றுங் காட்டி மறுத்தாமென்க.

### உலகர்வியக்க வுரைத்தவார்த்தைகள் என்றதன் மறுப்பு.

அழகிய வொருதிருவுருவத்துடன் நடராசரெழுந்தருளி திருப்புன்முறுவல்புரிந்து திருநீறுதிய கொடுத்தன ரெனப்பாடியிருத்தல் உலகினரை மருட்டும் பொய்வார்த்தையென்றுணர்க. என உபதேசிக்கின்றார்.

உலகினரை மருட்டுமாறுஉள்ளவைகளை இல்லையெனவும் இல்லாதவைகளையுள்ளனவென்றுங் கூறிப் பேதையுலகினரை மருட்டுவோர் இப்பூர்வபக்கத்தினரேயாவர். இராமலிங்கபிள்ளை தாங்கண்டவைகளையே யுரைத்தனர். நடராசர் அவ்வாறெல்லாம் வருபவரல்லர் என்னு நினைவுடையவராதலினிவர் பிள்ளையவர்கள் கூறியவற்றைப் பொய்யெனக் கூறுகின்றனர்.

சிவபெருமான் தம்மை யுபாசிப்பவர்களிடமவர்கள் தன்மைக்கேற்றவாறு கனவிலு நனவிலும் அந்தணரடியவர் முதலிய வடிவங்களுடனெய்துதலும் நீறு முதலிய வளித்தலும் குறிப்பாகச் சில கூறிச்சேறலுமுண்டெனவறிந்தப் பெருமானை யுபாசிக்கு நற்குடி மக்கள் இப்பூர்வபக்கத்தினருரையை ஒரு பொருட்படுத்தாரென்க. சிவபெருமானவ்வாறு கனவுநனவுகளில் தோன்றி மகிழ்ச்சிதராதவரானல் அவரை நினைத்து மந்திரசெப முதலியன செய்வதனாலென்னை பயன். பிரமசமாசிக்கும் கடவுள் வெளிப்படமாட்டார் எனக் கருது நவீன சைவர்க்கு மென்னையோ வித்தியாசம்.

### பஞ்சமூர்த்திகளும் பேறப்பரிசுற்றராம் என்றதன் மறுப்பு.

பிள்ளையவர்கள் ஐவருங் காண்டற்கரும்பொருளென் கை வரப்புரிந்த கதி சிவகதியே. என்று பாடியிருப்பதனுண்மைப் பொருளினையறிந்து மகிழுமாற்றலின்றிப் பஞ்சமூர்த்திகளும் பெறுப் பரிசுபெற்றார்? என்று வரைந்து பிரமன் விட்டுணு உருத்திரன் மகேசுரன் சதாசிவன் என்பவரின் பெயர்களை வரைந்து இப்பஞ்சமூர்த்திகளின் பெருமையைப்பிள்ளையவர்களறியாதாரெனவும் சித்தாந்தந் தெரிந்தார் இது கேட்பாராயிற் செவியை மூடுவீரோ? காண்பாராயிற்கண்களை மூடி வருந்துவரோ எனத்தமக்குச் சித

தார்த வுணர்ச்சி சாலவிருப்பதாகக் கூறுகின்றார். "மூடுகுவரிருந்துளை வர் மூர்க்கரே எ-ம். சழக்குடையிதனுளைவர் சங்கடம் பலவுஞ்செய்ய எ-ம். குண்டராய்த் திரிதந்தைவர். எ-ம். அயர்விலுலைவர்க்காற்றேன் எ-ம் ஐவர்வந்து முறைமுறை துயரஞ்செய்ய எ-ம். சித்தத்துளைவர்தீயசெய்வி னைபலவுஞ்செய்ய எ-ம். வருந் தமிழ்வேதத்திற்கு இன்னோர் பிரமன் விட் டுணு உருத்திரன் மகேசுரன் சதாசிவனென்று தான் பொருள்கொள்ளுவர் போலும். பளா பளா இவர் கற்ற சித்தாந்தமெய்யளவழகியது. ஐம்புல வுண ர்ச்சிக்கப்பாற் பட்ட அரிய பெரிய பொருளினை எனது கைவசமாக்கிவை த்தகதியான சிவகதியேயென்றுபிள்ளையவர்கூறிய ஐவரென்றதற்குப்பொரு ளாதலினிவருரை சித்தாந்தப் பசையற்ற வெற்றுரையெனக. புலனினரைக் கொண்டுபிள்ளையவர்களை இகழவேக்கவேண்டுமென்று மெண்ணத்தானே இவ்வாறு தகாதனவற்றை வலிந்தெழுதுகின்றன ரிப்பூர்வபக்கத்தாரென விவேகிக ளறியாமலிரார்.

பஞ்சமூர்த்திகளும் பெரும்பரிசு பெற்றதாகப் பிள்ளையவர்களுரைத் திலாதலி னிவருரை வெற்றுரை யெனக.

## சிவதூஷணங்கள் செய்தனர் இராமர் என்றதன் மறுப்பு.

சிவபெருமானது திருவடிக்கீழ் யித்தன்மையதென அத்திருவடியை வியந்துரைத்த வியப்பென்னும் பதிகப்பொருளினை யறிந்தானந்தமுறும் பாக்கியமின்றி அவைகளைத் தவறாகக்கிரகித்து சிவதூஷணம் புரிந்தனர் இராமரென்று கூறினர்.

திருமூலநாயனார். "அண்டங்களேழினுக்கப்புறத்தப்பால், உண்டென்ற சதாசிவத்துச்சிமேற் கண்டற்கரியான் கருணை திருவுருக்கொண்டங்கு மைகாணக்கூத்துகந்தானே. என்று சதாசிவ மஸ்தகத்திற் பரசிவன் நடன ஞ்செய்வதாக உரைத்திருத்தலின் பரசிவ பாதத்தின்கீழ் சதாசிவாதி தேவர் கள்இருப்பதாகப்பெறப்பட்டமையின் அந்நடனசரணயுகளத்தின்பெருமை யினையும் அவைக்குக் கீழுள்ள சதாசிவாதிகளின் உருவச்சிறுமையையும் விளக் கியுரைத்த பாடல்களான "தடையுறுப்பிரமன் விண்டு ருத்திரன் சதாசி வன்திருசசிற்றம்பலத்தாடுங்காற் கடைவிரனசத்தின் கடையுறுதுகளெ ன்றறிந்தனன் என்ற.வ.சிவனைத் துதித்ததாதலின் இவருரையை வெற்றுரை யெனக. (துகள் தூசுபோன்ற சிறுபொருள்)பரசிவந்தினருளிற் சிறிதெய் திமதாசிரியராய் தங்கிலே மறந்து விளையாடும் பிரமனுருத்திரனுதியர் விளை யாடுந் தொழிலாற் சிறுபிள்ளைகளையொத்தவரென்றது நூடணையாகாமை யும்; சிவபெருமானுக்கு மருகபுத்தாதியருக்கு மொருபெயராகவே பயின்று வருதலின் எல்லார் பெயருஞ் சிவபெயர் என்றதிழுக்காமையும்;அனைத்துப் பெயரும் "புனையுநாராயண னரிமுதற் புகலுறுநாமங்கள், வினையிலத்தணீர் காரணவளவினவ் விமலனை யுணர்த்தும்மே. என்றசூதசங்கிதையால் அனை த்து நாமங்களும் காரணங் கருதிய வழி சிவபெருமானையே யடையுமாத லினனைத்துப் பெயருஞ் சிவன்பெயராதலி னிழுக்கின்றென்றும்;ஞானமுடி சூடுதலுஞ் சூட்டுதலுமுளதென்பதனை "ஞானமுடி சூட்டிமுன் மண்டபத்தி ருத்தி எனச் சேக்கிழார் சுவாமிகட்குச் சோழமன்னவன் அழகிய ஞானமுடி சூட்டியதாகக் கூறப்படுதலும்;அவர்திருவுருவம் முண்டிதமாகக் காணப்படுதலும் ஒவ்வொரு ஞானசாரியமாசாரிய பாதமான முடி யையும் அவனாணையானசெங்கோலினையுமுடையவனாக விருத்தலின் முடி யுஞ் செங்கோலும் பெற்றேனென்றதா விழுக்கின்றென்றும் அடியவர் கள் இறைவனைத் துதிக்குங்கால் பெண்பாற் கூற்றாகத் தன்மையினுரை த்தல் வழக்கமாதலிற் பிள்ளையவர் சிவபெருமானைக் கணவரென்றும் மா லையிட்டாரென்றுங் கூறுவனவாதிகளா விழுக்கின்றென்றும்; அதற்கு "வா ரணிவனமுலைமெலியும் வண்ணம் வந்து வந்திவை நம்மை மயக்குமாலோ

எ - ம். ஊனமிலாவென்கை யொளி வளைகள்கொள்வாரே எ - ம் அணி
நீறென்றுமூலக்கணிய எ-ம். அன்னவரே யெங்கணவராவார் எ - ம். கேட்
டாயோ தோழி கிறிசெய்த வாறொருவன்" எ - ம். திருவிசைப்பா தமிழ்
வேத முதலியன கூறியிருத்தல் சான்றாகுமென்றும்; சோதிமாமகுடமெனப்
பிள்ளையவர்களுரைத்தது ஞான மகுடம் எ - ம். அவர் ஞானராசரென்பத
ற்கு அவர்க்குஞான சீடர்கள்எங்குமிகுந்திருத்தலே சான்றென்றும்;இறைவ
னாணையான வேதாகமங்களே அருட்செங்கோலென்றும் "நன்றுகண்டீரி
னிநமச்சிவாயப்பழந், தின்றுகண்டேற்கிது தித்தித்தவாறே." என்ற திருமூ
லநாயனாரை யொட்டிப்பிள்ளையவர்கள் தமக்காசிரியருபதேசித்ததனைப்
பழமென உருவகித்துக் கூறியதனினிமையாற் றமதுயிருங்கரணமுந் தத்
துவங்களு மினித்தனவென்றதில் தத்துவங்களென்பதற்கு அவருடலிற்
பொருந்திய கண் முதலிய தத்துவங்களெனப் பொருள்கொள்ளாது
உலக மனைத்துமெனப் பொருள்கொண்டு பிதற்றுதல் தகுதியன்றென்றும்.
பிள்ளையவர் நெற்றிக்கண் பெற்றேனென்றும் அதனை யழித்தேனென்றும்
எழுப்பினேனென்றுங் கூறியிருத்தல் யோகானுபவ லீலையின்பாற்பட்ட தாத
லின் அவையின் பொருளினைச் சரிவரவறிய முடியாதென்பதனை "வழுத
லைவித்திடப் பாகன் முளைத்தது, புழுதியைத் தோண்டினேன் பூசிபூத்தது,
தொழுது கொண்டோடினார் தோட்டக்குடிகள் முழும்பழுத்தது வாழைக்
கனியே" என்ற திருமந்திரத்தின் பாற்பட்டதாதலின் நெற்றிக்கண்விடயத்
தில்அபார்த்தஞ்செய்தல் தவறென்றும்;சிவபெருமானால்நெற்றிக்கண்கொ
டுப்பித்தெரித் தெழுப்புவித்ததாக சிவபெருமானை முதல்வனாகக் கூறியிரு
த்தலின் இந்தப் பாடலைக் கொண்டேவரும் பிள்ளையவர்களைச் சிவபெருமா
னெனக் கருதார் ஆகலின் பின் வருவோர் மயங்குமாறு கூறினாரென்னல்
தவறென்றும்;நுதற்கண் ணென்பதனை தியான நேத்திரமென்றும் மதனை -
என்றது காமவிடயத்தினை எ-ம். எரித்தல் சோதனையில் நாசமுறுத்தல்
எ-ம். அருவமதனை எழுப்பிக்கொடுத்தல் அக்காமத்தின் வலியைக்கெடுத்து
தம்மால் அடக்கியாளுமாறு செய்தல் எ-ம். விவேகிகள் குறிப்புப்பொருள்
கூறுகின்றதனை யாராயாது பழிகூறியது தவறென்றும்; ஒருமுறையெழுதிய
மாயாவாதத்தினைப் பின்னரு மெழுதுதல் பிட்டபேஷண மென்றும்;திண்
ணையினின்றும் விழுந்த பிள்ளை அடிமையும் சிவபெருமானாண்டானுமாதலின்
அடிமையினாபத்தினை ஆண்டான் நீக்கியதாக உரைத்தது தவறன்றென்றும்;
மூத்தான்மாக்கள் சதாசிவ மஸ்தகத்தி னடிக்குஞ் சரணகத ராதலின்
பிரமாதியர் பெரும்பேறு பெற்றதாக உரைத்தல் தவறன் றென்றும் தாம்
காட்டிய பாடல்களில் பஞ்சமூர்த்திகளு மெனப் பிரம விட்டுணு வுருத்திர
மகேசுர சதாசிவாதிகளாற் பெறப்படாதபதம் பெற்றதாகப் பிள்ளையவர்கள்
கூறுததனைத்தாங் கூறுதல் பிசகென்றும்; தாம் பெற்ற வின்பத்தினைப்
புகழ்ந்து கூறல் தற்போதச் சலிப்பாகாதென்றும்;புறப்புணர்ச்சி யென்பது
இணை விழைச்சன்று உள்ளிலும் புறத்திலுஞ் சிவபெருமானைப் புணர்ந்தனு
பவித்தலேயது பொல்லா மணியைப் புணர்ந்தே என்று தமிழ்வேதமும்,
" தருமுணர்வு புசிப்புமது தானே யாகு மெய்ப்பொருளு மசைவில்லையென
வந்தப் பொருளோ டிசைவதுவே சிவபோகமெனு மிறைவன் மொழியே.
என உண்மை விளக்கத்தும், "மலர் மணப்புங்க நேயத்தழுந்துதல் போக
மென்றறையு நூலே. என்று பசுபதிபாச விளக்கத்தும் கேட்கப்படுதலின்
அகப்புணர்ச்சியை யங்கீகரிப்போர் புறப்புணர்ச்சியையும் அங்கீகரித்தே
தீரவேண்டுமென்றும்; தம்மைப் பெண்பாற் படுத்தி யுரைத்தது உருவகமே
யென்றும்; இராமலிங்க பிள்ளை ஆண்மகனாதலின் மடவாரை யொப்பக்
கூறார் என்றும். புணர்ச்சி யென்பதற்குச் சேர்க்கையென்று பொருளிருத்
தலின் புறத்திற் சிவனைக்கூடி யனுபவித்தலே புறப்புணர்ச்சி யென்றும்;

ஒருவரனுபவத்தினை ஆராயப்புகு மற்றொருவர் அவ்வித அநுபவத்திற் றேர்ந்தவராக இருத்தல்வேண்டும் நாமோ சைவசமயத்தினின்றாலும் இராமலிங்கபிள்ளையை யொப்ப நிட்டைமுதலிய எந்த சன்மார்க்கவநுட்டானமுமின்றி நூலளவிற்றானே நிற்கின்றோம் இங்ஙனநிற்கு நாம் இந்திரியவசித்துவமுடைய அன்னவரனுபவத்தினை ஆராய்தல் தவறாமென்று கருதாது அநுபவநிலை யாராய்வான் புகுந்து மணிவாசகனார் முதலியோ ரனுபவநிலையுமைத்திருத்தலிற் கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர் என்பதனை யிங்குபயோகப் படுத்துதல், திருவாசகத்துக் கோயின்மூத்த திருப்பதிகம் அநுபவவிலக்கணங் கூறுவதாதலின் அதனை இகழ்ந்த தாமென்றும்; திருமந்திரத்து அவனுமவனு மவனன்றியில்லை எ-ம். சிவனார் சிவஞானையறிந்தபின் சிவனார் சிவனுயிட்டிருப்பரே. எ-ம் சிவனெனச் சிவனென விரண்டில்லை. எ-ம். ஆகிய சிவன் பரன் சிவனுமே. எ-ம். எல்லாமறிந்த விறைவனை நானென்னி லெல்லாமறிந்த விறையெனலாமே. ஆதிக்கட்டையவ வனிவனுமே எ-ம். தற்பரஞானஞானந் தானவனாமே. எ-ம். பின். நானுமழிந்தமை நானறியேனே. எ-ம். கடவுளு நானுமொன்றானேன். எ-ம். சுத்தசிவமாவரே சுத்தசைவர் எ-ம். சன்மார்க்கந் தானவனாகுஞ்சன்மார்க்கமே. எ-ம் திருமூலர் தானவனாதலும். அவன்றானாதலும் ஆதியவாகவத்துவித முறைத்திருத்தலின் நமது வேதவாத சித்தாந்தக் குழறுபடையை இங்கெழுதில் வேதாகமோக்த சைவசித்தாந்தத்திற்கு மாறுமெனக்கருதாது, நானவனாதலும் அவன் நானாதலு மெக்காலத்து மின்றென்று கூறுவதனால் திருவாசக திருமந்திரமுடையோர்களை மறுத்ததாமெனவும், 'அஹமேவபரம் பிரம்ஹஜகன் நாதோ மஹேசவர: - என்று தேவிகாலோத்தராகமத்துக் கேட்கப் படுதலின் நான் அவனாதலும், அவன் நானாதலு மெக்காலத்து மின்றென்று கூறுதல் வேதாகமங்களையுஞ் சிவனையு மாகுமென்றுங் கருதாது, அனுபவநிலையை யாராய்ந்ததாக அனுபவவிருத்தாங்கூறுதல் இகழ்ச்சிக்கே யிடமாய வெற்றுரையென்றும்.

சகலரான பஞ்சமலமிருத்தலினைத்துயிர்க்கும்பஞ்சமலக்கொத்திருத்த லுண்மையேயாம். "தாமருந்தல்போலத்தமைச்சிவனுக்கூணாக்கித், தாமருளாலுண்பவரைத்தாமாகித், தாமழிய, வஞ்செழுத்தாலர்ச்சித் தடியார்க்கடிமை செயிற், பஞ்சமலக்கொத்தறுமப்பா. என்றகண்ணுடையவள்ளலுபதேசவழியில்சதாசிவானுபவத்திலிருப்பவராதலிற்பிள்ளையவர்களிடமிருந் தப்பஞ்சமலங்கள் வீறற்றழியுமென்றும் மலமோசனத்துக்குரிய எந்தச்சிறிய சடங்கிலும்புகாத பிறர் பிள்ளையவர்கட் கிணையாதல் எட்டி கற்பகத்திற்கிணையாதலையேயொக்குமாதலிலெம்போல்வாரை யொப்பச் சாமானியர் என்றது தவறென்றும்; தம்மனத்தின்கண் கணங்கள்தோறும் நிகழுமவைகளை பாடல்களின் வழித்தாகவெளியிட் டுண்மையாளரென வுலகறியநின்ற பிள்ளையவர்களைக் கோடைகாலத்துக் கூர்மாண்ட பலத்தையொப்ப விபூதியால் வெளுப்பித்துப் பொய்பேசுபவரையொப்பக்கருதிப்பொய்கூறினரென்னல் பொருந்தாதென்றும்; மஞ்சக்குப்ப முதலிய இடங்களிலுள்ள சைவ வேளாளராதியரின்றும் பிள்ளையவர்களிட மன்புடையராக விருத்தலின் வேளாளதூஷணஞ்செய்தாரென்றேமேல் நம்மை அனைவரும் பொய்யரென்பர். நாங்காட்டும் பாடலிலொன்று தாம் வளர்த்ததோர் நச்சுமாமரமாயினுங்கொலார். என்ற தமிழ்வேதப்பொருளினையுடையது. மற்றொன்று அசைவரைக் குறிக்கின்றது. அது "பேயின்விழுவுந்தும் புலாலுண்ணும் விநந்துக்கு மென்று கூறப்படுதாலும் சுற்றில் என்னேஎன்னே என இரக்கங்காட்டி யிருத்தலாலும் பொய் பேசினரென்னு மிதுபலிக்காதெனச் சும்மாவிருப்பதை விட்டுச் சாதிவழக்கிற் றலையிடாத பிள்ளையவர்களைச் சாதிதூடணம் புரிந்தாரென்பது தவறென்றும்; எல்லாச்சுதந்திரமு

முடையோன் பரசிவனே எ-ம். அவனிடைப்பெற்றோ னசுதந்தரனெ
ன்றுமறியாதனும் நீரிற்கலந்தபால் போலிறைவன் றன்னிற்கலந்து நின்
றியக்கலே நடனமென்றதனாற் குறைவின்றென்றும் ஞானநீதியெனு
நிருத்தமாவது இறைவனிடைப் பெற்றஞானநீதியை அனுட்டித்து நிற்
றலேயாதலினவ்வாறு கூறுவதலிலேலேற்றம் பரசிவற்கன்றிப்பிள்ளையவர்கட்
கில்லையென்றும் நீயோநானோ என்ற வசனமதனை விளக்குகின்றதென்றும்
முன்னும்பின்னுமுள்ள வபிப்பிராயங்களையாரா யாதுகூறி னறிஞர் எள்ளு
வரென்றும்; அன்பின்மேலீட்டாலிறைவனை யுரைப்போர் தேனேகரும்பே
அப்பா அம்மா கணவா தந்தையே எனப்பலவாறு மதிப்பும் விருப்புமுறு
பொருள்களாகவுரைத்தலி னிழுக்கின்றென்றும் சைவசமயத்தொருவனே
அடிமைமகன் றோழன் தானென்னும் நான்குநிலையினனாகப் பக்குவத்திற்
குஞ் செயற்குமேற்றவாறு நிற்றற்குரியனாதலின் மனைவியெனவும் மகனெ
னவு முரைத்ததுமாறி யுரைத்ததாகாதென்றும் பான்மறந்தபருவமும் தெ
ருவில் விளையாடும்பருவமும் ஒன்பதாட்டைப்பருவமும் பன்னீராட்டைப்ப
ருவமும்பிறபருவமுமாகிய வெல்லாக்காலங்களிலும்இறைவனேல்மாறிமாறித்
தரிசனங்கொடுக்கத்தரிசிக்கப்புண்ணியஞ்செய்தமையிற் கூறியதேயாம். இத
னைமறுத்தால் தியானயோகசமாதிகளான சத்காரியங்களிற் பழக்கமில்லா
ரெனவும் ஒவ்வொருவர் பாடல்களிலு மிவ்வாறு முன்னுக்குப்பின் முரண்
காணப்படுதலின் இவரைக் குறைகூறுதல் தவறென்றும்; சென்னையிற் சிதம்
பராலயம் அருணாசலேசாலயம் ஏகாம்பரேசாலயம் கச்சபேசாலயம் மல்
லிகார்ச்சுனநாதாலயம் விசுவநாதாலய முதலிய இருப்பதும் அவைகளிற்
சிவபெருமான் எழுந்தருளி இருந்து அன்பரன்பிற்கேற்றவா றனுக்கிரகஞ்
செய்தலும் உண்மையாதலின் இவ்வாலயங்களை உண்டாக்கினவர்களைப்
புண்ணியரென உலகினர்கூறுதலையன்றி அருணாசலம காஞ்சியாதி தலங்க
ளைத் துடணைபுரிந்ததாகக் கூறாமையும் போலவே பிள்ளையவர்களும் அன்
பின்மிகுதியால் சிதம்பரக்ஷேத்திரத்திரத்திற் குத்தரபாகத்திலுள்ள வடலூ
ரிற்றாமேற்படுத்திய சிவாலயத்திற்கு உத்தரஞான சிதம்பரமெனப் பெய
ரிட்டனர். சிதம்பர தலத்தினை ஏதாங்கினைக்க விருப்ப முள்ளவராதலி
லத்தலத்திற்குஅவ்வாறுபெயரிட்டனர் எ-ம். அசுரனாகியவாணசுரனுடைய
கோட்டைவாசலி லவனன்பை விரும்பிச்சென்றிருந்த சிவபெருமான் சிதம்
பரத்திற்கருகிலுள்ள வடலூர்ச்சுடுகாட்டிலேனும் வீட்டிலேனும் கோவிலி
லேனும் வருவாரென்று துணிவுகொண்டார்க்கு வருவாராதலின் நமதாட்
சேபந்துராட்சேபமா மென்றும்; நடராசர் சிதம்பரட்சேத்திரத்திலேவிருப்
பமுடையவரென்று "இங்குமங்கு நடமாடியிருக்கலா மென்றபோது என்
றபிள்ளையின் வாக்கியமே விளக்குதலின் வேறுசிதம்பரங்கட்டுதல்தெட்சண
சிதம்பரத்தின்மீது பகையாலன்று அன்பாலென்றும்; மணிவாசகனார் உரிப்
பிச்சன் தோலுடைப்பிச்சன் நஞ்சுண்பிச்சன் ஊர்ச்சுடுகாட்டெரிப்பிச்சன்
என்றவை. துதியாமாறேஅன்பரார்வங்கொண்டுரைப்பனவு மெனவும் ஒல்
காப்பல்புகழ்த் தொல்காப்பியமாதச் சுவாகனமேறி யித்தமிழுலகிலுலவு
தற்கு முன்னரிந்தப் பெரும்புலவரனைவரும் தொல்காப்பியமுதலியவைகளி
லருகி வழங்கும் விதிகளை எளிதிலுணர்த்தா மாற்றலினைப் பூர்வவாசனாபலத்
தாலுணர்ந்துள்ளவரெனக் கொண்டாடப்படு மதுரகவிவல்ல, பிள்ளையவர்
களின் பாடல்களுக்குக் குற்றமுரைக்க வேண்டுமென வருந்தியெடுத்துக்கூ
றும் விடயங்களை அவர்பக்கத்தார் எளிதில் மறுத்துவிடுவார்களென்றுங்கரு
தாது இப்பூர்வபக்கத்தார் சிறுபிள்ளை பயமறியாதென்பதற் கிணங்கவாளா
வரைந்த வுரையனைத்தும் வெற்றுரையா யழிந்தமைகாண்க இதுகாறுநாமெ
டுத்துரைத்த நியாயங்களால் இராமலிங்கபிள்ளை பாடல் ஆபாசதர்ப்பணத்
தின் ககஎ,ம் பக்கம் வரையு மழிந்தொழிந்தமை காண்க.

### மருட்பாக்களின் வழுத்தொகுதி என்றதன் மறுப்பு.

இலக்கணத்திற்குஞ் சித்தாந்தத்திற்குந் திருவருணெறிக்கும் ஆன்றோராசாரத்திற்கும் அணுவளவும் வேறுபாடற்ற பாடல்களுக்குள் வழுக்களுளவென்றும் அவையிற்றுட் சிலவற்றை இதுகாறுமில்லாத போலியருட்பா வழுத்திரட்டிற் காட்டப்பட்டனவென்றும் அதனுட் காட்டப்படாதெஞ்சியவற்றுட் சிறிதே மீண்டு தெரிப்பாமென்றுங்கூறி வழுவல்லாதனவற்றையே வழுவெனக் காட்டத்துணிந்த இப்பூர்வபக்கத்தாரின் சொற்களை இவ்விஷயத்தி லுண்மையானவையாகக் கற்றோரெவருமதியாரென்க. சுருக்கச் சொல்லன் முதலிய பத்தழகுமுடையதாய் வினையினீங்கி விளங்கியவறிவின் முனைவன் கண்ட முதனூலான வேதசிவாகமங்களி னெல்லைக்குட்பட்டதாய் பத்தியும் யோகமும் ஞானமும் விரவிக் கிடப்பதாய் எல்லாரானுமெளிதிலறியத்தக்க உலகவழக்கச் சொற்களைப் பெரும்பாலுமுடையதாய் எத்தகைப் புறமதத்தினருமினியதென்பதாய், சைவசமயிகளி னுள்ளத்தினை யழுத்தப்படுமெண்ணெய்ப் பாவையொப்ப வம்பலவாணன் றிறத்திளகி நிற்பச்செய்வதாய் மதுரகவியான் மலிந்த பாடற்றிரட்டினைக் குறைகூறுவான் வந்த விவர்கள், குணங்களையே குற்றமாகக் காட்டினமையை விவேகிகளறிவார்கள். இவர் அவற்றுட் சிலவற்றை விளக்குமாற்றானே யெடுத்து விளக்கிக் காட்டுதுமென்றார்.

இங்கு விளக்குமாற்றினை யின்னதென வெழுத மறந்தனரோ? அல்லது அதனை யனைவருமறிவரென்று சும்மாவிட்டனரோ அறிகிலேம். இவர் நெஞ்சமும் வாயுங் கையும் இவ்விடயத்தி லுழைப்புடையனவாதலை யிவர் மறந்து தமது நெஞ்சினையும் புத்தியையும் விளக்குமாற்றுக்குத் துணைநின்ற பிறவுறுப்புக்களையுமிகழ்ந்தவராதலை மறந்தனர்போலும். குற்றங்கூறுவான் புகுமிவர்மொழிகளே குற்றமுடையனவாயின் இவர் காட்டிய குற்றமெத்துணை நண்ணியவாயிருக்குமென்பதனை விவேகிகள் ஊகியாமலிரார். பிள்ளையவர்கள் தமக்குத் திருவருட்பிரகாசவள்ளலென்றும் தம் பாடல்களுக்குத் திருவருட்பா என்றும பெயர் வையாதிருந்தா லிப்பூர்வபக்கத்தார் குறைகூறவரேமென வுரைத்தலின் பிள்ளையவர்கள் பாடல்களில் உண்மையிற் குற்றங்களிலவென்பதை இவரு மங்கீகரித்தவராகின்றார்.

### முதலாம்பாக்க மறுப்பு.

பிள்ளையவர்கள் உலகெலாமுங்கின்ற என்ற பாடலை முதலிற் பாடினரென்றும் ஆறுமுகப் பெருங்கருணையென்னும் பாடலை முதலிற் பாடினரென்றுங் கூறுவோர் பிள்ளையவர்களன்மையாலும் பிள்ளையவர்களின் பாடல்களைத் திரட்டியவர்கள் உசிதம்போல முன்னும் பின்னுமாக வைத்துமுறை வகுத்துக்கொண்டதிலுள்ள குற்றங்கள் பிள்ளையவர்களதாகாதாதலின் தொழுவூர் முதலியாருஞ் சரித்திரசங்கிரகமுடையாருஞ் செய்தவழுக்களைப் பிள்ளையவர்கள்மீதேற்றிக் கூறுதல் தவறென்க. முன் பாடியதேனும் பின் பாடியதேனும் இரு பாடலுமவரதாதலினிதனை வழுவெனல் வழுவென்க.

நூலின் முதலில் விநாயகர் காப்பின்றென்பதற்கு முதலிற் பாடியதையே வைத்து முறையே மங்களம்பாடினரென மயங்குதன் முறையன்றாம். முன்னர்ப் பாடிய பதிகங்கள் பின்னரும் பின்னர்ப்பாடிய பதிகங்கள் முன்னரு முறழ்ந்தே கிடக்கும். இன்ன இன்ன விடங்களில் விநாயகர் காப்பிருத்தல்வேண்டுமென விதியின்மையாலும் ஆசிரியர் சிவஞானயோகிகள் "மன்றவாணனை" எனத் தருக்கசங்கிரகத்து நடராஜப்பெருமானை வணங்கியிருத்தலும் காஞ்சிப்புராணமாதிகளில் விநாயகர் காப்புக் கூறியிருத்தலும் தேவார திருவாசகங்களில் விநாயகர் காப்பின்மையும், சிவபெருமானையே சிந்தித்துத் துதிபுரியுமதற்குக் காப்புவேண்டுமென்னு நியமமின்

மையும் பிரபந்தங்கள் புராணங்கள் முதலியவற்றிற்கே யவ்வரம்பென்று மறியாது இவர்கூறியதே வழுவாம். பரசிவமெனத் திருவடிப்புகழ்ச்சியிற் புகழ்ந்துரைத்தவர் திருவடி நிலையில்பரசிவமென்றது சிவத்தையென்று கூறுதல், நடையரூப் பிரமமென்பதற்கு சலனத்தினின்று நீங்காத நாதமென்றும், உயர்பராசத்தி என்பதற்கு, உயர்ந்தபரையான சத்தியெனவும் நவில் பரசிவம் என்பதற்கு, நவபேதமாகச் சொல்லப்படுவதில் சிறந்த சிவமென்றும் பொருள்கொண்டு இவர் ஸ்ரீகரமான ஞானம்பலத்தில் நடனஞ்செய்கின்ற சர்வகாரணபூதனை பரமேசுவரனது குஞ்சிதபாதத்தின் கீழ்நிற்பவர்களெனவும்இவ்வனைவருக்குமேலானசுத்தசிவமே சன்மார்க்கசைவரான பிள்ளையவர்களின் பரம்பொருளெனவும் ஆராய்ந்துணராது சிவதூஷணஞ் செய்ததாகவழுவுரைத்தலே வழுவாம். இவ்வித ஆட்சேபங்களை வாளாவரைதலினலேயே இவரது சைவசித்தாந்தவுணர்ச்சி இத்தகையதென சம்பிரதாய சைவருணரமலிரார். இடதுகாற்கடை விரனகமென்றது எவரதிடதுகாற்கடை விரனகமென இப்பூர்வபக்கத்தார் ஆலோசனை செய்திருந்தால் வேதாகமங்களை யெல்லாமநகிழுத்தவலமுறுததார்.

இவ்வாறே இவர் வழுவெனக் காட்டிய வனைத்தும்மரபுணராகக் குறையால் வரைந்துவிடுத்தனவென அனைவருமறியாதிரார். பாடியவரின் கருத்தினையுணர்ந்து பொருளமைத்துக் கொள்ளாது அவ்வா றிருத்தல் வேண்டும். இவ்வாறிருத்தல் வேண்டுமென நியாயங் கூறாது கூறுவதனை விவேகிகள் மதியாரென்க. காக்கை கூவுதல், இடதுகால்முதலியன கரைதலிடக் காலென விருத்தல் வேண்டுமெனக் கூறுமின்னோர் "கடிசொல்லில்லை காலத்துப்படினே" என்ற ஒல்காப்பெரும்புகழ் தொல்காப்பியத்தினை மறந்ததென்? வழக்கில் இத்தேயத்தினர் இடதுகால் இடதுகை இடதுபுறம் வலதுபுறம் எனவழங்குதற் கேற்ப பிள்ளையவர்களு மிடதுகாலென்றனர். முன்னில்லாதன பின்றோன்றுதலும் இருந்தன கெடுதலும் வழக்கமாதலையேனுங் கருதினல் கூவுதலும் இடதுகாலும் தமிழ்நாட்டுவழக்குப்போலுமென வறிந்தடங்குவர். ஆசசு - போச்சு - எ - ம். சொற்பனம் என்றும், அங்குசில என்றும் இத்தேயத்தி லனைவரும் சர்வசாதாரணமாக உச்சரிப்பதுவழக்கமாதலி னிழுக்கின்மையையுணராது வழுவெனவுரைக்கவந்ததே வழுவாம். அலகிலறிவானந்தத்திற்குஞ் சச்சிதானந்தத்திறகும் உள்ள வித்தியாசமுணராமல் ஒருபொருளெனக் கருதியதுவழுவேயன்றிப் பிள்ளையவர்கள் கூறியதுவழுவன்றாம். சித்தாந்தமென்பதனை ஆகமத்தின் ஞானபாத முடிவென இன்னோர் உணர்ந்தவர்களாயின் அது அநேகபேதமான சித்தாந்தமாக விளங்குதலி னின்னவாகமசித்தாந்தத்திற்கு இது விரோதமெனவுரைத்தல் வேண்டும். அவ்வாறு கூறாது தமது பேதவாத சித்தாந்தமொன்றையே கருதிக் குறை கூறுதல் வழுவேயன்றி பிள்ளையவர்கள் கூறிய சுத்தாத்துவிதமாதிய வழுவாகாதென்க.

இவ்வாறே மற்றையவைகளையும் உணர்க. இவைகளை விஸ்தாரமாக இரண்டாம்பாகத்தில் பாக்கக்காணலாம்.

## இராமலிங்கபிள்ளை பாடல்கள் அருட்பா வாகாமைக்குக் காரணம் என்றதன் மறுப்பு.

முன்னுரைத்தவையே மீட்டுமுரைத்து பன்னிரண்டாந் திருமுறையாகியபெரியபுராணஞ்செய்வித்தஅநபாயச் சோழன் பன்னிரண்டு திருமுறைகளையன்றி மற்றெவைக்கேனுந் திருவருட்பாவெனப் பெயரிடுவோர் நரகடைவரென ஆணையிட்டுவைத்தானென ஒருபெரும்பொய் கூறியிருக்கின்றனர். உலகெலாமாக்கியென் றிவர்காட்டியபாடல் இதுகாறுஞ் சைவக்கிரந்கங்களில் வைத்துப் பூசிக்கப்படும்.எந்த நூல்களிலுமில்லையாகவும் இரா

மலிங்க பிள்ளையவர்களின் செயல்களைக் குறித்திகழும் பாடல் அநாபாயச்சோழன் பாடினனென்று கூறுதலைப் பூர்வபக்கத்தாரிலும் உண்மையாளர் அங்கீகரியார்கள். இராமலிங்கபிள்ளை யவர்கண்மீது பொறாமைகொண்டு போலியருட்பா மறுப்பெனுஞ் சுவடி எழுதியவர் இக்காலத்துப் பூர்வபக்கத்தவரினும் பதினாயிரம் பங்குயர்ந்த கல்வியாளராக விருந்தும் அவர்க்கது கிடைக்காமற் போயிற்றுப்போலும். அநாபாயச்சோழனவ்வா றொருபாடல் பாடியிருந்தால் அது திருத்தொண்டர் புராணவரலாற்று ளிருத்தல்வேண்டுமே? அதனிலும் பிறவெதனிலு மவ்வா றொருபாட லின்மையி னிது தவறென்க. இங்ஙனம் புதிய புதிய பாடல்களை வரைந்து இது அவர்பாடியது இஃது இவர்பாடியதெனப் பண்டிருந்த நல்லவர்களின் பெயர்களை வரைந்து விடுதலின லிவர்பக்கத்துக் காதார மெதுவுமின்மையா லிவ்வா றெழுதுகின்றனரென அறிஞரெள்ளுவரென்பதனை இன்னவ ரறியா திவ்வாறுகலைரதல் பரிதபிக்கத் தக்கதே.

பன்னிருதிருமுறைகட் கருட்பாவென அநபாயன்காலத் தாணையிட்டுரைத்திருத்தலின் அதுகூடாது என்றது, சோதனையி லழிந்தொழிந்தமையால் இவர்காட்டிய தந்யாயமாயது காண்க.

அருளாலாகியபா வருட்பா என்பதனால் இராமலிங்கபிள்ளையவர்களின் பாடல்களுக் கருட்பாவெனப் பெயரிட்டனர் அறிவுடையோர்.

பன்னிரு திருமுறைகளுக்கும் சிறப்பாக வேறு வேறு பெயரிருத்தலானும் பொதுவாக திருநெறித்தமிழ் எனப் பெயரிருத்தலானும் பன்னிருதிருமுறைகளுள் தேவார திருவாசகங்களுக்குப் பொதுவாகத் தமிழ்வேதமென்று பெயரிருத்தலானும் திருநெறித்தமிழ் முதலியபெயர்களையே அவைகளைத் திரட்டினோரும் அநுட்டிப் போரும் வழங்கிவருகின்றனர். இராமலிங்கபிள்ளையவர்களின் பாடல்கள் அருட்பா வென்னும் பெயர் புனைந்து புத்தகமாகி உலகில்நடைபெற்றுச சின்னாளாங்காறும்அவ்வாறேவழங்கிவந்தமையானும், அவர்பாடல்களைத் தமிழரனைவரும் விரும்பிப்படித்தலும் புகழ்தலுங் கண்டு கேட்டும் பொறாமைகொண்ட பூர்வபக்கத்தார் அருட்பாவென்னும் பெயர் சைவத்திருமுறை யொன்றிற்கே யுரியதாம் இவர்பாடற்கப்பெயர்வைக்கத்தகாது அருட்பிரகாசவள்ளல் என்பார் சிவபெருமானொருவரே இவர்க்கப்பெயர் கூடாது எனக் கலாம்விளைத்தனரன்றி சபலசிந்தையினரான சிலர் பன்னிருதிருமுறைகட் கருட்பாவென்று பெயராமேனக் கூறித்திரிவாராயினரன்றி உண்மையி லிவர்கள்கூறுமாறின்மையை இவருதாரணமெனக்காட்டு மெதனிலேனு மருட்பா என்னும் பெயர் பன்னிருதிருமுறைக்கே யுரியதென் றின்மையே சான்றாம்.

### தம்மை யுணர்ந்தார் பாட்டெல்லாம் அருட்பாட்டென்றதைத் தகர்த்தல் என்றதன் மறுப்பு.

“தம்மையறிந்திடு தத்துவஞானிகள், முன்னைவினையின் முடிசசைய விழ்ப்பர்கள், பின்னைவினையைப் பிடித்துப்பிசைவர்கள், சென்னியில்வைத்த சிவனருளாலே” என்ற திருமூலனார் ஆணைமேனிற்போர் தம்மையுணர்ந்தவர் திருவருளுக்குரியரென வறிவர். ஆதலின் பிள்ளையவர்சள் தமது சைவ சன்மார்க்க நிலைக்கிணங்கத் தம்மையுணர்ந்தவர் தமது சுதந்தரமின்மையும் அருளியக்குந் தன்மையையும் அறிந்தவராதலி னன்னவர்பாடலை யருட்பாடலென்றது இழுக்காதாகவும் இன்னோர் சாங்கிய மாயாவாத பாஞ்சராத்திர சிவாத்துவித சைவர்முதலியோருந் தம்மையுணர்ந்தவரே யாவர், என்று கூறுகின்றனர்.

ஆன்மாவை சாங்கியரும் மாயாவாதிகளும் பாஞ்சராத்திரிகளும் வேறு வேறு விதமாக அறைகின்றனர். ஆகவே அவருடன் சிவாத்துவித சைவரை

யுஞ் சேர்த்து ஆன்மாவையுணர்ந்தவர்கள் என்றுகூறுகின்றனர். இதனா லின்னோர் நூலாராய்ச்சி யித்தகையதென, அனைவருமறிவர் பிள்ளையவர்கள் திருமந்திரவழிநின்று கூறியவராதலின் தமையுணர்ந்தார் அருள்வழிநிற்போராதலி னவர்பாட லருட்பாடலததாலி விழுக்கின்றென்க.

### அம்பலப்பாட்டே யருட்பாட்டென்றதை ஆராய்தல் என்றதன் மறுப்பு.

பிள்ளையவர்கள் அம்பலப்பாட்டே யருட்பாட்டென்றும் அல்லாதபாட்டெல்லா மருட்பாட்டு என்று கூறியதும் "அண்டங்களோரேழும் பொற்பதியாகப், பண்டையாகாசங்க ளைந்தும்பதியாகத், தெண்டினிற் சத்திதிருவம்பலமாகக், கொண்டபெருஞ்சோதி கூத்துகந்தானே" எ-ம். கும்பிடவம்பலத் தாடியகோன் எ-ம். தேவரோடாடித் திருவம்பலத்தாடி எ-ம். அம்பலமா டரங்காக வதன்மீதே எ - ம். நீடுஞ்சிரசிடை பன்னிரண்டங்குலமோடு முயிரெழுத்தோங்கியுதித்திட நாடுமினாதாந்த நம்பெருமானுகந்தாடிடந்திரு வம்பலந்தானே. எ-ம். திருமூலனார்அண்டத்தினுள்ளும் பிண்டத்தினுள்ளும் அண்டத்தின்புறத்தும் பிண்டத்தின் புறத்துமாக இறைவன் நடித்தலையுரைத்த பொன்னம்பல முதலிய வம்பலங்களையே பிள்ளையவர்களுரைத்தனர். அவ்வம்பலமாக வடலூரினைப் பிள்ளையவர்கள் கூறியதனா லிழுக்குண்டாமேல் ஒருதலத்தின் நிறத்தினை மற்றொருதலத்திற் குரைப்பாருமிழுக்குடையராவர் அம்பலப்பாட் டென்பதற்கு அம்பலத்தை யுடையவன் பாட்டென்று பொருள். அம்பலத்தை யுடையவனாதலினன்றோ சிவபெருமானை யம்பலவாணனென்று கூறுகின்றார்கள். அது எந்தத்தலத்தைச் சுட்டியதாயினும் சிவபெருமானைப் புகழும் பாடலாதலி னப்பாட லருட்பாடல்களே ஆயினும் பிள்ளையவர்கள் சிதம்பர வெல்லையிலிருந் தம்பலப்பாட்டென்றது சிதம்பரப் பாடலையேயாம். பிள்ளையவர்கள் சிதம்பரத்து நான்குகோபுரமு மொருங்கே தெரியுமதனாலன்றோ வடலூர்வெளியி லிருந்து சிதம்பரநாதனைத் துதித்தனர். அம்பலம் அருண்மயமான தாதலின் அதன் சம்பந்தமானபாட லருட்பாடலே யென்பதனை நினையாதின்னோர் சிதம்பரத்தினை இகழ்ந்தன ரென்றல் தவறென்க.

### பன்னிருதிருமுறைகளே அம்பலப்பாட்டு மருட்பாட்டுமாதல் என்பதன் மறுப்பு.

பன்னிரு திருமுறைகளே அருட்பாட்டும் அம்பலப்பாட்டு மென்றவிவர் காட்டிய சரிதங்களனைத்தும் ஆட்சேபத்துக் கிடமானவையே அவை சீகாழிமுதலிய இடங்களினிகழ்ந்தனவற்றை சிதம்பரத்ததென்றலுங் கோயிலம்பலம் ஞானம்பலம் சிதாகாய அம்பலம் என அநேக அம்பலங்களைக் குறித்தலும் அவைகளிலெல்லாம் எழுந்தருளி இருந்தருள் புரிந்தவன் ஒரு சிவபெருமானே என்பதனை மறந்ததும் பிறவுமாம். இவர் காட்டிய இவ்வித சாமானிய சம்பந்தங்களிற் பல இராமலிங்க பிள்ளை யவர்களிடமுங் காட்டக்கூடும் அவைகளாற் கருமசித்தி எதுவுமின்மையாற் காட்டாது விடுதும், சிதம்பர சம்பந்தமான பாடலனைத்து மருட்பாவாகுமென இவர்காட்டிய நியாயங்கள் விளக்குதலின் சிதம்பர சம்பந்தத்தினை எவ்வகையாலேனுங் கொண்டு நிற்கும்பாடல்களும் அம்பலப்பாட்டும் அருட்பாட்டு மன்றோ? மலை காடு முதலியவைகளி னிகழ்ந்த பாடலருட்பாவு மம்பலப்பாட்டு மாகுமேல் ஸ்ரீசித்சபா நாதனை நினைந்து நினைந்துருகி யுருகித் துதித்தபாடல்களேன் அம்பலப்பாட்டும் அருட்பாட்டுமாகாது இவருரைகளே இவரைப் பூர்வபட்சஞ்செய்தலை யுணராது உரைத்தவை குற்றமா யழிந்தமை காண்க.

### பன்னிருதிருமுறைகளே திருவருட்பா என்றதற்குப் பிரமாணம் என்றதன் மறுப்பு.

“ இறைவனருளிய வேதசிவாகமங்களை ஆன்றோர் அருணூல் முதனூல்

எனப் பற்பல விடங்களிலும் பேசியுள்ளா ரென்று கூறிச் சில பாடலடிகளைக் காட்டியிருக்கின்றார். வேதசிவாகமங்களை அருணூல் என்று கூறுதல் கூடாதென் றாட்சேபித்தவர்களின்மையா லிவருரை வெற்றுரையென்க.

தேவாரமுதலியன பதிவாக்கென ஒத்துக்கொள்ளும் இராமலிங்கபிள்ளையும் அவரைச்சார்ந்தாரும் அருட்பா என வுரைத்தல் கூடாதென மறுத்தல் உய்தியில் பாதகமென்று வாளா கூறுகின்றார்.

இவரெடுத்துக்காட்டிய திருவருட்பயன் முதலிய கூறு மருணூல்களில் தேவார திருவாசக முதலிய பன்னிரு திருமுறைகளே அருட்பாக்களென்று கூறாமையானும், இருக்கு முதலிய வேதங்களையும் காமிகமாதிய ஆகமங்களையு மவைகளின் வழிவந்த பிறநூல்களையும் அருணூல்களென வுரைத்தலின் இவர்காட்டிவர்க்கே கண்டனமாக நிற்றல்காண்க.

தேவாரங்களாகிய எழுதிருமுறைகளும் திருவாசகம் திருவிசைப்பா திருமந்திரம்பெரியபுராணமுதலிய நான்கு திருமுறைகளும் காரைக்காலம்மையார் முதலியோரின் பாடற்றிரட்டான பதினோராந்திருமுறையென வழங்கு முறையொன்றுமாகப் பன்னிரண்டு திருமுறைகளே அருணூல்களானால் தமிழில் வழங்கும் கந்தபுராணம்திருவிளையாடற்புராணம்காஞ்சிப்புராணம் தணிகைப்புராணம்சூதசங்கிதை திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார் முதலிய சைவசித்தாந்த நூல்கள் முதலியனவைகள் மருணூல்கள் போலும் அந்த மருணூல்களை இவரேனெடுத்து தகரித்தல்வேண்டும் பன்னிரண்டே அருட்பாக்களானால் கந்தபுராணமுடையார் முதலிய அருண்மூர்த்திகளை மருண்மூர்த்திகளெனன இப்பூர்வபக்கத்தினர் கருதினவராகின்றனர்.

ஞானசம்பந்தப்பெருமான் திருவருளுடையரல்லர் என்று பிள்ளையவர்களுரைத்திருந்தாலன்றோ? இன்னோர் வேந்தனருளாலே வித்தபாடல் என்பதாதி வேதவசனங்களை யெடுத்தெழுதிக் காட்டுதல்வேண்டும். பிள்ளையவர்கள் "முத்தியற்சிவிகை யிவர்ந்தருணெறியின் முதலரசியற்றிய துரையே. என்றும், வடிவிலாக்கருணை வாரியே. மூன்று வயதினிலருள்பெற்ற மணியே எ-ம்," ஞானசம்பந்தப்பெருமானை அருண்மூர்த்தியென்றே துதித்திருத்தலின் இக்காட்டலனாவசியமென்க. நாவுக்கரசுபெருமான் விஷயத்திலும் பிள்ளையவர்கள், 'திருத்தகுசீரதி கையருட்டலத்தி னோங்கு சிவக்கொழுந்தி னருட்பெருமைத் திறத்தால் வாய்மை, யுருத்தகுமெய் யுணர்ச்சிவடிவாகி எ-ம். வாய்மையிலாச் சமணர் பலகாற்செய்த வஞ்சமெலாந் திருவருட்பேர் வலத்தானீந்தி எ-ம். அருண்மூர்த்தி யெனக்கூறியிருத்தலானும் திருநாவுக்கரசு பெருமானையுமூர்த்தியெனப் புதிதாகவுரைக்கவந்ததனாவசியம். இப்பூர்வபக்கத்தார் எவ்வளவுமுயன்றுதேடினும் சமயாசாரியர் திருவருட்பாபாடினார். அருட்பா பாடினார் எனக்காட்ட ஒருவரியுமிவர்க்குக் கிடைக்காதாகவும்வாளா மற்றொன்றுவிரித்தலாய் அருளாற்பாடினாரென்பதுமுதலிய ஆசிரியவசனங்களைக்காட்டிக் காலம்போக்குகின்றனர். பன்னிருதிருமுறைகள் அருளால்பாடப்படன அன்றென்றலன்றே இன்னோர் இவ்வளவுகாயக் கிலேசமடைதல்வேண்டும். இவருதகரித்த எந்த நூலினும் பன்னிருதிருமுறைகளே அருட்பா என்று கூறாதிருக்கவும் மெல்லெனத் தேவார முதலிய திருமுறைகள் பன்னிரண்டுமே பல்லாற்றானும் அருட்பா அருட்பாட்டு அருண்மாலை அருணெறி அருண்மொழி ஞானப்பாட்டு, மெய்ம்மொழி அருட்பதிகம் எனப்படும் என்க. வேதசிவாகமங்களை அருணூல் என்பதுபோல இவற்றையும் அருணூல் அருட்பா எனக்கூறலே தகுதி. என்று கூறுகின்றார். வேதசிவாகமங்களுக்கு மேனையநூல்களுக்கும் அருணூல் எனப் பெயரிருத்தலும் வழங்கிவருதலும் யாமுமறிவோம். அருட்பாவென எந்தநூலினும் இன்மையாலும் அருட்பாவெனப் பிறர்பாடல்களுக்

குப் பெயரிடப்படாதென்றும் பிரசித்தநூல்கள் எவையினின்றும் ஒருஉதாரணமுங் காட்டுமாற்றலிப் பூர்வபக்கத்தினரிட மின்மையாலும் இவருரையை வெற்றுரையென்க.

தேவாரமுதலியவற்றிற்கு வேண்டியவளவு பொதுவுஞ் சிறப்புமான பெயர்கள் அவைகள் தோன்றியகாலத்தே உடன்தோன்றி வழங்கிவருதலின் வழக்கற்றபெயரை நூதனமாகச் சுமத்துதல் கயமையேயன்றி உள்ளதை உள்ளபடி யுரைப்போர் கயவராகாரென்க.

### பிள்ளை திருமுறைவகுத்த பெரும்பாவம் என்றதன் மறுப்பு.

“இராமலிங்கபிள்ளையைச் சார்ந்த போலிச்சைவர் சிலர் இராமலிங்கபிள்ளை பாட்டைத்தேவாராதி பன்னிருதிருமுறைகளுக்குஞ் சமமென்றாவது உயர்ந்ததென்றாவது யாங்கூறுவேமல்லேம் சமயாசாரியசுவாமிகள் முதலிய திருவருளாளர்களுக்கு ஒத்தவரென்றாவது உயர்ந்தவரென்றாவது அவரையுரைக்கவந்திலேம் அங்ஙன மவருமுரைத்தாரல்லர்” என்று கூக்குரலிட்டுந் தாந் தப்பித்துக்கொள்ளப் பார்க்கின்றார். அவரது கபடநாடகங்களையும் அதிபாதகத்தன்மையையுங் காட்டி யுணர்வுச்சுடர்கொளுத்துவாம். என்ற பீடிகையின்கீழ் சில அபத்தவசனங்களைக் காட்டியிருக்கின்றனர். இவர் காட்டிய நிலையினிற்போர் போலிச்சைவருந் தப்பித்துக்கொள்ளுவோரும்போலும் பசையற்ற இவர் வறுமொழிக்கஞ்சித் தப்பித்துக்கொள்ளாவிடி லது என்செய்யுமோ அறிகிலேம். இவர்கொளுத்து மறிவுச்சுடர் எத்தகைய வறிவுச்சுடரோ அறிகிலேம்.

பிள்ளைபாடல்களென்ன வருளைவிளைத்தன ஒன்றுமில்லையே என்கின்றார் இவர்கருது மருளையே அவர்பாடல்கள் விளைத்தல் வேண்டும்போலும் தேவாராதிகளில்திருவருட்பதிகம் பிரசாதப்பதிகம்,திருப்புகழ்ப்பதிகம்,திருவண்ணப்பதிகம், திருவெண்பா, (கலைமகளார்) திருப்பதிகம், அன்புமாலை, ஆனந்தமாலை,அருண்மாலை. எண்ணப்பத்துக் குறையிரந்தபத்து போற்றித்திருவிருத்தம், அச்சோப்பத்து அந்தோப்பத்து திருவருட்பேறு, ஸ்ரீராமநாமத்திருப்பதிகம்,மெய்யருள்வியப்புமாலை, முதலிய இன்றாகவும் அவை உளபோலக்காட்டி என்றின்னன பெயர்களை வைத்தமை தேவார முதலியவற்றிற்கு ஒப்பாக நினைத்தன்றோ? என்று கேட்கின்றார். தேவாராதிகளில் இவர்காட்டிய திருவருட்பதிகமுதலிய எந்தவகுப்பும் பெயருமின்மையால் பிள்ளையவர்கள் அவ்வாறுவகுத்தது தேவாராதிகளுக்குச் சமமாகக்கருதியன்றென்று அனைவரு மறிவர் இவர்கொளுத்து மித்தகைய வறிவுசசுடர் படியாச்சிறுவ ருள்ளத்தன்றி படித்தாருள்ளத்துப் பிரகாசிக்காதென்க.

திருமுறையென்பதற்குப் புத்தகமென்று பொருளன்றி வேறுபொருள் இங்குப் பலியாமையை யுணராதாரன்னோர் திருமுறையென வகுத்தது குற்றமென்று கூறுகின்றனர் கச்சியப்பசிவாசாரியர் காந்தபுராணத்தினை மொழிபெயர்த்துப் பாரகாவியமாகப் பாடியவர் அதற்கேற்ற பெயரான கந்தபுராணமென்பதனை அதற்கிட்டு வடநூலிலுள்ளவாறே உற்பத்தியாதி காண்டங்களாக வகுத்தனர். மெய்கண்டதேவர் முதலியவர்கள் சிவாகமத்தின் ஞானபாதத்தினைத் தமிழில் மொழிபெயர்த்து அதற்கேற்ற பெயர்களான சிவஞானபோதம் சிவஞானசித்தியார் சிவப்பிரகாச மென்பனவாதி தங்கொள்கைக்கேற்ற பெயர்களைத் தாமியற்றிய நூல்களுக்கிட்டனர். அவர் தந்நூல்கட்கிட்ட பெயர்களினுந் திருமுறையென வுரைத்தலி லேற்றமொன்று மில்லையென்க. குமரகுருபரர்முதலியோர் பாடல்களைத் திரட்டியவர்கள் குமரகுருபரர் பிரபந்தத்திரட்டெனப் பெயரிட்டனர். இவர்கள் இவ்வாறெல்லாம் பெயரிட்டது திருமுறையென வகுக்கவஞ்சியென்று கூறுதல் வறுங்கூற்றேயாம். பன்னிருதிருமுறைகளுக்கொப்பாக இராமலிங்கபிள்ளை

திருமுறைவகுக்க விரும்பியிருந்தால் ஒன்றுமுதற் பன்னிரண்டு திருமுறையாகத் தமது புத்தகத்தினை வகுத்திருப்பார் அவ்வாறவர் செய்யாமையினவர்க்கது கருத்தன்றென்க. பன்னிருதிருமுறைகளொடுசேர்க்கவிரும்பியிருந்தால் பதின்மூன்றாந்திருமுறைமுதலாக வன்றோ வகுப்பார் அவ்வாறு செய்யாமையாலவர்க்கதுவுங் கருத்தன்றென்க. ஆறுபாகமான புத்தகங்களாக வகுத்து அப்புத்தகத்திற்கு ஆறுதிருமுறையென வழங்குதலேயன்றி வேறெந்த அபிப்பிராயமு மவர்கொண்டில ரென்பதற்கு இப்பூர்வபக்கத்தாரினு மதிகமாகப் பிள்ளையவர்கள் தேவாரதிருவாசகாதி தமிழ்வேதங்களையும் அருணூலான பெரியபுராணத்தினையும் பிறசைவநூல்களையும் புகழ்ந்து தமதுபுத்தகத்துக்கு ளெழுதியிருத்தலே சான்றுபகரும். அன்றியும் பன்னிருதிருமுறைக்கும் ஆறுதிருமுறைக்கு மென்னசம்பந்தம். "இறைநிலமெழுதுமுன் இளையபாலகன் முறைவரைவேனென முயல்வதொக்குமால்" என்றகச்சியப்ப சிவாசாரியார் முறையென்பதனைப் புத்தகமென்றேயுரைத்திருக்கின்றனர். பிள்ளையவர்கள் திருமுறைவகுத்ததில் பெரும்பயமின்மையும்பொருத்தமற்ற விடயங்களைக்காட்டி இகழும் பூர்வபக்கத்தினரே பெரும்பயமுடையோருமெனவு மனைவரு மறியாதிரார். ஆறுமுறையாக வகுத்தற்கு இவர்காட்டிய பாடல் இராமலிங்கபிள்ளையதன்றாதலாலும் அது பிள்ளையவர்கள் பாடல்மீதன்புள்ள ஒருவர் சொன்னதாதலாலும் அதனை இவர் காட்டாகக் காட்டுதல் தவறென்க.

### திருமுறைகள் பன்னிரண்டிற்குமேல் இல்லையென்றதன் மறுப்பு.

நம்பியாண்டார் நம்பியும் அநபாயச்சோழனும் வகுத்த திருமுறைகள் பன்னிரண்டேயாதலில் திருமுறைகள் பன்னிரண்டே என்று கூறுகின்றார். இராமலிங்கபிள்ளை பதின்மூன்றாந்திருமுறை முதலாக வகுக்காமையால் பன்னிருதிருமுறையின் எல்லையை அவர் மீறியவரல்லர். ஆதலினிவர் வழக்கு வீண்வழக்கேயாம்.

இராமலிங்கபிள்ளைக்காகப் பாடுபடுவோர் சிலர் சேக்கிழார்சுவாமிகளுக்குப் பின்னர் திருவருள்பெற்றவரில்லையா? அருளாற்பாடிய பாடலில்லையா ? அவைகளையுந் திருமுறையென்று வகுத்தால் வருங்குற்றமென்னை பதின்மூன்று பதினான்காந் திருமுறைகள் ஏற்படுதல் ஏனோகூடாது ? பன்னிரண்டே திருமுறைகள் இருக்கவேண்டுமென்பது தானென்னை என்று விவகரிப்பாராயினர் இவரதாட்சேபங்களுக்கு தக்கவிடையிறுத்து பன்னிருநியாயங்களாலுண்மை நாட்டுவோம் என்று பிரதிக்ஞை செய்து இவர் பன்னிரண்டு நியாயங்கூறினர். அப்பன்னிரண்டு நியாயமும் பொருத்தமற்றனவும் இவர்கொள்கையை மறுப்பனவுமேயாம்.

### முதலாவது நியாயம் என்றதன் மறுப்பு.

பன்னிருமாதம் பன்னிருராசி பன்னிருகலை பன்னிருஅந்தம் தமிழ்ப் பன்னிரு எழுத்து என இவைகள் பன்னிரண்டேயாதலிற் றிருமுறைகள் பன்னிரண்டேயென்றார்.

மாதம்முதலிய பன்னிரண்டென்பவை படைப்புக்காலந்தொட்டிறைவனாலொரு சேரவமைக்கப்பட்டாங்கு பன்னிருதிருமுறைகளுமொரேகாலத்திலுண்டாகாமலும் ஒரே காலத்தில் வகுக்கப்படாமலும் சிலகாலமித்திருமுறைவரம்பிலன்றி யவை வேறுவேறாகவும் முன்றோன்றியது பின்னும் பின்றோன்றியது முன்னுமாகமாறி அமைக்கப்பட்டிருத்தலானும் அந்தம் பன்னிரண்டின்மையானும் துவாதசாந்தமென்பது ஒன்றன்றி பன்னிரண்டின்மையானும் கலை-அறுபத்துநான்காதலாலும் பன்னிருமாதங்களின் நாட்கள் முந்நூற்றறுபத்தைந்தாதலானும் உயிரெழுத்து பன்னிரண்டுமொரு நிகரனவாயின்றி வேறுவேறளவினவாதலானும் நெடில் குறில்முதலிய வே

றுபாடுகெடுத்தலானும் அகரஇகரச் சேர்க்கையே ஐகாரமாதலானும் அகரஉக ரச்சேர்க்கையே ஔகாரமாதலானும், குற்றெழுத்தைந்தின் விகாரமேநெட் டெழுத்தாகலானும் இவ்விதவேறுபாடுகளும் இறைவன் சங்கேதமாதலின் பன்னிருதிருமுறைகளே என்பதற்கிவை உதாரணமாகாத வெற்றுரையே யாம்.

உ-வது, நியாய மறுப்பு.

உபவேதாதிகளையொப்ப உபதிருமுறை யென்னுமோ என்றார். உப திருமுறையெனப் பிள்ளையவர்கள் வைக்க விழைந்திலராதலின் அவர் விருப்பமல்லாதவைகளைக் கூறிமறுத்தலுமருமையுமொன்றே உ-வது நியா யம் சற்றும்பொருத்தமற்ற பிரதிக்ஞா விரோதமென்னுந் தோடத்தின்பாற் பட்டதுகாண்க.

ங-வது, நியாய மறுப்பு.

வைகரியாதி வாக்குகள் பன்னிரண்டாதலிற் றிருமுறை பன்னிரண் டெனக் குழறினர். வைகரியாதி நான்குவாக்குப் பன்னிரண்டு வாக்கா மாறு நான்கு திருமுறை பன்னிரண்டு திருமுறையாகாமையின் ங - வது நியாயமும் அநியாயமாயது காண்க.

ச-வது, நியாய மறுப்பு.

வைகரியைப் பலவாறுறழ்த்தியவை பன்னிரண்டாதலிற்றிருமுறை பன் னிரண்டே யென்றார். இதுவும் நாலின்விரிந்த பன்னிரண்டானமையால் மூன்றின்கதியே இதற்கும், ஆதலினிவருரைத்த நியாயமழிந்தமை காண்க.

ரு-வது, நியாய மறுப்பு.

உமாபதி சிவனார் மந்திரங்க ளேழாதலி னேழுதிருமுறை யென்றும், மந்திரங்கள் பதினொன்றாதலின் திருமுறைகள் பதினொன்றென்றும் வகுத் தருளினர். அது, "மந்திரங்க ளெழுகோடி யாதலினன் மன்னுமவ, ரிந்த வகை திருமுறைகளேழாக வெடுத்தமைத்துப், பந்தமுறு மந்திரங்கள் பதி னொன்றுமாதலினா லிந்தமுறை நான்கினொடுமுறை பதினொன்றாக்கினர்." என்ற பாடலைக்காட்டி அவரினுமிவருயர்ந்தவர் போன்று நேத்திர மந்திர முஞ், சேர்ந்து மந்திரங்கள் பன்னிரண்டாதலின் திருமுறை பன்னிரண் டே என்று கரைந்தனர். பன்னிரண்டிற்கு உமாபதி சிவனார் காட்டிய பதி னொன்று உதாரணமாகாமையானும் பன்னிரண்டே திருமுறை யென்பத னைக் காட்டவந்தவிவர்சம்மிதா மந்திராதிகளை விரித்துப்பதினொருதொகை யைப் பரக்கக்காட்டுவதிற் பயனென்னை? நேத்திரமென்னும் மந்திரம் பதி னொரு மந்திரத்துளடங்கியதாதலின் பன்னிரண்டாவது நேத்திரமந்திரமெ ன்றதுதவறும்.

உமாபதி சிவனினு மிப்பூர்வபக்கத்தினர் உயர்ந்தவறிவாளர்போலும் அவர் திருவாக்கினை யுதகரித்து அதனைப் பூர்வபட்சஞ் செய்கின்றனரே இது ஆசாரி யோல்லங்கனமாகாதுபோலும்? மந்திரங்கள் பன்னிரண்டெ னச் சைவசம்பிரதாயத்தில் வழக்கின்மையின் இவருரை வெற்றுரையாயது காண்க.

சு-வது, நியாய மறுப்பு.

வேதங்களினு மாகமங்கள் சிறந்தன; அவற்றுள்ளும் ரௌரவஞ் சிறந் தது. அதனுள்ளும் பன்னிரண்டுருத்திரங்கள் சிறந்தன; ஆதலால் திருமுறை கள் பன்னிரண்டே என்றார்.

ஆகமங்களுளொன்று சிறந்ததானால் மற்றையவைதாழ்ந்தவையன்றோ? இத்தேயத்தில் மிகவும் மருவஷ்டிப்பிலிருக்கும் காமிக யோகச காரண வாது ளாதி ஆகமங்களனைத்தையுமிகழ்ந்து ரௌரவாகமத்தினையுஞ் சிவஞானப் போதப்படலத்தையுஞ் சிறப்பித்து ஏனையவற்றை யிகழ்ந்ததும் சிவநிந்தை

யன்றே ஓராகமத்தின் நடுவிற் காணப்படு ஞானநூலான சிவஞானபோதமொப்ப வாதுளமுதலிய எல்லாவாகமங்களினு ஞானபாதத்தில் சிவஞானமுரைக்கப்படுதலானும் அவை பன்னிரண்டிற் கதிகமான கிரந்தங்களையுடைமையானும் ஓராகமத்தி னொருபுறத்திலுள்ளது சிவஞானபோத மவ்வாறு பன்னிருதிரு முறையும் ஒருவரானுண்டாக்கப்பட்ட பன்னிருமுறையன்மையானொப்பின்றித் தவறாயது காண்க.

### ௭-வது, நியாய மறுப்பு.

சந்தானாசாரியர் எண்மருஞ் சமயாசாரியர் நால்வருமாதலால் திருமுறை பன்னிரண்டே யென்றார். தமிழ்நாடு முதலிய அனைத்து நாட்டுச் சைவரானும் பொதுவாக ஞானாசாரியராகக் கொள்ளப்பட்டவர். சதாசிவாதி ஏழு பெயர்களாதலானும் நந்திகேசுவரர் பரம்பரையிலருளுபதேசப் பெற்றவர்கள் வேறும் பலருளராதலானும் நந்திபரம்பரையோ ரெண்மராகவே நிற்றலானும் சிவபெருமானைக் குரவனாகக்கொண்ட சமயாசாரியரை இச் சந்தானாசாரியருடன் வைத்தெண்ணுதற்கனைத்துச் சைவருமியையாராதலானும் ஆசாரியர் பன்னிருவரென்னு முறையால் திருமுறை பன்னிரண்டென்னு நியாயம் பொருத்தமற்றதேயாம்.

### ௮-வது, நியாய மறுப்பு.

வித்தியா தத்துவங்கள் சிவதத்துவங்கள் ஆகிய இவை பன்னிரண்டாதலால் திருமுறை பன்னிரண்டென்றார். சில தத்துவங்களைத் தள்ளிச் சில தத்துவங்களைச் சிறந்தனவாகக் கொண்டாங்கு சிலவற்றைத் தள்ளிச் சிலவற்றைக்கொண்டு நின்றதன்மையால் பன்னிரு திருமுறைக்கித் தத்துவ நியாயம் பொருந்தாதென்க. ஆறாறை நீத்ததன்மேனிலையை, என்றான்றோர் முப்பத்தாறு தத்துவங்களையுங் கழித்திருத்தலின் கழித்தற்குரிய வித்தியா தத்துவ சிவதத்துவங்கள் பன்னிரு திருமுறைக் குதாரணமாகாமை காண்க. அன்றியும் ஓரைந்துமொரேழுநின்று பன்னிரண்டான இருசாதியையொப்ப இதனுளின்மையாலித்தத்துவ வுவமைபொருத்தமற்றதேயாம்.

### ௯-வது, நியாய மறுப்பு.

அநாகதாதாரம் பன்னிரண்டிதழ்களையும் பன்னிரண்டு சத்திகளையுமுடையதாதலால் திருமுறை பன்னிரண்டே என்றார். அநாகதமென்பது ஷடாதாரங்களி னுட்பட்டதாய் உருத்திரன்றானமாய் பன்னிரண்டிதழுடையதாய் அதனில் கபினி முதலியர் தங்கினும் அக்கபினியாதியரும் அவரிருக்கு மிதழ்களும் அப்பிரதான மானவையாய் அவைகளைக் கொண்ட அநாகதமானது தேயு பூதசம்பந்தமாய் நிற்றலானும் அதற்கனேகம்பங்குயர்ந்ததாய் பரசிவவாசயோக்கியமாய் பூதசம்பந்த மற்றதாய் ஆயிரத்தெட்டிதழ்களையுடைய பிரமரந்திரத்தான மிருத்தலி னதனினு மிழிந்த நான்காவதான அநாகதத் தானம் பன்னிரண்டு திருமுறைக் குதாரணமாதல் பொருத்தமற்றதேயாம்.

### ௰-வது, நியாய மறுப்பு.

தமிழ்வேத முதன்முதலுண்டான சீகாழி பன்னிருபெயருடையதாதலால் திருமுறை பன்னிரண்டென்றார். தமிழ்வேதத்துள் முற்பட்டது திருவாசகமே அதுமுதல்வனா லெழுதப்படுதலானும் திருஞான சம்பந்த சுவாமிகளின் சமகாலத்தவரான திருநாவுக்கரசு பெருமான் "நரியைக் குதிரைச்செய்வானு" மென்று அருளிச்செய்திருத்தலானும் பிறவற்றானும் தமிழ்வேதம் முதல்முதல் தோன்றியது சீகாழி யென்றதுபொருத்த மற்றதேயாம். அச்சீகாழிக்குப் பன்னிருபெயர் பன்னிரண்டுகாலத்தி லுண்டானதுபோல திருமுறைகளுக் கின்மையானும் திருவெண்ணெய் நல்லூர் திருவதிகை வீரட்டம் திருப்பெருந்துறையாதிஇடங்களில்தமிழ்வேத முதல்முதல்தோன்றிய

தன்மையாதலி னத்தலங்களுக் கிந்தபன்னிரண்டே பெயரென்னு நியமமமின்றி ஏறியுங் குறைந்து மிருத்தலானும் வேதந்தோன்றிய ஊரின் பெயர்களைப் பன்னிரு திருமுறைகளுக்குவமைகூறல் ஆட்சேபத்துக் கிடமானதேயாம்.

கக-வது, நியாய மறுப்பு.

சத்தி பன்னிரண்டாய் கன்னியாய் பன்னிருவயதினளாதலால் திருமுறை பன்னிரண்டே யென்றார். கன்னிப் பருவமென்பது ஒன்பதற்குமேல் பதினொன்றுக்குள் விவாகமில்லாத பருவமாதலாலும் பன்னிரண்டாம்வயது மங்கைப்பருவ மாதலானும் பதினொரு வயதும் பத்துமாதமுஞ் சென்றவள் புணர்ச்சிக் குரியவளாகின்றா ளாதலின் கன்னிப்பருவம் பன்னீராட்டைப் பருவமென்றதும் ஒருசத்தியே பன்னிரண்டு சத்திகளானாற்போல ஒரு நூலேபன்னிரண்டு திருமுறையாகக்காணப்படாமையானும் அநேகரியற்றிய நூல்களே பன்னிரு திருமுறையாக நிற்றலானும் சத்தியுவமை பன்னிரு திருமுறைகட்கு உசிதமற்றதேயாம்.

கஉ-வது, நியாய மறுப்பு.

ஸ்ரீஞானசம்பந்தசுவாமிகள் பரவியசீர் பன்னிரண்டு நன்னூலாம் என்றதற்கிணங்க பன்னிரண்டு திருமுறை ஆயின என்றார். பன்னிரண்டு நூல்களாக இல்லாமல் ஏழுதிருமுறைகள் ஒருநூலாகவும் மூன்றுதிருமுறைகள் மூன்றுநூலாகவும் மற்றிரண்டு திருமுறைகள் இரண்டு நூல்களாகவும் ஆக ஆறுநூல்களாகவும் விரிப்பின் பன்னிரண்டிற்கதிக நூல்களாகவுநிற்றலின் தமிழ்வேதவுவமை தவறேயாம். இதுகாறுமிவர்காட்டிய இவரது சொந்த நியாயங்கள் பொருத்தமற் றழிந்தமையால் இனி இவராற் பன்னிரண்டே திருமுறைகளெனக்காட்ட வியலாதென்பது திண்ணம்.

தமிழ்ச்சிவஞானபோதம் பன்னிருசூத்திரமாதலானும்அதனுள்,கல்லாளிழலென்றது பன்னிரண்டுபதங்க ளாதலானுந் திருமுறை பன்னிரண்டே என்றார். தமிழ்ச்சிவஞானபோதப் பன்னிரண்டு சூத்திரத்தாற் றிரிபதார்த்த நிச்சயநன்கு காட்டமுடியாமையானன்றே அனேகம் வெண்பாக்களைத் தேவர்அருளிச்செய்தனர். "கல்லாளிழலென்பதுமுதற்சூத்திரமானால்சிவஞானபோதம் பதின்மூன்று சூத்திரமுடையதேயாம். ஆகுமேலிவரது பிரதிக்கினை கெட்டது. அன்றியும் கல்லா ளிழன்மலை வில்லா ரருளிய பொல்லா ரிணைமலர் நல்லார் புனைவரே என்றது வஞ்சித்துறையேயாம். இவர்க்கு வஞ்சித்துறையே சூத்திரம்போலும். கல் - ஆல். எனத் தவறுகப்பிரித்து பன்னிரு சொற்களாற் புனையப்பட்டன என்று கூறுகின்றார் கல்லால் என்பதை இரு பெயராகப்பிரித்த இவர் வில் - ஆர். என்றும் பிரித்து பதின்மூன்று சொற்கள் நிற்பதைக்கண்டு பன்னிருதிருமுறைக்கிதுவமையாகாதென அடங்குவாராக.

சிவஞான பாதங்கள் நான்கே இயமாதிகள் எட்டே. அவை ஞானபாத நான்கின் மூன்றாவதன் விரியே. சந்தானசாரியர் எண்மரே. சமயாசாரியர் நால்வரே பரமேசுவரி ஏழாட்டைச் சிறுமியாயும் பதினாறாட்டை மடந்தையாகவு மிருப்பவளே.பூம்பாவை முன்னரும்பின்னரும் ஏழும் பதின்மூன்று முதலிய அகவையையெய்து தற்குரியளே. அநாகதக் கோயிலுக்கும் சீகாழிக்கும்பன்னிருபெயர்களேநியதமென்றின்றி அவைவேறும்பலபெயர்களைப் பெறுதற்குரியனவே.மங்கையர் இன்பமடைதல் பன்னிருபருவத்திலென்னு நியதி அனுபவவிருத்தமே.செந்தமிழ்ப் புறப்பொருணூல் பன்னிருவராற் செய்யப்படுதற்கு முன்னரும் பின்னரும் புறப்பொருணூல்களி லிருத்தலானும் அகத்தியனார்க்குப்பன்னிருவரையன் றிவேறுபலநூற்றுயிர மாணவருளராதலானும்தேவாரப்பதிகங்களி னந்தம்பதினொன்றும்பத்தும்ஆகவுமிருத்தலானும்

பன்னிரண்டே யிவைக ளென்பது தவறே. இம்முறையால் திருமுறைகள் பன்னிரண்டாய தென்பதுந் தேங்காய்க்குமூன்றுகண்களிருத்தலாற் சிவபெருமானுக்கு முக்கண்களே என்னும்பொருத்தமற்றவிஷயத் திற்கொப்பேயாம்.

தமிழ்வேதத்து நீத்தல்விண்ணப்பம் திருவெம்பாவையாதிய பன்னிரண்டிற்கு மேற்பட்டதொகையுடைய பாடல்களாதலின் பன்னிரண்டிற்கு மேலெந்தப்பதிகமு மின்றென்பதுந் தவறே. வைணவப் பிரபந்தம் பாடினார் பன்னிருவரெனக்கொண்டது சைவர்களின் பன்னிரு திருமுறைகளை நோக்கி என்பது அனைவராலும் எள்ளிநகையாடத் தக்கதே. துவாதசநாமம்போடுதலும் துவாதசாக்கர மந்திரஞ்செபிப்பது மெல்லாம் சைவப் பன்னிருதிருமுறைகளைக் கண்டென்று கூறுதல் வைணவரினுட் கோளறியாக் குற்றமே. ஓம்பகவதே வாசுதேவாயநமஃ என்பதிற் பிரணவம் மூன்றெழுத்தாறு மைந்தெழுத்தானுமாயதென்ற விதிகேட்கப்படுவதினாற் பன்னிரண்டென்னு நியமந் தவறே. இலக்குமி வேறுநாள்களிலும் பிறந்துளா ளாதலால் திருமகள் பிறந்தநாள் பன்னிரண்டாநாளாதலிற் றிருமுறை பன்னிரண்டென்றது தவறே. அரைடசன் இரண்டுடசன் முதலியவாகவுங் கொள்ளல்கொடுத்தலில்கூறக் கேட்டலாலும் ஒரு டசன் என்பதனை ஆதாரமாகக்கொண்டு திருமுறை பன்னிரண்டே யென்பது தவறே. சூரியர் பன்னிருவரி லிருந்து பன்னிருகோடியருண்டா யிருத்தலின் பன்னிரு திருமுறைக்காதித்தியரினுவமைதவறே. அப்பன்னிருவரு மொருவன் புதல்வரே. திருமுறைகளவ்வண்ணம் ஒருவரால் செய்யப்பட்டதன்றாம்.

குமரக்கடவுள் ஏந்தியபடைகள் பன்னிரண்டுடன் திருச்சேய்ஞலூரி லிறைவனளித்த சருவசங்காரப் படையுஞ் சேர்ந்து பதின் மூன்றாதலின் ஆயுதங்கள் பன்னிரண்டு என்றதும் இருதோள் நாற்றோண் முதலியவுங் குமரக்கடவுட் குண்டெனக் கேட்கப்படுதலாலும் பழஞ் சன்னிதிகளான தணிகை பழனி செந்தி லாதியான தலங்களில் அவ்வாறு காணப்படுதலாலும் பன்னிரண்டு விழிகளன்றி பதினெட்டு விழிகளுடையரென ஸ்காந்த மகா புராணத்து 28-வது அத்தியாயத்து 15-வது சுலோகத்திற் "த்விபாதம் த்வாதசபுஜம், ஷட்வக்த்ரம் த்ரிஷட்கணம்" எனக் கேட்கப்படுதலுண்மை யாதலானும் குமரப் பெருமானுக்கு விழிகண்முதலிய பன்னிரண்டாதலிற்றிருமுறை பன்னிரண்டாய தென்பது தவறென்க.

இப்பூர்வ பக்கத்தார் பாரதவருடத்திலுள்ள பழஞ்சந்நிதிகளை மறந்து இராவணராச்சியத்துள்ளதும் நூதனமானதுமான புதுச் சந்நிதியை வியந்தது இந்நாட்டுக் குமராலயங்களினும் தீவாந்தரத்திலுள்ள புதுச்சந்நிதி உயர்ந்த தாதலிற்போலும். உயரஉயரப்பறந்தாலும் ஊர்க்குருவி கருடனாகாதுபோல எவ்வளவு சிறப்பித்தெழுதினும் குமரகோட்டமுதலிய நமது பழஞ் சன்னிதிகளுக்கு தீவாந்தரத்துப் புதுச்சன்னிதி உயர்ந்ததாகாதென்க. இந்நாட்டுப் புதுச்சன்னிதிகளு மவ்வாறேயாம். கந்தபுராண முதலிய அற்புத நூல்கள் தோன்றுதற்கிடமாய் முத்திட்சேத்திரத்தி லொன்றாய் விளங்குங் காஞ்சிமாநகரத்தினரொருவர் இராமலிங்கபிள்ளையவர்களை இகழ்ந்துவெளியிட்டவொருவிளம்பரத்தில் புதுச்சந்நிதிக் கந்தன்றுணையென எழுதியிருக்கக்கண்டேம் இன்னஞ்சிலநாட்களுள் இத்தமிழ்நாட்டினர் இத்தமிழ்நாட்டுக்குமராலயசிவாலயங்களை மறந்து தீவாந்தரத்திலுள்ள புதுச்சந்நிதியையே சொல்லநேர்ந்தாலு நேருமென்று நினைக்கின்றேம். பன்னிருதிருமுறைக்குமேல் திருமுறை ஏற்படாதென இவர்காட்டிய நியாயங்கள் பலவும் பொலிவற்று தம்பக்கத்தவருமிஃதநுசிதம் என்றுகூறுமாறு நிற்றலையுணராதிவரெழுதி யவைகளை நாம் புறக்கணித்துச்சேரின் சாதுக்கள் இவர்கூறியவைகளை யூன்றியாராயாது மலைதலுறுவரென்று கருதியே சாதுரியமுமா

துரியமுமற்ற மதமாதிவறுமொழிகளை மறுத்தேம். இராமலிங்கபிள்ளைபதின்மூன்றாந் திருமுறை முதலியவாகத் தமது புத்தகங்களை வகுத்திலராதலினிவரிதுகாறுமெழுதிய பன்னிரண்டு நியாயங்களென்பன பிரயோசன மற்றனவேயாம்.

மாதங்கள்பன்னிரண்டென்பன வாதியாகஇவர்காட்டியபன்னிருநியாயங்களிலொன்றும் பரசிவப்பிரபுவின் சம்பந்தமானதாகவின்றி நிற்றலின் சிவசம்பந்தமான தமிழ்த்திருமுறைகள் பன்னிரண்டேஎன இவர்கூறியது சிவசம்மதமற்றதாகவே விளங்குதல் காண்க. சிவமூர்த்தங்கள் இருபத்தைந்தாதலானும் மஹாசதாசிவமூர்த்திக் கத்தங்கள் ஐம்பதாதலானும் கண்கள் எழுபத்தைந்தாதலானும் அவரது திருத்தலங்களாயிரத்தெட் டாதலானும் அவர் திருநாமங்கள் ஆயிரமும் எண்ணாயிரங்கோடியு மாதலானும் தமிழ்த் திருமுறைகள் இருபத்தைந்துமுதல் எண்ணாயிரங்கோடி யளவினவாதலும் பெறுமென்பார்க்கிவரு மிவரைச் சார்ந்தாரும் என்னுரைப்பரோ அறிகிலேம். இறைவன்றிருவுளத்தினை யாமறிந்தே மல்லேமாதலின் இத்தனை திருமுறைதான் தோன்றுமென வுரைக்கவெம்மாலியலாது. அந்நியதி இறைவனை யன்றிப்பிறரெவருமறிந்தவரல்லர். சைவசம்பந்தமற்ற பன்னிரண்டு மாதமாதிகளைக் கருதுவோர் சிவசம்பந்தமான எண்ணாயிரம் கோடியாதிகளையுஞ் சரியெனக்கருதி அடங்குவாராக. இவர்காட்டிய போலிநியாயங்கள் பன்னிரண்டே திருமுறைகள் என்பதனை நிலையுறுத்தாமல் வலியிழந்து பொலிவழிந்து கெட்டொழிந்தமை காண்க.

## முடிப்புரை மறுப்பு.

முடிப்புரையென்ற தலைப்பின்கீழ் இதுகாறுங் கூறியவற்றானே இராமலிங்கபிள்ளை சைவசித்தாந்தியுமல்லர் எனப்பலவரைந்து இராமலிங்கபிள்ளையவர்களின் பாடல்களானே அவரை மருட்பிரகாசப் பொள்ளலாரென்றும் அவர் பாடல்களை மருட்பாவென்றுந் தாபித்ததாகக் குழறிமகிழுகின்றனர்.

இவராதாட்சேபங்க ளனைத்திற்கும் தக்கநியாயமுரைத்து மறுத்திருத்தலின் இராமலிங்கபிள்ளைபாடல் அருட்பாவே என்றும் இராமலிங்கபிள்ளையருட்பிரகாச வள்ளலே என்றும் வச்சிரலேகனமாக நிலையுறுத்தினேம் ஆதலின் அவர்பாக்களை யருட்பாவென்றும் அவரை யருட்பிரகாச வள்ளலாரென்றுங் கூறுவதனால் சிவநிந்தை சிவனடியவர்நிந்தை திருமுறை நிந்தையாதிய உண்டாகாதென்க. சிவனடியவரான இராமலிங்கபிள்ளை யவர்களையும் அருளாலான அவர்பாடல்களையு நிந்திப்பவர்களே பூர்வபக்கத்தாருரைத்த நிந்தனைகட்குரியவர்களென்றுஅனைவருமறிந்துகொள்வார்களாக. எமது நியாயவச்சிரகுடாரத்தால் பூர்வபக்கத்தாரெழுதிய இராமலிங்கபிள்ளைபாட லாபாசதர்ப்பணமென்னுங் கண்ணாடிஉடைந்தொழிந்தமைகாண்க.

## சித்தாந்தம்.

தேவார திருவாசகங்களுக்குத் தமிழ்வேத மென்ற பெயரையன்றியாண்டும் அருட்பாஎனப்பெயர் கேட்கப்படாமையானும் "எழுதுமாமறையாம் பதிகத்திசை". எ-ம். "மிக்க சொற்றமிழினால் வேதமும் பாடினார்". எ-ம்.

"விருப்புடன் பாடலிசைத்தார் வேதந்தமிழான் விரித்தார்" எ-ம். "தங்கடிருமுன்புதாழ்ந்தெழுந்து தமிழ்வேதம் பாடினார் தாளம்பெற்றார்" எ-ம். "பெரிய புராணத்துக் கேட்கப்படுதலானும். "சிவாசிரிதானிகார்யாணிவேதோக் தானிபகூணிசதிராமிடானிஸ்ஈகேயானிக்ருத்வாசம்போரனுக்கிரகாத்" என, ஆலாசியமான்மியங் கூறுதலானும் திருவாசக புத்தகத்தின் முதலில் தமிழ் வேதமாகிய திருவாசகமென்றே தலைப்பிட்டெழுதியும் வழங்கியும் வருதலானும் விளம்பிவருடங் கார்த்திகை பூர்வபக்கத்தார் வெளியிட்டதிருவாசகத்தி லிவர்களே திருவாசகத்திற்கு திருவாசகம், மணிவாசகம், தமிழ்வேதம் அம்பலத்தான் எழுதுமறை. எனப்பெயர்கள் என்று காட்டியிருக்கின்றனரேயன்றி அருட்பா எனப்பெயர் என்று காட்டாமையின் அவர்க்கு மதுகருத்தன்றென்றறியப்படுதலானும் மற்றையவைகட்குமிவ்வாறே திருமந்திரமாதி வேறுவேறு பெயரிருத்தலானும் அவைகளின் பெயர்களை அருட்பாவென்று வழங்காமையானும் பன்னிரு திருமுறைகட்கன்றி பிறவெவைக்கும் அருட்பா எனப்பெயரிடப்படாதென விதித்தாரொவருமின்மையானும் அருள்பெற்றார் பாவனைத்தும் அருட்பாவாதலானும் அருள் ஒரு தன்மைய தன்மையானும் தேவாரம் திருவாசகம் திருமந்திர மென்னும் பெயர்களை ஒருவர் தமதுநூலிற்கோ பாடற்கோ இடுவாராயினது ஆட்சேபத்துக் கிடமாமேயன்றி பன்னிருதிருமுறைகளுக்கு அப்பிரசித்த வசனமான அருட்பா என்பதனை ஒருவர் தந்நூலுக்கோ பாடற்கோ இடுவதனால் தேவார திருவாசகாதி பன்னிரு திருமுறைகளை யெதிர்த்ததாகாமையானும் அருளில் அரையருள் காலருளரைக்காலருள் வீசமருள் எனவுண்டோ வென்றுபூர்வபக்கத்தார் கடாவுதல் அருளின் தாரதம்மியத்தினை ஆகமவளவை யானறியாத தோடத்தாலாதலானும் அருள் நிறைந்தும் குறைந்து நிற்குமேயன்றி எல்லாரிடமு மொரேமாதிரியாக நில்லாதென்பதற்கு ஞானசம்பந்த சுவாமிகள் திருநாவுக்கரசு சுவாமிகள் யாழ்ப்பாணனார் சிவகோசரியார் திண்ணனார் மிழலைக் குறும்பனார் சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதலியோரின் சரிதங்களை யூன்றி யாராய்வா ருணர்வாராதலானுந் திருநாவுக்கரசு பெருமான் திருமறைக் காட்டுக் கதவினை அரிதில் திறப்பித்ததூஉம் ஞானசம்பந்தப் பெருமான் எளிதிலடைக்கவுந் திறக்கவுஞ் செய்ததூஉம், ஞானசம்பந்தப் பெருமான் யாழ்மூரி பாடியதூஉம் பாணனாரா லதனை வீணையில் வாசிக்க முடியாது போயதூஉம் ஞானசம்பந்தப் பெருமான் பாணனார் வீணையைத் தாமெடுத்து வருடிப் பின்னர் சொன்னவுடன் பாணனார் யாழ்மூரி வாசித்ததூஉம் திருவாய்மூரு சால்லிச்சென்ற சிவபெருமான் திருநாவுக்கரசருக்கரிதிற் காட்சி கொடுத்ததூஉம் ஞானசம்பந்தருக்கெளிதிற் காட்சிகொடுத்ததூஉம் வயதின் முதிர்ச்சியாதியிருந்தும் நீலநக்கனாராதியர் வயதிற்குறைந்தஞானசம்பந்தப் பெருமானைக் காலில்விழுந்து வணங்கியதூஉம் இவரவர்களை வாழ்த்தியதூஉம் கண்ணப்பனார்நிவேதனத்தைசிவபெருமானுண்டருளியதூஉம் சிவகோசரியார் நிவேதனத்தினை யவ்வாறு செய்யாததூஉம் மிழலைக் குறும்பனார் சுந்தரமூர்த்திப்பெருமானை வழிபட்டணிமாதி சித்திபெற்றதூஉம் அயர்

கோன் கலிக்காமனார் சுந்தரமூர்த்திகளுடன் பகைத்துறவு கொண்டதும் ஆகிய செயலனைத்தும் அருளின் ஏற்றக்குறைவுகளைக் காட்டுவனவேயாம். அவரவர் பக்குவத்திற் கிணங்க அருள்பெற்றவரனைவரும் ஒருநிகரான அருளைப் பெற்றவராகார். ஆதலின் இராமலிங்கபிள்ளை தமக்குக் கிடைத்த அருளளவிற்குத் தக்கவாறு பாடினாரெனயாகலிழுக்கின்றென்றும் அருளாற் பிரகாசிப்பாரை அருட்பிரகாசரென்றும் ஞானதான யோக்கியதையுடையாரை வள் . . த்திருமுறைகள்ரபுபற்றி இராமலிங்கபிள்ளையவர்கட்கு அருட்பிரகாச வள்ளலாரென்ற பெயரிருத்தலாலிழுக்கின்றென்றும் அனைவருமறிவாராக.

வைணவாழ்வாரிலொருவருக் கருண்மாரியெனப் பெயர் வழங்கலும் வரதராசருக்கு அருளாளரெனப் பெயரிருத்தலும் கைத்தகளிக்காரனொருவனுக்கு அருளாளனெனப் பெயரிருந்ததும் உண்மையின், பூர்வபக்கத்தார் கூற்றுக்கிணங்கி மருளற்க. இராமலிங்க பிள்ளையவர்களருட்பிரகாச வள்ளலாரென்ற பெயரினராயதனாலும் அவர்பா அருட்பாவாயதனாலும் சைவசமயத்தவருக்கொரிழுக்குமின்மையைப்பொதுநிலையுடையாரறிவரன்றி யறியாதிரார்.

இதுகாறுங் காட்டிய நியாயங்களால் இராமலிங்க பிள்ளை அவர்களை அருட்பிரகாச வள்ளலென்றும் அவர்பாடல்களருட்பாவே யென்றும் நிலையுற்று நிற்றலின் பூர்வபக்கத்தாரின் மறுப்பறுப் புண்டழிந்தமையும் இராமலிங்கபிள்ளையவர்கள் அருட்பிரகாச வள்ளலாரும், அவர் பாக்களருட்பாக்களுமாகவே நிற்றலையும் காண்க.

இராமலிங்கபிள்ளையவர்களின் பாடல்களைப் பழகியவர்கள், தேவார திருவாசகாதி தமிழ்வேதங்களைப் பாராயணஞ்செய்யத்தக்க பக்குவிகளாவார்கள். பின்னர்சிவதீட்சையுடையவர்களேல் தமிழ்வேதபாராயணராவார். ஆதலின் அனைவரானும் பொதுவாகப் படிக்கத்தக்க இனிமையும் அன்பிலக்கணமு நிறைந்த அருட்பாவெனப் பெயரிய அவர் பாடல்களை இகழ்தல் எல்லாம்வல்ல பரம்பொருளினை இகழ்ந்ததாகும். காரணம் அப்பரம்பொருளின் கல்யாண குணங்களையே அவைகொண்டு நிற்றலாலென்றுணர்க.

அருளின் தாரதம்மிய மாதிகளையுஞ் சைவ சித்தாந்த வேறுபாடுகளையும் இரண்டாம் பாகத்தில் நன்கு விளக்குதும் ஆண்டுக் காண்க.

பக்கத்,

இராமலிங்கபிள்ளை பாடலாபாச தர்ப்பண கண் வார்களாக.

நியாயவச்சிரகுடாரம் ராமலிங்கபி

மைச

முற்றிற்று.

---

சிவாயபரப்பிரம்ஹணேநம: